தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 136

வைத்தியநாத தேசிகர் இயற்றிய

இலக்கண விளக்கம்

எழுத்ததிகாரம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2002] [விலை ரூ. **160—00**

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 136.

வைத்தியநாத தேசிகர் இயற்றிய

இலக்கண விளக்கம்

எழுத்ததிகாரம்

பதிப்பாசிரியர் :

பண்டித வித்துவான்

தி. வே. கோபாலையர், எம். ஏ., பி. ஓ. எல்.,

திருவையாறு

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2001] [விலை. ரூ. 160—00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	இலக்கண விளக்கம் (எழுத்ததிகாரம்)
பதிப்பாசிரியர்	:	தி. வே. கோபாலையர்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.
வெளியீட்டு எண்	:	136
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	செப்டம்பர், 2001
தாள்	:	14. 2 கி.கி. டி.என்.பி.எல்.
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	850
படிகள்	:	1200
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	ஆப் காலிகோ
பொருள்	:	இலக்கணம்
விலை	:	ரூ. 160—00

பொருளடக்கம்

இரண்டாம் பதிப்பின் வெளியீட்டாளர் முகவுரை

அரிய பன்மொழி — பல்துறை நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் உயரிய பணியைத் தொடர்ந்து ஆற்றிவரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். இந்நூலகம் தமிழில் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் முதலிய பல்துறை நூல்களை வெளியிட்டு அருந் தொண்டாற்றி வருகின்றது.

இங்கு இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெறும் 'இலக்கண விளக்கம்—எழுத்ததிகாரம்' என்னும் இந்நூல் இலக்கணத்துறை நூலாகும். திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்னும் புலவர் பெருமகனாரால் பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற 'இலக்கண விளக்கம்' எனும் இந் நூல் 'குட்டித் தொல்காப்பியம்' எனப் போற்றப் பெறும் படைப்பாகும்.

இந்நூல் சரசுவதி மகால் நூலகத்தால் 1971இல் முதற் பதிப்பாக வெளியிடப்பெற்றது. அதுபோழ்து இந்நூலினைத் தமிழ்ப் பேரறிஞர் திருமிகு தி. வே. கோபாலையர் அவர்கள் மிகச் சிறந்த, எடுத்துக் காட்டான பதிப்பாக உருவாக்கி அளித்தமை இங்கு நன்றியுடன் நினைவுகூரத் தக்கது.

II

இந்நூல் வெளியீட்டுக்கும் வழக்கம்போல நிதியுதவி நல்கியுள்ள நடுவண் அரசுக்கு முதற்கண் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இப்பதிப்பு செம்மையாக வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும். வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் என் பாராட்டுகள். இந்நூல் சிறக்க வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் பாராட்டுகள்.

அரிய இவ்விலக்கண நூற்பதிப்பு, தமிழுலகிற்குக் கிடைத்துள்ள சிறந்த பரிசாகும், இந்நூல் முதற்பதிப்பில் பெற்ற வரவேற்பை இப்பதிப்பிலும் பெறும் எனப்பெரிதும் நம்புகின்றேன்.

சி. கோசலராமன், இ. ஆ. ப.,
தஞ்சாவூர் — மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்.
22—8—2001 — சரசுவதி மகால் நூலகம்.

PUBLISHER'S PREFACE

Ilakkanavilakkam, which is popularly known as Tholkappiyam in parvo, is a standard treatise on Tamil grammar, containing all the three divisions of Tamil grammar in three parts. Now we place before the public the work dealing with letters, called Ezhuthathikaram, viz., orthography the other two being Sollathikaram, dealing with words, and Porulathikaram dealing with subject matter, rhetoric, prosody, conventions etc. The author of this work, Vaithianatha Desigar, is a most respected person among the distinguished grammarians of the seventeenth century, coming from a family of Tamil scholars attachad to the Dharmapuram monastery; he was for sometimes preceptor to the sons of one of the governors of Madura Naiks in the southern districts. As grammarian, poet, scholar and teacher, he has contributed substantially to the development of sound scholarship in his period, the continued effect of which is discernible even today.

When presenting a treatise on Grammar, we think it necessary to say a few words about Grammar in general and its usefulness in directing the mental activities on right lines to achieve the ideal of human nature and to develop it harmoniously to the full perfection which it is capable of but we reserve this detailed introduction, giving all particulars about our language, the grammatical studies in general and in particular

and other linguistic information, which are essential to bring our language and grammatical studies in the proper perspective in the international academic studies to the last volume of this work.

We are profoundly iudebted to Thiru N. Mahalingam, B. Sc., M. I. E., leading industrialist and well known servant of Tamil for his gift to this library, of hand-written copy of Ilakkana-vilakkam which along with a very old printed edition, long out of print, has been the main basis of this publication.

We thank the learned editor, Thiru Panditha Vidwan T. V. Gopala Iyer, M. A., B. O. L., for bringing out a self-contained volume giving all parallel citations in the original and all aids a student would like to have. We are thankful to our learned Librarian Prof. V. Gopala Iyengar M. A., for his general supervision of the editorial and printing work and to Messrs. Vetrivel Press for their neat execution of the printing.

We wish to record our gratitude to the Government of Tamil Nadu for their annual publication grant which has made this publication possible.

N. KANDASAMY,
Honorary Secretary,
T. M. S. S. M. Library,

Thanjavur,
28-8-1971

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, “நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்” என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
3-9-2001.

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

நூன்முகம்

தமிழ்மொழி தொன்மை சான்ற மொழியாகும். பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே இம் மொழியில் திருந்திய இலக்கியங்கள் பல தோன்றவே, அவற்றை ஆய்ந்து சிறந்த இலக்கண நூல்களைச் சான்றோர் பலர் இயற்றினர்.

இன்று நமக்குக் கிடைத்துள்ள இலக்கண நூல்களில் தொல்காப்பியமே மிகத் தொன்மையது. அஃது எழுத்துச் சொற் பொருள் என்ற முப் படலங்களை உடையது. தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியனார் காலத்தில் அணி என்பதொன்று தனியே வகுக்கப் பட்டிலது; உவமம் என்பது பொருளைப் புலப்படுத்தும் கருவிகளில் ஒன்றாகவே கொள்ளப்பட்டது. பொருட் கிடன் செய்யுளாதலின், அதனைத் தெரிப்பதும் பொருட் கூறுபாட்டில் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. படவே, பின்னர் வகுத்த யாப்பு அணி என்பன தொல்காப்பியப் பொருட் படலத்திலே அடக்கப்பட்டன.

தொல்காப்பியத்தை அடுத்துத் தோன்றிய இறைய னார் அகப்பொருளின் காலத்தில் யாப்பு என்பது தனிப் பகுதியாகக் கொள்ளப்பட்டது. சற்றுப் பிற்பட்ட காலத்தில் அணியிலக்கணமும் தனிப் பகுதியாயிற்று.

யாப்பினைப் பற்றிய பண்டைய நூல்கள் யாவும் மறையவே, யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்ற யாப்பிலக்கண நூல்கள் வெளிவந்தன. அணி பற்றி யமைந்த அணிநூல் என்பது மறையவே, தண்டியலங் காரம் என்ற நூல் வெளிப்போந்தது. பொருளிலக்கணத் தின் அகப்பொருட் செய்திகளைத் தொடர்பாக அமைத்த நம்பியகப் பொருளும், புறப்பொருளை விரித்துக் கூறும் புறப்பொருள் வெண்பா மாலையும் வெளிவந்தன. இவற்றை யொட்டிச் சோழ மன்னன் வீர ராசேந்திரன் (கி. பி. 1062—70) காலத்தில் பொன்பற்றிக் காவலன் புத்தமித்திரனால் இயற்றப்பட்ட கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த வீரசோழியம், வடமொழி மரபை மிகுதியும் தழுவி எழுத்துச் சொற்பொருள் யாப்பணி என்ற ஐந்து பிரிவுகளை உடைய முழு நூலாகத் தோற்ற மளித்தது. அந் நூலின்கண் பிற நூல்களில் காணக் கிடையா அருஞ் செய்திகள் பல உளவேனும், வடமொழி மரபினைப் பெரிதும் தழுவியதால் அந்நூல் தமிழ் மக்களி டையே பெரிதும் பரவும் வாய்ப்பினை இழப்பதாயிற்று. பின், எழுத்துச்சொல்லெனும் இரண்டனையுமே விளக்கிக் கூறும் நன்னூலும் சின்னூலும் வெளிவந்தன. இந்நிலை யில், கற்றுத் துறைபோகிய இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர் முதலியோர் தொல்காப்பியம் முழுமைக்கும் பகுதிகளுக்குமாக உரைவரைந்து பல அரிய செய்திகளை வெளிப்படுப்பாராயினர். அதனால் தொல்காப்பியப் பயிற்சியும் தமிழகத்தில் ஓரளவு பரவுவதாயிற்று. இக் காலையில் பிரபந்த வகைகளுக்கு இலக்கணம் வகுக்கும் பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், முதலிய பாட்டியல் நூல்களும் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய மாறன் அகப்பொருள், மாறன் அலங்காரம் என்ற நூல்களையும் மக்கள் ஏற்றுச் சுவைத்தனர்.

தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களின் நுண்ணிய பல கருத்துக்களை உரையாசிரியர்களின் உரை நுட்பத்தோடு ஆய்ந்து, வடமொழி மரபுகளையும் ஏற்ற பெற்றிகொண்டு, இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம் என்ற அரிய நூல்கள் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வெளிவந்தன. நன்னூல் வெளி வந்தபின்,

''முன்னோர் ஒழியப் பின்னோர் தம்முள்
நன்னூ லார்தமக்கு எந்நூ லாரும்
இணையோ என்னும் துணிவே''

மன்னிய தமிழ்மக்கள், தொல்காப்பியத்தின் பரப்பு மிகுதி நோக்கி அதனைக் கற்றற்கண் ஊக்கமிலராய், நன்னூலினையே அதற்கமைந்த மயிலைநாதர் உரையுடன் சுவைத்துக் கற்றகாலம் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

இக்காலத்தில் தோன்றிய வைத்தியநாத தேசிகர் தொல்காப்பியத்தை அதன் உரைகளோடு கசடறக் கற்றுப் பின்னூல்களிலும் துறைபோயவராய்த் தம் மாணாக்கருக்குப்பாடம் பயிற்றி வந்த ஞான்று, காலத்தை ஒட்டித்தொல்காப்பியத்தோடு பெரும்பாலும் ஒத்ததாகிய தோர் ஐந்திலக்கண நூலினை யாத்து அதற்குத் தாமே உரையும் வரைதல் வேண்டும் என்ற எண்ணங் கொண்டார்;

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

ஆதலின் தாம் எண்ணிய தமிழ்ப்பணிக்கண் அயராது உஞற்றி, 'இலக்கண விளக்கம்' என்ற விழுமிய நூலை உரையுடன் இயற்றி வெளியிட்டார்.

அந்நூல் 'குட்டித் தொல்காப்பியம்' என்ற சிறப்புப் பெயரோடு மக்களிடையே பெரிதும் பயிலப்படவே, நன்னூலின் பெருமை மங்குவதாயிற்று. அதுகண்டு பொறாத சான்றோர் சிலருடைய வேண்டுகோளினால், நன்னூல் சங்கர நமசிவாயர் உரையும், அதனைப் புதுக்கிய சிவஞான முனிவர் உரையும், இலக்கண விளக்கச் சூறாவளியும் பதினெட்டாம் நூற்றாண்டில் வெளிவந்தன அவற்றால் இலக்கண விளக்கம் கற்பார் தொகை ஓரளவு குறைவதாயிற்று. பின், பத்தொன்பதாம் நூற்றாண்டிறுதியில் இலக்கண விளக்கத்தைத் திருவாளர் தாமோதரம் பிள்ளையவர்கள் அச்சிட்டு வழங்கவே, தமிழகச் சான்றோர் அனைவரும் அதனைப் பெரும் பேறாகக் கொண்டு பயில்வாராயினர்.

இடையே, முத்துவீரஉபாத்தியாயர் வரைந்த முத்துவீரியம், ஐந்திலக்கணமும் தொகுத்துக் கூறும் சிறுநூலாய் எளிமை விரும்புவாருக்கு ஏற்றதாக வெளிவந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் இயற்றி வெளியிட்ட தொன்னூல் விளக்கம் மக்களிடையே யாது காரணம் பற்றியோ பரவும் வாய்ப்பற்றதாகிவிட்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலக்கணம் கற்றலின்கண் மக்கள் காட்டிய ஊக்கம் இடைக் காலத்தில் சாம்பியது. 'மொழிக்கு இலக்கணம் தேவையா?' என்றெல்லாம் ஆராயப்புக்கு, 'இலக்கணமே மொழிக்கு வேண்டா' என்று பேசும் புலவரும் தமிழகத்தில் சிறப்பிக்கப்படுவாராயினர். ஆயினும், பழைய சான்றோர் தாம் அரிதிற் கண்டுரைத்த இலக்கண நுணுக்கங்களைக் கற்றுச் சுவைத்தல் வேண்டும் என்ற வேணவாவுடைய சான்றோர் இன்றும் உளர். அவர்களுக்கு அச்சிட்ட 'இலக்கண விளக்கப்படி' இப்பொழுது கிடைப்பது அரிதாக உள்ளது.

''தஞ்சை சரபோசிமன்னர் அமைத்த சரசுவதிமகால் நூல் நிலையத்திலுள்ள 949 ஆம் எண்ணுடைய கையெழுத்துப் படியினையும், சென்னை அடையாறு ஒரியண்டல் நூல் நிலையத்துப் படியினையும் அச்சிடப்பட்ட நூலோடு ஒப்பு நோக்கி இலக்கண விளக்கத்தைப் பதிப்பித்தல் வேண்டும்'' என்று சரசுவதிமகால் கௌரவக் காரியதரிசி உயர்திருவாளர் முதுபெரும்புலவர் நீ. கந்தசாமிபிள்ளையவர்கள் உள்ளங்கொண்டார். அவர் விரும்பியாங்கு இப்பொழுது இலக்கண விளக்கம் அச்சிடப்படுகிறது. இப்பதிப்பில் நூலமைப்பு, ஒவ்வொரு நூற்பாவின் உரைக்கும் ஏற்ற விளக்கம், உரை மேற்கோள் பற்றிய விளக்கம், இலக்கண விளக்கச் சூறாவளிச்செய்தி, ஏனைய இலக்கண நூல்களின் ஒத்த நூற்பாக்களின் தொகுப்பு, அருஞ்சொல் விளக்கம் முதலிய பிற்சேர்க்கை ஆகியவை நூலாசிரியர் தம் வரலாற்றோடு இடம் பெற்றுள்ளன. தொடக்கத்தில், இலக்கண விளக்கத்தின் எழுத்ததிகாரம் வெளி வருகின்றது. இப்பணியின்கண் என்னை ஈடுபடுத்திய தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தாருக்கு என் பணிவுகலந்த நன்றியைத் தெரிவிக்கும் கடப்பாட்டினேன். இப்பணிக்குப் பல்லாற்றானும் எனக்கு உதவிய என்னிடம் தமிழ் பயின்ற என் உடன்பிறந்தவராகிய திரு. வித்துவான் கங்காதரன், M.A., செல்வி வித்துவான் கமலாம்பாள் ஆகியோருக்கு என் ஆசிகள்.

''குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.''

தி. வே. கோபாலையர்

நூலாசிரியர் வரலாறு

மன்னுதென் கமலை வைத்திய நாதன்
பொன்னடிக் கமலப் போதினைச்
சென்னியில் சேர்த்துதும் மதிசிறந் திடவே.

என்பது இலக்கண விளக்க நூலின் முகப்பு ஏட்டில் காணப்படும் செய்யுளாகும்.

நூல் என்ற சொல் பழங்காலத்தில் இலக்கணங்களையே குறிக்கும் சொல்லாயிருந்தது. அக் காலத்தில் காப்பியங்கள் 'தொடர்நிலைச் செய்யுள்' என்ற பெயராலேயே வழங்கப்பட்டன. இதனைச் சீவகசிந்தாமணியின் தொடக்கச் செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையான் உணர்க.

இலக்கண விளக்க நூலினை வரைந்து தமிழுலகத்துக்கு அளித்த வைத்தியநாத தேசிகர் சிறந்த கவிஞராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், போதகாசிரியராகவும், ஞானாசிரியராகவும் விளங்கிய சிறப்புடையவர் ஆவார்.

''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும்
[அடியேன்''

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகைப் பதிகத்தில் தொகையடியார்களுள் ஒரு

சாராராகக் கூறப்படும் பெருமை பெற்றவர் திருவாரூர்ப் பிறந்தவராவார்.

''போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர் [புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர்''

என ஆரூரில் பிறப்பெடுத்த உயிரினைச் சேக்கிழார் பெருமானும் சிறப்பித்தல் உளங்கொளத் தக்கது. இந் நூலாசிரியர் இத்தகைய திருவாரூரிலே ''எம்பிரான் எந்தை தந்தை தந்தைதம் சுற்றம் எல்லாம்—தம்பிரான் நீரே என்று வழிவழிச் சார்ந்து'' சிவபெருமான் அடியலால் பேணாப் பரம்பரைச் சைவாசாரியார் மரபிலே ''பிறவித் துன்பம் முழுவதையும் போக்கும் தவத்திற்கு ஓர் அணை' என்று சிறப்பிக்கப்படும் தவவணைக்குடியில், 'வன்மீகநாததேசிகர்' என்ற சான்றவருக்கு முதல் துணை வியார் பெற்றெடுத்த மகனாராகத் தோன்றினார். எத்தனை தகுதியுடையாரும் உலகியலின் ஒக்கம் தாழ்வு என்பனவற்றைக் கடத்தல் இயலாதாகவே, இளமை யிலேயே தாயாரை இழந்த இவர், தந்தையார் பரிவு எத்துணையளவினதாயினும் மாற்றாந் தாயாரின் அர வணைப்புக் குறைவினால் ஓரளவு நலிவுற்றார் எனினும், சில ஆண்டுகள் தந்தையாரிடமே கல்வி பயின்ற பின்னர், அவருடைய மாணாக்கரும், திருவாரூர் ஸ்ரீவசந்த தியாகேசருடைய அபிடேகக் கட்டளை அன்னதானக் கட்டளைகளின் நேர்முகஅறங்காவலரும் ஆக வீற்றிருந்த 'அகோர முனிவர்' என்ற பெருந்துறவியாருடைய பரா மரிப்புக்கு, அவர் அருகிலேயே இருந்து, தென்மொழி வடமொழி இரண்டனையும் துரிசறக் கற்கும் பெரு வாய்ப்புப் பெற்றார். தம் ஆசான் மகனாருக்குக் கல்வி கற்பிப்பதனைத் தம் உயரிய கடமைகளில் ஒன்றாகவே கொண்ட அகோர முனிவர், வைத்தியநாத தேசிகரை மொழித் திறத்தின் முட்டறுத்த புலவராக்கியதோடு ஆன்மிக நலனும் சான்றவராக்கினார்.

பின், அகோர முனிவர் விசுவநாதப் பெருமானைக் கண்களாரக் கண்டுகளிக்கும் வேணவாவுடையவராய்க் காசி யாத்திரைக்குப் புறப்பட்டகாலை, வைத்திய நாதரும் உடன் போதரும் பெருவிருப்பினராக, அவரை யும் அழைத்துச் சென்றார். சைவத் திருப்பதிகள் பல வற்றையும் கண்டு வணங்கிப்போந்த இருவரும் திருவண்ணாமலையினையடைந்து ஒரு திருமடத்தில் தங்கினர். அங்கு ஆன்மார்த்த பூசை செய்வதற்குச் சென்ற ஆசிரியர் பெருமான் அதனைமுடித்து மீண்டு வந்த அளவில், யோக நிலையில் தம்மை மறந்து இறை யருளில் திளைத்திருந்த மாணாக்கரைக்கண்டு, அவரது பரிபக்குவத்தை வியந்து, ஆன்மிகத்துறையில் அவரடைந்த ஏற்றத்தை நினைந்து, அவரடி பணிந்து அவர் சீடராயினார்.

இருவருக்கும் இடையே இருந்த தொடர்பு வேறு பட்டதனால், வைத்தியநாதரைத் தாம் காசி நகருக்கு அழைத்துச் சேறல் முறையன்று என்று கொண்ட முனிவர், அவரை ஊர் போகவிடுத்துத் தாம் காசிக்குப் புறப்பட்டார்.

பின், தம்மூருக்கு மீண்ட வைத்தியநாதருக்குத் தங்கம் என்ற அம்மையார் வாழ்க்கைத் துணைவியாராக முறைப்படி மணம் செய்விக்கப்பட்டார். இல்லறச்சாகாடு இனிதின் செல்வதற்குப் பொருள் வேண்டுமாதலின், கற்றோரைப் போற்றிப் பயன் கொள்ளும் புரவலரை நாடிச் செல்லல் வேண்டும் என்ற நிலை வைத்தியநாத ருக்கும் ஏற்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் நோக்கிப் புறப்பட்ட வைத்தியநாதர், திருமலைநாயக்கரின் செயலருள் ஒரு வராய்க் கயத்தாற்றில் வாழ்ந்து வந்தவரும், செல்வமும் கல்வியும் பண்பும் ஒருங்கே அமையப்பெற்றவருமான திருவேங்கடநாத ஐயர் என்பாரை அடைந்தார். அவர்

வைத்தியநாதரின் பெருங்கல்வியையும், அருங்குணத்தையும் கண்ட அளவில், அவரிடம் பெருமதிப்புக் கொண்டு தம் புதல்வர்களுக்குக் கல்வி பயிற்றும் ஆசிரியராக அவரை அமர்த்தினார். பல்லாண்டுகள் முறையாகத் தமிழ் பயிற்றுவித்த நம் புலவர் பெருமானார், அச்சிறார்களுக்கு முன்னூலாகிய தொல்காப்பியத்தொடு பின்னூலாகிய நன்னூற் செய்திகள் முரணுமிடங்களைக் கண்டு அவற்றை முரண்பட மாற்றிப் புதுக்கி,நன்னூலின் மயிலைநாதருரை முரண்பட்ட இடங்களை யகற்றிப் புத்துரை யமைத்துப் பாடஞ் சொல்லிய வகையில் பற்பல விடங்கள் புதுக்கப்படவே, நன்னூலின் வடிவம் மாறப் பின் பொருளிலக்கணச் செய்திகளும் முறையே இணைக்கப்பெற்ற ‘இலக்கண விளக்கம்’ என்ற ‘குட்டித் தொல்காப்பியம்’ வெளிப் போந்தது. தொல்காப்பியத்திற்கும் நன்னூற்கும் உரை வரைந்தவர்கள் நூலாசிரியர்தம் கருத்துக்களை உள்ளவாறு உணராமல் தம் அறிவுத் திறனுக்கேற்ப வரைந்த இடங்கள் பலவாகஇருப்பதனை ஓர்ந்து, இவர் தாம் அமைத்த இலக்கண விளக்க நூலுக்குத் தாமே உரைவரைவாராயினார். இங்ஙனமே பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய சாமிநாத தேசிகரும், சுப்பிரமணிய தீக்கிதரும் தாம் வரைந்த இலக்கணக் கொத்து பிரயோகவிவேகம் என்ற அரிய நூல்களுக்குத் தாமே உரை வரைந்து வெளியிடுவாராயினர். இங்ஙனம் நூலாசிரியர் தாமே தம் நூலுக்கு உரை வரைய வேண்டிய தேவையும், இம்மூவரும் தம் நூலுக்குத் தாமே உரை வரைந்த செய்தியும் இலக்கணக்கொத்து நூலில் கீழ்க்கண்ட பகுதியில் குறிக்கப்பட்டிருத்தல் காண்க.

‘‘நூலா சிரியர் கருத்தினை நோக்காது
ஒருசூத் திரத்திற் கொவ்வொரா சிரியர்
ஒவ்வொரு மதமாய் உரைஉரைக் குவரே;
அவ்வுரை யதனுள் அடுத்தவா சகங்கட்கு

அவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
கொண்ட பொருள்படப் பொருள்கூ றுவரே
ஒருவிதி தனக்கே பலபெயர் வருமே
ஒருபெயர் தனக்கே பலவிதி வருமே
நூலுரை போதகா சிரியர் மூவரும்
முக்குண வயத்தான் முறைமறந் தறைவரே
இம்முறை யெல்லாம் எவர்பகுத் தறியினும்
அவத்தை வயத்தால் அலைகுவர் திடனே.''

நூற்பா-6

''நூல்செய் தவனந் நூற்குரை எழுதல்
முறையோ யெனிலே யறையக் கேளீ
முன்பின் பலரே யென்கண் காணத்
திருவா ரூரிற் றிருக்கூட் டத்திற்
றமிழ்க்கிலக் காகிய வயித்தி நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்
அன்றியும் தென்றிசை யாழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் றமிழ்ப்பிர யோக விவேகம்
உரைத்துரை யெழுதின னொன்றே பலவே'

உரைநூற்பா—7

இடையிடையே வைத்தியநாதர் வேற்றிடங்களுக்கும் சென்று தம் புலமைத் திறத்தை வெளிப்படுப்பாராயினார். இவர் மலையாளஞ் சென்று ஆண்டுச் செங்கோல் ஓச்சி வந்த குறுநிலமன்னர் மீது பல பிரபந்தங்கள் பாடிப் பல பரிசுகளும் முற்றூட்டுக்களும் பெற்றார்; அங்கு இருந்த புலவர் பலராலும் புகழப்பெற்றார்.

இவர் காலத்தில் வாழ்ந்த பெரும்புலவர் அந்தகக் கவிவீரராகவ முதலியாராவர். அவர்,

''ஒட்டக்கூத் தன்கவியும் ஓங்குகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—தெட்டபுகழ்
வீசுங் கவிவீர ராகவனாம் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்''

என்று பாராட்டப்பட்ட பெருந்தகையார் ஆவர். அவரே வைத்தியநாதருடைய கவி வன்மையையும் ஆழ்ந்த புலமையையும் மனங்கொண்டு,

''ஐம்பதின்மர் சங்கத்தார் ஆகிவிடா ரோநாற்பத்து
ஒன்பதின்மர் என்றே உரைப்பாரோ—இம்பர்புகழ்
வன்மீக நாதனருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதந் நாள்சரித்தக் கால்''

என்று போற்றிப் புகழ்ந்தார் என்பதனை உட்கொண்டால் வைத்தியநாதருடைய பெருஞ்சிறப்பு நன்கு போதரும்.

திண்டிவனத்தை யடுத்த மயிலமலைமீது வீற்றிருக்கும் முருகப்பெருமான்மீது மயிலம்பிள்ளைத் தமிழ் என்ற அரிய பிரபந்தமும், அத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் சிவஞானபாலய சுவாமிகள் மீது எட்டுப் பிரிவுகளையும் அவற்றுள் 736 தாழிசைகளையும் கொண்ட பாசவதைப் பரணி என்ற சுவைமிக்க பரணி நூலும், நூறுபாடல்களைக்கொண்ட திருவாரூப் பன்மணிமாலையும், இருபத்தேழு சருக்கங்களையும் அவற்றுள் 1013 திருவிருத்தங்களையும் கொண்ட நல்லூர்ப் புராணம், ஏறத்தாழ நானூறு பாடல்கள் கொண்ட திருவாட்போக்கிப் புராணம், கமலாலயஅம்மை பிள்ளைத்தமிழ் என்பனவும் இவரால் பாடப்பட்ட பிரபந்தங்கள் என்பது அறியப்படுகிறது. மெய்ஞ்ஞான விளக்கம் என்னும் தமிழ்ப் பிரபோத சந்திரோதயம் மாதைத் திருவேங்கடநாதரால் பாடப்பட்டது என்ப. இந்நூலாசிரியரே அதனையும் பாடினார் என்ற கருத்தும் நிலவுகிறது.

இந் நூலாசிரியர் பிரபந்தங்கள் பல பாடிப் புகழ் பெற்ற பெருங்கவிஞர் எனினும், தமிழ் உலகில் இவருக்கு இறவாப் புகழ் நல்கி வருவது இவர் இயற்றிய 'இலக்கண விளக்கமே' யாகும். இந்நூலின் பொருட் படலத்திலுள்ள சொல்லணியின் சில நூற்பாக்களைச் சதாசிவநாவலர் பாடினார் எனவும், கடைசி இயலாகிய பாட்டியலைத் தியாகராச தேசிகர் பாடினார் எனவும் குறிப்பிடுகின்றனர். இருவரும் இந்நூலாசிரியர்தம் புதல்வர்களே. பாட்டியல் அமைப்பினை நோக்க அக் கருத்து ஏற்புடையதாகவே தோன்றுகிறது. அச்செய்தி விளக்கத்தைப் பாட்டியல் முகவுரையில் காணலாம். இனிச் சொல்லணி பற்றிய நூற்பாக்களைச் சதாசிவ நாவலர் பாடினார் என்பதற்கு அகச்சான்று எதுவும் இன்று.

இப்புலவர் பெருமானார் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியவராவர். இவர் மரபினர் இன்றும் தமிழ்ப் புலவர்களாக விளங்குவது மகிழ்வு தருவதாகும்.

நூலமைப்பு

எழுத்ததிகாரம்

நன்னூலார் போலப் பாயிரவியல் என்பதொன்றனைத் தனியே அமைக்காது பொதுச் சிறப்புப்பாயிரங்களை உரையிடையிட்ட பாட்டுடை நடையில் நூன்முகமாக முதற்கண் விளக்குகின்றார்.

நன்னூலார்போல 'மாடக்குச்சித்திரம்' முதலிய உவமங்கள்கொண்டு பாயிரத்தின் சிறப்பை விளக்குதலை நினையாது, பண்டையார் மரபைப் பின்பற்றித் 'திருவிளங்கிய மாநகரத்திற்கு உரு அமைந்த வாயில்மாடம்' முதலிய உவமங்களால் பாயிரத்தின் இன்றியமையாமையை விளக்கி, அதன் பயனையும் அதனைக் கேளாதார் படும் இடுக்கண்ணையும் சுட்டி, அப்பாயிரத்தின் இரு பகுப்புக்களையும் தெரித்து, அப்பகுப்புக்களின் பெயர்க் காரணத்தையும் விளக்குகிறார்.

பொதுப்பாயிரம் ஈவோன்தன்மை முதலிய நான்கனையுமே சொல்லுவது என்ற பண்டையார் மரபைப் பின்பற்றிச் சாற்றி, பாயிரத்துள் நூலின் இயல்பு கூறுவது நேரிதன்று என்பதனையும் உரையுள் விளக்குகிறார். 'ஈவோன் தன்மை ஈதல் இயற்கை—

கொள்வோன் தன்மை கோடல் மரபு' என்ற நான் கனையும் முன்னூல் உரைகளையும் நன்னூல் நூற்பாக் களையும் கொண்டு ஏற்ற பெற்றி விளக்கி, பொதுப் பாயிரத்து இறுதியில் ஆத்திரையன் பேராசிரியன் வரைந்த 'வலம்புரி முத்தின்' என்ற பொதுப்பாயிர நூற்பாவினையும் வரைந்துள்ளார்.

சிறப்புப்பாயிரத்தின் இலக்கணத்தை விளக்கி, இந் நூற்கு அமைந்த சிறப்புப்பாயிரத்தை வரைந்து, அதன் உரையையும் எழுதிப் பாயிர இலக்கணம் முழுவதையும் நூன்முகமாக அமைத்துள்ளார்.

பெரும்பாலும் பின்னர் எழுந்த சுருக்க நூலாகிய நன்னூலையொட்டி, அது முன்னூலொடு முரணுமிடத்து அதனை அகற்றி, முன்னூற் பொருளை உட்கொண்டு நூற்பாவும் தக்க உரையும் வரைந்து செல்லும் இவ்வாசி ரியர், தம் சமய நிலைக்கு ஏற்ப, மலைமகளை மணந்து உலகு அளிக்கும் சிவபெருமானுக்கு வணக்கம் செலுத்தி எழுத்திலக்கணம் வரையப்புக்க தம் கருத்தினைத் தற் சிறப்புப்பாயிரத்தில் சுட்டுகிறார்.

எழுத்தியல்

முதல் ஓத்தாகிய எழுத்தியலை, தனித்தும் மொழிப் படுத்தும் ஒலிக்கப்படும் எழுத்துக்கள் பற்றிய 'எண்—பெயர்—முறை—பிறப்பு—உருவம்—அளவு—முதல்நிலை—இறுதிநிலை—இடைநிலை மெய்ம்மயக்கம் — போலி' என்ற பத்தனையும் விரித்துக் கூறுவதாக அமைத்துள்ளார்.

அதன் தொடக்கத்தில் எழுத்தியலில் கூறப்புக்க இப்பத்துச் செய்திகளையும் நன்னூலார் போலவே தொகுத்துச் சுட்டி, அந்நூற்பா உரையில், எழுத்தினை எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும் விளக்கப் புகும் நச்சினார்க்கினியர் உரைத்தவற்றில் ஏற்பன கொள்கிறார்.

நன்னூலார் சமணர் ஆதலின், அவருக்கு மாயை உடன்பாடன்று. ஆகவே, 'ஐம்பெரும் பூதங்களின்' தொடர்பால் உலகத்துப் பொருள்கள் யாவும் தோன்றும் என்ற தோட்பாட்டினர் அவர். எனவே, அவர் சிதலது நீர்வாய்ச் சிறுதுகளால் பெரும்புற்றுரு வமைந்த பெற்றித்தென்ன ஐம்புலப் பேருரு ஐந்தும் ஐந்தணுவால் இம்பரிற் சமைவது யாவரும் அவர் கருத்துப்பற்றி யறிதலின்,அநாதி காரணமாகிய மாயையினை விடுத்து, ஆதிகாரணமாகிய ஒலி யணுக்களையே எழுத்தின் தோற்றத்துக்குக் காரணமாகக் கூறியுள்ளார். ஆனால் சைவசமயத்துச் சான்றோராகிய நம் ஆசிரியர், இறைவன் மாயையிலிருந்து தோன்றிய நாதத்தின் காரியமே ஒலி என்பதைத் தம் கருத்துப்பற்றி வலியுறுத்துகிறார்.

முதலெழுத்து முப்பது என்பதில், பெரும்பாலும் நூலாசிரியர்களிடையே கருத்து வேற்றுமையில்லை. ஆயினும், தொல்காப்பியனார் சார்பெழுத்து மூன்று என்றே கூறியிருப்பினும், நன்னூலார் சார்பெழுத்துப் பத்து என்று குறிப்பிட்டுள்ளார். நம் ஆசிரியர், தொல்காப்பியனார் சார்பெழுத்து என்று பெயரிடாது போயினும், அவரால் உடன்படப்பட்டனவாகிய 'உயிர்மெய், உயிரளபு, ஒற்றளபு, ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம்' ஆகியவற்றையும் நன்னூலாரோடு ஒருபுடை ஒத்துச் சார்பெழுத்தாகக்கொண்டு, நன்னூலார் சுட்டிய ஆய்தக் குறுக்கம் தொல்காப்பியனாருக்கு உடன்பாடன்று ஆதலின் அதனைமாத்திரம் விலக்கி, சார்பெழுத்தின் வகை ஒன்பது என்கிறார். ஓர் எழுத்தினையே அது வருகின்ற இடம் பலவாதலை நோக்கிப் பலவாகக் கணக்கிட்டுச் சார்பெழுத்தின் விரி முந்நூற்றறுபத்தொன்பது என்று குறிப்பிடும் நன்னூலார் கருத்து, இலக்கண மரபுக்கு ஏற்றதன்று என்னும் தம் கருத்தினை வெளிப்படையாகச் சுட்டுகிறார்.

''தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச்
சுட்டுதற் கண்ணேயாம் சொல்''

என்பது இலக்கணமாதலின், சுட்டுப்பொருள் வினாப் பொருள் தரும் நிலையில் 'அகரம் எகரம்' முதலியன இடைச் சொல்லேயாம் என்பதனை உட்கொண்டு அவற்றைச் சுட்டெழுத்து வினாவெழுத்து எனப் பெயரிட் டழையாது, வாளா சுட்டுவினா என்றே குறிப்பிடுகிறார். தனியேவரும் சுட்டும் முதற்கண்வரும் சுட்டுள் அடங்கும் என்ற கருத்தான், ''அ இ உ முதல்வரின் சுட்டே'' எனவே நூற்பா அமைக்கிறார்.

உயிர்வகைகளையடுத்து மெய்யின்வகைகளை நிரல் படக்கூறி, ஒவ்வொன்றினையும் பெயரிடுவதற்குரிய விரிவான காரணங்களையும் நவில்கிறார்.

எழுத்துக்களுக்கு இனஅடைவுகூறி, அவற்றின் நெடுங் கணக்கமைப்பின் முறைவைப்பையும் பெரும்பாலும் நச்சினார்க்கினியரை ஒட்டி ஓராற்றான் விளக்குகிறார்.

எழுத்துக்களின் பிறப்பைக் குறிப்பிடும்போது, அவற்றின் பிறப்பிடங்கள் முயற்சிக்கருவிகள் இவற்றைப் பொதுவகையால் நன்னூலையொட்டிக் குறிப்பிட்டு, பிறப்பிடங்களை விதக்கும்போது நச்சினார்க்கினியர் உரைத்தாங்குரைத்து, பின், முயற்சி வகைகளை நன்னூலாரை ஒட்டி யகரம் ஒன்று நீங்கலான ஏனைய வற்றிற்கு விதந்து, யகரத்தின் பிறப்பிற்குரிய முயற்சி ''அடிநா அடியணம் உறுவதன்று; அண்ணங் கண்ணிய மிடற்றெழு வளியிசை உரலாணி யிட்டாற்போற் செறிவதே'' என்பதனை விளக்குகிறார்.

எழுத்து ஒன்று பலவாதலாகிய இலக்கணத்தை ஒலி வடிவம் வரிவடிவம் இரண்டற்கும் தனித்தனியாகத் தொல்காப்பிய நூற்பாக்கொண்டு விளக்குகிறார்.

குற்றியலுகரமே குற்றியலிகரமாய்த் திரியும் என்ற நன்னூலார் கருத்தினை விடுத்து, தொல்காப்பியனார்,

''யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது''

என்று கூறியதனை ஒட்டி, ''யகரம் வரக்குறள் உத்தப வரும் இகரம்'' என்று நூற்பா அமைக்கிறார்.

நன்னூலாரையே பெரும்பாலும் பின்பற்றிக்குற்றிய லுகரத்தின் இலக்கணத்தைக் கூறும் இவர், ஈறொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகாமை, வல்லொற்றுத் தொடர்மொழி யிறுதிக் குற்றியலுகரம் வருமொழித் தொடக்கத்தில் வல்லெழுத்து வரின் கான்மாத்திரையது ஆதல், குற்றியலுகரத்தை ஈற்றயல் அசை பற்றிக் கணக்கிடக் கூடாது எனல் முதலியவற்றைக் குறைவற

உரையிற் சாற்றி, குற்றியலுகரம் உயிரின் குறுக்கம் ஆயினும், புணர்ச்சிக்கண் மெய்போல உயிர் ஏற இடங் கொடுத்தல் முதலியவற்றான் சார்பெழுத்தாயின வற்றை நன்கெடுத்தியம்புகிறார்.

ஆய்தம் பற்றிய தொல்காப்பிய நூற்பாவினையே நன்னூலார்போலத் தாமும் குறிப்பிட்டு, ஆய்தம் குறிலிணைக்குப்பின் வரும் பொருண்மையைச் சுட்டி, அது புள்ளியுள் அடங்காததன் காரணத்தையும் தெரிவிக் கிறார்.

உயிர்மெய்யின் வரிவடிவு ஒலிவடிவு இரண்டனையும் உட்கொண்டு நூற்பாவில் இலக்கணம் சாற்றும் இவர், அந்நூற்பா வுரையில் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றில் குறிப்பிடும் செய்திகளை இயைபுபடுத்தி உரைக்கிறார்.

நெட்டெழுத்துக்கள் தத்தம் இனமாகிய குற்றெழுத் துக்களுடன் கூடியே அளபெடையை உண்டாக்கும் தமிழ் மரபை நன்கு விளக்கி, நன்னூலார் நெடிலே மூன்று மாத்திரையாயும் நான்கு மாத்திரையாயும்அளபெடுக்கும் எனவும் ''அவற்றவற்று இனக்குறில் குறியே'' எனவும் கூறிய வடநூல் மரபைமறுத்து, நச்சினார்க்கினியர் தம் உரையைப் பின்பற்றி அளபெடை ஓசைக்கு விளக்கம் தருகிறார்.அளபெடைக்கு உதவுதல் ஒன்றனையே பற்றி ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும்இனம் என்றல் ஆகாது என்பதைத் தொல்காப்பியனார் கருத் தாகச் சுட்டுகிறார்.

ஒற்றளபெடை குறிற்கீழும் குறிலிணைக்கீழும் இடையும் கடையும் வருமாற்றை நூற்பாவில் வரைந்து, உரையில், ஒற்றுக்கள் ஓசையை நிரப்பிப் பொருள் வேறுபாடு காட்டாது செய்யுளில் இடையே தனித்து வருமாற்றையும் ஓரொற்றான் ஓசை நிரம்பாதவழி

ஒற்றளபெடை வருமாற்றையும் மேற்கோள் நூற்பாச் செய்திகொண்டு நிறுவுகிறார்.

ஐகாரம் தன்னைக் குறிக்கும் அளவிலும் அளபெடுக்கும் நிலையிலுமே குறுகாது என்றும், மற்ற இடங்களில் மொழி மூவிடமும் குறுகும் என்றும், ஔகாரம் மொழி முதற்கண் குறுகும் என்றும், இவை பெரும்பாலும் செய்யுட்கண் தொடைநயம் நோக்கிவரும் என்றும் நவில்கிறார்.

ளமெய் திரிந்த ணணமுன் வரும் மகரம் குறுகுமாற்றை ஈண்டேவிளக்கிச் சாற்றுகிறார். எழுத்துவடிவம் பற்றிப் பேசுகையில்,ஏகார ஓகாரங்களுக்கும் எகர ஒகரங்களுக்கும், அகர உயிர் ஏறியமெய்க்கும் தனி மெய்க்கும் வேறுபாடு தெரிவிப்பன மேற்புள்ளிகளே என்று நவின்று, மேற்புள்ளிகள் முன்னிருந்த அளவினைச் செம்பாதியாக்குமாற்றை அறிவிக்கிறார்.

மாத்திரை கூறும் நூற்பாவில், தனி எழுத்துக்களுக்கே ஒலியளவு கூறி, இரண்டு மூன்று எழுத்துக்களால் ஆகும் உயிரளபெடைக்கும் ஒற்றளபெடைக்கும் அளவினைஉரையிலேயேகுறிப்பிடுகிறார். வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றியலுகரம், வருமொழியில் வல்லெழுத்து வருவழிக் கால்மாத்திரை அளவினதாதலும் உரையிலேயே குறிப்பிடப்படுகிறது. மாத்திரை பற்றிய விளக்கங்கள் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியனவே. அடுத்த நூற்பாவில் எழுத்துக்கள் அளவு கடந்து ஒலிக்கும் இடங்கள் சுட்டப்படுகின்றன.

மொழிக்கு முதலாகும் எழுத்துக்களைத் தொல்காப்பியனார் கருத்தை உட்கொண்டு பெரும்பாலும் பழந்தமிழ் மரபு நோக்கிச் சொல்லும் இவர், சகரமெய் ஐகார ஔகார உயிர்களோடும், யகரமெய் அகர உகர ஊகார ஔகார ஓகாரங்களோடும், ஞகரமெய் அகரத்

தோடும், ஙகரமெய் சுட்டு யாவினா எகரவினா இவற்றின் பின்னர் அகரத்தை ஒட்டியும் முதலாக வரும் என்று சுட்டும் நன்னூலார் கொள்கையை ஏற்பவர் அல்லர். இங்ஙனம் நன்னூலார் குறிப்பிட்டுள்ள எழுத்துக்களை முதலாகக் கொண்டு தமிழில் அருகிவரும் திசை வட சொற்களை உள்ளடக்கித் தமிழில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களைக் கணக்கிடுதல் கூடாது என்ற எண்ணத்தர்போலும் இவர். மொழிக்கு ஈறாம் எழுத்துக் கள் பற்றிய நன்னூலார் கருத்துத் தமக்கும் உடன் பாடாகவே, மொழிக்கு ஈறாமவற்றை அவர் மதம் பற்றிக் குறிப்பிட்டார். எனினும், ''அளபெடைக்கண் குற்றுயிர் வரிவடிவில் அறிகுறியாய் எழுதப்படும்'' என்ற நன்னூலார் கருத்து மக்கள் மனத்தில் சிவணுதல் கூடாது என்ற எண்ணத்தான் இயற்கையாய் வரும் குற்றுயிரீற்றினையும், அளபெடைக்கண் வரும் குற்றுயி ரீற்றினையும் தனித்தனியே கணக்கிட்டு மொழியீற்றில் வரும் எழுத்துக்களை விளக்குகிறார். இறுதிக்கண் ணகரத்திற்கு மகரம் போலி எழுத்தாய் வருவதனை உட் கொண்டு, ஈற்றுப் போலியை நன்னூலார் கருத்துப்படிக் கூறாது தொல்காப்பியத்தை ஒட்டிக் குறிப்பிட்டு, இறுதி மயக்கமாதலின் இறுதிநிலையை அடுத்துச் சுட்டுகிறார்.

அடுத்து, வேற்றுநிலை மெய்ம்மயக்கம் உடனிலை மெய்ம் மயக்கங்களை விளக்கி, நச்சினார்க்கினியர் போல மெய்ம் மயக்கத்தை ஒரு மொழிக்கண் மாத்திரம் கூறாது ஒருமொழி இருமொழி இரண்டன்கண்ணும் கொண்டு விளக்கிக் கூறி, பின், உயிர்மெய்ம்மயக்கம் கணக்கில் அடங்காது ஆதலின் அதனை விளக்கிக் கூறாது வாளாச் சுட்டி விடுக்கிறார்.

பின், ஈரொற்றுடனிலையை விளக்கும் ஆசிரியர், இயைபு பற்றி, லளமெய் திரிந்த னணமுன் மகாரம் ஈரொற்றாகிய காலை மகரக்குறுக்கமாகும் நிலை செய்யுட் கண்ணது என்று சாற்றுகின்றார்.

பின், போலியைப் பற்றிக் கூறுமிடத்துச் 'சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள்போல இசைக்கும்; அவற்றைக் கொள்ளற்க' என்ற நச்சினார்க்கினியர் கருத்தை அடியொற்றி, நன்னூல் நூற்பாவோடு தொல் காப்பிய நூற்பா ஒன்றனையும் இணைத்து நுவல்கிறார்.

உயிரும் உயிர்மெய்யும் எழுத்துச்சாரியை பெற்றும் பெறாதும் வரும் வழக்காற்றை உட்கொண்டு, சாரியைப் பேறு எழுத்திற்கு ஒருதலையன்றாதலின், மெய்க்கு அகரச்சாரியை குறிப்பிட்ட நன்னூலார் கருத்தை ஏலாது, தொல்காப்பியனார் நுவன்றவாறே 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' என்று மெய்யொலியின் சிறப்பு நிலையை எடுத்தியம்பிப் பின், நன்னூலார் கூறியாங்கு எழுத்துச் சாரியைகளை விளக்குகிறார். நன்னூலார் குறிப்பிடாத சில வேற்றுச் சாரியைகளையும் எடுத்தியம்பி, சாரியைபெற்றே வரல்வேண்டும் என்ற வரையறை தனிமெய் அல்லனவற்றிற்கு இன்று என்பதையும் உரையில் விளக்கி எழுத்தியலைத் தலைக் கட்டுகிறார்.

பதவியல்

நன்னூலை உட்கொண்டு எழுத்துப்படலத்தை ஐந்து இயல்களாகப் பகுத்துணர்த்தும் இவ்வாசிரியர், நன்னூலார் போலவே அதன் இரண்டாம் இயலுக்குப் பதவியல் என்றே பெயரிட்டுள்ளார். இவ்வியலின் எடுத்துக்கோடற்கண் ஈரெழுத்து ஒருமொழியை இணைமொழி எனப் பெயரிட்டு. 'எழுத்தே தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்' எனக்கூறி, பின் அது பகாப்பதம் பகுபதம் என்ற இருபாலதாதலை விளக்குகிறார். எழுத்து மொழியாதல்பற்றி யமைந்த செய்திகள் பலவற்றையும் உரையில் எழுதி, ஒற்றினையும் குற்றியலுகரத்தையும் கணக்கிட்டே மொழியிடைப் பட்ட எழுத்துக்களை எண்ணுதல் வேண்டும் என்ற கருத்தை நிறுவுகிறார். தொல்காப்பியனார் கருத்துப்படி

''நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி
குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே''

என்ற நூற்பா அமைத்து, நச்சினார்க்கினியர் தரும் விளக்கங்களையும் நவில்கிறார்.

'பகாஅப் பதம்' என்ற தலைப்பில் அமைந்த நூற்பா உரையில், பகுபதம் போலக் காட்சியளிக்கும் சாத்தன் கொற்றன் போல்வனவும், ஒரு பிண்டமாகக் கொண்டு உணரப்படும் சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரன் சேரல் இரும்பொறை போல்வனவும் பகாப்பதமே என்பதை நிறுவி, 'அஃறிணை விரவுப் பெயர்' என்பது தன்னொடு இயைபின்மை நீக்கிய விசேடணமாய் விரவுப் பெயரின் உண்மைத் தன்மைத் தோற்றம் கூறுகிறது என்ற நச்சினார்க்கினியர் கருத்தை உட்கொண்டு அதனை விளக்குகிறார். பகுபதம் வினை, வினைப்

பெயர் என்ற இரண்டு பகுதியது ஆதலை விளக்கிச் சுட்டுகிறார். பகுபத உறுப்புக்கள் ஆறனையும் நூற்பாவில் சுட்டி, உரையில் அவற்றைத் தக்காங்கு விளக்குகிறார். 'நடவா' முதலியன ஏவல் வினைகள் அல்ல, தெரிநிலை வினைப் பகுதிகளாகிய முதல்நிலைத் தொழிற்பெயரே என்பதைத் தக்க விளக்கங்களோடு நிறுவுகிறார். 'நடவா' முதலியவற்றோடு 'வி பி' என்பன ஏற்ற பெற்றிவரின் ஏவல் வினைப்பகுதியாகும் என்பதை விளக்கி, நடவா என்பன தனித்து ஏவல்வினை ஆகா என்பதையும் இயைபுபற்றிச் சுட்டி, ஈரேவல் என்பது பொருந்தா வழக்கு என்ற கருத்தைச் சொல்லதிகாரத்தில் நச்சினார்க்கினியர் சொற்றவற்றை உட்கொண்டு சாற்றுகிறார்.

பொருள் ஆதி ஆறும் அடிப்படையாகக் குறிப்பு வினை தோன்றுமாற்றை விளக்கியபின், சொல்லதிகாரத்தில் நச்சினார்க்கினியர் குறிப்பிட்ட கருத்துக்களை உட்கொண்டு, 'செம்மை சிறுமை' முதலியன பண்பிற் பகா நிலைப்பதம் எனவும், அவை விகுதி முதலியவற்றோடு சேர்வுழி 'ஈறு போதல்' முதலிய விகாரங்கள் நிகழும் எனவும் கூறும் நன்னூலார் கருத்து ஏற்புடைத்தன்று என்பதை நிறுவுகிறார்.

பின், வினைவிகுதிகளைச் சுருங்கச் சொல்லல் என்ற வனப்புத்தோன்ற நூற்பா வாயிலாக வெளியிட்டு, நன்னூலார் போலப் புதியன புகுந்தவற்றையும் மறாது தழுவி, சொல்லதிகாரத்தில் நச்சினார்க்கினியர் குறிப்பிட்ட அரிய வியங்கோள் விகுதிகளையும் நூற்பாவில் அமைத்து, அவற்றைத் தக்க எடுத்துக்காட்டுக்கள் கொண்டு உரையில் விளக்குகிறார்.

நன்னூலார் இறந்தகால இடைநிலை 'த ற ட ஒற்று இன்னே' என்று கூறியிருக்கவும், இவர் புக்கான், நக்கான் முதலிய வினைகளில் ககரமும் இறந்தகாலம்

காட்டுமாற்றை உட்கொண்டு, 'க ட த ற ஒற்று இன்னே இறந்தகால இடைநிலை' என்று நூற்பா யாத்து, ஏற்ற எடுத்துக்காட்டுக்களையும் உரையில் தந்துள்ளார். நிகழ்கால எதிர்கால இடைநிலைகளை நன்னூலை ஒட்டியே குறிப்பிடும் இவர், தம் உரையில் இவ்விடை நிலைகள்வேற்றுக்காலங்களைக் காட்ட வருமாற்றையும் நச்சினார்க்கினியர் சொல்லதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள செய்திகளை அடியொற்றி விளக்கிச் செல்கிறார்.

காலங்காட்டும் இடைநிலைகளை ஏலாத சில வினை முற்றுப் பகுபதங்களை அடுத்த நூற்பாவில் நிரல்பட அமைக்கும் இவர், அந்நூற்பா உரையில், நன்னூலார் இடைநிலையின்றிக் காலங் காட்டுவனவாக அமைந்த வினைகளைச் சுட்டி வரைந்த 'றவ்வொ டுகரஉம்மை' என்ற நூற்பாச்செய்தி சான்றோர் கருத்தொடு முரணு மாற்றைக் குறிப்பிடுகின்றார்.

கச்சினன் முதலிய குறிப்பு வினைமுற்றுக்களில் இடையில் காணப்படும் 'இன்' சாரியை அன்று, இடை நிலையே என்ற தம் கருத்தினைப்

''பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைக்குறிப்பு இடைநிலை என்னல் வேண்டும்''

என்ற நூற்பா வாயிலாகக் குறிப்பிட்டு, காலங் காட்டுதற் குப் பயன்படாது வாளா இன்னோசைபற்றி வரும் இவ் விடைநிலைகளை வினைப்பெயர்க்கண்ணும் கொள்ளு தல் வேண்டும் என்ற தம்கருத்தினைத்தெரிவிக்கின்றார். பல அரிய பகுபதச் சொற்களை இந்நூற்பா உரையில் பகுத்துக்காட்டி விளக்கந்தந்து இவ்வியலினை முடிக் கின்றார்.

தமிழ் மரபே கருதும் இவர் இவ்வியலில் தமிழ்ச் சொற்களுக்கே விளக்கம் தருதலின், நன்னூலார் வட மொழி யாக்கத்தைப் பதவியலின்கண்ணே கூறியாங்குத்

தாமும் கூறாது, தொல்காப்பியனார் வடசொல்பற்றிய செய்திகளை இயைபுபற்றி எச்சவியலில் கூறியமை போலவே, தாமும் செய்யுட் சொற்களைக் குறிப்பிடும் பெயரியலில், ஆரியமொழிச் சொற்களில் பெயர்களே தமிழ் இலக்கியங்களில் தொடைநயம், ஓசைநயம் கருதி ஏற்றபெற்றி கொள்ளப்படுமாதலின் இயைபுபற்றி ஆரிய மொழிச்சொற்கள் தமிழில் வடமொழியாக அமைந்து பயன்படுதற்கண் ஏற்படும் மாறுதல்களை யெல்லாம், தொல்காப்பியனார் காலத்தில் தமிழில் சிவணிய வட சொற்கள் சிலவே யாதலின் அவர் கருத்துப்படி நுவலாது, வடமொழிச் சொற்கள் தமிழில் பலவாறு கலந்த இடைக்காலத்துத் தோன்றிய நன்னூலார் யாத்த நூற்பாக்களை அடியொற்றியே, பின் பெயரி யலில் விளக்குவான் வைத்துக் கொள்கிறார்.

உயிரீற்றுப் புணரியல்

பெரும்பான்மையும் நன்னூலை ஒட்டியே நூல் வரையப் புகுந்த இவர், தொல்காப்பியத்து எழுத்துப் படலத்தின் கண்ணவாகிய புணரியல் தொகைமரபு என்ற ஓத்துக்களில் காணப்படும் செய்திகள் பொதுவாகவும் தொகுப்பாகவும் அமைதலின், அவற்றை உயிரீற்றுப் புணரியலின் எடுத்துக்கோடற்கண் உயிரீறு பற்றிச் சிறப்பாக விதந்து கூறுமுன் கூறுதல் வேண்டும் என்ற வரையறை செய்துகொண்டு, அவற்றை உயிரீறு மெய் யீறு என ஈறுபற்றி விதவாது, பொதுச்செய்தி தொகுப்புச்செய்தி என்ற தொடர்பு ஒன்றேகொண்டு இவ்விய லின் எடுத்துக்கோடற்கண் நூற்பாக்கொண்டும் உரை வரைந்தும் விளக்குகின்றார். நச்சினார்க்கினியர் தம் எழுத்ததிகார உரையில் மிகத்தோய்ந்த பேரறிஞராகிய நம் ஆசிரியர் அவர் மிகைச் சொற்களுக்கு வரைந்த விளக்கங்களையும் எடுத்துக்காட்டுக்களையும் பெருமதிப் புடன் ஏற்று ஆட்டாண்டு நூற்பா வுரையுள்பெய்து செல் லுந்திறன், இவர்தம் நினைவாற்றலையும் கூர்த்த மதி யினையும் ஒருதலையாக நுவல்வதாகும்.

தொல்காப்பியனார் ஈறுதோறும் விதந்து கூறும் பல செய்திகளையும் நன்னூலார்போலப் பொதுப்படத் தொகுத்துக் கூறி விளக்கப்புக்க இவர், தொல்காப்பியத் தில் நச்சினார்க்கினியர்தம் எழுத்துப்படலவுரைச் செய்தி கள் பலவற்றையும் தாம் கொண்டுள்ள நூற்பாக்களின் உரையில் இயைபு காட்டி ஏற்றபெற்றி அடக்கிச்செல் லும் திறன் விம்மிதம் பயப்பதாகும்.

நன்னூலார்போலவே புணர்ச்சியிலக்கணம் இன்னது என்பதை அவர்தம் நூற்பாவினைக் கொண்டே நுவலும் இவர், அல்வழி வேற்றுமைகளை விளக்குமிடத்து அல்

வழிக்கண் நன்னூலார் குறிப்பிட்ட வினைத்தொகை பண்புத்தொகை, அன்மொழித்தொகை என்பனவற்றை விடுத்து ஏனையவற்றையே கொண்டு குறிப்பிடுகின்ற மைக்கு உரையாசிரியர்தம் கருத்தை ஒட்டி விளக்கம் தருவதோடு எழுவாயும், விளியும் வேற்றுமையாமேனும் அல்வழிப்பாற்பட்டமைக்கு உரிய காரணங்களையும் சுட்டுகிறார். தொல்காப்பியனார் புணரியலின் எடுத்துக் கோடற்கண் முதல் பதினொரு நூற்பாக்களான் நுவன்ற செய்திகளை இவ்வியலின் முதல் நூற்பா உரையுள் ஏற்றபெற்றி எடுத்துக் கூறுவதோடு, இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ முடிபு, இலக்கணத்தொடு பொருந்தா மரூஉ முடிபு என்பனவற்றையும் விளக்கி, நச்சினார்க் கினியர் உரைத்தாங்குத் தழாஅத் தொடர்களையும் ஈண்டே விளக்கியுள்ளார். பின், ஒரு தொடரில் விகாரம் ஒன்றேயன்றிப் பலவும் வருமாற்றையும் குறிப்பிடுகிறார். நிலைமொழி வருமொழிகள் பெயரும் வினையுமாய் வருதலேயன்றி இடையும் உரியும் ஆகவும் வருமாற்றை ஆட்டாண்டுத் தக்க எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்கி யுள்ளார். இதனைப் புணரியற் பகுதிகள் பலவற்றுள்ளும் யாண்டும் மறவாது கூறிச்செல்லும் திறன் பாராட்டத் தக்கதாகும். பொதுவாகத் தோன்றல் விகாரம் என்பது ஒற்றோ உயிர்மெய்யோ சாரியையோ மிகுதலாகும் என்பதைத் தொடக்கத்திலேயே விளக்குகிறார். பின், செய்யுள் விகாரங்கள் ஆறனையும் குறைகள் மூன்றனை யும் தனித்தனிச் சுட்டி, அவற்றின் வேறுபாடுகளையும் தெரித்துச் சாரியைகளின் தொகுப்பினை நன்னூலார் கூறியாங்குக் குறிப்பிடுகிறார். மரபுநிலை திரியா மாட்சி யோடு பழையன கழித்துப் புதியன புகுத்து நூல்செய் நல் ஆசிரியர்தம் கடப்பாடு ஆதலின், நன்னூலார் கருத்தே காலத்துக்கேற்பத்தக்கது என்று ஓர்ந்து, தொல்காப்பிய னார் குறிப்பிட்டுள்ளவற்றுச் சாரியையினையும், அக்குச் சாரியையினையும் இக்குச்சாரியையினையும் நன்னூலார் கூறியாங்கு அற்றுச் சாரியையாகவும் அகரச் சாரியை

யாகவும் குகரச் சாரியையாகவுமே கொண்டுள்ளார். அத்துச் சாரியை புணர்ச்சிக்கண் அமையுமாற்றைத் தொல்காப்பியனார் கூறுமாறு ஓராற்றான் குறிப் பிடுகிறார் சாரியைகளைத் தொல்காப்பியனார் விதந்து கூறுமாறு ஈறுகள்தோறும் எடுத்து விதப்பதனை விடுத்து, நன்னூலார் மதத்தை உட்கொண்டு பொது வாகச் சாரியை வருதலும் தவிர்தலும் விகற்பமுமாகும் என்றே கூறி யொழிகிறார். இச் சாரியைகளை அமைப் பதும் தவிர்வதும் இலக்கியங்கண்டு இலக்கணத்தைப் பயன்கொள்ளும் ஆன்றோர் கடனாகும் என்று சொல்லி, விகுதிப்புணர்ச்சி பதப்புணர்ச்சி உருபுபுணர்ச்சி இவற்றில் சாரியை வேண்டியும் வேண்டாதும் நிற்குமாற்றை நச்சி னார்க்கினியர் உரைத்த சில எடுத்துக்காட்டுக்களை உட் கொண்டு விளக்குகிறார்.

பின், எழுத்துக்கள் ஒன்று பலவாதலை ஓசை வேற்றுமையான் அன்றி வரிவடிவான் அறியலாகாது என்பதனைத் தொல்காப்பிய நூற்பாக்களைக் கொண்டே நுவல்கிறார்.

நீரோடு கூடிய பால்போலப் புள்ளியீற்றுமுன் வரும் உயிர்மெய்யோடுகூடி உயிர்மெய் ஆகுமாற்றைவிளக்கும் இவர், குற்றியலுகர ஈற்றின்முன்னும் வருமொழியின் தொடக்கத்தில்வரும் உயிர்ஏறி முடிய அக்குற்றியலுகர ஈறு இடங்கொடுக்குமாற்றையும், வருமொழியின் தொடக்கத்தில் ய க ர மெய்வரின் நிலைமொழி யீற்றுக் குற்றியலுகரம் தான்கெட்டுக் குற்றியலிகரத்திற்குஇடன் தருமாற்றையும் விளக்குகிறார். இவ்விடங்களிலெல்லாம் நச்சினார்க்கினியமே காணப்படுகிறது.

அடுத்துத் தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டுமாற்றையும், தன்னொழி மெய்முன் ய வரின் இகரம் துன்னும் என்று கொள்ளும் சிறுபான்மையினர் கருத்தினையும் சுட்டுகிறார்.

உடம்படுமெய் பற்றி நன்னூலார்போலவே குறிப்பிட்டு, உரையில், ஏகரம் அளபெடைக்கண் ஈறாகவரும் ஆதலின் அந்நிலையில் உண்டேஎயிகல், சேஎவடைந்தது என எகரத்தின் முன்னும் யகர உடம்படுமெய்யும் வகர உடப்படுமெய்யும் ஏற்றபெற்றி வருவதற்கு வாய்ப்பு உண்மையையும், 'விண்வத்துக் கொட்கும்' எனச் சிறுபான்மை உடம்படுமெய் புள்ளியீற்றின் முன்னும் வருமாற்றையும் சுட்டி, உடம்படுமெய் வருதல் ஒருதலையன்று என்பதனையும் நுவல்கிறார்.

'எண்மூ எழுத்தீற்று எவ்வகை மொழிக்கும்-முன்வரு ஞநமய வக்கள் இயல்பாம்' என்னும் இவர் அவ்வியல்பு புணர்ச்சிக்குக் குறிப்பிடும் எடுத்துக்காட்டுக்களில், பெயர் வினை இடை உரி என்ற நான்கும் இடம்பெறுகின்றன. தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ள 'மெல்லெழுத்து உறழ்தல' அவர்காலத்துக்குப் பின் தொடர் மொழிக்கண் மாத்திரமன்றி ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொரு மொழி என்பனவற்றின்கண்ணும் பிற்காலத்தில் நிகழ்வதனை உட்கொண்டு, நச்சினார்க்கினியர் சுட்டியவாறே எடுத்துக்காட்டுக்களில் தொடர்மொழி அல்லனவற்றையும் சுட்டுகிறார். 'மண்யாத்த' 'மண்ஞாத்த' முதலிய எழுத்துப்போலிகளும் ஈண்டே இடம் பெறுகின்றன. இந்நூற்பாப் பகுதியில் 'னலணளவழி ந திரியும்' என்ற செய்தி சுட்டப்பட்டமையின், தொல்காப்பியனாரை ஒருவழி அடியொற்றி 'ண ள முன் ட ண வும்' என்ற மெய்யீற்றுப் புணர்ச்சிச் செய்தியை இயை புபற்றி ஈண்டே குறிப்பிட்டுள்ளமை உளங்கொளத்தக்கது.

பின், பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்ப் புணர்ச்சி பற்றிய நூற்பாவினை நன்னூலை அடியொற்றி நுவன்று, தொல்காப்பியனார் 'உயிரீறாகிய', 'அவற்றுள், இகர இறு பெயர்' 'அஃறிணை விரவுப்பெயர்' என்றமைத்த நூற்பாக்க ல் நச்சினார்க்கினியர் சுட்டும்

பல செய்திகளையும், உயிர்மயங்கியல் நூற்பாக்களில் தாம் கொண்ட மிகைச் சொற்களால் அவர் ஏற்றி யுரைக்கும் பல செய்திகளையும் இந்நூற்பாவின் உரை யிலேயே எடுத்துக்கூறும் நம் ஆசிரியர் உயர்திணை வினை பற்றிய புணர்ச்சியினையும் ஈண்டே சுட்டிச் செல்லுதல் பாராட்டத் தக்கது.

அடுத்து, பொதுவாக விளிப்பெயர்களும் இயல்பு புணர்ச்சியே பெறற்பாலன என்பதனை நூற்பாவாயிலாக விளக்கப்புக்க நம் ஆசிரியர், தொல்காப்பியச்சொற்படல விளிமரபு என்ற இயல் உரையில் உயர்திணைப் பெயர் கள் அஃறிணைப் பெயர்கள் விரவுப்பெயர்கள் ஆகிய யாவும் விளியேற்றல் பற்றி நச்சினார்க்கினியர் உரைத் தன பலவற்றையும் உட்கொண்டு ஈண்டே நுவலுந் திறன் குறித்துணரத் தக்கதாகும்.

பின், முன்னிலை ஏவல்வினைகள் இயல்பாகவும் உறழ்வாகவும் புணருமாற்றைக் குறிப்பிடும் இவர், 'ஔ என வரூஉம் உயிரிறு சொல்லும்' என்ற தொல்காப்பிய நூற்பாவினைத் தம் நூலியைபுக்கேற்பச் சிறிது மாற்றி, உரை வரைந்து எடுத்துக்காட்டும் தருகிறார்.

இரண்டாம் வேற்றுமைத் திரிபுபற்றிய தொல்காப்பிய நூற்பா, நச்சினார்க்கினியர்தம் உரையுள் ஏற்பன கொண்டு அடுத்து இடம்பெறுகிறது.

பின், மூன்றாம்வேற்றுமைத் திரிபுபற்றி நன்னூலை ஒட்டி நூற்பாவினை அமைக்கும் இவர், அதனை நன்கு விளக்கி அது வேறுபடுமாற்றைப் பொதுவிதிச் செய்தி காட்டி நிறுவுகிறார்.

அல்வழிப்புணர்ச்சியில் இகர ஐகார ஈறுகள் எழு வாய்த்தொடரில் பெரும்பான்மையும் இயல்பாகவும், சிறு பான்மை உறழ்ந்தும், இருபெயரொட்டில் மிக்கும் புணரும் புணர்ச்சியினைத் தொல்காப்பிய நூற்பாக் கொண்டே விளக்குகிறார்.

அளவு நிறை எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாக, அவற்றில் குறைந்த மதிப்புடைய ஒத்த பெயர்கள் வருமொழியாய் வந்து புணரும் ஞான்று 'ஏ' என்னும் சாரியை இடையே வரும் என்று குறிப்பிடும் தொல்காப்பிய நூற்பாவினை அடுத்து வரைந்து, அதன் உரையில் தொகைமரபினுள்ளும் பிறாண்டும் காணப்பெறும் எண் நிறை அளவு பற்றிய செய்திகளில் தேவைப்படுவன எல்லாவற்றையும் சுட்டி, அந்நூற்பா வுரையிறுதியில் அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி உளவெனப் பட்ட ஒன்பான் எழுத்தையும் எடுத்துக்காட்டி விளக்கமும் நுவலுகிறார்.

நாழி என்பதன்முன் உரி என்ற வருமொழி வருமாற்றையும், உரி என்பதனை நிலைமொழியாகக் கொண்டு பிற சொற்கள் வந்து புணருமாற்றையும் தனி நூற்பா வாயிலாக விளக்குகிறார்.

தொல்காப்பியனாருக்கு எகரவினா யாவினாவின் திரிபு எனினும், பிற்காலத்தில் எகரவினா பெரிதும் பழக்கத்தில் வந்தமையான், 'எகரவினா முச்சுட்டு'ப் பற்றி யமைந்துள்ள நன்னூல் நூற்பாவினைச் சிறிது திரித்து வரைந்து சுட்டுப்பற்றி அகர இகர உகர ஈறுகளில் நச்சினார்க்கினியர் வரைந்தன யாவையும் இயைபு படுத்திக் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியனார் ஒற்றீற்றுத் தொழிற்பெயர்களை 'ஞகாரை ஒற்றிறு தொழிற்பெயர்' என்றாற்போல ஈறு தோறும் எடுத்துவிதக்கும் மரபினை நீத்து, சுருக்கநூலாதலின், நன்னூல்போல எல்லா ஈறுகளையும் தொகுத்து விதி கூறப்புக்க இவர், நன்னூலார்போல 'ஞ ண ந ம ல வ ள ன ஒற்றிரு தொழிற்பெயர் ஏவல் வினை' என இரண்டனையும் கூறாது, தொழிற்பெயரை மாத்திரம் குறிப்பிட்டு நூற்பா யாத்து அதன் உரையில் தொழிற்பெயர்கள் பற்றிய நூற்பாக்களில் நச்சினார்க்கினியர் உரைத்தனவாகிய செய்திகள் யாவற்றையும்

சுட்டுகிறார். அந்நூற்பாவிலேயே நகரஈற்றுப்புணர்ச்சி வேறுபாட்டையும் நவில்கிறார்.

தொல்காப்பியனார் போல ஈறுதோறும் மிக்குப் புணரும் புணர்ச்சியைச் கூறாது, நன்னூலார் போலப் பொதுவாக 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்-வல்லெழுத்து மிகும்' என்று கூறினாராயினும், தொல் காப்பியனார் ஈறுதோறும் விதந்து குறிப்பிட்ட செய்தி களையெல்லாம் எஞ்சாமல் சுட்டியதோடு, பெயர்வினைப் புணர்ச்சி மாத்திரமன்றி இடைஉரிசொற்களின் புணர்ச்சி யினையும் விதி கூறி விரிவாக விளக்குகிறார்.

மரப்பெயர் பற்றித் தொல்காப்பியனார் பலவாகக் கூறும் புணர்ச்சிக் செய்திகளைச் சுருக்கி நான்கு வகைப் புணர்ச்சி வேறுபாட்டின்கண் அடக்கி நூற்பா யாக்கும் இவர், தொல்காப்பியனார் குறிப்பிட்ட பல செய்திகளை யும் மறவாது தெரிப்பதொடு, பின்னுள்ள இலக்கியங் களை உட்கொண்டு நச்சினார்க்கினியர் வரைந்த பல வற்றையும் எஞ்சாது குறிப்பிட்டுள்ளார்.

பனை என்ற சொல்பற்றிய நூற்பா உரையுள் ஐகார ஈற்று மரப் பெயராகிய ஆவிரை முதலியன பற்றிய புணர்ச்சி விதிகளும் இடம் பெறுகின்றன.

இதுகாறும் பொதுவும் தொகுப்புமாகிய புணர்ச்சி கூறிய ஆசிரியர், இனிப் புணர்ச்சியினை உயிர் ஈறுகள் தோறும் விரித்துக் கூறத் தொடங்கிச் சாவ என்னும் வினையெச்சத்தின் புணர்ச்சியினை விளக்குகிறார். அடுத்துஅகர ஈற்றின் இயல்பு புணர்ச்சியினையும், வாழிய என்ற முற்றின் நிலைமொழியீறு வருமொழி வந்துழிப்படும் நிலையினையும் விளக்குகிறார். பலசில என்பனவற்றின் புணர்ச்சியினை நன்னூலை ஒட்டி நவின்று, தொல்காப்பியக் கருத்துக்களையும் உடன் குறிப்பிடுகிறார். அகர ஈற்று அல்வழிப் புணர்ச்சியில் ஆ, மா, மியா, முற்று, யா என் வினாப் பெயர் இவை இயல்பாதலை அடுத்து விளக்குகிறார்.

குறியதன்கீழ் வரும் ஆகாரஈற்றுச்சொற் செய்தியை நன்னூல் நூற்பாக்கொண்டு தெரிவிக்கிறார்.

இகர ஈற்றில் அன்றி இன்றி என்னும் வினையெச் சத்திரிபும், புணர்ச்சியும், சுவைப்புளியின் புணர்ச்சியும் இடம் பெறுகின்றன.

ஈகார ஈற்றுள் பீ, மீ என்பனவற்றின் புணர்ச்சியே சுட்டப்படுகிறது. நீ என்பது விரவுப்பெயர் ஆதலின், அது 'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள்' என்புழி அடங்குதலான்,அதனை ஈண்டுக் குறிப்பிடவில்லை.பின், 'ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்' பற்றிக் கூறுகிறார்.

உகர ஈற்றில் கட்டுப்பெயர், ஒரு இரு என்ற விதி உகர ஈற்று எண்ணுப் பெயர் என்பனவற்றின் புணர்ச்சி களை விரித்துக் கூறும் ஆசிரியர், அது என்பது வரு மொழியாகிய அன்று முதலியவற்றொடு புணரும் முறையை விளக்குகிறார். உரைக்கண், உதுக்காண், எழு முதலிய சொற்களின் புணர்ச்சியும் நச்சினார்க்கினி யத்தை ஒட்டி விளக்கப்பெறுகின்றன.

ஊகார ஈற்றுள் பூ என்ற பெயர் புணருமாற்றை நவில்கிறார்.

எகர ஈற்றில் தெளிவின் ஏ அளபெடுத்தல் இயம்பப் பெறுகிறது. இயைபுபற்றி ஒகர ஈறும் உடன்கொள்ளப் படுகிறது. சிறப்பின் ஓ அளபெடுப்பதும் சுட்டப்படு கிறது. அளபெடைக்கண் வரும் எகர ஒகரங்கள் இயல் பாகுமாறும் வினைக்கண் வரும் எகர ஒகர அளபெடை யெழுத்துக்கள் மிகுமாறும் தொல்காப்பியனார் கருத்தை ஒட்டி விளக்கப்படுகின்றன.

பின், இடைச்சொற்களாகிய ஏவும் ஓவும்இயல்பாகப் புணருமாறு குறிப்பிடப்படுகிறது.

குற்றியலுகர ஈற்றுள் வன்தொடர் அல்லன மிகா என்பதனையும், வன்தொடர் ஒன்றுமட்டும் மிகும் என்பதனையும்,ஏனைய தொடர்களின்புணர்ச்சி விதிகளையும், குற்றியலுகரம் ஐகார ஈறாகத்திரிதலும் உண்டு என்பதனையும், திசைப்பெயர்களின் புணர்ச்சி விதிகளையும் விளக்கிக்கூறும் இவ்வாசிரியர் தொல்காப்பிய உரைச் செய்திகள் பலவற்றையும் இடையிடையே தெரிவிக்கிறார்.

எண்ணுப்பெயர்ப்புணர்ச்சி நூற்பாக்களைப் பெரும் பான்மையும் நன்னூலை ஒட்டியே யாத்துள்ளார் எனினும், தொல்காப்பிய உரைச் செய்திகள் பலவற்றையும் ஆட்டாண்டு இயைபுபடுத்தி எஞ்சாது குறிப்பிடும் இவர், தொண்ணூறு தொள்ளாயிரம் என்பனபற்றிய நன்னூல் விதிகள் பொருந்தா என்பதனை விளக்கி, முன்னூலை ஒட்டியே சுருக்கமாக அமைத்துள்ளார்.

இவ்வியலின் இறுதி நூற்பாவில் மூன்றன் உருபுகளாகிய ஒடுவும் ஓடுவும் ஆறன் உருபுகளாகிய அதுவும் ஆதுவும் இயல்பாகப்புணருமாற்றைச் சுட்டி உயிரீற்றுப் புணர்ச்சியினை முடிக்கும் இவ்வாசிரியர், குற்றியலுகரம் உயிரீறு ஆயினும் மெய்போல உயிர்ஏற இடங்கொடுத்தலின், குற்றியலுகரம் பற்றிய புணர்ச்சி விதிகளை மெய்யீற்றுப் புணரியலைச்சார, இவ்வுயிரீற்றுப் புணரியலின் இறுதிக்கண்வைத்தலே ஏற்றது எனக்கருதுகின்றார் போலும்.

மெய்யீற்றுப் புணரியல்

இவ்வியல்பற்றிய பலசெய்திகளைத் தொல்காப்பியர் தம் மரபினை யொட்டிப் புணர்ச்சியின் எடுத்துக்கோடற் கண் கூறியுள்ளார். ஆதலின் இவ்வியலில் சிலசெய்தி களையே குறிப்பிடும் நிலையில் உள்ள இவ்வாசிரியர், தொடக்கத்தில் ணகர ஈறுபற்றிப் புணர்ச்சிவிதி கூறத் தொடங்கி, ஒப்பின் முடித்தலான் னகரஈற்றினையும் நன் னூலார்போல உடன்கொண்டு, ணகர னகர ஈற்றுப் பொதுப்புணர்ச்சி கூறுகிறார். பின், ணகர ஈற்றுள்வரும் திரிபுகளையும், இயல்பும் திரிபும்பற்றிய சொற்றொகுப் பின் புணர்ச்சிகளையும், நன்னூலை ஒட்டி நூற்பா வாயி லாகக் கூறி, அவற்றின் உரைகளில் அவ்வப்பொருண் மைகள் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களில் நச்சினார்க் கினியர் வரைந்துள்ள செய்திகள் எல்லாவற்றையும் பெரும்பான்மையும் குறிப்பிடுகிறார்.

பின், னகர ஈற்றுக் கிளைப்பெயர் பற்றிய புணர்ச்சி, மீன் என்ற சொற்புணர்ச்சி, தேன் என்ற சொற் புணர்ச்சி, எகின், குயின், மின், பன், கன். அழன் என்ற சொற்களின் புணர்ச்சி யாவும் பெரும்பான்மை நன்னூலை யொட்டியும் சிறுபான்மை தொல்காப்பி யத்தை ஒட்டியும் நூற்பா வாயிலாக விளக்கும் இவர், தம் உரையுள் நச்சினார்க்கினியர் உரைத்த பலவற் றோடு, இடையிடையே தம் கருத்தினை ஒட்டிச் சில வற்றையும் விளக்கியுள்ளார்.

மகரஈற்று நூற்பாவினை நன்னூலையொட்டி யமைத்து, உரையுள் தொல்காப்பியத்தை ஒட்டி நச்சினார்க்கினியர் உரைத்த பலவற்றையும் நவில்கிறார். பின், மகரஈற்று உறழ்வும், இயல்பும், அகம் என்ற சொல்

வருமொழியொடு புணரும் புணர்ச்சியும் இடம் பெறு கின்றன. ஈம்கம் உரும் பற்றிய நன்னூல் நூற்பாவினை எழுதி உரையில் பல அரிய புணர்ச்சிகளை விளக்குகிறார்.

ய ர ழ க்களின் புணர்ச்சியை நன்னூலை ஒட்டி நூற்பா யாத்து உரைத்து, ஆட்டாண்டுத் தொல்காப்பிய நூற்பாக்களின் உரையில் காணப்படும் செய்திகள் பல வற்றையும் இயைத்து உணர்த்துகிறார். தமிழ் தாழ் கீழ் என்ற ழகரஈற்றுச் சொற்களும், அவற்றை ஒட்டியனவும் பின் விளக்கப்பெறுகின்றன. தொல்காப்பியனார் ஏழ் என்ற எண்ணுப் பெயரை ழகர ஈற்றுச் சொல்லாகவே கொண்டு பல நூற்பாக்களில் ஏழ் என்பதன் புணர்ச்சி யாகச் சொற்றவற்றை, ஏழ் என்பதனை ஆறு என்பத னோடு மாட்டெறிதல் வாயிலாக விளக்குகிறார்.

ல ள என்பனவற்றின் புணர்ச்சிவிதி நன்னூலை ஒட்டியதேனும், உரையில் தொல்காப்பிய உரைக் கருத் துக்கள் விடுபட்டில. 'குறில்வழி ல ள', 'குறில் செறியா ல ள' பற்றிய நன்னூல் விதிகள் அடுத்து இடம் பெறு கின்றன. உரையில் பல அரிய புணர்ச்சிச் செய்திகள் உரைக்கப்படுகின்றன. நெல், செல், கொல், சொல் என்பனவற்றின் புணர்ச்சி விதிகளும், அவைபற்றிய ஏனைய செய்திகளும் அடுத்து விளக்கப்படுகின்றன.

இல் என்ற சொல்லின் புணர்ச்சியை நன்னூலை ஒட்டிக் கூறும் இவ்வாசிரியர், உண்டு என்பதன் புணர்ச்சி விதி முன்னர்க்கூறாது அதனைப் புறனடையால் விளக்கு கிறார். இந்நூற்பாவிற்கு உரையாசிரியரைத் தழுவி உரை எழுதும் இவர், இல்லை என்ற இயற்கைச்சொல் ஒன்று இல்லை என்ற கருத்தினைத் தக்க சான்று காட்டி மறுக்கும் திறன் சால அழகிது. அடுத்து, ளகர ஈற்றன வாகிய புள் வள் என்பனவற்றின் புணர்ச்சி விதியினை அமைத்துள்ளார்.

வகரஈற்றுச் சுட்டுப்பெயர் நாற்கணத்தொடு புணரும் போது ஏற்படும் புணர்ச்சி வேறுபாடுகளை நன்னூலை ஒட்டி ஒரே நூற்பாவினால் குறிப்பிடும் இவர், நச்சினார்க்கினியர் வவ்விறுசுட்டு வன்கணத்தொடு புணர்ந்து உண்டாக்கும் அஃகடிய முதலியனவே இக்காலத்து அரிய என்று கூறியிருப்பவும், வகர ஈற்றுப்புணர்ச்சிகள் யாவும் இக்காலத்து அரிய என்று கூறியிருப்பது ஆராயத் தக்கது.

தெவ் என்ற உரிச்சொல் படுத்தல் ஓசையால் பெயராயவழி, அது வருமொழியொடு புணருங்கால் ஏற்டும் திரிபுகளை நன்னூலை ஒட்டியே விளக்குகிறார்.

'உருபின் முடிபவை' என்ற நூற்பாவில், உருபு புணர்ச்சிப் பகுதிக்கண் அமைந்த நூற்பாச்செய்திகளைத் தலைப்பெய்து, அவற்றைப் பொருட்புணர்ச்சிக்கும் பொருத்தி விளக்கிக்காட்டும் திறன் இவர் நுணுக்கமாக ஈட்டிய பேரறிவினை நுவல்வதாகும். அதனொடும் அமையாது, தொல்காப்பிய உருபியல் உரையில் நச்சினார்க்கினியர் மிகையாற் கொண்டவற்றையும் நுணுகி ஆய்ந்து இடன்நோக்கி இயையப் புணர்த்த பெற்றி அழகிது.

இறுதி நூற்பாவை இவ்வியற் புறனடையாகக் கொண்டு, இடைச்சொல், உரிச்சொல், வடசொல் இவற்றிற்கும் போலிச்சொற்களுக்கும் மரூஉ முடிபுகளுக்கும் புணர்ச்சிவிதி கூறும் இவர், மரூஉ முடிபை மிக விரிவாக ஐயமற விளக்கிய செய்தியும், தொல்காப்பிய எழுத்துப் படலத்தைச் சார்ந்த ஈற்றயல் நூற்பாவாகிய 'உயிரும் புள்ளியும் இறுதியாகி' என்பதன்கண் காணப்படும் செய்திகளையும் நச்சினார்க்கினியர் எழுத்துச் சொற்படலங்களில் பண்புப் பெயர்ப்புணர்ச்சி பற்றிக் கூறியுள்ள செய்திகளையும் இயைத்து உடன்விளக்கிய செய்தியும் இவர்

தம் பரந்துபட்ட இலக்கண அறிவை விளக்குவனவாம். இவர் கூறும் புணர்ச்சி விதிகளை உரையுடன் நுணுகி நோக்கின் தொல்காப்பிய எழுத்துப்படல உரையுள் காணப்படும் புணர்ச்சி விதிகள் யாவும் பெரும்பான்மையும் இந்நூலுரையுள் இடன்நோக்கி நுணுகி ஆய்ந்து இயைத்துக் கூறப்பட்டுள்ள நுட்பம் புலனாகும்.

உருபு புணரியல்

முதல் நூற்பா உரையில், பொருட்புணர்ச்சிக்கண் கூறப்பட்ட தொல்காப்பியம் பற்றிய சாரியை எழுத்துப் பேறு முதலிய பலவற்றையும் உருபு புணர்ச்சிக்கண் பெய்து காட்டுகிறார். தொல்காப்பியனார் அ ஆ உ ஊ ஏ ஔ ஞ் ந் என்பனவற்றை ஈறாக உடைய சொற்களுக்கே இன்சாரியை கூறவும், இவர் எல்லா ஈற்றுச் சொற்களுக்கும் அச்சாரியையைக் குறிப்பிட்டு எடுத்துக்காட்டுக் களையும் தருவது புதியனபுகுதலை உட்கொண்டு சொற்றதாகும். பலவற்றிறுதிப்பெயர் அற்றுச்சாரியை பெறுமாற்றைப் பின்னர் எடுத்து விளக்குகிறார்.

தொல்காப்பியனார் 'ஊ என் ஒருபெயர் ஆவொடு சிவணும்' என்று கூறியதை உட்கொண்டும், அவர் 'ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை' என்று கூறியதன் கண் ஒகரத்தை எழுத்துப்பேறளபெடையாகக் கொண்டும் 'ஆ மா கோ னகரம் பெறும்' என்று நன்னூலார்போல நூற்பாவில் கூறி உரையில் ஊகாரத்தையும் குறிப்பிடு கிறார்.

எல்லாம் எல்லாரும் எல்லீரும் என்பன உருபு புணர்ச்சிக்கண் சாரியை பெறுமாற்றை நன்னூலை உட் கொண்டே நவில்கிறார்.

தொடக்கங் குறுகும் மூவிடப் பெயர்களின் விதியும் நன்னூலை உட்கொண்டே, கூறப்பட்டதேனும், விளக்கம் தருதற்கண் தொல்காப்பிய நூற்பா அடிகள் உரையில் இடம் பெறுகின்றன.

வகரஈற்றுச் சுட்டுப் பெயர்கள் அற்றுச்சாரியை பெறுதலை நன்னூல் நூற்பாவால் விளக்குகிறார்.

யாது அஃது இஃது உஃது என்பன அன்சாரியை பெறுதலையும் அஃது முதலியவற்றின் ஆய்தம் கெடுதலையும் தொல்காப்பிய நூற்பாக்கொண்டே விளக்கி, ஈற்றயலெழுத்தை ஈறு என்றே காட்டும் தொல்காப்பியனார் மதத்தைத் தாமும் ஏற்றுக்கொள்ளுகிறார்.

'ஒன்று முதல் எட்டு அளவாம்' என்ற நூற்பாவில், வழக்கம்போலாது ஏழ் என்ற ழகர ஈற்றுச் சொல்லையும் உட்கொண்டு நன்னூலை ஒட்டி விளக்கம் தருவதோடு, உருபியலில் தொல்காப்பியம் கூறும் செய்திகளை எல்லாம் நச்சினார்க்கினியர்தம் உரையை ஒட்டி இந்நூற்பா உரையில் தந்துள்ளார்.

அதிகாரப் புறனடையில் எழுத்துப்பேறளபெடை முதலிய எஞ்சிய பொருள்களைச் சுட்டுவதோடு, புறப்புறக்கருவி, புறக்கருவி, அகப்புறக்கருவி, அகக்கருவி, புறப்புறச்செய்கை, புறச்செய்கை, அகப்புறச்செய்கை, அகச்செய்கை என்பனவற்றையும் நச்சிநார்க்கினியர் உரைக்கு விளக்கம் தருவோர்போன்று வரைந்து எழுத்துப் படலத்தை முடிக்கிறார்.

இவற்றால், நூலாசிரியர் தம் உரையொடு பொருந்தும் தனித்தகுதியுடைய இவ்வெழுத்ததிகாரத்தை நோக்குழி, இவ்வாசிரியர் தொல்காப்பிய உரைகளில் தோய்ந்த அறிவுடையவராய், கற்பார் நன்னூலின் உருச்சிறுமையை நோக்கி அதனையே விரும்புதலின், தொல்காப்பியனார் கருத்துக்கு ஏலாத நன்னூல் நூற்பாக்களை மாற்றியும், ஏற்பன பலவற்றையும் கொண்டும், தொல்காப்பிய உரையாசிரியர்களால் அரியவாகக் கூறப்பட்டனவாய் நன்னூலிலோ அதன் உரையிலோ இடம் பெறாத பல செய்திகளை அடக்கியும், நன்னூலையொத்த சிறுவடிவில் தொல்காப்பியம் போலப் பல செய்திகளையும் தன்னுள் அடக்கும் வகையில் நூற்பா மாத்திரம் யாத்தல் பயன் தாராது என்ற கருத்தான்,

நூற்பா முறைவைப்பிலும் சிறிது வேறுபாடு காட்டி, ஆட்டாண்டு இடன் நோக்கிச் செய்திகள் பலவற்றையும் செறித்துத் தாம் உட்கொண்ட கருத்துக்களையெல்லாம் தெரித்து உரைவரைதல் பிறரால் இயலாது என்பதனை முற்ற உணர்ந்து, தம் கருத்து முற்றும் வகையான் தாமே அரியதோர் உரை வரைந்து நூல் நயம் முற்ற அமைத்து, பின்தோன்றும் இலக்கண ஆசிரியர்களுக்கும் நூற்பாக்களொடு உரையும் வரைந்து நூலியற்றுதற்கு வழிகாட்டியாக அமைந்தார் என்பது நன்கு உணரப் படும்.

இனி, இவ்வெழுத்துப் படலத்தில் இடம் பெற்றுள்ள தொல்காப்பிய நூற்பாக்கள், நன்னூல் நூற்பாக்கள், சிறிது மாற்றம் பெற்ற நன்னூல் நூற்பாக்கள், இவ் வாசிரியரே யாத்தநூற்பாக்கள் ஆகியவற்றை நிரல்படக் காண்போம்.

இந்நூலின் எழுத்துப்படலத்தில் தொல்காப்பிய நூற்பாக்கள் இருபத்தொன்றும், நன்னூல் நூற்பாக்கள் எழுபத்திரண்டும், சிற்சில மாறுதலுடன் கூடிய நன்னூல் நூற்பாக்கள் இருபத்தெட்டும் இடம் பெறுகின்றன. ஏனைய நூற்பாக்கள் இவ்வாசிரியர் யாத்தனவேயாம்.

தொல்காப்பிய நூற்பாக்கள்

14 தத்தம் திரிபே சிறிய என்ப. தொல்-88

17 குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே. 38

36 இகர யகரம் இறுதி விரவும். 58

37 மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும். 46

39 நெட்டெழுத்து ஏழே ஓரெழுத் தொருமொழி 43
குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறை பிலவே. 44

55 வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே. 116

60 அத்தின் அகரம் அகரமுனை யில்லை. 125

62 எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி
இசையிற் றிரிதல் நிலைஇய பண்பே. 141

63 அவைதாம்,
முன்னப் பொருள புணர்ச்சி வாயில்
இன்ன என்னும் எழுத்துக்கட னிலவே. 142

64 புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே. 138

69 மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார். 145

75 மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்
சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்

சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்
சாரியை இயற்கை உறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்
மெய்பிறி தாகிடத்து இயற்கை யாதலும்
அன்ன பிறவும் தன்னியல் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப. 157

77 வேற்றுமை அல்வழி இஐ என்னும்
ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய
அவைதாம்,
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர். 158

78 உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉம் காலந் தோன்றின்
ஒத்தது என்ப ஏயென் சாரியை. 164

85 சாவ என்னும் செயவென் எச்சத்து
இறுதி வகரம் கெடுதலும் உரித்தே. 209

95 அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப. 258

97 எகர ஒகரம் பெயர்க்கீ றாக
முன்னிலை மொழிய என்மனார் புலவர்
தேற்றமும் சிறப்பும் அல்வழி யான. 272

98 தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகாஅ. 273

நன்னூல் நூற்பாக்கள்

21 தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றாகும். 95

23 தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி. 98

25 ஆவியு மொற்று மளவிறந் துயிர்த்தலு
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின். 101

28 ஆவி ஞணநமன யரல வழளமெய்
சாயு முகரநா லாறும் ஈறே. 107

29 குற்றுயி ரளபி னீறா மெகர
மெய்யொ டேலாதொந் நவ்வொ டாமௌக்
ககர வகரமோ டாகு மென்ப. 103

33 யரழவொற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா. 119

36 அம்முன் இகரம் யகர மென்றிவை
யெய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன. 125

48 ஆநின்று கின்று கிறுமூ விடத்து
மைம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை. 143

49 பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலசில. 144

53 மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுந்
தம்மொடும் பிறவொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே. 151

57 வலித்தல் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள்வேண்டுழி. 155

58 ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே. 156

59 அன்னா னின்ன லற்றிற் றத்தந்
தம்நம் நும்மே அஉ ஐகுன
வின்ன பிறவுஞ் சாரியை மொழியே. 244

66 தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும். 205

67 தன்னொழி மெய்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே. 206

69 எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கு
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறல்வழி யத்தனி ஐநொது முன்மெலி
மிகலுமா ணளனல வழிநத் திரியும். 158

70 ணளமுன் டணவும் னலமுன் றனவு
மாகுந் தநக்க ளாயுங் காலே. 237

76 புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
தம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்புமா வனவுள. 256

79 உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகர உயிர்மெய்யா மேற்பன வரினே. 174

86 செய்யிய எனும்வினை யெச்சம் பலவகைப்
பெயரி னெச்சமுற் றாற னுருபே
யஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே. 167

87 வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
யேகலு முரித்தஃ தேகினு மியல்பே. 68

88 பலசில வெனுமிவை தம்முன் றாம்வரி
னியல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரி
னகரம் விகற்ப மாகலு முளபிற. 170

90 குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின். 172

91 அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே. 173

92 சுவைப்புளி முன்னினமென்மையுந் தோன்றும். 175

99 இடைச்சொல் லேவோ முன்வரி னியல்பே. 201

100 வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி. 181

101 இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.
182

102 நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. 183

103 மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே. 184

104 ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே. 185

105 திசையொடு திசையும் பிறவுஞ் சேரி
னிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற. 186

106 எண்ணிறை யளவும் பிறவு மெய்தி
னொன்று முதலெட் டீறா மெண்ணுண்
முதலீ ரெண்முத னீளுமூன் றாறு
குறுகு மாறல் லவற்றினீற் றுயிர்மெய்
யேகு மேற்புழி யென்மனார் புலவர். 188

107 ஒன்றன் புள்ளி ரகர மாக
விரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே. 189

108 மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும். 190

109 நான்கன் மெய்யே லறவா கும்மே. 191

110 ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும். 192

113 ஒன்றுமுத லெட்டீற் றெண்முனர்ப் பத்தின்
னிடையொற் றேக லாய்த மாக
லெனவிரு விதியு மேற்கு மென்ப. 195

115 ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரின் பத்தி
னீற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்று
மேற்ப தேற்கு மொன்பது மினைத்தே. 197

116 இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப. 198

119 ணனவல் லினம்வரட் டறவும் பிறவரி
னியல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே. 209

120 குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே. 210

121 சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
யியல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே. 211

122 னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகா
னடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே. 212

123 மீன்றவ் வொடுபொருஉம் வேற்றுமைவழியே. 213

125 மரமல் லெகின்மொழி யியல்பு மகர
மருவ வலிமெலி மிகலு மாகும். 215

129 மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாய்த் திரிபவு மாம்பிற. 219

130 வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வு
மல்வழி யுயிரிடை வரினியல் பும்முள. 220

131 அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும். 222

132 ஈமுங், கம்மு முருமுந் தொழிற்பெயர் மானு
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே. 226

133 யரழ முன்னர்க் கசதப வல்வழி
யியல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல். 224

134 தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே. 222

135 கீழின்முன் வன்மை விகற்பமு மாகும். 225

137 லளவேற் றுமையிற் றடவு மல்வழி
யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பு
மாகு மிருவழி யானு மென்ப. 227

138 குறில்வழி லளத்தவ் வணையி னாய்த
மாகவும் பெறூஉ மல்வழி யானே 228

139 குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரி
னியல்புந் திரிவு மாவன வுளபிற. 229

141 வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம் 231

142 இல்லென் னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும். 233

143 புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும். 234

144 சுட்டு வகரமூ வினமுற முறையே
யாய்தமு மென்மையு மியல்புமா மல்வழி. 235

145 தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும். 236

146 உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும். 238

147 இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்ப்பது யாவர்க்கு நெறியே. 239

151 ஆமா கோனவ் வணையவும் பெறுமே. 248

152 எல்லா மென்ப திழிதிணை யாயி
னற்றோ டுருபின் மேலும் முறுமே
யன்றே னம்மிடை யடைந்தற் றாகும். 245

153 எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே. 246

154 தான்றா நாமுதல் குறுகும் யான்யாம்
நீநீ ரென்னெம் நின்னும் மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல. 247

155 வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே. 250

157 ஒன்று முதலெட் டளவா மெண்ணூர்
பத்தின்முன் ஆன்வரிற் பவ்வொற் றொழியமே
லெல்லா மொடு மொன்பது மிற்றே. 249

158 இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே. 253

குறிப்பு:-ஆசிரியர் நன்னூல் நூற்பாக்களில் மிகச்சிறிய
அளவில் திரித்துக்கொண்டனவற்றையும் நன்
னூல் நூற்பாக்களாகவே கொண்டுள்ளனம்.

சிறிதளவு மாற்றம்பெற்ற நன்னூல் நூற்பாக்கள்.

---

2 எண்பெயர் முறைபிறப் புருவ மளவு முதலீ
றிடைநிலை போலியொடு பதம்புணர்ப் புளப்பட
வாறிரு பகுதித் ததுவென மொழிப. நன் 57

3 மொழிக்கா ரணமா நாதகா ரியவொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே. 58

6 அகர முதலவீ ராறுமுயி ரவற்றுள்
அஇ உஎ ஒக்குறில் ஆஈ
ஊஏ ஐஓ ஔநெடில் அஇ
உஇவை மொழிமுதல் வரின்சுட் டெய்யா
முதலு மாவோ விறுதியு மேயிரு
விழியும் வினாவென வழங்கு மென்ப. 63-67

7 ககர முதல்மூ வாறுமெய் யவற்றுள்
கசட தபற வல்லெழுத்து மெல்லெழுத்து
ஙஞண நமன இடையெழுத் துணரின்
யரல வழள வென்மனார் புலவர். 68-70

11 அவற்றுள் முயற்சியுள் அஆ அங்காந்
திஈ எஏ ஐகா னதனோ
டண்பல் முதனா விளிம்புற உஊ
ஒஓ ஔகா னிதழ்குவிந் தியலும். 76-78

15 யகரம் வரக்குற ளுத்தப வருஉ
மிகரமு மியாவி னிகரமுங் குறிய. 93

16 நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகர
மஃகு மென்மனா ராயுங் காலே. 94

30 ஙஞண நமன வயலள வாய்தங்
குறிலிணை குறிற்கீழ் மொழியிடை யிறுதியி
னளபெழு மவற்றோ டாயுங் காலே. 92

21 கசதப வொழித்த வீரேழன் கூட்ட
மெய்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகு முயிர்மெய் மயக்கள வின்றவை
தேருங் காலை மொழியிடைச் சிவணும். 110

32 ஙம்முன் கவ்வும் வம்முன் யவ்வு
ஞநமுன் னினமும் யகரமும் டறமுன்
கசபவும் ணனமுன் இனமுங் கசஞப
மயவவு மம்முன் பயவவும் யரழமுன்
மொழிமுதன் மெய்யும் லளமுன் கசப
வயவு நின்று மயங்கு மென்ப. 111-117

36 அம்மு னிகரம் யகர மென்றிவை
யெய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன
விகர யகர மிறுதி விரவும்
புகரின் றுணர்ந்தோர் வரைந்தனர் போற்றல். 125

37 நெட்டுயிர் காரமு மையௌக் கானு
மிருமைக் குறிலொற் றிவற்றொடு கரமுமா
மின்னசா ரியைபெறூஉ மெவ்வழி யானு
மெய்யி னியக்க மகரமொடு சிவணும். 126

42 பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்த்தது முடித்தனர் கொளலே. 133

47 கடதற வொற்றின் னைம்பான் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை. 142

61 பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமு மாகு
மனையவை தெரித லறிவோர் கடனே. 243

68 இஈ ஐவழி யவ்வு மேனை
யுயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையு
முயிர்வரி னுடம்படு மெய்யென் றாதல்
வரைவின் றென்மனார் மதிக்குங் காலே. 162

71 பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மவற்றீற் றுயிர்முன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை. 159

80 எகர வினாமுச் சுட்டின் முன்ன
ருயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீடலும் யகர நிலவலு நெறியே. 163

81 ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்
யவ்வன் மெய்வரி னுவ்வுறு நவ்வுக்
கவ்வு மாகும் வேற்றுமைக் கென்ப
செவ்விதி னவ்விய றெரியுங் காலே. 207

82 இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே. 165

84 பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரி
னைபோ யம்முந் திரள்வரி னுறழ்வு
மட்டுறி னைகெட் டாவு மாம்பிற. 203

89 அல்வழி யாமா மியாமுற் றிறுதி
யாவினா விவற்றுமுன் வல்லெழுத் தியல்பே. 171

93 பவ்வீ யல்வழி யியல்பு மீமுன்
னியல்பும் வலிமெலி மிகலுமாம் வேற்றுமை. 178

94 ஆமுன் பகரவீக் குறுகுமவ் வழியும்
வல்லெழுத் தியற்கை யல்வழி யான. 177

96 பூப்பெயர் முன்னின மெல்லெழுத்து மிகுதலும்
போற்றல் வேண்டும் வேற்றுமைக் கண்ணே. 211

117 ஒன்ப தொழித்தவெண் ணோரெட்டு மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி. 199

127 மின்பின் பன்கள் தொழிற்பெய ரனைய
வேற்றுமை யாயிற் கன்னவ் வேற்று
வல்லெழுத்துப் பெறுதல் வரைநிலை யின்றே
பொருளொடு புணருங் காலை யான. 217

தொல்காப்பியத்தில் சிறிது திரிந்த நூற்பாக்கள்

74 ஔவென வரூஉ முயிரிறு சொல்லு
ஞ ந ம வ வென்னும் புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியு முளப்பட
முற்றத் தோன்றா முன்னைய முடிபே
யுகரம் பெறூஉ மாவயி னான. 152

150 பல்லவை நுதலிய வகர விறுபெய
ரற்றொடு சிவண லெச்ச மின்றே. 174

இவ்வாசிரியரே யாத்த நூற்பாக்கள்.

---

1 மலைமக ளொருபால் மணந்துல களித்த
தலைவனை வணங்கிச் சாற்றுவ னெழுத்தே.

4 உயிரு முடம்புமென முதலிரு வகைத்தவற்
றுயிரீ றாறுமெய் மூவா றென்ப
வம்முப் பானு மதனது விரியே.

5 குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்தமொ டுயிர்மெ யீரள பையௌ
மஃகான் குறுக்க முள்ளுறுத் தொன்பதுஞ்
சார்பின் பால வென்மனா ரவற்று
ளுயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுயி ரளபே
ழொற்றளபு பதினொன் றொன் றொன் றேனைய
வாயிரு நூற்றெண் ணைந்துமதன் விரியே.

8 தோற்ற மளபு செய்கை பொருள்வடி
வேற்றன வொத்தலி னேற்புடை யினத்தினுஞ்
சிறப்பினு நெறிப்படச் செறிந்தீண் டம்முத
னடத்த றானே முறையெனல் வேண்டும்.

9 உயிருழப் புதானணி ணாத முச்சி
மிடறுர மூக்குற் றிதழ்நாப் பல்லணத்
தடைந்து பின்ன ரவற்றது வினையான்
வேறுவே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

10 அவ்வழி யாவி யிடைமிட றுச்சி
வன்மை மென்மைமூக் கிசையிற் றோன்றும்.

12 முதலிடை நுனிநா அண்ணமுற முறையின்
கஙவுஞ் சஞவும் டணவு மண்ப
லடிநா முடியுறத் தநவு மீகீ
ழிதழுறப் பகார மகார மிரண்டு.

மண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரமு மண்ண
நுனிநா வருட ரழவு மண்பன்
முதலு மண்ணமு முறையினா விளிம்பு
வீங்கி யொற்றவும் வருடவும் லளவு
மேற்பல் லிதழுற வகாரமு மண்ண
நுனிநா வொற்ற றனவுந் தோன்றும்.

13 ஆய்தநெஞ் சோசையி னங்காந் தியலும்.

18 புள்ளி யில்லா வெல்லா மெய்யு
மவ்வொடு முன்னுரு வாகியு மேனை
யுயிரொடு திரிந்து மேறிய வுயிரி
னளவா யதனுரு வடக்கி முந்துயிர்த்த
லுயிர்மெய் யென்மனா ருணர்ந்திசி னோரே.

19 இசைகெடின் மொழிமுத லிடைகடை நெடில்வழித்
தத்த மொத்த குற்றெழுத் தோடள
பெழூஉ மையௌ இஉ என்னு
மாயீ ரெழுத்தோ டளபெழு மென்ப.

22 லளமெய் திரிந்த ணனமுனும் வருமொழி
வகார மிசையு மகாரங் குறுகும்.

24 நெடிலிரண் டையௌக் குறுக்கங் குறிலொன்
றாய்தமொற் றிய்யுக் குறுமை யரைகுறண்
மஃகான் கான்மாத் திரைபெறு மதுதான்
கண்ணிமை நொடியென நுண்ணியோ ருரைப்ப.

26 பன்னீ ருயிருங் கதந பமவெனு
மாவைந் தெழுத்தொடு சவஞய வுளப்பட
வவ்வொன் பானுயிர் மெய்யு மொழிமுதல்.

27 ஐஔ வலவொடு சகாரமும் உஊ
ஒஓ வலவொடு வகாரமும் ஆஎ
ஒவ்வொடு ஞகாரமு மாவொடு யகாரமு
முதலு மென்மனார் முறையுணர்ந் தோரே.

30 னகர விறுதி யஃறிணைப் பெயருண்
மகரமொடு மயங்கி வருநவு முளவே.

34 லளமெய் திரிந்த னணவொடு மகார
மீரொற் றாகுஞ் செய்யு ளுள்ளே.

35 தம்மர பிசைப்பின் முதலீ றிடைநிலை
யம்மர பில்லவு மாமென மொழிப.

38 எழுத்தே தனித்து மிணைந்துந் தொடர்ந்தும்
பதமாம் பொருடரி னதுபகாப் பதம்பகு
பதமென வாயிரு பகுதித் தென்ப.

40 பகாஅப் பதம்பகாஅப் பண்பிற் பயின்று
பெயர்வினை யிடையுரி யெனநால் வகைத்தே.

41 பகுபதம் பகுக்கும் பண்பிற் றாகி
வினையே வினைப்பெய ரெனவிரு பாற்றே.

43 நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வௌவுரி ஞுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றின்னவை முதல வெல்லா வினையுந்
தெரிநிலை வினையின் முதனிலை யாகும்.

44 முன்ன ரோதிய முதனிலை யிறுதியின்
விப்பி யென்பவற் றொப்பது தனிவரி
னேவல் வினைமுதற் றெரிநிலை வினையின்
மேவரு பகுதி யாமென மொழிப.

45 பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலே
குறிப்பு வினையி னெறிப்படு முதனிலை

46 அன்னா னள்ளா ளர்ரார் பம்மார்
அஆ குடுதுறு என்னே னல்லோ
டம்மா மெம்மே மோமொ டும்மூர்
கடதற ஐயா யிம்மி னிர்ஈர்
கயர வாலேல் காணும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே.

50 குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமொ
டும்மூர் கடதற விறுதியும் பம்மார்
மின்னெ னீறும் வியங்கோட் பகுதியு
மேவலு மறையு மென்பன வெதிர்வுஞ்
செய்யுநிகழ் பெதிர்வு மெய்பெறத் தரூஉம்
இடைநிலை யேலா வென்மனார் புலவர்.

51 இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைக்குறிப் பிடைநிலை யென்னல் வேண்டும்.

52 விளம்பிய விடைநிலை வினைப்பெயர் கண்ணு
மேற்பன கோட லியல்பென மொழிப.

54 ஐம்முத லாறு தழுவுதொடர் வேற்றுமை
செவ்வெதி னிலையு மெழுவாய் விளிமுற்
றிடையுரி யெச்சமடுக் குவமை யும்மை
தழுவுதொட ரல்வழிச் சந்தி யென்ப.

56 விகாரமொற் றுயிருயிர்மெய் சாரியை மிகுத
றிரிதல் கெடுத லெனமூ வகைத்தே.

65 குற்றிய லுகரத் திறுதி முன்னு
மற்றென மொழிப யவ்வரி னிகரந்
தெற்றென வரூஉமது முற்றத் தோன்றாது.

72 விளிநிலைக் கிளவியு மவற்றோ ரன்ன

73 உயிரும் புள்ளியு மிறுதி யாகிய
முன்னிலை வினையே யேவ லென்றிவை
யியல்பா குநவு முறழா குநவுமென்
றாயீ ரியல வல்லெழுத்து வரினே.

83 மெல்லெழுத்து மிகுநவும் வல்லெழுத்து மிகுநவு
மம்மிடை வருநவு முறழ்ச்சி யெய்துநவு
மென்றொருநால் வகைய மரப்பெய ரன்னவை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

95 எண்ணி னிறுதியுஞ் சுட்டுமுத லிறுதி
நண்ணிய வுகர முன்னியல் பாகும்.

112 ஒன்பா னொடு பத்து நூறு மொன்றி
னொன்றிய விரண்டு மூறுமா யிரமு
மென்று திரிய விறுதிய கெடுவழி
நின்ற னகர நிரலே ணளவா
யிரட்ட வொகரமிசைத் தகர மொற்றும்.

114 ஒருப தொருபஃ தாதியென் றாதி
யொன்பது மவையூர் பிறவு மெய்திற்
கெடுதலுந் திரிதலு மில்லென மொழிப.

118 மூன்ற னுருபினு மாற னுருபினும்
வல்லெழுத்து மிகுத லில்லென மொழிப.

124 தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை யொத்தலு மீறுபோய் வலிமெலி
மிகுதலு மெலிவரி னிறுதியோ டுறழ்தலு
மிடைவரி னியல்பு மாம்பிற வுயிர்வரி
னொற்றுமிகு தகரமொடு நிற்றலு முரித்தே.

127 மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
வேற்றுமை யாயிற் கன்னவ் வேற்று
வல்லெழுத்துப் பெறுதல் வரைநிலை யின்றே
பொருளொடு புணருங் காலை யான.

128 அழனெ னிறுதி கெடும்வேற் றுமைக்கே.

136 ஏழென் கிளவி யாறிய னிலையு
முகரம் வருத லாவயி னான.

148 உருபினும் பொருண்முடி பொக்குமன் பயின்றே

149 எல்லா வீற்றுஞ் சொல்லுங் காலை
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை.

நூலாசிரியர் தம் உரையுள் எடுத்தாண்டுள்ள தொல்காப்பிய நூற்பாக்கள் பின் வருமாறு :

5 எழுத்தெனப்படுப
அகர முதல்
னகர இறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே. தொல்1
அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன. 2
குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே. 38
ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும். 39

6 அஇ உஅம் மூன்றும் சுட்டு. 31
சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித்து உகரம் கெடுமே. 176
சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே. 177
சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும். 205
சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே. 238

8 குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே. 41
ஐஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும். 42

9 எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து

அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃது இவண் நுவலாது எழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே. 102

18 மெய்யோ டியையினும் உயிரியல் திரியா 10
மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே. 18
மெய்உயிர் நீங்கின் தன்னுரு ஆகும். 139

29 மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல். 104
உயிர்மெய் ஈறும் உயிரீற்று இயற்றே. 106

30 மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப
புகர்அறக் கிளந்த அஃறிணை மேன. 82

35 அவற்றுள்
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும். 24
ணகார இறுதி வல்லெழுத்து இயையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே. 302

37 வகாரம் மிசையும் மகாரம் குறுகும். 330
வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே. 122
அம்மின் இறுதி கசதக் காலை
தன்மெய் திரிந்து ஙஞந வாகும். 129
ஆஎ ஓஅம் மூன்றும் வினாஅ. 32

38 மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவேறு [இசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர். 53
ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே 45

நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி 43
குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறை பிலவே 44
ஈறெழுத் தொருமொழி உயிர்த்தொடர்
[இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன். 406

46 மறைக்குங் காலை மரீஇயது ஒராஅல்.சொல்443நச்.

65 யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது. 410

69 அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதி யான. 145
ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர். 146

78 அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாம்
கசதப என்றா நமவ என்றா
அகர உகரமோடு அவையென மொழிப. 170

82 ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே. 204

94 ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே. 233

112 ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பத்தென் கிளவி ஆய்த பகரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகாம் றகரம் ஆகும். 445

ஒன்பான் முதல்நிலை முந்துகிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறுஎன் கிளவி நகார மெய்கெட
ஊஆ ஆகும் இயற்கைத்து என்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகரம் ஒற்றும். 463

147 உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த என்னும் கிளவியின்
மெய்யொருங்கு இயலும் தொழில்தொகு மொழியும்
தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்
அன்னவை எல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்றா. 482

154 தாம்நாம் என்னும் மகர இறுதியும்
யாமென் இறுதியும் அவற்றோ ரன்ன
ஆஎய் யாகும் யாமென் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும். 188

நூல் விளக்கம்

எழுத்தியல்

தெய்வ வணக்கமும், எழுத்து இயம்புவன் என்பதும் 1

எண், பெயர், முறை, பிறப்பு, உரு, அளவு, முதனிலை, ஈற்றுநிலை, இடைநிலை, போலி, பதம், புணர்ப்பு என்ற எழுத்தின் பன்னிரண்டு பகுதிகள். 2

எழுத்து நாதத்தின் காரியமாய்ச் சொல்லுக்குக் காரணமாய் இருக்கும் என்பதும், அது முதல் சார்பு என இரு வகைப்படும் என்பதும் 3

முதலெழுத்து உயிரும் மெய்யும் என்பதும், உயிர் பன்னிரண்டு மெய் பதினெட்டு என்பதும். 4

சார்பெழுத்துக் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் உயிர்மெய் உயிரளபெடை ஒற்றளபெடை ஐகாரக்குறுக்கம் ஔகாரக்குறுக்கம் மகரக்குறுக்கம் என்ற ஒன்பது என்பதும், உயிர்மெய் 216 உயிரளபெடை 7 ஒற்றளபெடை 11 ஏனைய ஒன்றொன்று என்பதும். 5

உயிர் பன்னிரண்டு இவை என்பதும், குறில் அ இ உ எ ஒ என்ற ஐந்து என்பதும், நெடில் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்ற ஏழு என்பதும், அ இ உ என்ற மூவெழுத்தும் மொழி முதற்கண் சுட்டுப் பொருள் தந்துவரின் சுட்டு என்பதும், எ யா இரண்டும் மொழிக்கு முதலிலும் ஆ ஓ இரண்டும் மொழிக்கு ஈற்றிலும் ஏ மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வினாப் பொருள் தந்துவரின் வினா என்பதும்.

ககரம் முதல் மெய் 18 என்பதும், வல்லினம் கசடதபற என்பதும், மெல்லினம் ஙஞணநமன என்பதும், இடையினம் யரலவழள என்பதும். 7

தோற்றம் அளவு செய்கை பொருள்வடிவு என்பன. இனமமைத்தற்குக் காரணம் என்பதும், இனத்தினாலும் சிறப்பினாலும் பொருந்தி அகரம் முதல் னகரம் இறுதியாக வைக்கப்படுவது முறை என்பதும். 8

உந்தியில் தோன்றும் உதானன் என்ற காற்று உச்சி கழுத்து மார்பு மூக்கு இவற்றை அடைந்து, உதடு நா பல் மேல்வாய் இவற்றின் முயற்சியால் வெவ்வேறு எழுத்தொலியாய் வரும் எழுத்தின் பொதுப்பிறப்பு என்பது. 9

உயிருக்கும் இடையினமெய்க்கும் கழுத்தும், வல்லின மெய்க்குத் தலையும், மெல்லின மெய்க்கு மூக்கும் பிறப்பிடம் ஆகும் என்பது. 10

அ ஆ அங்காத்தலாலும், இ ஈ எ ஏ ஐ அங்காப் போடு அண்பல்முதல் நாவிளிம்பு உறுதலாலும், உ ஊ ஒ ஓ ஔ இதழ்குவிதலாலும் பிறக்கும் என்பது. 11

கங முதல் நா முதல் அண்ணமும், சஞ இடைநா இடைஅண்ணமும், டண நுனிநா நுனிஅண்ணமும், தந அண்பல் அடி நாமுடியும், பம மேலுதடும் கீழுதடும் உறப்பிறக்குங் என்பதும், யகரம் எழுவளி மிடற்றுச் சேர்ந்த இசை மேல்வாயைப் பொருந்தி உரலாணி யிட்டாற்போலச் செறிதலானும், ரழ அண்ணத்தை நுனிநா வருடலானும், லகரம் அண் பல் முதலைநாவிளிம்பு வீங்கி ஒற்றுதலானும்,

ளகரம் அண்ணத்தை நாவிளிம்பு வீங்கி வருட லானும், வகரம் மேற்பல்லைக் கீழுதடு பொருந்து தலானும், றன மேல்வாயை நுனிநா அழுத்தித் தடவு தலானும் பிறக்கும் என்பதும். 12

ஆய்தம் அங்காத்தலானும் நெஞ்சு ஓசையா னும் பிறக்கும் என்பதும், சார்பெழுத்துக்கள் தம் முதலெழுத்துக்களின் பிறப்பிடமும் முயற்சியுமே கொண்டும் பிறக்கும் என்பதும். 13

ஒலித்தலிடையே எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் இவற்றால் சிறிது வேறுபாடு ஏற்படும் என்பது. 14

யகரம் வருமொழி முதலில் வருதலால் நிலை மொழி இறுதிக் குற்றியலுகரம் கெட வரும் இகர மும், மியா என்ற அசைச் சொல்லின் இகரமும் குற்றியலிகரமாம் என்பது. 15

குற்றியலுகரம் தனிநெடிற் பின்னும், தொடர் மொழியில் ஆய்தம் உயிர் வலி மெலி இடை என்ற எழுத்துக்களின் பின்னும் வரும் என்பது. 16

ஆய்தம் குற்றெழுத்தின் பின்னர் வல்லின உயிர்மெய் யெழுத்தின் முன்னர் வரும் என்பது. 17

மெய் அகரத்தொடு சேர்வுழிப் புள்ளியை ஒழித்ததன் வடிவே வடிவாகியும், ஏனைய உயி ரொடு சேர்வுழி உருவு சற்றுத் திரிந்தும், ஏறிய உயிரின் மாத்திரையையேகொண்டு, மெய்யின் வடிவை மிகப்பெற்று, முன்னர் மெய்யொலியும் பின்னர் உயிர் ஒலியும் பொருந்த உயிர்மெய் தோன்றும் என்பது. 18

ஓசை குறையுமிடத்து மொழி மூன்றிடத்தும் உள்ள நெடில் பின்னர் இனமொத்த குற்றெழுத்து வர அதனோடு சேர்தலான் உயிரளபெடை தோன்

றும் என்பதும், இனமில்லாத ஐகார ஔகாரங்களின் பின்னர் முறையே இகர உகரங்கள் அளபெடைக்கண் வரும் என்பதும். 19

ஙஞண நமன வயலள ஆய்தம் என்ற பத்தும் மொழிக்கண் குற்றெழுத்து குறிலிணையெழுத்து இவற்றையடுத்து மொழியிடையிலும் இறுதிக்கண்ணும் அளபெடுத்தலால் ஒற்றளபெடை தோன்றும் என்பது. 20

தன்னை உணர்த்துதல், அளபெடுத்தல் என்ற இரண்டும் அல்லாதவழி மொழி மூன்றிடத்தும் ஐகாரமும், மொழி முதற்கண் ஔகாரமும் குறுகுதலான் முறையே ஐகார ஔகாரக் குறுக்கங்கள் நிகழும் என்பது. 21

லள மெய்திரிதலான் வரும் னகர ணகரங்களின் முன் ஒருமொழிக்கண்ணும், வருமொழி முதலில் வகரம் வருதலான் இருமெரழிக்கண்ணும் மொழியீற்று மகரம் மகரக்குறுக்கமாம் என்பது. 22

எழுத்துக்கள் யாவும் பழைய வரிவடிவினை உடையனவே என்பதும், பண்டு மெய்யொடு, எகரமும் ஒகரமும் ஏகார ஓகாரங்களிலிருந்து பிரித்துணரப் புள்ளிபெற்று வந்தன என்பதும். 23

மாத்திரையின் அளவு கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப்பொழுதும் என்பதும், நெடில் இரண்டும், குறிலும் ஐஔக் குறுக்கங்களும் ஒன்றும், ஆய்தம் மெய் குற்றியலிகரம் குற்றியலுகரம் அரையும், மகரக்குறுக்கம் காலும் ஆகிய மாத்திரை பெறும் என்பதும். 24

இசை, விளி, பண்டமாற்று முதலியவற்றில் உயிரும் மெய்யும் தம் அளவுகடந்து ஒலிக்கும் என்பதும். 25

உயிர் பன்னிரண்டும், கதநபம என்பனவற்றொடு சவஞய என்பனவாகிய ஒன்பது மெய்யொடு சேர்ந்த உயிராலாகிய உயிர்மெய்யும் மொழிக்கு முதலாம் என்பது. 26

ஐ ஔ அல்லனவற்றோடு சகரமும், உஊ ஒஓ அல்லனவற்றோடு வகரமும், ஆ எ ஒ என்பனவற்றோடு ஞகரமும், ஆகாரத்தொடு யகரமும் சேர்வதனாலேற்படும் உயிர்மெய்களே மொழிக்கு முதலாம் என்பது. 27

உயிர் பன்னிரண்டும் ஙகரம் ஒழிந்த மெல்லின மெய் ஐந்தும், இடையினமெய் ஆறும், குற்றியலுகரமும் மொழிக்கு ஈறாம் என்பது. 28

குற்றுயிர் ஐந்தும் அளபெடைக்கண் ஈறாம் என்பதும், எகரம் அளபெடைக்கண் அன்றி ஈறாகாது என்பதும், ஒகரம் நகரத்தொடும் ஔகாரம் ககர வகரங்களொடும் ஈறாம் என்பதும். 29

னகர ஈற்று அஃறிணைப்பெயர்கள் சில மகர ஈற்றொடு மயங்கிவரும் என்பது. 30

கசதப என்ற நான்கும் தம்மொடு தாமே மயங்கும் உடனிலை மெய்மயக்கமும், ரழ என்ற இரண்டும் தம்மொடு பிறவேமயங்கும் வேற்றுநிலை மெய் மயக்கமும், ஏனைய பன்னிரண்டும் தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் மயங்கும் இருவகை மயக்கமும், எண்ணில் அடங்காதனவாகிய உயிர்மெய் மயக்கமும் என்பன. 31

ஙம்முன் கவ்வும், வம்முன் யவ்வும், ஞம்முன் சயவும், நம்முன் தயவும், டறமுன் கசபவும், ணம்முன் க ச ஞ ட ப ம ய வ வ்வும், னம்முன் க ச ஞ

பமயவறவ்வும், மம்முன் பயவவும், யரழமுன் மொழிமுதல் மெய்யும், லளமுன் கசபவயவும் மயங்கும் என்பது. 32

யரழமுன் கசதப ஙஞநம ஈரொற்றாதலும், ரகர ழகர ஈற்றுமுன் தனிக்குறில் வாராமையும் 33

லகர னகர மெய்களின் திரியாகிய னகர ணகரங்களொடு ஈற்றில் ஈரொற்றாய் மகரம் வரும் என்பது. 34

தம் மரபு கூறுமிடத்து முதல்நிலை இடைநிலை இறுதிநிலை என்ற வரையறை எழுத்திற்கு இன்று என்பது. 35

அஇ, அய், அஉ, அவ் என்பனவும், ஒன்றன் பின் ஒன்று ஓசை விரவிவரும் இகரமும் யகரமும், ஆகிய எழுத்துப்போலிகள் கடியப்படும் என்பது. 36

நெட்டுயிர் காரமும், ஐஔ காரத்தொடு கானும் உயிர்க்குறிலும் உயிர்மெய்க் குறிலும் காரம், கான், கரம் என்ற மூன்றும் ஆகிய சாரியை பெறும் என்பதும், மெய்யின் இயக்கம் அகரத்தொடு சிவணும் என்பதும். 37

பதவியல்

எழுத்துத் தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம் என்பதும், அப்பதம் பகாப் பதம், பகுபதம் என்ற இருவகைப்படும் என்பதும். 38

நெட்டெழுத்து ஏழே ஓரெழுத் தொருமொழி என்பதும், குற்றெழுத்து ஐந்தும் மொழியாகா, சில ஆகும் என்பதும். 39

பகாப்பதம் பகுக்கப்படுவதன்றாய்ப் பெயர்ப் பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என்ற நான்கு வகைப்படும் என்பது. 40

பகுபதம் பகுக்கப்படும் இயல்பிற்றாய் வினை, வினைப்பெயர் என்ற இருவகைப்படும் என்பது. 41

பகுபதத்தைப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் என்ற ஆறுபகுப்புள் ஏற்பன கொண்டு பிரித்துக் காண்க என்பது. 42

நடமுதல் அஃகுஈறாக எடுத்துக்காட்டிய முறையை ஒட்டி இயல்பு உயிரும் ஒற்றும் குற்றிய லுகரமும் ஆகிய இருபத்துமூன்று ஈற்றவாகிய முதல் நிலைத் தொழிற்பெயர்களைப் பகுதியாகக்கொண்டு இயற்றும் வினைமுதல் தெரிநிலைவினை நிகழும் என்பது. 43

அவ்விருபத்துமூன்று வகைப் பகுதிகளொடு ''வி'' என்பதோ ''பி'' என்பதோ ஏற்ற பெற்றி வந்து அமையும் தொழிற்பெயர்களைப் பகுதியாகக் கொண்டு ஏவல் வினைமுதல் தெரிநிலைவினை நிகழும் என்பது. 44

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் ஆகிய பெயர்களை முதல்நிலையாகக் கொண்டு குறிப்பு வினைமுற்றுப்பகுபதம் நிகழும் என்பது. 45

அன் முதலாக உம் ஈறாகக்கிடந்த முப்பத் தொன்பதும், அவைபோல்வன பிறவும் வினை விகுதி; அவற்றுள் சில வினைப்பெயர் விகுதி என்பது. 46

கடதற என்ற ஒற்றுக்களும், இன் என்னும் குற்றொற்றும் இறந்தகால இடைநிலை என்பது. 47

ஆ நின்று, கின்று, கிறு என்பன நிகழ்கால இடைநிலை என்பது. 48

பகர ஒற்றும் வகர ஒற்றும் எதிர்கால இடை நிலை என்பதும், காலங்காட்டும் இடைநிலைகளைச் சில வினைமுற்றுப் பகுபதங்கள் ஏலா என்பதும். 49

குடுதுறு கும் டும் தும் றும் ப மார் மின் என்ற விகுதிகளும் வியங்கோள் விகுதியும் ஏவல் வினை முற்றுக்களும் எதிர்மறை வினைகளும், எதிர்காலமும், செய்யும் என்பது நிகழ்கால எதிர்காலங்களும் இடைநிலையின்றிக் காட்டும் என்பது. 50

வினைக்குறிப்பு முற்றின் பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் இருக்கும் உறுப்பு இடைநிலை என்பது. 51

இவ்விடைநிலைகளைத் தெரிநிலை வினைப் பெயர்களுக்கும் குறிப்பு வினைப்பெயர்களுக்கும் கொள்ளுதல் வேண்டும் என்பது. 52

உயிரீற்றுப் புணரியல்
பொதுவிதி

மெய்யையும் உயிரையும் முதலாகவும், ஈறாகவும் கொண்டுள்ள பெயர் வினை இடை உரி என்ற நால்வகைப்பட்ட நிலைமொழி வருமொழிகள், தம்மொடு தாமும், தம்மொடு பிறவும் அல்வழிப் பொருளிலோ வேற்றுமைப்பொருளிலோ பொருந்துமிடத்து, நிலைமொழியும், வருமொழியும் இயல்பாகவோ விகாரப்பட்டோ பொருந்தும் பொருத்தமே புணர்ச்சி என்பது. 53

இரண்டு முதல் ஏழு ஈறாகிய வேற்றுமை விரிந்தும் தொக்கும் புணரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி என்பதும், எழுவாய்த்தொடர், விளித்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், அடுக்குத்தொடர், உவமைத் தொடர், உம்மைத்தொடர் என்பன அல்வழிப் புணர்ச்சி என்பதும். 54

வேற்றுமை பெயருக்குப் பின்னரேயே வரும் என்பது. 55

மெய்யும் உயிரும் உயிர்மெய்யுமாகிய எழுத்தும் சாரியையும் தோன்றலும், வடிவு வேறுபடலும், கெடலும் விகாரப் புணர்ச்சி என்பது. 56

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் விரித்தல் தொகுத்தல் எனச் செய்யுள் விகாரம் அறு வகைப் படும் என்பது. 57

முதற்குறை இடைக்குறை கடைக்குறை எனக் குறை மூவகைப்படும் என்பது. 58

அன் ஆன் இல் அல் அற்று இற்று அத்து அம் தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன முதலியன சாரியை என்பது. 59

நிலைமொழியீற்றில் இயல்பாகவோ விதியாகவோ அகரம் இருப்பின்; அத்துச்சாரியையின் அகரம் கெட்டுவிடும் என்பது. 60

சொல்லின்முன் விகுதியோ சொல்லோ உருபோ புணரும்இடத்து, ஒரு சாரியையோ பல சாரியைகளோ வருதலோ, வாராதிருத்தலோ, விகற்பித்தலோ நிகழும் என்பது. 61

எழுத்தான் ஒரு வடிவினவாயிருக்கும் புணர் மொழிகள் ஓசை வேறுபாட்டால்தான் பகுத்து உணரப்படும் என்பது. 62

அவற்றை ஒலிவடிவானன்றி வரிவடிவான் பகுத்து உணர்தல் இயலாது என்பது. 63

நிலைமொழியீற்று மெய்யொடு வருமொழி முதலில் வரும் உயிர் ஏறி முடியும் என்பது. 64

நிலைமொழியீற்றுக் குற்றியலுகரத்தொடும் வருமொழி முதலில் வரும் உயிர் ஏறி முடியும் என் பதும், வருமொழி முதலில் யகரம் வரின் நிலை மொழியீற்றுக் குற்றியலுகரம் கெட அதன் இடத் துக் குற்றியலிகரம் வரும் என்பதும். 65

தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த ஒற்று நிலை மொழி ஈற்றிலிருக்க, வருமொழி முதலில் உயிர் வரின் ஈற்று ஒற்று இரட்டும் என்பது. 66

நிலைமொழியீற்றில் யகர மெய் நீங்கலான ஏனைய மெய்களுள் ஒன்று நிற்ப, வருமொழி முதலில் யகரம்வரின், இடையே ஓர் இகரச் சாரியை தோன்றலும் உண்டு என்பது. 67

இகர ஈகார ஐகார ஈற்று நிலைமொழிமுன் வருமொழி உயிர்வரின் யகர மெய்யும், ஏனை ஈற்று உயிர்களின்முன் வருமொழி உயிர்வரின் வகர மெய்யும் இடையே உடம்படுமெய்யாகத் தோன்றும் என்பதும், உடம்படுமெய் வருதல் ஒருதலையன்று என்பதும். 68

இருபத்துநான்கு ஈற்றின் முன்னரும் மென்கணமும் இடைக்கணமும் வரின் இயல்பாகப் புணரும் என்பதும், தனிக்குறிலைச் சார்ந்த யகர மெய்யீறு, தனி ஐ, நொ, து என்ற ஓரெழுத்தொரு மொழிகள் இவற்றின் முன் இயல்பாதலேயன்றி மெல்லெழுத்து மிகுதலும் உண்டு என்பதும், ணளலன ஈற்றுமுன் வரும் நகரம் திரியும் என்பதும். 69

ணகர ளகர ஈறுகளின் முன்வரும் தகரம் டகரமாம் என்பதும், நகரம் ணகரமாம் என்பதும், னகர லகர ஈறுகளின் முன்வரும் தகரம் றகரமாம் என்பதும், நகரம் னகரமாம் என்பதும். 70

பொதுப்பெயர்களும் உயர்திணைப் பெயர்களும் வருமொழி நாற்கணமும் வரின் இயல்பாகப் புணரும் என்பதும், உயர்திணைப் பெயர்களுள் சில விகாரப் புணர்ச்சி பெறும் என்பதும். 71

விளிப்பெயர்களும் வன்கணத்தொடு இயல்பாகப் புணரும் என்பது. 72

முன்னிலை வினையும் ஏவல்வினையும் வருமொழிக்கண் வன்கணம் முதலெழுத்தாகவரின், இயல்பாகவும் உறழாகவும் புணரும் என்பது. 73

ஔகார ஈறு, ஞநமவ என்னும் புள்ளியீறு, குற்றியலுகர ஈறு என்பன ஏவல்வினைக்கண் உகரம் பெற்றுப் புணரும் என்பதும், எனவே ஏவல் வினைக்கண் குற்றியலுகர ஈறு முற்றியலுகரமாம் என்பதும். 74

மெலி மிக வேண்டிய இடத்து வலியும் வலி மிக வேண்டியவிடத்து மெலியும் மிகுதலும், இயல்பு புணர்ச்சியிடத்து மிக்கும் புணர்தலும், உயிர்மிக வேண்டியவழி உயிர் கெடுதலும், சாரியை வர வேண்டியவழிச் சாரியை வாராமையும், சாரியை வருவழி உருபு விரிந்தே வருதலும், சாரியை வர வேண்டியவழிச் சாரியை பெறாது இயல்பாயும் மிக்கும் புணர்தலும், உயர்திணைப் பெயரிடத்து உருபு தொகாது விரிந்தே வருதலும், விரிவுப் பெயரிடத்தும் அங்ஙனமே வருதலும், திரிய வேண்டிய இடத்து இயல்பாதலும் போல்வன இரண்டாம் வேற்றுமை முடிபு வேறுபாடு என்பது. 75

மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் எழுவாயின் தொழில் பற்றிய சொல் வருமொழியாய் வருமிடத்து, வருமொழி முதலெழுத்தாகிய வல்லினம் உறழ்ந்தும் சிலவிடத்து இயல்பாயும்வரும் என்பது. 76

அவ்வழிக்கண் இகர ஐகார ஈறுகள் இயல்பாகவும், வல்லெழுத்து மிக்கும், உறழ்ந்தும் முடியும் என்பது. 77

அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப் பெயரும், தம்மில் குறைந்த அளவுநிறை எண்களைச் சுட்டும் பெயர்கள் வருமொழியாய் வந்து புணரு

மிடத்து, இடையே ஏ என்ற சாரியை பெறும் என்பது. 78

நாழி என்ற அளவுப்பெயர்முன் உரி என்ற அளவுப்பெயர் வருமொழியாய் வந்து புணரின் நாடுரி என்றாகும் என்பதும்,உரிஎன்ற நிலைமொழி ஏனைய வருமொழிகளோடு புணரும்வழி யகர உயிர் மெய் இடையே வரும் என்பதும். 79

எகர வினாவும் அ இ உ என்ற சுட்டும் நிலை மொழியாக, வருமொழி முதலில் உயிரும் யகரமும் வரின் வகரமும், ஏனைய எழுத்துக்கள்வரின் வந்த அவ்வெழுத்துக்களும் பெறும் என்பதும், செய்யு ளிடத்துச் சுட்டிடைச் சொல்லாகிய நிலைமொழி நீண்டவழி யகரமும் வரும் என்பதும். 80

இருவழியும் ஞ ண ந ம லவளன என்ற ஒற்று ஈற்றுத் தொழிற்பெயர் வருமொழி முதலில் யகரம் அல்லாத ஏனைய மெய்கள் வரும்வழி உகரச் சாரியை பெறும் என்பதும், நகர ஈறு வேற்றுமைக் கண் உகரமேயன்றி அகரமும் பெறும் என்பதும். 81

இயல்பு ஈறாகவும், விதி ஈறாகவும் நிற்கும் உயிர்முன்,வருமொழி முதற்கண் வரும் வல்லெழுத்து மிக்கே புணரும் என்பது. 82

வேற்றுமைப் புணர்ச்சிக்கண் உயிரீற்று மரப் பெயர்கள் மெல்லெழுத்து மிக்கும், வல்லெழுத்து மிக்கும், அம்முச்சாரியை பெற்றும், அம்முச்சாரியை பெறாது வல்லெழுத்து மிக்கும் இவ்வாறு நான்கு வகையானே முடியும் என்பது. 83

பனை என்ற சொல் நிலைமொழியாக, வரு மொழி முதலில் கொடி என்ற சொல்வரின் வல்லெ ழுத்து மிகும் என்பதும் ஏனைய வல்லெழுத்து வரு

மொழி முதற்கண்வரின் ஐகெட்டு அம்முச்சாரியை பெறும் என்பதும், வருமொழியாகத் திரள் என்பது வரின் மிகுதலும் ஐகெட்டு அம்முப் பெறுதலுமாகிய இரண்டும் பெறும் என்பதும், அட்டு வரின் ஐகெட்டு ஆகாரம் பெறும் என்பதும். 84

சாவ என்ற வினையெச்சத்தின் இறுதி வகரம் கெடுதலும் உண்டு என்பது. 85

அகர ஈறு :

செய்யிய என்னும் வினையெச்சம், அகரஈற்றுப் பெயரெச்சங்கள், ஆகரஈற்று முற்று, அ என்ற ஆறன் உருபு, அகரஈற்று அஃறிணைப் பன்மைப் பெயர், அம்ம என்ற இடைச்சொல் ஆகியவை வருமொழியில் வன்கணம் வரினும் மிகா என்பது. 86

வாழிய என்ற முற்றின் யகரம் கெடும் என்பதும், அது கெடினும் கெடாது நிற்பினும் வருமொழியொடு இயல்பாகவே புணரும் என்பதும். 87

பல சில என்பவை தம்முன் தாம்வரின் இயல்பாகவும், மிக்கும், அகரம்கெட லகரம் றகரமாகியும், பிற சொற்கள்வரின் அகரம் கெட்டும் கெடாமலும் புணரும் என்பது. 88

ஆகார ஈறு :

அல்வழிக்கண் ஆ, மா, மியா, ஆகார ஈற்று முற்று, யா எனற வினா இவை இயல்பாகவே புணரும் என்பது. 89

தனிக்குறிலை யடுத்து வரும் ஆகார ஈற்றுப் பெயரின் ஆகாரம் அகரமாகியும், அதனொடு உகரம் பெற்றும், திரிபு எதுவும் இன்றி இயல்பாகவும் புணரும் என்பது. 90

இகரஈறு :

அன்றி, இன்றி என்ற வினையெச்சங்கள் செய்யுளில் உகர ஈறாய்த் திரிந்தவழி மிகாது புணரும் என்பது. 91

சுவைப்பொருள் தரும் புளி என்ற ஈற்றின்முன் வல்லெழுத்தேயன்றி மெல்லெழுத்தும் மிகும் என்பது. 92

ஈகாரஈறு:

பீஎன்ற சொல் இயல்பாய் அல்வழியில் புணரும் என்பதும், மீ என்ற மரூஉ மொழி வேற்றுமைக் கண் இயல்பு ஆதலேயன்றி, வல்லெழுத்தும் மெல் லெழுத்தும் பெற்றுப் புணரும் என்பதும். 93

ஆ என்பதன் முன்வரும் பீ என்ற சொல் இடையே வல்லெழுத்துப்பெற்றுக் குறுகும் என்பது. 94

உகரஈறு :

ஒரு இரு முதலிய விதி உகர ஈறாகிய எண்ணுப் பெயர்களும், அது இது உது என்ற சுட்டுப்பெயர் களும் இயல்பாகப் புணரும் என்பதும், அது என்ற நிலைமொழி அன்று என்பது வருவழி அதா அன்று எனவும், ஐ என்ற சாரியை வருவழி அதை எனவும் புணரும் என்பதும். 95

ஊகாரஈறு :

பூ என்ற பெயர் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வல்லெழுத்தே யன்றி மெல்லெழுத்தும் மிக்குப் புணரும் என்பது. 96

எகர ஒகர ஈறுகள் :

எகரம் தேற்றத்தின் கண்ணும் ஒகரம் சிறப்பின் கண்ணும் அளபெடை யீறாய் வரும் என்பதும், முன்னிலை ஏவல்வினைக்கண்ணும் அவை அளபெடை யீறாய் வரும் என்பதும், வினைக்கண் மிக்கு முடியும் என்பதும். 97

தேற்ற எகரமும் சிறப்பு ஒகரமும் வருமொழி யொடு இயல்பாகவே புணரும் என்பதும். 98

ஏகார ஓகார ஈறுகள் :

ஏகார இடைச்சொல்லும் ஓகார இடைச்சொல் லும் இயல்பாகவே புணரும் என்பது. 99

குற்றியலுகர ஈறு :

குற்றியலுகர ஈற்றுள் வன்றொடர் அல்லாத ஏனைய ஐந்து தொடர்களும் அல்வழிக்கண் இயல் பாகவே புணரும் என்பது. 100

இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்று இரட்டாத நெடில்தொடர், ஒற்று இரட்டாத உயிர்த் தொடர் என்பன வேற்றுமைக் கண்ணும் மிகா என்பது. 101

டு, று என்ற குற்றியலுகர ஈற்று நெடில் தொடரும், உயிர்த்தொடரும் வேற்றுமைப் புணர்ச்சி யில் ஒற்று இரட்டும் என்பது. 102

மென்தொடர்மொழிக் குற்றியலுகரச் சொற்கள் சில, வேற்றுமைக்கண் இனமான வல்லொற்றாக இடை மெல்லொற்றுத் திரிதலைப் பெறா, பல பெறும் என்பது. 103

குற்றியலுகர ஈறுகள் சில ஐகார ஈறுகளாகத் திரியும் என்பது. 104

திசைப் பெயர்களோடு திசைப் பெயர்களும் பிறபெயர்களும் புணருமிடத்து, வடக்கு குணக்கு குடக்கு கிழக்கு என்பனவற்றின் ஈற்று உயிர்மெய்யும் அதனையடுத்த ககர ஒற்றும் கெடும் என்பதும், தெற்கு என்பதன் றகரம் ணகரமாகவும், மேற்கு என்பதன் றகரம் லகரமாகவும் திரியும் என்பதும், பிற மாற்றங்கள் நிகழ்தலும் ஆம் என்பதும். 105

குற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர்கள் பொதுவாகப் புணரும்போது நிகழும் மாற்றங்கள் இவை என்பது. 106

ஒன்று ஒரு எனவும், இரண்டு இரு எனவும் திரிந்து வருமொழியோடு புணரும் என்பது. 107

மூன்று என்பதன் இடையொற்றுக் கெடுதலும் வருமொழி யொற்றாகத் திரிதலும் ஆம் என்பது. 108

நான்கு என்பதன் னகரம் லகரமாகவும் றகர மாகவும் திரியும் என்பது. 109

ஐந்து என்பதன் நகரம் வருமொழி யெழுத்தாக வும் அதன் இனஎழுத்தாகவும் திரிதலும், கெடுதலும் பொருந்தும் என்பது. 110

எட்டு என்பதன் டகரம் ணகரமாகும் என்பது. 111

ஒன்பது × பத்து — தொண்ணூறு எனவும், ஒன்பது×நூறு — தொள்ளாயிரம் எனவும் புணரும் என்பது. 112

ஒன்றுமுதல் எட்டு ஈறாகிய ஏழ் நீங்கலான ஏழ் எண்களின் பெயர்களும் நிலைமொழியாய் நிற்க, வருமொழியில் பத்து என்பது வந்து புணரின், அப் பத்து என்பது பது என்றோ பஃது என்றோ திரிந்து புணரும் என்பது. 113

ஒன்பது ஒருபஃது என்பனவற்றின் முன் ஒன்று முதல் ஒன்பது ஈறாகிய சொற்கள் வந்து புணரு மிடத்துப் பத்து என்பதன் இடையொற்றுக்கெடாது என்பது. 114

பத்து என்ற நிலைமொழிமுன் வருமொழி பலவும் வரும்இடத்து, இடையொற்றுக்கெட, இன் சாரியையும் இற்றுச் சாரியையும் ஏற்றபெற்றி வரும் என்பதும், ஒன்பதும் இத்தன்மையதே என்பதும். 115

பத்து என்பதனோடு இரண்டு வந்து புணரின், பன்னிரண்டு என்றாகும் என்பது. 116

ஒன்பது நீங்கலான ஒன்றுமுதல் எட்டு ஈறாகிய எண்ணுப்பெயர்கள் இரட்டித்து வரும்போது, நிலைமொழியின் முதலெழுத்து நீங்கலான ஏனைய நீங்க, வருமொழி உயிராயின் வகரமும், மெய்யாயின் அம் மெய்யெழுத்தும் இடையே மிகுதல் மரபு என்பது. 117

ஒடு ஓடு என்ற மூன்றன் உருபுகளும், அது ஆது என்ற ஆறன் உருபுகளும், வருமொழியொடு இயல்பாகவே புணரும் என்பது. 118

மெய்யீற்றுப் புணரியல்

ணகர னகர ஈறு :

இவை வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வருமொழி முதலில் வன்கணம்வரின் முறையே டகரமாகவும் றகரமாகவும் திரிந்தும், ஏனைக்கணம்வரின் இயல் பாகவும், அல்வழிக்கண் நாற்கணம்வரினும் இயல் பாகவும் புணரும் என்பது. 119

தனிக்குற்றெழுத்தைச் சாராது மொழி இறுதி யில் வரும் ணகரமும் னகரமும், வருமொழி முதற் கண் வரும் நகரம் ணகரமாகவும் னகரமாகவும் திரிந்த விடத்துத் தாம்கெடும் என்பது. 120

ணகர ஈற்றுச் சாதிப்பெயர், குழூஉப்பெயர், பரண் கவண் என்ற பெயர்கள் வருமொழியொடு இயல்பாகவே புணரும் என்பதும், உணவுப் பொரு ளாகிய எண் என்ற பெயரும் சாண் என்ற அளவுப் பெயரும் இருவழியும் டகரமாய்த் திரிந்து முடியும் என்பதும். 121

னகர ஈற்றுக்கிளைப்பெயர் வேற்றுமைப் புணர்ச் சிக்கண் இயல்பாகவும், அகரச்சாரியை பெற்றும் புணரும் என்பது. 122

மீன் என்ற பெயர் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் இயல்பாகவும், னகரம் றகரமாகத் திரிந்தும் புணரும் இருநிலையும் உடையது என்பது. 123

தேன் என்ற சொல் வேற்றுமைப்புணர்ச்சிக் கண் வன்கணம்வரின் இயல்பாகவும் திரிந்தும் ஈறு கெட்டு வலி மெலி மிகுந்தும், மெல்லெழுத்து வரு மொழி முதற்கண்வரின் ஈறுகெட்டும் கெடாமலும் உறழ்ந்தும், இடையெழுத்து வருமொழி முதற்கண்

வரின் இயல்பாயும், உயிர்வரின் இயல்பாய் முடித லொடு இரு தகரஒற்று இடையே பெற்றும் முடியும் என்பது. 124

எகின் என்ற பறவைப் பெயர் இயல்பாயும் வலியும் மெலியும் மிக்கும் புணரும் என்பது. 125

குயின் என்ற சொல் இயல்பாகப் புணரும் என்பது. 126

மின் பின் பன் கன் என்பன தொழிற்பெயர் போல உகரம் பெறுதலும், அவற்றுள் கன் என்பது வேற்றுமைப் புணர்ச்சிக்கண் அகரமும் வல்லெழுத்தும் பெறுதலும் ஆம் என்பது. 127

அழன் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் ஈறு கெடும் என்பது. 128

மகர ஈறு :

மகர ஈற்றுமொழிகள் நாற்கணமும் வர, இரு வழியும் ஈறுகெட்டு உயிரீறுபோலவாகி வல்லெழுத்து வரின் அவைமிக்கும், ஈறுகெடாது இனமெல்லெழுத் தாய்த் திரிந்தும், மென்கணம் இடைக்கணம் என்பன வரின் இயல்பாயும், உயிர்வரின் உடம்படுமெய் பெற்றும் புணரும் என்பது. 129

வேற்றுமைப் புணர்ச்சியில் வன்கணம்வரின் மகர ஈறு கெட்டு வல்லெழுத்து மிக்கும் மெல் லெழுத்துமிக்கும் உறழ்ந்தும், அல்வழிக்கண் உயிர்க் கணமும் இடைக்கணமும்வரின் ஈறு கெடாது இயல்பாயும் முடியும் என்பது. 130

அகம் என்பதன் முன் செவி கை என்பன வரு மொழியாய்வரின் இடையிலுள்ள ககரம் கெடும் என்பது. 131

ஈம் கம் உரும் என்பன தொழிற்பெயற்போல உகரம்பெறும் என்பதும், ஈமும் கம்மும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் உகரமேயன்றி அகரமும் பெறும் என்பதும். 132

யரழ ஈறு :

அல்வழிக்கண் யரழ ஈற்றுச்சொற்கள் வன்கணம் வரின் இயல்பாகவும் மிக்கும் புணரும் என்பதும், வேற்றுமைக்கண் மிக்கும் உறழ்ந்தும் புணரும் என்பதும். 133

தமிழ் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் அகரச் சாரியை பெறும் என்பதும், தாழ் என்ற சொல் கோல் என்ற சொல்லொடு புணரும் வழியும் அகரச் சாரியை பெறும் என்பதும். 134

கீழ் என்ற சொல் இயல்பு, மிகுதி என்ற விகற்பம் பெற்று முடியும் என்பது. 135

ஏழ் என்ற எண்ணுப்பெயர் எண் முதலியவற் றொடு புணரும்வழி, ஆறு என்பதுபோல நெடுமுதல் குறுகியும் ஏற்புழி உகரம் பெற்றும் புணரும் என்பது 136

லகர ளகர ஈறு:

லகர ளகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வருமொழியில் வன்கணம்வரின் முறையே றகர டகரங்களாகவும், அல்வழிக்கண் உறழ்ந்தும் முடியும் என்பதும், இருவழிக்கண்ணும் மெல்லெழுத்து வருமொழி முதற்கண்வரின் முறையே னகர ணகரங்களாகத் திரிந்தும், இடை யெழுத்துவரின் திரிபின்றி இயல்பாகவும் புணரும் என்பதும். 137

தனிக்குறிலைச் சார்ந்துவரும் லகரமும், ளகரமும் வருமொழி முதற்கண் தகரம்வரின் அல்வழிப் புணர்ச்சிக்கண் ஆய்தமாகவும் பெறும் என்பது. 138

தனிக்குற்றெழுத்து ஒன்றனையும் சாராத லகர ளகரங்கள், அல்வழிப்புணர்ச்சியில் வருமொழி முதலில் வந்த தகரம் திரிந்த இடத்துக்கெடும் என்பதும், அல்வழி வேற்றுமை ஆகிய இருவழியும் வருமொழி முதற்கண் வரும் நகரம் திரிந்தவழிக் கெடும் என்பதும், தகரம் நீங்கலான ஏனைய வல்லெழுத்துக்கள் வருமொழி முதற்கண்வரின் இயல்பாகவும் திரிந்தும் புணரும் என்பதும். 139

நெல் செல் கொல் சொல் என்பன அல்வழிப் புணர்ச்சிக்கண்ணும் றகரமாகத் திரியும் என்பது. 140

வல் என்ற சொல் இருவழியும் உகரச்சாரியை பெறும் என்பதும், பலகை நாய் என்பன வருமொழியாகவரின் உகரமேயன்றி அகரச்சாரியையும் பெறும் என்பதும். 141

இல் என்ற சொல், வருமொழி முதற்கண் வல்லெழுத்து வரின் ஐகாரச்சாரியை பெறுதலும், அதனோடு வல்லெழுத்துப் பெறுதலும், ஆகாரச் சாரியையொடு வல்லெழுத்துப் பெறுதலும், விகாரமின்றி இயல்பாகப் புணர்ந்து முடிதலும் ஆம் என்பது. 142

புள் வள் என்ற சொற்கள் இயல்பாகவும், தொழிற் பெயர்போல உகரச்சாரியை பெற்றும் புணரும் என்பது. 143

வகர ஈறு :

அவ் இவ் உவ் என்ற சுட்டுப்பெயர்களின் ஈற்று வகரம் வருமொழி முதலில் வன்கணம் வர ஆய்த

மாகவும், மென்கணம்வர வந்த மெல்லெழுத்தாகவும் திரிந்தும், இடைக்கணம்வர இயல்பாகவும் புணரும் என்பது. 144

தெவ் என்ற சொல் தொழிற் பெயர்போல உகரம் பெற்றுப் புணரும் என்பதும், வருமொழி முதற்கண் மகரம் வரின் நிலைமொழியீற்று வகரமும் மகரமாகத்திரியும் என்பதும். 145

உருபு புணர்ச்சிக்கண் கொள்ளப்படும் புணர்ச்சி முடிபு உயிரீறு ஒற்றீறு ஆகிய ஈரீற்றுப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் கொள்ளப்படும் என்பது. 146

இடைச்சொற்கள் உரிச்சொற்கள் வட சொற்கள் போலிச்சொற்கள் மரூஉச்சொற்கள் இவை முற்கூறப்பட்ட விதிகொள்ளாவிடத்து, இரு வகை வழக்கு முறைகளையும் கடைப்பிடித்து அவற்றிற்கு ஏற்பப் புணர்க்கப்படும் என்பது. 147

உருபு புணரியல்

உருபுகள், உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல் ஆகியவற்றில் கூறப்பட்ட பொருட் புணர்ச்சி விதிகளையும் ஏற்ற பெற்றி கொள்ளும் என்பது. 148

எல்லா ஈற்றுப் பெயர்களும் இன்சாரியை பெறும் என்பது. 149

அகரஈற்றுப் பன்மைப்பெயர் அற்றுச்சாரியை பெறும் என்பது. 150

ஆ மா கோ என்ற சொற்கள் னகர ஒற்று ஆகிய சாரியையும் பெறும் என்பது. 151

எல்லாம் என்ற பொதுப்பெயர், அஃறிணையைக் குறிக்குமிடத்து இடையே அற்றும் உருபின்பின் உம்மும் பெறும் என்பதும், உயர்திணையைக் குறிக் குமிடத்து இடையே நம்முச் சாரியையும் ஈற்றில் உம்மும் பெறும் என்பதும். 152

எல்லாரும் எல்லீரும் என்ற சொற்கள், முதலில் உம்மையை நீக்கி, இடையே முறையே தம்முச் சாரியையும் நும்முச்சாரியையும் பெற்று, உருபின் பின் உம்முச்சாரியை மீண்டும் பெறும் என்பது. 153

உருபு ஏற்கும்போது தான் தாம் நாம் யான் யாம் நீ நீர் என்பன முறையே தன் தம் நம் என் எம் நின் நும் என்றாகும் என்பதும், நான்கன் உருபு ஏற்கும்வழி இத்திரிந்த நிலைமொழிஈற்றில் அகரச் சாரியை வரும் என்பதும், நான்கன் உருபும் ஆறன் உருபும் ஏற்கும்போது தனிக்குறில்முன் ஒற்றாய் அமைந்த இச்சொற்கள் ஒற்று இரட்டா என்பதும். 154

வகர ஈற்றுச் சுட்டுப்பெயர் அற்றுச் சாரியை பெறும் என்பது. 155

யாது, அஃது, இஃது, உஃது என்பன உருபு ஏற்கும்போது அன்சாரியை பெறும் என்பதும், அன்சாரியை பெறும்வழிச் சுட்டுப்பெயர்களில் உள்ள ஆய்தம் கெடும் என்பதும். 156

ஒருபது முதலிய சொற்கள் உருபு ஏற்கும்போது இடையே ஆன்சாரியைவரின் பத்து என்பதன் பகரஒற்று நீங்கலான ஏனைய கெடும் என்பதும், ஒன்பது என்பதும் ஆன்சாரியையோடு உருபு ஏற்கும் போது இப்பெற்றியதே என்பதும். 157

சொல்லப்படாத புணர்ச்சி முடிபுகளைச் சொல் லப்பட்ட முடிபுகளொடு ஒட்டி நோக்கி ஏற்றபெற்றி அமைத்துக் கொள்க என்பது. 158

செய்யுளுக்கென்றே வரையறுக்கப்பட்ட விதிகள் :

19 இசைகெடின் மொழிமுத லிடைகடை நெடில்வழித்
தத்த மொத்த குற்றெழுத் தோடள
பெழூஉ மையென இஉ என்னு
மாயீ ரெழுத்தோ டளபெழு மென்ப.

34 லளமெய் திரிந்த னணவொடு மகார
மீரொற் றாகுஞ் செய்யு ளுள்ளே.

57 வலித்தல் மெலித்தல் நீட்டங் குறுக்கம்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செயுள் வேண்டுழி.

80 தூக்கிற்சுட்டு, நீடலும் யகரம் நிலவலு நெறியே.

90 குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

91 அன்றி இன்றியென் வினையெஞ் சிகரந்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

95 அன்றுவரு காலை ஆவா குதலு
மைவரு காலை மெய்வரைந்து கெடுதலுஞ்
செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப.

வேற்றுநூல் நூற்பாக்கள்

1 தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி அன்றே.

2 மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே.

(இவை இரண்டு நூற்பாக்களும் பனம்பாரம்)

3 நெடிலே குறில்நெடில் குறில்இணை என்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற்று இறுதிஎன்று
ஏழ்குற் றுகரக்கு இடன்எனல் மொழிப.

4 தனிநிலை முதல்நிலை இடைநிலை ஈறுஎன
நால்வகைப் படூஉம்அளவு ஆய்வரும் இடனே.

5 இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும்.

6 செய்யுட்கண் ஓசை சிதையுங்கால் ஈரளபும்
ஐயப்பாடு இன்றி அணையுமாம்—மைதீர்ஒற்று
இன்றியும் செய்யுள் கெடின்ஒற்றை உண்டாக்கும்
குன்றுமேல் ஒற்றளபும் கொள்.

7 மாத்திரை வகையான் தளைதம கெடாநிலை
யாப்புஅழி யாமைஎன்று அளபெடை வேண்டும்.

8 தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச்
சுட்டுதற் கண்ணேயாம் சொல்.

9 பலாஅஞ் சிலாஅம் என்மனார் புலவர்.

LXXXXII

பதிகம்

பொன்மலை நின்று தென்மலை யுற்ற
அகத்திய முனிவன் சகத்தவர்க் காகச்
செந்தமி ழிலக்கண முந்துநூல் கிளப்பப்
பல்கா லுன்னித் தொல்காப் பியமுனி
யியற்றமிழ் முதலினின் றெடுத்துணர்த் திடவத
னொட்பங் கண்டு தட்பங் கூரா
தைந்திய லுந்தம் புந்தியின் வேறுகொண்
டுறைத்த புலவர் வரைத்த வுரையான்
முதலு முடிவுஞ் சிதர்தரப் பலவாய்க்
கிடந்த வியலைத் தொடர்ந்தொரு வழிப்பட
வீட்டலா னிலக்கண விளக்க மென்ன
நாட்டினன் வைத்திய நாத தேசிக
னன்னவன் றவத்தி னாலவ தரித்த
முன்னவன் பாயிர மொழிந்துசொல் லணியுந்
தற்பவ முதன்மூன் றிற்பட நாடிப்
பகர்ந்தன னிளவல்பன் னூலு மாராய்ந்
துகந்துதொல் காப்பியத் துண்மை தோன்ற
வைந்திய லுந்தன் புந்திசான் றாகத்
தந்தைமுன் னுரைத்தநூ றான்முடி பெய்த
வந்த ணாரூர்ச் சந்திர மௌலி
யருளுட் கொண்டு மருண்மன நீங்கிப்
புலங்கொளப் பாட்டிய விளங்க வுரைத்தனன்
வாய்மைதரு தியாக ராய தேசிகனே.

(இப்பதிகச் செய்யுள் பிரித்து எழுதப்பட்டநிலை பின்வருமாறு)

பொன்மலை நின்று தென்மலை உற்ற
அகத்திய முனிவன் சகத்தவர்க்கு ஆகச்
செந்தமிழ் இலக்கண முந்துநூல் கிளப்பப்
பல்கால் உன்னித் தொல்காப் பியமுனி

LXXXIII

இயற்றமிழ்முதலின்நின்று எடுத்துஉரைத்திடஅதன்
ஒட்பம் கண்டு தட்பம் கூராது
ஐந்துஇய லுந்தம் புந்தியின் வேறுகொண்டு
உரைத்த புலவர் வரைத்த உரையான்
முதலும் முடிவும் சிதர்தரப் பலவாய்க்
கிடந்த இயலைத் தொடர்ந்துஒரு வழிப்பட
ஈட்டலான் இலக்கண விளக்கம் என்ன
நாட்டினன் வைத்திய நாத தேசிகன்
அன்னவன் தவத்தி னால்அவ தரித்த
முன்னவன் பாயிரம் மொழிந்துசொல் லணியும்
தற்பவம் முதல்மூன் றின்பட நாடிப்
பகர்ந்தனன், இளவல்பன் னூலும் ஆராய்ந்து
உகந்துதொல் காப்பியத்து உண்மை தோன்ற
ஐந்துஇய லுந்தன் புந்திசான் றாகத்
தந்தைமுன் உரைத்தநூல் தான்முடிபு எய்த
அந்தண் ஆரூர்ச் சந்திர மௌலி
அருள்உட் கொண்டு மருள்மனம் நீங்கிப்
புலங்கொளப் பாட்டியல் இலங்க உரைத்தனன்
வாய்மைதரு தியாக ராய தேசிகனே.

இந்நூல் முழுதும் நூற்பாவினைச் சந்தி சேர்க்கப் பட்டவாறே முன்னர் அமைத்ததை விடுத்துச் சந்தி பிரித்து எழுதிக் காட்டும்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

இது தொன்னூற் பொருளை இந்நூல் உறச்செய்த கருத்தன் வழிமுறை தெரித்துக் கிழமையின் முற்றிய பரிசும் பகர்ந்தது.

(தமக்கு முற்பட்ட காலத்தே தோன்றிய இலக்கண நூற்செய்திகள் பலவற்றையும் ஏற்றபெற்றி தொகுத்து இலக்கண விளக்கம் என்ற நூலை யமைத்த ஆசிரியன் வழித்தோன்றலர்களைப் பற்றியும், அவர்களுக்கு இந்நூலிடத்துள்ள உரிமையைப் பற்றியும் கூறப்பட்ட தொகுப்புரையாகும்.)

(இ-ள்) மேருவரை நின்று பொதியவரை உற்ற அகத்திய மகாமுனி தமிழ்நாட்டு உள்ளோர்க்கு உறுதி பயப்ப இயல் இசை நாடகம் என்னும் செவ்விய தமிழ் இலக்கணங்களை முதல்நூல் பிறவி தோன்றக்கூற, அந் நூலைப் பலகாலும் ஆராய்ந்து பழைய காப்பியக்குடியின் வைகுதலான் தொல்காப்பியன் என்னும் காரணப் பெயரும், திரணதூமாக்கினி எனத் தந்தையாராகிய சமதக்கினியார் இட்ட இயற்பெயரும் உடைய இருடி முதல் நூலினின்றும் இயற்றமிழ் இலக்கணத்தை எடுத்துக்கொண்டு 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' உரைக்க அந்நூலில் கூறிய அறிவின் முதிர்ச்சி நோக்கிக் குளிர்ந்த நலத்தை விரும்பாமல், எழுத்தும் சொல்லும் பொருளும் அணியும் யாப்பும் என்னும் ஐந்து இலக்கணங்களையும் முறை பிறழ்ந்தும் முடிபுஒவ்வாதும் பயப்பாடு இன்றியும் பரிசு பெறாதும் மயங்கியும் வழுவியும் ஆசிரியர் கருத்துக்கு ஒப்பக் கூறாது வேறாக இலக்கணம் கொண்டு கூறிய புலவர் பலர் ஆகையான், அவரவர் வரம்புறக் கூறிய உரைத்திறனும் பலவாக, முதலொடு முடிவும் சிந்திப் பலவாகிக் கிடந்த இலக்கணங் களையெல்லாம் தொடர்ந்து ஒரு திறண்மையுறக் கேட் போர்க்கு இனிமையுற இலக்கணங்களைத் தீபம் ஒப்ப விளக்குதலான் இலக்கண விளக்கம் என்று பெயர் விளங்க வைத்தியநாத தேசிகன், இந்நூல் உரைத்து உரையிட்டு நிலை நிறுத்தினான். அத்தன்மையுடையோன் அரிய தவத்தினால் திருஅவதாரம் செய்த மூத்த புதல்வனான சதாசிவ தேசிகன் இந்நூற்குச் சிறப்புப்பாயிரம் கூறிச் சொல்லணி இலக்கணமும் தற்பவம் தற்சமம் தேசிகம் ஆகிய மூவகைச் சொற்களிற்பட ஆராய்ந்து கூறினான். அவற்குப் பின்னர் அவதரித்தோன், தமிழ் நூல் பலவும் ஆராய்ந்து உணர்ந்து அந்நூல்களில் கூறிய பொருளி னுக்கு வேறு உறாமல் தொல்காப்பிய நூலில் கூறிய மெய்ம்மை விளங்க, ஐந்து இலக்கணங்களையும் தனது மதியே கரியாகத் தந்தை முன்செய்த இலக்கண விளக்க

நூல் முற்றுப்பெற, தன்னிடைவந்து இரந்தோர்க்கு அறிவின் முதிர்ச்சியைப் பயக்கும் 'திருவாரூரில் அரியணை அதன்மேல் பரிவுடன் அமர்ந்து, வளர்ந்திட எண்ணி இளம்பிறை முடித்தோன்' திருவருளை உட்கொண்டு, மனத்திடத்துள்ள மயக்கம் நீங்கிக் கேட்குநருக்கு 'அறிவின் ஊறும் அமுதென நிறையப்' பாட்டியல் இலக்கணத்தை விளங்கச் செய்தான், கிரியை ஒழுக்கமும் உணர்த்தி என்கண் அவிச்சை நீங்க இன்பமாகிய வீடுபேற்றின் உபாயத்தினை எனக்கு அருளாநிற்கும் தியாகராச தேசிகன் என்னும் இயற்பெயரை உடைய குரவன் என்றவாறு.

இப்பதிகச் செய்யுள் செய்தான் வைத்தியநாத தேசிகன் மகன் பாட்டியல் பகர்ந்த தியாகராச தேசிகன் மாணாக்கன் ஆகிய புதல்வன் வைத்தியநாத தேசிகன் என்று அறிக.

[இப்பதிகத்திலிருந்து, இந்நூல் முழுவதும் வைத்தியநாத தேசிகர் செய்தாரல்லர் என்பதும், பொருளதிகார அணியலின் ஒருகூறாகிய சொல்லணி இலக்கணம் அவர் புதல்வராய சதாசிவ தேசிகரால் இயற்றப்பட்டது என்பதும், பின் பொருளதிகாரத்து இறுதியியலாகிய பாட்டியல் வைத்தியநாத தேசிகரின் புதல்வருள் மற்றொருவராகிய தியாகராச தேசிகரால் இயற்றப்பட்டது என்பதும் புலனாகின்றன. இவை ஆசிரியர் காலத்திலோ அவருக்கு பிற்பட்ட காலத்திலோ இயற்றப்பட்டிருக்கலாம். இவை இயற்றப்பட்ட காலம் பற்றிய அறுதியிடப்பட்ட செய்தி புலப்பட்டிலது. இப்பகுதிகளை வரைந்தவர்களே இப்பகுதிகளுக்கு உரையும் வரைந்திருக்கலாம் என்பது கொள்ளத்தக்கது. சொல்லணியியலின் அமைப்பு நூலமைப்பிலிருந்து வேறுபட்டிலது. ஆனால் பாட்டியலில் காணப்படும் சில செய்திகள் நூலின் ஏனைய பகுதிச் செய்திகளொடு சில இடங்களில்

முரண்பட்டிருப்பது பாட்டியல் இயற்றியவர் நூலாசிரியர் அல்லர் என்பதை மெய்ப்பிப்பதாய் உள்ளது.

தோன்றா தோன்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே

ஆதலின், நூல் வரைந்தவரே பாயிரமும் வரைதல் கூடாது. எனவே, பாட்டனார் ஆகிய வைத்தியநாத தேசிகரையும் பெரிய தந்தையராகிய சதாசிவ தேசிகரையும் தந்தையாராகிய தியாகராச தேசிகரையும் போற்றி நூலாசிரியருடைய பெயரனாராகிய வைத்தியநாத தேசிகர் இப்பாயிரம் செய்தார் என்பது.]

இப் பதிப்பில் எடுத்தாளப்பட்டுள்ள நூல் முதலியவற்றின் சுருக்கெழுத்து விளக்கம்

அகநா, அகம்.	அகநானூறு
இ-கொ.	இலக்கணக்கொத்து
இ-வி.	இலக்கணவிளக்கம்
இறை.	இறையனார் அகப்பொருள்
ஐங்.	ஐங்குறுநூறு
கலி.	கலித்தொகை
குறுந்.	குறுந்தொகை
சி-பா.	சிறப்புப்பாயிரம்
சிந்.	சிந்தாமணி
சிலப்.	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	சிறுபாணாற்றுப்படை
சூ-வி.	சூத்திரவிருத்தி
திருக். பரி.	திருக்குறள் பரிமேலழகர் உரை
தொ. வி.	தொன்னூல் விளக்கம்
தொல்.	தொல்காப்பிய எழுத்ததிகாரம்
தொல்-செய்.	தொல்காப்பியச்செய்யுளியல்
தொல்-சொல்.	தொல்காப்பியச்சொல்லதிகாரம்
தொல்-பொ.	தொல்காப்பியப் பொருளதிகாரம்
நச்.	நச்சினார்க்கினியர் உரை
நற்.	நற்றிணை
நன்.	நன்னூல்
நாலடி.	நாலடியார்
நே.	நேமிநாதம்
பதிற்.	பதிற்றுப்பத்து
பா.	பாயிரம்
பி-வி.	பிரயோக விவேகம்
புறநா, புறம்.	புறநானூறு
பு-வெ-மா.	புறப்பொருள் வெண்பா மாலை
பொ-பா.	பொதுப்பாயிரம்
மதுரைக்.	மதுரைக்காஞ்சி

மயிலை.	மயிலைநாதர் உரை
மலைபடு.	மலைபடுகடாம்
மாறன்.	மாறன் அலங்காரம்
மு-வீ.	முத்துவீரியம்
மு-வீ-எ.	முத்துவீரியம்-எழுத்தியல்
மு-வீ-பு.	முத்துவீரியம்-புணரியல்
மு-வீ-மொ.	முத்துவீரியம்-மொழியியல்
யாப்-விருத்தி.	யாப்பருங்கல விருத்தியுரை
விருத்தி.	நன்னூல்-சிவஞானமுனிவர் விருத்தியுரை
வீ. வீர.	வீரசோழியம்

இலக்கண விளக்கம்

பாயிரம்

பொதுப்பாயிரம்

க. ஆவது. பொதுப்பாயிரத்து இலக்கணம்

திரு விளங்கிய மாநகரத்திற்கு உரு விளங்கிய வாயில் மாடங்கள் போலவும், கற்றுவல்ல கணவற்குக் கற்பு உடை மனையாள் போலவும், தலை அமைந்த யானைக்கு வினை அமைந்த பாகன் போலவும், அளப் பரிய ஆகாயத்திற்கு விளக்கம் ஆகிய திங்களும் ஞாயிறும் போலவும் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்று ஆகலா னும், கொழுச்சென்ற வழித்துன்னூசி இனிது செல்லு மாறுபோலப் பருப்பொருட்டு ஆகிய பாயிரம் கேட்டார்க்கு நுண்பொருட்டு ஆகிய நூல் இனிது விளங்கும் என்ப ஆகலானும், அது கேளாக்கால் குன்று முட்டிய குரீஇப் போலவும் குறிச்சிபுக்க மான் போலவும் மாணாக்கன் இடர்ப்படும் ஆகலானும், 'ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும், பாயிரம் இல்லது பனுவல் அன்றே' என்ப ஆகலானும், எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க என்பது மரபு.

பொதுப்பாயிரத்தை நன்னூலார் தனித்தனி அமைந்த ஐம்பத்தைந்து நூற்பாக்களான் விளக்கியுள்ளார். ஆனால் இந்நூலாசிரியர் நூற்பாக்கள் இடைமிடைந்த உரைகொடு விளக்கிக் கூறுகிறார்.

உரை விளக்கம் :-திருவிளங்கிய மாநகரம்—செல்வச் சிறப்பான் மிக்க கோநகரம். உரு அமைந்த வாயில் மாடம்—தோற்றப் பொலிவுமிக்க கோபுரம். பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது என்பது நான்கு உவமங்க ளான் விளக்கப்படுகிறது. வாயில் மாடம் நகர்க்குள் செல்வதற்கு வழியாகலொடு அணிசெயல் உடைத்து; அதுபோலப் பாயிரம் நூலுள் செல்லற்கு வழியாதலொடு நூற்கு அணி செயல் உடைத்து. பாகன், அடங்கா யானையை அடக்கித் தன் குறிப்பின்வழி நடத்துவான். பொதுப்பாயிரம் தன்னை உணர்தலின் வளர்ச்சிக்குத்தக, இடர்ப்பாடு என்னும் கடுமையை நீக்கி நூலினை விளக்கும்; அந்நூற்கு அழகு செய்யும்; மாணாக்கன் உணர்ச்சிக்குப் பொருளான் அடங்காது தோன்றும் நூலினைத் தன் குறிப்பான் அடங்குமாறு காட்டி நடத்தும். திங்கள் கலையின் வளர்ச்சிக்குத் தகப்புறத்து இருள் நீக்கி ஆகாயத்தை விளக்கும்; ஆகாயத்திற்கு அழகு செய்யும். அதுபோலப் பாயிரம் மாணாக்கன் அறிவு வளர்ச்சிக்குத்தக அறியாமை என்னும் இருள் நீக்கி நூற்பொருள் விளக்கி நூற்கு அழகு செய்யும். இவ்வாறு பொதுப்பாயிரத்திற்கு வாயில் மாடமும், பாகனும், திங்களும் உவமங்கள் ஆயின. நூற்கு நகரமும், யானையும், ஆகாயமும் உவமங்கள் ஆயின.

சிறப்புப் பாயிரத்துக்கு ஞாயிறும் கற்புடையாளும் உவமம். நூற்கு ஆகாயமும் கணவனும் உவமம்.

ஞாயிறு எஞ்ஞான்றும் ஒரு படித்தாக ஆகாயத்தை விளக்கும்;சிறப்புப்பாயிரம் பெயர் மாத்திரையே உணர்த் தலின் வளர்தலும் தேய்தலும் இன்றி எஞ்ஞான்றும் ஒரு படித்தாக நூலினை விளக்கும். கற்புடையாள் கணவன் கற்பித்த வழி நிற்றலுடையாள்; அதுபோலச் சிறப்புப் பாயிரம் நூலின் குறிப்பின்வண்ணம்தான் ஒழுகும்.

இவ்வாறு பொதுப்பாயிரத்துக்கு வாயில் மாடம், பாகன், திங்கள் என்ற மூன்று உவமங்களும், சிறப்புப் பாயிரத்துக்கு ஞாயிறு, கற்புடையாள் என்ற இரண்டு உவமங்களும் கொள்க.

உரையாசிரியர், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும், திரு அமைந்த மாநகரத்திற்கு உருஅமைந்த வாயில் மாடம் போல அலங்காரமாதல் சிறப்பிற்றாயும் பாயிரம் வரும் என்பர்.

நச்சினார்கினியர், தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் பாயிரம் நூற்கு இன்றியமையாதது என்பர். இவை யாவும் இறையனார் களவியல் உரையை அடியொற்றிச்சொற்றனவே.

அரசஞ் சண்முகனார் இவற்றையெல்லாம் தொகுத்து, மேலும் சில தலைப்பெய்து, கரு அமைந்த மாநகர்க்கு உருஅமைந்த வாயில் மாடம் போலவும், தகைமாண்ட நெடுஞ் சுவர்க்கு வகைமாண்ட பாவைபோலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், நாண்துறவாக் குலமகட்கு மாண்துறவா அணியும் ஆடையும்போலவும், தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் போலவும் பாயிரம் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்று என்று கூறி, அவற்றை விளக்கியும் வரைந்துள்ளார்.

கொழு என்பது ஊசித் தொளையின் மேலுள்ள கோலினை; துன்னூசி என்பது தைத்தல் தொழில்செய்யும் நூல்கோத்த தொளையை உடைய ஊசியின் காதினை, கொழுவுதலால் கோல் கொழு எனப்பட்டது. கொழு

துன்னூசி நுழைதற்கு வழியாக்கல் உடைத்து; அது போலப்பாயிரம் நூல் நுழைதற்கு வழியாக்கல் உடைத்து.

குன்றினை முட்டிய குருவி தலைதகர்ந்து வருந்து மாறு போல, மாணாக்கன் அறிவு சிதறி வருந்துவான் என்பது.

ஊர்க்குள் புக்க காட்டகத்து மான் வழியறியாது தெளி வற்றுத் தடுமாறுவதுபோல, மாணாக்கன் நூலினைப் பயிலும் வழியறியாது திகைத்து அலமருவான் என்பது.

பலதிறப்பட்ட பொருள்களைத் தன்னுள் அடக்கிய பெரியதொரு நூலாயினும், பாயிரம் அமையாதிருப்பின் அக்குறை நீக்குதற்கரியது ஆதலின், நூல் முற்றுப்பெற்ற தொன்றாகக் கருதப்படமாட்டாது. எனவே, எந்த நூலாயினும் முதற்கண் பாயிரம் அமையப்பெறல் வேண்டும்.

நூல் என்பது இலக்கணத்தையே குறிக்கும் பழஞ் சொல். காப்பியங்கள் 'தொடர்நிலைச் செய்யுள்' என்ற பெயராலேயே வழங்கப்படல்வேண்டும் என்று நச்சினார்க் கினியர் சிந்தாமணி முதற்பாடல் உரையில் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

அப்பாயிரம் பொதுவும சிறப்பும் என இருவகைத்து,
'பாயிரம பொதுச் சிறப்பென இருபாற்றே'

என்ப ஆகலின். நன்-2

ஈவோன் தன்மை முதலாயின தன்னால் உரைக்கப் படும் நூற்கே உரிய அன்றி எல்லா நூல்முகத்தும் உரைக் கப்படுதலின் அவற்றை உணர்த்தும் பாயிரம் பொது எனவும், ஆக்கியோன் பெயர் முதலியன தன்னால் உரைக்கப்படும் நூற்கே உரியவாய் அவ்வொரு நூல் முகத்துமே உரைக்கப்படுதலின் அவற்றை உணர்த்தும பாயிரம் சிறப்பு எனவும் ஆயின என்க.

பாயிரம், பொதுப்பாயிரம் எனவும் சிறப்புப்பாயிரம் எனவும் இரு வகைப்படும். பொதுப்பாயிரம் விளக்கும் ஈவோன் தன்மை, ஈதல் இயற்கை, கொள்வோன் தன்மை, கோடல் மரபு என்பன எல்லா நூல்களுக்கும் பொதுவான செய்திகளாம்.

சிறப்புப்பாயிரம் உணர்த்தும் ஆக்கியோன் பெயர் முதலிய பதினொன்றும் ஒவ்வொரு நூலுக்கும் சிறப்பாக அமையும் செய்திகளாம்.

அவற்றுள், பொதுப்பாயிரம் ஈவோன் தன்மை, ஈதல் இயற்கை, கொள்வோன் தன்மை, கோடல் மரபு என நான்கு வகைத்து,

'ஈவோன் தன்மை ஈதல் இயற்கை
கொள்வோன் தன்மை கோடல் மரபு என
ஈரிரண்டு என்ப பொதுவின் தொகையே'

என்ப ஆதலின்.

ஈவோன் தன்மை என்பது ஆசிரியனது தன்மை என்றவாறு. அஃதாவது ஈதல் தொழில் நடைபெற வேண்டின், இரப்போன்வேண்டும் பொருள் உடையனாம் தன்மையும், அதனை ஈதற்கு ஏதுவாகிய இரக்கம் முதலிய குணன் உடையனாம் தன்மையும், ஈவோனுக்கு இன்றியமையாது இருத்தல் வேண்டும் ஆதலின், ஆசிரியன் அவற்றை உடையனாதல்.

ஈதல் இயற்கை என்பது ஆசிரியன் நூல் உரைக்கும் முறைமை என்றவாறு. அஃதாவது பசியால் இரப்போற்கு அவன் பசி அளவு அறிந்து முகம் மலர்ந்து இன்சொல் கூறி உணவு அளிப்பது போல, மாணாக்கனுக்கு அவன் அளிக்கும் முறைமை.

கொள்வோன் தன்மை என்பது மாணாக்கனது தன்மை என்றவாறு. அஃதாவது பசித்து ஊண்வேட்டு

இரப்போன் அதனை உடையார்மாட்டு இரத்தலும், அவர்க்குக் கருணைவர நடத்தலும் உடையன் ஆயினாற் போல, அவன் கற்றார்மாட்டு இரத்தலும் பிற்றைநிலை முனியாமையும் உடையன் ஆதல்.

கோடல் மரபு என்பது மாணாக்கன் கேட்கும் முறைமை என்றவாறு. அஃதாவது பசித்து ஊண் வேட்டு இரந்தாற்கு அதனை அளிப்பின் அவன் அதனை ஆர்வத்தோடு ஏற்றுச் சிதறாமல் அருந்திப் பசிதீர்ந் தாற்போல, ஆசிரியன் அளித்த பொருளை அவன் கொள்ளும் முறைமை.

நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவை பொதுப்பாயிரம் நன்-3

என்பதொரு சூத்திரம்பற்றி ஐந்து என்பாரும் உளர். அஃது இலக்கணம் அன்று; அவயவமாகிய பாயிரத்துள் அவயவியாகிய நூல் அடங்காமையின். 'நூலின் இயல்பே நுவலின் ஓரிரு, பாயிரந் தோற்றி' என்ப ஆகலானும், நூன்முகம் முதலிய குறிகளானும் அஃது அதற்கு அவயவம் ஆதல் அறிக.

நன்னூல் பொதுப்பாயிரத்துள் ஈவோன் தன்மை முதலிய நான்கனொடு நூலும் நுவலப்படும் என்று குறிப் பிடுகிறது. பாயிரம் என்பது நூலின் உறுப்புக்களுள் ஒன்று. இச்செய்தி பாயிரத்துக்கு நூல்முகம் என்ற பெயர் இருப்பதனாலும், நூலின் உறுப்புக்களுள் இருவகைப் பாயிரங்களும் குறிப்பிடப்பட்டிருத்தலானும் உணரப்படும்.

இனி, ஈவோர் கற்கப்படுவோரும் கற்கப்படா தோரும் என இருவகையர்,

'கற்கப் படுவோர் படாதோர் என்றா
என இரு வகையர் ஈவோர் என்ப.

என்ப ஆதலின்.

ஈவோர் எனப்படும் ஆசிரியர் மாணாக்கன் அணுகிக் கற்றற்கு உரிய தகுதியுடையோரும், அத்தகுதி இல்லா தோரும் என இருவகைப்படுவர் என்று கூறுவர் சான்றோர். அவ்விரு திறத்தாரையும்

குலன்அருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல்உரை ஆசிரி யன்னே. நன்–26

எனவும்,

தான் பிறந்த குலத்திற்கேற்ற நலன், அருளு டைமை, தன்செயல் தெய்வத்திற்கு உகந்ததா என்று நோக்கி நன்னெறியிற் படுதற்கு ஆகும் தெய்வ நம்பிக்கை, பெருந்தன்மை, பலகலைகளையும் பயின்று தெளிந்த அறிவு, கற்றதை மாணாக்கன் உளம்கொள எடுத்து உரைக்கும் ஆற்றல், நிலம் மலை தராசுக்கோல் மலர் என்பனவற்றைப் போன்ற மாண்பு, உலகியலை உணர்ந்து ஏற்ப நடக்கும் அறிவு, நாண் ஒப்புரவு கண் ணோட்டம் வாய்மை முதலிய உயரிய குணங்கள் ஆகி யவை தன்கண் அமையப்பெற்றவனே இலக்கண நூலைப் பாடஞ் சொல்லுதற்கு தகுதியுடைய ஆசிரியன் ஆவான்.

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி அளவில் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

எனவும், நன்-27

தன்னகத்தே ஆழத்தே பொதிந்துள்ள பொருள்களைப் பிறர் அறிதற்கு இயலாத பெருமையும், தனக்கே இயல்பாக உள்ள அணுச்செறிந்திருத்தலாகிய அழுத்தமும், அகழ்வாரையும் தாங்கும் பொறுமையும், தக்க பருவத்தில் தன்னை யணுகிச் செய்யப்படும் முயற்சிக்கு ஏற்பப் பயன் கொடுத்தலும் நிலத்தின் மாண்புகளாம். நிலம்போல, மாணாக்கன் தன் அறிவு கொண்டு காண இயலாத பல செய்திகளை உள்ளடக்கியுள்ள அறிவின் பெருமையும், வறுமையிலும் செம்மை குறையாமைக்கும் காரணமாகிய மனத்திண்மையும், மாணாக்கன் அறிவின் திரிபால் தவறு இழைத்தானாயினும் அவனைப் பொறுத்தற்காம் பொறுமையும், மாணாக்கன் எடுத்துக் கொள்ளும் முயற்சிக்கு ஏற்ப அவனுக்கு அறிவு ஆக்கம் தருதலும் ஆசிரியனுக்கு அமைதல் வேண்டும் என்பது.

அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே

எனவும், நன்-28

பிறரால் எளிதில் அளந்து அறிதல் இயலாத பரப்பும் உள்ளடக்கிய செல்வமும், யாரும் அசைக்க முடியாத உறுதியும் சேட்புலத்தோருக்கும் காட்சி வழங்கும் தோற்றமும், ஏனைய முல்லை மருதம் நெய்தல் ஆகிய நிலங்களில் வற்கடம் உற்ற காலத்திலும் தான் பிறருக்குத் தன் வளங்களை வழங்கும் வள்ளன்மையும் மலைக்கு உரிய மாண்புகளாம். அம்மலை போல, ஆசிரியன், பொதுமக்கள் அளந்து வரையறை செய்தல் இயலாத பண்புச் சிறப்பும், கல்விப் பொருளும், பிறரால் வாதிட்டு வெல்லுதற்கு இயலாத அசைக்கமுடியாத அறிவு நிலையும், தன்பெயர் சேட்புலத்தோரானும் அறியப்படுதற்கு ஏதுவாகிய புகழின் தோற்றமும் உடையவனாய், உலகமே மிடியான் வறுமையுற்ற

வழியும், தான் கொண்டுள்ள அறிவுச் செல்வத்தைப் பிறருக்கு வழங்கும் வள்ளன்மையும் உடையனாதல் வேண்டும் என்றவாறு.

ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே நன்-29

எனவும்,

தான் சமனாய் நின்று பின் தன்கண் வைக்கப்படும் பொருளின் நிறையை ஐயமின்றி உணர்த்துவது தராசுக்கோலின் இயற்கையாம். அதுபோல, ஆசிரியன், எஞ்ஞான்றும் வாரம் பட்டாதல் தீரக்காய்ந்தாதல் தன் மாணாக்கருள் ஒருவர் பக்கம் சாராது, தன்மேதக்க அறிவு கொண்டு அவர் தகுதியை உள்ளவாறு பிறருக்குத் தெரிவிக்கும் பண்பு உடையனாதல் வேண்டும் என்பது.

மங்கல மாகி இன்றியமை யாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழிமுன் முகமலர்வு உடையது பூவே நன்-30

எனவும் ஓதிய இவற்றானும்,

பூவானது மங்கலப்பொருளாகி நற்கருமங்களுக்கு இன்றியமையாததாய் எல்லோரும் தன்னைத் தலையில் சூடிக்கொள்ளும் தகுதியதாய், உரிய நேரத்தில் நெகிழ்ந்து மலரும் இயல்பிற்று. அதுபோல, ஆசிரியன், ஊருக்கே மங்கலமானவனாய், நற்செயல் நிகழும் இடங்களிலெல்லாம் இடம்பெறுபவனாய், எல்லோராலும் போற்றப்படுபவனாய், மாணாக்கனுக்கு முக மலர்ச்சி யோடு மனம் நெகிழ்ந்து பாடம் சொல்லுபவனாய் அமைதல் வேண்டும் என்பது.

இனி ஆசிரியரைப்பற்றி உரையாசிரியர்

மலைநிலம பூவே துலாக்கோல் என்றின்னர்
உலைவில் உணர்வுடை யோர்

என்று குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் இதனொடு,

மலையே,
அளக்க லாகாப் பெருமையும அருமையும்
அருங்கலம் உடைமையும் ஏறற்கு அருமையும
பொருந்தக் கூறுப பொச்சாப் பின்றி,
நிலத்தின் இயல்பே நினைக்கும் காலைப்
பொறையுடை மையொடு செய்பாங்கு அமைந்தபின்
விளைதல் வண்மையும் போய்ச்சார்ந் தோரே.
இடுதலும் எடுத்தலும் இன்னணம் ஆக
இயையக் கூறுப இயல்புஉணர்ந் தோரே.
பூவினது இயல்பே பொருந்தக் கூறின்
மங்கல மாதலும் நாற்றம் உடைமையும்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு ஞெகிழ்தலும்
கண்டோர் உவத்தலும் விழையப் படுதலும்
உவமத்து இயல்பின் உணரக் காட்டுப,
துலாக்கோல் இயல்பே தூக்குங் காலை
மிகினும் குறையினும் நில்லா தாகலும்
ஐயம் தீர்த்தலும் நடுவு நிலைமையொடு
எய்தக் கூறுப இயல்புஉணர்ந் தோரே

என நான்கும் கண்டுகொள்க என்பர்.

துலாக்கோலினை நன்னூலார் விடுத்துத் தராசுக் கோலினைக் கொண்டுள்ளார். இவ்வாசிரியரும் அவர் உரைத்ததே உரைத்தார். தராசுக்கோல் நிறுத்தல கருவியாகத்தான் இருந்துவைத்தும், படிக்கல் முதலிய பிற கருவிகள் இன்றி நிறுத்தல் செய்யாது ஆதலின், துலாக்கோலே தக்க உவமமாகும் என்பார் சண்முகனார்; ''துலாக்கோல் என்பது நூறுபலத்தளவு தன் நாவின்கண் உள்ள வரையான் உணர்த்தும் சிறப்புடைய நிறுத்தல் கருவியை; துலாம் என்பது நூறுபலம். அஃது ஆகு பெயரான் அதனை உணர்த்தும் வரையினை உணர்த்திற்று'' என்றும் விளக்கங் கூறுவர்.

மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆ சிரியரா குதலே. நன்-31

எனவும்,

ஆசிரியருக்கு ஓதப்பட்ட நற்குணம் அமையப்பெறா மையொடு, ஆசிரியருக்கு இருத்தல் ஆகா இழிந்த குணங்களைத் தம் இயல்பிலேயே பெற்றிருத்தலும், பொறாமை பேராசை வஞ்சனை பிறரை அஞ்சுவித்தல் ஆகிய தீப்பண்புகளும், கழல் பெய்குடம் மடற்பனை பருத்திக்குண்டிகை முடத்தெங்கு என்பனவற்றை ஒத்த மாறுபட்ட மனக்கருத்தும் பெற்றிருத்தலும் ஆகிய நிலையை உடையோர் ஆசிரியர் ஆதற்குத் தகுதி உடையர் அல்லர் என்றவாறு.

பெய்த முறையன்றிப் பிறழ உடன்தரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே. நன்-32

எனவும்,

தன்னிடம் கழற்சிக்காய் பெய்யப்பட்ட முறைக்கு நேர்மாறாகத் தன்னிடத்திலிருந்து வெளிப்படுக்கும் போது வெளிவிடும் செயல் கழல்பெய் குடத்தின் சிறப் பாம். அதுபோல, தான் முறையாகக் கற்றனவற்றைக் கற்பிக்கும்போது, அடியோடு முறைமாற்றிக் கற்பிக்கும் செயல் ஆசிரியர் ஆதற்குத் தகுதியற்றவர் இயல்பாம்.

தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.

நன்-33

மடல்மிக்க பனைமரம், தானே காயினை வழங்குவ தல்லது தன்மீது பிறர் ஏறிப் பறித்துக்கொள்ள

வாய்ப்பினை அளிக்காது, அதுபோல, தீய ஆசிரியன் தானே மனம் விரும்பிப் பாடம் சொல்லுவனேயன்றிப் பிறர் தன்னை வேண்டிக் கேட்ட அளவில் பாடஞ் சொல்லும் இயல்பினைக் கொள்ளான் என்பது.

அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு
எளிது ஈவில்லது பருத்திக் குண்டிகை. நன்-34

பருத்தியடைக்கப்பட்ட குடுக்கை, தன்னுள் பருத்தி அடைக்கப்பட்ட காலத்தும் மிக்க முயற்சியோடு சிறிது சிறிதாக அடைக்கப்பட்டு, தன்னிடத்திலிருந்து பருத்தியை வெளியேற்றுங் காலத்தும் சிறிதுசிறிதாகவே வெளிவிடும் இயல்பினது. அதுபோல, தீய ஆசிரியன் தான் கற்ற காலத்தும் தன் ஆசிரியருக்குத் தான்கொண்ட சிறுபயனுக்காக மிக்க முயற்சிச் செலவை ஏற்படுத்தி, தான் பாடஞ் சொல்லுங் காலத்தும் மாணாக்கன் மிகுதியும் கல்விப்பயன் கொள்ளும் தகுதியுடையவன் ஆயினும், அவன் நேரத்தை வீணாக்கி அவனுக்குச் சிறிது சிறிதாகவே கற்பிக்கும் இயல்பினன் ஆவான் என்பது.

பல்வகை உதவி வழிபடு பண்பின்
நல்லோரொழித் தல்லோர்க்கு அளிக்கும்முடத் தெங்கே.
நன்-35

எனவும் ஓதிய இவற்றானும் முறையே காண்க.

வளைந்த தென்னைமரம், தனக்கு நீர் ஊற்றல் எருப்பெய்தல் முதலிய நலன் பலவும் நல்குபவருக்குப் பயன்தாராது, ஒரு தொடர்பும் அற்ற பிறருக்கே பயன் படும். அதுபோல, தனக்குப் பொருளானும் பணிவிடையானும் பயன்படும் மாணாக்கனை விடுத்து, தன்னொடு முன் தொடர்பே ஏதும் இல்லாத அயலவனுக்குத் தன் கல்விப்பயனைத் தரும் இயல்பினன் தீ ஆசிரியன் என்பது.

நன்னூலாரைப் பின்பற்றியே இவ்வாசிரியர், ஆசிரியர் அல்லாதார் இயல்பினைக் குறிப்பிட்டுள்ளார். இனி, உரையாசிரியர், கற்கப்படாதோருக்குக் 'கழற் பெய்குடமே மடற்பனை முடத்தெங்கு குண்டிகைப் பருத்தியோடு இவையென மொழிப' என நான்கு உவமங்கள் கூறியுள்ளார்.

நச்சினார்க்கினியர் இவற்றிற்கு விளக்கமும் தந்துள்ளார்:

கழற்பெய் குடமாவது கொள்வோன் உணர்வு சிறிது ஆயினும், தான் கற்றது எல்லாம் ஒருங்கு உரைத்தல்;

மடற்பனை என்பது பிறரால் கிட்டுதற்கு அரியதாகி இனிதாகிய பயன்களைக் கொண்டிருத்தல்; முடத்தெங்கு என்பது ஒருவர் நீர்வார்க்கப் பிறருக்குப் பயன்படுவது போல, ஒருவர் வழிபடப் பிறருக்கு உரைத்தல். குண்டிகைப் பருத்தி என்பது சொரியினும் வீழாது சிறிது சிறிதாக வாங்கக் கொடுக்குமதுபோல, கொள்வோன் உணர்வு பெரிதாயினும் சிறிதுசிறிதாகக் கூறுதல் —என்றார்.

சண்முகனார் இவற்றிற்கு வேறுபொருள் கண்டார். அவர் உரைத்துள்ள செய்திச் சுருக்கம் பின்வருமாறு:

கழற்பெய் குடமாவது விளையாட்டுச் சிறாஅர் கழற்சிக் காயைப் பெய்துவைக்கும் கலசத்தை உணர்த் திற்று; வழக்கு மிகுதிபற்றி. மடற்பனை என்பது, மடலென வேறு காட்டாமல் அம்மடலின்கண் காய்த்தலை யுடைய ஏனைப் பெண்பனையாய இனத்தைச் சுட்டி, அதனினின்றும் விலக்கிக் காய்த்தல் இன்மையின் வேறாகக் காணப்படும் மடலுடைய ஆண்பனையை உணர்த்திற்று; மடல் என்பது பாளைக்குப் பெயரன்றி ஓலைக்குப் பெயர் ஆகாமையின், நன்னூலார் முதலாயி னார் கூறுவதுபோல ஓலையை யடக்கிய மட்டையைக் குறிப்பதன்று.

முடத்தெங்கு என்பது ஏனைய தெங்கின் நெருக்கத்தினால் ஞாயிற்றின் ஒளிபடாமல், காய்த்தற்குக் காரணமாகிய பாளைஏதுமின்றி ஓலையேயுடைய தென்னையை உணர்த்திற்று. நன்னூலார் முதலாயினார் கூறுவது போலப் பொருள் கொள்வதற்குக் 'கூனித்தெங்கு' என்ற தொடர் பயன்படுமேயன்றி முடத்தெங்கு என்ற தொடர் பயன்படாது. இனிக் குண்டிகைப் பருத்தி என்பது நீர்க்கரகத்துள் பெய்து வைத்த பருத்திக் காயினை உணர்த்திற்று; என்னை? விளையாடற் பொருட்டுக் கழற்காயினையும் புன்னை கமுகு முதலியவற்றின் காயினையும் அவைபோல்வன பிறவற்றையும் கொண்டாற்போலப் பருத்திக் காயினையும் சிறாஅர் கோடல் வழக்கு ஆதலானும், அக்காய் வெளிப்புறம் கிடப்பின் காற்றான் உலர்ந்தாயினும் வெயிலால் காய்ந்தாயினும் வெடித்தலின் விளையாடற்கு ஆகாமையும், நீருள் கிடப்பின் சின்னாட்களுக்குப் பயன்படலும் உடைமையின், நீர் வறிது அறியாக் கரகம் என்னும் குண்டிகையுள் அவர் பெய்து வைத்தல் வழக்காதலானும் என்பது. நன்னூலார் முதலாயினார் குண்டிகைப் பருத்தி என்பதனைப் பருத்திக் குண்டிகை என மாற்றி, பஞ்சு அடைக்கப்பட்டதாகிய மிகச் சிறிய வாயினை உடைய நீர் அற்ற குடுக்கை என்று பொருள் கொண்டுள்ளனர். குண்டிகை என்பது குடுக்கையை உணர்த்தாது வாயகன்ற கரகத்தையே உணர்த்தலானும், குண்டிகைப்பருத்தி என்பது தொடரன்றிப் பருத்திக் குண்டிகை என்பது தொடராக மாற்றி நூற்பாவுள் அமைக்கப்படாமையானும், குடுக்கையுள் அடைக்கப்படுவது இலவம் பஞ்சேயன்றிப் பருத்திப் பஞ்சு அன்மையானும் அவர்கள் கூறுவது பொருந்துமாறில்லை.

இனி, மாறன் அலங்கார நூலாசிரியர் கற்கப்படுவோர் கற்கப்படாதோர் பற்றிக் கூறுவனவற்றை நோக்குவாம்.

புரப்போன் மரபினைப் புகலுங் காலை
குலனும் குணனும் குரவரைப் பேணும்
நலனும் கடவுளை நயத்தலும் கருணையும்
புலன்அவித்து ஒழுகலும் பொறையும் தோற்றமும்
உலகியல் அறிந்துஉயிர்க்கு உறுதி கோடலும்
கற்றவர் காமுற வாழ்தலும் காந்தியும்
மதிநிகர் கல்வியும் கதிர்நிகர் வனவாம்
வாய்மையும் தூய்மையும் வழுவுதல் இன்றாய்
வாடாக் சற்பகம் மணம்மலி பொற்பூ
கோடாச் செங்கோல் கொற்றவன் நிதியறை
வான்சுவை மருந்து ஆயிரவாய்ச் சேடனின்
கற்றன யாவும் கழகத்து உதவும்
பெற்றியன் மறந்தும் பிறன்பழி கூறான்
சதிர்உடை யேன்எனத் தற்புகழ்ந்து அறியான்
முதுமொழி இலக்கண இலக்கியம் முறையே
புதுமொழி புணர்க்கும் புலமை யோனே. மாறன்-29

ஆய்ந்து அமைவு உடைய கல்வியும் கவியும்
வாய்ந்த தற்குஉவமை மணம்மலி பொற்பூ. 30

அறன்தரு பலபொருள் ஆன்று அமைவு
உடைமையும்
பிறர்நிதி யறையின் பெருகிய செல்வமும்
அளப்பருந் தன்மையும் அவரவர் தாம்தினம்
கொளக்குறைவு இல்லது கொற்றவன் நிதியறை.31

உண்ணத் தெவிட்டா உரிசையும் அஃகா
வண்மையும் தண்மையும் பயப்பது மருந்தே. 32

பாயிரம் தோய்ந்து பருப்பொருள் இன்றி
நுண்பொருள் பயக்கும் நூல்பல ஆங்காங்கு
உலப்பில் மாணாக்கர்க்கு ஓர்பகல் மயர்வுஅறச்
செலச்சொலற்கு உவமை ஆயிரவாய்ச் சேடன் 33

மடிஅழுக் காறு வஞ்சகம் வெகுளி
உணரா ததைஉணர்ந் ததின்மேற் கோடல்
தன்னைப் புகழ்வதின் தான்பிறர் இகழ்தல்
கற்றவர் புனைந்த கவியினுள் சார்ந்த
குற்றம் ஒன்று உளதேல் குணன் அமைத்து
அறியான்
செவ்வியின் மலர்ந்தும் நாறாச் செம்மலர்
வெவ்விட அரவுதன் வாய்க்கொள் விழுமணி
பொதுமகள் பால்கொளப் பொருந்திய போகம்
சிறியவன் தன்பால் செறிதரு பொருளெனும்
கல்வியன் ஆரிய னாங்கடன் இலனே 34

பல்கால் சொல்லியும் தெற்றெனம் பயன்கொளல்
நல்கா வாக்கது நாறா மலரே. 35

உகுமெனின் கோடல் அல்லது உவந்துகொள்
பகுதியின் றாகும் பாம்பின்வாய் மணியே. 36

பொருள்அள வையின்வரும் பொதுமகள்
நலனே. 37

அறத்தமர் பசித்துஉழந்து அலமர உலகில்
பிறர்க்குஉள எதிர்செலும் பேதைகைப்
பொருளே. 38

இனி, ஈதல் இயற்கை

ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத்து அமைத்துப்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
விரையான் வெகுளான் விரும்பிமுகம் மலர்ந்து

கொள்வோன் கொள்வகை அறிந்துஅவன்
உளங்கொளக்
கோட்டம்இல் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப.

எனவும்,

பாடஞ் சொல்லும் முறைமையாவது, பாடம் சொல்லுதற்கு ஏற்ற நேரத்தையும் பாடஞ் சொல்லு வதற்கு அமைந்த இடத்தையும் தூயனவாக நோக்கி, சிறந்த திசைகளாகிய கிழக்கும் வடக்கும் நோக்கி அமர்ந்து, தன் வழிபடு கடவுளைப் பாடம் தொடங்கும் முன் மனத்தால் துணிவு தோன்ற வாழ்த்தி, தான் பாடஞ் சொல்ல வேண்டிய செய்திகளை முன்பே நிரல்பட மனத்தில் அமைத்துக்கொண்டு, பொழிப்புரை அகல வுரை நுட்பவுரை எச்சவுரை எனப்பட்ட பல உரை களையும் பலகால் பயின்ற நாவினை உடைய ஆசிரியன், விரைவாகப் பாடஞ் சொல்லுதல், இடையிடையே மாணாக்கரை வெகுளுதல் என்பன தன்கண் அமையப் பெறாது, பாடஞ் சொல்லுதலில் அகத்தே விருப்பங் கொண்டு, அவ்விருப்பத்தை முகமலர்ச்சியான் வெளி யிட்டு, கற்கும் மாணாக்கனுடைய அறிவுத் திறத்தை யறிந்து, அவன் உள்ளத்தில் பதியுமாறு, வேற்றுச் செய்திகளில் திரிதல் இல்லாத மனத்தொடு நூலினைப் பாடம் சொல்லுதலாம்.

இதுவே உரையென்று யாவரும் வியப்பப்
பொழிப்புஅக லத்தொடு நுட்பம் எச்சம்
விழுப்பொருள் தோன்ற விரித்துஇனிது
உரைத்தான்

(திருக். பரி. உரைப்பாயிரம்)

பொழிப்பகலம் நுட்பம்நூல் எச்சம்இந் நான்கின்
கொழித்தகலம் காட்டாதார் சொற்கள்—பழிப்பில்

நிரை ஆமா சேக்கும் நெடுங்குன்ற நாட
உரை ஆமோ நூலிற்கு நன்கு.

பொழிப்பு—திரண்ட பொருளைச் சொல்லுதலும்
அகலம்—விரித்து உரைத்தலும்
நுட்பம்—கடாவும் விடையுமாகச் சொல்லுதலும்
நூல் எச்சம்—இலேசானே பொருளை உரைத்தலும்
எச்ச உம்மைகளான் எஞ்சிய பொருளை
உரைத்தலும்
என்பது—பதுமனார் உரை.

பொழிப்பினுள் பிண்டப்பொழிப்பு,
பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
'பிண்ட மாகக் கொண்டு உரைப் பதுவே'
வார்த்திகப் பொழிப்பு,

'பாடம் கண்ணழிவு உதாரணம் என்றிவை
நாடின் திரிபில ஆருதல் பொழிப்பே',

என்பதனானும் கொள்ளப்படும் என்பார் சிவஞான முனிவர் தம் மாபாடியத்துள்.

'பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே.'

எனவும்,

நூற்பாக்களுக்குப் பொழிப்புரை அகலவுரை நுட்ப உரை எச்சவுரை என்ற நால்வகை உரைகள் உரைக்கப்படும். அவற்றுள்,

'பாடம் கண்ணழிவு உதாரணம் என்றிவை
நாடில் திரிபில ஆகுதல் பொழிப்பே',

எனவும்,

பொழிப்புரையாவது மூலபாடம், பதப்பொருள் உதாரணம் என்பனவற்றைத் திரிபின்றி விளக்கும் உரையாம்.

'தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினும்
நுன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம்
பன்னிய அகலம் என்மனார் புலவர்',

எனவும்,

நூற்பாப் பற்றிப் பல வினாக்களை எழுப்பித் தான் பாடம் சொல்லும் நூலினைக்கொண்டும், அதனை ஒத்தனவாகவும் மிக்கனவாகவும் அமைந்த நூல்களை மேற்கோள் காட்டியும் விடைசொல்லி விளக்கும் உரை அகலவுரையாம்.

'ஏதுவின் ஆங்கவை துடைத்தல் நுட்பம்'.

எனவும்,

காரணம் காட்டிப் போலிகளை விலக்கும் உரைநுட்ப உரையாம்.

'துடைத்துக் கொள்பொருள் எச்சம் என்ப'
எனவும் ஓதிய இவற்றான் அறிக'.

போலிகளை நீக்கி இறுதியில் குறிப்பிடப்படும் மெய் உரை எச்சவுரையாம்.

இனி, ஈதல் இயல்பு பற்றி உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும்,

'ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சம்எனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியின் பொருந்தும் ஓரையின்

திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்து
அவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்'.

என்று விளக்கியுள்ளனர்.

நன்னூலார் இவ்வாசிரியர் ஈதல் இயற்கையைப் பற்றிக் கூறிய நூற்பாவினையே 'பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப் பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்' என்ற அடிகள் நீங்கலாகக் கொண்டுள்ளார்.

நூல் நுவல்வதன் இயல்பு பற்றி மாறன் அலங்கார ஆசிரியர் விரிவாகக் கூறும் அரிய நூற்பாவாவது'

'புரத்தலின் இயல்பே புகலுங் காலை
அதற்குஅமை யாண்டின் மாணாக்கனை எதிருபு
கடவுளை வாழ்த்திக் காலமும் இடனும்
திடனுறக் குறித்துமங் கலத்திசை நோக்கி
இருந்துஉனக்கு இவைஇயல்பு என்னஉள் ளுறுத்தித்
திருந்திய சிந்தையின் செம்முகம் மலர்ந்து
நுவலத் தகும்நூல் நுதலிய திறத்தினைத்
தவலரும் சிறப்பின் தான்முதல் கொளுத்திப்
பொழிப்புஆ தியவாய்ப் புகன்ற வாய்மையின்
விடத்தகு வெகுளியின் விரைவுஇல னாகி
நாளும் நாளும் நவில்தொறும் நவில்தொறும்
அஞ்சிறைப் பறவையின் அணைத்துஉறத் தழுவியும்
வெஞ்சிறைப் படுபுனல் மீன்போல் நோக்கியும்
அகன்றனன் ஆம்எனின் ஆமைபோன்று உன்னியும்
புனிற்றா என அவன் புலந்தனில் முன்னியும்
கொளத்தரும் உணர்வின் குறிஅறிந் தனனாத்
தான்எனல் ஆக்கிய தன்மைகண்டு உலகம்
வேட்டை வாளியின் விழுமியன் எனமனக்
கோட்டம்ஒன்று இன்றிக் கொடுக்குமது என்ப'.

மாறன்-39

என்பதாகும்.

நன்னூலார் முதலியோர் உவமவாயிலாக ஆசிரியர் பற்றிச் சொற்றன பல பொருந்தா எனக் கொள்ளும் சண்முகனார், ஆசிரியர் பற்றி உரைப்பாட்டுக்களாக ஆட்டாண்டு அமைத்துள்ளன, சிறந்த பல செய்திகளை உள்ளடக்கிய சிறப்பின ஆதலின், அவையும், ஈவோன் தன்மை ஈதல் இயற்கை என்பனவற்றை ஆசற உணரப் பயன்படும் என்ற கருத்தான் ஈண்டுக் குறிப்பிடுவாம்.

ஆசிரியன் மாணாக்கனுக்குப் பாடஞ் சொல்லுதற்கு முதற்காரணமாக அவனிடம் இருக்கவேண்டுவன,

'உடைமை இரக்கப் பாடு துணிவே
தடையின் மையென நடைபெறு நான்கும்
ஈவோன் தொழில்முதல் காரண வினையே'.

என்பதனால் உணரப்படும்.

ஆசிரியன் மாணாக்கனுக்குப் பாடஞ்சொல்லுதற்குத் துணைவினையாவன,

'கொள்வோன் உணரப் பன்னெறி குறித்தல்
அவன்உளத்து அச்சம் சிவணச்செய் யாமை
பன்னாட்கு அன்றி அந்நாட்கு அளத்தல்
ஐயம் திரிபே அறியாமை என்னும்
முக்குற் றத்துள் புக்குஒளி யாமல்
அவன்உளம் கொள்ள அதனைக் காட்டல்
என நான்கு என்ப ஈதல் தொழிற்கண்
ஈவோன் பற்றி இயலும் துணைவினை'.

என்பதனான் அறியப்படும்.

ஆசிரியன் அத்துணைவினைகளைப்
பயன்படுத்துமாறு,

'தொகையினும் வகையினும் இத்துணைத்து என்னப்
பொருண்மை காட்டலும் புகன்றன தமக்குள்

வேறுபா டாதல் விளங்கக் காட்டலும்
பொறுமை சிதையாமல் பல்வகைத்து ஆக்கலும்
சிறப்பும் தனித்தனி நிறுத்துக் காட்டலும்
என நான்கு என்ப ஈதல் தொழிற்கண்
செயப்படு பொருளின் திகழும் துணைவினை'.

என்பதனான் அறியப்படும்.

ஆசிரியன் தானும் மாணாக்கனும் மனச்சஞ்சலமும் உடற்சஞ்சலமும் இன்றி இருத்தல் வேண்டும் என்பது.

'ஈவோன் கொள்வோற் றன்கீழ் இருத்தல்
அவனை மேவலின் அசைத்தல் இன்மை
அவன்தா னாகவும் அசையச்செய் யாமை
ஈவோன் தானும் அசைதல் இன்மை
எனநான்கு என்ப ஈதல் தொழிற்கண்
கொள்வோன் பற்றிக் குறிக்கும் துணைவினை'.

என்பதனால் அறியப்படும்.

ஆசிரியனுக்கு இன்றியமையாத குணன்களும் புறத் தொழில்களும்,

'அன்பீனும் ஆர்வமும் அன்னது ஈனும்
நண்பும் ஆர்வலர் துன்பம் கண்டுழிப்
புன்கணீர் பொழிந்து புறந்தோன்று தன்மையும்
மிகுதிக் கண்ணே மேற்சென்று இடித்தலும்
கல்வி அளிக்கும் நல்வினை ஆசாற்கு
இன்றி யமையாது இயையுங் குணனே'.

எனவும்,

'பகைவர் ஆயினும் தகைபெறு பருவத்து
இடனுறக் கொள்ளின் உடன்அவர்க்கு அளித்தலும்
நட்டார் ஆயினும் பெட்புறு பருவம்

உற்றிலர் ஆயின் வற்புறுத் தாமையும்
செயிர்அறப் பழகினும் உயிரெனப் போற்றார்க்குச்
சின்னப் பொருளும் முன்னிக் கொடாமல்
ஒருநாள் வரினும் மறவா தார்க்குப்
பெரிய பொருளும் வரிசையின் அளித்தலும்
தன்னடி பணியார் மன்னவர் ஆயினும்
அன்னவர்க்கு அளியாது இன்னல்மிக் குடைய
வறியவ ராயினும் உறுபணி விரும்பின்
நெறியின் அவர்தாம் உறஅளித் தலும்என
ஆவகை நான்கும் தாவில் ஆசாற்குக்
கோடல் பற்றிக் குறிக்கும் புறத்தொழில்'.

எனவும் ஓதியவற்றால் உணரப்படும்.

இனி, ஆசிரியன் மாணாக்கனைப் பற்றிக் குறிக்கும் புறத்தொழில்கள்,

'கொள்வோன் மருங்கின் தான்செல் லாமல்
ஈவோன் அவனைத் தன்மருங்கு உய்த்தலும்
அவன்மயங் காமல் அரும்பொருள் அளித்தலும்
கேட்டன நெஞ்சம் நாட்டி உசாவத்
தன்பால் அவனை அன்பால் வைத்தலும்
அவனுடன் அவ்வினை யாளர் பலரும்
பயில்வகை ஆங்கே செயலும் என்ன
ஆவகை நான்கும் தாவில் ஆசாற்குக்
கொள்வோர்ப் பற்றிக் குறிக்கும் புறத்தொழில்'.

என்பதனால் அறியப்படும்.

ஆசிரியன் பாடஞ் சொல்லுதற்கு அமரவேண்டிய இடன்,

'ஈவோன் இருக்கை இடனும் அளித்தல்
மேவல் இடனும் நிலையின ஆதலும்
அவன்முகம் கொள்வோர்க்கு அமைவ தாகலும்
அவர்முகம் அவனுக்கு அமைவது ஆகலும்
ஆவகை நான்கும் மேவியது என்ப
ஈவோற் பற்றி இசையும் இடனே'.

என்பதனால் உணரப்படும்.

ஆசிரியன் மாணாக்கரை அமர்த்தவேண்டும் இடன்,

'கொள்வோர் தம்மை வரையா இயல்பும்
அல்லா தாரை வரையும் இயல்பும்
கொள்வோர் இணங்கிக் கூட்டி வரினும்
அல்லா தார்வந்து அணுகா இயல்பும்
கொள்வோர் இணங்காது தள்ளினர் ஆயினும்
அவருள் யாரையும் அகற்றா இயல்பும்என
ஆவகை நான்கும் மேவியது என்ப
கொள்வோர்க் குறித்துக் கொள்ளும் இடனே'.

என்பதனால் உணரப்படும்.

ஆசிரியன் மாணாக்கர் ஆகிய இருவருக்கும் பொதுவாக அமையவேண்டிய இடன்,

'தூய்மைநற் காற்றுச் சுடர்வெம்மை யின்மை
மரச்செறிவு இன்ன உறப்பெறு தன்மையும்
நான்குபக் கத்தும் ஓங்கிய அடைப்பும்
ஈவோன் கொள்வோன் இருவரும் போதல்
வருதற்கு வேறு வழியிரண்டு ஆதல்
நூலும் கொள் வோரும் வாலிதின் இருத்தற்கு
இடன்இரண் டாதல் கடன்என உடைமையும்
வெயில்மழை தடுப்ப விதானம் தாங்கி
அடுத்துஊன்று கால்பல தொடுத்து நிற்றலும்
ஆவகை நான்கும் மேவியது என்ப
பொதுமை குறித்துப் புகலும் இடனே'.

என்பதனால் உணரப்படும்.

இனி, வாலிதின் நோக்கப்படும் காலம்பற்றிய செய்தி

'பிரிவின் வரையும் பெரும் பொழுது வரையும்
சிறுபொழுது வரைவும் தெள்ளியோர் விலக்கலின்
வரைவும் என்ன உரைபெறு நான்கும்
காலம் உடைத்தெனல் மேலையோர் துணிபே

என்ற நூற்பாவானும், அக்கால வரையறையாவது 'வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது.' என்பதூ

உம், பிறவும் குறித்துக்கொள்வோனும், வேள்வியும் பிறவும் குறித்து ஈவோனும், நோய் முதலிய குறித்து இருவரும் பிரிதலின் பாடஞ் சொல்லுதல் ஒழிதற்பால தாகிய பிரிவு வரைவும், வேனிலும் நண்பகலும் முதலாய காலத்துக் கூரியோர் சிந்தையும் கூம்புமாற்றானும், வைகறை ஏற்பாடு யாமம் என்னும் சிறுபொழுதும் நித்த கருமத்திற்கும் உலகியலுக்கும் உறக்கத்திற்கும் இன்றி யமையாது வேண்டப்படலானும் பாடஞ்சொல்லுதல் ஒழிதற்பாலவாய பெரும்பொழுது வரைவும் சிறுபொழுது வரைவும், பாடஞ்சொல்லுதற்கு உரிய ஏனைப் பெரும் பொழுது சிறுபொழுதுகளினும் உவா முதலிய காலத்தை நூல் விலக்கலின் பாடஞ் சொல்லுதல் விலக்கற்பாலதாய விலக்குவரைவும் என நால்வகை வரைவுகளையுடைத்து என்ற விளக்கத்தானும் உணரப்படும்.

பாடஞ் சொல்லுதற்கண் ஆசிரியனுக்கு ஊக்கம்தரும் கருவிகள் இவை என்பதனை,

'இயற்கை அருளும் பணியின்மிகும் அருளும்
இன்சொலின் மிகுதல் அயல்புறும் அருளும்
பொருள்பெறு வகையின் விரிவுறும் அருளும்என
நல்கலின் கருவி நால்வகைத்து என்ப'.

என்ற நூற்பா நன்கு இயம்பும்.

நல்லாசிரியன் இன்ன காரணம்பற்றி மாணாக்கருக்குப் பாடஞ் சொல்லாது நீக்குவன் என்பது,

'முயற்சி இன்மையின் வரைவும் காலம்
அன்மையின் வரைவும் அல்லசெயலின் வரைவும்
அறியாமை நாடி அப்பொருள் வரைவும்என
தள்ளா நான்கும் கொள்வோர் வரைவே'.

என்பதனால் உணரப்படும்.

இனி, ஆசிரியன் பாடஞ் சொல்லுதலின் பயன்,

'உயர் நன் மதிப்டும் உவந்தடைந் தாரை
உறுதி உறுத்தலும் உயர்புகழ் நிறுத்தலும்
அறம்பொருள் இன்பம்வீடு அடைதலும் என்னத்
திறன்படு நான்கும் உரன்பட அளித்தற்கு
எய்திய பயன்எனல் மெய்பெறத் தோன்றும்'.

என்பதனால் உணரப்படும். இச்செய்திகள் யாவும் சண்முக விருத்தியில் விளக்கப்பட்டுள்ளன.

இனிக் கொள்வோரும் கற்பிக்கப்படுவோரும் கற்பிக்கப்படாதோரும் என இருவகையர்,

'கற்பிக்கப் படுவோர் படாதோர் என்றா
என இரு வகையர் ஏற்போர் என்ப'.

என்ப ஆகலின்.

அவ்விரு திறத்தாரையும்,

'தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளர் எனஎடுத்து ஓதிய
அறுவகை யவருள் ஒருவ ராகிச்
செவ்விதின் தெரிதல் மெய்யுறக் காண்டல்
உரைபல கேட்டல் உறுபெருங் காதல்
தெய்வத்தின் மதித்தல் திரிபுஒன்று இன்மை
அன்னம் கிளியே நன்னிறம் நெய்யரி
யானை ஆனேறு என்றிவை போறல்
உடையர் ஆகி நடைஅறிந்து ஒழுகுநர்
கற்பிக் கப்படும் கடப்பாட் டாரே'.

எனவும்,

தன்னுடைய மகன், ஆசிரியனுடைய மகன், ஊர்த் தலைவனுடைய மகன், நிறையப் பொருள் கொடுத்துக் கற்றலை வேட்டு வருபவன், வழிபாட்டோடு குற்றேவல் புரிந்து கற்க வருபவன், பாடஞ் சொல்வதைத் தவறாது

விரைய மனங்கொள்ளும் ஆற்றலுடையவன் என்று கூறப்பட்ட அறுதிறத்தவருள் ஒருவராகி, ஆசிரியன் பாடஞ் சொல்லுவனவற்றை நன்கு உணர்தல், மனத்துள் பொருந்துமாறு காண்டல், பல உரைகளையும் பாடங் கேட்டல், ஆசானிடத்தில் மிக்க பேரன்புகோடல், ஆசானைத் தெய்வத்தைப்போல நன்கு மதித்தல், ஆசானைப் பற்றியோ அவன் பாடஞ் சொல்லும் முறை பற்றியோ மனத்தில் திரிந்த கருத்து எதுவும் கொள்ளாமை, அன்னம், கிளி, வெள்ளை நிறம், பன்னாடை, யானை, காளை இவற்றின் பண்பு கோடல் —என்பனவற்றை உடையவராகி, உலக நடையினை யறிந்து நடப்பவரே ஆசிரியரால் பாடம் கற்பிக்கப்படும் தகுதியுடைய மாணாக்கர் ஆவார்.

'பாலும் நீரும் பாற்படப் பிரித்தல்
அன்னத்து இயல்புஎன அறிந்தனர் கொளலே'.

எனவும்,

பாலும் நீரும் கலந்து வைத்தவழி நீரைவிடுத்துப் பாலை மட்டும் கொள்ளும் அன்னம்போல, ஆசிரியன் கூறுவனவற்றில் தேவைப்பட்டனவற்றை மட்டும் உட்கொண்டு தேவையற்றனவற்றை நீக்கி விடுவதற்குரியன் மாணாக்கன் என்பது.

'கிளந்தவா கிளத்தல் கிளியினது இயல்யே',

எனவும்,

ஆசிரியன் கூறியனவற்றை உட்கொண்டு அவன் கூறியாங்குத் தானும் கூறும் ஆற்றலைப் பெறவேண்டிய மாணாக்கனுக்கு கூறியதைத் திருப்பிச் சொல்லும் கிளி உவமமாதல் அறியப்படும்.

'எந்நிறம் தோய்தற்கும் ஏற்பது ஆதல்
நன்னிறத்து இயல்பென நாடினர் கொளலே'.

எனவும்,

வெண்ணிறம் தான் களங்கமற்றுத் தூயதாய் எந் நிறம் தோய்ப்பதற்கும் ஏற்புடைத்தாதல் போல, மாணாக்கனும் நெஞ்சத்தில் மாசு ஏதுமின்றி மனந் தூயனாய், ஆசிரியன் கூறும் பண்புகளையும் செய்தி களையும் திரிபின்றி உட்கொள்ளும் தகுதி உடையவனா தல் வேண்டும் என்பது.

'நல்லவை அகத்திட்டு நவைபுறத்து இடுவது
நெய்யரி மாண்பென நினைதல் வேண்டும்'.

எனவும்,

பன்னாடை தன்மீது பெய்யப்பட்டனவற்றை வடி கட்டி நல்லனவற்றைக் கலத்தின் உட்போக்கி அல்லன வற்றை வெளியே நீக்கிவிடுமாறு தன்மேல் கொள்வது போல, மாணாக்கனும் ஆசிரியர் கூற்றில் தக்கவற்றை உட்கொண்டு, அல்லவற்றைப் புறத்தே உகுத்திடும் பெற்றியன் ஆதல் வேண்டும் என்பது.

'குழுவுபடுஉப் புறந்தருதல் குஞ்சரத்து இயல்பே'.

எனவும்,

தான் மற்றவற்றொடு கூட்டமாகவே வாழ்ந்து தன் இனத்தின் மற்றவற்றைத் தான் காத்து வாழும் யானை யரசன் போல, தன் இனத்தவராகிய மாணாக்கரொடு கூடிவாழ்ந்து அவர்களுக்கு அறிவுத்துறை முதலிய வற்றில் ஏற்ற பெற்றி உதவிவாழ்வதே மாணாக்கனுக்கு ஏற்றது என்றவாறு.

'பிறந்த ஒலியின் பெற்றிஓர்ந்து உணர்தல்
சிறந்த ஆனேற்றின் செய்தி என்ப'.

எனவும், ஓதிய இவற்றானும்,

தன் காதுகளுக்கு எட்டிய ஓசையை உட்கொண்டே அவ்வோசை எழுப்பியவர் யார் என்று உணரும் காளை

போல, ஓசை தன் செவிப்படும் அளவில், அதன்கட்பட்ட பழக்கமுடைமை கொண்டு அவ்வொலி யெழுப்பியவர் ஆசிரியரோ உடன் உறை மாணாக்கரோ பிறரோ என்பதை இடம் பெயரா முன்னரே உணர்ந்து, ஏற்ற பெற்றி செயற்படற்கு உரியன் மாணாக்கன் என்றவாறு.

இனி, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கற்கப் படுவோரைப்பற்றி.

'தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளனொடு இவர்என மொழிப'.

எனவும்,

'அன்னம் கிளியே நன்னிறம் நெய்யரி
யானை ஆனேறு என்றிவை போலக்
கூறிக் கொள்ப குணம்மாண் டோரே'.

எனவும் கூறியுள்ளனர்.

நன்னூலார், மாணாக்கர் ஆதற்கு உரியாளரைப்பற்றி,

'தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே'. நன்-37

எனவும்,

'அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலைஇடை கடைமா ணாக்கர்'. நன்-38

எனவும் கூறியுள்ளார்.

உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் மாணாக்கன் மாண்பு பற்றி,

'செல்வன் தெரிகிற்பான் மெய்ந்நோக்கிக்
காண்கிற்பான்
பல்லுரையும் கேட்பான் மிகப்பெரிதும் காதலான்
தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான்
இவ்வாறு மாண்பும் உடையாற்கு உரைப்பவே
செல்விதின் நூலைத் தெரிந்து'.

என்ற பாடலும் சுட்டியுள்ளனர்.

செல்வன் தெரிதலே மெய்ந்நோக்கிற்கும், மெய்ந் நோக்கிக் காண்டலே பல்லுரை கேட்டற்கும், அக் கேள்வியே காதலுக்கும், அக்காதலே தெய்வத்தைப் போல மதித்தற்கும், அம்மதிப்பே திரிபு இன்மைக்கும் காரணம் ஆதலின், அம்முறையானே அவற்றைக் கூறினார் என்பர் சண்முகனார்.

நன்னிறம் என்பது பாடம் அன்று எனவும், நன்னீரம் என்பதே பாடம் எனவும், அது உவர்நீரை இனம்சுட்டி விலக்கி நல்ல நீரையே குறிப்பது எனவும், அதுவே மாணாக்கனுக்கு ஏற்ற உவமம் எனவும், விரித்துக் கூறுவர். அதனைச் சண்முக விருத்தியுள் காண்க. நன்னூலார் முதல் இடை கடை மாணாக்கர் என மாணாக்கரை மூன்று திறத்தினராகப் பிரித்து உவம வாயிலாக விளக்குவது ஏலாது என்பது குறித்தும் அவர் விளக்கியவற்றைச் சண்முக விருத்தியுள் காண்க.

இனி, மாறன் அலங்கார ஆசிரியர்,

'ஆரியன் திருமகன் ஐயுறல் கடிந்த
கூரிய முதன்மை மாணாக்கன் குலமகன்
தன்மகன் மன்மகன் மந்திரத் தலைவன்
நன்மகன் இருநிதி நனிதமி புரப்போன்
அருத்தியின் வழிபடு பவன்உரை நுழைந்துகொள்
கருத்தினன் இவர்கள் கற்கப்படுவோர்'. மாறன்-40

எனவும்,

'பளிங்குடன் ஓதிமம் பரவை கொண் மூ எனத்
தெளிந்தநுண் ணுணர்வுஉறுந் தெள்ளியோரே'. 41

எனவும்,

'அழுக்கின் றாதல் அடுத்தவை' தனதாக்
கோடல் என்று இரண்டும் பளிங்கின் குணமே'. 42

எனவும்,

'நீர்தெரித்து அமிர்துஉணும் நீர்மையின் ஓதிமம்
ஓர்இரு பான்மைக்கு உவமையது ஆகும்'. 43

எனவும்,

'பகிரதி முதலிய பன்னதி உட்புக
உகுதல்இன் றாய்த்தன் உட்கொளும் உவாவே'. 44

எனவும்,

'படிந்துஉவர் அறுத்துஉணப் படுபுனல் யாண்டும்
படர்ந்துபல் துளியின் பயன்தரும் முகிலே'. 45

எனவும், விளக்கம் தந்துள்ளார்.

'களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்
தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி
படிறன் பொச்சாப்பன் பல்கால் நகுவோன்
மொழிவது உணராதோன் முன்இருந்து காய்வோன்
திருகு மனத்தோன் தீயதே ஓர்ப்போன்
குரங்கெறி விளங்காய் எருமை ஆடே
தோணி அன்ன கோள்நிலை யாளர்
கற்பிக் கப்படாக் கடப்பாட் டோரே'.

எனவும்,

கள் குடித்துக் களிப்பவன், சோம்பேறி, மாண்பு இறந்த மானம் உடையவன், காமுகன், திருடன, பிணியாளன், சிறிதும் பொருள் அற்றவன், பிறரொடு

மனத்தாங்கல் கொள்பவன், நீட்டித்த கோபம் கொள்பவன், உறங்கிக்கொண்டிருப்பவன், கூர்த்தமதி சிறிதும் அற்றவன், நூற்பருமை கண்டு கற்பதற்கு அஞ்சுபவன், அஞ்சத்தக்கனவற்றிற்கு அஞ்சாதவன், தீவினையாளன், பொய் கூறுபவன், மறதி மிகவுடையவன், பலகாலும் வகுப்பில் சிரித்துக் கொண்டிருப்பவன், பாடஞ் சொல்லுவதை உணராதவன், ஆசிரியன் முன்னிருந்தே பிறரை வெகுண்டுகொண்டிருப்பவன், மனக்கோட்டமுடையவன், தீயனவற்றையே நினைத்துச் செய்வோன், குரங்கு எறி விளங்காய், எருமை, ஆடு, தோணி என்ற நிலையுடையவன் மாணாக்கன் ஆதற்குத் தகுதியுடையவன் அல்லன் ஆவான்.

'கல்லால் எறிந்து கருதுபயன் கொள்வோன்
குரங்கெறி விளங்காய் ஆம்எனக் கூறுவர்'.

எனவும்,

'விலங்கி வீழ்ந்து வெண்ணீர் உழக்கிக்
கலங்கல் செய்துஅருந்தல் காரா மேற்றே'.

எனவும்,

'ஒன்றிடை ஆர உறினும் குளகு
சென்றுசென்று அருந்தல் யாட்டின் சீரே'.

எனவும்,

'நீரிடை அன்றி நிலத்திடை ஓடாச்
சீருடை யதுவே தோணி என்ப'.

எனவும் ஓதிய இவற்றானும் முறையே காண்க.

விளமரத்திலிருக்கும் குரங்கின்மேல் கல்லெடுத்தோச்சி அது தன்மீது எறியப் பறித்துவீசும் விளங்காயைக் கொண்டு தன் எண்ணம் ஈடேறியதுகண்டு மகிழ்பவன் போல, ஆசிரியன் அறிவுத்திறத்தில் குறைகூறி, அவன்

தன் அறிவு புலப்படும் வகையான் கூறும் அருங்கருத்துக் களைத் தான் விரும்பியாங்குக் கொள்வோனும்,

'மற்கட விலங்குதன்னால் வளங்கெழு
விளவின்மேவும்
நற்கனி கொள்ளவேண்டி நயந்துகல் எறிவார்போல'

என்ற திருவாதவூர்ப்புராண அடிகளை நோக்குக.

தெளிந்த நீரின் குறுக்கே விழுந்து புரண்டு அதனைக் கலக்கி உண்ணும் எருமைபோல, ஆசிரியன் தெளிவாகப் பாடஞ்சொல்லும் நிலையை மாற்றி அவனுக்குச் சீற்றம் விளைவித்துப் பின் அவன் கூறுவனவற்றை உட்கொள் பவனும்,

ஒரே இடத்தில் உண்ணுதற்குரிய உணவுப் பொருள் மிகுதியாக இருப்பினும் அவ்விடத்திலேயே வயிறு நிறைய உண்ணாமல், பலப்பல இடங்களுக்குச் சென்று சிறிதுசிறிதாக அவ்வவ்விடத்திலுள்ள தழையை உண்டு வயிறு நிறையும் ஆடு போல, ஆசிரியன் ஒருவனிடத்தி லேயே பலதிறப்பட்ட அறிவுக்கலைகளைப் பெறுதற்கு வாய்ப்புஇருப்பினும் அவனிடத்திலேயே பயின்று பலதிற அறிவும் நிரம்பப்பெறாது, ஆசிரியர் பலரை அணுகி ஒவ்வொருவரிடத்திருந்தும் சிறிதுசிறிது கொள்வோனும்,

நீரில் அன்றி நிலத்தில் ஓடாத் தோணிபோல, தான் செல்லும் வழியிற் சென்று ஆசிரியனிடம் கல்விப்பயன் கொள்ளும் முறையேயன்றி ஆசிரியன் செலுத்தும் வழி களில் எல்லாம் சென்று கல்விப்பயன் கொள்ளும் ஆற்றல் இல்லோனும் ஆகிய இவர் மாணாக்கர் ஆகத் தகாதார் என்பது.

கற்பிக்கப்படாதோரைப் பற்றி உரையாசிரியர்,

'மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆறாச் சினத்தன்

தடுமாறு நெஞ்சத் தவன்உள்ளிட்டு எண்மர்
நெடுநூலைக் கற்கலா தார்'.

எனவும்,

'குரங்கெறி விளங்காய் எருமை யாடே
தோணி என்றாங்கு இவைஎன மொழிப'.

எனவும் கூறியுள்ளார்.

நச்சினார்கினியர் இவற்றோடு,

'மொழிவது உணராதார் முன்இருந்து காய்வார்
படிறுபல உரைப்பார் பல்கால் நகுவார்
திரிதரு நெஞ்சத்தார் தீயவை ஓர்ப்பார்
கடியபட் டார்அவையின் கண்'.

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நன்னூலார் மாணாக்கர் ஆதற்குத் தகுதியற்றவரை,

'களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி
படிறன்இன் னோர்க்கும் பகரார் நூலே'. நன்-36

என்ற நூற்பா வாயிலாக விளக்குகிறார்.

இனி, சண்முகனார்

'குரங்கெறி விளங்காய் எருமை யாடே
தோணி என்றாங்கு இவையென மொழிப'.

என்ற நூற்பாவிற்கு இவ்வாசிரியர் தந்துள்ள விளக்கம் பொருந்தாது என்பதை விரிவாக ஆய்ந்து நிறுவி, இந்நூற்பாவில் குரங்கு, எரி, கன்றிழந்த ஆயெருமை, வேந்தன் ஆணையால் குற்றஞ் செய்தாரது

கையிலும் காலிலும் இடப்படும் விலங்கு, ஆடு, தோணி என்பனவே மாணாக்கர் ஆதற்குத் தகுதியற்றாருக்கு ஏற்ற உவமங்கள் என்ற செய்தியை விரித்துக் கூறி யுள்ளார்; மேலும் நன்னூலார் கடை மாணாக்கருக்குச் சொல்லிய உவமங்களும் ஏற்ற அல்ல என்பதையும் விளக்கியுள்ளார்.

அவையாவும் சண்முக விருத்தியுள் காணப்படும்.

இனி, கற்பிக்கப்படாதோரைப் பற்றி மாறன் அலங்கார ஆசிரியர் கூறுவனவற்றைத் தொகுத்துக் காண்போம்.

'காமுகன் களியன் கடுஞ்சொலன் சினத்தன்
மடியன் தடுமாறு உளத்தன் மறவியன்
துயில்வோன் பிணக்கன் சோரன் பொய்யன்
மானவன் பிணியின் மரிஇயவன் இவர்க்குநல்
தானமது ஆயினும் சாற்றார் நூலே'. மாறன்-46

எனவும்,

'ஆடுபந்து உறுசுவர் அளந்துஅறி முகவை
கோடின் றாம்குளன் எனுங்குறி யோரே'. 47

எனவும்,

'ஓரிடத்து உறுகுளகு அமைத்துஅற உண்ணாது
அவண்அவண் நிறைவற்று அலமரும் ஆடே'. 48

எனவும்,

'எற்றிய பந்தினை எதிர்செல விடுத்துஒரு
பற்றுஅற நிற்பது சுவரின் பண்பே'. 49

எனவும்,

'அளந்து அகத்து அடக்கிய பொருள்களை ஆங்கவண்
முற்றப் புறத்துகல் முகவையின் குணமே'. 50

எனவும்,

'பயம்சிறிது அடக்கலின் பயன்நிரம் பாதாம்
கொழும்புனல் புகுந்த கோடின்றாம் குளனே'. 51

எனவும்,

'குரங்கெறி விளங்காய் கொள்பவர் போல்வார்
பழம்பகை மறைத்துப் பணிபவ ராகிக்
கூடா ஒழுக்கில் கொள்பவர் கல்விச்
சால்புஇல ராகித் தலைமைவந்து அடுத்தோர்
கரந்துஅங்கு ஒருவரைக் கற்கவிட்டு உணர்வான்
வருபவர் தமக்கு வழங்கார் நூலே'. 52

எனவும்,

'ஆசாரம் இல்லார் அழுக்காறுஉள் ளார்நகுவார்
கூசாது மற்றொன்று கூறுவார்—தேசிகன்சொல்
கற்றுஒன்று உறாதார் கழகத்து உறில்இருந்தார்
எற்று என்று உரையாது இரார்'. 53

எனவும், அந்நூலார் மாணாக்கர் ஆகாதார்பற்றிக் கூறியுள்ளனவும் நோக்கத்தக்கன.

இனிக் கோடல் மரபு :

'கோடல் மரபு கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
முன்னும் பின்னும் இரவினும் பகலினும்
அகலா னாகி அன்பொடு கெழிஇக்
குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்று
ஆசுஅற உணர்ந்தோன் வாஎன வந்துஆங்கு
இருஎன இருந்துஏடு அவிழ்என அவிழ்த்துச்
சொல்எனச் சொல்லிச் செல்எனச் சென்று

பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுஉளத்து அமைத்துப்
போற்றிக் கோடல் அதுஅதன் பண்பே'.

எனவும்,

மாணாக்கன் நூலினைக் கற்கும் முறையாவது, உரிய நேரத்தில் சென்று ஆசிரியனை வணங்குதற்கண் மாண்பு இறந்தமானத்தால் வெறுத்தல்இலனாய், இரவில் ஆசிரியனுக்கு முன்னும் பகலில் ஆசிரியனுக்குப் பின்னுமாகத் தொடர்ந்து அகலாது சென்று, அவனிடம் கடமையுணர்ச்சி ஒன்று மட்டுமின்றி அன்பும்கொண்டு, அவன் பண்பிற்கு ஏற்ப அவன் மனம் வெகுளாதவாறும் நோகாதவாறும் பழகி, அவன் உள்ளக் குறிப்பிற்கு ஏற்ப நடந்துகொண்டு, குற்றம் அற நூலினை உணர்ந்த ஆசிரியன் வா என்று அழைத்த பின்னரே வந்து, இடத்து அமர் என்று சொல்லிய பிறகே இருக்கையில் அமர்ந்து நூலினைப் பிரிக்கச் சொல்லிய பிறகே பிரித்து, அவன் விடை கூறு என்று சொல்லிய பிறகே வினவிய வினாக் களுக்கு உரிய விடையைக்கூறி, அவன் செல் என்று ஆணையிட்ட பிறகே வகுப்பறையைவிட்டுச் செல்லும் இயல்பினனாய், நீர் வேட்கையுற்றோன் உண்ணுநீர் பருகுதற்கண் கொள்ளும் வேட்கையை ஒத்த வேட்கை உடையவனாய், கல்வித்தாகம் தீர்க்கும் நோக்குடன் சித்திரத்தில் வரையப்பட்ட பாவைபோல வகுப்பில் அடக்கமாக இருந்து, காதுகளையே வாயாகக்கொண்டு நெஞ்சத்தையே அறிவைத்தேக்கி வைக்கும் நிலைக் களனாகக்கொண்டு, ஆசிரியனிடம் கேட்ட செய்திகள் எல்லாவற்றையும் தவறாது உள்ளத்தில் இருத்திக் கொண்டு, கற்றவற்றை மனத்தகத்துப் பாதுகாத்துக் கோடலேயாகும்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உரைகளில் இந் நூற்பா மிகச்சில வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. நன்னூலிலும் சில அடிகள் குறைய இந்நூற்பாவே காணப்படுகிறது. சண்முகனாரும் உரையாசிரியரைப் பெரும்பாலும் உட்கொண்டு, கோடல் மரபு பற்றி விளக்கியுள்ளார்.

'அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு
எத்திறம் ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே'' நன் 46

எனவும்,

அகலாது அணுகாது தீக்காய்வார்போல ஆசிரிய னிடம் மதிப்புக்கொண்டு அஞ்சிப்பழகி, நிழலைப்போல இரவினும் பகலினும் முன்னும் பின்னும் ஆசிரியனை அகலானாகி, ஆசிரியன் பக்கல் இருக்கின்றோம் என்று மகிழ்ச்சியாலும் கடமை உணர்ச்சியாலும் நிறைந்த மனத்தோடு, அறத்தொடு மாறுபடாத வகையில், ஆசிரியன் உள்ளம் உவக்குமாறு மாணாக்கன் பணி வொடு நடத்தற்குரியவன்.

இந்நூற்பா நன்னூலில் காணப்படுகிறது.

'நூல்போற் றுதலே நுவலின் வழக்குஅறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்துஅவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கோடல் என்மனார் புலவர்'.

எனவும்,

நூலினை நன்கு மனங்கொள்ளுதற்கு, முன்னவர் நூலினைக் கற்றுக்கொள்ளும் வழக்கத்தை அறிதல், மூல

பாடத்தை மனனம் செய்தல், ஆசிரியன் பயிற்றியவற்றை நினைத்துப்பார்த்தல், அங்ஙனம் நினைத்துக் காணுங் கால் நிகழும் ஐயம்திரிபுகளை ஆசிரியனை அணுகிப் போக்கிக் கொள்ளுதல், நூல் பயிலும் மாண்புடையராகிய மாணாக்கர் ஏனையாரோடு பழகுதல், அவரிடம் தம் ஐயம்பற்றி வினாவுதல், அவர் ஐயுற்றுவினாவியவற்றிற்கு விடை அளித்தல் என்ற இவற்றைக் கடப்பாடாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது.

இந்நூற்பாவினையே சிறிது திரிந்த வடிவில் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் நன்னூலாரும் சண்முகனாரும் கொண்டுள்ளனர். இன்னும் உரையாசிரியர் முதலியோர் 'அழலின் நீங்கான்' என்ற பாடலின் பின் இரண்டு அடிகள் ஆகிய

'எத்திறம் ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சிவழி பாடே'.

என்பதனையும்,

'அனையன் நல்லோன் கொள்குவன் ஆயின்
வினையின் உழப்பொடு பயன்தலைப் படாஅன்'.

என்பதனையும், நச்சினார்க்கினியர் மாத்திரம்

'அனையன் அல்லோன் அம்மரபு இல்லோன்
கேட்குவன் ஆயின் கொள்வோன் அல்லன்'.

என்பதனையும்,

நச்சினார்க்கினியரும் சண்முகனாரும்

'பிறர்க்கு உரை யிடத்தே நூல்கலப் பாகும்
திறப்பட உணரும் தெளிவி னோர்க்கே'.

என்பதனையும் குறிப்பிட்டுள்ளனர்.

'ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலின் பிழைபாடு இலனே'. நன்-42

'முக்கால் கேட்பின் முறைஅறிந்து உரைக்கும்'. 43

'ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
கால்கூறு அல்லது பற்றலன் ஆகும்', 44

'அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருபால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு பாலும்
மையற நிரம்பும் மாண்பின வாகும்'. 45

எனவும் ஓதிய இவற்றான் அறிக.

ஆசிரியனிடத்தில் ஒருமுறை பாடம் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றவன் அதே நூலினையே இரண்டாம் முறையும் பாடங்கேட்கும் வாய்ப்பினைப் பெறுவானாயின், அந்நூலின் கண் தனக்குப்பண்டு நிகழ்ந்த ஐயந் திரிபுகள் பெரும்பாலும் நீங்கப் பெற்றவன் ஆவன்; மூன்றாம் முறையும் அந்நூலைப் பாடங்கேட்கும் வாய்ப்பினைப் பெற்றால், ஆசிரியன் பாடஞ் சொல்லும் முறையையே நன்கு அறிந்து, தானும் பாடஞ் சொல்லுதல் கூடும். ஆசிரியன் உரைத்தனவற்றை நன்கு மனங் கொண்டாலும், கால் பகுதியே உள்ளத்தில் நிலைபெறும் தன்னை யொத்த மாணாக்கரொடு பழகி வினாவி விடுப்பதன் வாயிலாக, அடுத்தகாற்கூறு நிரம்பும். தான் நன்முறையில் பாடஞ் சொல்லுதலாலேயே ஒருவன் ஒரு நூலின்கண் முழுப் புலமையும் பெறுதல் இயலும்.

இந்நூற்பாவினையே உரையாசிரியரை உள்ளிட்ட அனைவரும் சிற்சில புனைவுடன் பிரித்து நான்கு நூற்பாக்களாகக் கொண்டனர்.

இனி, கோடல்மரபுபற்றி மாறன் அலங்காரம் கூறியுள்ளவற்றை நோக்குவோம்:

'கொள்வோன் கொள்கடன் கூறுங் காலை
கடையா மத்திடை எழுந்துள கடன்கழித்து

இன்னும், கற்கப்படுவோர் கற்பிக்கப்படுவோர் என்னும் அவ்விரு திறத்தாரையும்,

'வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும்
வான்யாறு அன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும்
திங்கள் அன்ன கல்வியும் திங்களொடு
ஞாயிறு அன்ன வாய்மையும் யாவதும்
அஃகா வன்பும் வெஃகா உள்ளமும்
துலைநா அன்ன சமநிலை உளப்பட
எண்வகை உறுப்பினர் ஆகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாளாண் மையும்
உலகியல் அறிதலும் நிலைஇய தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப்பு இன்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருள் உணர்த்தும் சொலல்வன் மையும்
கற்போர் நெஞ்சம் காமுறப் படுதலும்
இன்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பின் நல்லா சிரியர்
அறனே பொருட்பயன் இன்புஎன மூன்றின்
திறன்அறி பனுவல் செப்புங் காலை
முன்னர்க் கூறிய எண்வகை உறுப்பினுள்
ஏற்பன உடையர் ஆகிப் பாற்படச்
சொல்லிய பொருண்மை சொல்லியாங்கு உணர்தலும்
சொல்லிய பொருளொடு சூழ்ந்துநன்கு உணர்தலும்
தன்னோர் அன்னோர்க்குத் தான்பயப் படுதலும்
செய்ந்நன்றி அறிதலும் தீச்சார்பு இன்மையும்
மடிதடு மாற்றம் மானம்பொச் சாப்புக்
கடுநோய் சீற்றம் களவே காமம்
என்றிவை இன்மையும் சென்றுவழி படுதலும்
அறத்துறை வழாமையும் குறிப்புஅறிந்து ஒழுகலும்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்
மீட்டுஅவை வினவலும் விடுத்தலும் உரைத்தலும

உடையர் ஆகி நடைஅறிந்து இயலுநர்
நன்மா ணாக்கர் என்ப மண்மிசைத்
தொன்னூல் புலமைத் துணிபுஉணர் வோரே'.

என்பதனான் முறையே காண்க.

இன்னும் இதன் எதிர்மறை முகத்தான், கற்கப் படாதோர் கற்பிக்கப்படாதோர் என்னும் அவ்விரு திறத்தாரையும் முறையே காண்க.

வலம்புரி முத்தினைப் போன்ற நற்குடிப் பிறப்பும், ஆகாய கங்கையைப் போன்ற தூய்மையும், மிகச் சிறப் பிற்றாகிய ஆகாய கங்கை நில உலகிற்குப் பயன்படுதல் கருதி ஈண்டுப் போந்தாற் போன்ற பிறர் நலன் கருதி நற்கருமம் புரியும் ஒழுக்கமும், பதினாறு கலையும் நிறைந்த முழுமதி போன்ற கல்வியும், திங்களும் ஞாயிறும் காலம் தவறாது உலகவர் கண்ணுக்குத் தோன்றிச் செயற்படுமாறு போலக் காலம் தவறாது செயற்படும் வாய்மையும், சிறிதும் குறைதலில்லாத அழுக்காறாமை என்ற பண்பும், பிறர் பொருளைக் கள்ளக்கருதாத உள்ளமும், துலாக்கோலின் நாவினை யொத்த செம்மையாகிய நடுவு நிலைமையும் ஆகிய எட்டுவகை உறுப்பினையும் உடையவராகி, உறுதியாகப் பிறருக்கு உதவும் வாழ்க்கையும், அதற்கு ஏற்ற முயற்சி யும், உலகியலை அறிந்து அதற்கு ஏற்றவாறு நடப்ப தற்கு உளதாம் அறிவும், கல்விப் பொலிவொடு உருவின் மிக்கதோர் உடலும், போற்றாரையும் பொறுக்கும் பொறுமையும், மறைபிறர் அறியாமை நெஞ்சினை நிறுத்தற்கு உளதாம் நிறையும், மறக்கக் கூடாத கல்விச் செய்தியை மறவாமையும், கண்டார் போற்றத்தக்க அறிவும், வேண்டார் அஞ்சத்தக்க பீடும், பிறர் மதிக்கத் தக்க ஆற்றலும், அதனால் உளதாம் புகழும், சொற் பொருளைக் கேட்டார் உணரத்தக்க வகையில் எண் பொருளவாகச் செலச்சொல்லும் நாவன்மையும், தன்னி

டம் கற்கவந்த மாணாக்கர் தன்னிடம் கற்றலையே காமுறத்தக்க பாடஞ் சொல்லும் ஆற்றலும்என இவ்வாறாகப் பண்டை மரபுபற்றி வரும், மொழியைக் கடக்கும் பெருஞ் சிறப்புடைய நல்லாசிரியர் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றன்கூறுபாட்டையும் அறிவிக்கும் இலக்கணத்தைப் பாடஞ் சொல்லும் போது,

முன்னர் ஆசிரியனுக்குக் கூறப்பட்ட எண்வகை உறுப்புக்களுள் ஏற்பனவாகிய குடிப்பிறப்பு தூய்மை வாய்மை அஃகாவன்பு வெஃகாஉள்ளம் என்பன உடைய வராகி. ஆசிரியன் முறைப்படப் பாடஞ் சொல்லியவற்றை அவன் பாடஞ் சொல்லும்போது மனத்தைச் சென்ற இடத்தால் செலவிடாது அதன்கண்ணேயே உய்த்து அவன் கூறியவாறே உணர்தலும், அவன் கூறியவற்றை நன்கு சிந்தித்து உள்ளவாறு உணர்தலும், செய்ந்நன்றி அறிதலும், தீயவர் நட்புக்கொள்ளாமையும், சோம்பல் மனக்கோட்டம், மாண்பு இறந்த மானம் கடைப்பிடி யின்றி நெகிழ்திருத்தலுக்குக் காரணமான மறதி கொடியநோய் முன்கோபம் களவு காமம் என்ற இத்தீப் பண்புகள் தம்மாட்டு இல்லையாதலும், ஆசிரியன் இருக்கும் இடத்திற்குச் சென்று அவனை வழிபடுதலும், அறநெறியினின்றும் தவறாதிருத்தலும், ஆசிரியரின் குறிப்பு அறிந்து நடத்தலும், ஆசிரியனிடம் பாடங் கேட்டவற்றைப்பின் சிந்தித்து உணர்தலும், பாடங்களை மனப்பாடம் செய்து மனத்தில் பதித்துக்கோடலும், ஐயந்திரிபுகளை ஆசிரியனிடம் நாணமின்றி வினவி அறிதலும், ஆசிரியன் வினவிய வினாக்களுக்கு ஏற்ற விடைஇறுத்தலும், உடன்பயில் மாணக்கர் ஐயுற்று வினவியவற்றிற்கு விடையிறுத்தலும், உடையவராகி, உலகியல் ஒழுக்கத்தை அறிந்து நடப்பவரே நன் மாணாக்கர் என்று சான்றவர் கூறுவர்.

பொதுப்பாயிரத்து இலக்கணம் முற்றிற்று.

---

2. ஆவது சிறப்புப்பாயிரத்து இலக்கணம்

இனித் தன்னான் உரைக்கப்படும் நூற்கு இன்றி யமையாத சிறப்புப்பாயிரம், ஆக்கியோன் பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் யாப்பும் நுதலிய பொருளும் கேட்போரும் பயனும் காலமும் களனும் காரணமும் எனப் பதினொரு வகைத்து,

'ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே என்றிவை எட்டொடும்
காலம் களனே காரணம் என்றுஇம்
மூன்றும் உளப்பட முடிந்தபதி னொன்றும்
சிறப்பின் தொகையெனத் தேறல் வேண்டும்'.

என்ப ஆகலின்,

இக்கருத்தினையே இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும், நன்னூலாரும், சண்முகனாரும்,

'ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனொடு ஆயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே'. நன்-47

'காலம் களனே காரணம் என்றிம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே'. நன்-48

என்ற நூற்பாக்களைக் கொண்டு விளக்கியுள்ளனர். இவற்றா சிறப்புப்பாயிரத்தில் ஆக்கியோன் பெயர் முதலிய எட்டும் கூறப்படல் வேண்டும் என்பது ஆசிரியர் எல்லோருக்கும், காலம் களன் காரணம் என்றிவையும் கூறப்படல்வேண்டும் என்பது அவருள் சிலருக்கும் கருத்தாதல் உணரப்படும்.

நூலாசிரியன் பெயர், அந்நூல் இந்நூலின் வழிநூல் என்பது, அந்நூல் வழங்கும் நிலத்து எல்லை, நூலின் பெயர், தொகுத்தல் விரித்தல் தொகை விரி மொழி பெயர்ப்பு என்ற நூல் யாப்பு நான்கனுள் அந்நூல் எதனையொட்டி அமைக்கப்பட்டது என்பது, நூலில் கூறப்பட்டுள்ள பொருள், அந்நூலினை அரங்கேற்றிய ஞான்று அதனைக் கேட்டோர், அந்நூல் பயிறலின் பயன், அந்நூல் அரங்கேறிய காலம், அந்நூல் அரங் கேற்றப்பட்ட களம், அந்நூல் இயற்றப்பட வேண்டிய காரணம் என்ற பதினொன்றும் ஒவ்வொரு நூலுக்கும் தனித்தனியே அமையும் சிறப்புச்செய்தியாதலின், அவை பதினொன்றும் சிறப்புப்பாயிரத்தால் தெரிக்கப்படும் என்பது.

இவற்றுள் யாப்பு என்பதற்கு 'இன்னநூல் கேட்டபின் இந்நூல் கேட்கற்பாலது என்ற இயைபு', 'நூலுக்கும் நூல் நுதலிய பொருளுக்கும் உள்ள தொடர்பு' என்ற ஈருரைகளையும் சிவஞான முனிவர் ஆனந்தரியம் சம்பந் தம் என்ற வடசொற் பொருள் ஒட்டி விளக்கம் தருகிறார். அவரே 'தொகுத்தல் வகுத்தல் முதலியன' வழிவகையுள் அடங்குதலின் அவற்றைக் கூறுதல் வேண்டா என்றும் சுட்டுகிறார்.

கேட்போர் என்பதற்கு 'இந்நூலைக் கேட்பதற்கு உரிய அதிகாரிகள் ஆவார் இன்னார்' என்று பொருள் தந்து, அந்நூலினைக் கேட்பதற்குத் தகுதியுடைய மாணாக்கரை அச்சொல் சுட்டுகிறது என்று விளக்கம் தருகிறார். ஆக்கியோன் பெயர், நுதலிய பொருள் என்பனபோல் இறந்த காலத்தால் கூறாது கேட்போர் என எதிர்காலத்தால் கூறியதனால் அச்சொல் நூல் அரங்கேறிய அவைக் களத்துக் கேட்டோரைக் குறிக்காது எனவும், அவைக்களத்தில் கேட்டோர் ஆவர் யாவர் என்பது, காலம் களன் என்ற இரண்டையும் விளக்கும்

வாயிலாகவே புலனாகிவிடும் ஆதலின், நூல் அரங்கேறிய அவைக்களத்துக் கேட்டோரைத் தனியே குறிப்பிடுதல் வேண்டா எனவும், நூல் கேட்டற்கு உரிய அதிகாரிகள் ஆவார் யாவர் என்பதனைத் தவறாது குறிப்பிடல் வேண்டும் எனவும் தம் கருத்தே வட நூலார்க்கும் உடன்பாடு எனவும் கூறிக் கேட்போர் என்பதற்கு முன்னவர் கூறிய உரையை மறுக்கிறார்.

யாப்பு, கேட்போர் என்பனவற்றிற்கு நன்னூற்கு உரை கண்ட சங்கர நமசிவாயப் புலவர் கருத்தினையே முனிவர் கொண்டார் என்பது சண்முகனார் கருத்து. எவ்வாறாயினும் யாப்பு, கேட்போர் என்பனவற்றிற்கு அவர்கள் கூறும் உரை பொருந்தாது என்பதைச் சண்முகனார் விரிவாக விளக்கியுள்ளார். அச்செய்தியை ஓரளவு சுருங்கக் காண்போம்.

''கேட்போர் என்பது கற்போர் ஆகிய பாடங் கேட்டோர் எனலும், யாப்பு என்பது இவை ஆய்ந்த பின்னர் இது கேட்கற்பாற்று எனலும் பொருந்தா. என்னை? கொள்வோன் தன்மை எனவும், கோடல் மரபு எனவும், கொள்வோன் கொள்வகை எனவும், ஆசான் உரைத்தவை அமைவரக்கொளினும் எனவும் பிறவிடத்து எல்லாம் கற்போனைக் கொள்வோன் எனவும் கற்றலைக் கோடல் எனவும் கூறினாரேயன்றிக் கேட்போன் எனவும் கேட்டல் எனவும் கூறாமையானும், வழக்கு அறிதலும் பாடம் போற்றலும் கேட்டவை நினைத்தலும் ஆசாற் சார்ந்து அவை அமைவரக் கேட்டலும், அம்மாண்பு உடையார் தம்மொடு பயிறலும் வினாதல் வினா அயவை விடுத்தல் முதலாய பிறவும் கூடிய வழியே கற்றல் ஆவதன்றி, அவற்றுள் கேட்டல் மாத்திரம் கற்றல் எனப் படாமையானும், பாடம் கேட்டல் கற்றலின் ஒரு பகுதி யாகலின், கற்றலுள் கேட்டல் அடங்கும் அன்றிக் கேட்டலுள் கற்றல் அடங்காமையானும், கேட்டல்

கற்றலின் ஒரு பகுதி ஆயினும் அதுவே கற்றல் எனப் பெயர் பெறாமையானும், அது கல்லாதார்க்கும் உரித்தாம் ஆகலானும், ஒரு குறி கேட்போன் இருகால் கேட்பின், முக்கால் கேட்பின் என்ற இடத்துக் கற்றலின் பொது இயல்பு கூறாமல் அதன் பகுதியாகிய கேட்டல் இயல்பே கூறலான் அதுகொண்டு கற்போர் எனல் பொருந்தாமையானும், ஈவோன் தன்மை கொள்வோன் தன்மை என்றாற் போலக் கேட்போன் தன்மை என ஒருமையாற் கூறாது கேட்போர் எனப் பன்மையாற் கூறலானும், மாணாக்கன் தன்மை பொதுப்பாயிரத்திலேயே விளக்கக் கூறப்பட்டிருத்தலானும், ஈண்டுக் கூறுவது மாணாக்கன் சிறப்பியல்பு எனின் ஆசிரியன் சிறப்பியல்பும் கூறப்படல் வேண்டும் ஆகலானும், நூல் இயற்றப்பட்ட பின்னரே அஃது அரங்கேற்றப்படும் ஆதலின், நூல் இயற்றப்பட்ட காலத்துக்கு அரங்கேற்றக் காலம் எதிரதே ஆதலின் கேட்போர் என எதிர்காலத்தால் கூறியதன் கண்தமிழ் மரபுக்கு மாறான கருத்து இன்று ஆகலானும் இங்ஙனமே திருவள்ளுவனாரும் நோயுற்றவன் பின் அடையும் மருத்துவன் முதலாயினாரை;

'உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து'. (குறள்-950)

என இறந்தகாலம் எதிர்காலம் பற்றிக் கூறினார் ஆகலானும் முனிவர் முதலாயினோர் தரும் விளக்கம் பொருந்தாது என்பது.

மேலும் இலக்கணம் என்பது ஒருதலையாகத் துணிதல் ஆகலான் முனிவர் யாப்பு என்பதற்கு ஒருதலையாகப் பொருள் துணியாராய் ஆனந்தரியம், சம்பந்தம் என இருதலைப்படப் பொருள்கூற முற்படுதல் பொருந்தாமையானும் அவர் உரை பொருந்தாமை தெளியப்படும் என்பது''

இனி, சிறப்புப்பாயிரத்து இலக்கணம் செப்புமாறு,

'பாயிரத்து இலக்கணம் பகருங் காலை
நூல்நுதல் பொருளைத் தன்னகத்து அடக்கி
ஆசிரிய மானும் வெண்பா வானும்
மருவிய வகையான் நுவறல் வேண்டும்'.

இதனால் அறிக.

இக்கருத்தினையே உரையாசிரியரை உள்ளிட்டோர் அனைவரும் சுட்டி உள்ளனர். எனவே, சிறப்புப்பாயிரம் யாத்தற்குரிய பாக்கள் ஆசிரியமும் வெண்பாவுமே என்பது.

நூல் செய்தான் பாயிரம் செய்யின் தன்னைப் புகழ்ந்தானாம்,

'தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே'. நன்-52

என்ப ஆகலின்,

மற்றவர்க்குப் புலப்படாத பல செய்திகளையும் விளக்கித் தன் நூலைப் பல துறைகள் கொண்ட பெரு நூலாக விரித்துச் செய்த ஆற்றலன் ஆயினும் தன்னைத் தானே புகழ்ந்து பாராட்டிக்கொள்ளுதல் தகுதியன்று என்பது.

இக்கருத்தினை உரையாசிரியரை உள்ளிட்டபலரும் குறிப்பிட்டுள்ளனர். இனி, மாறன் அலங்கார ஆசிரியர்,

'கலைகள் யாவையும் கற்றுஉரை தெளிந்து
துலைநாச் சமனில் துணிநிலை புரியும்
வாய்மையும் பிறர்க்குஅவை மயர்வுஅற அளிக்கும்
தூய்மையும் சான்ற துணைஇலன் எனினும்
தூய்மையும் சான்ற துணைஇலன் எனினும்

ஒல்காப் பதினெண் உறுப்புடை நாற்பொருள்
பல்காப் பியம்பழிப்பு அறநவம் புணர்க்கவும்
முத்தமிழ்க் கல்வியும் உத்தம வாக்கின்
வித்தகக் கவிதையும் வேண்டினன் ஆகிலும்
தற்புகழ் தலும்பிறன் தன்னை இகழ்தலும்
பொற்புஅல ஆகும் புலனுடை யோற்கே'. மா-62

என்று கூறியதனையும், அதன் உரையாசிரியர்,

இலக்கண இலக்கியங்களை முற்றப்பாடம் போற்றி உரையைச் சந்தயம் அறத்தெளிந்து நுலைநாப் போன்றும் துலாக்கோற்சமன் போன்றும் ஐயமுற்ற பொருளை ஐயம்அறக் கேட்டோர்க்கு உணர்த்தும் ஒப்பிலாதானாம் எனினும், எழுத்து ஆகிய ஐந்து இலக்கணங்களையும் பதினெட்டு உறுப்பொடு நாற்பொருள் பயப்பன ஆகிய பெருங்காப்பியங்களையும் குற்றமறப் புதியனவாய்ப் பாடல் சான்றவனாம் எனினும், தன்னைப் புகழ்தலும் பிறன் ஒருவனை இகழ்தலும் உணர்வு உடையோற்கு அழகுஅல்ல என்றவாறு.

இன்னும்

'தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே'.

என்பதனாலும் கொள்க எனக் கூறியவற்றையும் நோக்குக.

'தன்ஆசிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தகும்உரை யாளன்என்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே' நன்-51

என்றும்,

இதனையே உரையாசிரியர் நச்சினார்க்கினியர் நன்னூலார் முதலியோரும் குறிப்பிட்டனர். எனவே

சிறப்புப்பாயிரம் செய்தற்கு உரிமையுடையவர் தன் ஆசிரியன், தன் ஒரு சாலை மாணாக்க நண்பன், தன் மாணாக்கன், அறிவு ஆற்றலில் மிக்க உரையாளன் என்ற நால்வரும் என்பது. எனவே, இவருள் ஒருவரா லேயே சிறப்புப்பாயிரம் இயற்றப்படும் என்பது.

இதனையே மாறன் அலங்கார ஆசிரியரும்,

'பன்னருஞ் சிறப்புப் பாயிரம் பகர்வோர்
தன்உயிர் பேணும் சதிர்ஆ சிரியன்
ஒருபுடை கற்ற உயர்மா ணாக்கன்
தன்னொடு கற்ற தலைமா ணாக்கன்
உரைகா ரணன்எனும் உரனுடை யோரே.

மாறன்-63

என்ற நூற்பாவால் குறிப்பிட்டுள்ளார்.

இனிச் சண்முகனார் இப்பாயிரம் செய்தற்கு உரியார் முதல் மூவருமே, தகும் உரைகாரர் அல்லர் என்ற கருத்துடையவர் ஆவர். அவர் சிறப்புப்பாயிரம் என்பது ஒரு நூலது பெருமையே கூற வந்ததாம் ஆகலின், அந் நூலது பெருமை விளங்குமாறு அதனை ஆக்கியோன் பெருமையும் அதனைக் கேட்போர் பெருமையும் அவர் காலத்து உடன் இருந்து பழகினார்க்கு அன்றி ஏனை யோர்க்கு உள்ளவாறு அறிதல் அரிது ஆகலானும், தந்தைமுதலாயினார் அறியினும் அவர் புலமையோராய் இருத்தல் ஒருதலையன்று ஆகலானும், உள்ளவாறு அறிந்து உரைக்கும் இயல்புடைமை அம்மூவர்க்கும் ஒருதலை ஆகலானும், பொதுப்பாயிரம் ஒருவரைச் சுட்டாமல் ஆசிரியரையும் மாணாக்கரையும் பொது இயல்பானே கூறும் இயல்பினது ஆகலின், உடன் இருத்தல் வேண்டாமையானும் அக் கருத்துடையார் என்பது.

இனி உரையாளன் பாயிரம் உரைத்தற்கு உரியன் அல்லனோ எனின், அவன் நூல் செய்தான் காலத்தோன் ஆயின் உரியனாம்;பிற்காலத்தோன் ஆயின் ஆக்கியோன் பெருமை முதலியன முற்றும் உணரான் ஆகலின்,அவன் உரிமை சிறப்புடைத்து அன்று என்பது,என்று கூறியதும் நோக்கத்தக்கது.

'மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே'. நன்-52

எனவும் வருவனவற்றான் முறையே காண்க.

சிறப்புப்பாயிரத்து இலக்கணம் முற்றிற்று.

இந்நூற்பா நன்னூலில் உள்ளது. இது புலவன் தன்னைப் புகழ்தற்கு ஆம் இடங்களைச் சுட்டுகிறது.

அரசனுடைய அவைக்குப் புலவன் தான் அனுப்பும் சீட்டுக்கவி இயற்றுங்காலும், தன்னுடைய ஆற்றலை உள்ளவாறு உணரார் இடைத்தான் இருந்து உரையாடுங்காலும், புலவர் பலர் பொருந்திய அவையிடை வாதிட்டுத் தன்கோள் நிறுத்தப் பிறன்கோள் மறுத்துத் தன்கருத்தை வலியுறுத்தி வெல்லுங்காலும். தன்னை வேற்றான் ஒருவன் பழிக்குங்காலும், புலவன் ஒருவன் தன்னைத்தானே புகழ்தலும் ஏற்றது; உம்மையான் ஆண்டும் தான்தன்னைப் புகழாமல் தமன்தன்னைப் புகழுமாறு இருத்தலே மேதக்கது என்றவாறு.

இனிப் பிரயோக விவேகம் வரைந்த சுப்பிரமணிய தீக்கிதர் தம் நூலுக்குத் தாமே சிறப்புப்பாயிரம் வரைந்து தம் கூற்று ஏற்றதே என்பதனையும் விளக்கியுள்ளார். அதனை நோக்குவோம்.

'பெரும்புங் கவர்புகழ் போதா யனிசுப் பிரமணியன்
அரும்பும் குருகையில் கோதில் குலோத்துங்கன்
[ஆரிடமாய்
விரும்பும் பொருளைத் தரும்பிர யோகவிவே
[கந்தன்னைக்
கரும்பும் கனியும் எனப்பாடி னான்தமிழ்
[கற்பவர்க்கே''.

இது தன்னைப்பிறன் போலும் நாந்தி கூறுகின்றது. குருகையில் அரும்பும் எனக் காட்டுக.

வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான் யாமும் பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டினாம்.

இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயினாரும், திவாகரரும். பதினெண் கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னாகப்பின்னாகப் பதிகம் கூறுவதும் காண்க.

பி.வி. 3ஆம் நூற்பா

'நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்'

எனத் தம்மைச் சம்பந்தரும்,

சோராத எப்பொருட்கும் ஆதியாம் போதிக்கே
ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்''.

எனத் தம்மைச் சடகோபரும்,

'அங்கமல வயற்புனல்சூழ் ஆலிநாடன்
அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள் கொற்றவேல்
பரகாலன் கலியன்''

எனத் தம்மைத் திருமங்கை மன்னனும் பிறர்போலத் திருக்கடைக்காப்புப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளமை

போன்ற செய்திகளைப் பிரயோக விவேக நூலார் உட்கொண்டு தம் நூலுக்குத் தாமே சிறப்புப்பாயிரம் எழுதியுள்ளார் என்பது காண்க.

இனிச் சிறப்புப்பாயிரம் நூற்கு இன்றியமையாதது என்னும் செய்தியை நன்னூலார்,

'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடுஅமைத்தோன் நல்லார்க்கு அணியும்போல்—நாடிமுன்
ஐதுஉரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்து உரையா வைத்தார் பெரிது'. நன்-55

என்ற நூற்பாவால் குறிப்பிட்டுள்ளார்.

சண்முகனார், 'கருவிளங்கிய மாநகரிற்கு உருவிளங்கிய வாயில்மாடம்' முதலிய உவமங்களின் பெற்றியினை உள்ளவாறு உணராமல், நன்னூலார் 'மாடக்குச் சித்திரம்' முதலிய உவமங்கள் கூறியது பொருந்தாது; என்னை?பாயிரத்தின் பயன் அணிசெயல் ஒன்றேயாயின் சித்திரம் இல் வழியும் மாடம் எனவும், கோபுரம் இல் வழியும் நகர் எனவும், அணிஇல்வழியும் நல்லார் எனவும் கூறின் இழுக்கின்று ஆயினாற்போல, பாயிரம் இல்வழியும் பனுவல் எனப்பட்டு நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்று ஆதலை உணர்த்தாமல், 'பாயிரம் இல்லது பனுவல் அன்றே' என்ற முன்னோர் கருத்தொடு முரணும் ஆகலின் என்பது' என விளக்கம் தந்துள்ளார்.

மாறன் அலங்கார நூலாசிரியர் சிறப்புப்பாயிரத்தின் இன்றியமையாமையை,

'பாவிற்கு அணிபோல் பனுவல் தெளிவு உணர்ந்தோர்
நாவிற்கு வாய்மைபோல் நாரணம்ஆம்—தேவிற்கு
வாய்ந்த அருள்போல வாய்ந்ததே நூலகத்தாய்
ஏய்ந்த பொருட்பாயிரம்' மாறன்-64

என்று குறிப்பிட்டுள்ளது காண்க.

இனிச் சிவஞான முனிவர் கூறுவன : சிறப்புப் பாயிரத்தில் முற்குறிப்பிடப்பட்டனவேயன்றிஇத்துணைச் சிறப்பு இலவாய் அவ்வவற்றிற்கு இனமாய்க் காட்டப் படுவனவும் உள; அவை ஆக்கியோன் பெயரேயன்றி ஆக்குவித்தோன் பெயர் கூறுதலும், வழியேயன்றி அதன் வகையாகிய தொகுத்தல் முதலிய நான்கனுள் ஒன்றா மாறு கூறுதலும், தன் முதல் நூற்கு வழி கூறுதலும், அதுவந்த மரபுவழி கூறுதலும், பொதுஎல்லை கூறுதலே யன்றிச் செந்தமிழ் முதலியவற்றின் சிறப்பு எல்லை கூறுதலும், நூற்பெயரேயன்றிப் படலப்பெயர் ஒத்தின் பெயர் என்பன கூறுதலும், நூற்கு இயைபு கூறுதலே யன்றி நூலினுள் படலம் முதலியவற்றிற்கு இயைபு கூறுதலும், சம்பந்தம் காட்டுவார் மதத்தில் நூற்கும் நூல் நுதலிய பொருட்கும் கிழமை கூறுதலேயன்றி நூல் நுதலிய பொருட்கும் பயனுக்கும் கிழமை கூறுதலும், நூற்கும் நூல்செய்தோனுக்கும் கிழமை கூறுதலும், நூல் நுதலிய பொருளேயன்றிப் படலம் நுதலியதூஉம் ஒத்து நுதலியதூஉம் சூத்திரம் நுதலியதூஉம் கூறுதலும், கேட்போரேயன்றிப் கேட்பிப்போரைக் கூறுதலும், பயனேயன்றிப் பயனுக்குப்பயன் கூறுதலும் ஆம்;

பயனுக்குப் பயனாவது,

> 'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
> மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்
> திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருள்உணர்ந்து
> கட்டறுத்து வீடுபெறும்'.

என்பதனாற் காண்க.

எனவே, முதல்நூல் பொருள் உணர்தற்கு முறை யானே இது கருவிநூல் என்பது பெறப்பட்டது. முதல் நூல் வீட்டு நூல். ஈண்டுக் கேட்பிப்போர் இயற்றமிழ்

வல்ல ஆசிரியர். படலம் நுதலியது இவ்வதிகாரம் எந்நுதலிற்றோ எனின் என்பது. ஒத்து நுதலியது இவ் வோத்து எந்நுதலிற்றோ எனின் என்பது. சூத்திரம் நுதலியது இச்சூத்திரம் எந்நுதலிற்றோ எனின் என்பது. படலத்திற்கு இயைபு மேலை அதிகாரத்தினோடு இயைபு உடைத்தாயிற்று என்பது. ஒத்திற்கு இயைபு மேலை ஒத்தினோடு இயைபு உடைத்தாயிற்று என்பது. சூத்திரத்திற்கு இயைபு மேலைச்சூத்திரத்தோடு இயைபு உடைத்தாயிற்று என்பது. இவை நூல்முகத்துக் காட்டப்படுதலே அன்றிப் படல்முகத்தும் ஒத்துமுகத்தும் சூத்திரமுகத்தும் காட்டவும்படும். இவையெல்லாம் பாயிரமேயாம். பிறவும் இவ்வாறே கண்டுகொள்க, என்பதையும் அவர் கூறியுள்ளார்.

சண்முகனார் ஆக்கியோன் பெயர் முதலியன வைக்கப்பட்ட முறைவைப்பை நன்கு விளக்கியுள்ளார். அதனையும் நோக்குவோம்: ஆக்கியோனும் முதல் நூலும் அது வழங்கும் எல்லையும் நூல்செய்யும் முன்னரே அந்நூலுக்குக் காரணமாக நிற்றலின் முன் வைக்கப்பட்டன. அவை மூன்றும் வழிநூலாகிய காரியம் உளதாகற்கு இன்றியமையாத காரணமேயாயினும், ஆக்கியோன் அக்காரணங்களில் சிறந்த நிமித்த காரணன் ஆகலின் அவன் பெயர் முன்னும், முதல்நூல் முதற்காரணம் ஆகலின் வழி அப்பெயர்க்குப் பின்னும், எல்லை அம்முதல் நூல் பொருளின் வழக்குப் பயிற்சி யினை உணர்த்தலின் அது வழியின் பின்னும் முறை யானே வைக்கப்பட்டன.

யாப்பும் நூற்பெயரும் நுதலிய பொருளும் நூலுடன் ஒற்றித்துத் தோன்றலின், அவை அவற்றின் பின் வைக்கப்பட்டன. அவற்றுள் யாப்பும் நுதலிய பொருளும் அறிதற்கு நூலே இடமாக நிற்றலின் நூற்பெயர் முன் னும், நூலது வகையே ஆதலின் யாப்பு அதன் பின்னும், அவ்வகையால் சொல்லப்பட்ட நூல் இடமாக அறியப்படு

தலின் நுதலிய பொருள் அவற்றின் பின்னும் வைக்கப் பட்டன.

கேட்போரும் பயனும் நூல் செய்யப்பட்ட பின்னரே பெறப்படுதலின், அவை அவற்றின் பின் வைக்கப் பட்டன. அவற்றுள் கேட்டற்கு உரியார் கேட்டு நன்று எனக்கொள்ளின் அன்றி அந்நூல் உலகம் கொள்ளாமை யின், நூற்பயனை உலகம் எய்துதற்குக் கேட்போரே காரணம் ஆகலான், அவர் பெயர் முன்னும் பயன் பின்னுமாக வைக்கப்பட்டன.

ஆக்கியோனும் கேட்போரும் எக்காலத்தினர்; யாண்டு இருந்தனர்; யாதுகாரணத்தால் இந்நூல் செய் தான் என்று அறியுமாறு மாணாக்கர்க்கு விருப்பம் செல்லல் இயல்பு ஆகலானும், நூல் செய்த காலத்தோ அல்லது பிற்காலத்தோ அரங்கேற்றப்பட்டது என்று கடாநிகழும் ஆகலானும், ஆணை செல்லும் அரசன் அவைக்களன் ஆயின் கேட்போர் இந்நூல் குற்றம் உடைத்து எனின் அந்நூல் கொள்ளாது ஒழியும்; அன்றேல் அவர் கூறினும் பயன் இன்றே என்றும் முந்து முந்துநூலைத் தொகுத்தல் முதலாய யாப்பின் எய்திய காரணம் அன்றிப் பிறகாரணமும் உளவோ என்றும் ஐயம் தோன்றும் ஆகலானும், நூல் செய்த காலமும் அதனை அரங்கேற்றிய களனும் ஏனைக் காரணமும் கூறல் இன்றியமையாதது என ஒருசார் ஆசிரியர் வேண்டினார் என்பது. இனிக் களன் கூறவே காலமும் அடங்காதோ எனின், நூல் செய்த காலத்திலேயே அரங் கேற்றல் வேண்டும் என்பது நியமம் ஆகாமையின், பிற் காலத்தும் கூடும் ஆகலின் அவ்விரு காலமும் வேறா தலும் உண்மையான் வேறு கூறப்பட்டது.

அவற்றுள் ஆக்கியோன் பெயர் வழி எல்லை என்ற மூன்றும் இறந்த காலத்தன. நூற்பெயர் யாப்பு நுதலிய

பொருள் என்ற மூன்றும் நிகழ்காலத்தன. ஏனைய எதிர்காலத்தன.

இனி, ஆக்கியோன் பெயர் அன்றிச் செய்வித்தான் பெயரும் உரை செய்தான் பெயரும் கூறலும், தன் நூலுக்கே அன்றி அதன் முதல் நூலுக்கு வழி கூறலும், நூலுக்கே அன்றிப் படலம் ஒத்துச் சூத்திரங்கட்கும் பெயர் கூறலும், பெயரேயன்றித் தொகை முதலாய பிறவும் கூறலும், நூலது பிண்டத்திற்கேயன்றி அதற்கு உறுப்பாகிய படலம் ஒத்துச் சூத்திரங்கட்கும் இன்னது நுதலின எனக் கூறலும், நூல் கேட்போரைக் கூறலே யன்றி உரை கேட்போரையும் கூறலும், பயனேயன்றிப் பயனுக்குப் பயன் கூறலும், பாயிரம் கூறினார் பெயர் கூறலும், பாயிரத்துக்கு இலக்கணம் கூறலும், அவை போல்வன பிறவும், பாயிரத்தோடு ஒத்த இலக்கணத்த என்று கொள்ளப்படும்.

'ஒத்த சூத்திரம்' என்ற தொல்காப்பிய மரபியல் நூற்பா உரையில் பேராசிரியர் பாயிரம் 'ஒத்த சூத்திரம்' என்பதனால் கொள்ளப்படும் என்று கூறிப் பாயிரத் தோடு ஒத்த இலக்கணத்தவாகிய சிலவற்றையும் கூறி யுள்ளார்.

சிவஞானமுனிவர், பன்னருஞ் சிறப்பின் நல்லா சிரியனை உணர்ந்து வழிபட்டு ஒரு நூல்கேட்பான் புகுந்த நன்மாணாக்கர்க்கு அந்நூலான் நுவலப்படுப் பொருளும், நூல் கேட்டலான் பெறப்படும் பயனும், கேட்டற்குரிய அதிகாரிகள் ஆவார். இவர் என்பதூஉம், இன்னது முற்றிய பின்னர் இந்நூல் கேட்கற்பாற்று என்னும் இயையும் உணர்ந்தன்றி நூல் கேட்டற்கண் மனஊக்கம் செல்லாமையின் இன்றியமையாச் சிறப்பின ஆகிய இந்நான்கும் ஒருதலையாக முன்னர் உணர்த்தல் வேண்டும்; இந்நான்கும் உணர்ந்த வழியும் கற்றுவல்ல சான்றோர் அல்லோரால் செய்யப்பட்ட நூல் ஆயின்

கூறியது கூறல் முதலிய குற்றம் உடைத்தாம் அன்றே எனவும், கற்றுவல்ல சான்றோரும் மற்றோர் கோட்பாடு பற்றிச் செய்யின் முனைவன் நூலொடு முரணும் அன்றே எனவும் ஐயுற்று ஊக்கம் செல்லாமையின், அவ்வையம் நீக்குதற்பொருட்டு ஆக்கியோன் பெருமையும் நூற் பெருமையும் அந்நூல் வழங்கும் நிலனும் அதன் முதல் நூலும் இன்ன என்பது தோன்ற, ஆக்கியோன் பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் உணர்த்தல் வேண்டும் எனச் சிறப்புப்பாயிரத்துள் எட்டும் தெரிவிக்கப்படல் வேண்டுவதன் இன்றியமையாமையை யாப்பு, கேட்போர் என்பனவற்றிற்குத் தாம்கொண்ட பொருளுக்கு ஏற்ப விளக்கியுள்ளார்.

அவருள், இந்நூற்பாயிரம் செய்தார் தம் மாணாக்கர் ஆகிய தம் புதல்வர் சதாசிவ நாவலர் என்று உணர்க.

சிறப்புப்பாயிரம்

'கடல்விளிம்பு உடுத்த கண் அகல் ஞாலத்து
அடரும்வல் இருள்துரந்து அனைத்தையும் விளக்கும்
பல்கதிர்ப் பருதியின் பரம்பரன் அருளால்
உள் அகத்து இருள்கடந்து உறுபொருள் எவற்றையும்
பால்படத் தொடுத்த பதினெண் மொழியுளும்
மேல்கடல் கீழ்க்கடல் வேங்கடம் குமரி
ஆகிய எல்லையுள் அருந்தமிழ்ப் பௌவத்து
எழுத்துமுதல் மூன்றையும் யாவரும் தெரியத்
தொகைவகை விரியின் பகருக என்னா
வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாதையர் அதிபன் வரகுண மேரு
கல்விக்கு எல்லை கருணைக்கு ஆகரம்
பெருமாள் மெய்த்தவப் பேறுஎனத் தோன்றிய
திருமால் உலகம் செவ்விதின் புரக்கும்
மேதகு புகழ்த்திரு வேங்கட நாதன்
ஓதினன் ஆக உவகைமீ தூர

முன்னோர் நூலின் முடிவு நோக்கிச்
சொல்லும் பொருளும் ஒல்வன தழீஇப்
பல்சுவைக் கரும்பின் ஒருவட்டு ஏய்ப்ப
இலக்கண விளக்கம் என்றுஒரு பெயர்நிறீஇப்
புலப்படுத்து இயல்உறப் பொருள்விரித்து உரைத்
[தனன்
பவத்தொகை அகற்றும் தவத்தின்வரம்பு ஆனோன்
பன்மீன் நாப்பண் பால்மதி போல
வன்மீக நாத மாதவன் வரத்தால்
அந்தண் ஆரூர் வந்துஅருள் செல்வன்
வலம்புரி ஒருமுத்து அன்ன
நலம்புரி வைத்திய நாததே சிகனே'.

இதன் பொருள்: கடலினைத்தன் மருங்கு இடத்தே சூழ்ந்த இடம் அகன்ற உலகின்கண்ணே செறிந்த கடிதாகிய இருளை ஓட்டி நிலம் நீர் முதலிய எல்லாப் பொருள்களையும் விளக்கும் பல கிரணங்கள் உடைய ஞாயிறுபோல, எவற்றிற்கும் மேலான இறைவன் தனது அருளினாலே உள்ளத்திடத்து அவிச்சையை அகற்றி உறுதிபயக்கும் அறம் முதலிய பொருள் எல்லாவற்றை யும் பகுதிப்பட விளக்கிய பதினெட்டு மொழியுள்ளும், குடகடலும் குணகடலும் வடவேங்கடமும் தென்குமரி யும் ஆகிய நான்கு எல்லைக்குள் வழங்கும் அரிய தமிழா கிய கடலிடத்து உளவாகிய எழுத்தும் சொல்லும் பொரு ளும் ஆகிய மூன்றனையும் எல்லாரும் ஆராய்ந்து அறிதற்பொருட்டுத் தொகையானும் வகையானும் விரி யானும் கூறுவாயாக என்று அந்தணருள் திலகம்போலச் சிறந்தோன், குறுகலருக்கு ஒரு சிங்க ஏறுபோல்வான், 'மாதை என்னும் நகரத்து உள்ளார்க்குத் தலைவன், நற்குணங்கள் எல்லாம் திரண்டதொரு மேருமலை,' கல்வியாகிய கடலுக்கு ஒருவரம்பாய் உள்ளான், அருளி னுக்குப் பிறப்பிடம் ஆயினோன், பெருமாள் என்னும் வேதியன் உண்மைத் தவத்தினால் பெற்றபேறு என்று

உலகத்தார் வாழ்த்த உதயஞ் செய்த திருமால், உலகத்தை எல்லாம் நீதிகோடாமல் காத்து அருளு கின்ற தலைமைபூண்ட புகழைப் பொருந்திய திருவேங் கடநாதன் என்னும் இயற்பெயரை உடையோன் அருளிச் செய்தனன் ஆக, மகிழ்ச்சி மேல்மேல் கிளைப்ப, முன்னோர் கூறிய நூல்களினுடைய முடிபினை ஐயம் திரிபு அற ஆராய்ந்து' அவர் ஓதிய சூத்திரத்துள்ளும் அவற்றின் பொருளுள்ளும் ஈண்டைக்குப் பொருந்துவன வற்றை அணைத்துக்கொண்டு, பலவாகிய சுவையை உடைய கரும்பினின்றும் உளதாகிய ஒரு சருக்கரைக் கட்டிபோல, இலக்கண விளக்கம் என்னும் ஒரு பெயரை நிலைநிறுத்தி விளக்கி, உண்மையுற எழுத்து முதலிய மூன்று பொருளையும் தெளியக் கூறினான்: பிறவித் துன்பம் முழுதையும் போக்கும் தவத்திற்கு ஓர் அணை ஆயினோன், தாரகா கணங்களின் நடுவண் விளங்கும் வெண்திங்கள்போல, வன்மீகநாதன் என்னும் பெரிய தவத்தினை உடையோன் வரத்தினால் திருவாரூரில் உதயம் செய்த திருவாளன், வலம்புரிச்சங்கம் ஈன்ற தனி முத்தம் போன்ற நல்லொழுக்கங்களை மேற்கொண்டு செலுத்தும் வைத்தியநாதன் என்னும் இயற்பெயரை உடைய குரவன் என்றவாறு.

'வைத்தியநாதன்' எனவே ஆக்கியோன் பெயரும், 'முன்னோர் நூலின் முடிபு நோக்கி' எனவே வழியும், 'மேல் கடல் கீழ்க்கடல் வேங்கடம் குமரி ஆகிய எல்லை' யின் எனவே எல்லையும் 'இலக்கண விளக்கம் என்று ஒரு பெயர் நிறீஇ' எனவே நூற்பெயரும், 'தொகை வகை விரியின் பகருக என்னா' எனவே யாப்பும், 'எழுத்து முதல் மூன்றையும்' எனவே நுதலிய பொரு ளும், 'யாவரும் தெரிய' எனவே பயனும், 'மேதகு புகழ்த் திருவேங்கடநாதன் ஓதினன் ஆக' எனவே காரணமும், அவன் காலத்து எனவும், அவன் அவைக் களத்து எனவும், அவன் அவை உள்ளார் கேட்டார்

எனவும், காலமும் களனும் கேட்டோரும் ஆகிய பதினொரு வகையும் இச்சிறப்புப் பாயிரத்துள் போந்த வாறு உணர்க.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

இலக்கண விளக்க நூலின் சிறப்புக்கண்டு பொறாதார் ஆகிய ஒருசிலர் சிவஞானமுனிவரை வேண்டினாராக, அவர்கள் மனம் அமைதியுறுவதற்காகச் சிவஞான முனிவரால் இந்நூற் கருத்துக்கள் சில ஏலாதன என்று மறுக்கும் வாயிலாக இலக்கண விளக்கச் சூறாவளி என்ற நூலொன்று இயற்றப்பட்டது. பவத்தொகை அகற்றும் தவத்தின் வரம்பு ஆனவர் ஆகிய இவ்வாசிரி யரைச் சூறைக்காற்று என் செயல் இயலும்? அச் சூறாவளி அநியாய கண்டனம் என்று அறிஞர் பலரும் உட்கொண்டார் ஆகவே, அதனால் இந்நூற் பெரு மைக்கு இழுக்கு ஒன்றும் ஏற்பட்டிலது. எனினும், சூறாவளியின் கருத்துக்களையும் அறிதல் வேண்டும் என்ற அவா உடையார்க்குப் பயன்படும் வகையான் சூறாவளியும் இயையுடைய இடங்களில் எல்லாம் இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

இலக்கண விளக்கச் சூறாவளி
பாயிரம்

முன்னர்ப் பாயிரத்தை வைத்து இது பாயிரம் என்று உரைத்துப் பின்னர் அது கேட்ட மாணாக்கர்க்கு நூல் உரைப்பான் தொடங்கினார். இப்பாயிரம் உரைக்க வேண்டுவது என்னை என்னும் கடா நிகழ்தற்கு இடன் உளதாயவழி, இவ்விவ்வேதுக்களான் முன்னர்ப் பாயிரம் உரைக்க வேண்டும் என்று இறுத்தல் அமையும். அவ்வாறு ஓர் இயையும் இன்றித் ‘திருவிளங்கிய மாநகரம்’ முதலாக எடுத்து உரைக்கும் உத்தரம் செப்பு

வழுவும், மற்றொன்று விரித்தலுமாய் முடியும் என்று அறிக இவ்வாறு தொல்லாசிரியர் உரையாமையும் காண்க.

'கங்கை ஆடிப்போந்தேன்; ஒருபிடி சோறு தம்மின்'.

எனக் கடா இன்றியும் செப்பு நிகழ்ந்ததால் எனின், கொடுப்போன்பால் ஏற்போன் சென்றுழி அவன் 'யாண்டு வந்தாய்?' எனக் கடாவான் ஆயினும், கடா நிகழ்தற்கு இடம் உண்மையின் அதுவும் வினாய பொருளை அறிவுறுத்தலேயாம் என்க. அங்ஙனம் கொள்ளாக்கால், செப்பு இலக்கணம் பொருந்தாமை அறிக. வடநூலாரும் மேற்கோள் முன்னர்க் கூறியே பின்னர் ஏது முதலிய நான்கு உறுப்பும் ஒன்றன்பின் ஒன்று இயைபுபடக் கூறுமாறு அறிக. பரிமேலழகர் உரையாளர் பாயிரம் இயம்புதல் கடன் என்பது பற்றி, 'இந்திரன் முதலிய' முதலாகச் சிறப்புப்பாயிரமே உரை யாற் கூறினார். இது நிற்க.

அவயவம் ஆகிய பாயிரத்துள் அவயவி ஆகிய நூல் அடங்காது என்றார், அவற்று இயல்பு உணராமையின். அன்றியும் ஆசிரியர் தொல்காப்பியனார் நூலின் இயல்பு மரபியலுள் கூறினார். 'மூன்று உறுப்பு அடக்கிய பிண்டத்தானும் எனவும், 'ஒத்துப்படலபம் என்னும் உறுப்பின்' எனவும் கிளந்து ஓதுதலின் அஃது அவயவம் என்பது அவர் அறிந்திலர் போலும், இன்னும் 'நூல் நுதல் பொருளைத் தன்னகத்து அடக்கி' என்பதனைத் தழீஇயினார் ஆகலின், நூலியல்பு பாயிரத்துள் அடங் காது என்றல் அவர்க்குங் கருத்து அன்று என மறுக்க.

சிறப்புப்பாயிரத்துள் ஆக்கியோன் பெயர் முதலிய வற்றிற்கு எடுத்துக் காட்டினவற்றுள் சிலபொருந்தாமை தொல்காப்பியப்பாயிர விருத்தியில் விரித்து உரைத்தாம்; ஆண்டுக் காண்க.

பாயிரம் முற்றிற்று.

அமைதி

முன்னர்ப் பாயிரம் வைத்து இது பாயிரம் என்று உரைத்துப் பின் அது கேட்ட மாணாக்கர்க்கு நூல் உரைப்பான் தொடங்கியது வழு என்றார் முனிவர்.

ஒரு புடையானும் அறியாத மாணாக்கனுக்கு ஆசிரியன் தானே எடுத்து விளக்கம் தருதல் மரபு என்பது, முற்பட்ட இறையனார் களவியல் உரை முதலியவற்றால் பெறப்படுதலின், முனிவர் கூறிய குறை புரைபடுமாறு அறிக.

நூலின் இயல்பு பாயிரத்துள் அடங்காது என்ற இலக்கண விளக்க நூலார் கொள்கையை அடுத்தபடியாக மறுத்துள்ளார்.

'நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்'. நன்-3

என்ற நூற்பாவினை உட்கொண்டு முனிவர் குறிப்பிட்டுள்ள செய்தி பொருந்துவதன்று என்று சண்முகனார் முனிவர் கருத்தை மறுக்கும் வாயிலாக, இலக்கண விளக்கச் செய்தியே சான்றோர் கருத்தாகும் என்பதை விளக்கியுள்ளார். அதன் சுருக்கம் பின்வருமாறு:

'நூல்நுதல் பொருளைத் தன் அகத்து அடக்கி' என்பது நூல் இன்ன இலக்கணத்தது என்பதை விளக்குவது அன்று. இந்நூல் தமிழை நுதலிற்று, அறத்தை நுதலிற்று, பொருளை நுதலிற்று, இன்பத்தை நுதலிற்று எனக் கூறி, ஆக்கியோனால் நூலுள் கூறப்படாத செய்தியைச் சொல்லுவதேயாம். அவர் கூறியவாறு நூல் அவயவியும் நூல் இயல்பு அவயவமும் ஆயினும், அவயவி ஆகிய உடம்பில் கண் காது முதலிய அக உறுப்பும், மூக்குக்கண்ணாடி முதலிய புறஉறுப்பும்

அடங்குமாறு போல, நூலாகிய அவயவியில் சூத்திரம் ஓத்துப்படலம் நூலியல்பு முதலிய அகஉறுப்பும், ஈவோன்தன்மை முதலிய புறஉறுப்பும் அடங்கும் எனல் பொருந்துமே அன்றி, கண்ணாடியாகிய புறஉறுப்பில் கண்ணாகிய அகஉறுப்பு அடங்கும் என்பது பொருந் தாதது போலப் பாயிரம் ஆகிய புறஉறுப்பில் நூல் இயல் பாகிய அகஉறுப்பு அடங்கும் எனல் பொருந்தாது என்பது. (பா. வி. 137, 138 ப)

யாப்பு, கேட்போர் என்பனவற்றிற்கு முன்னோர் கருத்தொடு முரணி முனிவர் உரைத்தன பொருந்தாக் கருத்துக்கள் என்பது முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

பாயிரச் செய்திகள் முற்றும்.

இலக்கண விளக்கம்

முதலாவது எழுத்ததிகாரம்

முதலாவது எழுத்தியல்

நற்சிறப்புப்பாயிரம்

'மலைமகள் ஒருபால் மணந்துஉலகு அளித்த
தலைவனை வணங்கிச் சாற்றுவன் எழுத்தே'

என்பது சூத்திரம். இவ்வதிகாரம் எழுத்து உணர்த்தினமையின் எழுத்ததிகாரம் என்னும் பெயர்த்து. எழுத்தை உணர்த்திய அதிகாரம் என விரிக்க. எழுத்து என்றது அதன் இலக்கணத்தை. அதிகாரம் என்றது முறைமை. இவ்வதிகாரத்துள் ஐவகை ஓத்தினான் எழுத்து இலக்கணம் உணர்த்துகின்றார். அவற்றுள் இம்முதல் ஓத்துமொழி ஆக்கமும் அம்மொழிகள் தம்மொடும் உருபொடும் புணர்வுழித் தோன்றும் செய்கையும்போல் அன்றி, தனித்தும் மொழிப்படுத்தும் எழுத்தின்கண் கிடப்பனவாகக் கூறும் எண் பெயர் முதலிய பத்து இலக்கணமும் உணர்த்திற்று ஆகலின் எழுத்தியல் என்னும் பெயர்த்து. இதனுள் இத்தலைச் சூத்திரம், கூறத் தொடங்கிய பொருள் இனிது முடியும் பொருட்டு வணக்கமும், அதனான் முடிபு எய்தும் பொருளும் உணர்த்துவது ஆகிய சிறப்புப்பாயிரம் கூறுகின்றது.

இதன் பொருள்: மலை அரசன் மகளாகிய உமாதேவியைத் தனது ஒரு கூற்றின்கண்ணே கலந்து உலகத்தைப் படைத்த இறைவனைத் தொழுது யான் கூறுவன் எழுத்திலக்கணத்தை என்றவாறு.

மலை என்பது மங்கல மொழி ஆதலின் முதற்கண் மங்கலம் கூறுதல் மரபு எனக்கருதி மலை என்றும், இந்நூல் நின்று நிலவுதல் வேண்டி மலைமகள் ஒருபால் மணந்து என்றும், மலரோன் செயலும் இவன் செயல் என்பார் உலகு அளித்த என்றும், யாவர்க்கும் உயர்ந் தோன் என்பார் தலைவன் என்றும், 'மனம் மொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே' என்ப ஆகலின், மனத்தால் துணிவு தோன்ற நினைத்தலும், மொழியால் பணிவு தோன்ற வாழ்த்தலும், தலையால் தணிவு தோன்ற இறைஞ்சலும் அடங்கப் பொதுப்பட வணங்கி என்றும், அவ்வாறு வணங்கியோனால் யாதும் முடிவு எய்துதலின் சாற்றுவன் என்றும் ஆகுபெயரான் எழுத் திலக்கணத்தை எழுத்து என்றும் கூறினார். மகளை என்னும் இரண்டன் உருபு விகாரத்தால் தொக்கது, சூத்திரமும் செய்யுளாகலான்.

விளக்கம் :- அதிகாரம் என்ற சொற்கு முறைமை என்றே நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் பொருள் கூறுவர். அதனையே இவ்வாசிரியரும் பின்பற்றினார் என்பது.

சேனாவரையர், வட நூலார் மதம் பற்றி, ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்று இயைதலை யும், ஒன்றன் பொருள்பற்றி வருகின்ற பல ஓத்துக் களின் தொகுதியையும் அதிகாரம் என்பர். இதனையே சிவஞான முனிவரும், வேந்தன் ஒருவன் தான் இருக்கும் இடத்திலேயே இருந்து ஒரு நாடு முழுதும் தன் ஆணை யின் நடக்கச் செய்யுமாறு போல, ஒரு சொல் இருந்த இடத்திலேயே இருந்து பல சூத்திரங்களும் பல ஓத்துக் களும் தன் பொருளே நுதலி வரச்செய்யும் எதோத்தேச பக்கம் என்றும், சென்று நடாத்தும் தண்டத்தலைவர் போல, ஓரிடத்துநின்ற சொல்லே பல சூத்திரங்களோடு சென்று இயைந்து பொருள்தரும் காரியகால பக்கம்

என்றும் அதிகாரம் இருவகைப்படும் என்று விளக்கிக் கூறுவர்.

இவரைப் பின்பற்றியே முத்துவீரிய நூலாரும்,

'எழுத்ததிகாரம் என்பது எழுத்தினது அதிகாரத்தை உடையது என அன்மொழித் தொகையாய்ப் படலத்திற்குக் காரணக்குறி ஆயிற்று. அதிகாரம் என்பது அதிகரித்தல்; அஃது இரு வகைப்படும். அவற்றுள் ஒன்று அரசன் இருந்துழி இருந்து தன் நிலம் முழுதும் தன் ஆணையின் நடப்பச் செய்வதுபோல், ஒருசொல் நின்றுழி நின்று பல சூத்திரங்களும் பல ஓத்துக்களும் தன்பொருளே நுதலிவரச் செய்வது; ஒன்று சென்று நடாத்தும் தண்டத்தலைவர்போல ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்று இயைந்து தன் பொருளைப் பயப்பது; எழுத்தை நுதலிவரும் பல ஓத்தினது தொகுதி எழுத்ததிகாரம் என்றாயிற்று என்க' என்றார்.

மொழி ஆக்கம்—எழுத்தினான் ஆக்கப்படும் மொழி பற்றிக் குறிப்பிடும் பதவியல் செய்தி,

செய்கை கூறுவன—உயிர் ஈற்றுப் புணரியல், மெய் ஈற்றுப் புணரியல், உருபு புணரியல் என்ற மூன்றும்.

எண்பெயர் முதலியன இவ்வியல் இரண்டாம் நூற்பாவில் கூறப்படுவன.

'மலைகள்........எழுத்தே' என்பது தற்சிறப்புப் பாயிரம் என்னை?

'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்புப் பாயிரம்'

ஆகலின்.

இங்ஙனமே நன்னூலார்,

'பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுநன்கு இயம்புவன் எழுத்தே'.

எனவும், சின்னூலார்

'பூவின்மேல் வந்தருளும் புங்கவதன் பொற்பாதம்
நாவினால் நாளும் நவின்றேத்தி—மேவுமுடிபு
எல்லாம் உணர எழுத்தின் இலக்கணத்தைச்
சொல்லால் உரைப்பன் தொகுத்து'.

எனவும், முத்து வீரியமுடையார்

'எப்பொருள் வயின்உயிர் எழுந்து மறைகுவது
அப்பொருள் அடிதொழுது அறைகுவன் எழுத்தே'.

எனவும், இங்ஙனமே இலக்கணத்தின் ஓரோர் பகுதியே இயற்றிய ஏனை நூலாரும் தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் எய்த உணர்த்துவது ஆகிய தற்சிறப்புப் பாயிரத்தைத் தத்தம் நூலின் முதல் பாவாக அமைத்துள்ளமை காண்க.

பார்வதி பாகன் ஆகிய சிவபெருமான் அருளால் உலகு தோன்றியது என்ற செய்தியை,

'நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே'.

என்ற ஐங்குறு நூற்றுக் கடவுள் வாழ்த்துப்பாடலும் குறிப்பிடுவது காண்க.

மனம் இவனே பரம்பொருள் என்று துணிவுகொண்டு ஈடுபடுதலும், மொழி அவனையே பரம்பொருளாகக் கொண்டு பணிவொடு பரவுதலும், மெய் அவனையே

வணக்கத்திற்கு உரியவனாகக் கருதி வளைந்து அவன் தாளை வணங்குதலும் ஆகிய மூன்று திறமும்

'உள்ளம் உரைசெயல் உள்ளஇம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்துஇறை உள்ளில் ஒடுங்கே'.

என்று கூறியாங்கு ஒருசேர வேண்டலின் 'மனம் மொழி மெய்களின் வணங்குதும்' என்றார். அ ஆ முதலிய வற்றின் பொதுப் பெயராகிய எழுத்து என்பது, தன்னை விடுத்துத் தன் இலக்கணத்தை உணர்த்தும்வழி தன்னொடு தொடர்பு உடைய பிறிது ஒரு பொருளைச் சுட்டுதலின் ஆகு பெயராம்.

இரண்டாம் வேற்றுமை உருபு உயர்திணைப் பெயர்க்கண் ஒழியாது வருதல் வேண்டும் என்பது விதி. ஆனால் செய்யுள் யாப்புக் கருதி 'ஆடூஉ அறிசொல்' என்பது போலச் சிறுபான்மை செய்யுள் விகாரத்தால் மறைந்தும் வருதல் கூடும். சூத்திரமும் எழுவகைச் செய்யுளுள் ஒன்று என்பது,

'பாட்டுஉரை நூலே வாய்மொழி பிசியே
முதுசொல் அங்கதம்என்று அவ்வேழ் நிலத்தும்'.

என்ற தொல்காப்பிய நூற்பா அடிகளான் உணரப்படும்.

இலக்கண விளக்கச் சூறாவளி
எழுத்ததிகாரம்.
எழுத்தியல்.

எழுத்ததிகாரம் என்புழி அதிகாரம் முறைமை என்றார். அதிகாரம் என்ற வடசொற்கு அது பொருள் அன்மை தொல்காப்பிய விருத்தியில் கூறியவாற்றான் அறிக.

1. 'மலைமகள் ஒருபால்'

மலைமகள் என்பது மலையும் மகள் எனவும் அமங்கலப் பொருள்தந்து 'தொகையார் பொருள் பல வாய்த் தோன்றலின்' மலை என்பதும், பொருளதிகாரத்துள், 'உமை உரு உருமடுத்து' என்னும் சூத்திரத்துள், 'ஏனையவற்றிற்கும் ஏற்குமாறு 'மலைமகள் ஒருபால்' என்னும் சூத்திரத்திற்கு உரைத்தாங்கு பொருள் விரித்துக் கொள்க' என்றமையின், ஈண்டு மலைமகள் ஒருபால் மணந்து என்றது இந்நூல் நின்று நிலவுதல் வேண்டி என்றார்க்கு, ஆண்டு இதற்கு மறுதலையாக 'உமை உரு உருமடுத்து' என்ற இந்நூல் நின்று நிலவாது இறுதல்வேண்டி எனப் பொருள் தருதலின் மலைமகள் ஒருபால் மணந்து என்பதும், உறுபொருள் முதலிய எல்லாவற்றிற்கும் உரிய வேந்தனை உலகு பொருட்கு உரியவேந்து என்றல் அவன் இறைமைக்கு ஏலாதவாறுபோல, ஐந்தொழிற்கும் உரிய தலைவனை உலகு அளித்த தலைவன் என்பது தலை அன்மையின் தலைவன் என்னும் பெயர்க்கு ஏலாமையின் உலகு அளித்த என்பதும், உலகு அளித்தல் என்றமையால் தலைவன் என்பதும், 'வில்வணக்கம் தீங்கு குறித்தமையான்' எனவும், 'முதிர்தலை வணங்கி' எனவும், 'வணங்கு நுண்மருங்குல்' எனவும் வணங்குதற்கு வளைவே பொருளாகக் கோடலின், தலையின் வினை ஆகிய இறைஞ்சுதலையே உணர்த்தும் என்பது பற்றிச் 'சொல்வணக்கம்' என்பது சொல்லாகிய வணக்கம் எனப் பொருள் உரையாது ஒப்புமைபற்றிக் கூறினமை தோன்றப் பரிமேலழகர் சொல்லினது வணக்கம் எனக் கூறினமையானும், 'மனம் மொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே' என்புழியும் ஒப்புமைபற்றிக் கூறியதேயாம் ஆகலானும் 'தாளை வணங்காத்தலை' எனவும், 'அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாத வழி' எனவும் கிளந்து ஓதுதலானும், வணங்

குதல் சிறப்பு வினை ஆவது அல்லது பொதுவினை ஆகாமையின் வணங்கி என்பதும், அவ்வப்பயன் குறித்து வாராமை அறிக. இவ்வாறு மேல் சொல்தொறும் உள்ள குற்றங்களைக் கூறின் விரியும் என்று ஒழிக.

சூறாவளியின் கருத்துப் பொருந்தாது என்பது.

'அதிகாரம் என்ற வடசொற்கு முறைமை என்ற பொருளும் உண்டு. ஆகலான் நச்சினார்க்கினியர் முதலாயினாரும் அவ்வாறே பொருள் கொண்டனர் ஆதலின் அதிகாரம் என்பதற்கு முறைமை என்று பொருள் கூறியது பொருந்துவதேயாம்.

மலைமகள் : மலையும் மகள் எனவும் அமங்கலப் பொருள் தந்து 'தொகையார் பொருள் பலவாய்த் தோன்றலின்,' மலைதல் மங்கலப் பயன் குறித்து வாராமை அறிக' என்றார்.

நன்னூலார் எடுத்து ஓதிய 'பூமலி' என்பது 'இலை நிறைந்த' என்றும் 'இடம் அகன்ற' என்றும் பொருள் தரத்தக்கது ஆகலின் 'தொகையார் பொருள் பலவாய்த் தோன்ற' இடம் இல்லையா? 'நீடாழி உலகம்' என்று மங்கலம் வகுத்த வில்லிபுத்தூர் ஆழ்வாரை அது 'நீள் தாழி' எனவும் பகுக்கக் கிடந்தது என்று குற்றப்படுத்தல் பொருந்துமா?

சிவதருமோத்திரத்தில் மறைஞானசம்பந்த நாயனார்
'மலைக்கு மகள் பெற்ற மகனைக் கயமுகனை'

என்று கொண்ட மங்கல மொழியாகிய மலை என்பதனை அமங்கலப்படுத்துதல் சாலுமா ?

இரண்டாவது 'மணந்து' என்பதும் ஒரு குற்றம். என்னை ?

இஃது ஈண்டு இந்நூல் நின்று நிலவுதல் வேண்டி என்றார்க்கு, மறுதலையாகப் பொருளதிகாரத்தில் 'உமை உரு உரு மடுத்து' என்பது இந்நூல் நின்று நிலவாது இறுதல்வேண்டி எனப் பொருள்தருதலின் என்றார்.

ஏனையவற்றிற்கும் ஏற்குமாறு பொருள் விரித்து உரைக்க என்று ஆசிரியர் கூறினாராக, இவரை ஏலாது பொருள் கொள்ளச் சொல்லியவர் யாரோ? இங்ஙனம் கொள்ளுவார் மனத்திரிபு போக்கற்கு அன்றோ 'ஏற்கு மாறு' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

மூன்றாவது: உறுபொருள் முதலிய எல்லாவற்றிற்கும் உரிய வேந்தனை உலகு பொருட்கு உரிய வேந்தன் என்றல் அவன் இறைமைக்கு ஏலாதவாறுபோல, ஐந் தொழிற்கும் உரிய தலைவனை உலகு அளித்த தலைவன் என்பது தலை அன்மையின் உலகு அளித்த தலைவன் என்றது குற்றம் என்றார்.

சொல்லதிகாரத்தில் 'உலகு புரந்தருளும்' எனவும் பொருளதிகாரத்தில் 'உலகு இளைப்பு ஒழிக்கும்' எனவும் ஆசிரியர் இறைவன் முத்தொழிலும் கூறிய புகுந்தார் ஆதலின் ஈண்டுப்பட்ட குற்றம் என்னோ? சான்றோர் ஆங்காங்குக் கூறிய கடவுள் வணக்கத்தில் கடவுள் தலைமை அனைத்தும் ஒருங்கு சொல்லாது இரண்டொரு குணம் மாத்திரையே விதந்து தலைமை கூறல் ஆகிய பெருவழக்கை ஒட்டியே, ஆசிரியர் இவ்வாறு கூறியுள்ளார் என்பது இலக்கண இலக்கியங்கள் கற்றார் அனைவரும் உணர்ந்துள்ள செய்தி யன்றோ!

நான்காவது: வணங்குதல் சிறப்புவினை ஆவது அல்லது பொதுவினை ஆகாமையின் வணங்கி என்பது குற்றம் என்றார்.

'மனம் மொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே' என்புழி ஒப்புமை பற்றிக் கூறியதேயாம் என்று யாப் பருங் கலக்காரிகை உதாரணப் பாடலுக்கு அமைதி தேடும் முனிவர், 'மனத்தால் துணிவு தோன்ற நினைத் தலும், மொழியால் பணிவு தோன்ற வாழ்த்தலும் தலையால் தணிவு தோன்ற இறைஞ்சலும் அடங்கப் பொதுப்பட வணங்கி' என்று கூறிய ஆசிரியர்மேல் குற்றம் சொல்வது என்னை? படைத்தலும் காத்தலும் அழிப்பில் ஒடுங்குவதால் ஒடுக்கத்திற்கே முதலிடம் கொடுப்பது போலவே, நினைத்தலும் துதித்தலும் உட் கொண்டே நடைபெறும் வணக்கத்திற்கு முதல் இடம் கொடுத்தல் வேண்டும். வில் வணக்கம் தீது குறிப்பது போலச் சொல் வணக்கம் நன்மை குறிக்குமே. தொடக் கத்தில் வளைதற் பொருளில் பிறந்த வணக்கம் ஒப்புமை பற்றி இப்பொழுது மனம் மொழி மெய் ஆகிய மூன்றற் கும் செல்லும் என்பது உணர்க.' என்று திருவாளர் தாமோதரம் பிள்ளையவர்கள் இலக்கண விளக்க நூலார் இந்நூற் பாவுரையாகக் கூறியனயாவும் அமைவுடை யனவே என்று நிறுவியுள்ளார்.

யாப்பருங்கலக் காரிகையின் பாடல் ;

மந்தா நிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நான் மலர்மிசை
எனவாங்கு,

இனிதின் ஒதுங்கிய இறைவனை

மனம் மொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே
என்பது. (1)

எழுத்திலக்கண வகை

'எண்பெயர் முறைபிறப்பு உருஅளவு முதல்ஈறு
இடைநிலை போலியொடு பதம்புணர்ப்பு உளப்பட
ஆறிரு பகுதித்து அதுஎன மொழிப'.

இது மேற்கூறுவல் என்ற எழுத்து இலக்கணம் இனைவகையான் உணர்த்தப்படும் என்று அதுபடும் பாகுபாடு தொகுத்த மொழியான் வகுத்துக் கூறு கின்றது.

இ-ள். எழுத்து இனைய என்கின்ற எண்ணும், இன்ன பெயரின என்கின்ற பெயரும், இன்ன முறையின என்கின்ற முறையும். இன்ன பிறப்பின என்கின்ற பிறப்பும், இன்ன வடிவின என்கின்ற வடிவும், இன்ன அளவின என்கின்ற அளவும், மொழிக்கு முதல் நிற்பன இவை என்கின்ற முதல் நிலையும், இறுதி நிற்பன இவை என்கின்ற இறுதி நிலையும், இடை நிற்பன இவை என்கின்ற மயக்கமும், சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள் போல இசைக்கும், அது கொள்ளற்க என விலக்கும் எழுத்துப் போலியும்-ஆகிய பத்தனொடு, அவ்வெழுத்தான் ஆகிய மொழியும், அம்மொழி தம் மொடும் உருபொடும் புணரும் புணர்ச்சியும் ஆகிய இரண்டும் கூடப் பன்னிரு வகையினை உடைத்தாம் மேற் கூறுவல் என்ற எழுத்து இலக்கணம் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

உரு என்றது ஈண்டு வரி வடிவை.—அதுமனத்தான் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தல் பொருட்டு, வட்டம் சதுரம் முதலிய வடிவிற்றாக வேறு வேறு எழுதப்பட்டுக் கட்புலனாயே நிற்பது. கட்புல னாகாது கருத்துப் பொருளாயே நிற்கும் ஏனைய வடிவும் தன்மையும் முதல்நூல் ஆசிரியனே உணரும் ஆகலின், ஏனையோரால் உணர்தல் அரிது. அவ்வடிவு

ஆராயுங் காலத்துக் குழல் அகத்தில் கூறின் குழல் வடிவும், குடத்து அகத்தில் கூறின் குட வடிவும், வெள்ளிடையில் கூறின் எல்லாத் திசையும் நீர்த்தரங்கம் போலவும் பெற்ற பெற்ற வடிவே தமக்கு வடிவாம் என்று உணர்க.

எழுத்துக்களது குறைவும், கூட்டமும், பிரிவும், இனமும், ஒன்று பல ஆதலும், திரிந்ததன் திரிபு அது என்றலும், பிறிதுஎன்றலும்,அதுவும் பிறிதும் என்றலும், நிலையிற்று என்றலும், நிலையாது என்றலும், நிலையிற்றும் நிலையாதும் என்றலும் ஆகிய இன்னோரன்ன பல வகையான் உணர்த்துவாரும் உளர். அவற்றுள் திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்றலும், நிலையிற்றும் நிலையாதும் என்றலும் ஆகிய இந்நயம்பற்றி இவர் இலக்கணம் கூறாமையின் இவை ஒழித்து ஏனைய எல்லாம் இப்பன்னிரு பகுதியுள் அடங்கும். அவை அடங்கும் இடத்து, எழுத்துக்களது குறைவும் கூட்டமும் பிரிவும் சார்பின் தோற்றத்தும், இனம் பெயருள்ளும் முறையுள்ளும், ஒழிந்தன எல்லாம் புணர்ச்சிக்கண்ணும் அடங்கும். அஃது ஆங்காங்கு உணர்க.

விளக்கம்:- ‘சாற்றுவன் எழுத்தே’ என்பது பிண்டச் சூத்திரம் இஃது அவ்வெழுத்துப் பன்னிரண்டு வகையான் விளக்கப்படும் என்றலின் தொகைச் சூத்திரம் ஆயிற்று.

எழுத்துப் போலி பற்றி இவ்வாசிரியர் சுட்டிச்செல் லும் செய்தி நச்சினார்க்கினியர் உரையை உட்கொண்டு எழுதப்பட்டது. எழுத்துப் போலியும் தொடை முதலியவை நோக்கிச் செய்யுளுக்கு இன்றியமையாதது ஆதலின், அதுவும் விலக்கற்பாற்று அன்று என்பதே இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம் முதலிய நூற் கருத்தாகும்.

மொழி தம்மொடு புணர்தலாவது பெயர்வினை இடைஉரி என்ற நால்வகைச் சொற்களும் நிலைமொழி களாகவும் வருமொழிகளாகவும் வந்து இயல்பாகவும் திரிந்தும் தம்முள் கூடுதல்.

நச்சினார்க்கினியர் பாயிர உரையில் வடிவு என்பதற்குத் தந்துள்ள விளக்கத்தையே இவ்வாசிரியர் உரு என்பதற்கு ஈண்டுக் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்து ஒலி வடிவினதாக மாத்திரம் இருப்பின், ஒரு முறைகேட்ட அளவிலேயே உள்ளத்து அமைக்கும் நல்லறிவு உடையோர்க்கே பயன்படல் கூடும். அதனைக் கேட்பாரேயன்றிப் பிறரும் பிற்காலத்தாரும் பயன்படுத்தல் இயலாது. ஆதலின் எல்லோருக்கும் பயன்படுமாற்றான் வரி வடிவு தோன்றிற்று.

ஒலி வடிவின் நுட்பத்தை முதல்நூல் ஆசிரியனே முற்ற உணர்தல் கூடும். ஒலிக்குத் தனியே வடிவம் இல்லை. அதுசார்ந்த பொருளின் வடிவே தன்வடிவாகக் கொள்வது. நீர் அலை கடலின் எல்லாத்திசைக்கண்ணும் காணப்படுமாறு போல, ஒலி அலையும் எல்லாத்திசையும் பரவிப்பயன்தரும்.

இனி, நச்சினார்க்கினியர் தொல்காப்பியப்பாயிர உரையுள் ''எழுத்து என்றது யாதனை எனின் கட்புலன் ஆகா உருவும் கட்புலன் ஆகிய வடிவும் உடைத்தாக வேறு வேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம்; ஈண்டு உரு என்றது மன உணர்வாய் நிற்கும் கருத்துப் பொருளை; அது செறிப்பச் சேறலானும், செறிப்ப வருதலானும்,இடை எறியப்படுதலானும், இன்பத்துன்பத்தை ஆக்கலானும். உருவும் உருவும் கூடிப்பிறத்தலானும், உந்தி முதலாகத்தோன்றி எண் வகை நிலத்தும் பிறந்து கட்புலனாம் தன்மை இன்றிச் செவிக்கண் சென்று உறும்

ஊறு உடைமையானும், விசும்பில் பிறந்து இயங்குவது ஒரு தன்மை உடைமையானும், காற்றின் குணமாயது ஓர் உருவாம்; வன்மை மென்மை இடைமை கோடலானும் உருவே ஆயிற்று. இதனைக் காற்றின் குணமே என்பது இவ்வாசிரியர் கருத்து; இதனை விசும்பின் குணம் என் பாரும் உளர். இவ்வுரு 'உரு உருவாகி' (தொல்-17) எனவும், 'உட் பெறுபுள்ளி உருவாகும்மே' (தொல்-14) எனவும் காட்சிப் பொருட்கும் சிறுபான்மை வரும்.

வடிவாவது கட்புலனாகியே நிற்கும். அது வட்டம் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றனை உணர்த் தும், மனத்தான் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறு வேறு வடிவம் காட்டி எழுதப்பட்டு நடத்தலின், கட்புலன் ஆகிய வரிவடிவும் காட்டி எழுதப்பட்டு நடத்தலின், கட்புலன் ஆகிய வரிவடிவும் உடைய ஆயின. பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினார். 'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே' (தொ.16) என உயிர்க்கும் சிறுபான் வடிவு கூறினார்'' என்று கூறிய செய்திகளும்,

'எழுத்தெனப்படுப' என்னும் தொல்காப்பிய முதல் நூற்பாவுரையில், ''இவ்வெழுத்து எனப்பட்ட ஓசையை அரு என்பார் அறியாதார். அதனை உரு என்றே கோடும். அது செறிப்பச் சேறலானும், செறிப்ப வருதலானும், இடை எறியப் படுதலானும், செவிக்கண் சென்று உறுத லானும், இன்பத் துன்பத்தை ஆக்குதலானும், உருவும் உருவும் கூடிப் பிறத்தலானும், தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்று இடத்தும் நிலை பெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப் பிறக்கும் என்றமையானும் உருவேயாம். அருவேயாயின் இவ்விடத்திற் கூறியன இன்மை உணர்க. அல்லதூஉம் வன்மை மென்மை இடைமை என்று ஓதினமையானும் உணர்க. உடம்பொடு புணர்த்தல் என்னும் இலக்கணத் தான் இவ்வோசை உருவாதல் நிலைபெற்றது என்று உணர்க. அதற்குக் காரணமும் முன்னர்க் கூறினாம்.''

''இவ்வெழுத்துக்களின் உருவிற்கு வடிவு கூறார் ஆயினார், அது முப்பத்திரண்டு வடிவினுள் இன்ன எழுத்திற்கு இன்ன வடிவு எனப் பிறர்க்கு உணர்த்துதல் அரிது என்பது கருதி; அவ்வடிவு ஆராயுமிடத்துப் பெற்ற வடிவே தமக்கு வடிவாம்; குழல் அகத்தில் கூறின் குழல் வடிவும், குடத்து அகத்துக் கூறின் குட வடிவும், வெள்ளிடையில் கூறின் எல்லாத் திசையும் நீர்த்தரங்கம் போல'' எனவும் கூறிய செய்திகளை இயைபு பற்றிக் கொள்க.

எழுத்துக்களது குறைவும்........... இன்னோரன்ன பல வகையான் உணர்த்துவாரும் உளர்—என்ற பகுதி தொல்காப்பிய முதல் நூற்பா உரையுள் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ள செய்தியேயாகும். எழுத்துக்களது என்ற சொல்லைக் குறைவும் கூட்டமும் முதலியவற்றோடு தனித்தனியே கூட்டிக் கொள்க. என்னை ? அது என்பது ஆறாம் வேற்றுமையின் ஒருமைஉருபு ஆதலின் அது பன்மைச் சொற்கொண்டு முடிதல் ஏற்புடைத்து அன்மையின்.

எழுத்துக்களது குறைவு—குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக் குறுக்கம் என்பன.

கூட்டம் : உயிர்மெய், உயிரளபெடை ஒற்றளபெடை என்பன.

பிரிவு : உயிர்மெய் எழுத்தை மெய்யும், உயிருமாகப் பிரித்துக் கொள்ளும் திறம்.

இனம : குறிலுக்கு நெடில் இனம். வல்லினத்துக்கு மெல்லினம் இனம். இடையினத்துக்கும் ஆய்தத்திற்கும் இனம் இல்லை. இனம் பற்றியே குறிலையடுத்து நெடிலும், வல்லினத்தையடுத்து மெல்லினமும் வைக்கப் பட்டன.

ஒன்று பல ஆதல்: ஒரே தொடர் மொழியே வெவ்வேறு பொருள்தரும் இரண்டு முதலிய வகைகளாகப் பிரிக்கப்படுதல். செய்பொன்பதின்றொடி என்ற தொடரே செம்பொன் பதின்தொடி எனவும், செய்பு ஒன்பதின் தொடி எனவும் இருவாறு பிரிக்கப்படுதல் போல்வன இதற்கு எடுத்துக்காட்டு.

திரிந்ததன்திரிபு அது என்றல்: ஒரு சொல் புணர்ச்சிக்கண் பிறிது ஒரு சொல்லாகத் திரிந்தாலும், அத்திரிந்த சொல்லை அடிப்படைச் சொல் போலவே கொண்டு புணர்ச்சி முடிபு கோடல். முள் என்ற ளகர ஈற்றுச்சொல் வருமொழி முதற்கண் தகரம்வரின், ஈற்று ளகரம் ஆய்த மாகத் திரியும். அங்ஙனம் திரிந்தாலும், முள் என்பது நிலைமொழி ஆகியவழி வருமொழித் தகரம் டகரமாகத் திரிதல் போலவே, முஃ என்பதன் முன்னும் தீது என்பது டீது என்றாகி முஃடீது எனப் புணர்ச்சி முடிபு கொள்ளும் என்பது போல்வன இதற்கு எடுத்துக்காட்டு.

திரிந்ததன் திரிபு பிறிது என்றல்: நிலைமொழி இறுதி மெய்யீறு புணர்ச்சிக்கண் கெட, ஈற்றயல் எழுத்தே விதி உயிர் ஈறாய் நின்ற வழி, அச்சொல்லில் முன்பு இருந்த மெய்யீற்றை விடுத்துப் புணர்ச்சிக்கண் விதியீறாய் நிற்கும் எழுத்தையே ஈற்றெழுத்தாகக்கொண்டு புணர்ச்சி விதி கூறல். மரம் என்ற நிலைமொழி கட்டை என்ற வருமொழியொடு புணரும்வழி 'மவ்வீறு ஒற்றழிந்து' (எழு—129) என்பதனால் மகரம் கெட, மர என ஈற்று அயல் எழுத்தே ஈற்று எழுத்தாய் நின்றவழி, அவ்விதி உயிர் ஈற்றையே ஈற்று எழுத்தாய்க் கொண்டு, 'இயல்பி னும் விதியினும்' (எ—82) என்பதனான் வல்லெழுத்து மிகுத்து மரக்கட்டை என்று முடித்தல் போல்வன இதற்கு எடுத்துக்காட்டுக்களாம். திரிந்தது-மரம் என்ற சொல்; அதன் திரிபு மர என்ற சொல்; பிறிது-இரண்டும் வெவ்வேறு;மரம் என்பதற்கு உரிய முடிபு மர என்பதற்கு இல்லை என்பது—போல்வன.

அதுவும் பிறிதும் எனல்: தான், யான், தாம், யாம், நாம், நீ, நீயிர் என்பன உருபு ஏற்கும்போது நெடுமுதல் குறுகி முறையே தன், என், தம், எம், நம், நின், நும் எனத் திரியும். இவை ஆறன் உருபு ஏற்கும் வழி அகரச் சாரியை பெற்று முறையே தன, என, தம, எம, நம, நின, நும என ஆகும். அது என்ற ஆறன் உருபு இவற்றொடு வருமொழியாய் வந்து புணரும் வழி நிலை மொழிகளாகிய தன முதலியவற்றின் முன் வருமொழி யாகவரும் அது உருபின் அகரம் கெடும் என்பது 'ஆறன் உருபின் அகரக்கிளவி—ஈறாகு அகர முனைக் கெடுதல் வேண்டும்' (தொல்-115) என்பதனால் பெறப்படும். இவ்வாறு நிலைமொழி ஈற்றில் வரும் அகரம் வேறு, வருமொழி முதற்கண் வரும் அது என்ற உருபின் அகரம் வேறு என, ஒன்று போலக் காணப்படும் இரண்டனை வெவ்வேறாகக் கூறுவது போல்வன அதுவும் பிறிதும் என்பதற்கு எடுத்துக்காட்டு.

நிலையிற்று என்றல் : நிலைமொழியும் வருமொழி யும் பொருள் பொருத்தம் உறப் புணரும் என்பது. அதற்குச் சாத்தன் கை, சாத்தன் உண்டான் என்பன போல்வன எடுத்துக்காட்டு.

நிலையாது என்றல்: நிலைமொழியும் வருமொழியும் தழாஅத் தொடராய்ப் பொருள் பொருத்தம் அற 'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின், பரல் அவல் அடைய இரலை தெறிப்ப' என்ற செய்யுள் அடிகளில் மருப்பின் என்பதும் பரல் என்பதும் தம்மில் பொருள் பொருத்தம் அறத் தொடர்ந்துள்ளமை போலப் புணர்தல்.

நிலையிற்றும் நிலையாதும் என்றல் : ஓர் ஈற்றுச் சொற்களுள் ஒன்றற்குக் கூறிய விதி மற்றொன்றற்குப் பொருந்தாததாதல், ஆகார ஈற்று ஓரெழுத்து மொழியும் குறில்நெடில் மொழியும் அகரம் ஆகிய எழுத்துப்பேறு அளபெடை பெறும் என்று

'குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி' தொல்-226

என்ற விதியான் உரிய அகரத்தை,

இரவுக் காலத்தைக் குறிக்கும் இரா என்ற சொல் பெறாது என்பது,

'இராஎன் கிளவிக்கு அகரம் இல்லை'. தொல்-227

என்ற விதியால் விலக்குதல் போல்வன இதற்கு எடுத்துக்காட்டு.

இந்நூலில் புணர்ச்சிச் செய்திகளை எளிமையாகத் தெரிவித்தல் வேண்டும் என்ற கருத்தான் அதுவும் பிறிதும் என்பதும், நிலையிற்றும் நிலையாதும் என்பதும் இடம் பெறவில்லை. ஒழிந்தனவாகிய ஒன்று பல ஆதல் முதலிய ஐந்தும் குறிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் சார்பெழுத்துக்களைக் கூறுமிடத்து இவ்வாசிரியர் எழுத்துக்களுடைய குறைவும் கூட்டமும் பிரிவும் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். பெயர் முறை என்பனவற்றை விளக்குமிடத்து இனம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

உயிரீற்றுப் புணரியல் முதலிய மூன்றனுள்ளும் ஒன்று பல ஆதல், திரிந்ததன் திரிபு அது என்றல், பிறிது என்றல், நிலையிற்று என்றல்: நிலையாது என்றல் என்ற ஐந்தும் ஆட்டாண்டுக் குறிக்கப் பெற்றுள்ளன.

இலக்கண விளக்கச் சூறாவளி

எண்ணுதற்கும் பெயர் கருவீயாதலின் அதனை முற் கூறாதது முறை அன்று; எண்ணும் முறையும் போல்வன வற்றால் ஒரு பயன் இன்மையின், அவற்றை வகையுள் சேர்த்துக் கருவி செய்தல் பயனில் கூற்றாமாறு அறிக.

போலி எழுத்து என ஒன்று இல்லை என்பது தொல்காப்பிய முதல் சூத்திர விருத்தியுள் காண்க.

அமைதி

இக்கூற்று முனிவர் உரைவரைந்த நன்னூலுக்கும் மறுப்பாக அமைதலின், நன்னூலைப் போற்றி இந் நூலைக் குறை கூறுதல் போலி மறுப்பாம்.

எழுத்து என்ற பொதுப் பெயரைத் தலைப்பில் இட்ட பிறகே எண் கூறலானும், எழுத்ததிகாரத்தில் எழுத்தின் நெடுல்கணக்கு முறையினைக் காரணத்தொடு விளக்கிக் கூறுவதுபின் புணர்ச்சிக்குப்பயன் தருதலானும் அவற்றைக் கூறலும் பயன்உடைய செயலேயாம் என்க. போலி பற்றி அந்நூற்பா உரையில் காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை
முதல்ஈறு இடைநிலை போலி என்றா
பதம்புணர்ப் பெனப்பன் னிருபாற்று அதுவே'.

நன்-57

'எண்ணும்பெயரும் முறையும் இயன்றதன்பின்
நண்ணிவரு மாத்திரையும் நற்பிறப்பும்—கண்ணா
வடிவும் புணர்ச்சியும் ஆயவோர் ஏழும்
கடிஅமரும் கூந்தலாய் காண்'.

நே. சிறப்புப்பாயிரம்

'தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும்
சாற்றுளித் தோன்றும் தான்எழுத்து இயல்பே'.

தொ. வி-2

'முதல் சார்பு உயிரே மூவினம் மெய்யே
முதற்கண் எழுத்தே மொழிஈற்று எழுத்தே
உயிர்மெய் குறில்நெ டிலோடு ஆய்தம்
ஆறு குறுக்கம் அளபெடை இரண்டும்
மாத்திரைப் புணர்ப்புஎன வகைப்படும் எழுத்தே'.
தொ. வி. 4

எழுத்திலக்கணமும் எழுத்து வகையும்

'மொழிக்கா ரணமாம் நாதகா ரியஒலி
எழுத்துஅது முதல்சார்பு எனஇரு வகைத்தே'.

இதுமேல் எழுத்து என்றது இன்னது என்பதூஉம் அதன் பகுதியும் உணர்த்துகின்றது.

(இ-ள்) மொழிக்கு முதற்காரணம் ஆகியும் நாதத்தினது காரியம் ஆகியும் வரும் ஓசை எழுத்து எனப்படும். அவ்வெழுத்து முதல் எழுத்தும் சார்பு எழுத்தும் எனஇரு பகுதியை உடைத்தாம் என்றவாறு.

எழுத்து ஓசை காரணம் ஆமாறும் மொழி காரியம் ஆமாறும், நாதம் காரணம் ஆமாறும் எழுத்து ஓசை அதன் காரியம் ஆமாறும், பதவியல் உள்ளும் பிறப்பியல் உள்ளும் முறையே காண்க.

கடல் ஒலி சங்கு ஒலி முற்கு வீளை இலதை முதலிய ஒலிகள் எழுத்து எனப்படா; அவை மொழிக்குக் காரணம் ஆகாமையின்.

விளக்கம் : மேல் எழுத்து என்றது—முதல் நூற்பாவில்கட்டப்பட்ட எழுத்து.

இவ்வாசிரியருக்கு இறைவனுடைய மாயையின் காரியமே உலகம் என்பது கருத்து ஆதலின், மாயையின் செயலாகிய நாதத்தை எழுத்தொலிக்கு முதற்காரண

மாகக்கொண்டார். நாதத்தின் காரியமாகிய எழுத்தொலி சொல்லுண்டாதற்குக்காரணமாய்ப்பின்னர் அமைந்தது.

நன்னூலார் சமணர் ஆதலின் அவருக்கு மாயை உடன்பாடு அன்று. நாம் இவ்வுலகம் நிலையற்றது என்ற கருத்தான் 'மன்னா உலகம்' என்று கூறவும், சமணர் 'மூவா முதலா உலகம்' என்று கூறுவர். சிதலது நிர்வாய்ச் சிறுதுகளால் பெரும்புற்று உரு அமைந்த பெற்றியைப் போல உலகில் காணப்படும் ஐம்புலப் பேருரு எல்லாம் நிலம் நீர் தீக்காற்று விசும்பு என்ற ஐந்து அணுக்கள் பலவாகக்கூடும் கூட்டத்தினாலேயே உண்டாகின்றன. அவை அழியும்போது அவற்றில் கலந்துள்ள ஐந்து அணுக்களும் தனித்தனியே பிரிந்து தத்தம் அணுக்களோடு சேர்ந்துவிடுகின்றன ஆதலின் உலகில் அழிவு என்பதே இல்லை என்று கொள்ளும் சமணர்கள் ஒலி அணுக்களே மொழி தோன்றுவதற்குக் காரணமாகிய எழுத்தின் தோற்றத்திற்குக் காரணம் என்றனர். மயிலைநாதர் சிறப்புடைமை பற்றி ஒலி யெழுத்தை எடுத்து ஓதினார் என்பர். உணர்வு எழுத்து முதலான விகற்பமெல்லாம் அதிகாரப் புறனடையால் கொள்க என்றார். 'பொருள்முதல் ஆறோடு' நன்-289 என்ற ஆகுபெயர் நூற்பாவால் மயிலைநாதர் எழுத்து என்பது அப்பொருளை உணர்த்தின் இயற்பெயராம். இவ்வதிகாரம் எழுத்து என அதனைச் சொல்லும் அதிகாரத்தை உணர்த்தின் ஆகு பெயராம் என்பர்.

எழுத்தாவது கண்முதலாகிய பிறவற்றிற்குப் புலனாகாது செவிப்புலனே ஆகும் ஒலிவடிவும், செவிமுதலாய பிறவற்றிற்குப் புலனாகாது கண்ணுக்கும் மெய்க்கும் புலனாகும் வடிவடிவை உடைத்தாய்த் தனித்து நின்றாயினும் சார்ந்து நின்றாயினும் தன்னை உணர்த்தலுடன் பொருள் உணர்த்தும் சொல் ஆகலும் அச்சொல்லுக்கு உறுப்பு ஆகலும் ஆகிய இருதன்மையும் ஒருங்கு பெற்றா

யினும் அன்றி உறுப்பாக இயைதல் தன்மை ஒன்றே பெற்றாயினும் நிற்கும் ஒலியாம் என்பர் சண்முகனார். (பா. வி- 170ப).

எழுத்து. அ ஆ முதலியவற்றிற்குப் பொதுப் பெயர் என்பர் சாமிநாததேசிகர். (இ. கொ. 86. உரை)

எழுத்து என்னும் தொழிற் பெயர் அப்பொருளை விட்டுப் பால்பகா அஃறிணைப் பொருட் பொதுப் பெயராய், அப்பொருளைவிட்டு ஒலியம் முதலியன போலன்றி அகரம் னகரம் முதலியன வடிவை உணர்த்தும் சிறப்புப்பெயராய், அப்பொருளை விட்டு ஒலியை உணர்த்தும் ஆகுபெயராய், அப்பொருளை விட்டு அவ்வொலியினது இலக்கணத்தை உணர்த்தும் இருமடி ஆகுபெயராய், அப்பொருளை விட்டு அவ் விலக்கணத்தை உணர்த்தும் நூலினை உணர்த்தும் மும்மடி ஆகுபெயராய், அப்பொருளை விட்டு இங்ஙனம் கூறிற்று எழுத்து எனக் கருமகருத்தாவையும், இங்ஙனம் அறிவித்தது எழுத்து எனக் கருவிக் கருத்தாவையும், உணர்த்தும் வழி நான்மடி ஆகுபெயராய் நின்று பல பொருள் பட்டது காண்க. (இ. கொ. 86 உரை)

எனவே எழுதப்படுதலின் எழுத்து என்பதே இவர் கருத்தாம்.

முற்கு—முக்குதல்
வீளை—சீழ்க்கை அடித்தல்
இலதை—ஒரு வகை ஒலிக்குறிப்பு.

இவை எழுத்து அல்லாத ஓசையே என்று உணர்க.

ஒத்த நூற்பாக்கள் :

'மொழிமுதல் காரணம் ஆம்அணுத் திரள்ஒலி
எழுத்துஅது முதல்சார்பு எனஇரு வகைத்தே.'

நன்-58

'எழுப்பப் படுதலின் எழுத்தே'. (ஒலி எழுத்து)
'எழுதப் படுதலின் எழுத்தா கும்மே'. மூ.வீ.எ. 1
'எழுத்துஒலி வடிவுவரி வடிவையும் ஏற்கும்' ,, 2
'இரேகை வரிபொறி எழுத்தின் பெயரே.' ,, 3
'அதுமுதல் சார்புஎன லாய்இரு பாலன.' ,, 4

முதலெழுத்துக்கள்

4. உயிரும் உடம்பும்என முதல்இரு வகைத்துஅவற்று
உயிர்ஈ ராறுமெய் மூவாறு என்ப
அம்முப் பானும் அதனது விரியே.

இது மேல்தொகையான் ஒன்றாகக் கூறிய முதல் எழுத்திற்கு வகையும் விரியும் கூறுகின்றது.

(இ-ள்) உயிரும் ஒற்றும் என முதல் எழுத்து இரு பகுதியை உடைத்து என்றும், அவ்விரண்டனுள் உயிர் பன்னிரண்டு என்றும், மெய் பதினெட்டு என்றும் அவ்விரண்டன் பகுதியாகிய முப்பது எழுத்தும் முதல் எழுத்தினது விரியாம் என்றும் கூறுவர் ஆசிரியர் என்றவாறு. 4

விளக்கம்: முதல் எழுத்து-தாமே தனித்து இயங்கும் எழுத்து. உயிர் பன்னிரண்டும் தாமே தனித்து ஒலிப்பன. 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' ஆதலின், மெய்கள் அகரத்தொடு சிவணித்தாம் ஒலிப்பன. ஏனைய எழுத்துக்கள் மொழியிடைப் படுத்தே பெரும்பாலும் ஏனை எழுத்துக்களின் சார்பால் ஒலிக்கவும், இவை அச்சார்புஇன்றித் தாமே தனித்து ஒலிக்கும் ஆற்றல் உடையன ஆதலின் முதலெழுத்து எனப்பட்டன.

ஒத்த நூற்பாக்கள் :

எழுத்தெனப்படுப
அகரம் முதல்
னகர இறுவாய் முப்பஃது என்ப. தொல். 1

ஔகார இறுவாய்ப்—
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப. தொல். 8

னகரா இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப. தொல்.9

அறிந்த எழுத்து அம்முன் பன்னிரண்டு ஆவிகள் ஆவன; கம்முன், பிறந்த பதினெட்டும் மெய்; நடு ஆய்தம். வீர.-1

''ஆவி அகரமுதல் ஆறிரண்டாம் ஆய்தம் இடை
மேவும் ககரமுதல் மெய்களாம்—மூவாறும்
கண்ணும் முறைமையால் காட்டியமுப் பத்தொன்றும்
நண்ணுமுதல் வைப்பாகும் நன்கு'' நேமி-1

வீரசோழிய நூலாரும் நேமிநாத நூலாரும் உயிர், மெய் இவற்றுடன் ஆய்தத்தையும் சேர்த்து, முதலெழுத்து முப்பத்தொன்று என்றனர்.

'உயிரும் உடம்பும் ஆம் முப்பதும் முதலே'. நன்.59

'அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்
மெய்ம்மூ வாறுஎன விளம்பினர் புலவர்'. நன்.63

'முதல் எழுத்து உயிர் ஈராறுஉடல் மூவாறே'
தொ-வீ. 5

'உயிர்உடல் எனமுதல் ஓர்இரு வகைய' மு.வீ.எ.5
'அகரம் முதல் உயிர் ஆறிரண்டு ஆகும்'. 6
'அச்சுஆவி சுரம்பூத மாம்உயிர் என்ப'. 7
'ககரம்முதல் மூவாறும் காத்திரம் ஆகும்'. 8
'ஊமையும் ஒற்றும் உடல்எனப் படுமே'. 9

சார்பெழுத்துக்கள்

5. குற்றியல் இகரம் குற்றியல் உகரம்
ஆய்தமொடு உயிர்மெய் ஈரளவு ஐஔ
மஃகான் குறுக்கம் உள்ளுறுத்து ஒன்பதும்
சார்பின் பால என்மனார் அவற்றுள்
உயிர்மெய் இரட்டுநூற்று எட்டு உயிர் அளவுஏழ்
ஒற்றளவு பதினொன்று ஒன்றுஒன்று ஏனைய
ஆயிரு நூற்றுஎண் ணைந்தும் அதன்விரியே.

இது மேல் தொகையான் ஒன்றாகக் கூறிய சார்பு எழுத்திற்கு வகையும் விரியும் கூறுகின்றது.

(இ-ள்) குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஆய்தமும் ஆகிய மூன்றனொடு உயிர்மெய்யும் உயிர் அளபெடையும ஒற்று அளபெடையும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் மகரக்குறுக்கமும் ஆகிய ஆறனையும் தலைப்பெய்த லான் அவ்வொன்பது எழுத்தும் சார்புஎழுத்தின் திறத்தன ஆயின என்றும், அவ்வொன்பதனுள் உயிர்மெய் இரு நூற்று ஒரு பத்தாறு என்றும், உயிர் அளபெடை ஏழ் என்றும். ஒற்று அளபெடை பதினொன்று என்றும், ஒழிந்த ஆறும் ஒரோ ஒன்று ஒன்று என்றும் அவ்வொன்பதன் பகுதி ஆகிய இருநூற்று நாற்பதும் அச்சார்பு எழுத்தின் விரியாம் என்றும் கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

இவை இங்ஙனம் ஆதல் தத்தம் விரிச்சூத்திரங்களுள் காண்க. எனவே, எழுத்து எனத் தொகையான் ஒன்றும். முதல் எழுத்து சார்பு எழுத்து என வகையான் இரண்டும், அவ்விரண்டன் பகுதியும் கூட்ட விரியான் தமிழ் எழுத்து இருநூற்று எழுபதும் ஆம் என உய்த்து உணர்க.

எழுத்து எனப்படுப
அகரம் முதல்
னகரம் இறுவாய் முப்பஃது என்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றுஅலங் கடையே தொல்.1

அவைதாம்,
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன. தொல். 2

என இவ்வாறு முதல் சார்புஎன வகுத்துக்கொண்டவற்றுள் இவை மூன்றும் சார்பு எழுத்து என்ற ஆசிரியர் தொல் காப்பியனாரும் ஏனைய ஆறனையும் பின்னர் ஒருவாற் றான் தழுவுதலானும், மூன்றாவது ஒரு பகுதி இன்று ஆதலானும், முதல் எழுத்தாம் தன்மை இவற்றிற்கு இன்மையானும், சார்பில் தோன்றுதலானும் இவ்வாறனை யும் அவற்றொடு தலைப்பெய்து ஒன்பதும் சார்பின் பால என்றார் இவ்வாசிரியர் என்பது.

அற்றேல், ஆசிரியர் செய்யுளியலுள் கூறிய ஒற்று அளபெடையை இவர் ஈண்டுக் கூறியது என்னை எனின். அவர் எதிரது போற்றி ஐகாரக் குறுக்கம் முதலியவற்றை எழுத்து ஒத்தினுள் உரைத்தாங்கு உரைத்தது என்க.

ஆய்தக் குறுக்கம் ஒன்று உளது என்றும் அதனொடு கூடச் சார்பெழுத்துப் பத்தாம் என்றும், அதன் விரித்தொகை முந்நூற்று அறுபத்து ஒன்பதாம் என்றும் கூறுவாரும் உளராலோ எனின்,

'குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.'
(தொல். 38)

என ஒருமொழிக்கண் வரும் ஆய்தம் கூறி,

'ஈறு இயல் மருங்கினும் இசைமை தோன்றும்'.
(தொல். 39)

என நிலைமொழி ஈறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்கும் இடத்தும் கஃறீது முஃடீது எனத்தன் அரைமாத்

மாத்திரையே இசைக்கும் தன்மை தோன்றும என ஆசிரியர் தொல்காப்பியனார் அதனைப் புணர்மொழிக்கண் வரும் ஆய்தமாகக் கூறினமையான் ஆய்தக் குறுக்கம் ஒன்று இன்று எனவும், இன்றாகவே சார்பெழுத்துப் பத்தாம் என்றல் பொருந்தாது எனவும்,உயிர்மெய் ஒழித்து ஏனைய எல்லாம் இடவேற்றுமையான் அன்றி எழுத்து வேற்றுமையான் அங்ஙனம் பல்காமையின் சார்பு எழுத்து முந்நூற்று அறுபத்து ஒன்பதாம் என்றல் நிரம்பாது எனவும் மறுக்க,

இன்னும் இடை ஒற்றுக்கள் டகர றகரங்களொடு தொடராமைக்கு அவர் மெய்மயக்கம கூறிய சூத்திரங்களே. கரியாகலின், குற்றிகரக் குற்றுகரங்கட்கு அவ்விட வேற்றுமையும் சாலாமை அறிக.

விளக்கம் :

'உயிர்மெய் ஆய்தம் உயிரளவு ஒற்றளவு
அஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்'. (நன். 59)

'உயிர்மெய் இரட்டுநூற்று எட்டு உயர் ஆய்தம்
எட்டுஉயிர் அளபுஎழு மூன்று ஒற்று அளபெடை
ஆறேழ் அஃகும் இம்முப் பானேழ்
உகரம் ஆறாறு ஐகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறுவிரி
ஒன்றுஒழி முந்நூற்று எழுபான் என்ப'. (நன். 60)

எனச் சார்பெழுத்து வகையான்பத்து என்றும், விரியான் உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு, முற்றாய்தம் எட்டு, உயிரளபெடை இருபத்தொன்று, ஒற்றளபெடை நாற்பத்திரண்டு குற்றியலிகரம் முப்பத்தேழு, குற்றியலுகரம் முப்பத்தாறு, ஐகாரக்குறுக்கம் மூன்று, ஔகாரக் குறுக்கம் ஒன்று மகரக்குறுக்கம் மூன்று ஆய்தக் குறுக்கம் ஒன்று ஆக முந்நூற்று அறுபத்தொன்பது என்றும் நன்னுலார் குறிப்பிட்டுள்ளார். இக்கணக்கிற்கு விளக்கம்தர

முற்றாய்தம் எட்டு உயிரளபெடை இருபத்தொன்று, ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, குற்றியலிகரம் முப்பத்தேழு. குற்றியலுகரம் முப்பத்தாறு என்பனவற்றை விளக்கிக்காட்டச் சிவஞான முனிவர் போல்வார் பொருந்தாக் கணக்கிட்டு இடர்ப்படுப. அவை பொருந்தாமை அவ்வவ்விரி நூற்பாவுள் காட்டப்படும். இவ்வாசிரியர் தனி எழுத்தை உட்கொண்டே உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு. உயிர் அளபெடை ஏழு, ஒற்று அளபெடை பதினொன்று, ஏனையவாகிய குற்றியலிகரம் குற்றியலுகரம் ஐகாரக் குறுக்கம் ஔகாரக் குறுக்கம் ஆய்தம் மகரக்குறுக்கம் ஆகிய ஆறும் ஒவ்வொன்று--ஆகச் சார்பு எழுத்தின்விரி இருநூற்று நாற்பது என்பது மிகப் பொருத்தமானது.

குற்றியலிகரம். குற்றியலுகரம் ஆய்தம் என்ற மூன்றனையுமே சார்பெழுத்தாகக் கூறிய தொல்காப்பியனாரும்,

'குன்றுஇசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே.' 41

'ஐஔ என்னும் ஆயீர் எழுத்திற்கு
இகர உகரம் இசைநிறைவு ஆகும்.' 42

முதலிய நூற்பாக்களான் உயிர் அளபெடையும்,

'அளபுஇறந்து உயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும்
உள்என மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்'. 33

'ஒற்றுஅளபு எடுப்பினும் அற்றுஎன மொழிப.'
(தொல் செய். 18)

முதலிய நூற்பாக்களான் ஒற்றுஅளபெடையும்,

'அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.' 56

'ஓர்அளபு ஆகும் இடனுமார் உண்டே
தேருங் காலை மொழிவயி னான.' 57

என்ற நூற்பாக்களான் ஐகாரக் குறுக்கமும், இந்நூற்பாக்களின் 'மெய்பெற' 'தேருங்காலை' என்ற மிகையானே ஔகாரக் குறுக்கமும்,

'அரைஅளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை.' 13

'செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகாரம் மகாரம் ஈரொற்று ஆகும்.' 51

'னகாரை முன்னர் மகாரம் குறுகும்.' 52

'வகாரம் மிசையும் மகாரம் குறுகும். 330

என்ற நூற்பாக்களால் மகரக்குறுக்கமும் நேர்ந்தார் ஆதலின் அவற்றையே இவ்வாசிரியரும் கொண்டுள்ளார்.

ஒருமொழி ஆய்தமும் தொடர்மொழி ஆய்தமும் குறிப்பிட்ட தொல்காப்பியனார் தொடர்மொழி ஆய்தம் மாத்திரை குறுகும் என்று கூறாமையானும், செய்யுட்கண்ணும் அது குறைஒலித்து ஆதல் செவி கருவியாக உணரப்படாமையானும் இவ்வாசிரியர் ஆய்தக்குறுக்கம் கொண்டிலர்.

இடவேற்றுமையான் அன்றி எழுத்து வேற்றுமையால் அங்ஙனம் பல்காமை என்பது:

உயிர் அளபெடை எழுத்து எழு. அதனை மொழி முதல் இடை கடை என்ற மூன்றிடத்தும் வைத்து முரணிக் கொண்ட தொகை இருபத்தொன்று. ஒற்றளபெடை எழுத்துப் பதினொன்று. அதனை மொழியிடையும் இறுதியும் குறிற் கீழும் குறிலிணைக்கீழும் வைத்து முரணி எவ்வாற்றானும் ஈறாக வாராத ஆய்தம் இரண்டனை விடுத்துக் கணக்கிட்ட தொகை நாற்பத்திரண்டு.

குற்றியலுகரம் தான்வரும் சொல்லின் ஈற்றயல் எழுத்தைக் கொண்டு நெடில் ஏழு, ஆய்தம் ஒன்று, உயிர் ஒளகாரம் நீங்கலான பதினொன்று, வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் வகரம் நீங்கலான ஐந்து என்று கணக்கிட்டுக் கொள்ளப்பட்ட தொகை முப்பத்தாறு. அம்முப்பத்தாறனொடு மியா என்ற அசைச் சொல்லையும் சேர்க்கக் குற்றிய லிகரத்தின் தொகை முப்பத்தேழு. மொழி முதல் இடை கடைகளில் வரும் ஐகாரக் குறுக்கம் மூன்று. ண ன மூன்னும் வஃகான் மிசையும் வரும் மகரக் குறுக்கத்தின் தொகை மூன்று.உயிர் ஏறிய வல்லெழுத்து ஆறற்கும் மிசைவரும்ஆய்தம்,புணர்ச்சிக்கண் தோன்றும் ஆய்தமும் திரியும் ஆய்தமும் ஆக இரண்டனொடும்கூட ஆய்தத்தின்தொகை எட்டு—என்பது இடவேற்றுமையை உட்கொண்டே நன்னூலார் விரித்த தொகையாகும்.

மெய்ம்மயக்கத்துள் இடை எழுத்தாகிய ய ர ல வ ழ ள என்பனவற்றோடு பிறமெய்கள் மயங்கும் வேற்றுநிலை மெய் மயக்கம் கூறுமிடத்து, 'யரழ முன்னர் மொழிமுதல் மெய் வரும்' நன். 116 எனவும், 'ளமுன் கசப வயஒன்றும்மே' நன். 117 எனவும் 'வம்முன் யவ்வே' நன். 111 எனவும் கூறிய நூற்பாக்களால் வகரத்தின் முன் வல்லொற்று எதுவும் மயங்காது என்பதும்,யரலழள என்பனவற்றின்முன் டற என்பன மயங்கா என்பதும் பெறப்படுதலின்,டகர றகரம் ஊர்ந்த குற்றிய லுகரங் கொண்ட இடைத்தொடர்கள் வாரா என்பது உணர்த்தப்படுகிறது.

இலக்கண விளக்கச் சூறாவளி

ஆசிரியர் தொல்காப்பியனார் சார்பெழுத்து மூன்றே என்று வரையறுத்திருப்பவும், தாம் அவரினும் நுண்ணுணர்வு உடையார் போன்று நன்னூலார் கூறிய சொல் பற்றிச் சில முதல் எழுத்துக்களையும் அம்மூன்றனோடு கூட்டிச் சார்பு எழுத்து எனக்கொண்டார். அது பொருந்தாமை விரித்தியுள் விரித்துக் காட்டினாம். ஆண்டுக் காண்க.

முதல் எழுத்துக்களே தம்மோடு தாம் சார்ந்தும், இடம் சார்ந்தும் பற்றுக்கோடு சார்ந்தும் வருதலான் சார்பு எழுத்து எனக் காரணக்குறி ஆயிற்று எனின், அஃது ஆய்தத்திற்குப் பொருந்தாமையின் அவ்வியாத்திக் குற்றமும், ஆல் கால் என்பன தம்மோடு தாம் சார்ந்து வருதலின் அதிவியாத்திக் குற்றமும் ஆமாறு காண்க.

இட வேற்றுமையால் குற்றுகரம் முப்பத்தாறு ஆதல் சாலும் என்பதும் விருத்தியுள் காட்டினாம்.

அமைதி

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் செய்கை ஒன்றனையும் நோக்கிச் சார்பெழுத்து மூன்று எனக் கருவி செய்தார் ஆகலின், இவ்வாசிரியர் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்து எனக் கருவி செய்தார் என்பதும் உய்த்துஉணர்க—என்று தாம் உரை வரைந்த காலையும் அதற்கு முன்னும் செய்யுளியலே இல்லாத நன்னூலுக்கு அமைதி கூறும் முனிவர், சார்பெழுத்தை மூன்றற்கு மேலும்கொள்வது செய்யுளியலை நோக்கியே என்பதனைத் தம் உரையுள் உய்த்து உணர வைத்த இந்நூலாசிரியர் கூற்றினைக் கோடற்கண் தடை என்ன?

முதல் எழுத்துக்களே.........காண்க :

சார்பெழுத்துக்களுக்கு மயிலைநாதரும் இவ்வாசிரியரும் கூறும் விளக்கம் இது. 'வேற்றுமை' என்பதுபோல இது மிகுதிபற்றி வரையப்பட்டவிளக்கமாகும். அவற்றுள் தம்மொடு தாம் சார்ந்து சார்பு எழுத்தாயின இவை, இடம் சார்ந்து சார்பெழுத்து ஆயின இவை, இடனும் பற்றுக்கோடும் சார்ந்து சார்பெழுத்தாயின இவை என்பதனை இவ்வாசிரியர் விளக்கிக் கூறும் முகத்தான் எவை எவை தம்மொடு தாம் சார்ந்து சார்பெழுத்தாயின முதலியவற்றை விளக்கிச் செல்வார். ஒன்றற்கே இவ் வெல்லா இலக்கணமும் கூறாமையின் முனிவர் கூறும் குற்றம் இவர்மாட்டு இல்லையாதல் காண்க. குற்றிய லுகரம் பற்றி விரிச்சூத்திரத்துள் காண்க.

சார்பு எழுத்துக்கள்

தொகை		உயிர்மெய்	ஆய்தம்	உயிரளபு	ஒற்றளபு	குறுக்கம் இ	உ	ஐ	ஔ	ம	ஃ	விரி
3	தொல்காப்பியம்	...	1	...	...	1	1	...	...	...	...	3
6	வீரசோழியம்	...	...	7	...	1	1	1	1	1	...	12
9	நேமிநாதம்	216	...	7	11	1	1	1	1	1	1	240
10	நன்னூல்	216	8	21	42	37	36	3	1	3	2	369
8	இலக்கண விளக்கம்	216	1	7	11	1	1	1	1	1	...	240
10	தொன்னூல் விளக்கம்	216	8	21	42	37	36	3	1	3	2	369
2	முத்துவீரியம்	216	1	...	...	...	...	...	...	...	...	217

சார்பு எழுத்துக்கள் பற்றிய நூற்பாக்கள்:

அவைதாம்,
குற்றியல் இகரம் குற்றியல் உகரம்
ஆய்தம் என்ற
முப்பால் புள்ளியும் எழுத்தோ ரன்ன'. தொல். 2

'...நெடுநீர்மை அளபு; பிணைந்த வருக்கம்
மறுவறு வல்லொற்று மெல்லொற்று மாம்; வன்மை மேல்உகரம்
உறுவது நையும் தொடர்மொழிப் பின்னும் நெடில் பின்னுமே.' வீ·2

'இகரம் குறுகி வரும்குற் றுகரம்பின் யவ்வரினே.'
வீ. 3

'...ஒன்றரை ஆகும் ஐஔ.' **வீ. 5**

'ம—முன்வயின்கால் வவ்வரின்.' **வீ. ச. 19**

'ஓங்குயிர்கள் ஒற்றின்மேல் ஏறி உயிர்மெய்யாய்
ஆங்கிரு நூற்றொருபத் தாறாகும்—பாங்குடைய
வல்லொற்று மெல்லொற்று வருக்கம் அளபெடைகள்
சொல்லொற்றி நீட்டத் தொகும்.' நே. 3

'தொடர்நெடில்கீழ் வன்மைமேல் உகரம் யப்பின்பு
அடைய வரும்இகரம் அன்றி—மடநல்லாய்
மும்மைஇடத்து ஐஔவும் குன்றும்முன் ஒற்றுஉண்டேல்
செம்மை உயிர்ஏறும்செறிந்து.' நே. 4

'காலம் குறுகும்மவ் வாய்தம்.' நே. 5

'உயிர்மெய்......சார்பெழுத்தாகும்.' நன். 60

'உயிர்மெய்......எழுபான் என்ப.' நன். 61

'சார்பெழுத்து உயிர்மெய் தனிஆய் தத்தொடு
அஃகிய இஉ ஐஔ மவ்வாய்தம்
உயிரளபு ஒற்றளபு ஒருபஃது என்ப.' தொ. வி. 5

'சார்பு உயிர்மெய் தனிநிலை இருபாலன.'
மூ. வீ. எ. 22

'புல்லல் சார்தல் புணர்தல்சார்பு எனவே.' ,, 33

உயிர் எழுத்துக்கள்

6. **அகரம் முதலஈ ராறும்உயிர் அவற்றுள்
அஇ உஎ ஒக்குறில் ஆஈ
ஊஏ ஐஓ ஔநெடில் அஇ
உஇவை மொழிமுதல் வரின்சுட்டு எயா
முதலும் ஆஓ இறுதியும் ஏஇரு
வழியும் வினாவென வழங்கும் என்ப.**

நிறுத்த முறையானே பெயர் கூறுவனவற்றுள் இஃது உயிர் பெறும் பெயர் வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்) அகரமாகிய முதலை உடையு பன்னீர் எழுத்தும் உயிர் என்றும், பன்னிரண்டனுள் அ இ உ எ ஒ என்கிற ஐந்தும் குறில் என்றும், ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்கின்ற ஏழும் நெடில் என்றும். குற்றெழுத்துள் அ இ உ என்கின்ற இம்மூன்றும் மொழிமுதற்கண் சுட்டுப்பொருள் உணர்த்திவரின் சுட்டு என்றும், எகரமும் யகரஆகாரமும் மொழிமுதற்கண்ணும், நெட்டெழுத்துள் ஆகார ஓகாரங்கள் ஈற்றின்கண்ணும், ஏகாரம் முதலினும் ஈற்றினும் வினாப் பொருள் உணர்த்திவரின் வினா என்றும் பெயர்பெற்று நடக்கும் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

இது தொகை வகை விரிபடச் செய்கின்ற நூல் ஆகலானும், பொருள் ஒப்புமையானும் உயிர்மெய்யும் உடன் கூறினார்.

மொழி முதல் ஈறுகளில் வரின் எனப் பொதுப்படக் கூறிய அதனால், இவை தத்தம் குறிப்பின் பொருள் செய்த இடைச் சொற்களாய் ஒரு மொழியைச் சார்ந்தும் அதற்கு உறுப்பாயும் ஏற்ற பெற்றி வரும் எனக்கொள்க.

வரலாறு: அக்கொற்றன் இக்கொற்றன் உக் கொற்றன், அவன் இவன் உவன்; எப்பொருள் எவன் யா யாவன்; உண்கா உண்கோ உண்கே ஏவன் என வரும். பிறவும் அன்ன.

மொழி முதற்கண் தனித்துவரின் சுட்டு என்றாரும் உளராலோ எனின், 'சுட்டு வகரம்' நன். 235 எனவும், 'சுட்டின் முன் ஆய்தம்' (நன். 251) எனவும் உறுப்பாய் வருவனவற்றையும் சுட்டு என்று அவர் தாமே ஆளுதலானும், ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

'அஇ உஅம் மூன்றும் சுட்டு.' தொல். 31

எனப் பொதுப்படக் கூறிச்

'சுட்டுமுதல் உகரம்' 176 எனவும்,

'சுட்டுமுத லாகிய ஐஎன் இறுதி' 177 எனவும்,
பிறாண்டும் உறுப்பாய் வருவனவற்றையும்,

'சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்' 205எனவும்,
'சுட்டின் இயற்கை' 238 எனவும், பிறாண்டும்

சார்ந்து வருவனவற்றையும் சுட்டு என்று ஆளுதலானும் அவர்க்கு அது கருத்து அன்று என்க.

விளக்கம் : தொகை வகை விரிபடச் செய்தல்— தொகை உயிர்;வகை குறில் நெடில்:விரி இந்நூற்பாவில் விரித்துக் கூறப்படும் ஏனையபோல்வன. தொல்காப்பியனாருக்கு யா என்ற வினாவும் உடன்பாடாதல் 'யாது யா யாவை என்னும் பெயர்' தொல். சொல் 169 என்ற நூற்பா அடியான் பெறப்படினும், உயிரெழுத்தினான் ஆகிய வினா இடைச்சொற்களையே நூல்மரபில் சுட்டிய புகுந்தார் ஆகலான், 'ஆ ஏ ஓ அம் மூன்றும் வினாஅ.' தொல். 32 என்றே நூற்பா யாத்துள்ளார். இந் நூலாசிரியர், சுருக்க நூலாதலின் இதன்கண் யா வினா வினையும் ஈண்டே குறிப்பிட்டார்.

அ இ உ என்பனவும், ஆ யா ஏ ஓ என்பனவும்,
'தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச்
சுட்டுதற் கண்ணேயாம் சொல்'

என்ப ஆதலின், சுட்டு வினா எனப் பெயர் இடப் பட்டனவே யன்றிச் சுட்டெழுத்து, வினாவெழுத்து எனப் பெயரிடப்படாமையும், சுட்டிடைச்சொல் வினாவிடைச் சொல் என்றே பெயரிடப்பட வேண்டிய திறமும் அறிக.

'இடை எனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றிய லும் தமக்கு இயல்பு இலவே'
தொல். சொல். 251

ஆதலின் இவை ஒரு மொழியைப் புறத்தே சார்ந்தோ, ஒரு மொழிக்கு அகஉறுப்பாகி வந்தோ குறிப்பால் பொருள் தரும் இடைசொற்கள் என்றே விளக்கப்பட்டன.

அகர இகர உகரங்கள் புறச்சுட்டு ஆயினமைக்கு அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன் என்பன எடுத்துக்காட்டு. அகச்சுட்டு ஆயினமைக்கு அவன் இவன் உவன் என்பன எடுத்துக்காட்டு. அகரம் சேய்மையி லுள்ளதையும், இகரம் அணிமையில் உள்ளதையும், உகரம் இடைப்பட்டதையும் பின் உள்ளதையும் சுட்டும் என அறிக. இங்ஙனமே எப்பொருள், உண்கா, உண்கே, உண்கோ என்பன புற வினாவிற்கு எடுத்துக்காட்டு.

எவன், யா, யாவன்,ஏவன் என்பன அகவினாவிற்கு எடுத்துக்காட்டு. எவன் என்ற அஃறிணை இருபாற் குறிப்பு வினை தொல்காப்பியனாருக்கு உடன்பாடுஆதல்

'அத்திணை மருங்கின் இருபால் கிளவிக்கும்
ஒத்தது என்ப எவன்என் வினாவே'
தொல். சொல். 221

என்ற நூற்பாவால் உணரப்படும். எவன் என்பதே படுத்தல் ஓசையால் அஃறிணைப் பெயராயிற்று என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் 122 ஆம் நூற்பா உரையுள் சுட்டியுள்ளார். யாவன் என்ற பெயரே பிற் காலத்து எவன் எனத்திரிந்து உயர்திணை ஆண்பாற் பெயராயிற்று என்பதும் அறிக.எனவே,யாவன் என்பதன் திரிபாகிய உயர்திணை ஆண்பால் பெயரும் வேறு,எவன் என்ற அஃறிணை இருபாற் பொதுவினையும் அதனான் அமைந்த பெயரும் வேறு என்பதனையும் அறிக.

உண்கா, உண்கே, உண்கோ என்பன யான் உண்பேனோ என்னும் பொருள்பட வந்தன. இவை 'தன் தொழில் உரைக்கும் வினாவின் கிளவி' (தொல். 224). உண்கா என்பது உண்பேனோ என்னும்பொருட்டு எனத் தொல்.224ஆம் நூற்பா உரையில் நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளார்.

'சுட்டு வகரம் மூவினம்உற முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்' நன்.235

என்ற நூற்பாவில் சுட்டுவகரம் என்ற தொடர் அவ் இவ் உவ் என்னும் பலவின்பால் சுட்டுப்பெயர்களையே குறிப்பதாம்.

'சுட்டின்முன் ஆய்தம் அன்வரின் கெடுமே' நன்.251

என்ற நூற்பாவில் 'சுட்டின்முன் ஆய்தம்' என்பது அஃது இஃது உஃது என்ற சொற்களில் உள்ள ஆய்தத்தையே சுட்டும்.

இந்நூற்பாக்களில் சுட்டுக்கள் சொற்கு உறுப்பாதல் காண்க.

'அஇஉஅம் மூன்றும் சுட்டு' தொல். 31

என இம் மூவெழுத்துக்களும் மொழியாம் தன்மை பெற்றமையின், தொல்காப்பியனார் இந்நூற்பாவினை நூன்மரபின் இறுதியில் மொழிமரபை ஒட்டி அமைத்தமை காண்க.

'சுட்டு முதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே' தொல்.176

என்ற நூற்பாவில் சுட்டுமுதல் உகரம் என்ற தொடர் அது இது உது என்ற சொற்களில் உள்ள சுட்டுக்களையே குறிப்பதாகும்.

'சுட்டுமுதல் ஆகிய ஐஎன் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே' தொல்.177

என்ற நூற்பாவில் 'சுட்டு முதலாகிய ஐ என் இறுதி' என்ற தொடர் அவை இவை உவை என்ற சொற்களிலுள்ள சுட்டுக்களைச் சுட்டுவதாகும்.

'சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றுஇடை மிகுதல்வேண்டும்' தொல்.205

என்பது அஞ்ஞாண், இஞ்ஞாண், உஞ்ஞாண் முதலிய புணர்ச்சிகளுக்கு விதி கூறுவது ஆகும்.

'சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே' தொல்.238

என்ற நூற்பா இகரச் சுட்டின் புணர்ச்சி விதி கூறுகிறது.

இந்நூற்பாக்களில், மொழிக்குப் பகுதியாக வாராது மொழிப்புறத்தே மொழியை அடுத்துவரும் சுட்டுஇடைச் சொற்கள் சுட்டு என்றே வழங்கப்படுகின்றன.

எனவே, சுட்டுத் தனித்துவரும் இயல்பிற்று அன்மை யின், பிறிது ஒருமொழியைச் சார்ந்தோ அதற்கு முதல் உறுப்பு ஆகவோ வந்தே பொருள் தருதலின்,

'அ இ உ இவை மொழிமுதல் வரின் சுட்டு' என்றே நூற்பா யாத்துள்ளார்.

இலக்கண விளக்கச் சூறாவளி

நன்னூலார் மொழி முதற்கண் சுட்டுப்பொருள் உணர்த்தி வரின் அல்லது சுட்டெழுத்து ஆகா என்பார் 'தனிவரின் சுட்டு' என்றார். தாமும் அவ்வாறு கூறாது, எவ்வாறு வரினும் சுட்டெழுத்தாம் என்று பொருள்பட வாளா 'மொழி முதல்வரின் சுட்டு' என்றதுவும் அன்றி, அவர் கருத்து அறியாது குற்றமும் கூறினார்,

அமைதி

சுட்டெழுத்து என்ற குறியீடு பொருந்தாது என்பதும், தனிவருதலும் முதல் வருதற்கண் அடங்கும் என்பதும் இந்நூலாசிரியர் தந்துள்ள விளக்கத்தான் உணரப்படும்.

இனி, மயிலைநாதர் அ இ உ என்னும் இம்மூன்றும் மொழி முதற்கண்ணே தனித்து நிற்பின் சுட்டு என்னும் குறியவாம் என்று கூறிப் புறச்சுட்டிற்கே எடுத்துக் காட்டுக்கள் தந்துள்ளார். அதனைக் கண்டு, நூற்பாக் கருத்தினை அவர் உள்ளவாறு உணராமையை உட் கொண்டு இலக்கணக் கொத்து நூலார் குறிப்பிடும் செய்திகள் பின்வருமாறு :

''உபலக்கணமாவது 'அஇ உம் முதல் தனிவரின் சுட்டே' (நன். 66) என்புழி, முதற் கூடிவரின் சுட்டே என்றும் பொருள் கொள்ளுதல். இவ் விலக்கணம் நோக்காது தனித்து நிற்பின் சுட்டோ, கூடி நிற்பின் சுட்டு அன்றோ என்று கருதி, நன்னூலார்க்குப் பின்னூலார் இச்சூத்திரத்திற்கு அளவிறந்த குற்றம் கூறினர். அது நிற்க; அவர் எழுத்திற்குப் பெயரிடுதல் நோக்கியும்,

'எகர வினாமுச் சுட்டின் முன்னர்' 163 எனச் சந்தி நோக்கியும், 'இவை அடை சுட்டு வினா' 276 எனப் பெயரிடுதல் நோக்கியும், 'தூக்கில் சுட்டு நீளின்' 163 என யாப்பு நோக்கியும் இங்ஙனம் கூறி, பின், 'சுட்டுயா எகர வினாவழி' 106

'வினைத்தொகை சுட்டுஈறு ஆகும் உகரம்' 179
'சுட்டு வகரம் மூவினம் உற' 235
'வவ்விறு சுட்டிற்கு அற்றுஉறல் வழியே' 250
'சுட்டின்முன் ஆய்தம் அன்வரின் கெடுமே' 251
'அதுமுன் வரும் அன்று' 180

என்று கூடி நிற்பினும் சுட்டு என்று கூறினர். இவ் விலக்கணங்களை நோக்கிலர். அது நிற்க; 'தனிவரினும் சுட்டு' நன்.66 என்னும் சூத்திரம், 'இன் என வரூஉம்' தொல். 131 என்னும் சூத்திரம் போல விகாரப்பட்டது என்று யாப்பு விதியையும் நோக்கிலர். அது நிற்க; ஒருமொழி ஒழிதன் இனங்கொளற்கு உரித்தே, என்னும் சூத்திரப் பொருளையும் நோக்கிலர். அது நிற்க; 'ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்' முதலிய உத்தியையும் நோக்கிலர். அது நிற்க 'வரின்' என்னும் எச்சம் பெரும்பான்மையும் கூடிநின்று சுட்டுப் பெயராம் என்று பொருள் தருதலையும் நோக்கிலர். அது நிற்க; 'முதல்வரின் சுட்டே, தனிவரின் சுட்டே' என்ற பொருள் கோள் இலக்கணமும் நோக்கிலர். அதுபற்றித் தமக்கு என ஒன்று இலரும் அதுவே. உரைப்பார் உரைப்ப வைக்கு எல்லாம் யாம் என்செய்வோம் என்க.''

இவ்வாறு இலக்கணக்கொத்து எட்டாம் நூற்பா வுரையுள் அவ்வாசிரியர் சொற்றனவும் காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'ஔகார இறுவாய்ப்
பன்னீரெழுத்தும் உயிர்என மொழிப.' தொல். 8
'அவற்றுள் அ இ உ
எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப. 3
ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்றும் அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப. 4
அஇ உஅம் மூன்றும் சுட்டு. 31
ஆ ஏ ஓஅம் மூன்றும் வினாஅ. 32
அம்முதல் ஈராறு ஆவி... நன்.63
அவற்றுள், அஇ உஎ ஒக்குறில் ஐந்தே. 64

ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில். 65

அஇ உம் முதல் தனிவரின் சுட்டே. 66

எயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏஇரு வழியும் வினாவா கும்மே. 67

ஈராறில் ஐந்து குறில்நெடில் ஏழ். வீ. 2

ஆன்றஉயிர் ஈராறும் ஐங்குறில் ஏழ்நெடிலாம்.
நே. 2

அம்முதல் ஈராறு உயிர்... ...
குறில்அ இஉஎ ஒவ்வைந் தேநெடில்
ஆஈ ஊஏ ஐஓ ஔ ஏழே. தொ. வி. 8

அகரம்முதல்உயிர் ஆறிரண்டு ஆகும். மு.வீ.எ. 6

அச்சு ஆவி சுரம்பூத மாம்உயிர் என்ப. 7

அஇ உஎ ஒக்குறில் ஆகும். 8

குறுமை இரச்சுவம் குறில்எனப் படுமே. 9

ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில். 10

நெடுமையும் தீர்க்கமும் நெட்டுயில் ஆகும் 11

அஇ உச்சுட்டு ஆகும் என்ப. 26

எயா வினாஎன்று இசைக்கப் படுமே. 27

காட்டல் குறித்தல்சுட் டாம்கரு திடினே. 29

வினவல் கடாவல் வினாஎனப் படுமே. 30

ஆஈ ஊஏ ஐஓ ஔஎன்று
ஏழும் ஏழ்இசைக்கு எய்தும்அக் கரங்கள். -பிங்கலம்

மெய் எழுத்துக்கள்

7 ககரம் முதல்மூ வாறும்மெய் அவற்றுள்
கசட தபற வல்லெழுத்து மெல்லெழுத்து
஫ஞண நமன இடைஎழுத்து உணரின்
யரல வழள என்மனார் புலவர்.

இது மெய் பெறும் பெயர் வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்) ககரம் ஆகிய முதலை உடைய பதினெட்டு எழுத்தினையும் மெய் என்றும், அப்பதினெட்டனுள் கசட தபற என்னும் ஆறனையும் வல்லெழுத்து என்றும், ஙஞண நமன என்னும் ஆறனையும் மெல்லெழுத்து என்றும், யரல வழள என்னும் ஆறனையும் இடை யெழுத்து என்றும் பெயரிட்டு ஆள்வர் அறிவுடையோர், பெயர் நிலையை ஆராயும் இடத்து என்றவாறு.

'உணரின்' என்றதனால், முதல் சார்பு குற்றிய லிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்றல் தொடக்கத்துப் பெயர்களும், ஆவி உடம்பு உறுப்பு ஒற்று உடல் புள்ளி அஃகேனம் தனி நிலை என்றல் தொடக்கத்துப் பரியாய நாமங்களும்,ஏகார ஓகாரங்கள் வினாப்பொருள் உணர்த் திவரின் வினா எனப்பெயர் பெறுதலே அன்றிப் பிரிநிலை முதலிய பொருள் உணர்த்திவரின் பிரிநிலை முதலிய பெயர் பெறுதலும்,ஒழியிசை முதலியபொருள் உணர்த்தி வரின் ஒழியிசை முதலிய பெயர் பெறுதலும், இவை வருதல் பெரும்பான்மையும் ஈற்றின் கண்ணே என்பதும் கொள்க.

இன்னும், அ ஆ முதலிய அ ஆ முதலிய பெயர் பெறுதலும், உயிர்மெய் ஆகிய காலத்தும் உயிர்மெய்க் குறில் நெடில் வல்லெழுத்து மெல்லெழுத்து இடை எழுத்து எனப் பெயர் பெறுதலும், தனி எழுத்திற்கு ஏலாது வல்லினம் மெல்லினம் இடையினம் எனத் தொகுதி பற்றிப் பெயர் பெறுதலும் கொள்க.

இக்குறிகள் ஆட்சியும்காரணமும் நோக்கி, ஒன்றற்கு உரியவாயும் பலவற்றிற்கு உரியவாயும் வரும் எனக் கொள்க. பலவற்றிற்கு உரியவாயும் வரும் என்றலின், அப்பலவும் ஓர் இனம் ஆதலும் பெற்றாம். இவற்றை ஆளுமாறு ஆங்காங்கு உணர்க.

உயிர்போல மெய்களை இயக்குதலான் உயிர் என்றும், தமக்கு இனமாகி ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்துக்களை நோக்கத்தாம் குறியவாய் ஓரளபு இசைத்தலான் குறில் என்றும், தமக்கு இனமாகி ஓரளபு இசைக்கும் குற்றெழுத்துக்களை நோக்கத் தாம் நெடியவாய் ஈரளபு இசைத்தலான் நெடில் என்றும், சுட்டுப்பொருளை உணர்த்துதலான சுட்டு என்றும், வினாப்பொருளை உணர்த்துதலான் வினா என்றும், மெய்போல உயிரான் இயங்குதலான் மெய் என்றும், மெல்லெழுத்தையும் இடைஎழுத்தையும் நோக்கத் தாம் வல்லென்று இசைத்தலானும் வல்லென்ற தலைவளியால் பிறத்தலானும் வல்லெழுத்து என்றும், வல்லெழுத்தையும் இடைஎழுத்தையும் நோக்கத் தாம் மெல்லென்று இசைத்தலானும் மெல்லென்ற மூக்குவளியால் பிறத்தலானும் மெல்லெழுத்து என்றும், மெல்லெழுத்தையும் வல்லெழுத்தையும் நோக்கத் தாம் இடைநிகரவாய் ஒலித்தலானும் இடைநிகர்த்தாய மிடற்றுவளியால் பிறத்தலானும் இடைஎழுத்து என்றும், தம்மால் இயலும் சார்பு எழுத்திற்குக் காரணம் ஆகி முதல் நிற்றலான் முதல் எழுத்து என்றும், அவையே தம்மொடு தாம்சார்ந்தும் இடம்சார்ந்தும் பற்றுக்கோடு சார்ந்தும் தோன்றலான் சார்பு எழுத்து என்றும், ஓர் அளபு இசைக்கும் இகர உகரம் குறுகி அரை அளபு இசைத்தலான் குற்றியலிகம் குற்றியலுகரம் என்றும், அடுப்புக் கூட்டுப்போல ஆய்தவடிவிற்றாக எழுதப்படுதலான் ஆய்தம் என்றும், உயிரும் மெய்யும் கூடி ஒலித்தலான் உயிர்மெய் என்றும், உயிர் அளபு எடுத்தலான் உயிர் அளபெடை என்றும், ஒற்று அளவு எடுத்தலான் ஒற்றளபெடை என்றும், ஈரளபு இசைக்கும் ஐகாரம் ஔகாரம் குறுகி ஓர் அளபு இசைத்தலான் ஐகாரக் குறுக்கம் ஔகாரக் குறுக்கம் என்றும், அரை அளபு இசைக்கும் மகரம் குறுகிக் கால் அளபு இசைத்தலான் மகரக் குறுக்கம் என்றும், அ ஆ என்பன அ ஆ என்று இசைத்தலான் அ ஆ என்றும் காரணக்குறி ஆயினவாறு உணர்க.

ஐகார ஔகாரங்கள் குறிய எழுத்தின் நெடிய ஆதற்குக் குற்றெழுத்து ஆகிய இனம் தமக்கு இலவே னும், அளபு ஒப்புமையான் நெடிலாம் எனக் கொள்க. மெய் குற்றெழுத்தின் குறுகி அரை அளபு இசைக்குமே னும், குற்றெழுத்து எனப் பெறா, ஓரளபு இசைக்கும் மெய் தமக்கு இனமாக இன்மையின் 7

விளக்கம் :- உயிரின் பரியாயப் பெயர் ஆவி, மெய் யின் பரியாயப் பெயர் உடம்பு உறுப்பு ஒற்று உடல் புள்ளி, ஆய்தத்தின் பரியாயப் பெயர் அஃகேனம் தனிநிலை எனக் கொள்க. ஏகாரம் 'பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம், இசைநிறை' என்ற ஆறு பொருள்களிலும், ஓகாரம் 'ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை, கழிவு அசைநிலை பிரிப்பு' என்ற எட்டுப் பொருள்களிலும் வருமாறு இடையியலான் அறிக. ஏகாரம் இசைநிறைப் பொருளிலும் வினாப் பொருளிலும் முதற்கண் வருதல் உண்மையின், 'பெரும்பான்மையும் ஈற்றின்கண் வரும்' என்று கூறினார்.

உயிர்மெய் ஆகிய காலத்தும்........பெறுதலும்:

'தம்இயல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்நிலை மயக்கம் மானம் இல்லை.' தொல்.47

பன்னீருயிரும் மெய்யின் தன்மையிலே தம்முடைய தன்மை மயங்கிற்றாகப் பெயர் கூறின் குற்றம் இல்லை என்றவாறு.மெய்யின் தன்மையாவது வன்மை மென்மை இடைமை; தம் இயலாவது உயிர்த்தன்மை; என்றது. வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்து என உயிர் மெய்க்கும் பெயர் இட்டு ஆளுதல் கூறிற்று' என்ற நச்சினார்க்கினியர் கருத்தை உட்கொண்டு இது சொற்றதாம்.

வல்லினம் மெல்லினம் இடையினம் என்ற குறியீடு கள் தனி எழுத்தை உணர்த்தாது,அவ்வவ்வினம் பற்றிய

எழுத்துக்களை எல்லாம் தொகுதியாக உணர்த்தின. 'வல்லினம் கல்மேல் விரல் வைத்தாற்போலவும், மெல்லினம் மணல்மேல் விரல் வைத்தாற் போலவும், இடையினம் மண்மேல் விரல் வைத்தாற் போலவும் கொள்க' - என நேமிநாதஉரை விளக்கம் தரும்.

ஆட்சி-பின்னர்க் கசடதபற என்பனவற்றைக் குறிக்க வேண்டும்- இடங்களில் எல்லாம் வல்லினம் என்ற தொகுதிப் பெயர் கூறியே சுட்டுதல் போல்வது. குறியீடுகள் எல்லாம் காரணம் பற்றி அமைக்கப்பட்டுப் பின்னர்ச் சுருக்கமான முறையில் எடுத்து ஆளுதற்காகவே எழுந்தன என்று அறிக.

'ஔகார இறுவாய்ப்
பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப' தொல். 8

என்ற நூற்பா உரையில் மெய் பதினெட்டினையும் இயக்கித்தான் அருவாய் வரிவடிவு இன்றி நிற்றலின் உயிராயிற்று எனவும்,

'னகர இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்என மொழிப' தொல். 9

என்ற நூற்பா உரையில், இதுவும் ஆட்சியும் காரணமும் நோக்கிய குறி; என்னை? பன்னீருயிர்க்கும் தான் இடம் கொடுத்து அவற்றால் இயங்கும் தன்மை பெற்ற உடம்பாய் நிற்றலின் எனவும்,

'அஇஉஅம் மூன்றும் சுட்டு' தொல். 31

என்ற நூற்பா உரையில், இதுவும் ஆட்சியும் காரணமும் நோக்கிய குறி, சுட்டியறியப்படும் பொருளை உணர்த்தலின் என வும்

'ஆஏ ஓஅம் மூன்றும் வினாஅ' தொல். 32

என்ற நூற்பா உரையில், இதுவும் ஆட்சியும் காரணமும் நோக்கிய குறி, வினாப்பொருள் உணர்த்தலின் எனவும்,

'வல்லெழுத்து என்ப கசட தபற' தொல். 19

என்ற நூற்பா உரையில் ஒழிந்த மெல்லெழுத்தையும் இடையெழுத்தையும் நோக்கத் தாம் வல்லென்று இசைத்தலானும், வல்லென்ற தலைவளியாற் பிறத்த லானும் வல்லெழுத்தாயின எனவும்,

'மெல்லெழுத்து என்ப ஙஞண நமன' தொல். 20

என்ற நூற்பா உரையில், மெல்லென்று இசைத்தலானும், மெல்லென்ற மூக்குவளியால் பிறத்தலானும் மெல் லெழுத்து ஆயின எனவும்.

'இடையெழுத் தென்ப யரல வழள' தொல். 21

என்ற நூற்பா உரையில், இடை நிகரவாய் ஒலித்த லானும், இடை நிகர்த்தாய மிடற்றுவளியால் பிறத்த லானும் இடையெழுத்து ஆயின எனவும்.

'ஆஈஊ ஏஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப' தொல். 4

என்ற நூற்பா உரையில், ஐகார ஔகாரங்கள் குறிய எழுத்தின் நெடிய ஆதற்குக் குற்றெழுத்தாகிய இனம் தமக்கு இலவேனும், மாத்திரை ஒப்புமையான் நெட் டெழுத்து என்றார் எனவும்,

'அவற்றுள், அஇஉ
எஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப' தொல். 3

என்ற நூற்பா உரையில், தமக்கு இனமாயவற்றின்கண் அல்லது குறுமை நெடுமை கொள்ளப்படாமையின், ஒரு மாத்திரை அளவிற்பட்டு அமைந்தனவாம் குற்றெழுத் தின் குறுகிமெய் அரை மாத்திரை பெற்றதேனும் குற்றெழுத்து எனப் பெயர் பெறாதாயிற்று, ஒரு மாத்திரை பெற்ற மெய் தனக்கு இனமாக இன்மையின்,

எனவும் நச்சினார்க்கினியர் குறிப்பிட்ட செய்திகளை யெல்லாம் தொகுத்து இயைபுபடுத்தி இவ்வாசிரியர் இந்நூற்பா உரையில் சுட்டியுள்ளமை காண்க.

'முதலெழுத்துக்களே தம்மொடு தாம் சார்ந்தும் இடம் சார்ந்தும் பற்றுக்கோடு சார்ந்தும் சார்பெழுத் தாயின' என்பது மயிலைநாதர் கருத்து.

(நன். 60ஆம் நூற்பா உரை)

உயிர்மெய், உயிர் அளபெடை என்பவை ற்றில் முதல் எழுத்துக்கள் தம்மொடு தாம் சார்ந்தே சார்பெழுத்து ஆயின.

'ணன முன்னும் வஃகான் மிசையும்' ஆகிய இட றும் ஈற்றில் வரும் வல்லினமெய் ஆறு ஆகிய பற்றுக்கோடும் சார்ந்து முறையே மகரக்குறுக்கமும் குற்றியலுகரமும் தோன்றின. இவ்வாறாகித் தம் இயல்பு ஆகிய மாத்தி ரையில் திரிந்து, சார்பு பற்றி வேறுபட்டு இவை வேற்றுப் பெயருடன் சார்பு எழுத்தாயின. இவை முதல் எழுத்துப்போல அன்றி, மொழியிடைச் சார்த்தியே கூறப் படவேண்டிய நிலை அறியத் தக்கது.

ஒத்த நூற்பாக்கள் :

'னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய் என மொழிப' தொல். 9
'வல்லெழுத்து என்ப கசட தபற.' 19
'மெல்லெழுத்து என்ப ஙஞண நமன.' 20
'இடையெழுத்து என்ப யரல வழள.' 21
'கமமுதல், மெய்மூ வாறுஎன விளம்பினர் புலவர்'
நன். 63
'வல்லினம் கசட தபறஎன ஆறே'. 68
'மெல்லினக் ஙஞண நமனஎன ஆறே.' 69
'இடையினம் யரல வழளஎன ஆறே.' 70
'கம்முன் பிறந்த பதி னெட்டுமெய்' வீ. 1
'ஙஞண நமன என்று செறிந்தன மெல்லினம்' 1

'இடையா முறிந்தன யம்முதல் ஆறும்.' 1
'செப்பாத வல்லினம்.' 7
'என்றமெய் மூவாறும் எண்ணுங்கால்—ஊன்றிய
வன்மை மென்மை இடைமையாம்' நே. 2
'கம்முதல் மூவா றூர் உடல் அவற்றுள்
வலிகசட தபற மெலிஙஞண நமன
இடையரல வழள எனமூ வினமே.' தொ வி. 19
'ககரம்முதல் மூவாறும் காத்திர மாகும்.'
மூ. வீ. எ. 12
'ஊமையும் ஒற்றும் உடலெனப் படுமே.' 13
'அவற்றுள்,
வல்லெழுத்து என்மனார் கசட தபற.' 14
'வன்மைவன் கணம்வலி வல்லெழுத் தாகும்.' 15
'மெல்லெழுத்து என்மனார் ஙஞண நமன.' 16
'மென்மைமென் கணம்மெலி மெல்லெழுத்
தாகும்.' 17
'இடையெழுத்து என்மனார் யரல வழள.' 18
'இடைமை இடைக்கணம் இடைஇடை
யெழுத்தே.' 19

இனமும் முறையும்

8) தோற்றம் அளவு செய்கை பொருள்வடிவு
ஏற்றன ஒத்தலின் ஏற்புடை இனத்தினும்
சிறப்பினும் நெறிப்படச் செறிந்துஈண்டு அம்முதல்
நடத்தல் தானே முறையெனல் வேண்டும்.

இது நிறுத்த முறையானே முறை கூறுகின்றது.

(இ-ள்) இடனும் முயற்சியும் ஆகிய பிறப்பும் மாத்திரையும் புணர்ச்சிக்கண்படும் செய்கையும் பொருளும் வடிவும் ஆகிய இவற்றுள் பொருந்தியன ஒத்தலான், ஒன்றற் ஒன்றுரு பொருத்தம் உடைய இனத்தினாலும் சிறப்பினாலும் ஒழுங்குபட ஒன்றன்பின் ஒன்று இயைந்து நெடுங்கணக்கினுள் அகரம் முதலாக

நடத்தல்தானே நூலுள்ளும் முறை என்று சொல்லுதல் விரும்பும் ஆசிரியன் என்றவாறு.

'நெறிப்பட' என்றதனால், தம்மில் சேர்ந்து வரும் சொற்கள் பல ஆதலும் சந்த இன்பத்திற்கு இயைபு உடைமையும் இன்னோரன்ன பிறவும் இனம் ஆதற்கும், இனம் ஆதற்கு இயைபு உடையன முறை ஆதற்கும் கருவியாம் எனக் கொள்க. முறைக்கு ஏதுச்செய்வார் போன்று இனம் அடைத்தலும் செய்தார் என்பதூஉம் ஆயிற்று. ஒப்புழி முழுதும் ஒத்தலும் ஒருபுடை ஒத்தலும் ஓர்ந்து உணர்க.

வரலாறு: அஆக்கள் பிறப்பானும் செய்கையானும் அங்கு ஆங்கு என்னும் பொருளானும் வடிவானும், இஈக்கள் பிறப்பானும் செய்கையானும், இங்கு ஈங்கு என்னும் பொருளானும், உஊக்கள் பிறப்பானும் செய்கையானும், உங்கு ஊங்கு என்னும் பொருளானும் வடிவானும், எஏக்கள் பிறப்பானும் செய்கையானும், எவன் ஏவன் என்னும் பொருளானும், வடிவானும். ஒஓக்கள் பிறப்பானும் செய்கையானும் வடிவானும் ஒத்து ஓர் இனம் ஆயின. இன்னும் இவை அளபு எடுப்புழி நெட்டெழுத்தோடு குற்றெழுத்திற்கு ஓசை இசையுமாற்றானும் ஓர் இனயாம் என்று உணர்க. குற்றெழுத்துக்களை முன்னாகக்கூறி அவற்றிற்கு இனம் ஒத்த நெட்டெழுத்துக்களை அவற்றின் பின்னாகக் கூறினார், ஒரு மாத்திரை கூறியே இரண்டு மாத்திரை கூறவேண்டுதலின்; அன்றி இரண்டை முன்கூறின் ஆகாது. ஒன்று நின்று அதனொடு பின்வரும் ஒன்று கூடியே இரண்டு ஆவதன்றி, இரண்டு என்பது ஒன்று இன்று ஆதலின். இதனால் ஒன்று தான் பல கூடியே எண் விரிந்தது என்று உணர்க.

கஙக்களும், சஞக்களும், டணக்களும், தநக்களும் பமக்களும் முயற்சியானும் மாத்திரையானும் செய்கை

யானும், யரக்கள் இடத்தானும் செய்கையானும் மாத்திரையானும், லவக்கள் இடத்தானும் மாத்திரையானும் கல்வலிது சொல்வலிது என்றாற்போலத் தம்மில் சேர்ந்துவரும் சொற்கள் பலவாதலானும், ழளக்கள் இடத்தானும் மாத்திரையானும் இடைஎழுத்து யரலவழள என்றால் சந்த இன்பத்திற்கு இயைபு ஆதலானும், றனக்கள் முயற்சியானும் மாத்திரையானும் செய்கையானும் ஒத்து ஓர் இனம் ஆயின.

இனி, முறை வருமாறு :

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

எனத் திருவள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களுள் அகரமாக நிற்கின்றேன் யான்' என உண்மை கூறியவாற்றானும், இறைவன் எல்லாப் பொருளின்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற் போல, அகரமும் எல்லா எழுத்தின்கண்ணும் கலந்து அவற்றின்தன்மையாயே நிற்கும்என்பது சான்றோர்க்கு எல்லாம் ஒப்ப முடிந்தது ஆகலின், அச்சிறப்பு நோக்கி எல்லா எழுத்திற்கும் முன்னர் அகரமும், அதற்கு இனம் ஆகலின் அதன்பின்னர் ஆகாரமும், பிறப்பும் செய்கையும் சுட்டுப் பொருட்டாதலும் அகரத்தொடு அளவும் ஒத்தலின் அதன் பின்னர் இகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ஈகாரமும், இடமும் செய்கையும் சுட்டுப்பொருட்டாதலும் இகரத்தொடு அளவும் ஒத்தலின் அவற்றின் பின்னர் உகரமும், அதற்கு இனம் ஆகலின் அதன் பின்னர் ஊகாரமும், இடமும் செய்கையும் உகரத்தொடு அளவும் ஒத்தலின் அவற்றின் பின்னர் எகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ஏகாரமும், பிறப்பும் செய்கையும் ஏகாரத்தொடு அளவும் ஒத்தலின் தனக்குஇனமாகிய குற்றெழுத்து இன்றேனும் அதன்பின்னர் ஐகாரமும், இடமும் செய்கையும் ஒத்தலின்

அதன் பின்னர் ஒகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ஓகாரமும், பிறப்பும் செய்கையும் வடிவும் ஓகாரத்தொடு அளவும் ஒத்தலின் தனக்கு இனமாகிய குற்றெழுத்து இன்றேனும் அவற்றின் பின்னர் ஒளகாரமும் தம்முள் இயைய வைக்கப்பட்டன

முதல்நாவும் முதல்அண்ணமும் உறப்பிறத்தலான் மெய்களின் முன்னர்க் ககரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ஙகரமும், இடைநாவும் இடைஅண்ணமும் உறப்பிறத்தலானும் அளவானும் ககரத்தொடு இடம் ஒத்தலானும் அவற்றின் பின்னர்ச் சகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ஞகரமும், நுனிநாவும் நுனி அண்ணமும் உறப்பிறத்தலானும் அளவானும் சகரத்தொடு இடம் ஒத்தலானும் அவற்றின் பின்னர் டகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ணகரமும், நுனிநாவும் அண்பல் முதலும் உறப்பிறந்தலானும் அளவானும் டகரத்தொடு இடம் ஒத்தலானும் அவற்றின் பின்னர்த் தகரமும், அதற்கு இனம் ஆகலின் அதன் பின்னர் நகரமும்,இதழ் இயையப் பிறத்தலானும் அளவானும் தகரத்தொடு இனம்ஒத்தலானும் அவற்றின் பின்னர்ப் பகரமும். அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் மகரமும் தம்முள் இயைய வைக்கப்பட்டன. வல்லெழுத்துக்களை முன்னாகக்கூறி, அவற்றிற்கு இனம்ஒத்த மெல்லெழுத்துக்களை அவற்றின் பின்னாகக் கூறி, இடையெழுத்து ஆறனையும் அவற்றின் பின்னாகக் கூறினார். வல்லெழுத்துள் நான்கும் மெல்லெழுத்துள் மூன்றும் இடைஎழுத்துள் இரண்டும் மொழிக்கு முதலாதல் நோக்கி என்று உணர்க.

உயிர்கள் போல மிடற்றுப் பிறந்தவளி கண்ணுற்று அடையப் பிறத்தலான் இடையெழுத்துக்களுள் முன்னர் யகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ரகரமும், இடமும் அளவும் ஒத்தலானும் சந்த இன்பத்திற்கு இயைபு உடைமையானும அவற்றின் பின்னர்

லகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் வகரமும், இடமும் அளவும் வகரத்தொடு முயற்சியும் ஒத்தலானும் சந்த இன்பத்திற்கு இயைபு உடைமை யானும் அதன்பின்னர் ழகரமும், அதற்கு இனம் ஆதலின் அதன் பின்னர் ளகரமும், அளவானும் ழகரம் போலத் தமிழ் எழுத்து ஆகலானும் அவற்றின் பின்னர் றகரமும், அதற்கு இனம்ஆதலின் அதன்பின்னர் னகரமும் தபமுள் இயைய வைக்கப்பட்டன. றகர னகரங்களை வல்லின மெல்லினங்களைச் சார வையாது இறுதிக்கண் வைத்தார். இவை தமிழ்எழுத்து என்பது அறிவித்தற்கும் னகரம் வீடுபேற்றிற்கு உரிய ஆண் மகளை உணர்த்துஞ் சிறப்பானும் என்று உணர்க.

தோற்றம் முதலிய ஒத்தல் அவ்வவ்வதிகாரத்துள் காண்க. ஈண்டுக் காட்டிய ஏதுக்களே அன்றிப் பிற வருவன உளவேனும் கொள்க.

சார்பு எழுத்துக்களுள் ஆய்தம், அகர ஆகாரம் போல அங்காந்து கூறும் முயற்சியால் பிறத்தலானும், உயிர் ஏறாது ஓசை விகாரமாய் நிற்பது ஒன்றேனும் எழுந்தியல் தழாஅ ஓசைபோலக் கொள்ளினும் கொள்ளற்க, எழுத்தேயாம் என்று ஒற்றின்பால் படுத்தற்குப் புள்ளி எனப் பெயர் பெறுதலானும் உயிரும் ஒற்றும் ஆகிய இரண்டற்கும்இடையே வைக்கப்பட்டது.

ஒழிந்த சார்பு எழுத்துக்கள் தத்தம் முதல் எழுத்துக் களொடு ஒத்த முறையே முறையாக முறைபெற்று நடக்கும் என்று உணர்க. ஐகாரத்திற்கு இகரமும் ஒளகாரத்திற்கு உகரமும் இனம் என்றாரும் உளராலோ எனின், அவர் கூறிய இனம் பற்றி முறை பெறாமை யானும்,

'குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே'
தொல்.

எனக் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனார் ஒத்த நூற்றெழுத்து இல்லா ஐகார ஔகாரங்களுக்கு இசை நிறைப்பன யாவை என ஆசங்கித்து,

'ஐஔ என்னும் ஆயிர் எழுத்திற்கு
இகர உகரம் இசைநிறைவு ஆகும்' தொல், 42

எனக் கூறியதன்றி இனமாம் எனக் கூறாமையானும் அது முறையன்று என மறுக்க. 8

விளக்கம் :

நிறுத்தமுறை — இரண்டாம் நூற்பாவில் நிறுத்திய முறைமை.

இடம் : எழுத்தின் தோற்றத்திற்கு இடமாகிய மார்பு கழுத்து மூக்குத் தலை என்பன.

முயற்சி: பல் இதழ் நா மேல்வாய் என்பனவற்றின் தொடர்பால் எழுத்தொலி எழுப்ப நிகழ்த்தும் முயற்சி. எழுத்துப் பிறப்பை உணங்கொண்டே இனமும் அமைத்து ஆசிரியர் முறைப்படுத்தியுள்ளார் ஆதலின், முறை கூறும் அளவிலேயே இனம் அமைத்தலும் பெறப்படும்.

பிறப்பு : தோன்றுமிடமும் முயற்சியும்.

செய்கை: அல்வழி வேற்றுமை என்ற இருவகைத் தொடர்க்கண்ணும் புணரும் முறைமை.

இவ்வாசிரியர் மயிலைநாதரையும் நச்சினார்க்கினியரையும் ஓரளவு பின்பற்றி இனம் அடைத்தற்கும் முறைவைப்பிற்கும் விளக்கம் தந்துள்ளார். மயிலைநாதர் ஐகாரம் இடத்தானும் முயற்சியானும் ஒத்து இகரத்தொடு கூடி இனம் ஆயிற்று என்றும், ஔகாரம் இடத்தானும் முயற்சியானும் உகரத்தொடு கூடி இனமாயிற்று என்றும் கூறும் கருத்து இவ்வாசிரியருக்கு உடன்பாடன்று. உயிர் அளபெடைக்கண் இசை நிறைத்தல்

ஒன்றற்காகவே ஆசிரியரால் ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் பயன்படுத்தப்படுவனவே அன்றி, இவற்றிடையே வேறு இயைபு எதுவும் இன்று என்னும் கருத்தினர் இவ்வாசிரியர்.

'வேற்றுமை அல்வழி இஐ என்னும்
ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகை நிலைய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்' தொல். 158

என அல்வழிக்கண்ணும்,

'இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே'
தொல். 235

'ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே'
தொல். 280

என வேற்றுமைக்கண்ணும் இகரமும் ஐகாரமும் ஒரே வகையான செய்கை பெறுவதனை நோக்கியும்,

'ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அவ்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
அவ்விரு வீற்றும் உகரம் வருதல்
செவ்விது என்ப சிறந்திசி னோரே' தொல். 295

என்ற ஔகார ஈற்றுப்புணர்ச்சிவிதி அமைந்துள்ளதனை நோக்கியும், ஐ-இ, ஔ-உ என்பன இனம் எனக் கோடல் இழுக்கின்மை அறிக. செய்கையான் ஒத்தல் இனம் அடைத்தற்குச் சிறந்த காரணமாகக் கொள்ளும் இவர் ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனம் ஆதற்கண் பொருத்தமின்மை காண்பது வியக்கத்

தக்கது. நச்சினார்க்கினியர் தொல்காப்பிய எழுத்துப் படலத்தின் முதல் நூற்பாவுரையில். 'குற்றெழுத்துக் களை முன்னாகக் கூறி அவற்றிற்கு இனம் ஒத்த நெட்டெழுத்துக்களை அவற்றின் பின்னாகக் கூறினார்; ஒரு மாத்திரை கூறியே இரண்டு மாத்திரை கூற வேண்டுதலின், அன்றி, இரண்டை முற்கூறினாலோ எனின், ஆகாது; ஒன்று நின்று அதனொடு பின்னரும் ஒன்று கூடியே இரண்டு ஆவது அன்றி, இரண்டு என்பது ஒன்று இன்று ஆதலின். இதனால் ஒன்றுதான் பல கூடியே எண் விரிந்தது என உணர்க' என்றும், வீடு பேற்றிற்கு உரிய ஆண்மகனை உணர்த்தும் சிறப்பான் னகரம் பின்வைத்தார்' என்றும்,

'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' தொல்.46

என்ற நூற்பா உரையில், ''இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும் உயிர்க் கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கு எல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகர முதல' என்னும் குறளான் 'அகரமாகிய முதலை உடைய எழுத்துக்கள் எல்லாம்' அதுபோல, இறைவனாகிய முதலை உடைத்து உலகம், என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும். கண்ணன் 'எழுத்துக்களில் அகரம் ஆகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும், பிற நூல்களானும் உணர்க' என்றும்,

'இடையெழுத்து என்ப யரல உழள' தொல் .21

என்ற நூற்பா உரையில், 'வல்லினத்துக் க ச த ப என்னும் நான்கும் மெல்லினத்து ஞ ந ம என்னும் மூன்றும் இடையினத்து ய வ என்னும் இரண்டும்

மொழிக்கு முதலாதல் நோக்கி, வல்லினம் மெல்லினம் இடையினம் என இம்முறையே வைத்தார்' என்றும்,

'அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன' தொல். 2

என்ற நூற்பா உரையில், 'ஆய்தத்திற்கு வடிவு கூறினார் ஏனை ஒற்றுக்கள்போல உயிர்ஏறாது ஓசை விகாரமாய் நிற்பதுஒன்று ஆகலின்; எழுத்தியல் தழாஅ ஓசைபோலத் தோன்றினும், அவ்வாறு கொள்ளற்க என்பதற்கு 'எழுத்தோரன்ன' என்றார்' என்றும், பல இடங்களில் கூறிய செய்திகளும் எழுத்துக்களின் முறைவைப்புப்பற்றி முதல் நூற்பா உரையுள் குறிப்பிட்ட செய்திகளுள் சிலவும் இவ்வாசிரியரால் கொள்ளப்பட்டமை காண்க.

'சிறப்பினும் இனத்தினும் செறிந்துஈண்டு அம்முதல் நடத்தல் தானே முறையா கும்மே'

என்ற நன்னூல் (73) நூற்பா வுரையுள், சிவஞான முனிவர் எழுத்துக்களின் முறைவைப்புப் பற்றிக் கூறிய செய்திகள் சாலவும் மேதக்கன ஆதலின், அவற்றைச் சுருங்கக் காண்போம்.

சிறப்புப் பற்றித் தனித்து இயங்கும் ஆற்றல் உடைய உயிர் முன்னும் அச்சிறப்பில்லா மெய் பின்னும் வைக்கப் பட்டன. உயிருள்ளும் சிறப்புடைய குறில் முன்னும் இனமாகிய நெடில் பின்னும், மெய்களுள் சிறப்புடைய வல்லினம் முன்னும் இனமாகிய மெல்லினம் பின்னும் வைக்கப்பட்டன. பிறப்பிடத்தையும் முயற்சியையும் உட் கொண்டே நெடுங்கணக்கு முறை அமைந்துள்ளது.

அ ஆ—அங்காத்தலால் பிறப்பன.
இ ஈ —அங்காப்போடு அண்பல் முதலை
நாவிளிம்புறப் பிறப்பன.

உ ஊ—அங்காப்போடு இதழ் குவிதலான் பிறப்பன.

எ — அகரக்கூறும் இகரக் கூறும் உறப் பிறப்பது.

ஏ — அகரக்கூறும் ஈகாரக் கூறும் உறப் பிறப்பது.

ஐ — அகரக்கூறும் இகரக்கூறும் யகரக்கூறும் உறப் பிறப்பது.

ஒ — அகரக்கூறும் உகரக்கூறும் உறப் பிறப்பது.

ஓ — அகரக்கூறும் ஊகாரக்கூறும் உறப் பிறப்பது.

ஔ — அகரக்கூறும் உகரக்கூறும் வகரக்கூறும் உறப் பிறப்பது.

எனவே, உயிரெழுத்துக்கள் அப்பிறப்பு முறையே முறையாக வைக்கப்பட்டன.

க்ங் — முதல்நா முதல்அண்ணம் உறப் பிறப்பன.

ச்ஞ் — இடைநா இடைஅண்ணம் உறப் பிறப்பன.

ட்ண் — நுனிநா நுனிஅண்ணம் உறப் பிறப்பன.

த்ந் — அண்பல் அடி நாவிளிம்பு உறப் பிறப்பன.

ப்ம் — மேலுதட்டினைக் கீழ்உதடு உறப பிறப்பன

ய் — அடிநா அடிமேல் வாயைத் தட்டுதலால பிறப்பது.

ர்ழ் — அண்ணத்தை நாவிளிம்பு தடவுதலால் பிறப்பன.

ல் — அண்பல் அடியை நாவிளிம்பு வீங்கித் தட்டுதலால் பிறப்பது.

வ் — கீழ்உதடு மேற்பல்லைப் பொருந்துவதால் பிறப்பது.

ள் — அண்ணத்தை நாவிளிம்பு வீங்கித் தடவுவதால் விறப்பது.

ற்ன் — அடிஅண்ணத்தை அடிநா அழுத்தித் தடவுவதால் பிறப்பன.

ழ ள ற ன என்பன தமிழ்ச் சிறப்பு எழுத்து ஆதலின் பின் கூறப்பட்டன. வடமொழியில் ளகரமும் உளது எனினும்,லகரத்தொடு பொருள் வேறுபாடு இன்மையின் சிறப்பின்றாம். ளகரம் தமிழில் சிறப்பெழுத்தாய் இலங்குமாறு வெல்லம்—வெள்ளம் முதலிய சொற்களில் பெய்து காண்க.

இனம் அடைத்தற்குத் தானம் முதலியன பயன்படுமாறு:

தோற்றத்தால் க ச ட த ப ற ஆறும் வல்லினமும், ஙஞணநமன ஆறும் மெல்லினமும் ஆயின. இவ்வாறே தோற்றத்தின் ஒரு கூறாகிய முயற்சியால் அஆ முதலிய முதலெழுத்து இவ்விரண்டு ஓர் இனம் ஆயின. அளவால் குறிலும் நெடிலும் தனித்தனி ஓர் இனம் ஆயின. பொருளால் சுட்டு மூன்றும் ஓர் இனமும், வினா நான்கும் ஓர் இனமும் ஆயின. தோன்றும் இடத்தாலும் வடிவாலும் இடையெழுத்து ஆறும் ஓர் இனம் ஆயின. வடிவு — அகரத்தொடு சிவணியே ஒலிக்கும் ஒலிவடிவு.

ஒத்த நூற்பாக்கள் :

'தானம் முயற்சி அளவு பொருள் வடிவு
ஆனஒன்று ஆதிஓர் புடை ஒப்பு இனமே.' நன். 72

'சிறப்பினும் இனத்தினும் செறிந்துஈண்டு அம்முதல்
நடத்தல் தானே முறையா கும்மே.' நன். 73

'உயிர்முதல் முப்பதும் ஒன்றுஒன் றற்கு இனம்.'
மு. வீ. எ. 20

எழுத்துக்களின் பொதுப்பிறப்பு

9) உயிர் உழப்பு உதானனின் நாதம் உச்சி
மிடறுஉரம் மூக்குஉற்று இதழ்நா பல்அணத்து
அடைந்து பின்னர் அவற்றது வினையான்
வெவ்வேறு எழுத்துஒலி யாய்வரல் பிறப்பு.

நிறுத்த முறையானே பிறப்புஉணர்த்துவனவற்றுள். இஃது அதன் பொது இயல்பு உணர்த்துகின்றது.

இ-ள் : உயிர்க்கிழவனது முயற்சியால் எழுகின்ற உதானன் என்னும் காற்றால் நாதம் தலையும் மிடறும் நெஞ்சும் மூக்கும் என்னும் இந்நான்கு நிலைக்களத்தும் சென்று பொருந்தி, இதழும் நாவும் பல்லும் அண்ணமும் என்னும் இந் நால்வகை உறுப்புக்களையும் சார்ந்து, பின்னர் அவற்றது புடைபெயர்ச்சியான் வேறுவேறு வகைப்பட்டு எழுத்து ஓசையாய்ச் செவிப்புலனாக வெளிப்படுதல் எழுத்துக்களது பிறப்பாம் என்றவாறு.

வேறு வேறு வகைப்பட்டு எழுத்து ஓசையாய்ச் செவிப்புலனாக வெளிப்படுதல் எழுத்துக்களது பிறப்பாம் எனவே, பரை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நால் வகை வாக்கினுள், அகத்து எழுவன ஆகிய பரை முதலிய மூன்றனையும் ஒழித்து, 'எழுந்துபுறத்து இசைப்பது ஆகிய வைகரி வாக்கினையே ஈண்டு இவர் எழுத்துக் களது பிறப்பாம் என்றார் என்பதூஉம் பெற்றாம். அவற்றின் விகற்பம் எல்லாம் சைவஆகமத்தான் உணர்க.

'எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்துஎழு வளியிசை அரில்தப நாடி
அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃதுஇவண் நுவலாது எழுந்துபுறத்து இசைக்கும்
மெய்தெரி வளிஇசை அளவுநுவன் றிசினே'

தொல். 102

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும் எனக்கொள்க. முற்கு, வீளை முதலியனவும் முயற்சியான் ஆமேனும், மொழிக் காரணம் ஆகிய எழுத்து ஓசையாய்ப் புலப்படா மையின் ஈண்டைக்கு ஏலா எனக் கொள்க.

விளக்கம் :

நிறுத்தமுறை — இரண்டாம் நூற்பாவில் நிறுத்திய முறை.

பிறப்பு — எழுத்துக்களின் தோற்றம்.

உயிர்க்கிழவன் — மனித உடலொடு கூடி உணர்தல் தன்மைத்து ஆகிய உயிர்.

உதானன் — உந்தியிலிருந்து எழும் காற்று.

நிலைக்களன் — தலை மிடறு நெஞ்சு மூக்கு என்ற நான்கும்.

முயற்சிக்கு உதவுவன — பல் இதழ் நா அண்ணம் என்ற நான்கும்.

தொல்காப்பியனார் தலை மிடறு நெஞ்சம் என்ற மூன்றும் நிலைக்களன் என்றும், பல் இதழ் நா மூக்கு மேல்வாய் என்ற ஐந்தும் முயற்சிக்கு உதவுவன என்றும் கொள்வர். இந்நூலாசிரியர் தன்னூலை ஒட்டி மூக்கினையும் நிலைக்களன் என்றார்.

உந்தியிலிருந்து எழும் உள் நாதம் — பரை
நெஞ்சின்கண் நிற்பது — பைசந்தி
மிடற்றின்கண் நிற்பது — மத்திமை
வெளித்தோன்றும் நாதம் — வைகரி

முக்குதல், சீழ்க்கை அடித்தல் போல்வன எழுத்து அல்லாத ஓசை ஆதலான், இவற்றின் பிறப்புப் பற்றிய செய்தி கூறப்படவில்லை

எல்லா எழுத்தும்...... நுவன்றிகினே. தொல். 102

ஆசிரியன் எல்லா எழுத்துக்களும் பிறக்குமாறு முந்து நூற்கண்ணே கூறி வெளிப்படுக்கையினாலே. யானும் அவ்வாறே கூறிய எண்வகை நிலத்தும்

பிறக்கின்ற பிறப்போடே அவ்வெழுத்துக்களைக் கூறும் இடத்து, யான் கூறியவாறு அன்றி உந்தியில் தோன்றும் காற்றினதுதிரிதரும் கூற்றின் கண்ணே மாத்திரை கூறி கோடலும், மூலாதாரத்தில் எழுகின்ற காற்றின் ஓசையைக் குற்றம் அற நாடிக்கோடலும் பார்ப்பாரது வேதத்து உளதே, அந்நிலையை ஆண்டு உணர்க; அங்ஙனம் கோடலை ஈண்டுக் கூறல் ஆகாமையின் இந் நூற்கண் கூறாதே, உந்தியில் தோன்றிப் புறத்தே புலப்பட்டு ஒலிக்கும் பொருள் தெரியும் காற்றினது துணிவிற்கே யான் மாத்திரை கூறினேன்; அவற்றினது மாத்திரையை உணர்க என்றவாறு.

இலக்கண விளக்கச் சூறாவளி

'படைகுடி கூழமைச்சு நட்பரண்' என்புழிப்போலச் செய்யுள் இன்பம்படத் 'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ' எனச் சூத்திரம் செய்த ஆசிரியர் கருத்தை நோக்காது அதுவே முறையாகக் கொண்டார். சைவாகமங்களில், உந்தியின் நின்றும் எழுந்த நாதம் நெஞ்சின்கண் பைசந்தியாய்க் கண்டத்தின்கண் மத்திமையாய் நின்று பின்னர் வைகரியில் வெளிப்படும் என்றதுணை அல்லது இவர் கூறிய முறையால் பிறக்கும் என்னாமையானும், பிறவாற்றானும் அது முறையன்மை அறிக.

அமைதி—வல்லினம் தலைவளியால் பிறக்கும் என்ற கருத்துடைய இவ்வாசிரியர் தலையை முற்படக் கூறினார்.

'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'

என எதுகைத் தொடை நயம் நோக்கி வள்ளுவனார் முறை மாற்றிக் கூறினார். அங்ஙனம் செய்யுள் இன்பம் படக் கூறுதல் தொல்காப்பியனார் கருத்தாயின்,

'உந்தி முதலா முந்துவளி தோன்றி
நெஞ்சினும் தலையினும் மிடற்றினும் நிலைஇ'
தொல். 83

என்று மாற்றிக்கூறியிருப்பார். 'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ' என்ற அடி செய்யுள் இன்பத்திற் காகச் சொல்லை மாற்றி அமைத்த அடி அன்று என்பது செவிகருவியாக உணரப்படும். எனவே, தொல்காப்பிய னாரை ஒட்டியே இவ்வாசிரியர் இந்நூற்பா யாத்து உரை எழுதியதன்கண் திரிபு இன்மை உணரப்படும்.

ஒத்த நூற்பாக்கள் :

'உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியும் காட்சி யான.' தொல். 83

'உந்தி முதலெழும் காற்றுப் பிறந்துஉர மூம்சிரமும்
பந்தமலி கண்டமும் மூக்குமுற்று அண்ணம்
பல்லுடனே
முந்து தமிழ்நா மொழிஉறுப் பாகும் முயற்சியினால்
வந்து நிகழும் எழுத்தென்று சொல்லுவர்
வாணுதலே.' வீ. 6

'உந்தியில் தோன்றும் உதான வளிப்பிறந்து
கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து — வந்தபின் நா
ஆசில் அண்ணம் இதழ்எயிறு மூக்கெனப்
பேசும் எழுத்தின் பிறப்பு.' நே. 6

'நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும் அணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குஉற்று இதழ்நாப் பல்அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்தொலி யாய்வரல் பிறப்பே.'
நன். 74

'......இதழ் மூக்கு அணம்பல்நா
ஐந்துதுணை இடத்தாம் அக்கரப் பிறப்பே.'
தொ. வி. எ. 3

எழுத்துக்களின் பொதுப்பிறப்பிடம்

10) அவ்வழி ஆவி இடைமிடறு உச்சி
வன்மை மென்மைமூக்கு இசையில் தோன்றும்.

இது. முதல் எழுத்துக்கள் இந்நிலைக்களங்களில் நிலைபெறும் ஓசையால் பிறக்கும் என்று அவற்றது பொதுப்பிறவி கூறுகின்றது.

இ-ள் : மேற்கூறிய நிலைக்களன்களுள் பன்னிருயிரும் இடையெழுத்து ஆறும் மிடற்றின்கண்ணும், வல்லெழுத்து ஆறும் மூக்கின்கண்ணும் நிலைபெற்று இசைக்கும் ஓசையால் பிறக்கும் என்றவாறு.

விளக்கம் : தொல்காப்பியனார் உயிரெழுத்துக்களுக்கே பொதுப்பிறப்பிடம் கூறினார். 'தத்தம் திரிபே சிறிய என்ப' தொல். 88 என்ற நூற்பாவுரையில் நச்சினார்க்கினியர் வல்லினம் தலைவளி உடையது, மெல்லினம் மூக்குவளி உடையது. இடையினம் மிடற்று வளி உடையது என்று குறிப்பிட்டதனை இவ்வாசிரியர் மேற்கொண்டார்.

உயிரும்இடையினமும் மிடற்றின்கண் தோன்றுவன என்பதில்,இலக்கண ஆசிரியரிடையே கருத்து வேறுபாடு இல்லை. மெல்லினம் மூக்கின் வளியிசையால் தோன்றும் எனத் தொல்காப்பியனாரும் நன்னூலாரும் இவரும்

கொள்வர். மெல்லினம் தலைவளியால் பிறக்கும் என்று தொன்னூல் விளக்கமும் முத்து வீரியமும் கூறும்.

வல்லினம் மார்பில் பிறக்கும் என்று நன்னூலும் தொன்னூல் விளக்கமும் முத்து வீரியமும் கூறும். இவ் வாசிரியர் நச்சினார்க்கினியரை ஒட்டி வல்லினம் தலை வளியால் பிறக்கும் என்றார். இதுவே உரையாசிரியர் கருத்தும் ஆகும். (தொல். 100 உரை)

ஒத்த நூற்பாக்கள் :

'அவ்வழிப்
பன்னீர் உயிரும் தம்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.' தொல்.84

'மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.'
தொல். 100

'அவ்வழி
ஆவிஇடைமை இடம் மிடறு ஆகும்
மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை.'
நன். 75

'உயிர்இடை யினம்மிடறு உரம்வலி உச்சி
மெலிஇயை முதலிடம்.' தொ. வி. 3

'உயிர் இடை யினம்மிடறு உரம்வலி உச்சி
மெலிஇடம் ஆம்என வேண்டப் படுமே.'
மு. வீ. எ. 43

உயிர்களின் முயற்சிப் பிறப்பு

11) அவற்றுள் முயற்சியுள் அஆ அங்காந்து
இஈ எஏ ஐகான் அதனொடு
அண்பல் முதல்நா விளிம்புஉற உள
ஒஓ ஔகான் இதழ்குவிந்து இயலும்

உயிர்கள் இம்முயற்சிகளால் பிறக்கும் என அவற்றது சிறப்புப் பிறவி கூறுகின்றது.

இ-ள்: மேல் பொதுப்பிறவி கூறிய முதல் எழுத்துக்களுள் அகர ஆகாரங்கள் முன்னர்க் கூறிய நால்வகை முயற்சிகளுள் அங்காந்து கூறும் முயற்சியானும், இகர ஈகார எகர ஏகார ஐகாரங்கள் அங்காந்து கூறும் முயற்சியொடு அண்பல்லும் அடிநா விளிம்பும் உறக் கூறும் முயற்சியானும், உகர ஊகார ஒகர ஓகார ஔகாரங்கள் இதழ் குவிந்து கூறும் முயற்சியானும் பிறக்கும் என்றவாறு. அன்னவாதல் கூறிக் காண்க

அண்பல் வினைத்தொகையாய் நாவிளிம்பு அணுகுதற்குக் காரணமாகிய பல் என்று அதற்கு ஒரு பெயர் ஆயிற்று 'தந்து புணர்ந்து உரைத்தல்' என்னும் உத்தியான் 'அவற்றுள் முயற்சியுள்' என்பதனை மேலும் வருவிக்க. 11

விளக்கம்: ஒலித்தலுக்காக நாவிளிம்பு முன்வாய்ப் பல்லை அணுகுதலால் முன்வாய்ப்பல் அண்பல் எனப்பட்டது, இப்பற்கள் நாவிளிம்பு அணுகுதற்குக் காரணமாகப் பேசப்பட்டன அல்ல எனினும், நாவிளிம்பு அணுகி வெவ்வேறு எழுத்து ஒலி உண்டாக்குவதற்குப் பயன்படுதலால் உள்பொருள் அல்லதனை உள்பொருள் போலக் குறிப்பிடும் 'தந்துபுணர்ந்து உரைத்தல்' என்ற உத்தி வகையாக இவ்வாசிரியர் குறிப்பிடுகிறார்.

'இசை கெழீஇ இன இசைக்கும்' என்ற தொல்காப்பிய 86ஆம் நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர், 'அண்பல் வினைத்தொகை; முன்வே. நாவிளிம்பு அணுகுதற்குக் காரணமான பல் என்று அதற்கு ஒரு பெயராயிற்று' என்று குறிப்பிட்டுள்ளார். வினைத்தொகை காரணப் பொருளில் வருதல் 'குளன் அணி தாமரை' என்ற

கலித்தொகைத் தொடருக்குக் 'குளன் அழகு பெறுதலுக்குக் காரணமாகிய தாமரை' என்று அவர் உரை கூறியவாற்றானும் உணர்க.

ஒத்த நூற்பாக்கள் :

'அவற்றுள்
அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்.' தொல். 85

'இ ஈ எ ஏ ஐயென இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புஉறல் உடைய.'
தொல். 86

'உ ஊ ஒ ஓ ஔஎன இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்.'
தொல். 87

'அவற்றுள்
முயற்சியுள் அ ஆ அங்காப்பு உடைய.' நன். 76

'இ ஈ எ ஏ ஐ அங் காப்பொடு
அண்பல் முதல்நா விளிம்புஉற வருமே.' நன். 77

'உ ஊ ஒ ஓ ஔஇதழ் குவிவே.' நன். 78

'அவற்றுள்
அ ஆ அங்காப் பொடுவரும் என்ப.' மு. வீ. எ. 44

'இ ஈ எ ஏ ஐஅங் காப்பொடு
மேல்வாய்ப் பல்லடி நாவிளிம்புற வருமே.' 45

'உ ஊ ஒ ஓ ஔஇதழ் குவிவே.'

மெய் எழுத்துக்களின் பிறப்பு

12) முதல்இடை நுனிநா அண்ணம் உறமுறையின்
கஙவும் சஞவும் டணவும் அண்பல்
அடிநா முடியுறத் தநவும் மீகீழ்
இதழ்உறப் பகாரம் மகாரம் இரண்டும்
அண்ணம் சேர்ந்த மிடற்றுஎழு வளியிசை
கண்ணுற்று அடைய யகாரமும் அண்ணம்
நுனிநா வருட றழவும் அண்பல்
முதலும் அண்ணமும் முறையின்நா விளிம்பு
வீங்கி ஒற்றவும் வருடவும் லளவும்
மேற்பல் இதழ்உற வகாரமும் அண்ணம்
நுனிநா ஒற்ற றனவும் தோன்றும்.

இது மேல் பொதுப்பிறவி கூறிய முதல் எழுத்துக்களுள் மெய்கள் இம் முயற்சியால் பிறக்கும் என அவற்றது சிறப்புப் பிறவி கூறுகின்றது.

இ-ள் : முதல் நாவும் முதல் அண்ணமும், இடை நாவும் இடை அண்ணமும், நுனிநாவும் நுனி அண்ணமும் செறியக் கூறும் முயற்சியான் முறையானே ககரஙகரங்களும், சகர ஞகரங்களும், டகர ணகரங்களும், அண்பல் முதலும் நாவினது நுனியும் செறிக்கூறும் முயற்சியான் தகர நகரங்களும், மேல் இதழும் கீழ் இதழும் செறியக் கூறும் முயற்சியான் பகர மகரங்கள் ஆகிய இரண்டும், அண்ணத்தைப் பொருந்திய மிடற்றின்கண்ணே நிலை பெற்று எழாநின்ற காற்றான் ஆய ஓசை அவ் வண்ணத்தை அணைந்து உரல் ஆணி இட்டாற் போலச் செறியக்கூறும் முயற்சியான் யகரமும், அண்ணத்தை நாநுனி தடவக்கூறும் முயற்சியான் ரகரழகரங்களும், அண்பல் அடியையும அண்ணத்தையும் முறையானே நாவிளிம்பு தடித்துத் தீண்டவும் தடவவும் கூறும் முயற்சியான லகரளகரங்களும், மேற்பல்லும் கீழ்இதழும

இழையைக்கூறும் முயற்சியான் வகரமும், அண்ணத்தை நாவின் நுனி மேல் நோக்கிச் சென்று தீண்டக் கூறும் முயற்சியான் றகரனகரங்களும் பிறக்கும் என்றவாறு.

உயிர்மெய்யாகக் கூறினும். தனி மெய்யாகச் சேக்கை வேங்கை என மொழிப்படுத்து அன்னவாதல் கூறிக் காண்க. பிறவும் அன்ன.

ஈண்டு, மிடற்று எழு வளிஇசை என்றது அநுவாதம் 'அடிநா அடிஅணம் உற யதோன்றும்' என்றார், அதன் இயல்பு உணராமை. மெய் பொய் எனக் கூறிக் காண்க.

விளக்கம் : 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' ஆதலின், இந்நூற்பாவில் மெய்யெழுத்துக்கள் அகரத்தொடு சிவணியே எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அந்நிலையில் அவற்றின் பிறப்பை உள்ளவாறு கூறி அறிதற்கண் எளிமை இராது என்ற எண்ணமுடையார் உணருவதற்காகவும், அரை மாத்திரை ஒலித்தல் அளவுடைய தனிமெய்யைத் தனியே ஒலித்தல் இயலாது என்பது கருதியும் தனிமெய்யின் ஒலியைச் சேக்கை வேங்கை என மொழியிடைப்படுத்து உணருமாறு கூறினார்.

'மெய்யின் அளவே அரைஎன மொழிப' தொல். 11 என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர், 'தனி மெய்யினது மாத்திரையினை ஒரோவொன்று அரை மாத்திரை உடையது என்று கூறுவர் புலவர் என்றவாறு அவ்வரை மாத்திரையும் தனித்துக்கூறிக் காட்டலாகாது நாச்சிறிதுபுடை பெயருந் தன்மையாய் நின்றலின். இனி அதனைச் சில மொழி மேல் பெய்து, காக்கை கோங்கு கவ்வை எனக் காட்டுப' என்று குறிப்பிட்டுள்ளதும் நோக்குக.

இடையினம் தோன்றும் இடம் மிடறுஎன்று பத்தாம் நூற்பாவில் கூறியதை மீட்டும் விதந்து, யகரத்தின்

பிறப்பிடத்தை முயற்சியொடு இணைத்துக் கூறும் இவ் விடத்தில் 'மிடற்று எழுவளி இசை' என்றது கூறியது கூறல் ஆயினும், இடையினத்தின் பிறப்பு முயற்சி அதிகாரப்பட்டமையின் அதன்பிறப்பிடத்தையும் ஒருங்கு இணைத்து நினைவுறுத்தல் இயைபு பற்றி அமைதலின், 'ஈண்டு மிடற்று எழுவளி இசை என்றது அநுவாதம்' என்றார்.

சிதைவுகள் பத்தனுள் ஏற்றுக்கொள்ளத்தக்க சிதைவுகள் ஐந்து என்றும், அவற்றுள் கூறியது கூறலும் ஒன்று என்றும் பேராசிரியர் தொல்காப்பியப் பொருட் படல 664ஆம் நூற்பா வுரையுள் கூறியதும் நோக்குக.

'கூறின பின்னும் கூறின சில அவை
அநுவாதம் என்றே அறிந்தே அடக்குக.'

இ. கொ. 7

உரலாணி — மர உரலைப் பலகாலும் உலக்கை கொண்டு பயன் கோடலான் ஏற்படும் ஆழ்ந்த பள்ளம் நீக்கப்பெற ஏற்ற பெற்றியதாய் வலியச் செருகப்படும் மர ஆப்பு. இங்ஙனமே நச்சினார்க்கினியரும் யகரத்தின் பிறப்பைக் கூறும்போது குறிப்பிட்டுள்ளார்.

அடிநா அடி அண்ணத்தைத் தொடுவதனால் யகரம் பிறவாது; அழுத்தித் தட்டினால்தான் பிறக்கும் என்பது.

ஒத்த நூற்பாக்கள் :

'ககாரம் ஙகாரம் முதல்நா அண்ணம்.' தொல். 89

'சகாரம் ஞகாரம் இடைநா அண்ணம்.' 90

'டகாரம் ணகாரம் நுனிநா அண்ணம்.' 91

'அவ்வாறு எழுத்தும் மூவகைப் பிறப்பின' 92

'அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனிது பிறக்கும் தகாரம் நகாரம்.' 93

'அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்.'
தொல். 94

'நுனிநா அணரி அண்ணம் வருட
ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.' 95

'நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.' 96

'இதழ்இயைந்து பிறக்கும் பகாரம் மகாரம்.' 97

'பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும்.' 98

'அண்ணம் சேர்ந்த மிடற்றுஎழு வளிஇசை
கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்.' 99

'கஙவும் சஞவும் டணவும் முதல்இடை
நுனிநா அண்ணம் உறமுறை வருமே.' நன். 79

'அண்பல் அடிநா முடிஉறத் தநவரும்.' 80

'மீகீழ் இதழ்உறப் பம பிறக்கும்.' 81

'அடிநா அடிஅணம் உறய தோன்றும்.' 82

'அண்ணம் நுனிநா வருட ரழவரும்.' 83

'அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.' 84

'மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே.' 90

'அண்ணம் நுனிநா நனிஉறின் றனவரும்.' 91

'அடிநா அடிஅணம் அழுத்தக் கஙவரும்.'
மு. வீ. எ. 47

'இடைநா இடைஅணம் இறுக்கச் சஞவரும்.' 48

'நுனிநா நுனிஅணம் நோக்க டணவரும்.' 49

'அண்பல் அடிநா முடியுறத் தநவரும்.' 50

'இரண்டுஇதழ் கூறப்பம எழும்என மொழிப.' 51

'அடிநா அடி அணம் உறவரும் யகரம்.' 52
'அண்ணம் நுனிநா வருட ரழவரும்.' மு வீ எ. 53
'லகரம்-அணப்பல் லடிநா விளிம்புஉற வருமே' 54
'ளகரம்மேல் வாய்ய நாநுனி தடவப்
பிறக்கும் என்மனார் பெரிதுஉணர்ந் தோரே.' 55
'மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே.' 56
'அண்ணம் நுனிநா அழுத்த றனவரும்.' 57
'முதல்இடை நுனிநாப் பல்இதழ் மூக்கின்
வன்மை முதலா மும்மையும் பிறக்கும்.' -அவிநயம்

சார்பு எழுத்தின் முயற்சிப் பிறப்பு

13. ஆய்தம் நெஞ்சு ஓசையின் அங்காந்து இயலும்
சார்புஎழுத்து எனவும் தம்முதல் அனைய.

இது சார்பு எழுத்துக்கள் இந்நிலைக் களன்களில் நிலைபெறும் ஓசையானும், இம் முயற்சியானும் பிறக்கும் என அவற்றின் பொதுவும் சிறப்பும் ஆகிய இரு கூற்றுப் பிறவியும் கூறுகின்றது.

இ-ள்: ஆய்த எழுத்து நெஞ்சின் கண் நிலைபெற்று ஒலிக்கும் ஓசையானும், அங்காந்து கூறும் முயற்சியானும் பிறக்கும். சார்ந்து வருவன ஆகிய ஒழிந்த எழுத்துக்களின் பிறவியும் தத்தம் முதல் எழுத்துக்களின் பிறவியை ஒக்கும் என்றவாறு. அன்னவாறு கூறிக் காண்க. 13

விளக்கம் : நச்சினார்க்கினியர் 'சார்ந்துவரின் அல்லது' தொல் 101 என்ற நூற்பா வுரையில் 'ஏனை ஒத்த காட்சியின் இயலும் என்ற தொடருக்கு, 'ஒழிந்த ஆய்தம் தனக்குப் பொருந்தின நெஞ்சுவளியான் பிறக்கும்' என்று குறிப்பிட்டதை உட்கொண்டு, இவ்வாசிரியர் 'ஆய்தத்தின் பிறப்பிடன் நெஞ்சு' என்றும், நன்னூலார் 'அங்கா முயற்சி'—நன்.87என்று கூறியதை

உட்கொண்டு, 'முயற்சி அங்காத்தல்' என்றும் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார் ஆய்தம் தலைவளியால் பிறக்கும் என்பர். முத்து வீரிய நூலார் ஆய்தம் உந்தியிலேயே தோன்றும் என்பர்.

ஒத்த நூற்பாக்கள் :

'சார்ந்துவரின் அல்லது தமக்குஇயல்பு இலஎனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பின் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியின் தம்இயல்பு இயலும். தொல்.101

'ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்புஎழுத்து ஏனவும் தம்முதல் அனைய' நன்.87

'உந்திதனி நிலைஉற்று அங்காந்து இயலும்.'
மு. வீ. எ. 58

பிறப்பிற்குப் புறனடை

14. தத்தம் திரிபே சிறிய என்ப.

இது மேலனவற்றிற்கு ஒரு புறனடை கூறுகின்றது.

இ-ள்: ஒவ்வொரு தானத்துள் பிறக்கின்ற எழுத்துக்களைக் கூட்டிக் கூறினோமாயினும், நுண்ணுணர்வான் ஆராயும் இடத்துத் தம்முடைய வேறுபாடுகள் சிறிய சிறியவாக உடைய என்று கூறுவர் புலவர், அவ் வேறுபாடுகள் அறிந்து கொள்க என்றவாறு.

அவை எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் என்றவாற்றானும், தலைஇசை மிடற்றுஇசை, நெஞ்சுஇசை, மூக்குஇசை என்றவாற்றானும் பிறவாற்றானும் வேறுபடுதல். ஐ விலங்கல் உடையது.

விளக்கம் : இது தொல்காப்பியத்தின் 88 ஆம் நூற்பா இஃது அந்நூலில் உயிர்களின் முயற்சிப் பிறப்பினை அடுத்து மெய்களின் முயற்சிப் பிறப்பிற்கு

முன் வைக்கப்பட்டிருத்தலின் இதனைச் சிங்கநோக்காக உயிர்கள் மெய்கள் என்ற இவ்விரு வகை முதலெழுத்துக் களின் பிறப்பிற்கும் புறனடையாகக் கொள்ளுமாறு பாயிரம் கூறிப் பின் உரை வரைந்த நச்சினார்க்கினியர் உரையே ஈண்டு இவ்வாசிரியரால் குறிக்கப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியர் தலைவளி நெஞ்சுவளி மிடற்றுவளி மூக்குவளி என்று குறிப்பிட்டவற்றை இவர் தலைஇசை, நெஞ்சுஇசை, மிடற்றுஇசை, மூக்குஇசை என்று குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் 'வல்லினம் தலைவளி உடையது; மெல்லினம் மூக்குவளி உடையது; இடையினம் மிடற்றுவளி உடையது; ஏனையவும் கூறிக் கண்டு உணர்க' எனவும் இந்நூற்பா உரையுள் குறிப்பிட்டுள்ளார்.

அஆ, இஈஎஏஐ, உஊஒஓஔ, கங, சஞ, டண, தந, பம, ரழ, றன — என்பன ஒவ்வொரு தானத்துள் பிறப்பன வற்றையெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு முயற்சிப் பிறப்புக் கூறுதலே கூட்டிக் கூறுதலாம்.

எடுத்தல் — உயர்த்தி ஒலித்தல்.

படுத்தல் — தாழ்த்தி ஒலித்தல்.

நலிதல் — இடை நிகர்த்த ஒலியான் ஒலித்தல்.

விலங்கல் — ஒலிக்குங்கால் ஒலி அலை குறுக்கே செல்வது.

கலிப்பாவுள், தரவினை எடுத்தும், தாழிசையைப் படுத்தும் சரிதகத்தை நலிந்தும் ஒலித்தல் வேண்டும்.

இவ்வோசைகளை வடநூலார் உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்பர். சுவரித ஓசை உடையதாகிய கலிப்பா உறுப்பே சுரிதகம் ஆயிற்று என்பது பிரயோக விவேகநூலார் கருத்து.' நலிதலை ஈற்றும் ஈற்றயலுமாக உடைய செய்யுள் உறுப்பைச் சுரிதகம் என்பர். உருவகம் தீவகம் என்பது போலச் சுவரிதகம் என்பது சுரிதகம் என

நின்றது தமிழ்நூல் உரைகாரர் சுரிந்து இறுதலின் சுரிதகம் என்பது அறியாமை.' பிர. விவே. 40 உரை

ஒத்த நூற்பாக்கள் :

முழுதும்— தொல். 88

'எடுத்தல் படுத்தல் நலிதல்
ஓயாது உரப்பல் எனநால் வகையில் பிறக்கும்
மெய்கள்.' வீ. 4

'எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்
திரியும் தத்தமில் சிறிதுஉள ஆகும்.' நன். 88

'எடுத்தல் படுத்தல் இரண்டே ஓசை.' மு.வீ எ. 59

'எடுத்தல் படுத்தல் இரண்டே ஓசை
நலிதல் விலங்கலொடு நான்கென் பார்சிலர்
மூன்றெனத் துணிந்தே மொழிகுவர் பலரே.'
இ. கொ 127

குற்றிய லிகரம்

15. யகரம் வரக்குறள் உத்தப வருஉம்
இகரமும் மியாவின் இகரமும் குறிய.

இது மேல் பிறவி கூறப்பட்ட சார்பு எழுத்துக் களுக்குச் சார்ந்து வரும் இயல்பும் ஒருபிறவி ஆதலின், அப்பிறவி கூறுகின்றவற்றுள் இஃது இடனும் பற்றுக் கோடும் சார்ந்து குற்றியலிகரம் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : யகர முதல் மொழி வருமொழியாய் வந்து புணர, நிலைமொழிக் குற்றுகர எழுத்துக்கெட ஆண்டு வரும் இகரமும், முன்னிலை அசைச் சொல்லாய் வரும் மியா என்னும் இடைச்சொல்லின் மகரத்தை ஊர்ந்து நின்ற இகரமும் குற்றியலிகரமாம் என்றவாறு.

எனவே, புணர்மொழி அகத்தும் ஒருமொழி அகத்தும் வரும் என்பதாயிற்று.

(எ-டு) நாகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, குரங்கியாது, தெள்கியாது எனவும், கேண்மியா எனவும் வரும். பிறவும் அன்ன. இங்ஙனம் வரும் புணர்மொழியும் ஒருமொழியும் இடம். இகரம் சார்ந்த வல்லெழுத்தும் மகரமும் பற்றுக்கோடு. வல்லெழுத்தும் மகரமும் போல யகரமும் இகரம் குறுகுதற்கு ஒருசார்பு. 15

விளக்கம்: மேல் சார்பு எழுத்துக்களுக்குப் பிறப்புக் கூறப்பட்டது. அவற்றிற்கு ஏனைய முதல் எழுத்துக் களைச்சார்ந்து வருதலும் ஒருவகைப் பிறப்பே ஆதலின், இயைபு பற்றி சார்பு எழுத்துக்களின் பொதுப்பிறப்பினை ஒட்டி அவை சார்ந்து வரும் பிறப்பும் கூறப்பட்டது என்று மேலைச் சூத்திரத்தோடு இவ்வாசிரியர் இயைபு கூறுகிறார். 'மேல் பிறப்பு உணர்த்திய சார்பு எழுத் திற்குச் சார்ந்து வருமாறும் ஒரு பிறப்பு ஆதலின், பிறப்பு அதிகாரத்துள் அடக்கி உணர்த்துவான் தொடங்கினார்' என்பது நன்னூல் விருத்தியுரை—
நன். 89

குற்றியலிகரம் புணர்மொழியிடையும் தனிமொழி யிடையும் வருமாற்றை இவ்வாசிரியர், இது சுருக்கநூல் ஆதலின், நன்னூலிற்போல ஒரே நூற்பாவில் குறிப்பிட் டுள்ளார். தொல்காப்பியனார் தனித்தனி நூற்பாக்களில் குறிப்பிடுவார். எனவே, குற்றியலிகரம் தோன்றுவதற்கு இடம், பற்றுக்கோடு சார்பு என்பன இந்நூற்பாவினால் போதருகின்றன. நன்னூலார் குற்றியலுகரமே குற்றிய லிகரமாகத் திரியும் என்பார். ஆனால் இவர், தொல்காப்பியனார்

'யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது' தொல். 410

என்று கூறியதை உட்கொண்டு, குற்றியலுகரம் கெட அவ்விடத்தேவரும் இகரம் குற்றியலிகரம் ஆகும் என்பர்.

நச்சினார்க்கினியர் தொல்காப்பிய 34ஆம் நூற்பா உரையில், 'மியா இடம்; மகரம் பற்றுக்கோடு; யாவும் 'இகரம் அரை மாத்திரை ஆதற்குச் சார்பு' எனவும், அடுத்த நூற்பாவில், 'யகரம் இடம்; உகரம் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக்கோடு' எனவும் கூறியுள்ளார்.

அறு வகைப்படும் குற்றியலுகரமும் யகர முதல் மொழி வரின் கெடக் குற்றியலிகரம் தோன்றுவதற்கு எடுத்துக் காட்டுக்கள் தந்துள்ளார். புணர்மொழியும், இகரம் சார்வதற்கு அமைந்த வல்லெழுத்தும் புணா மொழிக் குற்றியலிகரத்திற்கு முறையே இடனும் பற்றுக் கோடும் ஆகும். வினைப்பகுதியொடு மியா சேர்தலான் ஆகிய ஒரு மொழியும், மகரமும் தனிமொழிக் குற்றிய லிகரத்திற்கு முறையே இடனும் பற்றுக்கோடும் ஆகும். குற்றியலிகரம் நிலைமொழி ஈற்றெழுத்தின் தானத்தில் வருதல் வேண்டியமையின் அதற்கு வருமொழி யகரம் சார்பு ஆயிற்று.

நன்னூலார் குற்றியலுகரம் முப்பத்தாறு எனக் கொண்டு, அவை திரிந்த குற்றியலிகரம் முப்பத்தாற னொடு மியா என்பதன் முதற்கண்ணதாகிய குற்றிய லிகரமும் சேரக் குற்றியலிகரம் முப்பத்தேழ் என்பது, ஓர் எழுத்தினையே இடம் நோக்கிப் பகுத்து எண்ணுதல் இவ்வாசிரியருக்கு உடன்பாடு அன்று ஆதலின், இவர் கருத்துக்கு முரண்பட்டதாகும்.

ஒத்த நூற்பாக்கள் :

'குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்
யாஎன் சினைமிசை உரைஅசைக் கிளவிக்கு
ஆவயின் வருஉம் மகரம் ஊர்ந்தே.' தொல். 34

'புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.' தொல்.35

'யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது.' தொல். 410

'இகரம் குறுகி வரும்குற் றுகரப்பின்
யவ்வரினே.' வீ. 3

'யப்பின்பு அடைய வரும்இகரம்......' நே. 4

'யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய.' நன்.93

'யப்முதல் இய்யாம் இருகுறள் உக்கெடில்
அஃகும் அற்றாம் அசைச்சொல் மியாவே.'
தொ. வீ. 14

'யகரம் வரும்வழி இகரம் குறுகும்.'
மு. வீ. எ. 34, புணரியல் 231

'அசைச்சொல் மியாவின் இகரமும் அற்றே.'
மு. வீ. எ. 35

குற்றிய லுகரம்

16. நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலிஇடை
தொடர்மொழி இறுதி வன்மைஊர் உகரம்
அஃகும் என்மனார் ஆயுங் காலே.

இஃது இடனும் பற்றுக்கோடும் சார்ந்து குற்றிய லுகரம ஆமாறு கூறுகின்றது.

இ-ள்; நெட்டெழுத்தின் பின்னும், ஆய்தமும் உயிரும் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் இடை எழுத்தும் என்ற இவை தொடர்ந்த மொழி ஈற்றின் கண்ணும் நின்ற வல்லெழுத்துக்களை ஊர்ந்து நின்ற உகரம் தன் அளவில் சுருங்கும் என்று கூறுவர் ஆசிரியர் ஆராயும் இடத்து என்றவாறு. வேற்றுமை நயம் பற்றி உயிர்த் தொடர்மொழி என்றார். 'தொடர்மொழி இறுதி வன்மை' என நிலத்தது அகலம் போல ஒன்றியல் கிழமைப்பட்டு நின்றது. அம்மொழியின் தீர்ந்து அவை

நில்லாமையின். வன்மை எனப் பொதுப்படக் கூறுதலானே, ஆறனையும் தொடர வேண்டும் என்னும் யாப்புறவுஇன்றி ஏற்றபெற்றி தொடரும் எனக்கொள்க, இடை ஒற்று ஆறும் வல்லொற்றுஞ் சிலவற்றோடு அன்றி ஆறோடும் மயங்காமையின்.

(எ-டு) நாகு எஃகு வரகு கொக்கு குரங்கு தெள்கு எனவரும். பிறவும் அன்ன. இவ்வறுவகை மொழியும் இடம். ஈற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

'ஆயுங்காலே' என்ற இலேசான், 'ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா' எனவும். ஈர்க்கு மொய்ம்பு என வன்தொடரும் மென்தொடரும் ஆம் எனவும். 'நுந்தை' என்னும் முறைப்பெயர் மருங்கின்-ஒற்றிய நகரம் மிசை. நகரம் ஊர்ந்து நின்ற உகரம் குற்றியலுகரமாம் எனவும், வல்லொற்றுத் தொடர் மொழிக் குற்றுகரம் வல்லெழுத்து வருவழிச் செக்குக் கணை சுக்குக்கொடு எனத் தன் அரை மாத்திரையினும் குறுகும் எனவும் கொள்க. இஃது அங்ஙனம் குறுகியவாறு குரங்கு கடிது முதலியவற்றோடு படுத்துச் செவி கருவியாக உணர்க. இதற்கு வல்லொற்றுத் தொடர் மொழியும் வல்லெழுத்து வரும் வழியும் இடம். ஈற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு. நுந்தை என்ற சொல்லில் உகரத்திற்கு முறைப்பெயர் இடம். நகரம் பற்றுக்கோடு.

> 'நெடிலே குறில்இணை குறில்நெடில் என்றுஇவை
> ஒற்றொடு வருதலொடு குற்றுஒற்று இறுதி என்று
> ஏழ்குற் றுகரக்கு இடன்என மொழிப'

என ஏழ் இடம் கொள்வாருக்குப் பிண்ணாக்கு, சுண்ணாம்பு முதலியனவும், ஆய்தம் தொடர்ந்தனவும் அடங்காமையும் அவ்வேழும் இவ்வாறனுள் அடங்குமாறும் அறிக

செவ்வெண்ணாக எண்ணாது நெடிலோடு எனப் பிரித்தார், அதன் ஈற்றுக்கண் நின்ற உகரம் ஈரெழுந்து ஒரு மொழிக் குற்றுகரம் என்பது அறிவித்தற்கு. எனவே நீடாது குறுகாது வடாது நெனாது முதலிய மொழி இறுதி உகரம் உயிர்த்தொடர்மொழிக் குற்றுகரம் ஆவது அல்லது நெடில் இறுதிக்கண் நின்ற குற்றுகரம் ஆகாது எனவும், நெட்டெழுந்து இறுதி தொடர்மொழி இறுதி எனவே, அது இது முதலிய ஈரெழுத்து ஒருமொழி ஈற்று உகரம் நெட்டெழுத்து இறுதியும் தொடர்மொழி இறுதியும் அன்மையின் முற்றுகரம் ஆவது அல்லது ஈரெழுத்து ஒரு மொழிக் குற்றுகரமும் உயிர்த் தொடர்மொழிக் குற்றுகரமும் ஆகாது எனவும் கொள்க.

ஓரெழுத்து ஒரு மொழி, தொடர்மொழி என மொழி நிலை இரண்டு என்றார்க்கு, அவையும் தொடர்மொழி இறுதிக் குற்றுகரம் ஆவான் செல்லுமாறு அறிக,

சந்தனக்கோல் குறுகினால் பிரப்பங்கோல் ஆகாது சந்தனக்கோலே ஆமாறு போல, உயிரின் குறுக்கமும் உயிரேயாமேனும், புணர்ச்சி வேற்றுமையானும் பொருள் வேற்றுமையானும், சீரும் தளையும் சிதையும் இடத்து அலகு பெறாமையானும் குற்றிகரக் குற்றுகரங்கள் சார்பு எழுத்து என உயிரின் வேறாயின. 16

விளக்கம் : இவ்வாசிரியர் தொல்காப்பியனாரை ஒருபுடை பின்பற்றிச் சார்பெழுத்துக் கூறுங்கால், குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தம் என்பன வற்றையே முதற்கண் சுட்டி ஏனைய உயிர் மெய் போல்வனவற்றைப் பின்னரே நிறுத்தியுள்ளார் ஆதலின் அம்முறை வைப்புப் பற்றிச் சார்பெழுத்துக்களை விதந்து கூறுகிறார்.

நிலைமொழி ஈற்று வல்லினம் ஆகிய பற்றுக்கோடும் அச்சொல்லின் ஈற்று அயல் எழுத்தாகிய நெடில் முதலிய

இடமும் காரணமாக உகரம் குற்றியலுகரம் ஆம் என்பது. உயிர்மெய்முதல் மெய்முதல் எனவும், உயிர் மெய் இடை உயிர் இடை எனவும், உயிர்மெய்ஈறு உயிர்ஈறு எனவும் உயிர்மெய்யிலுள்ள மெய்யையும் உயிரையும் வேற்றுமை நயம்படப் பிரித்துக்கொண்டு கூறுதல் இலக்கண மரபாம்; 'மெய்ஈறு எல்லாம் புள்ளி யொடு நிலையல்' தொல். 104 எனவே, மெய் முதல் எல்லாம் உயிரொடு நிலையல் வேண்டும் என்பது பெறப் படுதலானும், 'உயிர் மெய் ஈறும் உயிர்ஈற்று இயற்றே தொல் 106 எனவே, உயிர்மெய் இடையும் உயிர்இடை இயற்று என்பது பெறப்படுதலானும் ஆகலான்.

தொடர்மொழி இறுதி வன்மை அம்மொழியிலிருந்து பிரிக்க இயலாத தற்கிழமைத் தொடர்பு உடையது ஆதல், நிலத்தில் இருந்து அதன் அகலம் பிரிக்கஇயலாத படிப் பண்புத் தற்கிழமைத்தாய் இருப்பது போல்வதாம். பண்புத் தற்கிழமையைத் தொல்காப்பிய உரையாசிரியர் கள் ஒன்றியல்கிழமை என்றே விளக்கி, அதற்கு எடுத்துக் காட்டாக, நிலத்தது அகலம் முதலியவற்றைக் காட்டுவர் தொல், சொல் 81 நச். காண்க.

வன்மை ஆறு ஊர்ந்த உகரம்—குசுடுதுபுறு.
ஏற்ற பெற்றி வருதல்—தனிநெடிலை அடுத்துப் புகரம் வாராமை போல்வன.

இடை ஒற்று ஆறும் வல்லொற்றுள் சிலவற்றோடு அன்றி ஆறோடும் மயங்கா என்பது.

ய	ர	ல	வ	ழ	ள
தேய்கு	ஆர்கு	அல்கு	வ்கு	மாழ்கு	தெள்கு
ய்சு	ர்சு	ல்சு	வ்சு	ழ்சு	ள்சு
ய்டு	ர்டு	ல்டு	வ்டு	ழ்டு	ள்டு
வெய்து	ர்து	ல்து	வ்து	போழ்து	ள்து
தோய்பு	மார்பு	சால்பு	வ்பு	வாழ்பு	வள்பு
ய்று	ர்று	ல்று	வ்று	ழ்று	ள்று

என்று எடுத்துக் காட்டுகள் அமைத்து நோக்குமிடத்து, யகரம் குதுபு என்பனவற்றோடும், ரகரம் குபு என்பன வற்றோடும், லகரம் குபு என்பனவற்றோடும், ழகரம் குதுபு என்பனவற்றோடும், ளகரம்குபு என்பனவற் றோடும் அன்றிப் பிறவற்றோடு தொடர்ந்து மொழி ஆகா எனவும்,வகரம் குற்றியலுகர எழுத்து எதனொடும தொடர்ந்து வாராது என்பதும பெறப்படுதலின், இடை ஒற்று ஆறும் குசுடுதுபுறு என்ற ஆறனோடும் மயங்கா என்று குறிப்பிட்டார்.

தொல்காப்பியனாரை ஒட்டி.

'யரழ என்னும் மூன்றும் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்று ஆகும்' தொல். 48

எனவே, 'ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா' 407 என்பதனைச் சுட்டி. ஈர்க்கு மொய்ம்பு என்பனவற்றின்கண் இடையெழுத்துக்கள் இருக்கின்றன எனினும் அவை ஈற்று அயல் எழுத்தாக நில்லாமையின. அவை பற்றி இச்சொற்களை இடைத்தொடர் என்னாது ஈற்று அயல் எழுத்தை உட்கொண்டு, வன்தொடர் மென்தொடர் என்றே குடுயிடுதல் வேண்டும் என்ப தனைக் குறிப்பிடுகிறார்.

'குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரம்மிசை நகரமொடு முதலும்'
தொல், 67

'முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலைஇய லான' தொல். 68

என்ற தொல்காப்பிய நூற்பாக்களை உட்கொண்டு, நுந்தைஎன்ற சொல்லின் முதலெழுத்துக் குற்றியலுகரம் என்றார்.

'இடைப்படின் குறுகும் இடனுமார் உண்டே
கடப்பாடு அறிந்த புணரியல் ஆன' தொல். 37

'வல்லொற்றுத் தொடர்மொழி
வல்லெழுத்து வருவழித்
தொல்லை இயற்கை நிலையலும்
உரித்தே' தொல். 409

என்ற நூற்பாக்களை உட்கொண்டு, 'கவ்விடைக் குற்றுகரம் காதல் இனம் என்று, கவ்வினைத் தான் சேர்ந்து கரைந்த' செக்குக்கணை சுக்குக்கொடு என்ற சொற்களின் குகரம் (உகரம்) கால் மாத்திரையது ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார். இச்செய்திகளை நச்சினார்க்கினியர் சொற்கொண்டே விளக்குகிறார். 'வல்லொற்றுத் தொடர்மொழி' என்ற நூற்பா வுரையில் நச்சினார்க்கினியர், 'வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம், வல்லெழுத்து முதல்மொழி வருமொழியாய் வரும் இடத்து 'இடைப்படின் குறுகும்' தொல். 37 என்பதனால் கூறிய அரைமாத்திரையினும் குறுகி நிற்கும் என்ற இயல்பிலே நிற்றலும் உரித்து என்றவாறு. உம்மை எதிர்மறை,

(எ-டு) கொக்குக்கடிது கொக்குக்கடுமை என அரை மாத்திரையில் குறைந்தவாறு, குரங்கு கடிது என்பது முதலியவற்றொடு படுத்துச் செவி கருவியாக உணரக' என்று குறிப்பிட்டுள்ளமை காண்க.

குற்றுகரம் ஈற்று அயல் அசையைக்கொண்டு, நெடில் இறுதி, குறிலிணை இறுதி, குறில்நெடில் இறுதி, நெட்டொற்று இறுதி. குறில்இணைஒற்றுஇறுதி, குறில் நெடில் ஒற்றுஇறுதி, குற்றொற்று இறுதி என ஏழாயின் காடு, பகடு, வடாது, சால்பு, உவந்து, உராய்பு, வந்து என்பன எடுத்துக்காட்டுக்களாம். ஆய்தம் தொடர்வன இப்பகுப்புக்களுள் அடங்கா. அஃது என்பது போன்று ஆய்தம் தொடர்வனவற்றைக் குற்றொற்று இறுதியாக அடக்கல் வேண்டும். சுண்ணாம்பு போல்வன இப் பகுப்பில் அடங்கா. அவை குற்றொற்று நெட்டொற்று

இறுதி எனப்படல் வேண்டும். நன்னூல் விருத்தியில், இவை போல்வன நெட்டொற்று இறுதியாயும், இறப்பது போல்வன நெடில் இறுதியாயும் அடங்குமேனும், போவது வருவது என்பது போல்வன இப்பகுப்புள் அடங்கா என்பது விளக்கப்பட்டுள்ளது.

நெடில் பிரிக்கப்பட்டது, தனிநெடில் என்றற்கு குறில் நெடில் போல்வன உயிர்த்தொடருள் அடங்கும் என்பது.

தொடர்மொழி என்பன இரண்டற்கு மேற்பட்ட எழுத்துக்களை உடைய சொற்களாம். எனவே குற்றுயிர் ஒன்றுமே தொடர்ந்து அமையும் அது இது முதலிய சொற்களில் உள்ள உகரம் குற்றியலுகரம் ஆகாது என்பது. ஈரெழுத்து ஒரு மொழியையும் தொடர்மொழியாகக் கொள்பவருக்கு அது இது முதலியனவும் தொடர் மொழிகள் ஆதலின் அவற்றின் ஈற்று உகரமும் குற்றியலுகரம் ஆகும் என்று கருத வாய்ப்புஏற்படும். நன்னூலார் 'பிறமேல் தொடரவும் பெறுமே' என்று எதிர்மறை உம்மை கொடுத்துச் சொல்லாது, 'பிறமேல் தொடர்தல் வேண்டும்' என்று கூறியிருப்பின் அது சிறக்கும்.

புணர்ச்சி வேற்றுமை — குற்றியலுகரம் மெய்ஈறு போல உயிர்ஏற இடம் கொடுக்கும் நிலை.

பொருள் வேற்றுமை — ஏவல் ஒருமை வினையில் குற்றியலுகர ஈறு வாராமையின் 'இக்கட்டு நேற்று வந்தது' என் புழிக்கட்டு என்ற பெயர் இறுதி உகரம் முற்றியலுகரமாயும், இவற்றைக்கட்டு என்ற ஏவல்வினை இறுதி உகரம் முற்றியலுகரமாயும் இருத்தலை உணர்க ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

'ஔ என வருஉம் உயிர்இறு சொல்லும்
ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும்

குற்றியல் உகரத்து இறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே'
தொல். 152

என்றே குறிப்பிட்டுள்ளமை காண்க.

காட்டு+யாத்தான் என்பன—ஏழன் தொகையாய்க் காட்டியாத்தான் எனக் குற்றியலுகரம் கெடக் குற்றிய லிகரம் பெற்று அமைந்தன. இனிக் காட்டி என்ற வினை யெச்சம் யாத்தான் என்ற வினைகொண்டு முடிந்து வினையெச்சத் தொடர் ஆகிய வழியும், காட்டியாத்தான் என்றே முடியும்.

இவ்வினையெச்சத் தொடர்க்கண் காட்டி என்பதன் இகரம் முற்றியலிகரம். சென்ற தொடரில் உள்ள காட்டி என்பது காட்டு என்பதன் திரிபாய்க் காட்டின்கண் என்று பொருள்பட்டுக் குற்றியலிகரம் ஆயினவாறும், இவ்வினை யெச்சத் தொடர்க்கண் உள்ள காட்டி என்பது முற்றிய லிகரமாய்க் காண்பித்து என்று பொருள்படுமாறும் காண்க. எனவே, குற்றியலுகரங் குற்றியலிகரங்களால் பொருள் வேறுபாடு ஏற்படுவதும் காண்க.

மேலும் யாப்பின்கண் குற்றியலுகரமும் குற்றிய லிகரமும் சீரும் தளையும் சிதைய வருவழி அலகுபெறா இவ்வாசிரியர், தாம் செய்யுளியலையும் உட்கொண்டு சார்பெழுத்துக்களை அமைத்துக்கொண்டதற்கு ஏற்ப விளக்கம் கூறுவதும் காண்க.

'நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்
குற்றிய லுகரம் வல்லாறு ஊர்ந்தே' தொல். 36

என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர், 'நெட்டெ ழுத்தினதுபின், தொடர் மொழியினது ஈறு என, நிலத்தது அகலம் போல ஒன்றியல் கிழமைப்பட்டு நின்றது. அம்மொழி[illegible] து குற்றுகரம் நில்லாமை யின்'—எனவும் [illegible] றுக்கு .என்பன வினைக்

கண்வந்த முற்றுகரம். குற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிர் ஏறிமுடிய அரை மாத்திரையாய் நிற்றலும், முற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிர் ஏறி முடியாமையும் தம்முள் வேற்றுமை' எனவும், 'அவை தாம் குற்றியலிகரம்' தொல். 2 என்ற நூற்பா உரையில். 'இகர உகரம் குறுகி நின்றன. விகார வகையான் புணர்ச்சிவேறுபடுதலின்,இவற்றை இங்ஙனைக் குறியிட்டு ஆளுதல் எல்லாருக்கும் ஒப்பமுடிந்தது. சந்தனக்கோல் குறுகினால் பிரப்பங்கோல் ஆகாது; அதுபோல உயிரது குறுக்கமும் உயிரேயாம்; இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் பற்றி வேறு எழுத்தாக வேண்டினார்' எனவும் கூறியவற்றை நோக்குக.

ஈற்று அயல் எழுத்தைக் கணக்கிட்டு நெடில் 7' ஆய்தம் 1, ஒளகாரம் நீங்கலான உயிர் 11,வல்லினம் 6, மெல்லினம் 6, வகரம் நீங்கலான இடையினம் 5 ஆக 36 என்று கூட்டிக் குற்றியலுகரம் 36 என்றும், அவற்றோடு மியா என்பதனையும் சேர்க்கக் குற்றியலிகரம்? 7என்றும் குறிப்பிடுவதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்கள் இல்லை என்பதனை உணர்க.

இலக்கணக்கொத்து நூலாரும்,சிவஞான முனிவரும் வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி இறுதிக் குற்றியலுகரம் கால் மாத்திரையது ஆகும் என்பதனை ஏற்றனர். — (இ. கொ. 102 - உரை; நன். 94 உரை) முன்னிலை மொழிக்கண் வரும் ஏவல் வினை இறுதி முற்றியலுகரமே என்பது இலக்கணக் கொத்து நூலாரின் கருத்து ஆகவும்(இ.கொ.102 உரை) சிவஞான முனிவர் தமது முதற் சூத்திர விருத்தியில் 'காட்டு கூட்டு என்பன வினைக்கண் வந்த முற்றுகரம்' என்பாரும் உளர், ஆசிரியர் 'குற்றியலுகரத்து இறுதி' தொல். 152. எனவே எடுத்து ஓதினமையானும்,

புணர்ச்சிக்கண் முற்றுகரத்திற்கு உரிய செய்கை பெறாமையானும் அஃது உரையன்மை அறிக' என்று குறிப்பிட்டுள்ளது வியப்பாக உள்ளது.

இலக்கண விளக்கச் சூறாவளி

நெடில் முதலியன எழுவாயாகம் தொடர் என்பது இவற்றின் பயனிலையாகவும் கூறியபடி உரையுள்ளும் இவ்வாறே உரைத்தார். உரைக்கவே, இவை ஐந்தும் தொடரப்படுவது, உகரப் பற்றுக்கோடு ஆகிய ஈற்று வல்லெழுத்து ஒன்றுமே அன்றிச் சொல் முழுதும் அன்மையின், இவற்றின்மேல் பிற தொடரவும் பெறும் என்று கூறாவிடின். இவ்வகை எழுத்தும் பிறஎழுத்தும் கூடியே ஒருமொழியாய் நிற்கும் எனவும் பட்டு, அது இது என்றல் தொடக்கத்தனவும் குற்றியலுகரம் ஆவான் செல்லுமாறு அறிக. 'ஆறன் பகுதியாகிய முப்பத்தெட்டும் தொடரல் வேண்டும் என்னும் யாப்புரவு இன்றி ஏற்றபெற்றி தொடரும் எனக் கொள்க' என்று உரையாது, 'வன்மை எனப் பொதுப்படக் கூறலின் ஆறனையும் தொடர வேண்டும் என்னும் யாப்புறவு இல்லை எனத் தமக்கு வேண்டியவாறே உரைத்தார்.

ஏழ் இடம் கொண்டார்க்குப் பிண்ணாக்கு சுண்ணாம்பு என்றாற் போல்வனவும் ஆய்தம் தொடர்ந்தனவும் அடங்கும் என்பதும், பிறவும் விருத்தியுள் காண்க.

அமைதி

இந்நூலுடையார் ஒரெழுத்து ஒருமொழி, தொடர்மொழி என்ற பாகுபாடு கொள்ளாது. மூன்று முதலிய எழுத்துக்களான் ஆகிய மொழியையே தொடர்மொழி என்று கொள்பவர் ஆதலின், 'பிறமேல் தொடரவும பெறுமே' என்ற தொடரை விடுத்து, 'ஆயுங்காலே' என்பதனால் அக்கருத்தினைக் கொள்ள வைத்துள்ளார். குற்றியலுகரம்36 என்று வலிந்து கணக்கிட்டு இடர்ப்பட

வேண்டிய நிலை இவருக்கு இன்மையின், வன்மை ஊர் உகரம் ஆறும் யாண்டும் வருதல் வேண்டும் என்ற யாப்புறவு இன்மையை விளக்கினார் பிண்ணாக்கு முதலியவற்றை நெட்டொற்று இறுதி எனவும், ஆய்தந் தொடர்ந்தனவற்றைக் குற்றொற்று இறுதி யெனவும் நேர்முகமாகக் கூறுதல் இயலாது ஆதலின், வலிந்து அடக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பது. கூறிய வரை யறை நிரம்பா இலக்கணத்ததாய் முடிதலின் என்க.

ஒத்த நூற்பாக்கள் :

'ஈரெழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்.' தொல். 406

அவற்றுள்
'ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா' தொல். 407

'நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்
குற்றிய லுகரம் வல்லாறு ஊர்ந்தே.' தொல். 36

'இடைப்படின் குறுகும் இடனுமார் உண்டே
கடப்பாடு அறிந்த புணரிய லான.' தொல். 37

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே.' தொல். 409

'குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.' 67

'முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான.' 68

'நுந்தை உகரம் குறுகி மொழிமுதற்கண்
வந்த தெனின்உயிர்மெய் யா அனைத்துப்
—ச க்கு

உயிர்முதலா வந்தணையும் மெய்ப்புணர்ச்சி யின்றி
மயலணையும் என்றதனை மாற்று.'
(நன். 105 மயிலை. மேற்)

'வன்மை மேல் உகரம்
உறுவது நையும் தொடர்மொழிப் பின்னும்
நெடில்பின்னுமே.' வீ. 2

'தொடர் நெடில்கீழ் வன்மை உகரம் குன்றும'நே.4

'நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலிஇடை
தொடர்மொழி இறுதி வன்மைஊர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.' நன். 94

'தனிக்குறில் அல்லவற்று இறுதி வன்மை
ஊர்ந்துளிக் குறுகும உகரம் என்ப
தொடர்உயிர் உக்குறள் துடைத்துணும்,'
தொ. வீ. 15

'நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்
குற்றிய லுகரம் வல்லாறு ஊர்ந்தே.' மு.வீ எ. 36

'ஈரெழுத் தொருமொழி இடைத்தொடர்
உயிர்த்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்.' மு.வீ.பு. 227

அவற்றுள்
'ஈரெழுத் தொருமொழி இடைத்தொடர் ஆகா.,, 228

ஆய்தம்

17. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இஃது இடம் சார்ந்து ஆய்தம் வருமாறு கூறுகின்றது.

இ-ள் ஆய்தம் ஆகிய ஒற்றுக்குற்றெழுத்தின் முன்னர்த் தாய் உயிரொடு கூடிய வல்லெழுத்து ஆறன் மேலிடத்த தாய் வரும் என்றவாறு.

உ-ம்: எஃகு சுஃசு கஃடு கஃது கஃபு கஃறு எனவும், அஃகம் அஃகாமை அஃகி எனவும் வரும். குறியதன் முன்னரும்வல்லெழுத்து மிசையும் இடம். கஃறீது முஃடீது அஃகடிய இருபஃது என 'ஈறு இயல் மருங்கின' வருவனவும் இப்பெற்றியில் தீர்ந்து வாராமையின், அவற்றையும் ஈண்டே அடக்கி, ஆய்தம் புணர்மொழிக்கண் வருவதற்கும் இதுவே விதியாகக் கொள்க.

விலஃஃகி வீங்கிருள் ஓட்டுமே மாதர்
இலஃஃகு முத்தின் இனம்

எனக் குறில்இணைக் கீழும் வருமாலோ எனில், அஃது அன்ன இயல்பிற்று அன்றி, ஓசை நிறைத்தற் பொருட்டு ஒற்று இல்வழி ஒற்றாய் வந்தது என்க.

கஃறீது முஃடீது என்பனவற்றை மெய் பிறிதாகிய யுணர்ச்சி என்றதனானும், ஈண்டுப் 'புள்ளி' என்றதனானும், இதனையும் உடன் கூட்டி ஒற்றளபெடை பதினொன்று என்ற தனானும் ஒன்றின்பால்படுமேனும், உயிர் ஏறாது ஓசை விகாரமாய் இடம் பற்றி நிகழ்வது ஒன்று ஆகலின், ஆய்தம் சார்பு எழுத்து என ஒற்றின் வேறு ஆயிற்று.
17

விளக்கம்: இடம்—குறில் வல்லெழுத்து என்ற இரண்டற்கும் இடைப்பட்ட இடம்.

முன் என்பது காலமுன் என்றும் இடமுன் என்றும் இரு வகைப்படும். வந்தான் என்ற சொல்லில், ஒலிக்கும் போது முதலில்வெளிப்படும் வகரம் காலமுன் எனப்படும்; எழுதுதற்கண் இறுதியில் எழுதப்படும் னகரம் இடமுன் எனப்படும். முன்னர்க் கூறினாம் என்றால், அம்முன்னர் என்பது காலமுன் ஆகும்; முன்னர்க் கூறுவாம் என்றால், அம்முன்னர் என்பது இடமுன் ஆகும். ஈண்டுக் 'குறியதன் முன்னர்' என்பது இடமுன் ஆகும்.

இவ்வாறே. பின் என்பதும் காலத்தை ஒட்டியும் இடத்தை ஒட்டியும் இரு வகைப்படும். வந்தான் என்ற சொல்லில், னகரம் காலப்பின் ஆகும்; வகரம் இடப்பின் ஆகும்.

கஃசு—காற்பலம்; கஃகு, கஃது, கஃபு, கஃறு என்று சொற்கள் இக்காலத்து இல. ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தில் உயிரோடு புணர்ந்த வல்லாறன் மிசையும் வந்த ஆய்தத் தொடர்மொழிகள் இருந்தனபோலும் அவை பிற்காலத்தில் வழக்கு வீழ்ந்தனபோலும். டுகர புகர றுகர ஈற்றனவாய ஆய்தத் தொடர்மொழிச் சொற்கள் இக்காலத்து இல் என்று கூறுதலே ஏற்றது. எஃகு, அஃகு, வெஃகு முதலிய குகர ஈற்றனவும், கஃசு என்ற சுகர ஈற்றுச் சொல்லும், அஃது இஃது உஃது என்ற தகர உகர ஈற்றுச் சொற்களும், பஃறி முதலிய றகர இகர ஈற்றனவுமே இக்காலத்தும் வழக்கிலுள்ளன என்பது உணரப்படும்.

புணர்மொழி ஆய்தத்தைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் 'ஈறுஇயல் மருங்கினும் இசைமை தோன்றும்' என்று குறிப்பிட்டார். நிலைமொழி ஈறு வருமொழி முதலொடு புணர்தல் இயன்ற நிலைமைக்கண் நிலைமொழி ஈற்றெழுத்துத் திரிந்து வரும் ஆய்தமும், குறில் உயிர்மெய் வல்லெழுத்து என்பனவற்றின் இடைப்பட்டே வரும் நிலைமை கல் + தீது—கஃறீது முதலிய எடுத்துக் காட்டுகளில் காட்டப்பட்டுள்ளது. புணர்மொழி ஆய்தம், தனிமொழி ஆய்தம் என்ற இரண்டனையும் இவ்வாசிரியர் இந்நூற்பாவிலேயே கொண்டுள்ளார்.

விலகி, இலகு என்பனவே செய்யுளில் விலஃஃகி, இலஃஃகு என விரிந்துள்ளன. இவை இயற்கையாய் அமைவன அல்ல, செய்யுளில் ஓசை நிறைத்தற்காகவே வந்தன ஆதலின், விலஃஃகி, இலஃஃகு என்ற இயற்கைச் சொற்கள் தமிழில் இல்லை, எனவே இவற்றைக்கொண்டு

ஆய்தம் பொதுவாகக் குறிலிணையை அடுத்துவரும் என்று கூறுதல் கூடாது என்பது, ' றியதன் முன்னர் ஆய்தப் புள்ளி' என்ற இந்நூற்பா அடியானும், பிறாணடுய.

'குறில் வழிலளத் தவ்வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அவ்வழியானே' நன், 227

எனப் புணர்ச்சிக்கண் கூறப்படும் செய்தியானும் அறியத் தக்கது.

ஆய்தத்தை ஈண்டுப் புள்ளி என்றே பெயரிட்டு ஆளுகிறார். கல்+தீது-கஃறீது, முள்+தீது-முஃடீது என்ற திரிபு புணர்ச்சி ஆசிரியர் தொல்காப்பியனாரால் மெய் பிறிதாகிய புணர்ச்சி என்றே சொல்லப்படுகிறது; என்னை? 'மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல் என்று-இவ்வென மொழிப திரியும் ஆறே' தொல். 109 என்று திரிதலை மெய்பிறிதாதல் என்றே ஆசிரியர் ஓதுதலான். ஒற்றளபெடை ஙஞண நமன வயலள ஆய்தம் என்ற பதினொரு வகைத்து என்று கணக்கிடும்போது, ஆய்தம் ஒற்றெழுத்தாகக் கொள்ளப்படுகிறது. இவற்றை நோக்க, ஆய்தத்தை ஒற்றெழுத்தின்பால் படுத்தல் கூடுமாயினும் புணர்ச்சிக்கண் ஒற்றெழுத்தின் தன்மை பெறாது, ஒற்றினைப்போல உயிர் ஏற இடந்தாராது, ஒற்றினைப் போல இறுதிக்கண் வரும் ஆற்றல் இன்றி, ஓசை விகாரமாய்ச் சொல்லிடையிலேயே நிற்றலின், மெய்யொடு எண்ணாது, சார்பு எழுத்து என்று வேறு பிரித்து எண்ணியுள்ளார்.

கு சு டு து பு று என்ற வல்லெழுத்துக்களுக்கு மிசை வரும் ஆய்தம் ஆறு. புணர்ச்சி விகாரத்தான் வரும் ஆய்தம் ஒன்று, செய்யுள் விகாரத்தான் வரும் ஆய்தம் ஒன்று என நன்னூல் ஆய்தம் எட்டு என்று கூறியதை விளக்கவந்த நன்னூல் விருத்தியுரைகாரர், தாம் காட்டிய தொகைக்கு எடுத்துக்காட்டுக்கள் இன்றி இடர்ப்படுவதை நோக்குக.

இலக்கண விளக்கச் சூறாவளி

விலஃகி இலஃகு எனக் குறில்இணைக்கீழ் ஒற்று இல்வழி ஒற்றாய் வருவதூஉம் ஆய்தமே ஆகலானும். இன்ன முதல் எழுத்தைச் சார்ந்து தோன்றும் என்று நியமித்தவாறு தோன்றுதலே சார்பெழுத்திற்கு இலக்கணம் ஆதலானும், ஏனையஎல்லாம் எவ்வாற்றான் வரினும் கூறிய விதியின் பிறழ்ந்து வாராமையானும் ஆய்தம் குறில்இணைக்கீழ் வாராது என்றல் பொருந்தாது என மறுக்க. அஃகாமை அஃகுதல்என வல்லாறன் கீழ்ப் பிற எழுத்துக்கள் வரினும். ஒன்பஃது ஒருபஃது எனக் குறியதன்மேல் பிற எழுத்துக்கள் வரினும் ஆய்தல் குறில் வலி நடுவணதேயாம என்பார், 'குறியதன் ..... மிசைத்தே' தொல். 38 என்றார் ஆசிரியர் தொல் காப்பியனார் என்க.

அமைதி

ஆசிரியர் 'குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி' தொல். 38 எனத் தெளிவாக ஓதினமையானும், புணர்ச்சிக்கண்ணும் குறில்வழி லளக்களே தவ்வணை யின் ஆய்தமாகவும் பெறும் என்பது பின்னும் பெறப் படுத்தப்படுதலானும். தொல். 368, 369) முனிவர் காட்டிய அஃகாமை. அஃகுதல் என்பனவற்றின் பகுதி அஃகு என்பதேயாம் ஆதலானும், ஒருபஃது என்பது ஒன்று—பஃது என இரு சொல் அமைந்த தொடர் ஆதலானும், ஒன்பது என்பதே ஒன்பஃது என இடையே ஆய்தம் பெற்று விரிக்கப்பட்ட திரிசொல் ஆதலானும், ஒன்பது என்பதனையே முனிவர் விரித்தியுரை வரைந்த நன்னூலார் பல நூற்பாக்களிலும் கொண்டிருந்தலானும் முற்றாய்தம் எட்டு எனவும் ஒற்றளபெடை 42 எனவும் கணக்கிடுவதற்குத் தாம் படும இடர்ப்பாட்டை மறைத்து இலக்கண விளக்க நூலைக் குறைகூறுதல் பொருத்த மின்மை **அறிக.** யாண்டு வரினும் ஆய்தம் ஒன்றே

ஆதலின் இவ்வாசிரியர் ஆய்தம் ஒன்றாகவே கணக்கிட்டார்.

ஒத்த நூற்பாக்கள் :

முழுதும்— தொல் 38, நன் 90

'ஈறுஇயல் மருங்கினும் இசைமை தோன்றும்.'
தொல். 39

'நடுவு ஆய்தம்......' வீ. 1—2

'ஆய்தம் இடைமேவும்......' நே. 1-2-4

'ஆய்தம் குறில்வலிக் காகும் நடுவே.' தொ. வி. 1

'தனிநிலை குறில்வலி தனக்கிடை வருமே.'
மு. வீ. எ. 25

'அஃகேனம் தனிநிலை ஆய்தம் ஆகும்' மு வீ எ. 28

உயிர்மெய்

18. புள்ளி இல்லா எல்லா மெய்யும்
அவ்வொடு முன்உரு ஆகியும் ஏனை
உயிரொடு திரிந்தும் ஏறிய உயிரின்
அளவாய் அதன்உரு அடக்கிமுந்து உயிர்த்தல்
உயிர்மெய் என்மனார் உணர்ந்திசி னோரே.

இது தம்மொடு தாம் சேர்நது உயிர்மெய் ஆமாறு கூறுகிறது.

இ-ள் : புள்ளி இல்லாதனவாய்ப் பதினெட்டு மெய்யும் அகரத்தொடு கூடித் தம் முன்னைவடிவு ஆகியும். ஒழிந்த உயிர்களொடு கூடி அவ்வடிவு வேறுபட்டும், தமமை ஊர்ந்த உயிரின் அளவே தமக்கு அளவாய், அவ்வுயிரின் வடிவைத் தம்முன்னே கரந்து, தாம் முன்னாக ஒலித்தலை உயிர்மெய் என்று கூறுவர் அறிந்தோர் என்றவாறு.

எனவே, உயிர்மெய் பன்னிரு பதினெட்டு இரு நூற்று ஒருபத்தாறு ஆயினவாறு பெற்றாம்.

முன் உருவாகி உயிர்த்தல் : கஙய எனக் கொள்க. உருவு திரிந்து உயிர்த்தல்: காஙா என்று புள்ளி பெற்றும் கி கீ என மேல்விலங்கு பெற்றும், கு கூ எனக் கீழ் விலங்கு பெற்றும், கெ கே எனக்கோடு பெற்றும், கொ கோ எனப் புள்ளியும் கோடும் உடன் பெற்றும் வரும் எனக் காண்க. பிறவும் அன்ன.

அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதுப. உயிரும் மெய்யும் கூடி ஒலிக்குங்கால் உருவு திரிந்தும் திரியாதும் ஒலிக்கும் எனக் கூறியது அன்றி, உயிர் மெய்க்கு வடிவு கூறப் புகுந்தார் அல்லர், அது 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' இ-வி. 23 என மேற்கூறுப ஆகலின்.

உயிரொடு கூடியவழிப் புள்ளியின்றி வரும் எனவே, புணர்ச்சி இடத்து 'மெய் உயிர் நீங்கின் தன் உரு ஆகும்' தொல். 139 என்பது பெறப்பட்டது. தன் உரு ஆதல்_ தான் முன்னர்ப் பெற்று நின்ற புள்ளி பெற்று, ஆலிலை என்பது ஆல் இலை என நிற்றல். ஏறிய உயிரின் அளவாதல்–நீர் தனித்து அளந்துழியும் நாழியாய் அரை நாழி உப்பில் கலந்துழியும் ஒன்றரை நாழியாய் மிகாத பெற்றி போல, ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் உடைய உயிரும் அரைமாத்திரை உடைய மெய்யும் கூடியவழியும் ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் ஆகாது ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் ஆகியே ஒலித்தல்.

'அதன் உரு அடக்கி' எனவே, அ என்புழி நின்ற குறியும் ஒன்று என்னும் எண்ணும் க என்புழியும், ஆ என்புழி நின்ற குறியும் ஒன்று என்னும் எண்ணும் கா என்புழியும் ஒத்த மாத்திரை போல் வெளிப்பட்டு நிற்கும்

என்பது ஆயிற்று. 'மெய்யோடு இயையினும் உயிர் இயல் திரியா. தொல்-10 என்றார் ஆசிரியர் தொல் காப்பியனாரும் என்க. இயல் என்றது அளவும் குறியும் எண்ணும் என உணர்க.

'முந்து உயிர்த்தல்' எனவே, 'மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே' தொல். 18 என்பதும் பெற்றாம், இவ்வாற்றால். மாத்திரை கொள்ளுங்கால் உப்பும் நீரும்போல ஒன்றேயாய் நிற்றலும், வேறு படுத்துக் காணுங்கால் விரலும் விரலும் சேர நின்றாற் போலவேறாய் நிற்றலும் பெற்றாம். நீர் உப்பின் குணம் ஆயவாறு போல, உயிர், மெய்யின் குணமேயாய் வன்மை மென்மை இடைமை எய்தி நிற்றலும் கொள்க. இங்ஙனம் கூறியவாற்றான், கஙய எனக கூட்டமும் பிரிவும் மூவகை ஓசையும் உடைய ஆதல் காண்க.

இவ்வாற்றான், உயிர்மெய் என்பதனை ஒற்றுமை நயம் கொள்வழி உம்மைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகவும், வேற்றுமை நயம் கொள்வழி உம்மைத் தொகையாகவும் கொள்க. உயிரும்மெய்யும் கூடுகின்ற கூட்டத்தினை 'எல்லா மெய்யும்' என மெய்ம்மேல் வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப் போலும். இங்ஙனம் வருதலான் உயிர்மெய் சார்புஎழுத்து என முதலெழுத் தின் வேறு ஆயிற்று. 18

விளக்கம் : முதல் எழுத்துக்களுள் ஒரு சாரன ஆகிய உயிர் மறுசாரனவாகிய மெய்யொடு சார்தலான் உயிர்மெய் உண்டாதல் தம்மொடு தாம் சார்தலாகும்.

இந்நூற்பா உயிர்மெய்யின் வரிவடிவம் ஒலி வடிவம் இரண்டனையும் சுட்டுகிறது வரிவடிவில் நிகழும் வேற்றுமை ஓராற்றான் சுட்டப்படுகிறது. ஒலி வடிவே விளக்கப்பட்டுள்ளது. உருவு திரிந்தும் திரியாதும் என்பது வரிவடிவு பற்றியது. உயிரின் அளவாய் உயிர்த்தல் என்பது ஒலி வடிவு பற்றியது.

வேறு படுத்துக் காணுங்கால் விரலும் விரலும் சேர நின்றாற்போல என்றது தொடக்கத்தில் மெய் ஒலியும் அடுத்து உயிர் ஒலியும் தோன்றும் நிலையில், விரலும் விரலும் சேர நின்றாற்போல, மெய்யும் உயிரும் சேர்ந்து ஒலிக்கும் என்பது. ஒலிக்கு அளவு கொள்ளுங்கால், நீரில் உப்புக் கரைந்து மறைவதுபோல, உயிர் ஒலியில் மெய் ஒலி மறைதலான் அளவு கோடற்கு வாராது என்பது.

கஙய—இவை உயிர்மெய் என ஒன்றாயவழிக் கூட்டம்; உயிரும் மெய்யுமாக இவற்றைத் தனித்தனியே பிரித்து நோக்குதற்கு வாய்ப்பு உண்மை பிரிவு.

இவையும் மெய்யெழுத்துப் போல வல்லெழுத்து மெல்லெழுத்து இடை யெழுத்து என ஓசை பெறுதலும் கொள்ளப்படும்,

உயிர்மெய் : மாத்திரை கொள்ளுங்கால் அன் மொழித்தொகை; ஓசை கொள்ளுங்கால் உம்மைத் தொகை. மெய் முன்னர்க் கூறப்படுதல் என்பது உயிர் மெய் எழுத்து ஒரு சொற்கண் முதல்எழுத்தாக வரின், அவ்வெழுத்தின்கண் முதலில் மெய் ஓசை இருப்பதனைக் கொண்டு அச்சொல்லினை மெய்முதல் என்றே கூறுதலின். அச்சிறப்புப் பற்றி மெய்யை முற்கூறி மெய் உயிரொடு கூட உயிர்மெய் தோன்றும் என்பது.

உயிர்மெய் ஒலியான் மெய்யும் உயிரும் இணை யினும், மாத்திரை வகையான் இரண்டன் அளவும் கொள்ளாது உயிர் அளவே கொள்ளும் வேறுபாடு உடைமையின், சார்பு எழுத்து ஆயிற்று.

இவ்வாசிரியர் இந்நூற்பா உரையுள் கூறிய விளக்கங்கள் எல்லாம் பெரும்பான்மை நச்சினார்க்கினி யரையும் சிறுபான்மை உரையாசிரியரையும் தழுவி எழுதப்பட்டன. அவற்றைக் காண்போம்:

'புள்ளி யில்லா எல்லா மெய்யும்' தொல். 17 என்ற நூற்பா உரையில்—'புள்ளி இல்லா மெய்' எனவே, முன்

பெற்று நின்ற புள்ளியை உயிர் ஏற்றுதற்குப் போக்கினமை பெறுதும் எனவும், உருவு திரிந்து உயிர்த் தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம்; கிகீ முதலியன மேல்விலங்கு பெற்றன; குகூ முதலியன கீழ் விலங்கு பெற்றன; கெகே முதலியன கோடு பெற்றன; காநா முதலியன புள்ளி பெற்றன; அருகே பெற்ற புள்ளியை இக் காலத்தார் காலாக எழுதினர் எனவும், (உயிர் மெய்க்கு வடிவும் ஒருவாற்றான் கூறினாராயிற்று என்ற கருத்து இவ்வாசிரியருக்கு உடன்பாடு அன்று.) மெய் உயிர் நீங்கின் தன்உரு ஆகும்' தொல், 139 என்ற நூற்பா உரையில்— மெய், தன்னொடு கூடி நின்ற உயிர் புணர்ச்சியிடத்துப் பிரிந்து வேறு நின்றதாயின் தான் முன்னர்ப் பெற்று நின்ற புள்ளி வடிவுபெறும்என்றவாறு. ஆல் இலை, அதன் ஐ என வரும். எனவும், 'மெய்யோடு இயையினும் உயிர்இயல் திரியா தொல். 10 என்ற நூற்பா உரையில்- ''அ என்புழி நின்ற அளவும் குறியும் ஒன்று என்னும் எண்ணும் க என நின்ற இடத்தும் ஒக்கும்; ஆ என்புழி நின்ற அளவும் குறியும் ஒன்று என்னும் எண்ணும் கா என நின்ற இடத்தும் ஒக்கும் என்பது இதன் கருத்து, பிறவும் அன்ன. ஆயின், ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் உடையன ஒரு மாத்திரையும இரண்டு மாத்திரையும் ஆயவாறு என்னை எனின், நீர் தனித்து அளந்துழியும் நாழியாய், அரைநாழி உப்பிற் கலந்துழியும் கூடி ஒன்றரை நாழியாய் மிகாதவாறு போல்வது ஒரு பொருட் பெற்றி என்று கொள்வது அல்லது காரணம் கூறலாகாமை உணர்க ஆசிரியர் ஆணை என்பாரும் உளர். 'விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக் காரெனச் செய்தாரும் இல்' (நாலடி 103) என்பதே காட்டினார் உரையாசிரியர்'' என்வும். 'மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே' தொல். 18 என்ற

நூற்பா உரையில்- 'இது மெய்யும் உயிரும் கூடியவழி அவற்றின் ஓசைநிற்கும், முறைமை கூறுகின்றது' எனவும், 'முன்நின்ற சூத்திரத்தான் மெய் முன்னர் நிற்ப, உயிர் பின் வந்து ஏறும் என்றார்; அம்முறையே ஓசையும் பிறக்கும் என்றார், இதனானே, மாத்திரை கொள்ளுங்கால் உப்பும் நீரும்போல ஒன்றேயாய் நிற்றலும் வேறுபடுத்துக் காணுங்கால் விரலும் விரலும் சேர நின்றாற்போல வேறாய் நிற்றலும் பெற்றாம், நீர் உப்பின் குணமே ஆயவாறுபோல,உயிரும் மெய்யின் குணமேயாய் வன்மை மென்மை இடைமை எய்தி நிற்றல் கொள்க. க ங ய எனக் கூட்டமும் பிரிவும் மூவகை ஓசையும் காண்க' எனவும் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

இனி, உரையாசிரியர்— 'புள்ளி இல்லா எல்லா மெய்யும்' தொல். 17 — என்ற நூற்பா உரையில்- 'உயிர்மெய் என்பதனை ஒற்றுமை கொள்வுழி உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனவும். வேற்றுமை கொள்வுழி உம்மைத் தொகை எனவும் கொள்க' எனவும், ''ஈண்டு உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க் கூட்டத்தினை 'எல்லா மெய்யும்' என்று மெய்மேல் வைத்துக் கூறியது, அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப் போலும்'எனவும் உரைத்தனவும் கொள்க,

இலக்கண விளக்கச் சூறாவளி

உயிர்த்தல் என்பதற்கு ஒலித்தல் எனப் பொருள் உரைத்தார், முன் உரு ஆகியும் உருவு திரிந்தும் உயிர்த்தல் வரி வடிவிற்கு அல்லது ஒலி வடிவிற்கு அன்மையின் ஒலித்தல் என்னும் பொருள் ஏலாமை அறிக.

அமைதி

தொல்காப்பியனார் உயிர்மெய் பற்றிய 'புள்ளி இல்லா' என்ற நூற்பாவினை உயிர்மெய்யின் வரிவடிவு குறித்தேயாத்தார். இவ்வாசிரியர் நன்னூலார் போல் இந்நூற்பாவினை வரிவடிவு ஒலிவடிவு இரண்டற்கும் அமையுமாறு யாத்து, வரிவடிவு பற்றிய விரிவு 'தொல்லை வடிவின' இ. வி. 23 என்ற நூற்பாவில் பெறப்படுதலையும்சுட்டி 'உயிரின் அளவாய் உயிர்த்தல்' என விளக்கமாகக் கூறியுள்ளார். ஆதலின், 'முனிவர் குறைகூறும் அளவில் நூற்பாவும்உரையும் அமையாமை தேற்றம். 'எல்லா மெய்யும்..........................உயிரின் அளவாய் முந்து உயிர்த்தல்' என்பது ஒற்று முன்னாய் உயிர்மெய் ஒலிக்கப்படும்' என்ற கருத்தையே விளக்கு கின்றமை காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருஉரு ஆகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்தல் ஆறே.' தொல். 17

'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே.' 18

'மெய்யோடு இயையினும் உயிர்இயல் திரியா.' 10

'மெய்உயிர் நீங்கின் தன்உரு ஆகும்.' 139

'...... ...ஒங்கு உயிர்மெய் மற்றெழுத்துஅன்று
உயிர்மாத் திரையேபெறும்...........' வீ, 6

'ஓங்கு உயிர்கள் ஒன்றின்மேல் ஏறி உயிர்மெய்யாய்
ஆங்குஇரு நூற்றுஒருபத் தாறுஆகும்.' நே. 3

'புள்ளிவிட்டு அவ்வொடு முன்உரு ஆகியும்
ஏனை உயிரோடு உருவு திரிந்தும்
உயிர்அள வாய்அதன் வடிவுஒழித்து இருவயின்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய்.'
நன். 89

'உயிரே மெய் அணைந்து உயிர்மெய் ஆகும்
அவையிரு நூற்றுஒரு பத்தாறு என்ப' தொ.வி.11

'உயிரே மெய்யூர்ந்து உயிர்மெய் ஆகும்' மு.வீ.எ24

உயிர் அளபெடை

19. இசைகெடின் மொழிமுதல் இடைகடை
நெடில்வழித்
தத்தம் ஒத்தகுற் றெழுத்தோடு அளபு
எழூஉம் ஐஔ இஉ என்னும்
ஆயீர் எழுத்தொடும் அளபுஎழூம் என்ப.

இது தம்மொடு தாம் சார்ந்தும் இடம் சார்ந்தும் உயிர் அளபெடை ஆமாறு கூறுகிறது.

(இ-ள்) வழக்கு இடத்தும் செய்யுள் இடத்தும், அளபு எடுத்துக் கூறாக்கால் ஓசை குன்றுவதாயின் அவ்வோசை குன்றும் மொழியின் முதல்இடை கடைகளில் நின்ற நெட்டெழுத்துக்கள், தமக்குப் பின்னாக நின்ற தமக்குத் தமக்கு இனம் ஒத்த குற்றெழுத்துக்களொடு கூடி, அவ்வோசை நிறைவதாக மிக்கு ஒலிக்கும். தமக்கு இனம் இல்லாத ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்கட்கு இனம் ஆகிய இகரம் உகரம் என்று கூறப்படும் அவ்விரண்டு எழுத்தொடு திரல் நிறையாகக் கூடி மிக்கு ஒலிக்கும் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

வரலாறு: வாஅகை, ஈஇகை, ஊஉகம், பேஎகன், தைஇயல், தோஒரை, மௌஉவல் என வரும். பிறவும் அன்ன.

தனிநிலை அளபெடை வேண்டிற்றிலர், அது நெட்டெழுத்து ஓரெழுத்து ஒருமொழியாய், முதல்நிலை அளபெடையாய்த்தான் இறுதிநிலை அளபெடையாய்த் தான் அடங்குதலின். அற்றேல்,

'தனிநிலை முதல்நிலை யிடைநிலை ஈறுஎன
நால்வகைப் படூஉம் அளபு ஆய்வரும் இடனே'

என்னும் முன்னோர் மதத்தொடு முரணும்பிறஎனின்; முரணாது.

'இருவர் நூற்கும் ஒருசிறைத் தொடங்கித்
திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும்' ந. 8

என்ப ஆதலின்.

'குற்றெழுத்தொடு' என வரையாது கூறலின். ஓசை நிரம்பாவிடின் சிறுபான்மை ஈரெழுத்தொடு கூடியும் அளபு எழும் எனக் கொள்க.

'செய்யுட்கண் ஓசை சிதையுங்கால் ஈரளபும்
ஐயப்பா டின்றி அணையுமாம்'

என மாபுராணத்துக் கூறலின்,

வரலாறு : 'செறாஅஅய்வாழிய நெஞ்சு' எனவும், 'இலாஅஅர்க் கில்லைத் தமர்' எனவும் வரும்.

இவை ஈரெழுத்தொடு கூடாக்கால் ஆசிரியத் தளை தட்டு. செப்பலோசை கெடுமாறு உணர்க. அளபெடை அல்லாத ஓசைகள் எல்லாம் இசை ஓசை ஆதலின், அவற்றை 'ஆவியும் ஒற்றும்' இ. வி. 25 என்பதனால் கூறுப. ஒற்றளபெடைக்குப இவ்வுரை கொள்க.

கோட்டு நூறும் மஞ்சளும் கூடியவழிப் பிறந்த செவ்வண்ணம் போல நெடிலும் குறிலும் கூடிய கூட்டத்தில் பிறந்து பின் பிளவுபடாது ஒலிக்கின்றது ஒன்று ஆகலானும், எள் ஆட்டியவழி அல்லது எண்ணெய் புலப்படாவாறு போல நெடிலும் குறிலும் கூடிய கூட்டத்து அல்லது புலப்படாது நிற்பது ஒன்று ஆகலானும், அது தான் இயற்கை அளபெடையும் செய்யுட்குப் புலவர் செய்துகொண்ட செயற்கை அளபெடையுமாய் அலகு

பெறாதும் பெற்றும் நிற்பது ஒன்று ஆகலானும் உயிரளபெடை சார்பு எழுத்து என உயிரின் வேறு ஆயிற்று.

நெட்டெழுத்தே அளபு எழும் என்பாரும் உளர். அவர் அதன் பெற்றி அறிந்திலர் போலும்.

'மாத்திரை வகையான் தளைதம கெடாநிலை—யாப்புஅழியாமை என்று அளபெடை வேண்டும்' என்பது தமிழ்நடை ஆகலின், யாப்பு அழியாது தளை அறுப்புழி, ஓர் எழுத்தினையே இரண்டு மாத்திரையும் ஒரு மாத்திரையும் ஆகப் பிரித்து அசைத்து அதனால் சீர் செய்து தளை அறுத்தல் பொருந்தாமையின். அன்றியும், ஈண்டு அளவு குறியாய் நிற்கும் என்னும் குற்றெழுத்துக்களைக்
'குற்றுயிர் அளபின் ஈறாம்' நன். 107

என மேல் மொழிக்கு ஈறாய் நிற்கும் எனக் கூறுப ஆகலானும் அவர்க்கு அது கருத்து அன்று என்க. 19

விளக்கம் : இடம் - செய்யுள் இடமும் வழக்கு இடமும். தம்மொடு தாம் சார்தல் - நெடிலாகிய உயிரோடு இனம் ஒத்த குறிலாகிய உயிர் சேர்தல்.

தனி நிலை அளபெடை - தனி நிலை அளபெடை என்பது ஓரெழுத்து ஒருமொழி அளபெடுத்து நிற்பதாகும். ஓரெழுத்து ஒரு மொழிக்கு அதுவே முதலும் ஈறும் ஆதலின். தனிநிலை அளபெடைக்கு அதுவே முதலும் ஈறும் ஆகும். ஆகவே, அதனைச் சார்பு நூலாகிய இதன்கண் முதல் நிலை அளபெடையிலோ கடைநிலை அளபெடையிலோ சேர்த்துக்கொண்டு, அளபெடை வரும் இடம் மொழி முதல் இடை கடை என மூன்றே என்று இவ்வாசிரியர் குறிப்பிட்டார். இனி, நன்னூலாரும் 'இசைகெடின் மொழி முதல் இடை கடை நிலைநெடில் அளபுஎழும்' நன். 10 என்று கூறினாராக, அளபெடை மொழிமுதல் இடைகடை என மூன்றிடத்தும்

வருமாற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் கூறிய மயிலை நாதரும், ',தனி நிலை அளபெடை வேண்டார் ஆயினார், அது நெட்டெழுத்து ஒரெழுத்து ஒருமொழி யாய் முதல் நிலை அளபெடையாய்த்தான் இறுதி நிலை அளபெடையாய்த்தான் அடங்குதலின் என்க. அஃதேல். 'தனிநிலை முதல்நிலை இடைநிலை ஈறு என—நால் வகைப் படுஉம் அளவு ஆய்வரும் இடனே' என்னும் முன்னோர் மதத்தொடு முரணும் பிற எனின்,

'இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித்
திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும்' நன். 8

என்பதனானும் மாறுபாடு ஆகாது என்க'' என்று கூறிய தூஉம் நோக்குக. ஒரே குற்றெழுத்து அளபு எழும் என்னாமையின்,ஓசை நோக்கி குற்றெழுத்து இரட்டித்து வரும் என்பதும் பெறப்படும் ஈரளபு— இனக்குறில் ஓசை நிறைப்பதற்கு இரண்டு முறை இணைந்து வருவதாம்.

'செறாஅய் வாழிய நெஞ்சு' என ஒரே குறில் அளபு எடுப்பின் புளிமா முன்னர்க் கூவிளம் வருதலான்.மாமுன் நேர்வரும் நேர் ஒன்று ஆசிரியத்தளை தட்டுச் செப்பல் ஓசை சிதையுமாறு அறிக.

'நீட்டம் வேண்டின' தொல். 6 என்ற நூற்பா உரையுள் நச்சினார்க்கினியரும் 'செய்யுட்கண் ஓசை சிதையுங்கால் ஈரளபும்-ஐயப்பாடு இன்றி அணையுமாம்' என்ற மாபுராண நூற்பாவினை மேற்கோள் காட்டி, ''அவ்வளபு உடைய' எனப்பன்மையால் கூறிய அதனால் இவ்வாசிரியரும் நான்கு மாத்திரையும் கொண்டார்.

'செறாஅஅய் வாழிஎன் நெஞ்சு' குறள். 1200

'தூஉஉத் தீப்புகை தொலைவிசும்பு போர்த்தது
கொல்மலைபடு.
இலாஅஅர்க்கு இல்லைத் தமர்' நாலடி-‌3

'விராஅ அய்ச் செய்யாமை நன்று' ,, 246

'மரீஇஇப் பின்னைப் பிரிவு' ,, 220

எனச் சான்றோர் செய்யுட்கு எல்லாம் நான்கு மாத்திரை பெற்று நின்றன; அன்றி, மூன்று மாத்திரை பெற்றன வேல ஆசிரியத் தளை தட்டுச் செப்பலோசை கெடும் ஆயிற்று. இங்ஙனம் அளபு எடாது நின்று ஆசிரியத் தளை தட்டு நிற்பன. கலிக்கு உறுப்பாகிய கொச்சக வெண்பாக்கள். இவை அன்ன அல்ல என்று உணர்க'' எனவும் கூறியமை நோக்குக.

செய்யுள் இசை நிறைக்க வந்த அளபெடையை இந்நூற்பாவில் குறிப்பிட்டு, இயற்கை அளபெடையை 'ஆவியும் ஒற்றும்' இ வ் 25 என்னும நூற்பாவில் குறிப்பிடுவார்.

நெடிலொடு இனம் ஒத்த குறில் கூடிய பிறகு இரண்டும் தனித்தனி ஒலியாது சேர்ந்தே ஒலிக்கும். அப்பொழுது நெடில் இனக்குறிலோடு விட்டிசையாது ஒன்றுபட்டு நீட்டி ஒலிக்கப்படும். இச்செய்தியைக் 'குறுமையும் நெடுமையும்' தொல், 50 என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் 'இஃது உயிரும் உயிர் மெய்யும் அளபு இறந்து இசைக்குங்கால் குறிலோ நெடிலோ இசைப்பது என மாணாக்கர்க்கு நிகழ்வது ஓர் ஐயம் அறுக்கின்றது' எனவும்.

'எழுத்துக்களது குறிய தன்மையும் நெடிய தன்மையும் மாத்திரை என்றும் உறுப்பினைச் செவிகருவியாக அளக்கின்ற அளவு தொழிலானே செய்யுட்குக் கொள்ளப் படுதலின் அம்மாத்திரை தம்முள் தொடர்ந்து நிற்கின்ற சொற்கள் எல்லாம் நெட்டெழுத்து மாத்திரை மிக்கு நடக்கும்படியாகத் தொடர்ந்த சொல்லாம்' என்றும்,

'நீட்டம் வேண்டின்' தொல். 6 என்ற நூற்பா உரையில், 'கோட்டு நூறும் மஞ்சளும் கூடியவழிப் பிறந்த செவ்வண்ணம் போல,நெடிலும் குறிலும் கூடிய

கூட்டத்துப் பிறந்த பின்னர்ப் பிளவுபடா ஓசையை அளபெடை என்று ஆசிரியர் வேண்டினார். இவை கூட்டிச் சொல்லிய காலத்து அல்லது புலப்படா, எள் ஆட்டியவழி அல்லது எண்ணெய் புலப்படாத ஆறுபோல என்று உணர்க' என்றும் கூறியவற்றை நோக்குக.

அளபெடை அலகு பெறாமை – சீரும் தளையும் சிதையும் இடத்து அளபெடை அலகு பெறாமை.

'காட்டில் வளந்தழைத்தல் காணூஉக் களித்துத்தன்' என்ற வெண்பா அடியில், 'காணூஉ' என்பதன்கண் உள்ள அளபெடை எழுத்தைக் கணக்கில் கொண்டால், கலித்தளை தட்டு வெள்ளோசை சிதையும் ஆதலின், இதுபோன்ற இடங்களில் அளபெடை எழுத்தைக்கூட்டிக் கணக்கிடாமை அறிக.

நெட்டெழுத்தே அளபு எழும் என்பது வடமொழி மரபு.

'வடநூலார் அ என்னும் ஓர் எழுத்தே ஒருமாத்திரையாய் உச்சரிக்குங்கால் குற்றெழுத்து என்றும், இரண்டு மாத்திரையாய் உச்சரிக்குங்கால் நெட்டெழுத்து என்றும் மூன்று மாத்திரையாய் உச்சரிக்குங்கால் அளபெடை எழுத்து என்றும் மூவகைப்படும் என்று கூறுப' என்று சிவஞானமுனிவர் சூத்திர விருத்தியில் கூறியுள்ள செய்தி இதனை வலியுறுத்தும். பிரயோகவிவேக நூலாரும் தம் காரகப்படல ஐந்தாம் நூற்பா உரையில், "இனி, வடநூலார் குறில் தனியே ஒருமாத்திரையாய்ப் பிறப்பதோர் எழுத்தும் நெடில் தனியே இரண்டு மாத்திரையாய்ப் பிறப்பதோர் எழுத்தும் ஆனாற்போலப் புலுதமும் தனியே மூன்று மாத்திரையாய்ப் பிறப்பதோர் எழுத்து என்று கூறி, வேதத்துள் சந்தோபங்கப வாராமல் குறில் நின்ற இடத்தும் நெடில் நின்ற இடத்தும் புலுதம் ஆதேசமாக வருவதல்லது குறிலும் நெடிலும் போலப் பொருள் வேறுபடுக்க வாராதுஎன்றும், உலக வழக்கிலும்

சேய்மை விளியில் வரும் என்றும் கூறுவர். இனித் தமிழ் நூலார் 'நூறோஒஒநா றென்பாள் நுடங் கிடைக்கும் மென்முலைக்கும், மாறோமால் அன்றளந்த மண்', 'உப்போஒஒ எனஉரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்கு, ஒப்போ நீர் வேலி உலகு' என இசை விளி பண்டமாற்று ஆயினவற்றை இயற்கை அளபெடை என்றும், 'கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர், படாஅ முலைமேல் துகில்', 'செறாஅஅய் வாழிஎன் நெஞ்சு' எனக் காரியம் உள்வழிவரும் அசைநிலை அளபெடையைச் செயற்கை அளபெடை என்றும் கூறுவர்'' என்றும், ' எழுத்துப்பேறு அளபெடை 'குன்றிசை மொழிவயின் நின்று இசை நிறைக்கும்' காரியம் இல்வழி வந்த புலுதச்சந்தி,' என்றும் கூறியன நோக்குக.

அளபெடையை ஒரே எழுத்தாகக் கொண்டால் செய்யுட்கண் அவ்வோர் எழுத்தினையே இரண்டு எழுத்துக்களாகப் பிரித்து அசைத்துச் சீர் கணக்கிட்டுத் தளை அறுத்தல் கூடாது என்பார் இவ்வாசிரியர். இதற்குச் சிவஞான முனிவர் 'எழுத்திற்கு மாத்திரை கோடலும், அசைத்தலும், சீர் செய்தலும், தளை அறுத்தலும் ஓசைபற்றி அல்லது எழுத்துப் பற்றி அல்ல' என நன்னூல் 91-ஆம் நூற்பா உரையுள் மறுப்பு வழங்குவர்.

நன்னூலார் நெட்டெழுத்தே அளபெடுக்கும், குற்றெழுத்து அறிகுறி மாத்திரையாய் நிற்கும் எனக் கூறிப்பின் குற்றெழுத்து அளபெடைக்கண் ஈறாய் வரும் எனக் கூறுதல் பொருந்தாக் கூற்றாகும். முனிவர் 'குற்றுயிர் அளபின் ஈறாம்' நன். 107 என்ற நன்னூல் நூற்பாத் தொடருக்கு 'அளபெடைக்கண் குற்றுயிர் வரி வடிவின்கண் அறிகுறியாய் வரும்' என்று உரை கூறுவதன் பொருத்தத்தையும் ஓர்க. மறுதலை சிதைத்து தம் துணிபு உரைப்பாராய் ஆசிரியர் தொல்காப்பியனார் தமிழ் மொழியின்கண் 'மூ அளபு இசைத்தல் ஓர் எழுத்து

இன்றே' தொல். 5 என்று கூறியிருப்பவும், வடமொழி மரபை உட்கொண்டு நன்னூலாரும் சிவஞானமுனிவரும் உரைக்கும் யாவும் தமிழ் மரபினுக்கு ஏலா என்று உணர்க. இவ்வளபெடை 21 என்று கணக்கிடும் இடர்ப்பாடும் பொருந்தா முயற்சி என்பதும் காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே' தொல்.5

'நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.' தொல். 6

'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே.' 41

'ஐஔ என்றும் ஆயீ ரெழுத்திற்கும்
இகர உகரம் இசைநிறைவு ஆகும்.' 42

'அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.'
தொல். செய். 17

'நெடு நீர்மை அளபு.' வீ. 2-2

'அளபெடைகள் சொல்லொற்றி நீட்டத் தொகும்.'
நே. 3

'இசைகெடின் மொழி முதல் இடைகடை
நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.'
நன். 93

'உயிர்நெடில் இனக்குறில் உற்றுஅள பெடுக்கும்.'
தொ. வி. 18

'இசைகெடின் நெட்டெழுத்து எல்லாத் தமக்குஇனம்
ஆகிய குறிலொடு அளபுஎழும் எனலே' மு.வீ.எ.31

'அவற்றுள், இஉ ஐஔக்கு இனம்என மொழிப' 21

'அதுதான்
இயற்கை செயற்கை இன்னிசை சொல்லிசை
நெடில் குறில் ஒற்றளபு எழுத்துப் பேறளபு
எண்வகைப்படும் என்மனார் புலவர்.' 32

'அளபும் புலுதமும் அளபெடைப் பெயரே.' 33

'இயற்கை அளபெடை செயற்கை அளபெடை
எழுத்துப்பேறு அளபெடை இசைநூல் அளபெடை
ஒற்றுப்பேறு அளபெடை ஓரோவழிக் கூடில்
ஐந்துஎன மொழிப அளபெடை அவைதாம்
குற்றெழுத்து அளபெடை நெட்டெழுத்து
அளபெடை
ஒற்றெழுத்து அளபெடை எனஒரு மூன்றாய்
மொழிமுதல் இடைகடை மூன்றினும் வருமே.'
இ. கொ. 90

ஒற்றளபெடை

20. ஙஞண நமன வயலள ஆய்தம்
குறில்இணை குறில்கீழ் மொழிஇடை இறுதியின்
அளபுஎழும் அவற்றோடு ஆயுங் காலே.

இது தம்மொடு தாம் சார்ந்தும் இடம் சார்ந்தும் ஒற்றளபெடை ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : ஙஞண நமன வயலள ஆய்தம் என்னும் பதினோரெழுத்தும், குறிலிணைக்கீழும் குறில் கீழும் அளபு எடுத்துக் கூறாக்கால் ஓசை குறைவதாயின், அவ் வோசை குன்றும் வழி இடையினும் ஈற்றினும் அப் பதினோரொற்றொடும் கூடி அவ்வோசை நிறைவதாக மிக்கு ஒலிக்கும் ஆராயுங் காலத்து என்றவாறு.

மேல் 'இசை கெடின்' என்றதனை ஈண்டும் கூட்டுக.

வரலாறு : அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை

அரய்ய்யர், குரல்ல்கள். வரஃஃகு எனவும், மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து அப்ப்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு எனவும்,

'அரண்ண் கொண்ட அடுதோளினர்
வலம்ம்பட்ட வாள்வயவர்
கலனன்கொண்ட கல்மார்பர்
பகல்ல் அன்ன பண்புடையீர்
திரள்ள் சேனை செலநீக்கி
கண்ண்தண்ணெனக் கண்டும்கேட்டும்
தம்ம்படையைத் தாய்நோக்கி
மின்ன் அன்ன வேல்விளக்கி
இவ்வ்வுலகை இனி தாண்டு
செய்ய் தொழிலின் செலநோக்கி
கல்ல் அன்ன வன்னெஞ்சின்
கொள்ள் என்று கொடுக்கலராய்'

எனவும் வரும். பிறவும் அன்ன.

நகர ஆய்தங்கள் மொழிக்கு ஈறு ஆகாமையின் ஈண்டும் ஈற்றில் வந்து அளபெழா எனக்கொள்க.

'ஆயுங்கபலே' என்றதனால், புணர்மொழிக்கண் ஈறு ஆகாத நகர ஆய்தங்களும்,

'கலங்ங் கொண்ட கல்மார்பர்' எனவும், கஃஃறிது, முஃஃடீது, அஃஃகிய எனவும் செயற்கை ஒற்று அளபெடுத்தும், இன்னும் ஒற்று இன்றியும் இசைகெடின்,

அம்பொ ரைந்து டைய்ய காமன் ஐயன் என்ன
அந்தணன் நம்புநீரர் அல்லர் நன்கு ரங்குநீரர் ஆயினும்
தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பின் நெஞ்சு நேர்ந்து
தாழ்வர்தாம்
பொங்க ரவ்வ அல்கு லாரெ னப்பு கன்று
சொல்லினான் சிந். 1997

எனவும் அரய்யர் - குரவ்வை - வரஃகு-விலஃகு-இலஃகு எனவும் ஒற்றை உண்டாக்கலும், அதனானும் ஓசை நிரம்பா விடின் அரய்ய்யர்-குரவ்வ்வை-வரஃஃகு.

விலஃஃகி வீங்கிருள் ஓட்டுமே மாதர்
இலஃஃகு முத்தின் இனம்

என அளபு எடுத்தலும் கொள்க;

'மைதீர் ஒற்று—இன்றியும் செய்யுள் கெடின்ஒற்றை உண்டாக்கும்- குன்றுமேல் ஒற்றளபும் கொள்' (மாபுராணம்) என்ப ஆதலின். ஒரு மாத்திரையாய் அலகு பெறுதலானும் பிறவாற்றானும் ஒற்றளபெடை சார்பு எழுத்து என ஒற்றின் வேறாயிற்று. 20

விளக்கம் : தம்மொடு தாம்சார்தல் — முதல் எழுத்துக்கள் ஆகிய மெய் எழுத்துக்களோடு அவ்வம் மெய் எழுத்துக்களே சார்தல்.

இடம் : செய்யுளில் ஓசை குறையும் இடம்.

சொற்களில் குறிலிணைக்கீழும் குறிற்கீழும் ஒற்றளபெடை தோன்றுகின்றமைக்கு முறையாக எடுத்துக் காட்டுக்கள் தந்தனவற்றுள் பல இவ்விடம் தவிர வேறு யாண்டும் காணப்படாதனவாகும். செய்யுளடிகளில் காட்டியனவும் அத்தன்மையனவே.

ஙகரமும் ஆய்தமும் ஈற்றில் வந்து அளபெடுத்தற்குப் புணர்மொழி காட்டுகிறார். கலம்—கலங் எனவும், அவ்— அஃ எனவும் விதி யீறாக வந்தமை காண்க.

ஒற்று இல்லாத காரணத்தால் ஓசை குறைவதாயின் ஓர் ஒற்றை இடையே மிகுத்து, உடைய என்பதனை உடைய்ய எனவும், குரவர் என்பதனைக் குரவ்வர் எனவும், அரவல் குலார் என்பதனை அரவ்வல்குலார் எனவும் அமைத்துக் கொள்வது 'மைதீர் ஒற்றுஇன்றியும்

செய்யுட் கெடின் ஒற்றை உண்டாக்கும்' என்பதனால் பெறப்படும். அதனானும் ஓசை நிரம்பாவிடின் ஒற்றளபெடையும் கொள்ளப்படும் என்பது 'குன்றுமேல் ஒற்றளபும் கொள்' என்பதனால் பெறப்படும்.

இடை ஈறு என்பனவற்றைக் குறிலிணை, குறில் என்பனவற்றோடு முரணி ஒற்றளபெடை 44 ஆக்கி ஓர் இரண்டை மட்டும் நீக்கி 42 எனக் கூறின், 42 ஒற்றளபெடை வகைகள் காட்டத் தமிழில் ஒற்றளபெடையாண்டும் இல்லை ஆதலின், அத்தொகை சாலாது. ஆய்தத்தை ஒற்றுள் அடக்கி ஒற்றளபெடை பதினொன்று என்பதே பொருந்துமாறு அறிக.

'ஒற்று அள பெடுப்பினும் அற்றுஎன மொழிப' தொல், செய் 18 என்ற நூற்பா உரையில், நச்சினார்க்கினியர் 'நீட்டம் வேண்டின்' தொல்.6என்ற சூத்திரத்துள் காட்டிய 'செய்யுட்கண்' என்னும் மாபுராணச் சூத்திரத்துள் 'மைதீர் ஒற்று' என்றதனானே. சீர்வகைஅடி ஓசை கெடின் ஒற்று இல்லாத சொல்லிற்போல அவ்வொற்றை உண்டாக்கியும் நிற்கும் என்றும், 'குன்றுமேல் ஒற்றளபும் கொள்' என்றதனானே அவ்வொற்றானும் ஓசை நிறையாவிடின் அங்ஙனம் வருவித்த ஒற்றை அளபெடுத்துக் கொள்க என்றும் கூறிய விதியாற்கொள்க எனவும், 'அம்பு ஒரைந்துடைய்ய .... சொல்லினான்'-இதனுள் யகர லகர ஒற்று இல்வழி ஓசை அவ்வொற்றை உண்டாக்கியது; அஃது அளபெடுத்தது வந்துழிக் காண்க எனவும் கூறியவற்றையும் நோக்குக.

இச்சூத்திரத்துக் காட்டிய உதாரணங்கள் யாவும் மயிலைநாதர் உரையில் காணப்படுவனவே.

ஒத்த நூற்பாக்கள் :

'ஒற்று அளபு எடுப்பினும் அற்றுஎன மொழிப.'
தொல். பொருள் 330

'அளபெடைகள் சொல்ஒற்றி நீட்டத் தோகும்' தே 3

'ஙஞண நமன வயலள ஆய்தம்
அளபாம் குறிலிணை குறிற்கீழ் இடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே.' நன். 92

'ஒற்றளவு எழும்வேறு உற்றுக் குறில்கீழ்
இயைந்து ரழஒழி இடைமெலி ஆய்தம்.'
தொ. வி. 18

'ஆய்தமும் ஒற்றும் அளபுஎழ நிற்புழி
வேறு அலகு எய்தும் விதியின ஆகும்.'
மு. வீ. யா. ஒழி. 3

ஐகார ஔகாரக் குறுக்கங்கள்

21. தற்சுட்டு அளபுஒழி ஐமூ வழியும்
நையும் ஔவும் முதல் அற்று ஆகும்.

இஃது இடன் சார்ந்து ஐகாரஔகாரக் குறுக்கங்கள் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : தன்னைச் சுட்டுதற் கண்ணும் அளபு எடுத்தற்கண்ணும் அல்லாதவழி வந்த ஐகாரம் மொழி முதல் இடை கடை என்ற மூன்று இடத்தும் குறுகும். அவ்வாறு வரும் ஔகாரமும் மொழி முதற்கண் குறுகும் என்றவாறு.

வரலாறு : ஐப்பசி மைப்புறம் இடையன் திணை எனவும், ஔவை கௌவை எனவும் வரும். கை, பை, மை, கௌ வௌ என்பனவும் பொருளைச் சுட்டிய வழி குறுகும் எனக் கொள்க. இங்ஙனம் அளவு குறுகலானும் சீரும்தளையும் சிதையும் இடத்து அலகுபெறா ஆகலானும் ஐகார ஔகாரக் குறுக்கங்கள் சார்பு எழுத்து என உயிரின் வேறாயின.

விளக்கம் : ஐகாரத்திற்கு மொழி முதல் இடை கடை என்ற மூன்றும் இடன்; ஔகாரத்திற்கு மொழி முதல் இடன்.

ஐகாரம் தன்னைச் சுட்டுதற்கண்ணும் அளபு எடுத்தற்கண்ணும் இரண்டு மாத்திரை என்றார்.

அளபு எடுத்தற்கண் ஐகாரத்தின் பின்னர்ச் செறியும் இகரம் ஒரு மாத்திரை அளவினது. ஐகாரம் இகரத் தொடு கூடிய பிறகே பிளவுபடா ஓசையாய் மூன்று மாத்திரையாகும். அதற்குமுன் அஃது இரண்டு மாத்திரை அளவினதே. அலகு பெறாமை—

கெண்டையையே வென்ற கிளரொளி உண்கண்ணாள்
பண்டையள் அல்லள் படி

என்ற பாடலில், கெண்டையையே என்ற சீர்க்கண் டையை இரண்டையுமாதல் டை என்ற ஒன்றனையாதல் ஐகாரக் குறுக்கமாகக் கொள்ளாது ஒழியின், வெண்பா வில் நாலசைச்சீர் அமைந்து தளை சிதையுமாறு அறிக. இங்ஙனம் குறுகுதல் பெரும்பாலும் எதுகைத் தொடை நோக்கி என்க.

'ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே' நன். 29

'கௌவை நீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல் வெய்யோன்'
பு. வெ. மா. 4-23

'கையறு நெஞ்சம் கடிதல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி'
சிலப்- 13-91, 92

'ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' குறள். 169

என்ற இடங்களில் எல்லாம் தொடைநோக்கி ஐகார ஔகாரங்கள் குறுகியபெற்றி ஓர்ந்து அவை மொழி முதற்கண் ஒன்றரை மாத்திரை அளவினவாய்க் குறுகும் என்பாரும் உளர். அவர் கருத்துப் பற்றிய,

'அளபெடை தனிஇரண்டு அல்வழி ஐஔ
உளதாம் ஒன்றரை தனிமையும் ஆகும்'

என்ற நூற்பாவிற்கு, ஐகாரக்குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையும் இடையினும் ஈற்றினும் ஒரு மாத்திரையும் பெறும் என்றும், ஔகாரக்குறுக்கம் மொழிமுதற் கண்ணேயே வருதலின் அஃது ஒன்றரை மாத்திரையே பெறும் என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும். இதனை நன்னூல் 95-ஆம் நூற்பா வுரையுள் சிவஞான முனிவரும் குறிப்பிட்டுள்ளமை காண்க. 'தற்சுட்டு அளபு' நன். 95 என்பதற்குத் தன்னைச் சுட்டும் அளவு என்று வலிந்து பொருள் கூறி அளபெடையை நீக்கிக் கொள்ளுதல், அளபெடை மூன்று மாத்திரைபெறும் ஓரெழுத்து என்றுகூறும் நன்னூலுக்கு ஏற்குமேயன்றி, நெடிலும் ஒத்த குறிலும் கூடியே மூன்று மாத்திரை ஆகும் என்ற இந்நூலுக்கு ஏலாமை அறிக.

ஐகாரக் குறுக்கம் ஆகிய ஒன்றனையே மொழிமுதல் இடை கடை என்ற இடன்நோக்கி மூன்று என்றல் சாலாமையின் இவர் அதனை ஒன்றாகவே கொண்டார்.

இலக்கண விளக்கச் சூறாவளி

'மூவழியும் நையும்' என்றதனான், ஐகாரம் மொழிக் கண் அன்றிக் குறுகாது என்பதுதானே பெறப்படுதலின், தன்னைச் சுட்டுதற்கண் குறுகாது என்றலும், ஐகாரம் அளபு எடுத்தல்மேல் கூறப்பட்டமைலின் தன் மாத்திரை யின் மிக்கு ஒலிக்கும் அளபெடைக்கண் குறுகுஞ் சொல்லோ என்னும் ஐயம் இன்மையின் அளபு எடுத்தற் கண் குறுகாது என்றலும் பயனில் கூற்றாம் என்க.

ஐகாரம் மொழிமுதற்கண் குறுகாமையும் ஔகாரக் குறுக்கம் என ஒன்று இன்மையும் விருத்தியுள் காண்க.

அமைதி

'மூவழியும்' என்று பொதுப்படக் கூறினாரே யன்றி 'மொழி மூவழியும்' எனக் கூறாமையானும், இலக்கண நூல்களில் எழுத்துக்களையே 'ஐகார ஔகாரம்' தொல். 137 'ஐகான் யவ்வழி' நன். 123 'வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி' நன். 201 'ஐ என் நெடுஞ்சினை' தொல். 56 'ஐ ஔ என்னும்' தொல். 42 என்றாற்போல மொழி முதல்கடை ஆகிய இடங்களில் வைத்துக் கூறும் மரபு உண்மையானும், தமிழ் மரபையே ஒட்டிப்பேசும் இவ்வாசிரியருக்கு அளபெடைக்கண் ஐகார ஔகார நெடில்களின் மாத்திரை இரண்டே ஆகலானும், ஐகாரமும் ஔகாரமும் குறைவின்றித் தமக்கு உரிய இரண்டு மாத்திரை பெறும் இடங்களைச் சுட்டி ஏனைய இடங்களில் அவை குறுகும் என்று குறிப்பிடுதலே ஏற்றது ஆதலானும் இவ்வாசிரியர் கூறியது குற்ற முடைத்து அன்று என்பது அறிக.

'ஐகாரக் குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும், ஔகாரக் குறுக்கமும் தான் வரும் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும் குறுகும் என்பது உய்த்து உணர்ந்து கொள்க' என நன்னூல் 95ஆம் நூற்பா உரையில் முனிவரே கூறியிருப்பது கொண்டு சூறாவளிச்செய்தி பொருந்தாவாற்றை உணர்க.

ஒத்த நூற்பாக்கள் :

'அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.'
தொல். 56

'ஓரளபு ஆகும் இடனுமார் உண்டே
தேருங் காலை மொழிவயி னான.' 57

'ஒன்றரை ஆகும் ஐஔ.........,' வீ. 3

'மும்மை இடத்து ஐ ஔவும் குன்றும்.' நே. 4

'ஐத்தனித்து அளபெடுத் தன்றிமூ விடத்தும்
ஔவும்முத லிடத்தும் அஃகும் என்ப.' தொ.வி. 16

'மொழிமுதல் இடைகடை மூவிடத் தினும்ஐ
அஃதும் முதல்இடத்து ஔவும் ஆற்றே.'
மு. வீ. எ. 37

மகரக் குறுக்கம்

22. லளமெய் திரிந்த னணமுனும் வருமொழி
வகாரம் மிசையும் மகாரம் குறுகும்.

இஃது இடம் சார்ந்து மகரக் குறுக்கம் ஆமாறு கூறுகின்றது,

இ-ள் ; லகர ளகரங்கள் திரிந்த னகரணகரங்கள் முன்னும், வருமொழிமுதற்கண் நின்ற வகரத்தின் மேலும் மகரம் குறுகும் என்றவாறு.

எனவே, ஒருமொழிக் கண்ணும் புணர்மொழிக்கண்ணும் குறுகும் என்பது ஆயிற்று.

எ-டு :

'செந்நூற் கழிஒருவன் கைப்பற்ற அந்நூலை
முந்நூலாக் கொள்வானும் போன்ம்'
கலி-103-30, 31 எனவும்,

'பசும்போல்வார் முற்பட்டால் பாற்பட்ட சான்றோர்
முசுப்போல முள்காந்து இருப்பர்—பசுத்தான்
வெருளினும் எல்லாம் வெருளும் அஃதன்றி
மருளினும் எல்லாம் மருண்ம்' எனவும்,

வரும் வண்ணக்கன் எனவும் முறையே காண்க.

திரிதல் யாண்டுப் பெற்றாம் எனின், அதுவும் அநுவாத முகத்தானே ஈண்டே பெற்றாம் என்க.

இங்ஙனம் அளவு குறுகலான், மகரக்குறுக்கம் சார்பு எழுத்து என மெய்யின் வேறாயிற்று. 22

விளக்கம் : இடம்—தனிமொழி யிடை லகர ளகரங்கள் திரிந்த னகரணகரங்களின் முன்னும், புணர் மொழியிடை வகரத்தின்மேலும் மகரக்குறுக்கம் வருதல்.

போன்ம், மருண்ம்—தனிமொழி மகரக் குறுக்கம்.
வரும் வளவன்—புணர்மொழி மகரக்குறுக்கம்.

குறுகும் இடத்திலேயே லளமெய் திரிந்த னகரண கரங்கள் என்று சொல்லியதனை உட்கொண்டே மகரக் குறுக்கத்திற்கு இடம் விளக்குதலின், இதனை அநு வாதத்துள் அடக்கினார். இங்ஙனமே சேனாவரையரும், 'வேற்றுமைப் பொருளை விரிக்குங்காலை' தொல். சொல். 83 என்ற நூற்பா உரையுள் 'அற்றேல் அன் மொழித் தொகைக் கண் சொற்பெய்து விரித்தல் யாண்டுப் பெற்றாம் எனின். அதுவும் அநுவாத முகத் தானே ஈண்டே பெற்றாம்' என்று கூறியதனையும் நோக்குக. முன்பு கூறாதது ஒன்றனைக் கூறியது போலக் குறிப்பிடுவதும். அநுவாதம் என்பது, எழுத்ததி காரத்துள் ஈகார ஈற்றுப்பெயர் இகரமாகிய எழுத்துப் பேறு அளபெடைபெறும் என்று குறிப்பிடாத தொல் காப்பியனார், சொல்லதிகார விளிமரபில் 'அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்' தொல், சொல். 126 என்ற நூற்பாவில். ஈகாரம் எழுத்துப்பேறு அளபெடை பெறு மாற்றைக் குறிப்பிட்டதைச் சேனாவரையர் 'இகரம் மிகூஉம் என அநுவதித்தார்' என்று குறிப்பதனாலும் அறிக.

இலக்கண விளக்கச் சூறாவளி

திரிதல் யாண்டுப் பெற்றாம் எனின், அதுவும் அநுவாத முகத்தானே ஈண்டே பெற்றாம் என்றார். போன்ம் மருண்ம் என்பன பகுபதங்கள் ஆகலின், உரைத்

தான் உயிர்த்தான் கற்பான் நிற்பான் என்பன போல இவையும் பகுபத உறுப்பு ஆறனுள் சந்தி நோக்கி விகாரப்பட்டதை உணர்ந்திலர் போலும். நடந்தான் எனபுழி, அவர் தாமே இயல்பினும் விதியினும்' இ.வி. 82 என்னும் புணரியல் சூத்திரவிதியான் முடித்துக் காட்டியவாறும் அறிக,

அமைதி

ஏனைய குறுக்கங்கள் இயல்பான சொற்கண் உளவாதல் போல மகரக் குறுக்கமும் இயல்பான சொற்கண் உளதாகும் என்று கோடல் கூடாது என்பதற்காக ஈண்டு வரும் னகர ணகரங்கள் லகர ளகரங்களின் திரிபு என்பதை ஈண்டே விளக்குதலானும், பொது விதியான் உணர்த்தல் இயலாத செய்யுள் திரிசொற்களைச் சிறப்பு விதி கொண்டே விளக்குதல் மரபு ஆதலானும் 'லள மெய் திரிந்த னண' என்பனவற்றை ஈண்டே விளக்கி, அவை அநுவாத முகத்தான் ஈண்டே பெறப்பட்டன என்று கூறுதற்கண் குற்றம் இன்மை அறிக.

போன்ம், மருண்ம் என்பன உரைத்தான், உயிர்த்தான் என்பன போன்ற இயற்சொற்கள் அன்மையும் காண்க.

இனி, முனிவர் நன்னூல் விருத்தியில் 'னண முன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்' நன் .96 என்ற நூற்பா உரையில், 'இம் மகரக்குறுக்கம் செய்யும் என்னும் வாய்பாட்டு முற்று ஈற்றது' என்று உய்த்து உணர்ந்து கூறியது 'மந்திர நாமம் வந்துநீர் கன்ம்' பெருங். இலா 11-93 '*சிலம்புள கொண்ம்*' *சிலப்*. 9-73, முதலிய சான்றோர் இலக்கியத்தொடு முரணுமாறும் அறிக. நீர் கொண்ம், நீர் கன்ம் என்புழி, கொண்ம் என்பதன் இயற்சொல்லாகிய கொள்ளும் என்பதும் கன்ம் என்பதன் இயற்சொல்லாகிய கல்லும் என்பதும்

முன்னிலைப் பன்மை வினைமுற்றாதல் நச்சினார்க்கினியர் சொல்லதிகாரத்து 'இர் ஈர் மின்' தொல். சொல். 236 என்ற நூற்பா உரையுள் விளக்கிய வாற்றானும் அறிக.

இனி, மகரக்குறுக்கத்தின் வரிவடிவினைத் தொல்காப்பியனார் 'உட்பெறு புள்ளி உருவாகும்மே' தொல்,14 என்ற நூற்பாவினால் குறிப்பிட்டு, மகரம் மெய்யாய போது புறத்தே புள்ளி பெறும், அதுவே குறுக்கம் ஆம் போது உள்ளும் ஒரு புள்ளி பெறும் [ம்] என்று குறிப்பிட்டுள்ள செய்தியையும், இதனையே வீரசோழியம் 'ம—முன் வரின்கால் வவ்வரின்' எனச் சந்திப்படலப் பத்தொன்பதாம் நூற்பாவில் சுட்டியதனையும், அதன் உரை 'மகரம் கால்மாத்திரையாகி உட்புள்ளி பெறும்' என்று குறிப்பிட்டுள்ளதனையும் உணர்க.

ஒத்த நூற்பாக்கள் :

'அரை அளவு குறுகல் மகரம் உடைத்தே
இசைஇடன அருகும் தெரியுங் காலை' தொல். 13

'செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்று ஆகும்.' 51

'னகாரை முன்னர் மகாரம் குறுகும்.' 52

'வகாரம் மிசையும் மகாரம் குறுகும்.' 330

'ம-முன் வயின்கால் வவ்வரின்.....' வீ.சந்தி. 19

'காலம் குறுகும் ம........' நே. 5

'ணனமுன்னும் வஃகான் மிசையும்மக் குறுகும்,'
நன். 96

'மகரம் லளக்கீழ் வம்மேற் குறுகும்.' தொ. வி. 17

'மகரம் ணனக்கீழ் வம்மேற் குறுகும்' மு.வீ.எ. 38

வடிவு

23. தொல்லை வடிவின எல்லா எழுத்தும்ஆண்டு
எய்தும் எகரம் ஒகரம் மெய்ப் புள்ளி

இது நிறுத்த முறையானே வடிவு கூறுகின்றது.

இ-ள் : இவ்வெழுத்து இவ்வடிவிற்று என யாம் எழுத்துக்களுக்கு வடிவு கூறும் இடத்து,எல்லா எழுத்துக் களும் நெடுங்கணக்கினுள் எழுதப்பட்டுவருகின்ற பழைய வடிவே வடிவாக உடையனவாம் ஆயினும், அங்ஙனம் வரும் இடத்து எகரமும் ஒகரமும் மெய்களும் மேற்புள்ளி பெற்று நிற்கும் என்றவாறு.

புள்ளியும் தொல்லை வடிவே ஆயினும்,எகர ஏகாரங் கட்கும் ஒகர ஓகாரங்கட்கும் தனிமெய் உயிர்மெய் கட்கும் வடிவு ஒப்புமைகண்டு, அவ்வொப்புமைமேல் வேற்றுமை செய்யும் பொருட்டு அதற்கு முன்னோர் பின்னர்ப் புள்ளியிட்டு எழுதுப என்றார்; என்பார்,ஆண்டு எய்தும் என்றார். தொல்லை வடிவின ஆதல் நெடுங் கணக்கினுள் காண்க.

எரி ஏரி ஒ̇ளி ஒளி கெ̇ண்டை கெழல்

கொ̇ண்டல் கொடை உல்கு உலகு - என எகரமும், ஒகர மும்: தனிமெய்யும் புள்ளி எய்தி நின்றவாறு காண்க. 23

விளக்கம்: நிறுத்தமுறை—இரண்டாம் நூற்பாவில் நிறுத்தமுறை. இந்நூற்பா எழுத்துக்களின் வரிவடிவு முழுவதையும் விளக்குதற்கு எழுந்தது அன்று. ஐயம் ஏற்படக் கூடிய இடங்களில் ஐயம் அறுத்தற்கென்றே அமைந்ததாம்.

முற்காலத்தில் எகரம் ஏகாரம் இரண்டற்கும்,ஒகரம் ஓகாரம் இரண்டற்கும் வரிவடிவு ஒன்றாகவே இருந்த மையான், குறிலையும் நெடிலையும் பிரித்து உணரக் குறிலுக்கு நெடில் வடிவின்மேல் ஒரு புள்ளியிட்டு எழுதும்

மரபு இருந்தது. இங்ஙனமே கொம்புகளிலும் பண்டைக் காலத்தில் வேறுபாடு இல்லை. 'ெ' என்பதே குறில் நெடில் என்ற இரு திறத்து உயிர்மெய் எகர ஏகாரங் களையும் ஒகர ஓகாரங்களையும் சுட்டுதற்குப் பயன் பட்டது. ஆகலின் குறிலைக் குறிக்குமிடத்து 'ெ' என்று புள்ளிட்டெழுதும் தேவை ஏற்பட்டது.

ஓர் எழுத்தின்மேல் புள்ளியிட்டு எழுதின். அதன் மாத்திரை செம்பாதியாகக் குறைத்துக் கொள்ளப்படும்.

எ—இரண்டு மாத்திரை; எ்—ஒரு மாத்திரை.

க—ஒரு மாத்திரை; க் — அரை மாத்திரை.

ம்—அரை மாத்திரை; ம் — கால் மாத்திரை.

இக்காலத்தில் எ ஏ ஒ ஓ என்பனவும், குறிற் கொம்பு நெடிற் கொம்பு ஐகாரக் கொம்பு என்பனவும் தனித்தனி வடிவு பெற்றமையின், இந்நூற்பா இக்காலத்திற்குத் தேவைப்படுவது ஒன்று அன்று.

இலக்கண விளக்கச் சூறாவளி

புள்ளியும் தொல்லை வடிவே ஆதலின், எகர ஏகாரங் கட்கும் ஒகர ஓகாரங்கட்கும் தனிமெய்க்கும் உயிர் மெய்க்கும் வடிவு ஒப்புமைகண்டு, அவ்வொப்புமைமேல் வேற்றுமை செய்யும் பொருட்டு அவற்றிற்கு முன்னோர், பின்னர்ப் புள்ளியிட்டு எழுதுக என்றார் என்னும் கருத்தால் 'ஆண்டு எய்தும்' என்றார்க்கு, அகர ஆகாரங்கள் உகர ஊகாரங்கள் முதலியனவும் அத்தன் மைய ஆதலின் அவற்றிற்கும் வடிவு ஒப்புமை கண்டு அவ்வொப்புமைமேல் வேற்றுமை செய்யும் பொருட்டு, அவற்றிற்கு முன்னோர், பின்னர்க் கீழ் விலங்கும் புள்ளிக் காலும் முதலிய இட்டு எழுதுக என்றார் எனனும் கருத் தான், அவை கீழ்விலங்கு முதலியன பெறும் என்று ஓதாமை குன்றக் கூறலாம் ஆதலின், நன்னூலார் கூறிய

'ஆண்டு எய்தும்' என்பதற்கு அது கருத்து அன்று என்க. அங்ஙனம் கடாயினார்க்கு. வேறு இறுக்கும் முறை அறியாமையின் தமக்கு வேண்டியவாறே கூறினார். மேலும் இவ்வாறே நெகிழ்ந்து போவனவற்றை ஆட்டாண்டு விரிக்கின் பெருகும்.

அமைதி

ஐயப்படும் நிலையில் உள்ளனவாகிய எகர ஒகர மெய்கள்பற்றி ஐயம் அறுத்து உருவினை நிலைநிறுத்துவதே தேவையானது. மற்ற எழுத்துக்களுக்குத் தனித் தனி வடிவம் உண்மையின் அவை பற்றிய ஐயத்திற்கு இடம் இல்லை. எகர ஒகர மெய்களை ஏகார ஓகார அகரமேறியமெய் இவற்றிலிருந்து பிரித்து அறிவித்தலே தேவைப்படும் செய்தியாதலின், அவற்றைப் பற்றியே விளக்கி ஏனையவற்றின் வரிவடிவினைத் 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்பதனால் அறிவித்தற்கண் குற்றம் இன்மை அறிக. இது நன்னூல் நூற்பா ஆதலின், இதற்கு முனிவர் உரைத்த உரையும் நோக்கித் தெளிக. இங்ஙனம் முனிவர் வலிந்து கூறும் செய்தியே பெரும்பான்மையும் இச்சூறாவளிக்கண் காணப்படுமாறும் ஆட்டாண்டுக் காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.'
தொல். 15

'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.' 16

'உட்பெறு புள்ளி உருவா கும்மே.' 14

'மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்.' 104

'குற்றிய லுகரமும் அற்றென மொழிப.' 105

'எகர ஒகரமெய் யிற்புள்ளி மேவும்......' வீ. 3

'ஏதமிலா எஒமெய் புள்ளி பெறும்என்ப......' நே. 9
முழுதும் நன். 98

'நீட்டல் சுழித்தல் குறில்மெய்க்கு இருபுள்ளி.'
தொ. வி. 12

(எகர ஒகரங்களுக்கு எ ஒ என்ற நீண்ட புள்ளி, மெய்க்கு க் என்ற சுழித்த புள்ளி இடுக.)

'குற்றியல் இகரமும் குற்றியல் உகரமும்
மற்றவை தாமே புள்ளி பெறுமே' சங்கயாப்பு.

'மெய்ஈறு எல்லாம் புள்ளியொடு நிலையல்.'
மு. வீ. எ. 40

'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.' 41

'குற்றிய லுகரமும் அற்றென மொழிப.' 41

எழுத்துக்களின் அளவு

25. நெடில்இரண்டு ஐஔக் குறுக்கம் குறில்ஒன்று
ஆய்தம் ஒற்று இஉக் குறுமை அரைகுறள்
மஃகான் கால்யாத் திரைபெறும் அதுதான்
கண்ணிமை நொடிஎன நுண்ணியோர் உரைப்ப.

இது நிறுத்த முறையானே எழுத்துக்களது மாத்திரையும் மாத்திரைக்கு அளவும் கூறுகின்றது.

இ-ள் : நெட்டெழுத்துக்கள் ஒரோஒன்று இரண்டு மாத்திரையும், ஐகார ஔகாரக் குறுக்கங்களும் குற்றெழுத்துக்களும் ஒரோ ஒன்று ஒரு மாத்திரையும், ஆய்தமும் ஒற்றுக்களும் குற்றிகரக் குற்றுகரங்களும் ஒரோ ஒன்று அரை மாத்திரையும், மகரக் குறுக்கம் கால் மாத்திரையும் பெற்று ஒலிக்கும்; அம்மாத்திரைக்கு அளவுதான் கண்ணிமை எனவும், கைந்நொடி எனவும் நுண்ணிதாக நூல் இலக்கணத்தை உணர்ந்த ஆசிரியர் கூறுவர் என்றவாறு.

நெடிற்கும் குறிக்கும் ஒற்றிற்கும் மாத்திரை கூறவே, அவை கூடி ஒலிக்கும் உயிர் அளபெடை மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையும், ஒற்றுஅளபெடை ஒரு மாத்திரையும், ஏறிய உயிரின் அளவே உயிர்மெய்க்கும் அளவு எனக் கூறலின், அவை ஒரு மாத்திரையும் இரு மாத்திரையும் பெறும் என்பதூஉம் பெற்றாம்.

வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம் வல்லெழுத்து வருவழித் தன் அரை மாத்திரையின் குறுகும் எனக் கோடலின், அது கால் மாத்திரை பெறுதல் உரையிற் கொள்க.

கண்ணிமை, கைந்நொடி என்னும் பல பொருள் ஒரு சொற்கள் ஈண்டுத் தொழில் மேலும் ஓசை மேலும் முறையே நின்றன. தன் குறிப்பின்றி நிகழ்தலின் இமை முற்கூறப்பட்டது. எண்ணி அளத்தல், எடுத்து அளத்தல், முகந்து அளத்தல், பெய்து அளத்தல், நீட்டி அளத்தல், சார்த்தி அளத்தல், தெறித்து அளத்தல் என்னும் ஏழு வகை அளவையுள் இது சார்த்தி அளத்தல்.

கண்ணிமைக்கும் நொடிக்கும் அளவு ஆராயின் அது வரம்பு இன்றி ஓடும் எனக் கருதி. 'நுண்ணியோர் உரைப்ப, என முடிந்ததுகாட்டல் என்னும் உத்தி கூறினார்; ஆணை கூறலும் ஆம். எனவே, எழுத்திற்கே அளவுகூறி. 'நாலு உழக்குக் கொண்டது நாழி' என்றாற் போல 'இஃது இத்துணை கொண்டது மாத்திரை' என மாத்திரைக்கு அளவு கூறிற்றிலர். இயற்கை மகன் குறிப்பின் அன்றி இரண்டு இமையும் ஒரு கால் கூடி நீங்கிய காலக்கழிவும், அ எனப் பிறந்த ஓசையது தோற்றக் கேட்டுக் காலக்கழிவும் ஒக்கும். இக்கண்ணிமையினது பாகம் மெய்க்கும். அதன் பாகம், மகரக் குறுக்கிற்கும், இக்கண்ணிமை இரட்டி வருதல் நெடிற்கும், அது மூன்றும் நான்குமாய் வருதல் உயிர் அளபெடைக்கும். ஒன்று வருதல் ஒற்றளபெடைக்கும் கொள்க.

பிறவும் அன்ன. நொடித்தல் தொழிலில் பிறந்த ஓசைக்கும் இவ்வுரை கொள்க. 24

விளக்கம்: நிறுத்த முறை—இரண்டாம் நூற்பாவில் நிறுத்த முறைமை. வல்லொற்றுத் தொடர் மொழி இறுதிக் குற்றியலுகரம் கால் மாத்திரை அளவிற்று ஆதல்,

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித் தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே' தொல். 409 என்பதனால் கொள்ளப்பட்டது.

'வன்றொடர் மொழிக் குற்றியலுகரம் வல்லெழுத்து வருவழிக் கால் மாத்திரையாய்க் குறுகுதலின், அது பற்றி அதனைக் குற்றியலுகரத்தின் வேறு எனனார்'—சூத்திரவிருத்தி.

'இக்குளத்தைப் பெருக்கு. இவ்வாற்றுப்பெருக்கு நேற்று வந்தது, இவ்வாற்றுப்பெருக்குக் கடல் போன்றது என முறையே குகர உயிர்மெய்யானது ஒன்று அரை கால் மாத்திரையாகியும்' இலக். கொத்து 102 ஆம் நூற்பாஉரை, குற்றியலுகரம் புணர்மொழிக்கண் படின் குறுகிக் கால் மாத்திரை பெறுதல் 'உரையிற் கோடல்' என்பதனால் கொள்க — நன், 99 ஆம் நூற்பா விருத்தியுரை.

குற்றியலுகரம் கால் மாத்திரை உடையதாதலை நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் 408 ஆம் நூற்பா உரையில் குறித்துள்ளார்.

நன்னூலார் போல் அன்றித் தமிழ் மரபு பற்றி நெடிலும் குறிலும் கூடியே உயிர் அளபெடை அமையும் என்றார் ஆதலின், அதற்கு நூற்பாவில் மாத்திரை கூற வில்லை. இரண்டு முதலிய எழுத்துக்களான் ஆகிய உயிர் அளபெடைக்கும் ஒற்றளபெடைக்கும் உரையிலேயே மாத்திரை கூறியுள்ளார்.

கண்ணிமை—இமை என்னும் உறுப்பைக் குறியாது இமைத்தல் தொழிலைக் குறித்துப் பின் அதற்கு ஆகும் நேரத்தைக் குறித்தது. நொடி என்பது நொடித்தல் தொழிலைக் குறியாது. அதன் ஓசையைக் குறித்து அதற்கு ஆகும் நேரத்தைக் குறித்தது.

எண்ணி அளத்தல் —ஒன்று இரண்டு என எண்ணி அளத்தல்.

எடுத்து அளத்தல் —பலம் முதலியவாக நிறுத்து அளத்தல்.

முகந்து அளத்தல் —நெல் முதலியவற்றைப் படி முதலியவற்றான் தேங்க முகந்து அளத்தல்.

நீட்டி அளத்தல் —துணி முதலியவற்றை முழம் முதலிய கோல்களால் நீட்டி அளத்தல்.

பெய்து அளத்தல் —எண்ணெய்முதலியவற்றைக் குவளைகளில் பெய்து அளத்தல்.

சார்த்தி அளத்தல் —ஒன்றன் அளவைப் பிறிது ஒன்றன் அளவோடு ஒப்பிட்டு அளத்தல். அஃது எழுத்தின்ஒலியை மாத்திரை என்ற அளவொடும் அதன் அளவைக் கண்ணிமை நொடியொடும் பொருத்தி அளத்தல் போல்வது.

தெறித்து அளத்தல் —வீணை முதலியவற்றின் ஓசையை நரம்புகளைத் தட்டி அளத்தல்.

முடிந்தது காட்டல் —முன்னோர் முடிவு செய்த கருத்தைக் குறிப்பிட்டு விளக்குதல்.

ஆணை கூறல் —நூலாசிரியரின் தன் கருத்தே கொள்ளப்படல் வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறுதல்.

நாழி என்பதன் அளவு நாலு உழக்கு என்று கூறுவதே வழக்கு. உழக்குக்கு அளவு எல்லோரானும் அறியப்படும் என்ற கருத்தான் அதற்கு அளவு கூறுவதே இல்லை. அதுபோல, எழுத்திற்கு மாத்திரை என்ற அளவு கூறி, அவ்வளவின் நேரத்தைக் கண்ணிமை கைந்நொடிப் பொழுதொடு சார்த்திக் கூறினாரேயன்றி, இவ்வளவு என்று வரையறுத்துக் கூறினாற் அல்லர். அஃது எல்லோருக்கும் புலனாவது ஒன்று ஆகலான்.

இச்சூத்திரத்துள் ஆசிரியர் கூறியுள்ள உரையின் கடை இரண்டு பத்திகளும் 'கண்ணிமை நொடி என' என்ற தொல்காப்பிய 7-ஆம் நூற்பாவிற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இருவரும் உரைத்த உரையை உட்கொண்டு சொற்றனவாகும்.

ஒத்த நூற்பாக்கள் :

'கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே.'
தொல். 7

'ஓர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப.' 3

'ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப.' 4

'மெய்யின் அளபே அரைஎன மொழிப.' 11

'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே'' 12

'அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை.' 13

'ஓரளபு ஆகும் இடனுமார் உண்டே
தேருங் காலை மொழிவயி னான.' 57

'மூவளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்றே.' 5

'நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.' 6

'மெய்யோடு இயையினும் உயிர்இயல் திரியா.' 10

'குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல' 50

'அளபு இறந்து உயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்.' 33

'குற்றெழுத்து ஒன்றுஒன் றரை ஆகும் ஐஔ
இரண்டுநெடில்
ஒற்றெழுத்து ஆய்தம் இஉ அரை மூன்றுஅளவு
ஓங்குயிர்மெய்
மற்றெழுத் தன்றுஉயிர் மாத்திரை யேபெறும்...'
வீ. 5

'குறில்நெடில்கள் ஒன்றிரண்டு மூன்றுஅளவு காலம்
குறுகு ம ஆய்தம் உயிர்மெய்—பெறும்உயிரே
மெய் ஆய்தம் இஉகுறுக்கம்அரை மென்மொழியாய்
ஐஔ ளபுஒன் றரை. நே. 5

'இயல்புஎழும் மாந்தர் இமைநொடி மாத்திரை.'
நன். 100

'மூன்றுஉயி ரளபுஇரண் டாம்நெடில் ஒன்றே
குறிலொடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு
அரைஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை.' நன். 99

'ஆவியும் ஒற்றும் அளபுஇறந்து உயிர்த்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்.' 101

'கண்ணிமை நைந்நொடி காட்டும்மாத் திரையில்
அஃகிய மவ்வும் ஆய்தமும் காலே
உஇக் குறள்ஒற்று ஆய்தம் அரையே
குறிலேஐ ஔக்குறள் ஒற்றளபு ஒன்றே
நெடில்இரண்டு உயிரளபு ஒருமூன்று என்ப.'
தொ. வி. 19

'இயல்புஎழு மாந்தர் இமைநொடி மாத்திரை.'
மூ. வீ எ. 96

'மட்டுஅள வொடுமிதம் வரைமாத் திரையே.' 97

'உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கம் முக்கால் விடுத்தல் ஒன்றே.' 98

'ஒன்றே குறில்நெடில் இரண்டுஅளபு ஆகும்.' 99

'ஐஔக் குறுக்கம்ஒற் றளபெடை ஒன்றே' 100

'அஃகிய இஉ ஆய்தம்மெய் அரையே.' 101

'அஃகிய மகரமும் ஆயுங் காலே.' 102

'ஓரெழுத்து ஒருமூன்று ஒலிப்பது இன்றே.' 103

'அளபெடை மூன்றன்மேல் ஆம்என மொழிப' 104

'விற்கை புலம்புஇசை விளியினும் வருமே. 105

அளவுக்குப் புறனடை

25. ஆவியும் ஒற்றும் அளவுஇறந்து இசைத்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்.

இஃது எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையின் மிக்கு இசைக்கவும் பெறும் என்பதூஉம், அங்ஙனம் மிக்கு இசைக்கும் இடன் இவை என்பதூஉம் கூறுகின்றது.

இ-ள் : உயிரும் ஒற்றும் என்னும் இரு கூற்று எழுத்தும் தமக்குச் சொல்லிய மாத்திரைகளைக் கடந்து

ஒலித்தலையும் பொருந்தும்; அங்ஙனம் பொருந்தி இசைத்தல். இசையும் விளியும் பண்டமாற்றும் முதலிய வற்றின் கண்ணாம் என்றவாறு.

'ஆதி' என்றதனால் நாவலும் முறையீடும் புலம்பும் குறிப்பிசை முதலியனவும் கொள்க. நாவல்—உழவர் நெல்லரி தொழுவரை விளித்தல். அது

'காவல் உழவர் களத்தகத்துப் போரேறி
நாவலோஓ என்றழைக்கும் நாளோதை—
மாவலவன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு'

—இதனால் அறிக.

கஃஃஃறென்னும் கல்லதர் அத்தம்
சுஃஃஃறென்னும் தண்தோட்டுப் பெண்ணை

என்றாற்போல்வன குறிப்பிசை, பிறவும் வந்துழிக் காண்க.

உயிர் பன்னிரண்டு மாத்திரையும் ஒற்றுப் பதி னொரு மாத்திரையும் நீளும் என்பர் இசை நூலார். அது வந்துழிக் காண்க.

விளக்கம்: நாவல்-நெற்போர் தெழிக்கும் பகட்டி னங்களைத் துரப்பதொரு சொல் என்பது நன்னூல்(101) விருத்தியுரை

குறிப்பிசை —நிறத்தையும் ஓசையையும் குறிப்பால் உணர்த்தும் சொல்

கஃஃஃறென்னும் —கருமை நிறத்தைக் காட்டும்.

சுஃஃஃறென்னும் —பனை ஓலையிடையே காற்று வீசுங்கால் ஏற்படும் ஒலியைச் சுட்டும்.

'உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலை யான.' தொல். 40

இதற்கு, நிறத்தின்கண்ணும் ஓசையின்கண்ணும் சிறுபான்மை ஆய்தம் தோன்றும் பொருள் குறித்தனவல உடைய சொல்லும், அவை ஒழிந்த எல்லா மொழிகளும் ஒற்றெழுத்துக்கள் போல அரை மாத்திரையின் சிறிது மிக்கு நடந்து ஆய்தம் சுருங்காத இடத்தான் சொற்களாம்' என்று உரை கூறி, 'கஃஃறென்னும் கல் அதர் அத்தம்', 'சுஃஃஃறென்னும் தண் தோட்டுப் பெண்ணை' என்று எடுத்துக் காட்டினார் நச்சினார்க்கினியர்.

இந்நூலாசிரியர் அவற்றின் ஓசையை இன்னும் நீட்டிக் கூறுகிறார்.

" 'ஆதி' என்றதனால், நாவலும் முறையீடும் புலம்பலும் குறிப்பிசை முதலாயினவும் கொள்க. 'கஃறென்னும் கல் அதர் அத்தம்' என்பது குறிப்பிசை. ஏனைய வந்துழிக் காண்க. உயிர் பன்னிரண்டு மாத்திரையும் ஒற்றுப் பதினொரு மாத்திரையும் நீளும் என்றார் கந்தருவநூலுடையார். அவை வந்தவழிக் காண்க. நாவல்—போர்க்கு அழைத்தல்" என்றார் மயிலைநாதர்.
நன். 100

இது 'பிறன்நூல் முடிந்தது தான் உடன்படுதல்' என்னும் உத்தி என்பது நன்னூல் விருத்தியுரை.
நன். 100

ஒத்த நூற்பாக்கள் ;

'அளபு இறந்து உயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும்
உளஎன மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்.' தொல். 33

முழுதும் நன். 100

'விற்கை புலம்புஇசை விளியினும் மிகுமே.'

தொல். எழு. விளி. 105

முதல் நிலை—பொது விதி

26. பன்னீர் உயிரும் கதந பமஎனும்
ஆவைந்து எழுத்தொடு சவஞய உளப்பட
அவ்வொன் பானுயிர் மெய்யும் மொழிமுதல்.

இது நிறுத்த முறையானே மொழிக்கு முதல் நிற்கும் எழுத்துக்கள் இவை எனப் பொதுவகையான் கூறுகின்றது.

இ-ள் : பன்னிரண்டு உயிர் எழுத்தும், கதநபம என்று கூறப்படும் ஐந்து எழுத்தொடு சவஞய என்னும் நான்கு எழுத்தும் கூட அவ்வொன்பதாகிய உயிரொடு கூடிய மெய்யும் ஆகிய இருபத்தோரெழுத்தும் மொழிக்கு முதலாவனவாம் என்றவாறு.

ஈண்டு உயிர்மெய் என்றது வேற்றுமை நயம் கருதிற்று. மேல், இவற்றுள் சிலவற்றைப் பிரித்து இவ்வொற்று இவ்வுயிரொடு கூடி முதலாம் என்றலின், ஐந்தும் நான்கும் ஆகப் பிரித்துக் கூட்டியதூஉம் முறை பிறழவைத்ததூஉம் பொதுவகையான் எல்லா உயிரொடும் சிறப்பு வகையான் சில உயிரொடும் கூடி முதலாதல் நோக்கி என்க.

எ-டு : அடை ஆடை இலை ஈயம் உரல் ஊர்தி எழு ஏணி ஐவனம் ஒளி ஒக்கம் ஔவியம் எனவும்,

கலை காரி கிளி கீரி குடி கூடு கெண்டை கேழல் கைதை கொண்டல் கோதை கௌவை எனவும்,

தந்தை தாடி தித்தி தீமை துணி தூணி தெற்றி தேள் தையல் தொண்டை தோடு தௌவை எனவும்,

60. நந்து நாரை நிலம் நீந்து நுகம் நூல் நெய்தல் நெர்ச்சி நைவளம் நொச்சி நோக்கம் நௌவி எனவும்,

படை பரிதி பிடி பீடு புகழ் பூமி பெட்டை பேடை பைதல் பொன் போதகம் பௌவம் எனவும்,

மடி மாலை மிடறு மீளி முலை மூப்பு மெலிவு மேனி மையல் மொழி மோத்தை மௌவல் எனவும் வரும்.

இவை பொதுவகையான் போந்தன. ஏனைய மேல் கூறுப. 26

விளக்கம்: நிறுத்தமுறை—இரண்டாம் நூற்பாவில் நிறுத்தமுறை. மெய் எழுத்துத் தமிழ்மொழிக்கண் முதலாக வாராது ஆதலின், உயிர் மெய்களே கொள்ளப்படும்.

வேற்றுமை நயம்—உயிர் மெய்யை மெய்யாகவும் உயிராகவும் பிரித்துக்கொண்டு விளக்குவது. ஈண்டுக் கூறிய உயிர்மெய்முதலை மெய் முதல் என்பது வேற்றுமை நயம்.

க த ந ப ம என்பன பன்னிரண்டு உயிரொடும் கூடி மொழிக்கு முதலில் வரும். சகரம் பத்து உயிரொடும், வகரம் எட்டு உயிரொடும், ஞகரம் மூன்று உயிரொடும். யகரம் ஆ என்ற ஓர் உயிரொடும் கூடி மொழிக்கு முதலெழுத்தாக வரும் என்பதனை இந்நூற்பாவில் குறிப்பிட்டு, இதன் விளக்கத்தை அடுத்த நூற்பாவில் வரைவர.

ஐவனம்—நெல் வகை; கேழல்—பன்றி! கைதை—தாழை; கௌவை — ஆரவாரம்; தித்தி — படப்புள்ளி; தூணி—இருபதக்குக் கொண்ட முகத்தல் அளவு; தெற்றி திண்ணை; தௌவை—தமக்கை; நைவளம்—ஒருவகைப் பண்; நௌவி –மான்: பைதல்—துன்பம்; போதகம்—ஆண் யானை; பௌவம்—வெள்ளம்; மோத்தை—ஆண் ஆடு; மௌவல் – முல்லை என்று பொருள் கொள்க.

ஒத்த நூற்பாக்கள்:

'பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்.' தொல். 59

'உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா.' 60

'கதந பமஎனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடும் சொல்லுமார் முதலே.' 61

'ஆவி அனைத்தும் கசதநப மவ்வரியும் ...,' வீ.7

'செந்தமிட் சொல்லின் மொழிமுதல்......
காட்டும் உயிரும் கசதநப மவ்வரியும்
.........நன்மொழிக்கு முன்.' நே 7

'பன்னீர் உயிரும் கசதந பமவய
ஞஙஈ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்.' நன்.102

'உயிர்கச தபஞந மவய முதற்கே.' தொ.வி.10

'முந்நான்கு உயிரும் மொழிமுதல் ஆகும்.'
மு.வீ.எ. 60

'பன்னீர் உயிரொடும் கசதநப் மவ்வரும்.' 61

முதல் நிலை - சிறப்பு விதி.

27 ஐஔ அலவொடு சகாரமும் உஊ
ஒஓ அலவொடு வகாரமும் ஆஎ
ஒவ்வொடு ஞகாரமும் ஆவொடு யகாரமும்
முதலும் என்மனார் முறைஉணர்ந் தோரே.

இஃது அவற்றுள் சிலவற்றிற்கு வரையறுத்து எய்துவிக்கின்றது.

இ-ள்: ஐகார ஔகாரங்கள் ஒழிந்து நின்ற பத்து உயிரொடும் கூடிச் சகரமும், உகர ஊகார ஒகர ஓகாரங்கள் ஒழிந்து நின்ற எட்டு உயிரொடும் கூடி வகரமும், ஆகார எகர ஒகரங்களொடு கூடி ஞகரமும், ஆகாரத்தொடு கூடி யகரமும் மொழிக்கு முதலாம் என்று கூறுவர் இலக்கணங்களை அறிந்தோர் என்றவாறு.

எ-டு : சட்டி சாந்து சினம் சீற்றம் சுரும்பு சூரல் செக்கு சேவல் சொல் சோறு எனவும்,

வளை வாளி வினை வீடு வெள்ளி வேர்வை வையம் வௌவுதல் எனவும்,

ஞாலம் ஞெண்டு ஞொள்கிற்று எனவும்,

யானை எனவும் வரும்:

சையம் செள்ரியம் எனவும்,

யவனர் யுத்தி யூபம் யோகம் யௌவனம் எனவும்,

'ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பின்' எனவும்,

ஞழியிற்று எனவும் இலக்கினவும் வருமாலோ எனின், அவை முறையானே ஆரியச் சிதைவு எனவும், திசைச் சொல் எனவும், இழிவழக்கு எனவும் மறுக்க.

இவற்றான், மொழிக்கு முதலாம் எழுத்துக்கள் பொதுவும் சிறப்பும் ஆம் இருவகையானும் தொண்ணூற்று நான்காம் என்று அறிக.

'சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே' நன். 106

என்றாரும் உளராலோ எனின், முதலாவன இவை ஈறு ஆவன இவை என ஈண்டுக் கருவி செய்தது, மேல், நிலைமொழி ஈறு வருமொழி முதலொடு இயையப் புணர்க்கும் பொருட்டு அன்றே? அவ்வாறு புணர்தற்கு இயைபு இல்லாத ஙகரமும், அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் யாங்ஙனம் எங்ஙனம் என இவ்வாறு மொழிக்கு முதலாம் என்றல் பயனில் கூற்றாம் என மறுக்க. அன்றியும், அங்கு ஆங்கு யாண்டு யாண்டையது அன்ன என்ன என்றாற்போல, இவ்வொற்றுக்களும் மொழிக்கு முதலாம் என்னல் வேண்டுதலின், அவர்க்கு அது கருத்து அன்று என்க,

விளக்கம் : மேல் பொதுவகையான் சிற்சில உயிர்களொடு கூடி உயிர்மெய்யாய் மொழிக்கு முதலாம் என்ற மெய்யெழுத்துக்களுள் சில பல உயிர்களொடு கூடி மொழிக்கு முதலாகும் என்பதை விளக்குகின்றது இந் நூற்பா.

எழுத்துப்படலத்துள் கூறப்படுவன கருவியும் செய்கையுமே. செய்கையாவது புணர்ச்சி. கருவியாவன அப்புணர்ச்சிக்குப் பயன்படும் கருவிகள். எனவே, கருவிகள் பற்றிய செய்திகள் யாவும் செய்கைக்குப் பயன்படுவனவாய் இருத்தல் வேண்டும். புணர்ச்சியாவது நிலைமொழியது ஈற்றெழுத்து வருமொழியது முதல் எழுத்தொடு கூடுவது. அதற்குப் பயன்படுமாற்றான், ஆசிரியர் முதலாவன யாவை ஈறாவன யாவை என்பன வற்றைச் சுட்டுகிறார். அவ்வை ஒட்டிய ஙகரம் 'சுட்டுயா எகர வினாவழி' முதலாகும் என்று கூறின், அச் சொற்களில் முதலெழுத்தாக வருவன சுட்டும் யாவும் எகரமும் ஆகிய வினா இடைச்சொற்களுமே அன்றி, ஙகரம் அன்று. ஙனம் என்பது தனிச்சொல்லாய் இருப்பின், ஙகரம் மொழி முதலாம் எனல் அமையும். அதனை விடுத்துச் சுட்டு யாவினா எகரவினா இவற்றை மொழி முதலாகக் கொண்டாற்போல இயைந்த அங்ஙனம் முதலியவற்றைக் கூறுதல் புணர்ச்சிக்குப பயன் தருவது அன்று. இவற்றை இரு சொல்லாகக் கொண்டு சுட்டு யாஎகர வினாக்களைப் பிரித்துக் கொள்வது அங்கு ஆங்கு யாங்கு முதலியவற்றிலுள்ள சுட்டு வினாக்களைப் பிரித்து, ஙகரமெய் மொழிக்கு முதலில் வரும் என்று கூறுவது போல்வதாம். சையம் முதல் சௌரியம் ஈறாக உள்ளன வடசொல்; ஞமலி (நாய்) திசைச்சொல்; (ஞமியிற்று—இழிசொல் (நழு விற்று என்பதன் மரூஉ.) பொதுவாகச் சொல்லுதல்— கசதநபமவயஞ என்ற மெய்கள் உயிரொடு சேர்ந்து முதலாம் என்பது.

சிறப்பாகச் சொல்லுதல் — இவை இன்ன இன்ன உயிர்களோடு சேர்ந்து மொழி முதலாம் என்பது.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்.

உயிர்	...	12
உயிர்மெய்—க்த்ந்ப்ம் × 12 உயிர்கள்	...	60
ச் × ஐ ஔ நீங்கிய 10 உயிர்கள்	...	10
வ் × உ ஊ ஒ ஓ நீங்கிய 8 உயிர்கள்	...	8
ஞ் × அ எ ஒ என்ற உயிர்கள்	...	3
ய் × ஆ	...	1
		94

தொல்காப்பியம்		நன்னூல்		வீரசோழியம்	நேமிநாதம்	முத்துவீரியம்
உயிர்	12	உயிர்	12	12	12	12
க்த்ந்ப்ம் × 12	60	க்ச்த்ந்ப்ம் × 12	72	72	72	72
ச் × 9	9	வ் × 8	8	8	8	8
வ் × 8	8	ய் × 6	6	6	6	6
ஞ் × 3	3	ஞ் × 4	4	4	3	4
ய் × 1	1	ங் × 1	1	—	—	—
குற்றியலுகரம்	1					
	94		103	102	98	102

எனவே, உயிரும் உயிர்மெய்யுமாக மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் இந்நூலார், தொல்காப்பியனார், வீரசோழிய நூலார், நேமிநாத நூலார், நன்னூலார், முத்துவீரிய நூலார் ஆகியவர் கருத்துப்படி 94, 94, 102, 98, 103 102 என்ற செய்தி பெறப்படும். இலக்கண விளக்கப்பாட்டியலுடையார் கூறும் வரையறை பற்றிப் பாட்டியலில் விரித்துக் காண்போம்.

இலக்கண விளக்கச் சூறாவளி

முதலாவன இவை ஈறாவன இவை என ஈண்டுக் கருவி செய்வது, மேல் நிலைமொழியீறு வருமொழி முதலோடு இயையப் புணர்க்கும் பொருட்டு அன்றே எனத் தாமும் கூறினார். புணர்ச்சிக்கண் படும் செய்கை எல்லா மொழிக்குப் பொதுவாகக் கூறியது அன்றித் தமிழ்மொழி மாத்திரைக்கு அன்றாய் அன்றே. அதற்கு ஏற்ப, ஈண்டு நால்வகை மொழிக்கும் பொதுவாகக் கருவி செய்யாது தமிழ்மொழி மாத்திரைக்கே கருவி செய்யின், புணர்ச்சிக்கண்படுஞ் செய்கையும் தமிழ்மொழி மாத்திரைக்கே விதித்தல் வேண்டும். அவ்வாறன்றிப் பிரமகோட்டம் பிரமக்கோட்டம் வாசுதேவகோட்டம் வாசுதேவக்கோட்டம் என்றாற்போலப் பிறாண்டும் வடமொழி உதாரணங்களும் எடுத்துக் காட்டி, இடை உரி போல வடமொழிக்கும் செய்கை இயப்பி, அவ்வியப்பிய கொளாதவற்றிற்கு,

> 'இடைஉரி வடசொலின் இயப்பிய கொளாதவும்'
> இ. வி. 147

என்னும் சூத்திரத்தால் புறனடையும் தாமுங் கூறுதலானும்,

> 'திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன. தொல். 86

என்னும் சூத்திரத்தான் ஆசிரியர் தொல்காப்பியனார் வடமொழிப் புணர்ச்சியே எடுத்து ஓதுதலானும், அதற்கு

ஏற்ப ஈண்டு எல்லா மொழிப் புணர்ச்சிக்கும் கருவி செய்யாது தமிழ் மொழிப்புணர்ச்சி மாத்திரைக்கே கருவி செய்தல் குன்றக் கூறல் என்னும் குற்றமாம் என்க. அல்லதூஉம்,

'தம்பொறிக ளால்யவனர் தாட்படுத்த பொறியே
சிந். 103

எனவும்,

'பலர்கொல், யூப நட்ட வியன்களம் பலகொல்'
புறம். 15-21

எனவும்,

'ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பு' பெரும்பாண்.132 எனவும், பிறாண்டும் சான்றோர் எல்லாம் இவற்றை மொழிக்கு முதலாக எடுத்து நிலைமொழி வருமொழி யாகப் புணர்ந்து, இவ்வாறு மொழிக்கு முதலாகாத ஆரியச் சொற்களை அரத்தம், இரதி, உலோபம் என மொழிக்கு முதலாம் எழுத்துக்களொடு கூட்டிக் கூறுதலின். அதற்கு ஏற்ப இவ்வெழுத்துக்கள் மொழிக்கு முதலாம், இவ்வெழுத்துக்கள் மொழிக்கு முதலாகா என எல்லாமொழிக்கும் பொதுப்பட வரைந்து ஓதாவிடின், ஆரியச் சொற்கள் ரத்தம் ரதி என்றாற்போல வேண்டிய வாறே மொழிக்கு முதலாக எடுத்து நிலைமொழி வரு மொழியாகப் புணர்க்கப்பட்டு வழுவாம் என்னும் கருத் தானும், நன்னூலார் எல்லா மொழிக்கும் பொதுவாக மொழிக்கு முதலாம் எழுத்துக்கள் இவை, ஆகா எழுத்துக்கள் இவை என வரைந்து கருவி செய்தார். இவர் இவ்வியல்பு உணராமையின், தமக்கு வேண்டிய வாறே கூறினார்.

'அஜஐ ஔஎனும் மூன்றலங் கடை' தொல். 62 என்பது முதலாக இவ்வெழுத்துக்களை மொழிக்கு

முதலாகா என ஆசிரியர் தொல்காப்பியனார் விலக்கினமையின், இவ்வடமொழிகளும திசைச்சொற்களும் அக்காலத்து இவ்வாறு தமிழின்கண் பயின்று வாராமை பெறுதும்.

ஙனம் என்னும் பலபொருள் ஒருசொல் தனித்து வருதல் இன்றி ய ர ழ க்களின்வழிச் சார்ந்துவரும் ஆதலின், தொல்காப்பியனார் 'முதலாகு எழுத்தும் ஙகரமொடு தோன்றும்' தொல். 29 என்றார். அவ்வழக்கு இக்காலத்து வீழ்ந்தமையின் இக்காலத்துப் புதியன புணர்த்தலான் வழங்குதற்கு ஏற்ப, நன்னூலார் 'சுட்டுயா எகர வினாவழி' நன், 106 என்றார். இவர் அக்கருத்து அறியாது தோன்றியவாறே குற்றம் கூறினார். அங்ஙனம் இங்ஙனம் எனச் சார்ந்து வருவனவற்றிற்கு ஆங்கு இங்கு என்றாற்போல்வனவற்றை எடுத்துக்காட்டி மறுத்தல் பொருந்தாமை அறிக.

அமைதி

தமிழ் மரபுக்கு மாறாக மொழிமுதல் எழுத்துப் பெற்று வரும வட சொற்களை விதந்து கூறுவதால் தமிழில் புணர்ச்சிக்குப் பெரும்பயன் இன்மையானும். அவை சிறுபான்மைய ஆதலின் தமிழ் வழக்கொடு மாறுபட்டு வருவனவற்றைப் புறனடையாற் கோடலே சாலும் ஆகலானும். பிரமன் வாசுதேவன் முதலியன தமிழ் மரபை ஒட்டி முதல் ஈறு உடையனவாக ஆக்கப்பட்டு வடசொல் ஆகிய ஆரியச்சொல் ஆகலானும், அவற்றை நிலைமொழியாக வைத்துப் புணர்த்தல் தமிழ் மரபிற்கு ஏற்றதேயாம் ஆகலானும், நூலும் உரையும் தாமே வரைந்த இவர் நூற்பாக்கள் வாயிலாக விளக்காத செய்திகளுள் தேவைப்பட்டனவற்றையெல்லாம் உரையில் விளக்கிக் கூறும் இயல்பினர் ஆகலானும், அருகியே தமிழில் வழங்குவனவாகிய பிறமொழிச் சொற்களையும்உட்கொண்டு அவற்றுக்கும

தமிழ் மரபிற்கு முரணி மொழிமுதற்கண் வரும் எழுத்துக்கள் உடையனவற்றை விரித்தல் வெற்றெனத்தொடுத்தலாகவும் மற்றொன்று விரித்தலாகவும் பலரானும் கொள்ளப்படும் ஆகலானும், திங்கள் நாள் பற்றிய சொற்கள் தமிழ் மரபினை ஒட்டியே அமைந்துள்ளன ஆகலானும், தொல்காப்பியனார் தம்காலத்தில் அருகித் தமிழில் வழங்கிய வடசொற்களை உட்கொண்டு மொழி முதற்கண் வரும் எழுத்துக்களை கூறாது வடமொழி பற்றிய செய்திகளை 'வடசொற் கிளவி' தொல். சொல். 401 'சிதைந்தன வரினும்' தொல். சொல். 402 என்ற எச்ச இயல் நூற்பாக்கள் கொண்டே விளக்கிச் செல்கின்றார் ஆகலானும். இவரும் அவர் மதம் பற்றி வடசொற்பற்றிய செய்திகளை 'இடைஉரி வடசொலின்' இ. வி. 175 என்ற புணரியல் புறனடை நூற்பாவுள்ளும், 'பொது எழுத்தானும்' இ. வி. 147 எனற பெயரியல் நூற்பாவுள்ளும் குறிப்பிட்டுள்ளார் ஆதலானும் முனிவரது கூற்றுப் பொருந்தாமை பெற்றாம். நன்னூலார் வடமொழியாக்கம் பற்றிக் கூறிய இலக்கணம் நிரம்பா இலக்கணம் என்பதனையும் இவர் பெயரியலில் சுட்டியுள்ளார்.

மேலும், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலேயே பண்பாடுபெற்ற தமிழ் மக்கள் கல்லைக் குடைந்தும் குழித்தும் குடமும் குழிசியும் ஆக்கிப் பயன்படுத்தியவர்கள். அவர்கள் பின்னர்ச் சுடுமண்ணால் வனையப்பட்டவற்றிற்கும் உருவ ஒப்புமைகொண்டு குடம் குழிசி என்ற பெயர்களையே வழங்கியமைகொண்டு, தொல்காப்பியனார் சட்டி முதலாகிய சொற்கள் தம்காலத்து இன்மையால் சகரம் மொழிக்கு முதலாகாது என்று கூறிய செய்தி, தம்காலத்திற்கு ஏலாது என்று கொண்டு இவ்வாசிரியர் சகரம் மொழிக்கு முதலாம் என்று கூறியதும் காண்க. தொல்காப்பியனார் காலத்தில் ஆங்கனம், ஈங்கனம், ஊங்கனம், யாங்கனம் என்ற சொற்களே இருந்தன.

'ஆங்கனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பகருங் காலை'

தொல். செய், 51

'யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்'

புறம். 7

'ஆங்கனம் புணர்ந்த கிழவோன் தன்வயின்
பாங்க னோரின் குறிதலைப் பெய்தலும்' இறை. 3

என்ற மேற்கோள்களும் காண்க. பிற்காலத்தில் அவை ஆங்ஙனம் ஈங்ஙனம் ஊங்ஙனம் யாங்ஙனம் எனமருவி வழங்கிப் பின் அவையும் மருவி அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் எங்ஙனம் என்றாயின. அவற்றின் அடிப்படைச் சொல் தன்மை என்ற பொருள் தரும் தனம் என்பதன் திரிபாகிய கனம் என்பது. இதனை உட்கொள்ளாது நன்னூலார் ஙனம் என்பதே சொல் எனவும் அது 'சுட்டுயா எகர வினாவழி' வரும் எனவும் கூறின், சுட்டினையும் வினாவினையும் அக உறுப்பாகப் பெற்று வரும் சொற்களில் அவற்றைப் பிரித்து முதலெழுத்துக் கோடல் அங்கு முதலியவற்றில் 'அ' முதலியவற்றைப் பிரித்து ஙகரத்தை முதலெழுத்தாகக்கோடலை ஒக்கும் என்றார் இவர்.

ஒத்த நூற்பாக்கள் :

'சகரக் கிழவியும் அவற்றோ ரற்றே
அஐ ஔஎனும் மூன்றலங் கடையே.' தொல்,62

'உஊ ஒஓ என்னும் நான்குயிர்
வ என் எழுத்தொடு வருதல் இல்லை.' 63

'ஆ எ
ஒ எனும் மூவுயிர் ஞகாரத்து உரிய.' 65

'ஆவொடு அல்லது யகரம் முதலாது.' 65

'குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒட்டிய நகரமிசை நகரமொடு முதலும்.' 67

'வவ்வில், ஏவிய எட்டும் யவ்வாறும் ஞந்நான்கும்
மொழிமுதல்.........' வீ. 7

'ஈட்டிய வவ்வரியின் எட்டெழுத்தும்—மீட்டு
ஞயவின்கண் மும்மூன்றும் நன்மொழிக்குமுன'
நே. 7

'உஊ ஒஓ அலவொடு வம்முதல்.' நன். 103

'அஆ உஊ ஓஔ யம்முதல்.' 104

'அஆ எஒவ்வொடு ஆகும் ஞம்முதல்.' 105

'சுட்டுயா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே.' 106

'உஊ ஒஓ அலவொடு வவ்வரும்.' மு.வீ.எ. 64

'அஆ உஊ ஓஔ வோடு
யகரம் மொழிமுதல் ஆகும் என்ப.' 63

'அஆ எஒவ்வொடு ஆகும் ஞம்முதல்.' 62

இறுதி நிலை

28. ஆவிஞண நமன யரல வழளமெய்
சாயும் உகரம்நா லாறும் ஈறே.

இது நிறுத்தமுறையானே மொழிஇறுதிக்கண் நிற்கும் எழுத்து இவை எனப் பொதுவகையான் கூறுகின்றது.

இ-ள்: பன்னிரண்டு உயிரும், ஞணநமன யரல வழள என்னும் பதினோர் ஒற்றும், குற்றியலுகரமும் ஆன இருபத்து நான்கு எழுத்தும் மொழிக்கு ஈறாவன வாம் என்றவாறு.

ஙகரம் ஈற்று வையாது மகரத்தொடு வைத்தது வழக்குப் பயிற்சியும் மயக்க இயையும் நோக்கி என்க. குற்றுகரத்தை வேறு எடுத்து ஓதினார், புணர்ச்சி வேறு பாட்டான். 28

விளக்கம்: நிறுத்தமுறை இரண்டாம் நூற்பாவில் வைத்தமுறை.

வழக்குப் பயிற்சியும் மயக்க இயைபும் நோக்கி என்றது, தமிழில் மகர ஈற்றுச்சொற்கள் பலவாக இருப்பதுபோல னகர ஈற்றுச்சொற்கள் பலவாக இருத்தலும், னகர ஈற்றுச்சொற்கள் பலவற்றில் னகரத்திற்குப் போலியாக அதே பொருளில் மகரம் வந்து அமைதலும் (முகன்-முகம்) என்பன கருதி. இதனை நச்சினார்க்கினியரும் தொல். 78ஆம் நூற்பா உரையில் குறிப்பிடுகிறார். புணர்ச்சிக்கண் முற்றியலுகரம் வருமொழி முதலில் உயிர்வரின் கெட்டுப்போகும் என்பதும் குற்றியலுகரம் தன்மேல் வருமொழி உயிர்ஏற இடங்கொடுக்கும் என்பதும் உணர்க. எனவே, குற்றியலுகரம் உயிரது குறுக்கமாய் ஒலித்துப் புணர்ச்சிக்கண் மெய்யினது நிலையைப் பெற்றிருக்கும் என்பது உணரப்படும்.

இலக்கண விளக்கச் சூறாவளி

குற்றியலுகரத்தைப் புணர்ச்சி வேறுமாட்டான் வேறுஎடுத்து ஓதியதாகக் கூறினார். அல்லுழி உயிரேயாம் என்னும் கருத்துப் போலும். அஃது ஆசிரியர் தொல்காப்பியனாருக்குக் கருத்தாயின் குற்றியலுகரப் புணரியலை உயிர் மயங்கியலைச் சாரவைப்பார். அங்ஙனம் வையாது புள்ளி மயங்கியலின் பின்னர் வைத்தது இம்மயக்கம் வாராமைப் பொருட்டு என்றே கொள்க, முதல் எழுத்திற்குப் புணர்ச்சி கூறிப் பின்னர்ச் சார்பு எழுத்திற்குப் புணர்ச்சி கூற வேண்டுதலின், அம் முறை பற்றிக் குற்றியலுகரப் புணரியலை உயிர் மயங்கியல் புள்ளிமயங்கியலின் பின்னர் வைத்தார் என முறை கூற அறியாது, நச்சினார்க்கினியர் மெய் உயிர் என்பனவற்றுள் உயிரது விகாரமாய் நின்ற குற்றியலுகரத்தை இருவழிக்கண்ணும் புணர்க்கின்றமையின்

புள்ளி மயங்கியலோடு இயைபு உடைத்தாயிற்று என்றார். உயிரினது விகாரமாயின் உயிர் மயங்கியலைச் சாரவையாது புளளி மயங்கியலைச் சாரவைத்தல் முறை அன்மையின் அது பொருந்தாது என்க. ஆய்தத்தை ஒரு நிமித்தம் பற்றி ஒற்றின்பால் படுப்பினும் பதினெட்டு ஒற்றுள் அடங்காதவாறு போலக் குற்றியலிகரக் குற்றிய லுகரங்களை ஒரு நிமித்தம் பற்றி உயிரின்பால் படுப்பினும் பன்னிரண்டு உயிருள்ளும் அடங்காது வேறேயாம் எனக் கொள்க.

அமைதி

குற்றியலுகரம், உகர உயிர் குறுகுதலான் உண்டாக்கப் பட்ட எழுத்து. ஆனால் அது மெய்போல வருமொழி முதல் உயிர் ஏற இடங்கொடுப்பது. ஆகவே,உயிரினது தன்மையும் மெய்யினது தன்மையும் கொண்ட குற்றிய லுகரத்தைப் பற்றிய புணர்ச்சியை உயிர், மெய் என்ற இரண்டன் புணர்ச்சிக்குப் பின்னும் வைத்தார் என நச்சினார்க்கினியர் உட்கொண்டகருத்தும் இவ்வாசிரியர் கருத்துமே தொல்காப்பியனாருக்கு உடன்பாடு என்பது அந்நூலை நன்கு நோக்கின் புலனாகும். ஆகவே, உகரத்திலிருந்து தோன்றிய குற்றியலுகரம் புணர்ச்சி வேறுபாடு கருதித் தனியே எடுத்து ஓதப்பட்டது என்பது அறிக.

ஒத்த நூற்பாக்கள் :

'உயிர்ஔ எஞ்சிய இறுதி ஆகும்.' தொல். 69

'ஞணநமன யரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி இறுதி.' 78

'ஈறும் மகர ணகரங்கள் தாமும் இடையினத்தில்
ஏறும் வகரம் ஒழிந்த ஐந்தும் ஈரைந்து
எழில்உயிரும்
.. ...தமிழினுக்கு ஈற்றெழுத்தாம்.' வீ. 8

'உயிரின்கண் ஒன்பா னுடன்மென்மை யின்மூன்று
அயர்வில் இடையினங்கள் ஆறு—நயனுணர்ந்து
நன்மொழிகட்கு ஈற்றெழுத்தாம்.........' நே. 8

முழுதும் நன். 107

'எஒ ஔவும் மெல்லின ஙவ்வும்
நீத்துஉயிர் ணமன இடையினம் ஈறே.' தொ.வி 10

'ஈராறு உயிரும் இறுதியாம் எனவே.' மு.வீ.எ 82

'அந்தமாம் ஞணநமன யரலவ ழளவே.' 86

சிறப்பு விதி

29 குற்றுயிர் அளபின் ஈறாம் எகரம்
மெய்யொடு ஏலாதுஒ நவ்வொடு ஆம்ஔ
ககர வகரமொடு ஆகும் என்ப.

இது மேலைச் சூத்திரத்தால் தாமே நின்று ஈறாதல் எய்தியதனை விலக்கி அளபுஎடுப்புழி ஈறாகும் என்றலின் குற்றுயிர்க்குப் பொதுவிதி மாற்றிச் சிறப்புவிதியும். 'எகரம் மெய்யொடு ஏலாது' எனவே, ஏனை உயிர்கள் தாமே நின்றும் அளபு எடுப்புழி நின்றும் ஈறாதலே அன்றி மெய்யோடும் கூடி ஈறாம் என்பதூஉம், ஒ நவ் வொடு ஆம் ஔ—ககர வகரமொடு ஆகும்' என இவற்றை விதந்து ஓதவே, விதவாதன எல்லாம் அங்ஙனம் ஈறாங்கால் தமக்கு ஏற்ற மெய்களோடு கூடி ஈறாம் என்பதூஉம் பெறப்படுதலின் எல்லா உயிர்க்கும் பொதுவிதிமேல் சிறப்புவிதியும் கூறுகின்றது.

இ-ள்; குற்றுயிர் ஐந்தும் அளபுஎடுப்புழி ஈறாம் என்றும், எகரம் மெய்யொடு கூடி ஈறாகாது என்றும், ஒகரம் நகரம் ஒன்றுடனே ஈறாம் என்றும், ஔகாரக் ககர வகரங்களோடு கூடி ஈறாம் என்றும் கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

இவற்றால் நெட்டெழுத்து ஏழும் தாமே நின்றும், குற்றெழுத்து ஐந்தும் அளபுஎடுப்புழி நின்றும் எகர ஒகர ஔகாரங்கள் ஒழித்து நின்ற ஒன்பது உயிரும் தமக்கு ஏற்ற மெய்களோடு கூடி நின்றும் ஈறாம் என்பது போந்ததேனும், உரையிற்கோடலான் ஔகாரம் தானே நின்று ஈறாகாது எனவும், ஙகரத்தொடு பன்னிரண்டு உயிரும் ஞகரத்தொடு ஏகாரமும் நகரத்தொடு உகரமும் வகரத்தொடு ஊகாரமும் கூடி ஈறாகா எனவும் தொள்க.

எ-டு : ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவும்,

ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ எனவும்,

வருக புகா வீக்கி புகீ செகு புகூ ஈங்கே மங்கை எங்கோ கௌ எனவும்,

உச உசா விசி மூசீ முசு மூசூ செச்சை சோ எனவும்,

உரிஞ உரிஞா உரிஞி உரிஞீ உரிஞு உரிஞூ மஞ்ஞை உரிஞோ எனவும்,

கட கடா மடி மடீ மடு மடூ மட்டை எனவும்,

மண்ண மண்ணா மண்ணி உணீ கணு நண்ணூ பண்ணை எனவும்,

அந்த புதா பதி வதீ அது கைதூ தந்தை அந்தோ எனவும்,

பொருந பொருநா நீ பொருநூ நை நொ நோ எனவும்,

தப துப்பா நம்பி நம்பீ தபு பூ தும்பை போ எனவும்,

கம மா அம்மி மீ செம்மு கொண்மூ யாமை வம்மோ எனவும்,

செய காயா கொய்யு ஐயை ஐயோ எனவும்,

வர தாரா பரி குரீ கரு வெரு நாரை எனவும்,

சில பலா வலி வலீ வலு கொல்லூ வல்லே கலை எனவும்,

உவ உவா செவ்வி ஒருவீ கதவு வே வை வௌ எனவும்,

தொழ விழா நாழி வழீ மழு எழூ தாழை எனவும்,

உள உள்ளா வெள்ளி குளீ உளு எள்ளு களை எனவும்,

கற்ற கற்றா உறி உறீ பறு உறூ கற்றை எற்றோ எனவும்,

கன கனா வன்னி துனீ முன்னு துன்னூ என்னே
அன்னை அன்னோ எனவும்,

உரிஞ் மண் டுபாருந் திரும் பொன் வேய் தேர் வேல்
தெவ் வீழ் வேள் எனவும்,

வரகு எனவும் வரும். பிறவும் அன்ன,

உயிரொடுகூடி மெய் முதலாம் என்றும் மெய்யொடு கூடி உயிர் ஈறாம் என்றும் வேற்றுமை நயம் பற்றிக் கூறலின், மெய்ம் முதல்மொழி என்றும், உயிர் ஈற்று மொழி என்றும் ஆவதல்லது உயிர்மெய் முதல் என்றும் உயிர்மெய் ஈறு என்றும் வழங்கப்படா என்பது தானே போதரும். போதரவே, 'மெய்யீறு எல்லாம் புள்ளி யொடு நிலையல்' தொல். 104 என்பதனான் மொழிக்கு முதலாயவை எல்லாம் புள்ளி இழந்து உயிர் ஏறி நிற்கும் என்பதூஉம், 'உயிர்மெய் ஈறும் உயிரீற்று இயற்றே' தொல். 106, என்பதூஉம் ஈண்டே பெற்றாம்.

தாமேயும் அளபுஎடுப்புழியும் மெய்யொடு கூடியும் வரும் உயிர்ஈறு நூற்று அறுபத்து மூன்றும், மெய் ஈறு பதினொன்றும். குற்றுகர ஈறு ஒன்றுமாகப் பொதுவகை

யானும் சிறப்பு வகையானும் ஈறு நூற்றுஎழுபத்தைந்தாம். அவற்றுள் உதாரணம் காணாதன இருபத்திரண்டு. அவையும் வந்துழிக் காண்க. 29

விளக்கம் : 'உஊகாரம் நவவொடு நவிலா' தொல். 74 என்ற நூற்பாவின் கருத்தை உகரம் நகரத்தொடும் ஊகாரம் வகரத்தொடும் கூடி ஈறாகா என நிரல் நிறையாகக் கோடலே ஏற்றது.

உயிர்மெய் இரண்டு எழுத்துக்கூடியது ஆதலின் அதனை மொழிமுதற்கண் ஒலி நோக்கி மெய்முதல் எனவும், இறுதிக்கண் ஒலி நோக்கி உயிர் ஈறு எனவும், இடைக்கண் உயிர்எனவும் கோடலே மரபு. இதுபற்றியே கல்வி என்ற சொல் மெய்முதல் உயிரீறு எனவும், பகடு என்ற சொல்லில் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றுகரம் எனவும் கொள்ளப்படுதல் காண்க.

எடுத்துக்காட்டுக்களில் பெரும்பாலன, மொழிக்கு ஈறாகும் எழுத்துக்களைக் குறிக்கும் நூற்பாக்களில் நச்சினார்க்கினியரால் காட்டப்பட்டனவே ஈண்டுக் கொள்ளப்பட்டுள்ளன. 'மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்' தொல். 204 எனவே, மொழிக்கு முதலாயவை எல்லாம் புள்ளி இழந்து உயிர் ஏறி நிற்கும் என்பது அந் நூற்பாவுரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிட்ட செய்தியாகும்.

எடுத்துக்காட்டுக்களில் பல இக்காலத்துப் பயன் படுவன அல்ல; இந்நூற்பாவிற்கு எடுத்துக்காட்டுக்கள் தருவதற்காகவே உள்ளன.

தனி உயிர் ஈறாவனவற்றிற்கும், உயிர் மெய்யாக ஈறாகி உயிராகக் கொள்ளப்படுவனவற்றிற்கும், தனித் தனியே எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளார். தமிழ்முறைப் படி அளபெடை எழுத்தும் ஈற்றெழுத்தாகக் கணக்கில் அடங்கும் என்பது கோடற்கு.

மொழிக்கு ஈறாகும் எழுத்துக்களின் பட்டியல்

தனி உயிர்	... 11
உயிர்மெய் உயிரீறு ஆயின	
ககர வருக்கம்	... 10
ஙகர வருக்கம்	... —
சகர வருக்கம்	... 8
ஞகர வருக்கம்	... 8
டகர வருக்கம்	... 7
ணகர வருக்கம்	... 7
தகர வருக்கம்	... 8
நகர வருக்கம்	... 7
பகர வருக்கம்	... 8
மகர வருக்கம்	... 8
யகர வருக்கம்	... 5
ரகர வருக்கம்	... 7
லகர வருக்கம்	... 8
வகர வருக்கம்	... 8
ழகர வருக்கம்	... 7
ளகர வருக்கம்	... 7
றகர வருக்கம்	... 8
னகர வருக்கம்	... 9
மெய் யீறு	... 11
குற்றியலுகர ஈறு	... 1
உதாரணமுடையவற்றின் கூடுதல்	...153
உதாரணம் இல்லன	... 22
கூடுதல்	...175

ஈண்டு உதாரணங்களுள் சிறிது பொருந்தாமை உய்த்து உணர்க. எழுத்து வேற்றுமை அல்லது இட வேற்றுமை பற்றி எண்ணல் ஆகாது என மேல் ஓதியவர் ஈண்டும் அவ்வாறே உயிர்ஈறு பன்னிரண்டு என எழுத்து வேற்றுமை பற்றி எண்ண மறந்து இடவேற்றுமை பற்றி எண்ணி, உயிரீறு நூற்று அறுபத்து மூன்று என மயங்கக் கூறினார். முதலுக்கும் இஃது ஒக்கும்.

அமைதி

இயற்கை உயிரீறு இவை, உயிரீறாகக்கொள்ளப்பட வேண்டிய உயிர்மெய் ஈறு இவை என்பனவற்றை விளக்கியும், அளபெடைக்கண் வரும் உயிர்க்குற்றெழுத்தும் ஈற்றெழுத்தாகக் கணக்கிடப்படுதல் தமிழ் மரபுக்கு ஏற்றது என்பதை விளக்கியும், இயற்கை நெட்டுயிர் ஈறு 6, இயற்கைக் குற்றுயிர் ஈறு 5, உயிர்மெய்யாய் வரும் உயிரீறுகள் 152 ஆக உயிரீறு 163, மெய்யீறு 11 குற்றியலுகர ஈறு ஒன்று ஆக மொழிக்கு ஈறாவன 175 என்பதாம். அவற்றுள் 22க்கு இக்காலத்து உதாரணம் காணப்படவில்லை என்று கூறி, 153 ஈறுகட்கு எடுத்துக் காட்டுக்கள் தந்துள்ளார். இதன் கண் மயக்கம் எதுவும் இன்மை அறிக.

மொழிக்கு ஈறாகும் உயிர் எழுத்துக்கள் மெய் யெழுத்துக்கள் என்பனவற்றின் கூடுதலே இலக்கண ஆசிரியன்மார் தந்துள்ளனர். உயிர்மெய் எழுத்துக்களின் கூடுதல் உய்த்து உணருமாறு உள்ளது. பலவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் நச்சினார்க்கினியர்முதலியோர்க்கே கிடைத்தில. ஆதலின் ஈற்றுநிலை பற்றிய பிறநூல் கூடுதல் பட்டியல் தரப்படவில்லை.

ஒத்த நூற்பாக்கள்:

'க வ வொடு இயையின் ஔவும் ஆகும்,' தொல். 70
'எ என வரும்உயிர் மெய்யீறு ஆகாது.' 71
'ஒ வ்வும் அற்றே நவ்வலங் கடையே.' 72
'உ ஊ காரம் நவவொடு நவிலா.' 74
'எ ஒ எனும்உயிர் ஞகாரத்து இல்லை.' 73
'எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே.' 77
'உயிர்மெய் ஈறும் உயிரீற்று இயற்றே.' 106
முழுதும் நன். 108
'நின்ற நெறியே உயிர்மெய் முதலீறே.' 103
'அளபில் குற்றுயிர் அந்தம் ஆகும்.' மு.வீ.எ. 83
'எகரம் புள்ளியோடு இணைந்துஈ றாகா.' 84
'ஒகரம் நகரமெய் யோடிறு வாகும்.' 85
'ஔகான் ககர வகரமோ டன்ன.' 86
'உ ஊ நகரமொடு உறாஎன மொழிப.' 87
'எஞ்சிய எல்லாம் இறுதி ஆகும்.' 92
'எஞ்சிய உகரமும் இறுதி ஆகும்.' 88
'ஒற்றுமுன் உயிர்பின் னுறும் உயிர் மெய்யே.' 93
'மெய்யொடு மேவினும் வேறுபடாஉயிர்.' 94

ஈற்றுச் சிறப்பு விதி

38. னகர இறுதி அஃறிணைப் பெயருள்
மகரமொடு மயங்கி வருநவும் உளவே.

இஃது ஓர்ஈறு ஓர்ஈற்றொடு மயங்கி வரும் என்கின்றது.

இ-ள் : ளகார ஈற்று அஃறிணைப் பெயருள் சில ணகர ஈறு, மகரஈற்று அஃறிணைப் பெயரின் மகர ஈற்றொடு மயங்கி வருவனவும் உள; மயங்காதனவும் உள; புணரியலுள் அவை அறிந்து புணர்க்க என்றவாறு

ஏற்புழிக் கோடலான், ஈண்டுப் பெயர் என்றது தொடர்மொழி என்றே கோடும்;

'மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
ணகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப
புகர்அறக் கிளந்த அஃறிணை மேன' தொல். 32

என்ப ஆகலின்.

வரலாறு : நிலன் நிலம், கலன் கலம்—இத் தொடக்கத்தன மயங்குவன. எகின், செகின், பயின், குயின், அழன், புழன், விழன், கடான், வயான் இத் தொடக்கத்தன மயங்காதன எனக் காண்க. ணகர இறுதி மகர இறுதியொடு மயங்கும் என்றலின், வட்டம் குட்டம் இத்தொடக்கத்து மகர ஈறுகள் மயங்கா எனக் கொள்க. பிறவும் அன்ன. இதனை இடைநிலைப் பாற்படுத்தி அதனைச் சார வைப்பாரும் உளர். அது பொருந்தாது. இறுதிநிலைப்பாற்படுவதொரு மயக்கம் ஆதலின். 30

விளக்கம் : தொடர்மொழி — இரண்டற்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆகிய மொழி.

ணகர இறுதி மகர இறுதியொடு மயங்கும் எனவே, மகர இறுதி ணகர இறுதியொடு மயங்காது என்றவாறு.

இஃது இறுதிநிலை பற்றிய செய்தி ஆதலின் ஈண்டே கூறத்தக்கது. இடைநிலையொடு சாரவைத்த நன்னூல் கொள்கை ஈண்டு மறுக்கப்படுகிறது.

இலக்கண விளக்கச் சூறாவளி

'மகரத்தொடர்மொழி மயங்குதல் வரைந்த
ணகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப'

என ஆசிரியர் தொல்காப்பியனார் வரைந்து ஓதி இருப்ப இவர் இத்தொடக்கத்தன எனப் பின்னும் சில உளவாக அவரொடு மாறுகொளக் கூறினார். நிலன் நிலம் என்றல் தொடக்கத்துக் குறிலிணை ஒற்றாய் நிற்கும் சொற்களின் னகரம் மகரத்தொடு மயங்கி நிற்கும் ஆற்றல் உடைமையின், அவ்வாற்றல் உடையவற்றுள் மயங்காது நிற்கும் சொற்களை எடுத்தோதி விலக்கல் வேண்டும். அவ்வாற்றல் இல்லாத கடான் வயான் என்றால் போலும் குறில் நெடில் எழுத்துக்களை எடுத்தோதி விலக்கல் வேண்டியது எற்றுக்கு என்க. யாண்டும் குறில்இணைஒற்று அல்லுழி வரும் னகரமும் மூவெழுத்தின் இறந்த தொடர்மொழி னகரமும் மகரத் தோடு மயங்காமை கண்டு கொள்க. ஆசிரியர் 'தொடர் மொழி' என்றார் ஆயினும், தொடர்மொழியுள் முந்திய தாகியமூவெழுத்துத் தொடர்மொழி என்பதே கருத்தாகக் கொள்க. அவற்றுள்ளும் குறில்இணை ஒற்றாகிய மொழி என்பது ஏற்புழிக் கோடலான் கோடும்.

அமைதி

தொல்காப்பியனார் தாமே வரையறுக்க இயலாது 'ஒன்பஃது என்ப' தொல். 82 எனப் பிறர் கூற்றாகக் கூறி, அவ்வொன்பது யாவை என்று வரையறுக்காது, அவை தொடர்மொழி என்றே வாளா சுட்டிப் போதலின், பின்னர் இப்பெற்றியனவாகிய சொற்கள் தோன்றவும் கூடும் என்ற கருத்தான், அவருக்குப் பல நூற்றாண்டு பிற்பட்டாராகிய இவ்வாசிரியர் இத்தொடக்கத்தன என்று கூறியதன்கண்ணும். அவ்வொன்பது யாவை என்பது தெற்றெனப் போதரா நிலையில் நச்சினார்க் கினியர் முதலியோர் அந்நூற்பா உரையில் குறிப்பிட்ட ஒன்பது சொற்களைச் சுட்டிச் செல்வதன்கண்ணும் தவறின்மை அறிக. குறிலிணை அடுத்த னகரம் என்று ஆசிரியர் வரையறுத்துக் கூறாத வழிக் குறில்நெடிலைக் கோடற்கண்ணும் வழுவின்மை காண்க. தொடர்மொழி

மூன்று எழுத்தினதாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற வரையறையின்மை 'ஈரொற்றுத் தொடர்மொழி இடைத் தொடர் ஆகா' தொல். 407 முதலிய நூற்பாக்களிலும் காண்க. நச்சினார்க்கினியரும் ஒன்பது சொற்களைக் குறிப்பிட்டு, 'வேறு வருமாயின் கொள்க' என்று கூறிய தனையும் நோக்குக. கடான் வயான் முதலிய சொற்கள் இக்கால வழக்கில் இல்லை ஆதலின், அவற்றின் பெற்றி அறிதல் அரிது என்க.

ஒத்த நூற்பாக்கள் :

'மகரத் தொடர்மொழி......மேன.' தொல். 82

'மனக்கள் ஒன்றுக்குஒன்று ஆவனவே.' வீ. 25

'வந்து உறழும் அன்ன வயனலக்கள்.' நே. 24

'மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன உளவே.' நன். 122

'அஃறிணைப் பெயர்ச்சொல் இறுதி மகாரம்
னகரமாம் ஒரோவழி நாடுங் காலே.' மு.வீ.எ.114

இடைநிலை மெய்ம் மயக்கம்

31. கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக்கு உடனிலை ரழஒழித்து ஈரெட்டு
ஆகும் உயிர்மெய் மயக்குஅளவு இன்றுஅவை
தேருங் காலை மொழியிடைச் சிவணும்.

இது நிறுத்த முறையானே பொதுவகையான் மெய்ம் மயக்கமும் உடனிலை மயக்கமும் ஆமாறும், அவற்றது எண்ணும், வரையறை இன்றி மயங்குவனவும், அவை மயங்கும் இடமும் உணர்த்துகின்றது.

இ-ள் : மெய் பதினெட்டனுள் கசதப என்னும் நான்கனையும் ஒழித்த பதினான்கு மெய்களது மயக்கம் மெய்ம் மயக்கமாம்; ரகர ழகரங்களை ஒழித்த பதினாறு

மெய்களது மயக்கம் உடனிலை மயக்கமாம். உயிர்மெய் உயிர்மெய்யோடும் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை இன்றாம். அம்மயக்க நிலைகள் ஆராயுங்காலத்து மொழி இடையே பொருந்தி நிற்கும் என்றவாறு.

கூட்டம் என்பதனை ஈரெட்டு என்பதனொடும், மயக்கம் என்பதை உடனிலை என்பதனொடும் கூட்டுக.

தன்முன்னர்த் தான் நின்று மயங்குவது உடனிலை மயக்கம் எனவே, தன் முன்னர்ப் பிறமெய் நின்று மயங்குவது மெய்ம்மயக்கம் என்பதாயிற்று. அது வரும் சூத்திரத்தானும் உணர்க.

'தெருங்காலை' என்றனால், இவ்விரு கூற்று மயக்கமும் தனிமெய் முன்னர் உயிர்மெய் நின்று மயங்கும் எனவும், உயிர்மெய்முன் உயிர்மெய்யும் தனிமெய்யும் மயங்கும் எனவும், தனிஉயிர்முன் உயிர்மெய்யும் தனிமெய்யும் மயங்கும் எனவும்' அதற்கும் உயிர்மெய்ம் மயக்கம்போல வரையறை இன்று எனவும் கொள்க.

இன்னும் அதனானே, உயிர்மெய்ம்மயக்கமும் உயிர் மயக்கமும் தொடர்மொழிக்கண் அன்றிக் கரு—மழு— எனவும், கார்—தாழ்—எனவும். நுளை—உளை— எனவும், ஆர்—ஊர் எனவும் ஈரெழுத்து ஒருமொழிக் கண்ணும் மயங்குவனவும், இன்னோரன்ன பிறவாற்றான் மயங்குவனவும், புணர்மொழியிடை மயங்குவனவும் கொள்க.

புணர்மொழியிடையும் மயங்கும் எனவே, மேற் கூறும் புணர்மொழிச் செய்கை எல்லாம் தலையாய அறிவினோர் நோக்க ஒருவாற்றால் கூறியவாறு ஆயிற்று என்பதூஉம் பெறுதும். சிறப்பு வகையான் மேல்வரைந்து ஓதும் மெய்ம்ம மயக்கம் ஒழித்து ஈண்டுப் பொதுவகையான் முடிந்தவற்றிற்கு உதாரணம் காட்டுதும்

வரலாறு—காக்கை எங்ஙனம் பச்சை மஞ்ஞை பட்டை மண்ணை தத்தை வெந்நெய் அப்பை அம்மி வெய்யர் எல்லி எவ்வி கொள்ளி கொற்றி கன்னி எனவும் கருவி துணங்கை எனவும் ஆவணி ஆம்பல் எனவும் வரும். பிறவும் அன்ன. 31

விளக்கம்: மயக்கம் 9 என்பர் பேராசிரியர். அவை மெய் முன்மெய், மெய்முன் உயிர், மெய்முன் உயிர்மெய், உயிர்முன்உயிர், உயிர்முன்மெய், உயிர்முன் உயிர்மெய், உயிர்மெய்முன் உயிர்மெய், உயிர்மெய்முன் உயிர், உயிர்மெய் முன்மெய் என்பன. அவற்றுள், மெய்முன்னர் மெய் மயங்கும் மயக்கமே ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார் என்றும் அவர் சுட்டுகிறார்; ஏனைய வரையறை இன்மையின் கூறார் ஆயினார் என்பர். இனி

'அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயங்கு உடனிலை தெரியுங் காலை'
தொல். 22

என்ற நூற்பா உரையில், 'அங்ஙனம் மூன்று கூறாகப் படுத்த பதினெட்டு மெய்யும், வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் எழுத்துக்களைக் கூட்டி மொழிப்படுத்து வழங்குதல் உளதாம் இடத்து, தனிமெய் தன்முன்னர் நின்ற பிறமெய்களோடும் தன்மெய்களோடும் மயங்கும் நிலையும், அப்பதினெட்டும் உயிருடனே நின்று தம் முன்னர் நின்ற உயிர்மெய்யோடும் தனிமெய்யோடும் மயங்கும் நிலையும் என இரண்டாம், அவை மயங்கும் மொழியாந்தன்மை ஆராயுங்காலத்து' என்றும், 'தெரியுங்காலை' என்பதனான், உயிர்முன்னர் மெய்ம் மயக்கமும் உயிர்முன்னர்த் தனிமெய்ம் மயக்கமும் கொள்க' என்றும் நச்சினார்க்கினியர் உரைத்ததும் நோக்குக.

நச்சினார்க்கினியர் இம் மெய்ம்மயக்கத்தை ஒரு மொழிக் கண்ணேயே கொள்வர். ஏனையார் எல்லாரும்

ஒருமொழிக் கண்ணும் தொடர்மொழிக் கண்ணும் கொள்வர்.

'வடநூலார் சையோகம் ஒருமொழியினும் புணர்மொழியினும் கொள்வர். அதுபற்றிச் சூத்திரம் செய்தபடி இளம்பூரணரும் நன்னூலாரும் அவ்வாறே கொள்வார். அக்கருத்து அறியாத நச்சினார்க்கினியர் ஒருமொழியிற் கொண்டு இருமொழியிற் கொள்ளாது உதாரணம் இறந்தது என்பர்' என்பது பிரயோக விவேகம் 5ஆம் நூற்பா உரை.

எவ்விடத்து வரினும் இரண்டெழுத்து இணங்கிப் பொருந்தும் பொருத்துவாயை இடைநிலை என்று ஓதலானும் இணங்காதன வரின் விகாரப்படுதலானும் இடைநிலை மெய்ம்மயக்கத்தை ஒருமொழி புணர்மொழி என்ற இரண்டன்கண்ணும் கொள்ளுதலே நன்னூல் விருத்தியுரைகாரர் கருத்தும் ஆகும்.

மெய்ம்மயக்கம் எனினும் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனினும் ஒக்கும். உடனிலை மயக்கம் ர ழ ஒழித்த ஈரெட்டின் கூட்டம் ஆகும்.

க ச த ப என்ற நான்கும் தம்முன்னர்த்தாமே மயங்கும்

ர ழ என்ற இரண்டும் தம்முன்னர்ப் பிறவே மயங்கும்.

ஏனைய பன்னிரண்டும் தம்முன்தாமும் தம்முன் பிறவும் மயங்கும்.

இம்மயக்க விதிகள்கொண்டே நுண்ணுணர்வினோர் புணர்நிலைச் செய்திகள் யாவும் உய்த்து உணர்தல் கூடும். ஆதலின், சிற்றறிவினர் அறிதற்கே புணரியல் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

'உடனிலைமயக்கம் ர ழ ஒழித்து ஈரெட்டுக் கூட்டம் ஆகும்' என்று கூட்டிப் பொருள் கொள்க என்றார்.

எடுத்துக்காட்டுக்களில் காக்கை முதல் முதல் கன்னி ஈறாகக் காட்டப்பட்டன உடனிலை மெய்ம்மயக்கமாம்.

கருவி — உயிர்மெய்முன் உயிர்மெய் மயக்கம்.

துணங்கை — மெய்முன் உயிர்மெய் மயக்கம்.

ஆவணி — உயிர்முன் உயிர்மெய் மயக்கம்.

ஆம்பல் — உயிர்முன் மெய்ம்மயக்கம்.

கரு, மழு — உயிர்மெய்முன் உயிர்மெய் மயக்கம்.

கார், காழ் — உயிர்மெய்முன். மெய்ம்மயக்கம்.

அளை, உளை — உயிர்முன் உயிர்மெய் மயக்கம்.

ஆர், ஊர் — உயிர்முன் மெய்ம்மயக்கம்.

இலக்கண விளக்கச் சூறாவளி

மெய்யொடு மெய் இயைதற்கே சையோகம் என்னும் குறிவடநூலார் கூறுவர். ஆசிரியர் தொல்காப்பியனாரும்

'அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயங்கு உடனிலை தெரியுங் காலை'

என மெய்யொடு மெய் இயைதற்கே மயக்கம் என்னும் குறியீடு கூறினார். அக்கருத்தே பற்றி நன்னூலாரும் 'இவ்விருபான் மயக்கும் மொழியிடை மேவும்' நன்.110 எனச் சூத்திரப் பொருளை முடித்து, உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை இன்மையின் அவை இக்குறியீடு பெறா என்பார், 'உயிர்மெய்மயக்கு அளவின்றே' நன் 110 என ஒழிந்தார். ஒன்றோடொன்று இயைதல் ஒப்புமைபற்றி 'ஏழத் தனிக்குறில் அணையா' நன 119 என்பதனை இதனைச் சார வைத்தார். ஆனால் அது மயக்கம் என்றும் குறியீடு பெறாமை அறி. அக்கருத்து அறியாது அவற்றிற்கு மயக்கம்

என்னும் சூறியீடு கொண்டார் ஆயினும், முதல் இறுதி களை ஒற்றுமை நயம் பற்றி உயிர்மெய்முதல், உயிர் மெய்ஈறு என ஓதாது. வேற்றுமை நயம் பற்றி வெய்ம் முதல் உயிர்ஈறு என ஓதியவாறே. ஈண்டும் கருவி துணங்கை என்பனவற்றை உயிர்மயக்கம் எனக்கோடல் வேண்டும்; அதனை,மறந்து உயிர்மெய் மயக்கம் எனல் பொருந்தாமை அறிக.

அமைதி

தொல்காப்பியனார் மெய்ம்மயக்கம் ஒன்றே கூறிய தனைத் தன் கோட்கூறல் என்னும் உத்திக்கு இனம என்றும்,பிறன் உடன்பட்டது தான் உடன்படுதல் அன்று என்றும் முறையே வெளிப்படையானும் குறிப்பானும் பெறப்படவைத்த பேராசிரியர் போல்வார் தமிழில் மயக்கம் ஒன்பது என்று கொண்ட கொள்கையை நோக்க மெய்ம்மயககம் ஒன்றற்கே மயக்கம் என்று பெயரிடும் மரபு முன்னவர் கருத்தில் இல்லை என்பது தேற்றம். வடமொழியோடு தமிழை நன்கு ஒப்பிட்டு இலக்கணம் வரைந்த பிரயோக விவேக நூலாரும் சையோகம் மெய் ஒன்றற்கே உரியது என்று குறிப்பிட்டார் அல்லர். 'உயிர்மெய் மயக்கு அளவு இன்றே' நன். 110 என்ற நன்னூலாருக்கும் மெய்ம்மயக்கம் ஒன்றே மயக்கம் என்ற பெயர் பெறும் என்ற கருத்து இன்று என்பது வெளிப் படை.

'ர ழ தனிக்குறில் அணையா' நன். 119 என்பது உயிர்மெய்யோடு தனிமெய் மயங்குவனவற்றில் சில வற்றிற்கு வரையறை கூறியதாகும். அணைதல் என்பது மயக்கம் என்ற பொருளில் வரும் பிறிதொரு சொல் என்பதும் வெளிப்படை. பரந்து பட்டுக்கிடக்கும் உயிர் மெய் மயக்கத்தில் சிலவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் தருவதும் உரை எழுதுவோர் கடமைகளில் ஒன்றாம்.

உயிர்மெய் சிலஇடங்களில் ஓர் எழுத்தாகவும் சில இடங்களில் ஈரெழுத்தாகவும் கொள்ளப்படுதல் இலக்கண நூல்களுள் காணப்படும் செய்தியே.

'ஆயிடை வருதல் இகார ரகாரம்' தொல். 463

'வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்துஅஃது ஏகினும் இயல்பே.' நன். 168

'சாவஎன் மொழிஈற்று உயிர்மெய் சாதலும் விதி.'
நன். 169

'தெங்குநீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின்.'
நன். 187

முதலிய விதிகளை நோக்குக. எனவே,

'எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென்று ஆயீ ரியல' தொல்.103 எனக்

கூறுதல் எளிமை கருதிக்கொண்டவரும் ஒரோவழி உயிர் மெய்யை ஒரே எழுத்தாகக்கொண்டு புணர்த்ததும் காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயங்கு உடனிலை தெரியுங் காலை.'
தொல். 22

'மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன் தாம்வரும் ரழஅலங் கடையே.' 30

'சாயா மயக்கம்தம் முன்னர்ப் பிறவொடு
தாமும்வந்து
வீயாத ஈரொற்றும்மூ வொற்றும் உடனிலை
வேண்டுவரே.' வீ. 4

'கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக்கு உடனிலை ரழஒழித்த ஈரெட்டு

ஆகும்இவ் விருபால் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய்ம் மயக்குஅளவு இன்றே.'
நன். 110

'ரழஅல்லன தம்முன் தாம்உடன் நிலையும்.' 118

'வேற்றுநிலை கசதப மெய்பதி
னான்கும் என்மனார் நற்றமிழ் வல்லோர்.'
மு. வீ. எ. 65

'ரழ அல்லனஉட னிலைஎன மொழிப.' 87

'உயிர்மெய்ம் மயக்கிற்கு ஓர் அளவு இன்றே.' 79

'சங்கம் புணர்ச்சி சையோகம் மயக்கம்
புல்லல் கலத்தலும் பொருள்ஒன் றேயாம்.' 66

சிறப்பு விதி

32. ஙம்முன் கவ்வும் வம்முன் யவ்வும்
ஞநமுன் இனமும் யகரமும் டறமுன்
கசபவும் ணனமுன் இனமும் கசஞப
மயவவும் மம்முன் பயவவும் யரழமுன்
மொழிமுதல் மெய்யும் லளமுன் கசப
வயவும் நின்று மயங்கும் என்ப.

இது மேல் பொதுவகையான் கூறிய மெய்ம்மயக்கத்தினைச் சிறப்பு வகையான் வரைந்து கூறுகின்றது.

இ-ள் : கங்குல் என ஙகரம் முன்னர்க் ககரமும்,

தெவ்யாது என வகரம் முன்னர் யகரமும்,

மஞ்சு உரிஞ்யாது எனவும், பந்து வெரிந்யாது எனவும், ஞகரந கரங்களின் முன்னர் முறையே சகர தகரங்களும் யகரமும்,

கட்க கட்சி கட்ப எனவும், கற்க முயற்சி கற்க எனவும் டகர றகரங்களின் முன்னர்க் ககர சகர பகரங்களும்,

வண்டு எண்கு வெண்சாந்து வெண்ஞாண் பண்பு வெண்மை மண்யாது எண்வட்டு எனவும், கன்று புன்கு புன்செய் மென்ஞாண் அன்பு வன்மை பொன்யாது பொன்வலிது எனவும், ணகர னகரங்களின் முன்னர் முறையே டகர றகரங்களும், ககர சகர ஞகர பகர மகர யகர வகரங்களும்,

கம்பு திரும்யாது நிலம்வலிது என மகரம் முன்னர்ப் பகர யகர வகரங்களும்,

ஆய்க ஆய்தல் ஆய்நர் ஆய்பவை வாய்மை எய் சிலை தெய்வம பாய்ஞெகிழி எனவும், ஆர்க ஆர்தல் ஆர்நர் ஆர்பவை நேர்மை வார்சிலை சேர்வது நேர் ஞெகிழி பேர்யாளை எனவும், ஆழ்க ஆழ்தல் ஆழ்நர் ஆழ்பவை கீழ்மை வாழ்சேரி வாழ்வது வாழ்ஞெண்டு வீழ்யானை எனவும், யகர ரகர ழகரங்களின் முன்னர்க் ககர தகர நகர பகர மகர வகர ஞகர யகரங்களும்,

செல்க வல்சி செல்வம் கொல்யானை எனவும்,

கொள்க நீள்சினை கொள்ப கள்வன் வெள்யாறு எனவும் லகர ளகரங்களின் முன்னர்க் ககர சகர பகர யகர வகரங்களும்,

நின்று மயங்கும் என்று கூறுவர் ஆசிரியர்.

யரழ முன்னர் மொழிமுதல் மெய்யும் என்றாரேனும். செய்யாறு என யகரம முன்னர் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கம் ஆதலின், அஃது ஒழித்து ஏற்புழிக் கோடலான் ஏனைய கோடும். 32

விளக்கம் : இவ்வாசிரியர் மயக்கத்தை ஒருமொழி இருமொழி இரண்டன்கண்ணும் கொண்டாரேனும் எடுத்துக்காட்டுக்களைத் தனிமொழிகள் வாயிலாகவே நச்சினார்க்கினியரை ஒட்டித் தந்துள்ளார். வினைத் தொகையும் பண்புத்தொகையும் நிலைமொழி வருமொழி

களாகப் பிரித்துக் கருவி செய்யப்படா ஆதலின், அவையும் ஒருமொழி என்பதே இவ்வாசிரியருக்கும் கருத்து. அதனை வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகளை விளக்கும் 'ஐம்முதல் ஆறு தழுவுதொடர்' இ.வி. 54 என்ற நூற்பா உரையில் காண்க.

நச்சினார்க்கினியர் இம்மயக்கத்தை ஒருமொழிக் கண்ணேயேகொண்டு. புணர்மொழிபற்றியவற்லைறப் புணரியல்களில் காண்க' என்றார். மெய்ம்மயக்கம் ஆகிய இடைநிலை நான்மரபினுள்ளும் ஏனைய முதல்நிலை இறுதிநிலை என்பன மொழிமரபுள்ளும் தொல்காப்பியனாரால் குறிப்பிடப்பட்ட திறன் ஆராயத்தக்கது.

இவ்வாசிரியர் இம்மயக்கத்தை நுனித்து உணரவல்ல நுண்ணறிவினோர் புணர்ச்சி வேறுபாடுகளை இதனைக் கொண்டே அறிதல் கூடும் என்ற கருத்தினர்.

ஒத்த நூற்பாக்கள்:

'டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூ எழுத்து உரிய.' தொல். 23

'இவற்றுள்
லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்.' 24

'ஙஞண நமன எனும்புள்ளி முன்னர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே.' 25

'அவற்றுள்
ணனஃகான் முன்னர்க்
கசஞப மயவ ஏழும் உரிய.' 26

'ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே.' 27

'அவற்றுள்
மஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்.' 28

'யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலாகு எழுத்தும் ஙகரமொடு தோன்றும்.' 29

'ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.' நன் 110

'ஞநமுன் தம்மினம் யகரமொடு ஆகும்.' 111

'டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.' 112

'ணனமுன் இனம்கச ஞபமய வவ்வரும்.'
நன். 113 மு. வீ. எ. 70

'மம்முன் பயவ மயங்கும் என்ப.'
நன். 114 மு. வீ. எ. 72

'யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்.'
நன். 115 மு. வீ. எ. 73

'லளமுன் கசப வயஒன் றும்மே.' நன். 112

'ஙகாரை முன்னர்க் ககாரம் மயங்கும்.' மு.வீ.எ.67

'வரும்சய ஞகாரமுன் மருவி என்ப.' 68

'கசப டகரமுன் கலந்து மயங்கும்.' 69

'யகரமும் தகரமும் நகரமுன் ஆகும்.' 71

'லள முனர்க் கசப வயவரும் என்ப.' 74

ஈரொற்று உடனிலை

23. யரழஒற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றாம்ரழத் தனிக்குறில் அணையா.

இஃது ஈரொற்று உடனிலை ஆமாறும், வரையறை இன்றி மயங்குவனவற்றுள் சிலவற்றிற்கு வரையறையும் கூறுகின்றது.

இ-ள் : யரழ என்னும் மூன்று மெய்முன்னரும் கசதப ஙஞநம என்னும் எட்டு ஒற்றும் வந்து ஈரொற்று உடன் நிற்கும். ரகர ழகரம் என்னும் இரண்டு

ஒற்றொடும் பிறிது ஓர் எழுத்தையும் சாராது தனியே நின்ற குற்றெழுத்துக்கள் மயங்கா என்றவாறு.

ஒற்றொடு மயங்காது எனவே, உயிர்மெய்யோடு கரு மழு எனவும், தனிக்குறில் எனவே குறில்இணை புகர் புகழ் எனவும், நெடில் கார் காழ் எனவும் மேலைப் பொதுவிதியான் மயங்கும் எனக் கொள்க.

வரலாறு: வேய்க்க வாய்ச்சி பாய்த்தல் வாய்ப்பு காய்ங்கனி வேய்ஞ்சினை காய்ந்தனம் காய்ம்புறம் எனவும், பீர்க்கு நேர்ச்சி வார்த்தல் ஆர்ப்பு நேர்ங்கல் நேர்ஞ்சினை நேர்த்தலை நேர்ம்புறம் எனவும்,

வாழ்க்கை தாழ்ச்சி தாழ்த்தல் தாழ்ப்பு தாழ்ங்குலை தாழ்ஞ்சினை வாழ்ந்தனம் வீழ்ம்படை எனவும் வரும். பிறவும் அன்ன. ஆகாதனவற்றிற்கு உதாரணம் இன்று. 32

விளக்கம்: எடுத்துக்காட்டுக்களில் பல நச்சினார்க்கினியரை ஒட்டியே எழுதப்பட்டுள்ளன. நன்னூல் உரைகாரர் முதலியோர் புணர்மொழிக்கண்ணேயே எடுத்துக் காட்டுக்கள் தந்துள்ளனர். 'ரழ தனிக்குறில் அணையா' நன். 119 என்பது வரையறை இன்றி உயிர்மெய்யோடு தனிமெய் மயங்குவனவற்றில் சில ஒற்றிற்கு வரையறை கண்டு கூறியது என்றார் நச்சினார்க்கினியர்.

'ரழ தனிக்குறில் அணையா' எனவே, யகரம் தனிக் குறில் அணைந்து பொய் மெய் என்று அமையுமாறு காண்க.

ஒத்த நூற்பாக்கள்:

'யரழ என்னும் மூன்றும் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்று ஆகும்.' தொல். 48

'அவற்றுள்
ரகார ழகாரம் குற்றொற்று ஆகா.' 49

முழுதும் நன். 119

'ரழத்
தனிக்குறில் சாரா தாமும்மிகா என்ப.' தொ.வி.36

'ரகார ழகாரம் குற்றொற்று ஒற்றா.' மு.வீ.எ. 77

செய்யுட்கண் ஈரொற்று உடனிலை

34. லளமெய் திரிந்த னணவொடு மகாரம்
ஈரொற்று ஆகும் செய்யுள் உள்ளே.

இது செய்யுட்கண் ஈரொற்று உடனிலை மயக்கம் ஆமாறு கூறுகின்றது.

இ-ள் : லகார ளகார ஒற்றுக்கள் திரிந்த னகார ணகார ஒற்றுக்களோடு கூட மகர ஒற்று ஈரொற்று உடனிலையாம் செய்யுளகத்து என்றவாறு.

வரலாறு :

'எம்மொடு தம்மைப் பொருஉங்கால் பொன்னொடு
கூவிளம் பூத்தது போன்ம்' எனவும்,

'வெயிலியல் வெஞ்சுரம் ஐயநீ ஏகின்
மயிலியல் மாதர் மருண்ம்'

எனவும் வரும். 34

விளக்கம்: மகரம் குறுகுதலை மகரக் குறுக்கத்தில் சுட்டியுள்ளார் ஆதலின், அதனை இவ்வாசிரியர் ஈண்டுக் கூறவில்லை. மகரக் குறுக்கத்தின் முன்நின்ற னகர ணகரங்கள் லகர ளகரங்களின் திரிபே என்பதை ஆண்டே நூற்பா 22இல் விளக்கியமை காண்க.

'நன்போது அவிழ்குழல்கார் நண்பனே செம்மேனி
பொன்போன்ம்பல் வெண்முத்தம் போன்ம்'

என்ற மாறன் அலங்காரத்து 98-ஆம் நூற்பா உரைப் பாடலில், போன்ம் என்பதற்கு அந்நூல் உரைவரைந்த காரிரத்ந கவிராயர், ''போனும் என்னும் உவம உருபு

'செய்யும்என்னும் எச்சமுற்று உயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந்து ஆகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே' நன். 311

என்பதனான், முற்று ஆதலின் உயிர்கெட்டது. 'மெல்லெழுத்து இயையின் னகாரம் ஆகும்' தொல். 367 என்பதனால் லகரம் னகரமாய்த் திரிந்தும், 'னகாரம் முன்னர் மகாரம் குறுகும்' தொல் 55 என்பதனால் ஈற்று மகரம் குறுகியும்,

'செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்று ஆகும்' தொல். 51

என்பதனால் ஈரொற்று உடனிலையாயும், மேலே பகர ஒற்று வருதலின் செய்யுளிடைப்பட்டும் வந்த முற்றுப் போன்ம என்பதாயிற்று'' என்று சொல் அமைப்புப் பற்றி விளக்கிக் கூறியது காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகாரம் மகாரம் ஈரொற்று ஆகும்.' தொல். 51

'லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்துஈ ரொற்றாம் செய்யுள் உள்ளே'
நன். 120 மு.வீ.எ. 80

முதல்ஈறு இடைநிலைகளுக்குப் புறனடை

35 தம்மரபு இசைப்பின் முதல் ஈறு இடைநிலை
அம்மரபு இல்லவும் ஆம்என மொழிப.

இது முதல்ஈறு இடைநிலை ஆகாதனவும் ஒரோவழி ஆம் என்கிறது.

இ-ள்: தம் இயல்பைச் சொல்லும் இடத்து மொழிக்கு முதல் ஆகாதனவும் ஈறு ஆகாதனவும் இடை ஆகாதனவும் முதல் ஈறு இடைகளில் நிற்றற்கு உரிய என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

வரலாறு: ஙக்களைந்தார் டப்பெரிது எனவும்,
கெக்களைந்தார் கொப்பெரிது எனவும்.

'வல்லெழுத்து இயையின் டகாரம் ஆகும்' தொல். 302 எனவும், முறையே முதலும் ஈறும் இடைநிலையும் ஆயினவாறு காண்க. பிறவும் அன்ன.

'தம்மரபு இசைப்பின் அம்மரபு இல்லவும் ஆம்' எனவே, அக்குறிது கக்களைந்தார் எனவும், ஆ நெடிது கா நன்று எனவும்,

'டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூவெழுத்து உரிய' தொல். 23

'அவற்றுள்
மஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்' 28

எனவும் அம்மரபு உள்ளன முதலும் ஈறும் இடையும் ஆதல் கூறவேண்டா ஆயிற்று. 35

விளக்கம்: ஙக்களைந்தார் டப்பெரிது—மொழி முதலில் வாராதன தம்பெயர் மொழிதற்கண் வந்தமைக்கு எடுத்துக்காட்டு. கெக்களைந்தார் கொப்பெரிது--மொழிக்கு ஈறு ஆகாதன தம்பெயர் கூறுதற்கண் ஈறு ஆயமைக்கு எடுத்துக்காட்டு கெ, கொ என்பன ஓரெழுத்து ஒருமொழிபோல்வன ஆதலின், தமக்குத் தாமே முதலும் ஈறும் ஆதல் அறிக.

'இயையின் டகாரம்' தொல். 302 இடையே ணகர ஒற்று டகரத்தொடு மயங்கியது,

முதலாம் எனவே, ஈறாதலும் தானே பெறப்படுதலின், முதல் ஈறு இடைநிலை என வேண்டா கூறினார். இவ்விதிக்கும் பயன் கூறாதார்க்கு இச்சூத்திரம் பயனில் கூற்றாய் முடியும் என்க.

அமைதி

தானே புலனாதல் என்பது நுண்ணுணர்வு உடையார்க்கு அன்றே? ஏனையர்க்கும் புலனாதற்காக எழுத்துக்கள்யாவும் தம்பெயர் கூறுதற்கண் முதல் ஈறு இடைகளில் வரும் எனல் வேண்டும் என்பது. இது நச்சினார்க்கினியர் கருத்தும் ஆகும். (தொல் 77 உரை) இவற்றிற்கு முற்கூறப்பட்ட முதல் ஈறு இடைநிலை பற்றிய விதிகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டா என்பது இந்நூற்பாவின் பயன் ஆதல் இந்நூற்பாக் பாயிர உரையால் போதருவது காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'தமமியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை.' தொல். 47

'முதலா ஏன தம்பெயர் முதலும்.' 66

'எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே.' 77

'தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்
இம்முறை மாறியும் இயலும் என்ப.'
நன். 121 மு.வீ.எ. 81

எழுத்துப் போலி

36, அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐ ஒத்து இசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔஓ ரன்ன
இகர யகரம் இறுதி விரவும்
புகரின்று உணர்ந்தோர் வரைந்தனர் போற்றல்.

இது நிறுத்த முறையானே சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள்போல இசைக்கும் அவை கொள்ளற்க என விலக்கும் எழுத்துப்போலி கூறுகின்றது.

இ-ள் : அகரத்தின் பின்னர் இகரமும் யகரமும் என்று கூறப்பட்ட இரண்டு எழுத்தும் பொருந்தி நிற்பின் ஐகாரம்போல இசைக்கும். அகரத்தோடு உகரமும் வகரமும் பொருந்தி நிற்பின் ஔகாரம்போல இசைக்கும் இகரமும் யகரமும் அவ்வீற்று மொழிகளின் இறுதிக்கண் ஒன்றன்பின் ஒன்று ஓசை விரவி நிற்கும்.குற்றம் இன்றி எழுத்து இலக்கணத்தை அறிந்தோர் அவ்விகாரங்களை கொள்ளாது கடிந்து பாதுகாக்க என்றவாறு.

வரலாறு ; ஐவனம் என்பது அஇவனம் அய்வனம் எனவும், ஔவை என்பது அஉவை அவ்வை எனவும், ஆனி ஞானி என்பன ஆனிய் ஞானிய் எனவும், ஆய் நாய் என்பன ஆய்இ நாய்இ எனவும் வரும். இவை கடிதல் வேண்டும் என்று அறியாதார் இவற்றைக் கொள்ளற்பாலதாம் போலி என மயங்குப. 36

விளக்கம் : இந்நூற்பாவினால் விலக்கத் தகும் எழுத்துப் போலிகளை நச்சினார்க்கினியர் கருத்தை ஒட்டி இவ்வாசிரியர் விளக்கியுள்ளார். உரையாசிரியர் கருத்தும் இதுவே.

'அகர இகரம் ஐகார மாகும்.' தொல். 54

'அகர உகரம் ஔகார மாகும்.' 54

'அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.' 55

'இகர யகரம் இறுதி விரவும்.' 57

''சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள் போலத் தோன்றும் அவை கொள்ளற்க என்னும் எழுத்துப் போலி கூறுகின்றது. அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல, ஐகாரம் போன்று இசைக்கும்; அது கொள்ளற்க.

எ-டு: ஐவனம்—அஇவனம். 'ஆகும்' என்றதனால், இஃது இலக்கணம் அன்று ஆயிற்று.

அகரமும் உகரமும் கூட்டிச்சொல்ல, ஔகாரம்போல இசைக்கும்; அது கொள்ளற்க என்றவாறு.

எ-டு: ஔவை அஉவை என வரும்.

அகரத்தின்பின் இகரமேயன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும் ஐ எனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவுபெறத் தோன்றும் என்றவாறு.

எ-டு: ஐவனம் அய்வனம் எனவரும். 'மெய்பெற' என்றதனால், அகரத்தின் பின்னர் உகரமே அன்றி வகரப் புள்ளியும் ஔகாரம்போல வரும் என்று கொள்க. ஔவை அவ்வை என வரும்.

இகரமும் யகரமும் ஒருமொழியின் இறுதிக்கண் ஒசை விரவிவரும். அவ்விகாரம் கொள்ளற்க என்றவாறு.

எ-டு: 'நாய் நாஇ எனவரும்.' என்பது நச்சினார்க்கினியர் உரை. உரையாசிரியரும் இங்ஙனமே கொள்வர்.

இனிச் சிவஞானமுனிவர் இந்நூற்பாக்கள் ஐஔ என்ற எழுத்துக்களின் அமைப்பினைக் கூறுகின்றன என்று பொருள்கொள்ளுவது மொழிமரபாகிய இவ்வியல் அமைப்பிற்கும், நூற்பாக்கள் அமைப்பிற்கும், 'ஐ என் நெடுஞ்சினை' என்ற தொடர் அமைப்பிற்கும் பொருந்தாது. மொழிமரபு மொழியிடைப்பட்ட எழுத்துக்களையே உணர்த்துவதாம். சினை என்பது ஒரு சொல்லின் கூறாகிய எழுத்தேயாம். இடையே உள்ள 'ஓரளபு ஆகும் இடனுமார் உண்டே' தொல். 56 என்ற நூற்பாவை விடுத்து ஏனையவற்றை இணைத்து உரைத்தலும் பொருந்தாது.

முனிவருக்கு வழிகாட்டியவர் பிரயோக விவேக நூலார்

அகர இகரம் எகரமாகும், அகர உகரம் ஒகரமாகும் என்பது வடநூலார் கருத்து ஆதல் பிரயோக விவேகம் 5ஆம் நூற்பா உரையான் அறிக.

சந்தி அக்கரம் பற்றிப் பிரயோக விவேகநூலார் கூறுவது ;

'அகர இகரம் ஏகாரமாகும்', 'அகர உகரம் ஒகார மாகும்', 'இகார வுகாரம் என்னும் இவற்றோடு. அகாரம் ஐஔ ஆகலும் உரித்தே' இவ்வுரைச் சூத்திரங் களால் ஈரெழுத்தாகிய சந்தியக்கரம் என்றும் ஓரெழுத் தாகிய ஏகாக்கரம் என்றும் அறிக. தொல்காப்பியரும், 'அகர இகரம் ஐகாரம் ஆகும்' தொல். 54 'அகர உகரம் ஔகாரம் ஆகும்' தொல். 55. 'அகரத் திம்பர் யகரப் புள்ளியும்-ஐஎன் நெடிஞ்சினை மெய்பெறத் தோன்றும்' தொல். 56 எனச் சந்தி அக்கரமாக நேரே கூறினார். அவ்வாறு கொள்ளாது உரைகாரர் 'ஐ ஒத்து இசைக்கும்' நன் 125 'ஔ ஓரன்ன நன் 125 என நன்னூலார் மதம் பற்றி ஐகாரம் போல ஆகும், ஔகாரம் போல ஆகும். ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் என விரித்து விகாரமாக்கி நலிந்து பொருள்கொண்டு போலி எழுத்து என்று இடர்ப்படுவர், அவர் போலி எழுத்து என்றால்.

'வைகிற்று எம்மனை வாழிய போழ்தெனக்
கையி னால்அடி தைவரக் கண்மலர்ந்து' சிந். 345

எனவும்,

'மெய்யணி பசும்பொற் சுண்ணம் மேதகு நான நீரின்
ஐதுபட் டொழுகி யானை அழிமதம் கலந்து
சேறாய்' சிந். 117

எனவும்.

'ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்'
தொல். 56

எனவும்,

'ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே' நன்.29

எனவும்,

'கையி னாற்சொலக் கண்ணினில் கேட்டிடும்
மெய்கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேம்'
சிந். 997

எனவும்,

'கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி'
சிந். 13-91, 92

எனவும்,

'கௌவையும் கடும்புனல் ஒலியும் காப்பவர்
செவ்வன்நூ றாயிரம் சிலைக்கும் பம்மையும்
எவ்வெலாத் திசைதொறும் ஈண்டிக் காரொடும்
பௌவம்நின் றியம்புவது ஒத்த என்பவே' சிந். 42

எனவும்,

'வெவ்வினை வெகுண்டு சாரா விழுநிதி அமுத
மன்னீர்
கௌவிய எஃகின் நின்ற கயக்கமில் நிலைமை
நோக்கி
ஒளவியம் அகன்று பொங்கும் அழல்படு வெகுளி
நீக்கி
இவ்வியல் ஒருவற்கு உற்றது இற்றென
இயம்புகின்றான்,' சிந். 394

எனவும்,

'ஒளவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.' குறள் 169

எனவும் வருவனவற்றுள் ஐகார ஒளகாரங்களை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால் செய்யுளியலோடு கொண்ட எதுகையோடு மாறுபட வரும் என்க. 'ஆயிரு தொடை

யும்' தொல்.செய்.64 என்னும் செய்யுளியல் சூத்திரத்துள் உரைகாரர் ஐகார ஔகாரம் போலி வகையால் கிளை எழுத்து எனப்படும் என்றார். இனி, நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரத்துள் போலி எழுத்துக் கொள்ளற்க என்பர் கொள்ளா எழுத்திற்கு இலக்கணம் கூறின் அந்நூற்கு நின்று பயன் இன்மை என்னும் குற்றம் வரும் என்க. நன்னூலாரும் போலியைத்தள்ளாது எழுத்துஇலக்கணம் 'பன்னிரு பாற்று அதுவே' நன். 57 என்றலின், போலி எதுகை நிமித்தம் அங்கீகாரம் ஆயிற்று. இளம்பூரணரும் போலி எழுத்தைக் கொள்ளற்க என்று கூறாமை அவர் உரையில் காண்க. (அது கொள்ளற்க என இப்பொழுது உரையாசிரியர் உரையுள் காணப்படும் தொடர் நச்சி னார்க்கினியத்தைக் கண்டு சேர்க்கப்பட்டது போலும்.) தொல்காப்பியர் இயற்கை ஆயிரம் என ஓர் எண்ணுக் கொண்டதன்றித் தொள்ளாயிரம் எனச் சந்தி நோக்கி நூறு திரிந்த ஆயிரமும் கொண்டாற்போலவும், தாமரை என்பது செம்மொழியும் பிரிமொழியும் ஆயினாற் போல வும் இயற்கையாகிய ஓர் எழுத்து ஐகார ஔகாரங்கள் கொண்டதன்றி எதுகை நோக்கி ஈரெழுத்து இயைந்த ஐகார ஔகாரங்களும் கொண்டார் என்க. உயிர் மெய் களை ஒற்றுமை நயம் கருதி ஓர் எழுத்தாகவும் வேற்றுமை நயம் கருதி ஈரெழுத்தாகவும் கொண்டாற் போல ஐகார ஔகாரங்களையும் அவ்வாறு கொண்டார் என்பதும் ஒன்று. போலி எழுத்து என்பார், இலக்கணப் போலி ஒப்பில்போலி போல எழுத்துப்போலியும் கைக் கொண்டு எதுகை கொள்வார் என்க. மியா நுந்தை என்பன ஒரு செய்யுட்கும் பயன்படாது இக்காலத்து நின்றாற்போல, அஇ, அஉ என்பன இக்காலத்துப் பயன்படாமலே நின்றன எனினும் அமையும்.'' பிரயோக விவேகம்-ஐந்தாம் நூற்பா உரை.

இவ்வுரையால் பிரயோக விவேக நூலார் இந் நூற்பாக்களைச் சந்தியக்கரங்களாகக் கோடலோடு

செய்யுளில் தொடை நோக்கிப் பயன்படும் எழுத்துப் போலிகளாக அவை ஆதலையும் குறிப்பிட்டார் என்பது அறியப்படும்.

இனி, இலக்கணக் கொத்து நூலார்

''போலி எழுத்தைப் போற்றுதல் கடனே' இ.கொ.91 என்றது, ஈரெழுத்துக்கள் கூடி ஓர் எழுத்துப் போல வருவனவற்றைத் தள்ளாது கொள்ளுக என்றவாறு. தள்ளில்,

'ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்'
'ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே'
'கையி னால்சொலக் கண்ணினில் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேம்'
'கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் சாட்சிப் புரையோய் போற்றி'
'ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'

இவை போல் வரும் செய்யுள் எல்லாம் மோனைத் தொடையோடும் எதுகைத் தொடையோடும் மாறுபட்டு இலக்கண வழுவாதல் காண்க.

வடநூலார் இவ்விலக்கணத்தைத் தள்ளாது சமானாக்கரம் என்று பெயரிட்டு இவ்விரண்டனையும் தழுவினார். அது பற்றித் தமிழ் நூலார் இணைஎழுத்து என்று மொழி பெயர்க்க மறந்து, போலிஎழுத்து என்று' மொழி பெயர்த்ததனால் போலிச் சரக்கு, போலி இலக்கணம், போலி உரை என்னும் சொற்களைப் போல இதனையும் கருதி முன்னும் பின்னும் பாராது தள்ளினார். அது பற்றியே இச்சூத்திரம் செய்தனம் என்க' என்று குறிப்பிட்டுள்ளதை நோக்குக,

இவற்றால், நச்சினார்க்கினியரைப் பின்பற்றிப் போலி எழுத்தைக் கொள்ளற்க என்று இவ்வாசிரியர் கூறியிருத்தல் அமைவு உடைத்தன்று.

சூறாவளி

போலி எழுத்து என வேறு இல்லை என்பது விருத்தியுள் காண்க.

அமைதி

இங்ஙனம் கொண்டு இந்நூற்பாக்களை ஐகார ஒளகாரங்களாகிய எழுத்தின் பிறப்புப்பற்றி அமைந்தனவாகக் கூறுதல் பொருந்தாமை முன்னர் விளக்கப்பட்டது

ஒத்த நூற்பாக்கள் :

'அகர இகரம் ஐகாரம் ஆகும்.' தொல். 54

'அகர உகரம் ஒளகாரம் ஆகும்.' 55

'அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.' 56

'இகர யகரம் இறுதி விரவும்.' 58

'அகரம் வகரத்தி னோடியைந்து ஒளவாம் யகரத்தினோடு
அகரம் இயைந்துஐய தாகும்.....' வீ. 3

'ஆதிஉயிர் வவ்வியையின் ஒளவாகும் அஃதன்றி
நீதியினால் யவ்வியையின் ஐயாகும்....' நே. 9

'அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐஒத்து இசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஒளவோ ரன்ன.' நன். 125

'அகரமும் இகரமும் ஐகாரம் ஆகும்.' மு.வீ.எ.107

'அகரமும் உகரமும் ஒளகார மாகும்.' 108

'இகரமும் யகரமும் இறுதி விரவும்.' 106

'ஆய்தமும் யவ்வும் அவ்வொடு வரினே
ஐஎன் எழுத்தொடு மெய்பெறத் தோன்றும்.'
அவிநயம்.

எழுத்துச்சாரியை

37. நெட்டுயிர் காரமும் ஐஔ கானும்
இருமைக் குறில்ஒற்று இவற்றொடு கரமும்ஆம்
இன்னசா ரியைபெறும் எவ்வழி யானும்
மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.

இது மேல் இலக்கணம் கூறப்பட்ட அவ்வெழுத்துக்கள் வழங்குவதற்கு வரும் சாரியை கூறுகிறது.

இ-ள் : நெட்டெழுத்து ஏழும் காரமும், ஐகார ஔகாரங்கள் அது அன்றிக் கானும், உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் மெய்களும் காரம் கான்களுடனே கரமும் ஆகின்ற இத்தன்மையை உடைய சாரியை பெற்று நடக்கும். சாரியை பெற்ற இடத்தும் பெறாத இடத்தும் ஒற்றுக்களது இயக்கம் அகரத்தொடு பொருந்தி இயங்கும் என்றவாறு.

அன் ஆன் முதலிய மொழிச்சாரியையும் உடைமையின், இவை எழுத்துச்சாரியை என்பார் 'இன்னசாரியை' என்றார்.

வரலாறு : ஆகாரம் ஈகாரம் எனவும், ஐகான் ஔகான் எனவும், அகாரம் இகாரம் எனவும், அஃகான் இஃகான் எனவும், அகரம் இகரம் எனவும். ககாரம் சகாரம் எனவும். கஃகான் மஃகான் எனவும், ககரம் சகரம் எனவும் வரும். பிறவும் அன்ன.

'வகாரம் மிசையும் மகாரம் குறுகும்' தொல். 330 எனவும்,

'மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த.'
தொல். 82

எனவும்,

'வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்'
தொல். 122

எனவும்.

சாரியை பெற்ற இடத்தும்,

'அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந ஆகும்.' தொல். 129

எனச் சாரியை பெறாத இடத்தும் மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணியவாறு காண்க.

இன்னும் உரையில் கோடலான், ஆன் ஏன் ஒன் முதலிய சாரியை பெறுதலும், ஐகார ஔகாரங்கள் ஒழிந்த வற்றின்கண் கான் வருங்காலை ஆய்தம் வருதலும், சாரியை பெற வேண்டும் என்னும் யாப்புறவு இன்றி,

'ஆஏ ஓஅம் மூன்றும் வினாஅ' தொல். 32
'அஇ உஅம் மூன்றும் சுட்டு' தொல். 31

என்றாற்போல வாளா கூறுதலும் கொள்க. 37

முதலாவது-எழுத்தியல் முற்றிற்று.

விளக்கம் : ஐகார ஔகாரங்கள் ஒழிந்தவற்றின் கண் கான் வருங்கால் அஃகான், மஃகான் என இடையே ஆய்தம் வரும்.

ஆன் ஏன் ஓன் என்ற எழுத்துச்சாரியைகள் பொருந்தி வந்தமைக்கு எடுத்துக்காட்டு இன்று.

இலக்கண விளக்கச் சூறாவளி

ஒற்றுக்கள் சாரியை பெறா என்பது விருத்தியுள் காண்க.

அமைதி

மெய்கள் அகரச்சாரியை பெறும் என்று கொள் வாருக்கு, காரம் கரம் கான் என்பன ஒற்றின்மீது ஏறிய

அகரத்தின் சாரியைகள் என்பது பொருந்தும், இவ் வாசிரியர் தொல்காப்பியனாரை ஒட்டி 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' தொல். 46 என்றார் ஆகலின், யாண்டும் மெய்தனித்துக் கூறப்பெறாது அகரத்தொடு சிவணியே கூறப்பெறுதலின் ஒற்றுமை நயம் பற்றி அகரமூர்ந்த மெய்யை மெய்யாகவே கொண்டு இச்சாரியைகள் பெறும் என்று கூறற்கண் தவறு இன்மை காண்க.

எழுத்துச்சாரியை என்பதனை எழுத்துக்கள் பெற்றும் பெறாதும் வரலாம். ஆனால் மெய்கள் அகரத்தொடு சிவணாது தனித்துக் கூறப்படும் மரபு இன்மையின். அகரத்தைச் சாரியை என்று விதக்காது 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' தொல். 46 என ஒற்றுமைப்படுத்திக் கூறியதே ஏற்றது.

ஒத்த நூற்பாக்கள் :

'காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை' தொல். 135

'அவற்றுள்
கரமும் கானும் நெட்டெழுத்து இலவே.' 136

'வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய.' 137

'ஐகார ஒளகாரம் கானொடும் தோன்றும்.' 138

'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.' 46

மு. வீ. எ. 95

'மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்
ஐஒள கானும் இருமைக் குறில்இவ்
இரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற.'

நன். 126

'நெட்டெழுத்து எல்லாம் காரமொடு நிலையும்.'

மு. வீ. எ. 100

'அவற்றுள், ஐஒள கானும் அடையவும் பெறுமே' 119

'காரம் கான் கரம் பெறும் இரு மைக்குறில்.' 111

'கரமும் கானும் காரமும் அகரமும்
ஏனமும் பிறவும் எழுத்தின் சாரியை' — பிங்கலம்.

'கரமொடு கானே காரம் காட்டிய அகரம் என்ப
தரமுற எழுத்திற்கு ஏற்ற சாரியை நான்கே
சாற்றும்.' சூடாமணி நிகண்டு.

[உரையாசிரியர் 'கிளந்த அல்ல'
(தொல். சொல். 298)
என்ற நூற்பா உரையுள் காரம், கரம், கான், ஆனம், ஏனம், ஓனம் என்பன வேறுபிற தோன்றும் இடைச் சொல்லாகக் குறிப்பிட்டார். ஆனம் ஏனம் ஓனம் என்பன எழுத்துச்சாரியை என்பதைச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளனர்.]

இரண்டாவது—பதவியல்

மொழியாக்கமும் மொழி வகைகளும்

38 எழுத்தே தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும்
பதமாம் பொருள்தரின் அதுபகாப் பதம்பகு
பதமென ஆயிரு பகுதித்து என்ப.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே பதங்களது இயல்புஉணர்த்திற்று ஆதலின், இவ்வோத்துப் பதவியல் என்னும் பெயர்த்து. மேல்எழுத்து உணர்த்தி அவ்வெழுத்தினான் ஆகும் பதங்களது இயல்பு உணர்த்திற்று ஆகலான், மேல் ஒத்தினோடு இயைபு உடைத்து ஆயிற்று. இதனுள் இத்தலைச் சூத்திரம் மொழி ஆக்கமும் அதன் பகுதியும் உணர்த்துகின்றது.

இ-ள் : மேற்கூறிய இலக்கணங்களை எய்திநின்ற எழுத்துக்கள் தாமே தனித்து ஒரெழுத்து ஆகியும், இணைந்து ஈரெழுத்து ஆகியும், இரண்டனை இறந்து தொடர்ந்து பல எழுத்தாகியும் நின்று பொருளை

விளக்கும் எனின் அவ்வெழுத்துக்கள் மொழி எனப்படும். அங்ஙனம் எழுத்தான் ஆகிய மொழிதான் பகாப்பதமும் பகுபதமும் என அவ்விரண்டு கூற்றதாம் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

மேற்கூறிய இலக்கணங்களை எய்திநின்ற எழுத்தே மொழியாம் என்றலின்,

'மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும்-எழுத்து இயல் திரியா' தொல். 53 என்பதூஉம் பெற்றாம். பெறவே, அஃகல்—அ எனவும். ஆல்—ஆ எனவும்.கடல்—க எனவும், கால்—கா எனவும் மொழிக்கண்படுத்துச் சொல்லினும், தெரிந்துகொண்டு வேறே சொல்லினும், உயிரும் மெய்யும் ஆகிய எழுத்துக்கள் பெருக்கச் சுருக்கம் உடையன போன்று இசைப்பினும். தத்தம் மாத்திரை இயல்பில் திரியாவாகி வரும் எனக்கொள்க. இன்னும் எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக்கண்ணும் எழுத்தியல் திரியா என்பதூஉம் கொள்க.

ஈரெழுத்து ஒருமொழியும் உடன் ஓதினார், சிலபல என்னும் தமிழ் வழக்கு நோக்கி.

'ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டுஇறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.'
தொல். 45

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும் என்க.

'பொருள்தரின் பதம் ஆம்' எனவே, தாராதவழி எழுத்தாம் தன்மையும்,தந்தவழி மொழியாம் தன்மையும் எய்தி நிற்றல் பெற்றாம்.

'தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச்
சுட்டுதல் கண்ணேயாம் சொல்.'

என்ப ஆகலின்,

ஆ—கா ஓரெழுத்து ஒருமொழி; மணி—கூனி ஈரெழுத்து ஒருமொழி; அறம் — அகலம்—அருப்பம்—தருப்பணம்—உத்திரட்டாதி எனவும் கூனன்—குழையன் பொருப்பன்—அம்பலவன்—அம்பலத்தான் — அம்பலத்தினான்—உத்திரட்டாதியான் எனவும் வருவன தொடர் மொழி. பிறவும் அன்ன. தொடருங்கால், பகாப்பதம் மூன்று எழுத்து முதல் ஏழெழுத்து ஈறாகவும், பகுபதம் மூன்று எழுத்து முதல் ஒன்பது எழுத்து ஈறாகவும் தொடரும் எனக் கொள்க. எழுந்திருத்தல் எழுந்திருக்கின்றான் எனவும், பொருத்துவித்தல் பொருத்துவிக்கின்றனன் எனவும் சிறுபான்மை மிக்கும் தொடர்வனவும் கொள்க.

'சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை' இத்தொடக்கத்து ஒட்டுப்பெயர்கட்கு வரையறை இல்லை என்க

ஒற்றும் குற்றுகரமும் எழுத்து எண்ணப்படா எனச் செய்யுளியலில் கூறினமைபற்றிக் கால் மால் கல் வில் நாகு தெற்கு எஃகு கொக்கு கோங்கு என்பனவற்றை ஓர்எழுத்து ஒருமொழி என்றும், சாத்தன் கொற்றன் வரகு குரங்கு என்பனவற்றை ஈர்எழுத்து ஒருமொழி என்றும் கூறின். ஆகாது; என்னை? செய்யுட்கண் இசை பற்றி அவை எண்ணப்படா எனவும், மொழி ஆக்கத்தின் கண் பொருள் பற்றி எண்ணப்படும் எனவும் கருதி,

'நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி'
தொல். 43

'குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே'
தொல். 44

எனவும்,

'ஈரெழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகுஇடன்,
தொல். 45

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் ஓதலின். 1

விளக்கம் : 'பதமாவது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருள்தன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவி ஆகிய பெயர் வினை இடைஉரி என்ற நான்கனையும்' என்று நச்சினார்க்கினியர் எழுத்துப்படலம் சொற்படலம் என்ற இரண்டன் தொடக்கத்தும் கூறியுள்ளார்.

மொழி ஆக்கம்—எழுத்தினான மொழி உண்டாதல்.

அதன்பகுதி—மொழியின் வகை
ஈரெழுத்தை இவ்வாசிரியர் 'இணை எழுத்து'
என்றார்.

மேற்கூறிய இலக்கணம் 'எண் பெயர்' இ. வி. 2 என்ற நூற்பாவில் குறிக்கப்பட்ட முதல் பத்துச் செய்திகளின் விரி.

'மொழிப்படுத்து............புலவர்' தொல். 53

''இஃது, எழுத்துக்களுக்கு மொழிக்கண் மாத்திரை காரணமாகப் பிறப்பதோர் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

மொழிக்கண்படுத்துச் சொல்லினும், தெரிந்து கொண்டு வேறே சொல்லினும், உயிரும மெய்யும் ஆகிய எழுத்துக்கள் பெருக்கம் சுருக்கம் உடையன போன்று இசைப்பினும் தம்மாத்திரை இயல்பில் திரியா என்று சொல்லுவர் புலவர்.

எ-டு : அஃகல்-அ எனவும், ஆல்-ஆ எனவும், கடல்-க எனவும், கால்-கா எனவும் கண்டுகொள்க.

'வேறு' என்றதனான், எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக்கண்ணும் எழுத்து இயல்திரியா என்பது கொள்க'' என்ற உரையாசிரியர் உரையை ஈண்டுக் குறித்துள்ளார். சொல்லில் பொருள் சிறக்கும் இடத்தை எடுத்தும் ஏனையவற்றைப்படுத்தும் ஒலிக்கும் முறை வழக்கு நோக்கி அறிக.

சிலபல என்னும் தமிழ்வழக்கு,

'சில்சொல்லின் பல்கூந்தல்' புறம். 166 - 16

'சிற்சில வித்திப் பற்பல விளைத்து' நற். 328-2

முதலியவற்றால் அறியப்படும். சிலபல என்னும் தமிழ் வழக்கினை நச்சினார்க்கினியரும் தொல்காப்பியம் 45 ஆம் நூற்பா உரையில் குறிப்பிட்டுள்ளார். 'இருபெயர் பலபெயர்' என்ற சொற்படல எச்சஇயல் நூற்பாவில் (21) 'இரண்டனையும் பன்மை என்று வேண்டான் இவ்வாசிரியன்' என்று அவரே குறிப்பிட்டுள்ளார்.

ஒன்று இரண்டு பல என்பதும் தமிழ் வழக்கு ஆதல்

'ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்'
புறம். 101—1, 2

'மழைபெயல் மாறிய கழைதிரங்கு அத்தம்
ஒன்றுஇரண் டலபல கடந்து' பதிற். 41—14, 15

முதலியவற்றான் உணரப்படும்.

எழுத்தோ எழுத்தின் கூட்டமோ அமைவது மட்டும் போதாது; அதற்குப் பொருள் இருந்தால்தான் சொல் எனப்படும் ஆதலின், பொருளற்ற இறிஞி மிறிஞி என்பன சொல்லாகா என்பது.

தொடர்தல்-மூன்று முதலிய எழுத்துக்களாகத் தொடர்தல். அங்ஙனம் தொடருங்கால், பகாப்பதம் மூன்று எழுத்து முதல் ஏழு எழுத்து எல்லைகாறும் தொடர்வதற்கு அறம் முதலியனவும், பகுபதம் அவ்வாறு ஒன்பது எழுத்து எல்லைகாறும் தொடர்வதற்குக் கூனன் முதலியனவும் எடுத்துக் காட்டுக்களாம். எழுந்திருந்தான் என்பதில் இரு என்ற இடைநிலை அசையாகத் தொடர்ந்தது; பொருத்துவிக்கின்றனன் என்பதில் வி என்ற பிறவினைவிகுதியும் பகுதியொடு சேர்ந்திருத்த

லானும், அஃது இணைதற்குக் ககரம் சந்தியாகத் தொடர்தலானும் பகுபதம் ஒன்பது என்ற எழுத்து எல்லையைக் கடந்துவரும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுப்பெயர்—பிரித்துத் தனித்தனியே பொருள் செய்ய இயலாதபடி ஒரு பிண்டமாக இணைந்து பொருள் தரும் பெயர்களது ஈட்டம் ஆதலின், 'சேரமான் யானைக் கட் சேஎய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை' முதலியன ஒரு சொல் போலவே கொள்ளப்படும். பல சொற்களாகக் கொள்ளின், சேரமானும் யானைக்கட்சேயும் மாந்தரனும் சேரலும் இரும்பொறையும் வெவ்வேறு பெயர்களாகிப் பலரையும் குறிக்குமாறு அறிக. ஒட்டுப் பெயர்க்கு எழுத்து வரையறை இல்லை என்பதைப் 'பகாப்பதம் ஏழும்' நன். 29 என்ற நூற்பா உரையுள் மயிலைநாதரும் குறிப்பிட்டுள்ளார்.

'இனி, 'ஓரெழுத்து ஒருமொழி' தொல். 45 என்ற நூற்பாஉரையில் நச்சினார்க்கினியர் 'ஆ கா — தா — ஓரெழுத்து ஒருமொழி; மணி — வரகு — கொற்றன் — ஈரெழுத்து ஒருமொழி; குரவு — அரவு — மூவெழுத்து ஒரு மொழி; கணவிரி - நாலெழுத்து ஒருமொழி; அகத்தியனார் - ஐயெழுத்து ஒருமொழி; திருச்சிற்றம்பலம் — ஆறெழுத்து ஒருமொழி; பெரும்பற்றப்புலியூர் - ஏழெழுத்து ஒருமொழி' என எடுத்துக்காட்டி, ''ஆசிரியர் ஒற்றும் குற்றுகரமும் எழுத்து என்று கொண்டனர் ஆதலின் மா-கா-என்கின்ற சொற்கள் மால் கால் என ஒற்று அடுத்துழி ஒற்றினான வேறு பொருள்தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத்து ஒருமொழி என்றும், நாகு வரகு என்னும் குற்றுகர ஈற்றுச் சொற்களின் குற்றுகரங்கள் சொல்லோடு கூடிப் பொருள்தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத்து ஒரு மொழி மூவெழுத்து ஒருமொழி என்றும் கோடும் என்பார்க்கு, ஆசிரியர் பொருளைக் கருதாது மாத்திரை குறைந்தமை பற்றி 'உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ' தொல். செய். 44 'குறிலே நெடிலே குறிலிணை'

தொல். செய். 3 என்னும் செய்யுளியல் சூத்திரங்களால் இவற்றை எழுத்து எண்ணவும் அலகிடவும் பெறா என விலக்குவர் ஆதலின், அவற்றால் ஈண்டு ஈரெழுத்து ஒரு மொழியும் மூவெழுத்து ஒருமொழியும் கொள்ளின் மாறுகொளக்கூறல் என்னும் குற்றம் தங்கும் என மறுக்க'' என்றார்.

இனி, 'நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி'
தொல். 43

'குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே'
தொல். 44

என்பனவற்றான் மெய்க்குக் குறுமை நெடுமை இன்மையின் உயிரும் உயிர்மெய்யும் ஆகிய நெடிலும் குறிலுமே மொழியாம் என்று கூறி, மீட்டும் அதனையே இச் சூத்திரத்தான் 'ஓரெழுத்து ஒரு மொழி' என்று எடுத்து அதனோடே ஈரெழுத்தையும் இரண்டு இறந்ததனையும் கூட்டி மொழியாகக் கோடலின். ஒற்றினைக் கூட்டி எழுத்தாகக்கோடல் ஆசிரியருக்கு கருத்தன்மை உணர்க.

'அகரமுதல்—னகர இறுவாய் முப்பஃது என்ப' தொல். 1 என ஒற்றினையும எழுத்து என்றது எழுத்தின் தன்மை கூறிற்று; ஈண்டு மொழியாந்தன்மை கூறிற்று'' எனவும், 'மொழிப்படுத்து இசைப்பினும்' தொல். 53 என்ற நூற்பா உரையில் 'இஃது ஒற்றும் குற்றுகரமும் ஈண்டு எழுத்துக்களொடு கூட்டி எண்ணப்பட்டு நிற்கும் என்பதூஉம், செய்யுளியலுள் எண்ணப்படாது நிற்கும் என்பதூஉம் கூறுகின்றது' எனவும் ''ஒற்றும் குற்றுகரமும் பொருள்தரும் நிலைமையை ஆராய்ந்து சொல்லாகச் சேர்த்துச் சொல்லினும், செய்யுளியலுள் ஒற்றும் குற்று கரமும பொருள்தரும்மனும் மாத்திரைகுறைந்து நிற்கும் நிலைமையை நோக்கி எழுத்து எண்ணப்படா என்று ஆண்டைக்கு வேறாகக்கூறினும், அவ்விரண்டு இடத்தும் அரைமாத்திரை பெற்று நிற்கும் ஒற்றும் குற்றுகரமும்

முற்கூறிய எழுத்தாம் தன்மை 'திரியா என்று கூறுவர் புலவர்' எனவும், 'இதனால் ஒற்றும் குற்றுகரமும் எழுத்தாகி நின்று பொருள்தந்தும எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறா என்பதாயிற்று' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளசெய்திகள் இவ்வாசிரியருக்கு உடன்பாடு ஆவன அல்ல ஆதலின், அவர் செய்யுளியலில் இவை பற்றிக் கூறிய செய்தி பொருள் பற்றிய மொழி ஆக்கத் தின்கண் பொருந்தாது என்று குறிப்பிட்டு, ஆசியர் குற்றியலுகரத்தையும் எழுத்தாக எண்ணி உயிர்த் தொடர் முதலாகப் பெயரிட்டுள்ளதனைக் குறிபபிடு கிறார்.

இலக்கண விளக்கச் சூறாவளி

நன்னூலார் பதவியல் கூறியதற்கு முதல்நூல் வட நூல் ஆகலின், அது தோனற மொழியியல் என்னாது பதவியல் என வடசொல்லான் அதற்குப் பெயரிட்டு அவ் வோத்துள் வடஎழுத்துத் தமிழில் வருமாறும் கூறினார். இவர் தமிழ் மொழி மாத்திரைக்கே இலக்கணம் கூறுதும் எனப் புகுந்தமையான், பதவியல் என வடமொழியால் குறிப்பிடுதல் பழுதாம் என்க.

எழுத்துத் தனித்து நிற்றலானும் ஒன்றொடு ஒன்று தொடர்ந்து நிற்றலானும் அன்றே தனிமொழி தொடர் மொழி எனப் பெயர் பெற்றன? அங்ஙனம ஆகலின் ஈரெழுத்து இணைந்ததனையும் தொடர்மொழி என னாக் கால், அவை தொடர்ந்தனவும் அல்லவாய்ப் பொருளை விளக்குதலும் இல்லையாம் ஆகலின், ஈரெழுத்து ஒரு மொழியும் தொடர்மொழி என்றலே ஆசிரியர் தொல் காப்பியனாருக்கும் கருத்து ஆயினும் 'தொடர்அல் இறுதி' தொல். 214 எனவும், 'சொல்லிய தொடர் மொழி இறுதி' தொல். 145 எனவும், 'மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த—னகரத் தொடர்மொழி' தொல். 82 எனவும், 'நெட்டெழுத்து இம்பரும் தொடர்

மொழி ஈற்றும்' தொல். 36 எனவும், ஈரெழுத்துத் தொடர்மொழிக்கும் இரண்டனை இறந்த தொடர் மொழிக்கும் முடிவு வேறுபாடுகண்டு, முன்னர்ச் செய்கை செய்வதற்கு ஏற்ப ஈண்டு ஈரெழுத்து ஒருமொழி எனவும் தொடர்மொழி எனவும் பெயரிட்டுக் கருவி செய்தார். இதுவே ஆசிரியர் கருத்தாதல் 'தொடர்மொழி' என வாளா கூறாது 'இரண்டு இறந்து இசைக்கும் தொடர் மொழி' தொல். 45 என அடைகொடுத்து ஓதியதே இரண்டனை இறவாது இசைக்கும் தொடர்மொழியும் உண்டு எனப் பொருள்கொளக் கிடத்தலான் அறிக. நன்னூலார் கொண்ட நயத்திற்கு அவ்வாறு கருவி செய்ய வேண்டாமையின் இணைந்து இசைக்கும் தொடர்மொழியை வேறு கூறாது தொடர்மொழி என ஒன்றாகக் கூறினார். இவர் அக்கருத்து அறியாது தமக்கு வேண்டியவாறே உரைத்தார்.

இன்னும் இவ்வியல் முழுதினும் இவர் கூறியவற்றுள் குற்றங்களை விரிக்கப்புகின், விளையாட்டு மகளிர் இட்ட மணல்சோற்றில் கல் ஆராயப்புகுதலோடு ஒக்கும் என்று ஒழிக. அவை எல்லாம் விருத்தியுள் கூறியது பற்றி உய்த்து உணர்ந்து கொள்க.

சொல்லியல்பு சிறிதும் உணராமையான் தமக்கு வேண்டியவாறு எல்லாம் கூறினார்.

அமைதி

ஒன்று இரண்டு பல என்று குறிப்பிடும் தமிழ் மரபு ஈரெழுத்து ஒரு மொழிக் குன்றியலுகரம், தொடர் மொழிக் குன்றியலுகரம் என்பனவற்றை விளக்கிக்கூறப் பயன்படுதலானும், இவர் கூறும் புணர்ச்சிவிதிக்கண்ணும் 'குறில்வழிலள' நன். 228 முதலியவற்றிக்கு ஈரெழுத்து மொழியும் தொடர் மொழியும் என்ற பாகுபாடு பயன் தருதலானும் தொல்காப்பியனாரை ஒட்டி இவரும்

இணைமொழி, தொடர்மொழி என இரண்டாகப் பகுத்ததனால் குறைவு ஒன்றும் இல்லை; மாறாகத் தெளிவே உள்ளது. பதவியலின்கண் வடமொழி ஆக்கம் ஒன்று நீங்கலாக நன்னூலார் சுட்டிய பிறவற்றை எல்லாம் குறிப்பிட்டுள்ளார் ஆதலின், வடமொழி மரபு பற்றியவேனும் தமிழ்மொழிக்கும் தேவையான பகுதி விகுதி முதலிய பாகுபாடுகளை விளக்கிக்கூறும் இவ்வியலை இவரும் பதவியல் என்று பெயரிட்டது பொருத்தமே என்று அறிக.

நிலம், நீர்—இவை பிரிக்கப்படாத தனிமொழி.

தேரன், ஊரன்—இவை பிரிக்கப்படும் இணைமொழி

மூவர் வந்தார், அரசர் கூடினார்—இவை
தொடர்ந்து வந்த துணைமொழி

நங்கை, வேங்கை—இவை இருபொருள்
கொண்ட பொதுமொழி

முனிவர்கள், தேவர்கள்—இவை பன்மையைக்
காட்டும் கணமொழி

ஆண், பெண்—இவை இருதிணையிலும் கலந்து
பொதுவாக வந்த கலப்புமொழி. (மு.வீ.மொ. 9)

ஒத்த நூற்பாக்கள் :

'ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டுஇறந்து இசைக்கும் தொடர்மொழி
உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.'
தொல். 45

'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அதுபகாப் பதம்பகு பதமென
இருபால் ஆகி இயலும் என்ப.' நன். 128

'பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்துஈ றாகத் தொடரும் என்ப.' நன். 138

'சொன்ன எழுத்தினால் சொல்வதே சொல்லாம்.'

'மொழியே, தனிஇணை துணைபொது
கணம்தணம் கலந்து
மொழிஓர் ஏழ்என மொழிநரும் உளரே'
மு. வீ. மொ. 8

'மொழியே, ஓரெழுத்து ஆதிஒன் பான்எழுத்து
அந்தமாம்.' மு. வீ. மொ. 9

ஓரெழுத்தொரு மொழி

39. நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி
குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே.

இது மேற்கூறிப்போந்த மூவகை மொழியுள் ஓரெழுத்து ஒருமொழி இவ்வெழுத்துக்களான் ஆகும் என்கின்றது.

இ-ள்: நெட்டெழுத்தாகிய ஏழும் ஓரெழுத்தான் ஆகும் ஒருமொழியாம்; குற்றெழுத்தாகிய ஐந்தும் ஓரெழுத்தாய் நின்று ஒருமொழியாக நிறைதல்இல, இவற்றுள் சில நிறைக்கும் என்றவாறு.

ஏழும் என்ற முற்றுமை தொகுத்து ஈற்றசை ஏகாரம் விரித்தார். ஐந்தும் என்னும் முற்றும்மை ஈண்டு எச்சமாய் நின்றது. ஈண்டு நெட்டெழுத்து என்றது உயிரையும் உயிர்மெய்யையும்; குற்றெழுத்து என்றது உயிர் மெய்யுள் சிலவற்றை என்று கொள்க.

வரலாறு: ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவும், கா தீ பூ சே தை சோ கௌ எனவும், து நொ எனவும் வரும். பிறவும் அன்ன. ஒளகாரம் உயிர்மெய்க்கண் அல்லது வாராது. ஊ-இறைச்சி; ஓ-மதகுநீர்தாங்கும் பலகை; சோ-அரண்! உகர ஒகரங்கள் து நொ என மெய்யோடு கூடி அல்லது

வாராமையானும், ஒகரம் ஒழிந்த ஏனை நான்கு உயிரும் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எப்பொருள் என இடைச்சொல்லாய்ப் பெயரைச் சார்ந்து நின்று சுட்டுப்பொருளும் வினாப்பொருளும் உணர்த்து வது அல்லது தனித்துநின்று உணர்த்துதல் ஆற்றாமை யானும் 'குற்றெழுத்து ஐந்து மொழிநிறைபுஇல' என்றார்.

'நெட்டெழுத்து ... ... இலவே' என்றாரேனும், ஓரெழுத்து ஒருமொழி நெட்டெழுத்து ஏழானும் குற்றெழுத்துள் சிலவற்றானும் ஆகும் என்பது கருத் தாகக் கொள்க. அங்ஙனம் கொள்ளவே, ஏனை இரு வகை மொழியும் உயிர் ஒற்று உயிர்மெய்களான் ஏற்ற பெற்றி ஆகும் எனக் கோடும்.

விளக்கம் :

'முற்றிய உம்மை தொகைச்சொல்
எச்சக் கிழவி உரித்து மாகும்' [மருங்கின்
தொல். சொல். 287

என்பததனால், 'குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே' என்பதற்குச் சில மொழியாக நிரம்பும் எனப் பொருள் உரைத்தார். நன்னூலார் நெட்டெழுத்துக்களை உயிர் உயிர்மெய் என இருகூறாகப் பிரித்து விரித்து,

'உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நான்கும் யவ்வில் ஒன்றும்
ஆகும்நெடில் நொது ஆங்குறில் இரண்டோடு
ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின' நன். 128

என நூற்பாவும் யாத்துள்ளார்.

'நெட்டெழுத் தேழே ஓரெழுத்து ஒருமொழி'
தொல். 43

"இஃது ஓரெழுத்து ஒருமொழி உணர்த்துதல் நுதலியவற்றுள் நெட்டெழுத்தான் ஆம் மொழிஆக்க

கூறுகின்றது. நெட்டெழுத்தாகிய ஏழும் ஓரெழுத்தான் ஆகும் ஒரு மொழியாம் என்றவாறு.

முற்றும்மை தொகுத்து ஈற்றசை ஏகாரம் விரித்தார். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ எனவரும். ஔகாரம் உயிர்மெய்க்கண் அல்லது வாராது. ஊ என்பது தசை.இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் விதி கா தீ பூ சே தை கோ எனவரும். இவை தம்மை உணர நின்றவழி எழுத்தாம்; இடை நின்று பொருள் உணர்த்தியவழிச் சொல்லாம். நெட்டெழுத்து ஏறியமெய் நெட்டெழுத்தாயும் குற்றெழுத்து ஏறிய மெய் குற்றெழுத்தாயும் நிற்றலையன்றி, மெய்க்கு நெடுமையும் குறுமையும் இன்மை உணர்க.''

'குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே ,
தொல். 44

''குற்றெழுத்து ஐந்தும் மொழி ஆகா. அவற்றுள் சில மொழி ஆகும் என்பது உணர்த்துகின்றது. குற்றெழுத்தாகிய உயிர் ஐந்தும் தாமே நிறைந்து நின்று மொழியாம் என்றவாறு.

எ-டு: நொ. து எனவரும் இவை உயிர்மெய்க்கண் அல்லது வாராமையானும், உயிர்க்கண்ணும் ஒகரம் ஒழிந்த ஏனை நான்கு உயிரும் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எப்பொருள் எனத் தனித்து நின்று உணர்த்தல் ஆற்றோ இடைச்சொல்லாய்ப் பெயரைச் சார்ந்து நின்று சுட்டுப்பொருளும் வினாப் பொருளும் உணர்த்துதலானும் 'நிறைபுஇல' என்றார். முற்றும்மை ஈண்டு எச்சப்பட்டு நின்றது என் உணர்க'' என்ற இவ்விரு நூற்பாக்களுக்கும் நச்சினார்க்கினியர் வரைந்த உரையே பெரும்பாலும் கொள்ளப்பட்டமை காண்க.

'நெட்டெழுத்து ஏழும் [illegible]த்து ஒருமொழி' என்பதன்கண் ஏழும் என்ற சொல்லின் உம்மையைத்

விளக்கம்

ஆடுஉ முதலியன பொருட்பெயர்.
வான் முதலியன இடப்பெயர்.
யாண்டு முதலியன காலப்பெயர்.
கண் முதலியன சினைப்பெயர்.
செம்மை முதலியன பண்புப்பெயர்.
உணல் முதலியன தொழிற்பெயர்.
இவை ஆறும் பகாப்பதம்.

அவன் முதலியவற்றின் அன் ஈறு முதலியவற்றைப் பிரித்தால் பகுதியாகும் 'அ' முதலிய இடைச்சொற்கள் தனித்து நிற்றல் ஆற்றாமையின், அவையும் பகாப் பதமேயாம் என்பது இவர் கருத்து. தமன் முதலிய வற்றின் 'தம்' முதலிய பகுதிகளும் தனித்திருந்து பொருள்தாராமையின் அவையும் பகாப்பதமே என்றார்.

'தநநுஎ என்னும் அவைமுத லாகிய
கிளைநுதல் பெயரும் பிரிப்பப் பிரியா.'
தொல். சொல். 401

என்ற நூற்பா உரையுள், தமன் முதலியன தனக்கு வேண்டியவன். தமக்கு வேண்டியவன் என்ற இரு பொருண்மைக்கண்ணும் வருதலின பகுதி ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாகநிற்றலின அவற்றைப் பிரித்தல் கூடாது என்றார் சேனாவரையர். இதனையே பிரயோக விவேக நூலார் 'சிவன்தமர்' 'மணிவண்ணன் தமர்' என ஒருமைக்கண்ணும், 'கல்லாமா வன்னார் தமர்' (குறள் 814) எனப் பன்மைக்கண்ணும் வருமாற்றை விளக்கி வரைந்தார். (பி.வி. 32 நூற்பா உரை)

இனி, நச்சினார்க்கினியர் 'தமன் முதலியவற்றின் தம் முதலியன பிரிந்து நின்று பொருள் உணர்த்தவும் பின் வருகின்ற அன் முதலியன பொருள் உணர்த்தாது இடைச்சொல்லாயே நிற்றலின், இவை பிரிப்பப்பிரியா;

இம்பர் உம்பர் இம்மை உம்மை என்றாற் போல்வனவும் அன்ன' என்றார். தொல். சொல். 410 உரை.

'அவன் அவள் அவர் என்னும் தொடக்கத்தன ஈறு பகுக்க வேறுபால் காட்டலின் பகுபதமாம் பிற எனின், அவை ஒன்றாய் நின்று ஒருபொருள் ஆவது அல்லது ஈறு பிரித்தால் பகுதி வேறு பொருள் படாமையின் அவற்றிற்கும் பகுதி விகுதித்தன்மை இன்மையின் ஆகா எனக' என்றார் மயிலைநாதர். நன். 130 உரை.

'பெயருள்ளும் சாத்தை உடையான் சாத்தன், கொற்றை உடையான் கொற்றன், கூத்தை உடையான் கூத்தன் என்று இவ்வாறு பொருள்படின் அவை பகாப் பதம் ஆகா. இடுகுறி மாத்திரையாய் நிற்கிலே பகாப் பதம் ஆவது எனக் கொள்க' நன். மயிலை. 130 உரை.

சாத்தன் கொற்றன் என்பனவற்றின் பகுதி சாத்து கொற்று என்பன ஆமேனும் அப்பகுதிப்பொருள் கொண்டு அவற்றிற்குப் பொருள் கொள்ளாமையின், அவற்றைச் சாத்தன் கொற்றன் என இடுகுறிப் பெயராகவே கோடலின், அவையும் பகாப்பதம் எனலே இவர் கருத்தாம்.

கங்கைகொண்டசோழபுரம் முதலியன பிண்டமாய் ஒரே பொருளைக் குறிக்கும் பெயராய் வருதலின், அவற்றையும பகாப்பதம் என்று கொள்க என்றார்.

சாத்தன் சாத்தி என்ற விரவுப்பெயர்களின் அன் ஈறும் இகரஈறும் அஃறிணைக்கும் பொதுவாய்ப்பொருள் தருதலின், இவற்றைப் பதம் பிரித்துக் காண்டல் ஏலாது என்றார்.

உயர்திணையோடு அஃறிணை விரவிவரும் விரவுப் பெயர்; தொல்காப்பியனார் அல்வழியினை 'வேற்றுமை அல்வழி' என விளக்கிக் கூறுவதுபோல, விரவுப்பெயர் உயர்திணையோடு அஃறிணையும் காட்டும் ஆற்றல்

உடைய பெற்றியை உட்கொண்டு விளக்கும் முகத்தான், 'அஃறிணை விரவுப் பெயர்' என்றே விரவுப் பெயருக்கு இயற்கை அடை புணர்த்து 'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே' தொல். 155 'அஃறிணை விரவுப் பெயர்க்கு அவ்வியல் நிலையலும்' தொல். 157 'கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்' தொல். சொல். 150 என எழுத்துப் படலத்தும் சொற்படலத்தும் அதன் உண்மைத் தன்மைத் தோற்றத்தைக் கூறியதை நச்சினார்க்கினியர் விளக்கி உள்ள செய்தியை (தொல். 155 உரை) உளங்கொண்டு இவ்வாசிரியர் விரவுப் பெயரை உயர்திணையோடு அஃறிணை விரவிவரும் பெயர் என்று குறிப்பிட்டது உணரத்தக்கது.

ஒத்த நூற்பாக்கள்:

'பகுப்பால் பயனற்று இடுகுறி ஆகி
முன்னே ஒன்றாய் முடிந்துஇயல் கின்ற
பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்.'
நன். 130

'மொழிபெயர் வினையென மொழியப் படுமே.'
மு. வீ. மொ. 4

'பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலொடு
வருவது பெயரென வழுத்தப் படுமே.'

பகுபதம் – இயல்பும் வகையும்

41. பகுபதம் பகுக்கும் பண்பிற்று ஆகி
வினையே வினைப்பெயர் எனஇரு பாற்றே.

இது பகுபதத்தினது இயல்பும் அதன் பகுதியும் உணர்த்துகின்றது.

இ-ள் : மேற்கூறிய பகுபதம் பகுதி விகுதி முதலிய வாகப் பகுக்கப்படும் இயல்பினை உடைத்தாகி, வினையும் வினைப்பெயரும் என இரண்டு வகையினை உடைத்து என்பதாம் என்றவாறு

ஈண்டு வினையை முற்கூறினார், அது காரணமாக வரும் பெயர் என்பது அறிவித்தற்கு, வினை என்றது. ஈண்டுத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினை முற்றும். சிறுபான்மை பெயரெச்ச வினையெச்சங்களும் உடன்கோடலும் ஒன்று. இவற்றின் இயல்பு எல்லாம் மேலைச் சொல்லோத்தினுள் காண்க.

வரலாறு: நடந்தான் நடக்கின்றான் நடப்பான் எனவும், குழையன் நிலத்தன் வேனிலான் தோளான் செய்யன் ஊணன் என முறையே முக்காலமும் காட்டும் வினை முற்றுப் பகுபதமும், பொருள் ஆதி ஆறும் காரணமாகத் தோன்றும் வினைக்குறிப்புமுற்றுப்பகுபதமும் வந்தவாறு காண்க. பிறவும் அன்ன.

இவற்றையே பகுத்துக்கூறி, இருவகை வினைப் பெயர்க்கும் உதாரணம் ஆமாறு காண்க.

நடந்தவன் நடக்கிறவன் நடப்பவன் செய்யவன் கரியவன் என வினை வினைக்குறிப்புப் பெயர்ப்பகுபதமும் ஈண்டே அடக்கிக்கொள்க. 4

விளக்கம் : வினையை முற்கூறினார், வினை முற்றுப் படுத்தல் ஓசையால் வினையால் அணையும்பெயர் ஆகும் ஆதலின். நடந்தான் முதலிய மூன்றும் முக்கால வினைகளுக்கும் எடுத்துக்காட்டு.

குழையன்	— பொருட்பெயர் அடிப்படையாகத் தோன்றிய முற்று.		
நிலத்தன்	— இடப்பெயர்	,,	,,
வேனிலான்	— காலப்பெயர்	,,	,,
தோளான்	— சினைப்பெயர்	,,	,,
செயலன்	— பண்புப்பெயர்	,,	,,
ஊணன்	— வினைப்பெயர்	,,	,,

வினைச்சொல் பகுதியில் பொருள் சிறந்து நிற்கும்; பெயர்ச்சொல் விகுதியில் பொருள் சிறந்து நிற்கும். பொருள் சிறக்கும் இடத்தை எடுத்தும், ஏனையவற்றைப் படுத்தும், கூறுதல்வேண்டும். வேண்டவே, ஒருசொல் வினைமுற்றாயின், எடுத்தல் ஓசையால் கூறப்படும்; வினையால் அணையும் பெயராயின், படுத்தல் ஓசையால் கூறப்படும். இதுவே உரையாசிரியர் எல்லோருடைய கருத்துமாம்.

நடந்தவன் முதலிய மூன்றும் தெரிநிலை வினைப் பெயர்ப் பகுபதத்திற்கு எடுத்துக்காட்டு; செய்யவன் முதலியன குறிப்பு வினைப் பெயர்ப்பகுபதம்.

ஒத்த நூற்பாக்கள் :

'பொருள் இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.'

நன். 131

'வினைபல நிகழினும் வினைஎனப் படுமே.'

மு. வீ. மொ. 6

பகுபத உறுப்புக்கள்

42 பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும ஏற்பவை
முன்னிப் புணர்த்தது முடித்தனர் கொளலே.

இது மேற்கூறிய பகுபதத்தினை இக்கருவிகளான் முடிக்க என்கின்றது.

இ-ள் : பகுதி முதலிய ஆறனுள்ளும் ஈண்டைக்கு ஏற்பன இவை எனக் கருதிக் கொணர்ந்து கூட்டி மேற்கூறிய பகுபதத்தினை முடித்துக்கொள்க என்றவாறு.

இவற்றுள் பகுதி பெரும்பாலும் வேறுபடாது முதற்கண் நிற்பது; விகுதி வேறுபட்டு இறுதிக்கண் நிற்பது; இடைநிலை பெரும்பாலும் இனையது இத்துணையது என்று அளத்தற்கு அரியதாய்ப் பதம்முடிப்புழிக் காலமும் பொருண்மையும் காட்டி ஆண்டே காணப்படுவது; சாரியை அன் ஆன் முதலாக எடுத்து ஓதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ச் சிறுபான்மை பொருள் நிலைக்கு உதவி செய்து பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவது; சந்தி இன்னது வந்தால் இன்னது இன்னதாம் எனப் புணர்வுழித் தோன்றும் செய்கை; விகாரம் செய்யுள் தொடையும் பதத்துள் அடிப்பாடும் ஒலியும் காரணமாக வலித்தல் மெலித்தல் முதலாக ஆக்குவது. இஃது இடைநிலை முதலியவற்றான் முடியாதவழி வருவது. 'ஏற்பன' எனவே, ஒன்றற்கே இவை ஆறும் வரவேண்டும் என்னும் யாப்புறவு இல்லை என்பதூஉம் பெற்றாம். 5

விளக்கம் : இடைநிலை காலம் காட்டுவது—செய்தான் என்புழித் தகர ஒற்றாகிய இடைநிலை இறந்த காலம் காட்டுவது போல்வது.

பொருண்மை காட்டுவன—அறிஞன் என்ற சொல்லில் உள்ள ஞகர இடைநிலை போல்வன.

சாரியை பொருள்நிலைக்கு உதவுதல் ஆவது—சே என்பது மரத்தினையும் எருதினையும் உணர்த்தும் பல பொருள் ஒரு சொல்லாம். கோடு என்பது கிளையினையும் கொம்பினையும் உணர்த்தும் பலபொருள் ஒரு சொல்லாம். எருதின் கோடு என்பதற்குச் சேவின் கோடு எனவும், சேமரத்தின் கிளை என்பதற்குச் செங்கோடு எனவும் புணர்த்தல் வேண்டும். ஈண்டு இன் சாரியை வந்து அடைவதால், சே என்பது எருதினைக் குறிக்கும் சொல்லாதல் உணரப்படும். இவ்வாறு பல பொருளுக்கும்

பொதுவாகிய சொல்லினை ஒன்றற்கே உரியது ஆக்குதற்கு வந்த இவ் 'இன்சாரியை' பொருணிலைக்கு உதவியதாம்.

எல்லாம் என்பது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான பெயர். அஃது அற்றுச்சாரியை பெற்று எல்லாவற்றையும் என வரின், ஆண்டு எல்லாம் என்பது அஃறிணைச் சொல்லாம். எல்லா நம்மையும் என நம்முச் சாரியை பெற்றுவரின், எல்லாம் என்பது உயர்திணைச் சொல்லாம். எனவே, அற்று நம் என்பன பொருண்மை காட்டின.

கார்த்திகை என்பது திங்கள் நாள் இரண்டற்கும் பொதுவாகிய பெயராம். கார்த்திகையான் கொண்டான் என்புழி, கார்த்திகை நாளினை உணர்த்தும்; கார்த்திகைக்குக் கொண்டான் என்புழி,குகரச்சாரியை திங்களை உணர்த்தும். இவ்வாறு ஆனசாரியையும குகரச்சாரியையும் பொருண்மை சுட்டின. பிறவும் அன்ன.

ஒரே பகுபதத்தில் இவை ஆறும் வரல் வேண்டும் என்பது இன்று என்பது.

		ப	ச	இ	சா	வி	விகாரம்
கூனன்	—	கூன்				அன்	
வைதான்	—	வை		த்		ஆன்	
வைத்தான்	—	வை	த்	த்		ஆன்	
வைத்தனன்	—	வை	த்	த்	அன்	அன்	
நடந்தனன்	—	நட	த்(ந்)	த்	அன்	அன்	ந்

என்ற எடுத்துக்காட்டுகளால் உணர்க.

இடைநிலை முதலியபற்றி மயிலைநாதர் கூறுவது:
(நன். 32 உரை)

''இடைநிலை ஆவன பெரும்பாலும் இனைய இத்துணைய என்று அளத்தற்கு அரியவாய்ப் பதம் முடிப்புழிக் காலமும் பொருண்மையும் காட்டி ஆண்டே காணப்படுவன. சாரியை ஆவன அன் ஆன் முதலாக எடுத்து ஓதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ப் பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவன. சந்தி ஆவன இன்னது வந்தால் இன்னது இன்னதாம் என வருவன. விகாரம் ஆவன பதத்துள் அடிப்பாடும் செய்யுள் தொடையும் ஒலியும் காரணமாக வலித்தல் மெலித்தல் முதலாயினவாக வருவன. இவை இடைநிலை முதலானவற்றால் முடியாதவழி வருவன எனக் கொள்க. 'ஏற்பவை' எனவே, ஒன்றற்கே இவை ஆறும் வர வேண்டும் என்னும் யாப்புறவு இல்லை எனக் கொள்க'' என்பது. இதனையே இவ்வாசிரியர் பெரும்பாலும் குறிப்பிட்டுள்ளார்.

'அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே' தொல்.118 என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினிர் சாரியை என்ற தன்பொருள் 'வேறாகி நின்ற இருமொழியும் தம்மில் சார்தற்பொருட்டு இயைந்து நின்றது' என்று குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் கூறும் இவ்விலக்கணத்தை இவ்வாசிரியர் புணர்மொழிகளிடையே வரும் சாரியைகளைக் குறிப்பிடும் 'அன் ஆன் இன் அல்' என்ற நூற்பா (59) உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இனிப் பகுபத உறுப்பு ஆறனையும் பற்றி நன்னூல் விருத்தி 'தன் இயல்பின் நிற்றலின் பகுதி என்றும். தன் இயல்பில் நிற்கும் ஒருவன் உள்ளத்தை ஆடை அணி முதலியவற்றோடு ஒருத்தி முன்னின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தல் போலத் தன்இயல்பில் நிற்கும் பகுதிப்பொருளை இடைநிலை முதலியவற்றோடு விகுதி முன்நின்று தன்இடத்து அவாவ விகாரப்படுத்தலின் விகுதி என்றும். முதல்நிலைப் பகுதிக்கும் இறுதிநிலை விகுதிக்கும் இடைநிற்றலின் இடைநிலை என்றும்

இவ்விகுதி முதலிய புணர்ப்பைச் சார்ந்து ஆண்டைக்கு இயைந்து நிற்றலின் சாரியை என்றும், நால்வகைச் சொல்லும் ஒன்றோடொன்று சந்தித்தலான் வரும் தோன்றல் திரிதல் கெடுதல்களைச் சந்தி என்றும், செய்யுள் தொடைமுதலியவற்றான் வலித்தல் மெலித்தல் முதலாக, விகாரப் படுத்தலின் விகாரம் என்றும் பெயர் பெற்றன' என்று குறிப்பிடுகிறது. நன். 133

ஒத்த நூற்பா :

'பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் பணர்ப்ப முடியுமெப் பதங்களும்' நன். 133

இயற்றுதல் கருத்தாவின்
தெரிநிலை வினைமுற்றுப் பகுதி

43. நடவா மடிசீ விடுகூ வேவை
நொ போ வெளவுரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகு என்று
இன்னவை முதலா எல்லா வினையும்
தெரிநிலை வினையின் முதல்நிலை ஆகும்.

பகுபதம் முடித்தற்கு உரியகருவி ஆறனுள் பின்னைய மூன்றும் மேல்புணரியலுள் பெறப்படுதலின், அவை ஒழித்து ஏனைய கூறுவனவற்றுள். இது நிறுத்தமுறை யானே இயற்றும் வினைமுதலும் ஏவும வினைமுதலும் என்னும் இருவகை வினைமுதலினுள் இயற்றும் வினை முதலான் நிகழ்த்தப்படும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதத்திற்கு உரிய பகுதி கூறுகின்றது.

இ-ள் : நட என்பது முதல் அஃகு என்பது ஈறாகக் கிடந்த இவ்வியல்பினவற்றை முதலாக உடையவாய் இவ்வாறு வரும் எல்லா வினைச்சொற்களும் இயற்றும்

வினைமுதலான் நிகழ்த்தப்படும் தெரிநிலை வினை முற்றுப் பகுபதத்தினுடைய பகுதிகளாம் என்றவாறு.

இயல்பு—உயிரும் ஒற்றும் குற்றுகரமும் ஆகிய இருபத்துமூன்று ஈற்றவாகிப் படுத்தல் ஓசையான் அச்செய்கை மேல் பெயர்த்தன்மைப்பட்டு வினைமாத்திரையே உணர்த்தி நிற்கும் தன்மை.

குற்றுகரத்தை வேறு பிரித்ததனால் போக்குபாய்ச்சு ஊட்டு நடத்து எழுப்பு தீற்று இத்தொடக்கத்த வாய்பாட்டான் வருவனவும் கொள்க.

ஏவல் வினைமுதல் தெரிநிலை வினையின்—மேவரு பகுதி, என வரும் சூத்திரத்துள் பெறப்படுதலின், ஈண்டு இயற்றும் வினைமுதல் தெரிநிலை வினையின் பகுதியே கூறிற்று என்பது பெற்றாம். இவ்வாறு நின்ற முதல் நிலைகளை வடநூலார் தாது என்ப.

இவற்றால் பகுபதம் வருமாறு—நடந்தான் வந்தான் மடிந்தான் சீத்தான் விட்டான் கூவினான் வெந்தான் வைத்தான் நொந்தான் போயினான் வெளவினான் எனவும், உரிஞினான் உண்டான் பொருதினான திருமினான் தின்றான் தேய்த்தான் பார்த்தான் சென்றான் வவ்வினான் வாழ்ந்தான் கேட்டான் எனவும்,

அஃகினான் போக்கினான் பாய்ச்சினான் ஊட்டினான் நடத்தினான் எழுப்பினான் தீற்றினான் எனவும் வரும். பிறவும் அன்ன.

விளக்கம் : பின்னைய மூன்று—சாரியை சந்தி விகாரம்

அரசன் கோயிலைக் கட்டினான்—ஏவும் வினைமுதல்.

தச்சன் கோயிலைக் கட்டினான்—இயற்றும் வினைமுதல்

இவ்வியல்பு என்றது—இவ்விருபத்துமூன்று ஈற்றுச் சொல்லும், பெயர் பகுதியில் பொருள் சிறவாது ஆதலின்

படுத்தல் ஓசை உடையவாய்த் தம்மால் நிகழ்த்தப்படும் வினைகளைச் சுட்டி நிற்கும் வினைப்பகுதிகளாகிய முதல்நிலைத் தொழிற்பெயர்களின் இயல்பு. வடநூலார் வினை முதல்நிலையைத் தாது என்பர்.

தன்வினை பிறவினை ஆயகாலத்துக் குற்றியலுகர ஈறு ஆறனுள் ஓரீற்றது ஆதலும் கூடும்.

தன்வினை	பிறவினை	தன்வினை	பிறவினை
போ	—போக்கு	நட	—நடத்து
பாய்	—பாய்ச்சு	எழு	—எழுப்பு
உண்	—ஊட்டு	தின்	—தீற்று

தாய் மகவுக்கு உணவை ஊட்டினாள் என்புழி, ஊட்டுதல் தொழிலை இயற்றியவள் தாய் ஆதலின், ஊட்டினாள் என்பது இயற்றும்வினை ஆதல் காண்க.

அஃகு—தன்வினைக் குற்றுகர ஈறு.
தீற்றுமுதலியன—பிறவினைக்குற்றுகர ஈறு.

'குற்றுகரத்தை வேறு பிரித்து ஓதிய அதனால், போக்கு பாய்ச்சு உருட்டு நடத்து எழுப்பு தீற்று என்றல் தொடக்கத்து வாய்பாட்டான் வருவனவும் கொள்க' என்பது மயிலைநாதர் உரை. நன். 136

இவ்வீற்றுப் பகுதிகளை எல்லாம் 'செய் என் ஏவல் வினைப் பகுதி' என்றார் மயிலைநாதர். 'இவை செய் என்னும் ஏவல்வினையின் பகுதிகளும் ஏனைய வினைகளின் பகுதியும் ஆம்' என்றார் நன்னூல் விருத்திகாரர்; 'செய்யென் வினைப்பகுதி என்ற துணையானே செய் என் ஏவல்பகுதியும் அடங்காதோ, வேறு கூறவேண்டியது என்னை எனின், நட வா உண் தின் என்னும் தொடக்கத்து முதனிலைகளே விகுதியொடு புணராது தனித்துநின்று ஓசை வேறுபாட்டான் முன்னிலை ஏவல் ஒருமை எதிர்கால வினைமுற்றுப் பொருண்மை உணர்த்தினவோ, விகுதியொடு புணர்ந்து நின்றே அப் பொருண்மை உணர்த்தினவோ என்று ஐயுறுவார்க்கு

ஐயம் அறுத்தற்குக் கூறியது என்று உணர்க' என்று விளக்கமும் கூறினார்! இப்பகுதிகள் திணை பால் இடம் காலம் விதி மறை பொதுச் சிறப்பு ஆதியோடும் கூடிய முற்று ஈரெச்சங்களுக்கும் தொழிற் பெயர்களுக்கும் பகுதியாம் என்பதையும் சுட்டியுள்ளார்.

நடவா முதலியவற்றை ஏவல் வினையின் பகுதி என்றே கருதுதல் கூடாது என்பது இலக்கணக்கொத்து நூலாருடைய கருத்தும் ஆகும். அவர் கூறுவன பின் வருமாறு :

'முதல்நிலைகள் முன்னிலை ஏவல் ஒருமை எதிர்கால முற்றுச் சொல் ஆகா. எங்ஙனம் எனின், முதல்நிலை தனியே நின்று முன்னிலைக்கண் சென்றதாயின், அவ்வாறு ஏனை ஈரிடத்தினும் சேறல்வேண்டும்;செல்லாதாகலின் முன்னிலை அன்று;ஏவல் ஆயின் முதல்நிலைக்கண் வி. பி இணைந்து வேறு பொருள்பட்டாற்போல, ஐ ஆய் இகர விகுதி கூடில் வேறு பொருள்படவேண்டும்; அஃது இன்று; முதல்நிலை தானே ஏவலாய் இருக்கவே அதன்மேல் மூன்று விகுதியும் விதித்தல் நின்று பயன் இன்மையாம் ஆகலான் ஏவலன்று. நடந்தார் என்புழி, நட என்னும் வினை பன்மைப்பாற் பொருள்படலின் ஒருமை அன்று. நடந்தான் என்புழி, நட என்னும் சொல் இறந்தகால வினை ஆதலின் எதிர்காலம் அன்று. நடத்தல் என்புழி, நட என்னும் சொல் பெயராயே நிற்றலின் வினை அன்று. செய்குன்று,செய்தக்க அல்ல, அறிகொன்று, இச்சொல் தன்று, வழு, வழுவற்றது, இவ்வயலுக்கு ஆயிரம் முடி நட்டான் என்புழி. ஈரெச்சம் தொழிற்பெயர் பொருட்பெயர் முதலானவற்றிற்கும் பொது ஆதலின் முற்று அன்று. அன்றியும், நடந்தேன் நடந்தான் முதலிய வழுவற்ற சொற்கள் எல்லாம் இட வழுவாயே விடும். விதியும் மறையும் ஒருசொற்கண்ணே உள்ளதே வினை. அக்குணம் இவற்றிற்கு இன்று. முதல்நிலை புடைபெயர்தலே வினை ஆகலின், நடவா

முதலியவற்றை எல்லா வினைச்சொற்களும் பிறத்தற்கு மூலமாகிய பொது முதல்நிலைத் தனிவினைப்பெயர் என்றே கொள்க. எல்லா வினைச்சொற்களாவன திணை பால் இடம் காலம் விதி மறை பொது சிறப்பு ஆதியோடு கூடிய முற்று எச்சங்களும் தொழிற்பெயர்களும் என்க.'
66 உரை

இதனை உட்கொண்டே நன்னூல் விருத்தியுரைகாரர் கூற்றும் அமைந்தமை காண்க.

இவ்வாசிரியர் இவ்விருபத்துமூன்று ஈற்றுச்சொற்களும் இயற்றும் வினைமுதலான் நிகழ்த்தப்படும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் பகுதிகளாம் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமை அறிந்து உணரத் தக்கது.

இவ்வாசிரியர் ஏவும் வினைமுதல்வினை, இயற்றும் வினைமுதல்வினை என்று பிரித்துக்கொண்டார் ஆதலின் 'நீநட' என்றாற்போல்வனவற்றுள் நடத்தல் தொழிலை இயற்றுவது 'நீ' என்ற வினைமுதல் போல்வன ஆதலின், இயற்றும் வினைமுதல் வினையாகவே அவை போல்வனவற்றைக் கொண்டார் என்பது. பிறர் கூறும் பிறவினையும் இவர்க்கு இயற்றும் வினைமுதல் வினையுள் அடங்குதல் காண்க.

ஒத்த நூற்பா :

'நடவா மடிசீ விடுகூ வேவை
நொபோ வெளவுரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகு என்று
எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
செய்என் ஏவல் வினைப்பகாப்பதமே.' நன். 137

ஏவுதல் கருத்தாவின்
தெரிநிலை வினைமுற்றுப்பகுதி

44. முன்னர் ஓதிய முதல்நிலை இறுதியின்
விபி என்றவற்று ஒப்பது தனிவரின்
ஏவல் வினைமுதல் தெரிநிலை வினையின்
மேவரு பகுதி ஆம்என மொழிப.

இஃது ஏவல் வினைமுதலான் நிகழ்த்தப்படும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதத்திற்கு உரியபகுதி கூறுகின்றது.

இ-ள் ; உயிர்ஈறு பதினொன்றும் ஒற்றுஈறு பதினொன்றும் தன்வினையும் பிறவினையும் ஆகிய இருவகைக் குற்றுகர ஈறு ஒன்றும் ஆகிய இருபத்துமூன்று ஈற்ற ஆகிய இவ்வியல் பினவற்றை முதலாக உடையவாய் அவ்வாறு வரும் மேற்கூறிய பகுதிகளின் இறுதிக்கண் வகர இகரமும் பகர இகரமும் ஆகிய இரண்டனுள் ஏற்பது தனியே வந்து இசையுமாயின், அவற்றை ஏவல்வினைமுதலான் நிகழ்த்தப்படும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதத்தினுடைய பொருந்திய பகுதிகளாம் என்று கூறுவர் அறிந்தோர் என்றவாறு.

இவற்றால் பகுபதம் வருமாறு ; நடப்பித்தான் வருவித்தான் மடிவித்தான் சீப்பித்தான் விடுவித்தான் கூவுவித்தான் வேவித்தான் வைப்பித்தான் நோவித்தான் போவித்தான் வெளவுவித்தான் எனவும்,

உரிஞுவித்தான் உண்பித்தான் பொருநுவித்தான் திருமுவித்தான் தேய்ப்பித்தான் பார்ப்பித்தான் செல்வித்தான் வவ்வுவித்தான் வாழ்வித்தான் கேட்பித்தான் எனவும்,

அஃகுவித்தான் போக்குவித்தான் பாய்ச்சுவித்தான் ஊட்டுவித்தான் நடத்துவித்தான் எழுப்புவித்தான் தீற்றுவித்தான் எனவும் வரும், பிறவும் அன்ன.

இவ்விரு சூத்திரத்தானும் கூறிய பகுதிகள் பெயரெச்ச வினையெச்சங்கட்கும், நடந்தான் வந்தான் முதலிய வினைமுற்றுப் பெயர்கட்கும் பகுதியாமாறு உணர்க. நடந்தவன் வந்தவன் நடத்தல் வருதல் முதலிய வினைப்பெயர்க்கும் இவை பகுதி ஆமாறு உரையிற்கொள்க.

இனி, இவ்வாறன்றி எடுத்தல் ஓசையான் முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்றுப் பகாப்பதங்கள் ஆகிய நட நடப்பி என்றாற்போல்வனவே பகுதியாம் என்றும், நடப்பிப்பி வருவிப்பி நடத்துவிப்பி என இவை இணைந்து வரும் எனக்கூறி அவற்றை இருமடி ஏவல் பகாப்பதம் என்றும், அவை நடப்பிப்பித்தான், வருவிப்பித்தான் நடத்துவிப்பித்தான் என்றாற் போல்வனவற்றிற்குப் பகுதியாம் என்றும் கூறுவாரும் உளர். அவ்வாறு கூறுவார்க்கு, அவை பகுதியாங்கால், அப்பொருண்மையின் திரிந்து படுத்தல் ஓசையான் அச்செய்கை மேல் பெயர்த் தன்மைப்பட்டு வினை மாத்திரையே உணர்த்தி நிற்கும் எனக்கூற வேண்டுதலின் முன்னிலை ஏவல் வினைமுற்றுப் பகாப்பதங்கள் பகுதி ஆகா என்றும், இருகால் ஏவுதல் கூறியது கூறலாம் ஆகலின் அவை இழிவழக்கு என்றும், அப்பகுதி களால் பிறந்த பகுபதங்களும் அவ்வியல்பினவாம் என்றும் மறுக்க. 7

விளக்கம் : இந்நூற்பா ஏவல் வினைமுதலான் நிகழ்த்தப்படும் வினைப்பகுதி கூறுகின்றது. அவன் நடப்பித்தான் என்ற தொடரில் நடத்தலாகியவினை வினைமுதலாகிய அவனால் நிகழ்த்தப்பெறாது, நடத்தலை ஏவுதலே அவனது தொழிலாய் இருத்தல் காண்க.

பகுதிகள்யாவும் 'ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர்'
தொல். 296

என்றார்போலப் படுத்தல் ஓசையான் அமைந்த முதல் நிலைத் தொழிற்பெயர் ஆதலின், நடப்பி வருவி என்றாற்

போல்வன பிகரமும் விகரமும் ஆகிய விகுதியொடு புணர்ந்துள்ள நிலையில் அங்ஙனம் தொழிற்பெயர் ஆதல் கூடாமையின், இம் முன்னிலை ஏவல் முற்றுக்கள் பகுதிஆகா என்பது இவர் கருத்து. இருகால் ஏவுதல் கூறியது கூறல் எனவும், இழி வழக்கு எனவும் நச்சினார்க்கினியர் கருத்தை உட்கொண்டு சொற்றார்.

தொல். சொல். 226 நச்.

தொல்காப்பியச் சொற்படல 226ஆம் நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் 'நடவா முதலிய உயிரீறு பதினொன்றும் உரிஞ்மண் முதலிய புள்ளியீறு பதினொன்றும், போக்கு பாய்ச்சு ஊட்டு நடத்து எழுப்பு தீற்று வெஃகு என எழுவகையாகிய குற்றியலுகர ஈறு ஒன்றுமாக எழுத்து வகை இருபத்துமூன்றும் எடுத்தல் ஓசையான் முன்னிலை ஏவல் ஒருமை முற்றாய் நிற்கும்' என்று கூறியதை இவ்வாசிரியர் குறிப்பிட விரும்பவில்லை போலும்.

'இவைதாமே படுத்தல் ஓசையால் அச்செய்கைமேல் பெயர்த்தன்மைபட முதல்நிலையாயும் நிற்கும். அங்ஙனம் முதல்நிலையாய் நிற்குங்கால் 'நடந்தான்வந்தான்' முதலாக விரிந்து நின்றவாறு காண்க' எனவும்,

'நடந்துவந்தான் வந்துபோனான் விரிந்துகிடந்தான் ஈத்துஉவந்தான் எனவும், நடந்த சாத்தன் வந்த சாத்தன் விரிந்த சாத்தன் ஈத்த சாத்தன் எனவும், உரிஞி வந்தான் பொருநி வந்தான் எனவும், உரிஞின சாத்தன் பொருநின சாத்தன் எனவும் வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் இவ்வாறே ஒழிந்த முதல்நிலைகளையும் விரித்துக்கொள்க' எனவும், 'முற்காட்டிய முன்னிலை ஏவல் ஒருமைமுற்றுக்கள் ஒருவனை நோக்கி 'ஒன்னனை ஒருதொழிலைச் செய்வி' என்னும் பொருண்மைக்கண் நடந்துவி நடப்பி வருவி முதலாக எதிர்காலத்திற்கு உரிய வகரமும் பகரமும் முன்னிலைக்கு உரிய

இகரம் ஏறி இடைநிலைக்கு உரிய எழுத்துக்களும் பெற்று எடுத்தல் ஓசையான் நிற்கும் என உணர்க' எனவும்,

'இன்னும் அவைதாம் படர்க்கையிடத்துப் பால் காட்டும் முற்றாய் நடத்துவித்தான் நடப்பித்தான் முதலாக வருங்கால் இடைநிலை ஆகிய எழுத்துக்களும் பெற்று முன்னர் எடுத்தல் ஓசையாய் இடைநின்ற ஈறாகிய இகரம் படுத்தல் ஓசைப்பட்டு இடைநிலையாய் நிற்கும் என்று உணர்க' எனவும், 'இனி, நடத்துவிப்பி வருவிப்பி எனவும் என்று கூறி, இவற்றை இருமடி ஏவல் என்பாரும் உளர். இவற்றை இருகால் ஏவுதல் கூறியது கூறலாம் ஆகலின், இவை இழிவழக்கு என மறுக்க' எனவும் அவர் கூறிய செய்திகளில் இவர் தாம ஏவுவினை முதல்வினை இயற்றும் வினை முதல் வினை என்று கொண்ட பாகுபாட்டிற்கு ஏற்ப ஏற்பன கொண்டுள்ளார் என்பது காண்க.

உரையில்—நடப்பி-பகர இகரம் பெற்றதற்கு எடுத்துக்காட்டு.
வருவி-வகர இகரம் பெற்றதற்கு எடுத்துக்காட்டு.

நடந்த நடப்பித்த எனப் பெயரெச்சமும், வந்து வருவித்து என வினையெச்சமும் இவற்றைப்பகுதியாகக் கொண்டு வந்தமை காண்க.

நட என்பது ஏவல்வினையாயின், வினைச்சொல் பகுதியில் பொருள் சிறத்தலின், எடுத்தல் ஓசையால் கூறப்படும். நட என்பது வினைப்பகுதியாகிய தொழிற் பெயர் ஆயின், பெயர் பகுதியில் பொருள் சிறவாது ஆகலின், படுத்தல் ஓசையால் கூறப்படல் வேண்டும்.

நட—செய் என் ஏவல், நடப்பி—செய்வி என் ஏவல் நடப்பிப்பி—செய்விப்பி என்னும் இருமடி ஏவல் என்பார் நன்னூலார். அவர் நடந்தான் என்பதன்கண் பகுதி நட;

நடப்பித்தான் என்பதன்கண் பகுதி நடப்பி; நடப்பிப்பித்தான் என்பதன்கண் பகுதி நடப்பிப்பி என்பார்.

ஏவல்வினை எடுத்தல் ஓசையான் தொழில் நிகழ்ச்சியை அறிவிப்பது. வினைப்பகுதி படுத்தல் ஓசையான் வினைமாத்திரை சுட்டும் முதல்நிலைத் தொழிற் பெயர் ஆதலின், ஏவல் வினைப்பகுதி ஆகாது என்பது இவர் கருத்து.

நடத்து என்ற ஏவலிலேயே தானாகவோ பிறரைக் கொண்டோ செயற்படுத்தல் வேண்டும் என்பது பெறப்படுதலின், நடத்துவி என ஏவல்மேல் ஏவல் கூறுதல் சான்றவருக்கு ஏலாது என்பது. எனவே நடத்துவித்தான் முதலிய வினைகள் சான்றோர் நடையுள் பயிலா,

ஒத்த நூற்பா :

'செய்யென் வினைவழி விபி தனிவரின்
செய்விஎன் ஏவல் இணையின் ஈரேவல்.' நன்.138

குறிப்புவினை முற்றுப்பகுதி

45. பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலே
குறிப்பு வினையின் நெறிப்படும் முதல்நிலை.

இது குறிப்பு வினைமுற்றுப் பகுபதத்திற்கு உரிய பகுதிகள் இவை என்கின்றது

இ-ள் : பொருளும் இடமும் காலமும் உறுப்பும் பண்பும் தொழிலும் ஆகியன குறிப்புவினைமுற்றுப் பகுபதத்தின் ஒழுங்குபட்ட பகுதிகளாம் என்றவாறு.

பொருள் முதலிய மூன்றும் முதலும், சினை முதலிய மூன்றும் சினையுமாய் இவ்வாறு இவ்வாறும் இருவகையாகியும் அடங்கும் என்பது அறிவித்தற்கு இம்முறை வைத்தார். பண்பாவன-கரு செவ் முதலியன.

இவற்றால் பகுபதம் வருமாறு: குழையன் நிலத்தன் வேனிலான் தோளான் கரியன் ஊணன் என வரும். பிறவும் அன்ன.

வினைக்குறிப்புப் பெயர்க்கு இவை ஆறும் முதல் நிலை ஆமாறும், பெயரெச்ச வினையெச்சக் குறிப்பு வினைகட்கு இவற்றுள் ஏற்பன முதல்நிலை ஆமாறும் உய்த்து உணர்க. கரியவன் செய்யவன் கருமை செம்மை முதலிய பண்புப் பெயர்க்கும் இவை பகுதியாமாறு உரையிற் கொள்க.

'நெறிப்படும் முதல்நிலை' என்றதனால் கருமையன், செம்மையன், 'பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை உண்மையேன்' திருவா. 5-93 எனவும், வலைச்சி புலைச்சி எனவும், கறுப்பன் சிவப்பன் அளியன் அன்பன் எனவும் வரும் பண்புப் பகுபதங்கட்குக் கருமை செம்மை இன்மை உண்மை என்ற பண்புப்பெயர்களும், வலைமை புலைமை என்ற சாதிப்பண்பு உணர நிற்கும்பெயர்களும் கறுப்பு சிவப்பு அளி அன்பு என்ற பலவேறுவகைப்பட்ட பண்புப்பெயர்களும் நெறிப்பட வாராது உடைப்பொருள் நீரவாய் வரும் முதல்நிலையாகக் கொள்க. இன்னும் அதனானே, வினை வினைக்குறிப்புக்களும் வினைப் பெயரும் ஆகிய பகுபதங்களின் பகுதிகளுள் சில மிக்கும் சில திரிந்தும் சில ஈறுகெட்டும் இவ்வாறு நெறிப்பட வாராது வருவனவும் கொள்க.

வரலாறு: வா என்னும் பகுதி வந்தான் வருகின்றான் என்புழிக் குறைந்தும் திரிந்தும் வந்தது.

கொள் என்னும் பகுதி கொண்டான் கோடு கோடும் என்புழி. ளகரம் ணகரம் ஆகியும் கெட்டும் நீண்டும் வந்தது. கொல் செல் வெல் என்னும் பகுதிகள் கொன்றான் சென்றான் வென்றான், கோறு கோறும் சேறு சேறும் வேறு வேறும் என்புழி. லகரம் னகரம் ஆகியும் கெட்டும் முதல் நீண்டும் வந்தன.

வலைமை—புலைமை—குயமை—பனவு—கணவாளம் சேமாறல்—கைவாரங்கோடல்—நாளோதல்—நூலோதல்—திருவின்மை—அறிவின்மை என்னும் பகுதிகள் வலைச்சி புலைத்தி—குயத்தி—பனத்தி—கணவாட்டி—சேமாறி—கைவாரி—நாளோதி—நூலோதி—திருவிலி—அறிவிலி—என்புழி ஏற்றவாறு ஈறுகெட்டு வந்தன. வெள்ளாண்மை என்னும் பகுதி வேளாட்டி என்புழிக் கெட்டும் திரிந்தும் வந்தது. பிறவும் அன்ன.

இனி, இவ்வாறன்றிச்

'செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பின் பகாநிலைப் பதமே' நன். 135

எனக்கூறி இவையே பகுதியாம் என்றும், இவை விகுதி பதம் என்பனவற்றொடு புணருங்கால்,

ஈறு போதல் இடைஉகரம் இஆதல்
ஆதி நீடல் அடிஅகரம் ஐஆதல்
தன்ஒற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனம்மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே.
நன். 136

எனக்கூறி, இவ்வாறு செய்கைப்படும் என்றும் கூறுவாரும் உளராலோ எனின், உடைப்பொருள் ஆகிய செம்மையன் கருமையன் முதலியவற்றிற்கு அல்லது இன்னன் என்னும் பொருள் ஆகிய செய்யன் கரியன் முதலியவற்றிற்குப் பகுதி ஆகாமையின் செம்மை சிறுமை முதலியன பகுதி ஆகா எனவும், விகுதிப்புணர்ச்சிக்கண் குழையன் என்பதுபோலச் செம்மையன் கருமையன் எனப் புணர்வது அல்லது ஈறு கெடாது ஆகலானும், வலைச்சி புலைச்சி முதலியன கெடுதல் 'விளம்பிய பகுதி வேறாதலும் விதியே' என அவர் கூறியவாற்றன்

அமையும் ஆகலானும், பதப்புணர்ச்சிக்கண் கருங் குதிரை என்பது கருமை ஆகிய குதிரை என விரியாமை யின் கரு என்னும் பண்பு அல்லது கருமை என்னும் பண்புப்பெயர் நின்று புணராமையானும், அது புணருங் கால் கருமைக் குதிரை எனப் புணர்வது அல்லது கருங் குதிரை எனப் புணராமையானும் அச்செய்கை எய்தாது எனவும் மறுக்க. 8

விளக்கம் : பொருள் இடம் காலம் என்ற மூன்றும் முதலாகவும், சினை குணம் தொழில் என்ற மூன்றும் சினையாகவும் அடங்கும் என்பது மயிலைநாதர் உரை யில் காணப்படுகிறது நன். 131 உரை.

இது பற்றியே பொருட்படலத்தில் முதற்பொருள் என்பன நிலனும் பொழுதும் எனக் குறித்துள்ளதன் இயைபும் உணரத்தக்கது.

குழையன்	—	பொருள் பற்றிய குறிப்புவினை,	
நிலத்தன்	—	இடம்	,,
வேனிலான்	—	காலம்	,,
தோளான்	—	சினை	,,
கரியன்	—	குணம்	,,
ஊணன்	—	தொழில்	,,

குழைய காது, கரிய மேனி முதலியன பெயரெச்ச வினைக் குறிப்பு.

வலைச்சி, புலைச்சி — சாதிப்பண்பு அடியாகப் பிறந்த பெயர்.

உடைப்பொருள் நீரவாகி வருதல்—ஆறாம் வேற்று மைக்கு உரிய உடைமைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு தோன்றி வருதல்.

ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட்கண் ணும், ஏழாம் வேற்றுமையது நிலப்பொருட்கண்ணும்,

ஒப்பின்கண்ணும் பண்பின்கண்ணும் பெரும்பான்மையும் குறிப்பு முற்று வரும் என்பது.

'அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானும்
அப்பால் காலம் குறிப்பொடு தோன்றும்'

தொல். சொல். 215

என்ற நூற்பாவானும், ஐயாட்டையன் எனக் காலம் பற்றியும். துணங்கையன் என்ற வினைசெய் இடம் பற்றியும் குறிப்பு வினைமுற்று வருதல் உரையிற்கோட லானும் பெறப்படும். இவை உயர்திணைக்குரியன. இக் குறிப்பு வினைமுற்றுக்கள் கச்சினான் இல்லத்தான் என்றாற்போலக் குறிப்புப்பெயர் ஆயவழியும் குறிப்பால் காலம் தோற்றி நிற்கும்.

வந்தான்—வா என்ற பகுதி திரிந்தது.

கொண்டான்—கொள் என்ற பகுதி திரிந்தது.

கோடும்—கொள் என்ற பகுதி ளகரம் கெட்டும் முதல் நீண்டும் வந்தது.

கொன்றான்—கொல் என்ற பகுதியின் லகரம் னகரமாகத் திரிந்தது.

கோறு—கொல் என்பதன் லகரம் கெட்டும் முதல் நீண்டும் வந்தது.

''வலையன்—வலைமை என்ற பகுதி ஈறு 'விளம்பிய பகுதி வேறாதலும் விதியே' (நன். 138) என்பதனால் கெட்டது. வா என்பகுதி வந்தான் வருகின்றான் என்புழி, மிக்கும் திரிந்தும் வரும். கொள் என்பகுதி கொண்டான் கோடு கோடும் என்புழி, ளகரம் ணகரம் ஆகியும் கெட்டும் ஆதி நீண்டும் வந்தது. கொல் செல் வெல் என்னும் பகுதிகள் கொன்றான் சென்றான் வென்றான் - கோறு கோறும்-சேறு சேறும் - வேறு வேறும்-என்புழி, லகரம்

னகாம் ஆகியும் கெட்டும் ஆதிநீண்டும் வந்தன. வலைச்சி புலைச்சி குயத்தி கணவாட்டி என்றல் தொடக்கத்துப் பெயர்ப்பகுபதங்கள் எல்லாம் வலைமை புலைமை முதலான பெயர்ப் பகாப்பதத்து ஈறு கெட்டு இ ஏற்று வந்தன. ஆசுவி — சன்னாவி — ஏனாதி — சேமாறி— கைவாரி—திருவிலி - பரிவிலி—அறிவிலி — பொறியிலி— தாளோதி—நூலோதி -- என்றல் தொடக்கத்தனவும் ஈறு கெட்டன'' என்பது நன்னூல் 138ஆம் நூற்பாவின் மயிலைநாதர் உரை.

செம்மை சிறுமை முதலியன ஈறுபோதல் முதலிய செய்கைப்பட்டு வருமொழியொடு புணரும் என்பர் நன்னூலார்.

குறிப்பு வினையும் குறிப்பு வினையால் அணையும் பெயரும் ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட் கண்ணும் ஒப்புப் பொருட்கண்ணும் பண்புப் பொருட் கண்ணும் அமையும் என்னும் விதியை ஒட்டிக் கருமை+ அன் கருமையன் என உடைமைப் பொருட்டு ஆதலே அன்றிக் கரியன் எனப் பண்புப்பொருட்டு ஆகாமையின், கரியன் முதலியவற்றிற்குக் கருமை முதலியன பகுதிகள் ஆகா. குழையை உடையான் குழையன் என்று ஆதல் போலக் கருமையை உடையவன் கருமையன் என்றே ஆகும் வலைமை புலைமை முதலியன விகுதியோடு புணருங்கால் 'பகுதி வேறாதலும் விதி' ஆதலின, வலைச்சி புலைச்சி முதலியனவாக ஆதல் பொருந்தும். கருங்குதிரை என்ற பண்புத்தொகை கரிதாகிய குதிரை என இன்னது இது என்னும் பொருளில் விரியும் அன்றிக் கருமையாகிய குதிரை என விரியாமையின் 'கருங் குதிரை'யின் முன்மொழி கருமை அன்று. கரு என்ற பண்பு குறிக்கும் சொல்லேயாம் என்பது. இனிக் கருமை என்பது முதல்மொழி ஆயின் கருமைக்குதிரை என்று புணருமேயன்றிக் கருங்குதிரை எனப் புணராது ஆதலின் 'செம்மை சிறுமை' நன். 134 'ஈறுபோதல்'

நன். 135 என்ற நூற்பாக்கள் அமைவு உடையன அல்ல என்பது இக்கருத்து நச்சினார்க்கினியர் உரைத்தன கொண்டு சொற்றதாகும்.

'ஒரு பொருள் குறுத்த வேறு சொல் ஆகியும்' தொல். சொல். 399 என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் 'பைங்கண் பைந்தார் பச்சிலை காரா சேதா என்றாற்போலும் பண்புத்தொகை ஆகிய சொற்களைப் பசுமை கருமை செம்மை எனப் பண்புப் பெயராக நிறுத்தி, ஈற்று உயிர்மெய்யும் ஈற்று அயல் உயிரும் கெட்டு வருமொழிக்கு ஏற்ப ஒற்றுத்திரிந்தும் திரியாதும் ஆதி நின்ற அகரம் ஐகாரமாயும் திரிந்தன என்றும், ஈற்று உயிர்மெய்யும் ஈற்று அயல் உயிரும் கெட்டு ஆதி நீண்டது என்றும் பின்னுள்ளோர் சந்தி முடிக்கின்றது பொருந்தாது. என்னை? பைங்கண் என்புழிப் பசியதாகிய கண் எனப் பண்பு உணர்த்தும் ஈற்றை விரித்தல் அன்றிப் பசுமைக்கண் எனத் தாம் தொகுத்த பண்புப் பெயரை விரித்தல் ஆகாமையின். இவை செய்யுட்குப் புலவர் சிறிது திறபத் திரித்துக் கொண்ட பெயரெச்ச வினைக்குறிப்புப் பெயர் என உணர்க' என்று குறிப்பிட்டுள்ளவற்றை இவ்வாசிரியர் பின்பற்றிக் கூறியது உணரப்படும்.

ஒத்த நூற்பாக்கள்:

'பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.'
நன். 132

'தத்தம். பகாப்ப தங்களே பகுதி ஆகும்.' நன். 134

விகுதிகள்

46. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பமார்
அ ஆ குடுதுறு என் ஏன் அல்லொடு

அம் ஆம் எம்எம் ஓம்ஒடு உம்ஊர்
கடதற ஐஆய் இமின் இர்ஈர்
கயர ஆல்ஏல் காண்உம் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே.

இது நிறுத்தமுறையானே வினை வினைக்குறிப்பு முற்றுப் பகுபதத்திற்கும் வினைப்பெயர்ப் பகுபதத் திற்கும் உரிய விகுதிகள் இவை என்கின்றது.

இ-ள் : **அன்** என்பது முதல் **உம்** என்பது ஈறாகக் கிடந்த முப்பத்தொன்பதும் அவை போல்வன பிறவும் வினைவினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்களுடைய விகுதி களாம்; வினைப்பெயர்ப் பகுபதத்தின்கண்ணும் சில விகுதிகளாம் என்றவாறு.

பகுபதம் முடித்தற்குக் கருவியாம் துணையே ஈண்டுக் கூறவேண்டுதலின், இவை திணை பால் இடங் களுக்கு உரிய ஆமாறு கூறிற்றிலர்; அது மேல் சொல் ஓத்தினுள் கூறுப.

வரலாறு : நடந்தனன் நடந்தான்; நடந்தனள் நடந்தாள்; நடந்தனர் நடந்தார்; உண்ப உண்மார்; நடந்தன நடவா; உண்கு உண்டு வருது சேறு நடந்த னென் நடந்தேன் நடப்பல்; நடப்பம் நடப்பாம் நடப்பெம் நடப்பேம் நடப்போம் உண்கும் உண்டும் வருதும் சேறும்; நடந்தனை நடந்தாய் நடத்தி; நடமின் நடந்தனிர் நடந்தீர்; வாழ்க வாழிய வாழியர் 'மரீஇயது ஒராஅல்' (தொல். சொல். 44?) அழேல்; சொல்லிக் காண்! உண்ணும் என வரும். வினைக்குறிப்பின் கண்ணும் இவற்றுள் ஏற்பன வருவித்துக் குழையன் குழையான் எனக் காண்க பிறவும் அன்ன.

இவற்றுள் வேறுவினைக்கு உரியனவும் சில உள. அவை பத்து. அவற்றை எழுத்து ஒப்புமை பற்றிச் சூத்திரம் பல்காமைப் பொருட்டு ஈண்டுத் தொகுத்தார். அவை சொல் ஓத்தினுள் எடுத்துக் கூறுப.

அவை வருமாறு: அன் ஈறு கூறுவன் எனத் தன்மைக்கண்ணும். மார் ஈறு 'நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே' நற் 64 எனக் காண்க என்னும் வியங்கோட்கு எதிர்மறைக்கண்ணும். டுவ்வீறு முதல் மூவீறும் குண்டு கட்டு - வந்தது - போயிற்று என அஃறிணை ஒருமைப்படர்க்கைக்கண்ணும், அல் ஈறு 'மகன் எனல் மக்கட்பதடி எனல்' (குறள் 196) என வியங்கோள் இடத்து மறையின் கண்ணும் உடன்பாட்டின் கண்ணும், உண்ணல் என முன்னிலை ஏவல் ஒருமை முற்றின்கண்ணும், மையீறு 'அஞ்சாமை அஞ்சுவது ஒன்றின்' என வியங்கோள் மறையின்கண்ணும், இகர ஈறு நடப்பி வருவி எனச் செய்வி என்னும் முன்னிலை ஏவல் பொருண்மை முற்றின்கண்ணும், ஆல்ஈறு மறால் என் முன்னிலை ஏவல் ஒருமை முற்றின்கண்ணும், உம் ஈறு 'வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்' புறம். 367-9 என வியங்கோள் கண்ணும், உண்ணும் தின்னும் என முன்னிலை ஏவல் பொருண்மை முற்றின்கண்ணும் வரும். இன்னும் பிறவற்றின்கண் வருமேனும் வந்துழிக் காண்க

இனி, வினைப்பெயர்க்கண்ணும் இவற்றுள் சில விகுதி ஆமாறு வந்தவன் வந்தான் எனவும், வில்லவன் வில்லான் எனவும் காண்க. பிறவும் அன்ன. 'பிறவும்' என்றதனால், பெயரெச்ச வினையெச்ச விகுதி வாய்பாடும் ஓர்ந்து உணர்க. 9

விளக்கம்: நிறுத்தமுறை 'பகுதி விகுதி' 42 என்னும் நூற்பாவின் நிறுத்த முறை.

வினைப்பெயர் — வினையால் அணையும் பெயரும் தொழிற் பெயரும். ஈண்டுக் கூறப்பட்டது பகுபதத்தின் இறுதி நிலையாதல் ஓர்ந்து பிரிக்கப்படவேண்டிய விகுதி களின் பட்டியலே,

அன் ஈறு தன்மைஒருமை விகுதி ஆதல் 'உள்ளுவன் மன்யான் மறப்பின்' -குறள் 1125 என வள்ளுவர் காலத்திலேயே வழக்குப்பட்டதாகும்.

'காணன்மார் எமரே' என்புழி, எதிர்மறை வியங்கோளின்கண் மார் ஈறு வந்தது என்பார் இவர். அஃது ஆர்ஈறு ஒருமொழிப் புணர்ச்சிக்கண் எழுத்துப் பேறாகிய மகரம் பெறுதலான் தோன்றியது என்பார் சேனாவரையர். (தொல். சொல். 207)

அன் ஆன் —ஆண்பால் படர்க்கை வினைமுற்றுவிகுதி

அள் ஆள் —பெண்பால் ,, ,,

அர் ஆர் ப மார்—பலர்பால் படர்க்கைவினைமுற்றுவிகுதி

து று டு —ஒன்றன்பால் ,, ,,

அ ஆ —பலவின்பால் ,, ,,

கு டு து று என் ஏன் அல் அன்—தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

கும் டும் தும் றும் அம் ஆம் எம் ஏம் ஓம் | தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

இ ஐ ஆய் காண் அல்—முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

மின் இர் ஈர் உம் — ,, ,, ,,

வியங்கோள் விகுதிகள்

க — வாழ்க

ய — வாழிய

ர் — வாழியர்

அல் — மகன் எனல், பதடிஎனல் (என எதிர்மறை உடன்பாடும் இரண்டும்)

ஆல் — 'மரீஇயது ஓரால்'

எல் — அழேல்—எதிர்மறைப் பொருள்

மார் — 'காணன்மார் எமரே'-எதிர்மறைப்பொருள்

உம் — 'வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்'

மை — 'அஞ்சாமை அஞ்சுவது ஒன்றின்'

ஈதல் என்பது தொழிற்பெயர் ஆயின், தல்விகுதி;
வியங்கோள் வினைமுற்றாயின் அல்விகுதி;

இவ்வியங்கோள் ஈறுகள் முதலியன நச்சினார்க்கினியர் உரையை ஒட்டி வரையப்பட்டன.

அ — செய்த, செய்கின்ற-பெயரெச்சவிகுதி
உம் — செய்யும்-எதிர்காலப் பெயரெச்சவிகுதி

தெரிநிலை வினையெச்ச விகுதிகள்

உ	—செய்து	— இறந்தகால வினையெச்சவிகுதி
பு	—செய்பு	,,
ஆ	—செய்யா	,,
ஊ	—செய்யூ	,,
என	—செய்தென	,,
அ	—செய	— நிகழ்கால வினையெச்சவிகுதி
இன்	—செயின்	— எதிர்கால ,,
இய	—செய்யிய	— ,, ,,
இயர்	—செய்யியர்	— ,, ,,
வான்	—பாடுவான்	— ,, ,,
பான்	—உண்பான்	— ,, ,,
பாக்கு	—உண்பாக்கு	— ,, ,,
கு	—செயற்கு	— ,, ,,
ய்	—போய்	— இறந்தகால வினையெச்சவிகுதி
ஆல்	—உண்டால்	— எதிர்கால வினையெச்சவிகுதி
கால்	...உண்டக்கால் உண்ணுங்கால்	} முக்கால வினையெச்சவிகுதி
ஏல்	...உண்டானேல்	} காரணப்பொருட்டு
எனின்	...உண்டான் எனின்	
ஆயின்	...உண்டானாயின்	

ஏனும்	...உண்டானேனும்	இறந்தகாலம்
கடை	...செய்தக்கடை	இறப்பு, எதிர்வு
வழி	...செய்தவழி	
இடத்து	...செய்த இடத்து	
உம்	...காண்டலும்	நிகழ்காலம்
மல்	...உண்ணாமல்	எதிர்மறை
மை	...உண்ணாமை	
மே	...உண்ணாமே	

குறிப்பு வினையெச்ச விகுதிகள்

அ	...மெல்ல	கால்	...அல்லாக்கால்
றி	...அன்றி	கடை	...அல்லாக்கடை
து	...அல்லது	வழி	...அல்லாவழி
ஆல்	...அல்லால்	இடத்து	...அல்லா இடத்து
மல்	...அல்லாமல்		

தொழிற்பெயர் விகுதிகள்

தல்	...நடத்தல்	தி	...மறதி
அல்	...ஆடல்	சி	...புணர்ச்சி
அம்	...நாட்டம்	வி	...புலவி
ஐ	...கொலை	உள்	...விக்குள்
கை	...நடக்கை	காடு	...சாக்காடு
வை	...பார்வை	பாடு	...கோட்பாடு
கு	...போக்கு	அரவு	...தோற்றரவு
பு	...நடப்பு	ஆனை	...வாரானை
உ	...வரவு	மை	...மறவாமை
		து	...செய்தது

உடுக்கை என்பது உடுத்தல் தொழிலைக் குறிப்பின், கைவிகுதி; உடுக்கப்படும் ஆடையைக் குறிப்பின், ஐ விகுதி.

பண்புப்பெயர் விகுதிகள்

மை	...நன்மை	கு	...நன்கு
ஐ	...தொல்லை	றி	...நன்றி
சி	...மாட்சி	று	...நன்று
பு	...மாண்பு	அம்	...நலம்
உ	...மழவு	நர்	...நன்னர்

பிறவினைப் பகுதிகள்

வி	...செய்வி	டு	...ஊட்டு
பி	...நடப்பி	து	...நடத்து
கு	...போக்கு	பு	...எழுப்பு
சு	...பாய்ச்சு	று	.. தீற்று

தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாகிய தேய் முதலிய பகுதிகள் தன்வினையில் தேய்ந்தான் என மெல்லொற்று அடுத்தும், பிறவினைக்கண் தேய்த்தான் என வல்லொற்று அடுத்தும் வருமாறு காண்க.

விடு, ஒழி என்பன துணிவுப் பொருள்தரும்; செய்து விட்டான், செய்தொழிந்தான் எனவரும்.

கொள்விகுதி தற்பொருட்டுப் பொருள் தரும்; அடித்துக் கொண்டான் எனவரும்.

படு, உண் என்பன செயப்பாட்டுவினைப் பொருள் தரும் கட்டப்பட்டான், கட்டுண்டான் எனவரும்.

மைவிகுதி தன்மைப்பொருள் தரும்: ஆண்மை பெண்மை எனவரும்.

இரு, இடு என்பன பகுதிப்பொருள் விகுதிகளாம்; எழுந்திருந்தான், உரைத்திடுகின்றான் எனவரும்.

பெயர் விகுதிகள்

வினை முதற்பொருளிலும் செயப்படு பொருளிலும் கருவிப் பொருளிலும் இ ஐ அம் என்ற மூன்று விகுதிகளும் வரும்.

அலரி ஊருணி மண்வெட்டி எனவும், பறவை தொடை பார்வை எனவும், எச்சம் தொல்காப்பியம் நோக்கம் எனவும் முறையே காண்க.

வில்லன் வில்லான் வளையள் வளையாள் ஊரர் ஊரார் என முறையே அன் ஆன் அள் ஆள் அர் ஆர் என்ற விகுதிகளும், வில்லி வாளி உருவிலி திருவிலி செவியிலி அரசி பார்ப்பனி செட்டிச்சி உழத்தி கிழத்தி கணவாட்டி வண்ணாத்தி என்ற இகரவிகுதியும், காதறை செவியறைஎன்ற ஐகாரவிகுதியும் பெயர்க்கண் வந்தமை காண்க.

இனி, வீரசோழியம் பெயர் விகுதிகள் பற்றிக் கூறுவன பின்வருமாறு :

மை	...வலிமை, நெடுமை, குறுமை	வு	...வலிவு, மெலிவு
அம்	...நீளம்	கம்	... குறுக்கம்
பு	...ஆலிப்பு, மெலிப்பு	வல்	...இளவல்
து	...வலிது, மெலிது	அளவு	...தண்ணளவு

பொருட்பெயர் விகுதிகள்

மன்	...குறுமன், கருமன்	ஐ	...வெள்ளை, பச்சை
கன்	...சிறுக்கன்	அம்	...புறம், அகம்
ஆன்	...அரியான், எளியான்	அவன்:	கரியவன், குறியவன்
அன்	...கரியன், குறியன்		
வன்	...புலவன், சிறுவன்	அவள்:	கரியவள், குறியவள்
ஆள்	...செய்யாள், கரியாள்		
		மி	...கருமி, குறுமி

பெண்பாற்பெயர் விகுதிகள்

அச்சி	...பறைச்சி	தி	...குறத்தி, ஒருத்தி
ஆட்டி	...வெள்ளாட்டி, கம்மாட்டி	ஆள்	...நல்லாள், தீயாள்
அனி	...பார்ப்பனி	அள்	...நல்லள், தீயள்
ஆத்தி	...வண்ணாத்தி	இ	...சாத்தி, கொற்றி
அத்தி	...நட்டுவத்தி, கைக்குளத்தி	இச்சி	...கள்ளிச்சி
		சி	...பேய்ச்சி

ஒத்த நூற்பா :

'அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமொடு உம்ஊர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே.' நன். 139

இறந்தகால இடைநிலை

47. கடதற ஒற்றுஇன் ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தருந்தொழில் இடைநிலை.

நிறுத்த முறையானே இடைநிலை கூறுவனவற்றுள் இஃது இறந்தகாலம் காட்டும் வினைமுற்றுப் பகுபதங்களின் இடைநிலைகள் கூறுகின்றது.

இ-ள் : கடதற என்னும் நான்கு மெய்களும் இன்னும் ஆகிய ஐந்தும், ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலம் காட்டும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களின் இடைநிலைகளாம் என்றவாறு.

ககரம் முதல்நிலை எழுத்தாயும் தகரம் முதல்நிலை எழுத்து ஆகாதும் ஏனை இரண்டும் முதல்நிலை எழுத்தாயும் அதற்கு இனமாயும் அடுத்துவரும்.

வரலாறு : நக்கான் நக்காள் நக்கார் நக்கது நக்கன நக்கேன் நக்கேம் நக்காய் நக்கீர் எனவும், விட்டான் விட்டாள் விட்டார் விட்டது விட்டன விட்டேன் விட்டேம் விட்டாய் விட்டீர் எனவும், உண்டான் உண்டாள் உண்டார் உண்டது உண்டன உண்டேன் உண்டேம் உண்டாய் உண்டீர் எனவும், உரைத்தான் உரைத்தாள் உரைத்தார் உரைத்தது உரைத்தன உரைத்தேன் உரைத்தேம் உரைத்தாய் உரைத்தீர் எனவும், உற்றான் உற்றாள் உற்றார் உற்றது உற்றன உற்றேன் உற்றேம் உற்றாய் உற்றீர் எனவும், தின்றான் தின்றாள் தின்றார் தின்றது தின்றன தின்றேன் தின்றேம் தின்றாய் தின்றீர் எனவும், உறங்கினான் உறங்கினாள் உறங்கினார் உறங்கிற்று உறங்கின உறங்கினேன் உறங்கினேம் உறங்கினாய் உறங்கினீர் எனவும் வரும்.

உரையிற்கோடலான், நக்கிலன் நக்கனன் அல்லன், நக்கிலான் நக்கான் அல்லன், உண்டிலன் உண்டனன் அல்லன். உரைத்திலன் உரைத்தனன் அல்லன். தின்றிலன் தின்றலன் தின்றனன் அல்லன், தின்றிலான் தின்றான் அல்லன், உறங்கிலன் உறங்கினன் அல்லன் உறங்கிலான் உறங்கினான் அல்லன் என மறைக்கண்ணும் இவ்விடைநிலைகள் வேறு சில எழுத்துக்களோடு கூடி இறந்த காலம் காட்டும் எனவும். எஞ்சியது தப்பியது போயது போய என யகரமும், போயன என அன்னும், போனான் போனது என னகரமும் சிறுபான்மை இறந்த காலம் காட்டும் எனவும் கொள்க. பிறவும் அன்ன.

விளக்கம் : உடன்பாட்டு வினைமுற்றுக்கள் யாவும் ஆண் பெண் பலர் ஒன்று பலவெனப் படர்க்கை ஐம்பாலுக்கும் தன்மை ஒருமை பன்மைக்கும் முன்னிலை ஒருமை பன்மைக்கும் வருதற்கு எடுத்துக்காட்டுக்கள் இந்நூற்பா உரையில் காட்டப்பட்டுள்ளன.

உரையிற்கோடலான் குறிக்கப்பட்ட செய்திகள் நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சொற்படல வினை

வியலில் தன்மைப்பன்மை வினைமுற்று முதலியன பற்றி அமைந்த 204—219 நூற்பாக்களில் கூறிய எடுத்துக் காட்டுக்களை உட்கொண்டு சொல்லப்பட்டன.

எதிர்மறையிலும் இறந்த காலத்தை வினைமுற்றுச் சொல் காட்டுமாறு விளக்கப்பட்டுள்ளது.

எஞ்சியது முதலியவற்றில் யகரமும், போயன என்பதில் அன்னும் போனான் முதலியவற்றில் னகரமும் இறந்தகாய இடைநிலை என்பது இவர் கருத்து.

இனி, இறந்தகால இடைநிலைகளுள் 'இன்' என்பது தான் முழுவதும் நிற்றலும், இகரம் கெட்டு னகரவொற்றேயாகி நிற்றலும், னகரம்கெட்டு இகர உயிரேயாகி நிற்றலும இரண்டு எழுத்தும்கெட்டு அவ் விடைநிலையே மறைந்து நிற்றலும் உண்டு என்று கொள்க.

போயினான் – போ + இன் + ஆன்
போனான் – போ + (இ)ன் + ஆ...
மேவிய – மேவு + இ(ன) + அ
போய—போ + (இன்) + அ

போயன என்பது போயின என்பதன் சிதைவாம். ஆகவே, யகரமும் அன்னும் னகரமும் இன் என்ற இடை நிலையின் சிதைவே என்பது பலர் கருத்தாகும்.

ஒத்த நூற்பா :

'தடறஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தருந்தொழில் இடைநிலை.'

நன். 142

நிகழ்கால இடைநிலை

48. ஆநி... று கி... று கிறுமூ விடத்தும்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை

இது நிகழ்காலம் காட்டும் வினைமுற்றுப் பகுபத இடைநிலைகள் கூறுகின்றது,

இ-ள்: ஆநின்றும் கின்றும் கிறுவும் ஆகிய மூன்றும் மூவிடத்தும் வரும் ஐம்பாற்கண்ணும் நிகழ்காலம் காட்டும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபத இடைநிலைகளாம் என்றவாறு.

புதியன புணர்த்தலும் என்றதனால்,கிறுவும் உடன் ஓதினார்.

வரலாறு ; உண்ணாநின்றான் உண்கின்றான் உண்கிறான் எனவரும் ஏனைப்பால் இடங்கள்தொறும் ஒட்டுக. உரையிற்கோடலான், உண்ணாநின்றிலன் உண்ணாநின்றனன் அல்லன், உண்ணாநின்றிலான் உண்ணாநின்றான்அல்லன், உண்கின்றிலன், உண்கின்றனன் அல்லன், உண்கின்றிலான் உண்கின்றான் அல்லன் என மறைக்கண் ஆநின்று கின்று என்னும் இடைநிலைகள் வேறு சில எழுத்துக்களோடு கூடி நிகழ்காலம் காட்டும் எனவும், உண்ணாகிடந்தான் உண்ணா இருந்தான் எனக் கிடவும் இருவும், உரைக்கிற்றி

'நன்றுமன் என்இது நாடாய் கூறி'

என றகரமும்,

'கானம் கடத்திர் எனக்கேட்பின்' கலி. 7-3

எனத் தகரமும், உண்பல் வருவல் உண்ணாநிற்பல் எனவும்

'கூடநீர் நின்ற பெற்றி கண்டு இப்பால்
நோக்குவேற்கு' சிந். 1751

உண்பேற்கு எனவும் முறையே வினை வினைப்பெயர்க்கண் வகர பகரங்களும் சிறுபான்மை நிகழ்காலம் காட்டும் எனவும் கொள்க. பிறவும் அன்ன. 11

விளக்கம் : சங்க காலத்தில் செய்யும் என்னும் முற்றே நிகழ்காலம் காட்டியது. ஆநின்று கின்று என்பன பிற்பட்டன. கிறு என்பது இரண்டற்கும் பிற்பட்டது என்பர் நச்சினார்க்கினியர்; தொல். சொல். 204, எதிர்மறை வினைகள் நச்சினார்க்கினியர் கருத்தை உட்கொண்டு சொற்றனவாம்.

கிட, இரு என்பன நிகழ்காலம் காட்டும் என்பதனை நச்சினார்க்கினியர் .சொல். 204 ஆம் நூற்பா உரையிலும் 'உரைக்கிற்றி' 'நன்றுமன் என் இது நாடாய்கூறி' என றகரம் நிகழ்வுபற்றி வருதலை 225ஆம் நூற்பா உரையிலும். 'கானம் கடத்திர் எனக்கேட்பின்' எனத் தகரம் நிகழ்வுபற்றி வருதலை 226ஆம் நூற்பா உரையிலும், உண்பல் வருவல் உண்ணாநிற்பல் எனப் பகரமும் வகரமும் சிறுபான்மை நிகழ்வுபற்ற வருதலையும், 'கூடநீர் நின்ற பெற்றிகண்டு இப்பால் நோக்குவேற்கு' என வகரம் நிகழ்வுபற்றி வருதலையும் 205ஆம் நூற்பா உரையிலும் குறிப்பிட்டுள்ளார்.

இவை யாவும் இவ்வாசிரியரால் இயைபு நோக்கிக் கொள்ளப்பட்டனவாம்.

இல் என்ற எதிர்மறை இடைநிலை இடையே வரும்வழிக் கால இடைநிலைகளும் உடன் வருதல் உண்டு ஆதலின்,

உண்ணாநின்றிலன்— உண் + ஆநின்று + இல் + அன் எனவும், உண்கின்றிலன் — உண் + கின்று + இல் + அன் எனவும், பிழக்கப்பட்டு எதிர்மறைப் பொருளோடு நிகழ்காலம் காட்டுமாறும் அறிக.

சொல்	இடைநிலை	சொல்	இடைநிலை
உண்ணாகிடந்தான்	கிட	உண்பல்	ப்
உண்ணாஇருந்தான்	இரு	வருவல்	வ்

சொல்	இடைநிலை	சொல்	இடைநிலை
உரைக்கிற்றி	ற்	நோக்குவேன்	வ்
நாடாய் கூறி	ற்	உண்பேன்	ப்
கடந்நிர்	த்		

ஒத்த நூற்பா :

முழுதும் நன். 143

எதிர்கால வினை இடைநிலை

49. பவ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலை யாம்இவை சில இல

இஃது எதிர்காலம் காட்டும் வினைமுற்றுப் பகுபத இடைநிலைகள் இவை எனவும், இவ்விடைநிலைகளைச் சில வினைமுற்றுப் பகுபதங்கள் ஏலா எனவும் கூறுகின்றது.

இ-ள் : பகர வகரங்களாகிய இரண்டு ஒற்றும் மூவிடத்து ஐம்பால்களினும் எதிர்காலம் காட்டும் தெரிநிலை வினைமுற்றுப் பகுபத இடைநிலைகளாம். இம்முக்காலமும் காட்டும் இடைநிலைகளைச் சில வினைப்பகுபதங்கள் ஏலாவுமாம் என்றவாறு.

வரலாறு : உண்பன் உறங்குவன் எனவரும். ஏனைப்பால் இடங்கள்தோறும் ஒட்டுக. நடப்பி வருவி நடத்துவி எனச்செய்வி என்னும் பொருண்மைக்கண் வருப முன்னிலை ஏவல ஒருமை வினைமுற்றுப் பகுபதங்களும் இவ்விடைநிலை பெற்றவாறு காண்க.

உரையிற்கோடலான், உண்பான்அல்லன் ஓதுவான் அல்லன் எனமறைக்கண் இவ்விடைநிலைகள் வேறுசில எழுத்துக்களோடு கூடி எதிர்காலம் காட்டும் எனவும்.

'அண்க ணாளனை நகுகம் யாமே' அகம். 32-21
'பாடுகம் வாவாழி தோழி' கலி. 41-1
'ஐய சிறிது என்னை ஊக்கி' கலி. 37-15
உண்டி, 'ஈதல் மாட்டு ஒத்தி பெரும' கலி, 86-22

உரைத்தி, தின்றி எனக் கடதறக்களும் சிறுபான்மை எதிர்காலம் காட்டும் எனவும் கொள்க. பிறவும் அன்ன. 12

விளக்கம் :

நடப்பி— நட+ப்+ப்+இ—ப்—இடைநிலை
வருவி வா+வ்+இ—வ்—இடைநிலை
நடத்துவி - நடத்து+வ்+இ - வ்—இடைநிலை

செய்வி என்ற வாய்பாட்டுப் பொருள்தரும் வி, பி என்பன வற்றின்கண் எதிர்காலங் காட்டும் வ், ப் என்ற இடை நிலைகள் உண்மையை எடுத்து ஓதினார்.

உண்பான் அல்லன்—உண்+பான்+அல்+அன்
ஓதுவான் அல்லன்—ஓது+வான்+அல்+அன்

பகர வகர இடைநிலைகள் ஆன் என்பதனொடு கூடியும் எதிர்காலம் காட்டுவதற்கு இவை எடுத்துக்காட்டு.

'அண்க ணாளனை நகுகம் யாமே' 'பாடுகம் வாவாழி தோழி' என்பனவற்றில் நகுகம், பாடுகம் என்ற சொற்களின் ககரம் எதிர்காலம் காட்டுதலை நச்சினார்க் கினியர் சொல். 204ஆம் நூற்பா உரையிலும்,

'ஐய சிறிது என்னை ஊக்கி' 'ஈதல் மாட்டு ஒத்தி பெரும்' எனக் ககரமும் தகரமும் பெற்ற இகரம் ஏவல் கண்ணியே நிற்கும் என்பதனைச் சொல். 225ஆம் நூற்பாவின் உரையிலும் குறிப்பிட்டுள்ளார்.

ஊக்கி என்பதன்கண் ககரமும், உண்டி என்பதன்கண் டகரமும், ஒத்தி என்பதன்கண் தகரமும், தின்றி என்பதன் கண் றகரமும் எதிர்காலம் காட்டின.

ஒத்த நூற்பா :

முழுதும் நன். 144

இடைநிலை ஏலா வினைகள்

50. குடுதுறு என்னும் குன்றியல் உகரமொடு
உம்மூர் கடதற இறுதியும் பம்மார்
மின்என் ஈறும் வியங்கோள் பகுதியும்
ஏவலும் மறையும் என்பன எதிர்வும்
செய்யும்நிகழ்பு எதிர்வும் மெய்பெறத் தருமே.

இது மேல் காலம் காட்டும் இடைநிலைகளைச் சில வினைமுற்றுப் பகுபதங்கள் ஏலா என்றார், அவை இவை என்பதூஉம், அவை இக்காலம் காட்டும் என்பதூஉம் கூறுகின்றது.

இ-ள் ; குடுதுறு என்னும் குன்றியலுகர ஈற்று உண்கு உண்டு வருது சேறு முதலிய தன்மை ஒருமை வினைமுற்றுக்களும். உம் என்னும் இறுதி இடைச் சொல்லின் உகரம் ஏறிய கும் டும் தும் றும என்னும் இவ்வீற்று உண்கும் உண்டும் வருதும் சேறும் முதலிய தன்மைப் பன்மை வினைமுற்றுக்களும், பகர உயிர் மெய்யும் மாரும் என்னும் இவ்வீற்று உரிஞுப உண்ப கொண்மார் முதலிய உயர்திணைப்பன்மை வினை முற்றுக்களும், மின் என்னும் ஈற்று உண்மின் உரிஞு மின் முதலிய முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களும் வியங்கோள் திறத்து வரும் கவ்வும் யவ்வும் ரவ்வும் அல்லும் ஆலும் மாரும் உம்மும் மையும் என்னும் இவ் விற்றுச் செல்கவாழிய வாழியர்

'மகன்எனல் மக்கட் பதடி எனல்' குறள். 196
'மரீஇயது ஒராஅல்' தொல். சொல். 443
'காணன்மார் எமரே' நற். 64

'வாழ்தல் வேண்டும் இவண்வரைந்த வைகல்'
புறம். 367-9

'அஞ்சாமை அஞ்சுவது ஒன்றின்'

முதலிய வியங்கோள் முற்றுக்களும், ஏவல் திறத்து வருஉம் உண்ணும் தின்னும் முதலிய முன்னிலை ஏவல் பன்மை வினைமுற்றுக்களும், அல்லும் ஆலும் ஏலும் காணும் என்னும் இவ்வீற்று உண்ணல் மறா அல் அழேல் சொல்லிக்காண் முதலிய முன்னிலை ஏவல் ஒருமை வினை முற்றுக்களும், உண்ணலன் உண்ணான் முதலிய எதிர்மறை வினைமுற்றுக்களும் எனச் சொல்லப்படுவன ஆகிய பகுபதங்கள் எல்லாம எதிர்காலமும், செய்யும் எனனும் வாய்பாட்டான்வரும் உண்ணும் தின்னும் முதலிய வினைமுற்றுப் பகுபதங்கள் நிகழ்கால எதிர் காலங்களும் இடைநிலை எலாது பொருள்பெறக் காட்டும் என்று கூறுவர் அறிந்தோர் என்றவாறு.

உண்ணாநிற்ப எனப் பவ்வீற்று உயர்திணைப் பன்மை வினைமுற்று நிகழ்காலமும், உண்டிலன் உண்ணாநின்றிலன் முதலிய எதிர்மறை வினைமுற்றுக் கள் முறையே இறந்தகாலமும் நிகழ்காலமும் காட்டும் பிறஎனின், அவை இடைநிலை பெற்று அவற்றால் காலம்காட்டின. ஈண்டு ஓதியன இடைநிலை பெறாது காலங்காட்டின என்க.

'மெய்பெற' என்றதனால்.

'கழிந்தது பொழித்தென வான்கண் மாறினும்
தொல்லது விளைந்தென நிலம்வளம் சுரப்பினும்'
புறம். 203-1, 2

எனப் பொழிந்து விளைந்து என்னும் துவ்வீற்றுத்தன்மை ஒருமை வினைமுற்றுக்கள் இறந்தகாலமும்,

'சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம்அவண் நின்று வருதும்' சிறுபாண், 142-3

எனத் தும்மீற்றுத் தன்மைப் பன்மை வினைமுற்று நிகழ் காலமும் சிறுபான்மை காட்டும் எனவும் கொள்க.

இன்னும் அதனானே, ஈண்டு ஓதிய காலத்தில் பிறழ்ந்து வருவன உளவாயின் அவையும், இவ்விடை நிலை ஏலாப் பெயரெச்ச வினையெச்சங்களும், என் மனார் என்றிசினோர் முதலிய வினைத்திரிசொற்களும் காலம் காட்டும் இயல்பு அறிந்து முடித்துக்கொள்.

இன்னும் அதனானே, வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்கள் இடைநிலை வகையானும் ஈற்று வகை யானும் அன்றிக் குறிப்பானே ஏற்றவாறு முக்காலமும், நடவா முதலிய முன்னிலை ஏவல் ஒருமை வினைப்பகாப் பதங்கள் எதிர்காலமும் காட்டும் எனவும் கொள்க. ஈண்டு சொல்லா தொழிந்த இவற்றின் விகற்பம் எல்லாம் மேல் சொல் ஓத்தினுள் வினையியலுள் காண்க.

இனி இவ்வாறு அன்றி,

றவ்வொடு உகரஉம்மை நிகழ்பு அல்லவும்
தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வொடு எதிர்வும் மின்ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்
ஐவொடு வரவும் செய்யும்நிகழ்பு எதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே நன். 145

எனக் கூறுவாரும் உளர். காலங்காட்டுவனவாகப் பின்னுள்ளோர் விதந்து ஓதிய எழுத்துக்கள் தம்முள் மயங்கியும் வருதலின் அதுபற்றிக் காலம் காட்டும் எழுத்துக்களை ஆசிரியர் தொல்காப்பியனார் எடுத்து ஓதார் ஆயினாரேனும், இடைநிலை வகையானும் இறுதிநிலை வகையானும் காட்டுதும் எனக் காலம் காட்டிய புகுந்த உரையாசிரியரை உன்னிட்டோரால் அவ்வாறு கூறப்படாமையின் அஃது இலக்கணம் அன்று என மறுக்க.

விளக்கம் : உண்ணலன் உண்ணான் முதலிய எதிர்மறை வினைமுற்றுக்கள் எதிர்காலம் காட்டும் என்பது இவர் கருத்து.

உண்ணாநிற்ப	—ஆநில்	நிகழ்கால இடைநிலை.
உண்ணாநின்றிலன்	—ஆநின்று	,,
உண்டிலன்	—ட்	இறந்தகால இடைநிலை.
பொழிந்து	—துவ்வீறு	நிகழ்காலம் காட்டியது
விளைந்து	—	,, ,,
வருதும்	—தும் ஈறு	,,
என்மனார்	—இறந்தகால வினைமுற்று— தெய்வச்சிலையார்.	
	நிகழ்கால வினைமுற்று— நச்சினார்க்கினியர்.	
	எதிர்கால வினைமுற்று— சேனாவரையர்.	

நன்னூலார் கருத்துப் பண்டை உரையாசிரியர்கள் குறிப்பிட்டவற்றொடு மாறுகோடலின், அவர் குறிப்பிடும் 'றவ்வொடு உகர உம்மை' என்ற நூற்பா நன். 145 இவ்வாசிரியரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

'கழிந்தது.........சுரப்பினும்' எனப்புறிப் பொழிந்து விளைந்து என்பன இறந்தகாலம் உணர்த்தின எனச் சொற்படல 205ஆம் நூற்பா உரையிலும்,

'சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம்அவண் நின்றும் வருதும்' 'சிறுபாண். 142-3

எனத் தும்மீறு சிறுபான்மை நிகழ்காலம் உணர்த்தும் என 204 ஆம் நூற்பா உரையிலும் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளனவற்றை இவ்வாசிரியர் ஏற்று வரைந்துள்ளார்.

ஒத்த நூற்பா :

'றவ்வொடு.........ஈங்கே.' நன். 145

வினைக்குறிப்பிடைநிலை

51. இலக்கியம் கண்டுஅதற்கு இலக்கணம் இயப்பலின்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைக்குறிப்பு இடைநிலை என்னல் வேண்டும்.

இது வினைக்குறிப்பு முற்றுப் பகுபத இடைநிலை கூறுகின்றது.

இ-ள் : முற்காலத்தில் கண்டதாகிய இலக்கியத்திற்கு இலக்கணம் கூறலின், ஈண்டு முடிக்கலுறும் பதத்தின் பகுதியையும் விகுதியையும் பிரித்து வேறு இடைநின்றதனை வினைக்குறிப்பு முற்றுப் பகுபதத்தின் இடைநிலை என்று சொல்லுதலை விரும்பும் ஆசிரியன் என்றவாறு.

இவை காலம் காட்டாது வாளா நிற்பினும், இடை நிற்றலான் இடைநிலை ஆம் என்பார் 'இடை நிலை என்னல் வேண்டும்' என்றார்.

வரலாறு ; கச்சினன் நாட்டினன் ஐயாண்டினன் தோளினன் அருளினன் வரவினன் எனவரும். பிறவும் அன்ன. இன் ஈண்டுச்சாரியை அன்று, இடைநிலை; உறங்கினான் என்புழிப்போல. 14

விளக்கம்: உறங்கினான் என்ற தெரிநிலை வினைப் பகுபதத்தில் காலம் காட்டும் 'இன்' என்ற இடைநிலை இருப்பது போலக் கச்சினான் என்ற குறிப்பு முற்றுப் பகுபதத்தின்கண் காலம் காட்டாத பிறிதோர் 'இன்' இடைநிலை வந்துள்ளது என்பது இவர் கருத்து. காலங் காட்டும இன் என்ற இடைநிலை, காலங் காட்டாத இன்

என்ற இடைநிலை, இன் என்ற சாரியை இவை வடிவான் ஒன்றே ஆயினும், வெங்வேறு சொற்களே என்பது அறிக.

இலக்கண விளக்கச் சூறாவளி

கச்சினன் நாட்டினன் என்புழிவரும் இன் ஈண்டுச் சாரியை அன்று, உறங்கினான் என்புழிப்போல இடை நிற்றலான் இடை நிலையாம் என்றார். அதனை மறந்து, 'பதமும் விகுதியும்' என்னும் சூத்திரத்துள், 'உண்டது ஊரது என்றாற்போல்வன சாரியை வர வேண்டியே நின்றன' என்றார். இங்ஙனம் முன்னொடு பின் மயங்கக் கூறுதல் அவர் இயல்பு என்க.

அமைதி

'இன்' சாரியைபோல 'இன்' இடைநிலையும் ஒன்றுண்டாகலானும், அது வினைக்குறிப்பின்கண் வந்து குறிப்பால் காலம் காட்டுதற்கு உதவுதலானும், கச்சன் நாட்டன் போல வினைக்குறிப்பு வழக்கின்கண் இன்மையானும் இதனை இடைநிலை என்றற்கண் இழுக்கின்மை அறிக. காலம் காட்டாப் பெயர் இடை நிலைபோல, காலத்தைக் குறிப்பால் காட்டும் இன்' இடைநிலையும் கோடல் வேண்டும் என்பது.

ஒத்த நூற்பா :

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்
பகுதி விகுதி பகுத்துஇடை நின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனவே'
நன். 141

வினை வினைக்குறிப்புப் பெயரிடைநிலை

52. விளம்பிய இடைநிலை வினைப்பெயர்க் கண்ணு
ஏற்பன கோடல் இயல்புஎன மொழிப.

இது வினை வினைக்குறிப்புப் பெயர்ப்பகுபதங்கட்கு இடைநிலை ஆமாறு மாட்டெறிந்து உணர்த்துகின்றது.

இ-ள் : மேல்வினை வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்களுக்கு ஓதிய இடைநிலைகள் அவ்விரு பெயரிடத்தும் பொருந்துவன கொணர்ந்து முடித்தல் இயல்பாம் என்று கூறுவர் புலவர் என்றவாறு.

வரலாறு : நக்கான் விட்டான் உரைத்தான் உற்றான் பருகினான் எனவும், நடவாநின்றான் நடக்கிறான் நடக்கின்றான் எனவும், உண்பான் உறங்குவான் எனவும், கச்சினான் கழலினான் எனவும் வரும், இவற்றைப் பகுத்துக் கூறுக. உண்டவன் உரைத்தவன் உண்ணாநின்றவன் உண்பவன் முதலிய வினைப் பெயர்கள் இவ்விடைநிலை பெற்றவாறும், வானவன் மீனவன் வில்லவன் எல்லவன் கதிரவன் கரியவன் முதலியன வகர இடைநிலை பெற்றவாறும், சேரமான் கட்டிமான் முதலியன மகர இடைநிலை பெற்றவாறும், வலைச்சி பனத்தி மலையாட்டி என்பன முறையே சகர தகர டகர இடைநிலை பெற்றவாறும், செட்டிச்சி தச்சிச்சி முதலியன இச்சென்னும் இடைநிலை பெற்றவாறும் காண்க. பிறவும் அன்ன.

இனி, ஈண்டு ஓதிய பகுதி முதலிய மூன்றானும் மேல் புணரியலுள் ஓதப்படும் சாரியை முதலிய மூன்றானும் பகுபதம் முடிக்குமாறு.

நடந்தான் என்னும் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை இறந்தகால இயற்றும் வினைமுதல் வினைமுற்றுப்பகுபதம் முடிப்புழி, நடத்தலைச் செய்தான் என்னும் தொழில் தோன்ற 'நடவா' 43 என்பதனான் நட என்னும் அகர ஈற்றுப் பகுதியை முதல்வைத்து, அதன்மீதே 'அன் ஆன்' 232 என்பதனான் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை உணர்த்தும் ஆன்

என்னும் விகுதியை நிறுவி, 'கடதற ஒற்றின்' 47 என்பதனான் பகுதி விகுதிக்கு இடையே இறந்தகாலம் காட்டும் தகர இடைநிலையை வருவித்து, 'இயல்பினும் விதியினும்' 82 என்பதனான் மிகுத்து, 'வலித்தல் மெலித்தல்' 57 என்பதனான் அதனை மெலித்து, 'புள்ளியீற்றின்முன் உயிர்தனித்து இயலாது' 64 என்பதனான் இடைநிலைத் தகர ஒன்றின்மீதே விகுதி ஆகாரத்தை ஏற்றி ஒருமொழி ஆக்கி நடந்தான் என முடிக்க.

நடந்தது என்னும் அஃறிணை ஒருமைப் படர்க்கை இறந்தகால இயற்றும் வினைமுதல் முனைமுற்றுப் பகுபதம் முடிப்புழித் துவ்விகுதியும் அகரச்சாரியையும், நடந்தேன் என்னும் விரவுந்திணைத் தன்மை ஒருமை இறந்தகால இயற்றும் வினைமுதல் வினைமுற்றுப் பகுபதம் முடிப்புழி ஏன் என்னும் விகுதியும், நடந்தாய் என்னும் விரவுத்திணை முன்னிலை ஒருமை இறந்தகால இயற்றும் வினைமுதல் வினைமுற்றுப் பகுபதம் முடிப்புழி ஆய் என்னும் விகுதியும் கொடுத்து முன் முடித்தாங்கு முடிக்க. இவ்வாறே இயற்றும் முனைமுதல் தெரிநிலை முனைமுற்றுப் பகுபதங்கள் எல்லாம் ஏற்ற பெற்றி அறிந்து முடித்துக் கொள்க.

நடப்பித்தான் என்னும் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை இறந்தகால ஏவல் முனைமுதல் முனைமுற்றுப் பகுபதம் முடிப்புழி, நடப்பித்தலைச் செய்தான் என்னும் தொழில் தோன்ற 'முன்னர் ஓதிய முதல்நிலை இறுதியின்' 44 என்பதனானே, நடப்பி என்னும் பகுதியை முதல்வைத்து முன் முடித்தாங்கு முடிக்க. பிறவும் அன்ன.

கச்சினன் என்னும் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைக் குறிப்பான் முக்காலமும் கோடற்கு உரிய முனைக்குறிப்புமுற்றுப் பகுபதம் முடிப்புழி, பண்டு

இப்பொழுது நாளை என முறையே இப்பொருளை உடையனாய் இருத்தலைச் செய்தான் செய்கின்றான் செய்வான் என்பவற்றுள் ஏற்பது ஒருகாலம் குறிப்பால் தோன்றப் 'பொருள் இடம் காலம்' 45 என்பதனான் கச்சு என்னும் பகுதியை முதல்வைத்து, அதன்மீதே அன் என்னும் விகுதியை நிறுவி, 'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்' 51 என்பதனான் இன் இடை நிலை வருவித்து, 'குற்றியலுகரத்து இறுதி முன்னும்' 65 என்பதனானும் 'புள்ளி யீற்றுமுன்' 64 என்பதனானும் குற்றுகரத்தின்மீதே இடைநிலை இகரத்தையும் னகர ஒன்றின்மீதே விகுதி அகரத்தையும் ஏற்றி ஒருமொழி ஆக்கிக் கச்சினன் என முடிக்க.

இவ்வாறே குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்கள் எல்லாம் ஏற்ற பெற்றி அறிந்து முடித்துக் கொள்க. உண்டான் உண்டவன் கரியான் கரியவன் முதலிய வினை வினைக்குறிப்பு முற்றுப்பெயர்களை முறையே இத்தொழிலைச் செய்தவன் இன்னனாய் இருந்தவன் என்னும் தொழின்மையும் பொருண்மையும் தோன்ற முடித்துக்கொள்க. இன்னும் பனவன் அரசன் வாணிகன் உழவன் கணக்கன் வலையன் தச்சன் வண்ணான் கணவாளன் எனவும், பனத்தி அரசி வாணிச்சி உழத்தி கணக்கச்சி வலைச்சி தச்சிச்சி வண்ணாத்தி கணவாட்டி எனவும் வரும் இத்தொடக்கத்துக் குறிப்பு வினைமுற்றுப் பெயர்ப் பகுபதங்களை இன்ன குலத்தார் என்னும் பொருண்மை தோன்ற முடித்துக்கொள்க.

இன்னோரன்ன பிறவாற்றான் வரும் பகுபதங்களை யும் இதுவே நிலனாக முடித்துக்கொள்க. 15

இரண்டாவது பதவியல் முற்றிற்று.

விளக்கம்: வினைமுற்றுப் பகுதியில் பொருள் ['றக்குய'] வினைமுற்றுப்பெயர் பகுதியில் பொருள்

சிறவாது எனவே, வினைமுற்றைப் பெயராக்கவேண்டின் பகுதியைப்படுத்தல் ஓசையாற் கூறல்வேண்டும் என்பது.

	ப	ச	இ	சா	வி	விகா
நடந்தான்	நட	த்	த்		ஆன்	ந்
நடந்தது	நட	த்	த்	அ	து	ந்
நடந்தேன்	நட	த்	த்		ஏன்	ந்
நடந்தாய்	நட	த்	த்		ஆய்	ந்
நடப்பித்தான்	நடப்பி	த்	த்		ஆன்	
கச்சினன்	கச்சு		இன்		ஆன்	
உண்டான்	உண்		ட்		ஆன்	
உண்டவன்	உண்		ட்	அ	அன்	

பனவ குலத்தினன் பனவன்; அரச குலத்தினன் அரசன்; வணிக குலத்தினன் வணிகன்; உழவு, கணக்கு, வலைமை தச்சு, வண்ணாரம், கணவாளம் ஆகிய தொழிலான் முயன்று உண்பவன் முறையே உழவன் கணக்கன் வலையன் தச்சன்வண்ணான் கணவாளன் எனக்காண்க.

இக்குறிப்பு வினைமுற்றுப் பெயர்ப்பகுபதங்களை வடநூலார் தத்திதப்பெயர் என்ப. 'முன்சொல் தன்னைத் துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்துப் போய்ச் சேரும் பிரத்தியயத்தை உடைய சொல்லே தத்திதாந் தத்தை உடைய சொல்லாம்' —பிர. விவே. தத். 1 உரை.

'வலையான் முயன்று உண்பவன் வலையன்—
யகரம் இடைநிலை.'

வேதத்தை உரைப்பான் வேதியன்—அம்
குறைந்து இகரம் மிக்கது.

கொந்தத்தை உடையவன்—கொந்தன் ஈறு
அழிந்தது.

மருந்தைப் பண்ணுவான் மருத்துவன்—
மெல்லொற்று வல்லொற்றாயிற்று

கூத்துப் பயில்வான் கூத்தன்; வல்லினால் பயன் கொள்வான் வல்லி; சோதிடத்தை எண்ணுவான் சோதிடன்; அதிதி மகன் ஆதித்தியன்—கடை குறைந்து நடுவே தகரம் மிக்கு ஆதி நீண்டது;

திதி மகன் தைத்தியன்;விநதை மகன் வைநதேயன் கங்கை மகன் காங்கேயன்;

சிபி வருக்கத்தான் செம்பியன்—மகரம் தோன்றியது இகரம் எகரமாயிற்று;

குரு வருக்கத்தான் கௌரவன் — உகரம் ஔகார மாயிற்று;

புத்தனை வணங்குவான் பௌத்தன்; சிவனை வணங்குவான் சைவன்; பசுபதியை வணங்குவான் பாசுபதன்;

பூனைக்காலை ஒப்பக் காய்ப்பது பூனைக்காலி;

குலத்தில் விழுமியான் குலினன்; வியாகரணம் ஓதுவான் வையாகரணன்;

துவாரத்தில் (வாயிலில்) நிற்பான் தௌவாரிகன்; குணத்தை உடையான் குணவான்;மதியை நன்கு உடையான் மதியான்; கள்ளத்தை உடையான் கள்ளன்;

குங்குமத்தால் ஊட்டப்பட்டது கௌங்குமம்; இருடி சப்பந்தம் உடையது ஆரிடம்; பார்ப்பானால் செயற் படுவது பார்ப்பு"—வீ 53, 54 உரை.

பிரயோக விவேகம் 31, 32 நூற்பா உரையும் நோக்குக.

'கைவாரம் கொள்வானைக் கைவாரி எனவும், திரு இல்லாதானைத் திருவிலி எனவும், அறிவு இல்லாதானை அறிவிலி எனவும், நூல் ஓதினானை நூலோதி எனவும்,

இவ்வாறே ஈறு திரிந்து வருவனவும் பிறவும் பிரித்துக் காட்டுக.

வில்லி வாளி — வினைக்குறிப்புமுற்று ஈறுதிரிந்த பெயர்.

வலைச்சி பனத்தி வெள்ளாட்டி முதலியன சகரமும தகரமும் டகரமுமாகிய இடைநிலை பெற்றன.

செட்டிச்சி கணக்கச்சி முதலியன இச் என்னும் இடைநிலை பெற்றன.

கணவாட்டி – இவ்வினைப்பெயர் டகரம் பெற்றது. இவ்வாறே வருவன பிறவும் பிரித்துக்காட்டுக.'–தொல். சொல். 463 நச். உரை.

மயிலைநாதரும் அரசன் வாணிகன் உழவன் வேளாளன் கணக்கன் குந்தவன் தலையன் உவச்சன் வண்ணான் கணவாளன் முதலிய ஆண்பாற் பெயர்ப் பகுபதங்களையும் அரசி, பார்ப்பனி வாணிச்சி உழத்தி தச்சிச்சி முதலிய பெண்பாற் பெயர்ப்பகுபதங்களையும் நன்னூல் 144 ஆம் நூற்பா உரையுள் முடித்துக் காட்டுவர். இவ்வாறே,

	ப	ச	இ	சா	வி	விகாரம்
மலையன்	மலை				அன்	
மலையது	மலை			அ	து	
மலையான்	மலை				ஆன்	
நிலத்தன்	நிலம்	த்	த்		அன்	
நிலத்தது	நிலம்	த்	த்	அ	து	
நடந்தான்	நட	த்	த்		அன்	ந்

என்று பிரித்துக்காட்டி அந்நூற்பா உரையிலேயே விதி கூறியுள்ளார்.

சிவஞான முனிவர் நன்னூல் 145ஆம் நூற்பா உரையில் குறிப்பன :

	ப	ச	இ	சா	வி	விகாரம்
அவன்	அ				அன்	
தமன்	தாம்				அன்	
குறிஞ்சியான்	குறிஞ்சி				ஆன்	
பிரபவன்	பிரபவ				அன்	
திணிதோளன்	திணிதோள்				அன்	
பெரியன்	பெருமை				அன்	
ஓதுவான்	ஓது		வ்		ஆன்	
நன்மை	நல்				மை	
வருதல்	வா				தல்	
நடந்தனன்	நட	த்	த்	அன்	அன்	ந்
நடவாநின்றான்	நட		ஆநின்று		ஆன்	
நடப்பான்	நட	ப்	ப்		ஆன்	
நடந்தது	நட	த்	த்	அ	து	ந்
நடவாய்	நட	வ்			ஆய்	
நடப்பியாய்	நடப்பி				ஆய்	
நடப்பிப்பாய்	நடப்பிப்பி				ஆய்	
நடவான்	நட		(ஆ)		ஆன்	
நடவா	நட				ஆ	
நடந்திலன்	நட	த	த்	இல் (எதிர் மறை)	அன்	ந்

'எழுந்து—ஊண்—தீன்—கோள்—என்பன. எழுது—உண்—தின்—கொள்—என்ற வினைப்பகுதிகளோடு செயப்படு பொருளை உணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட்டபின் திரிந்த சொற்களாம். கெடு என்பது தல்விகுதிகெட்டு முதல் நீண்டு கேடு என ஆயிற்று. திரை நுரை அலை தளிர் என்றாற்போல்வனவும் விகுதி குன்றி முதல்நிலை மாத்திரையாய் நிற்றலின், முதல்நிலைத் தொழிற்பெயர்.

'ஐகார விகுதி செயப்படுபொருண்மை உணர்த்துதல் நடவை சேக்கை உடுக்கை தொடை விடை என்றாற் போல்வனவற்றுள்ளும், இகர விகுதி வினைமுதல் பொருண்மை உணர்த்துதல் சேர்ந்தாரைக்கொல்லி நூற்றுவரைக் கொல்லி நாளோதி நாலோதி என்றாற் போல்வனவற்றுள்ளும் காண்க. உடுக்கை என்பது பொருட்பெயராயின் ஐகார விகுதி பெறும்; தொழிற் பெயராயின் கை என்பது விகுதியாகும்.' நன். 145ஆம் நூற்பா விருத்திஉரை.

இரண்டாவது பதவியல் முற்றிற்று.

மூன்றாவது உயிர்ஈற்றுப் புணரியல்

புணர்ச்சி இன்னதென்பது

53. மெய்உயிர் முதல்ஈறு ஆம்இரு பதங்களும்
தம்மொடும் பிறவொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே.

என்பது சூத்திரம்.

திருத்த முறையானே பதங்கள் தம்மொடும் உருபொடும் புணருமாறு கூறுவான புகுந்தவற்றுள், இல்வோத்து உயிர் ஈற்றுப்பதம் நின்று வருமொழி வன்கணத்தொடும் சிறுபான்மை ஏனைக் கணங்களொடும் புணருமாறு உணர்த்தினமையின் உயிர் ஈற்றுப் புணரியல் என்னும் பெயர்த்து.

பொதுவகையான் புணரும் இயல்பும், விரிந்த சூத்திரப் பொருள் அன்றித் தொக்குப் புணரும் இயல்பும் குற்றுகர ஈற்றுச் சொற்கள் நின்று புணரும் இயல்பும் உணர்த்துதலொடு இயைபு நீக்காது, தன்னொடு இயைபின்மை மாத்திரை நீக்கித் தலைமை பற்றி வந்து அடுத்த 'உயிர் ஈறுபுணர்தல்' என்னும் விசேடத்தான் விசேடிக்கப்படுதலின் இக்குறி தலைமைபற்றிய வழக்கு. ஆதீண்டு குற்றிபோல.

மேல் பதங்கள் ஆமாறு உணர்த்தி, ஈண்டு அவை தம்முல் புணருமாறு உணர்த்தினமையின், மேல் ஓத்தினொடு இயைபு உடைத்தாயிற்று இதனுள் இத்தலைச் சூத்திரம் பொதுவகையான் புணருமாறு கூறுகின்றது.

இ-ள் ; மெய்முதலாயும் உயிர்முதலாயும் மெய் ஈறாயும் உயிர்ஈறாயும் உள்ள பகாப்பதங்களும் பகுபதங்களும் தம்மொடு தாம் வந்தும் பிறவற்றொடு வந்தும், அல்வழிப் பொருளினான் ஆதல் வேற்றுமைப் பொருளி

னான் ஆதல் புணருமிடத்து, நிலைமொழியது ஈற்றெழுத்தும் வருமொழியது முதல் எழுத்தும் இயல்பாகியும் விகாரமாகியும் பொருந்துவது முன்னர்க் கூறிய புணர்ச்சியுள் தம்மொடுதாம் புணரும் புணர்ச்சியாம் என்றவாறு.

மெய்யை முற்கூறினார், இயல்பும் விகாரமும் ஆகிய இருகூற்று நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழா என்றற்கு, வட்டப்பலகை தமிழ்ப்பிள்ளை நின்கை ஆன்கன்று என்றாற்போல விதிவகையான் எய்திய உயிர் ஒற்று இறுதிகளும் புணர்ச்சி எய்தல் ஈண்டுக் கோடும். மேல் இவற்றையும் விரிவு அஞ்சிப் 'பிறிது' என்னும் நயம் பற்றி இயற்கை வகையான் நின்ற உயிர் ஒற்று இறுதிகளுள் அடக்கிச் செய்கை செய்ய ஆகலின். ஈண்டு இருபதங்களும் என்றன அவற்றின் திறனாகிய பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் சிறுபான்மை இடைச்சொல்லும் உரிச் சொல்லும் எனக் கொள்க.

அவை மெய்யும் உயிரும் முதலும் ஈறுமாய் வருமாறு:

மரம் இலை எனவும், ஆல்வின எனவும், வந்தான் உண்டன எனவும், உண்டான் வந்தன எனவும், மன் அம்ம எனவும், அந்தில் மற்று எனவும், மல்லல் உறு எனவும், அஸ்மால் தவ எனவும் முறையே காண்க.

அவை தம்மொடும் பிறவொடும் வருமாறு :- ஆல் வீழ்ந்தது என மெய்யிறு சொல்முன் மெய் முதல் மொழி வருதலும், ஆ உண்டு என உயிர் இறு சொல்முன் உயிர் முதல்மொழி வருதலும், ஆல்இலை என மெய் இறு சொல் முன் உயிர் முதல்மொழி வருதலும், ஆவெளிது என உயிர்இறு சொல்முன் மெய்முதல் மொழி வருதலும், சாத்தன்கை எனப் பெயர்ச் சொல்லொடு பெயர்ச்சொல் வருதலும், வந்தான் போயினான் என வினைச்சொல் லொடு வினைச்சொல் வருதலும், சாத்தன் உண்டான்

எனப் பெயர்ச்சொல்லொடு வினைச்சொல் வருதலும், வந்தான் சாத்தன் என வினைச்சொல்லொடு பெயர்ச் சொல் வருதலும் 'அது மற்றம்மதானே' என இடைச் சொல்லொடு இடைச்சொல் வருதலும், 'கொம்மைக் குழகாடும் கோலவரை மார்ப' என உரிச்சொல்லொடு உரிச்சொல் வருதலும், 'அது கொல்தோழி காமநோயே' எனவும், 'மல்லல் மார்பு அடுத்தனன் புல்லுமாறு எவனோ' எனவும் அவற்றொடு பிற வருதலும் ஆம்.

'நிலைவருமொழிகள்' என்றது, ஈண்டு ஆகுபெயர், 'நிலைவருமொழிகள் எனப் பொதுப்படக் கூறிய அதனால், சாத்தன் வந்தான் வந்தான் சாத்தன் என நிறுத்த சொல்லும் அதனை முடித்தலைக் குறித்துவரும் சொல்லுமாய் வருதலும்; அங்ஙனம் வருங்கால் அவை பதினாயிரத்தொன்று, ஆயிரத்தொருபஃது பதினாயிரத் தொருபஃது எனமுறையே நிலைமொழி அடைஅடுத்தும் வருமொழி அடை அடுத்தும் இருமொழியும் அடை யடுத்தும் வருதலும்; முன்றில் மீகண் என இலக்கணத் தொடு பொருந்தியும் சோணாடு பாண்டிநாடு என இலக்கணத்தொடு பொருந்தாதும் மரூஉச் சொற்களாய் வருதலும்; 'கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினை' அகநா. 3-2 எனவும்,

> 'இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
> பரலவல் அடைய இரலை தெறிப்ப' அகநா.4-3,4

எனவும்,

> 'தெய்வ மால்வரைத் திருமுனி அருளால்' சிலப்.3-1

எனவும், முறையே ஓமைச்சினை—மருப்பின் இரலை—தெய்வவரை-என ஒட்டி ஓமையினது சினை, மருப்பினை உடைய இரலை, தெய்வத்தன்மையை உடைய வரை எனப் பொருள் தருகின்றன காண்பு—பரல்—மால்—என்பவற்றொடு ஒட்டினாற் போன்று ஒட்டி மிக்கும்

திரிந்தும்கெட்டும் நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவி யுமாய்ப் பொருள் இயைபு இன்றி வருதலும் கொள்க. பொருள் இயைபு இன்றி வருதல் நிலையாது என்றலாம் என்று உணர்க.

விளவினைக் குறைத்தான், விளவினது கோடு என்புழிச் சாரியையும் உருபும் நிறுத்தசொல்லாயே நிற்கும். இயல்பாய் இயைதல்—பொன்மணி புகழுழகிது ஓரிமணி எனமுன் நின்றபெற்றியின் வேறுபடாமை இயைதல், விகாரமாய் இயைதல்-அப்பெற்றியின் வேறு பட்டு இயைதல், விகாரத்து இயைவது எனப் பொதுப் படக் கூறிய அதனானே, ஒன்றே அன்றி நிலப்பனை— பனங்காய் என 'ஒரு புணர்க்கு இரண்டும் மூன்றும் உறப் பெறும்' நன் 156 எனவும் கொள்க. இயல்பு ஒரு தன்மைத்து ஆதலின், அதனை ஒழித்து விகாரக் கூறுபாடு மேற்கூறுப.

நிலைமொழியது ஈற்றெழுத்து முன்பிறந்து கெட்டுப் போக வருமொழியின் முதலெழுத்துப் பின்பிறந்து கெட்டமையின் முறையின் பிறந்து நின்று கெடுவன ஒருங்குநின்று புணருமாறு இன்மையின் புணர்ச்சி என்பது ஒன்று இன்றாம் பிறவெனின், அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசை இடையறவுபடாமை உள்ளத்தின்கண்ணே உணர்வர் ஆகலின் அவ்வோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவேயாம். ஆகவே, பின் கண்கூடாகப் புணர்க் கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயாம் என்க. 1

விளக்கம்: நிறுத்தமுறை— 'எண்பெயர்' என்ற இரண்டாம் நூற்பா. தம்மொடுதாம் புணருமாறு கூறும் இயல்கள் — உயிரீற்றுப் புணரியலும் மெய்யீற்றுப் புணரியலும்.

தாம் உருபொடு புணருமாறு கூறும் இயல்—உருபு புணரியல்.

வருமொழி முதற்கண் வல்லெழுத்துவரின் அது வன்கணம்! மெல்லெழுத்தும் இடைஎழுத்தும் உயிர் எழுத்தும் வரின் அது இயல்புகணம்.

பொதுவகையான் புணரும் புணர்ச்சி—தொல்காப்பிய எழுத்துப் படலப் புணரியலில் கூறப்படும் புணர்ச்சி.

பலசெய்திகளை உள்ளடக்கித் தொக்குப் புணரும் புணர்ச்சி—தொகைமரபில் கூறப்படும் புணர்ச்சி.

குற்றியலுகரம் புணர்ச்சி—குற்றியலுகரப் புணரியலில் கூறப்படும் புணர்ச்சி.

வெண்குடைப் பெருவிறல் வழுதியானவன் ஏனைய கருங்குடையும் செங்குடையும் உடையனேனும் பிறரிடம் இல்லாத வெண்குடையைத் தானே உடையன் ஆதலின் அப்பெயரினன் ஆயவாறுபோல, பிற புணர்ச்சியினைக் கூறினும் ஏனைஇயல்களுள் கூறப்பெறாத உயிரீற்றுப் புணர்ச்சியைத் தானே கூறுவதால் அப்பெயர்த்து ஆயிற்று.

> 'ஒருபெயர்ப் பொதுச்சொலுள் உள்பொருள் ஒழியத்
> தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும
> உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்'
>
> தொல். சொல். 49

ஆதலின் தலைமை பற்றி உயிரீற்றுப் புணரியல் என்ற பெயர் பெற்றது.

ஆதீண்டுகுற்றியில் ஏனை விலங்குகளும் உராய்தல் கூடுமாயினும், தலைமை பற்றி ஆவின் பெயரால் அது பெயரிடப்பட்டது.

எழுத்து மொழியாமாறு சென்ற இயலில் கூறப் பட்டது.

அம்மொழிகள் தம்மொடும் பிறவொடும் கூடித் தொடர் ஆதலைச் சுட்டுவன இவ்வியல்கள் மூன்றும்,

தம்மொடு தாம் வருதல்—பல+பல; சில+சில என்றாற் போல்வன.

பிறவருதல் பல+கற்றான் என்றாற் போல்வன. தம்மொடு தாம் புணர்தல்—ஒரு சொல்லொடு மற்றொரு சொல் புணர்தல்.

வேற்றுமை—பெயர்ப்பொருளை வேற்றுமை செய்யும் இரண்டு முதல் ஏழு ஈறாகிய வேற்றுமைப் பொருள். அல்வழி—வேற்றுமை அல்லாதது.

மெய்யீற்றுச் சொற்களும் மெய்முதற் சொற்களுமே பெரும்பான்மைய ஆதலின், உயிரை நிறுத்தமுறை பற்றி முற்கூறாது மெய்யைச் சிறப்பு முறை பற்றி முற் கூறினார்.

வட்டம்—இயல்பு மெய்யீறு;வட்ட—விதி உயிர்ஈறு.

தமிழ்—இயல்பு மெய்யீறு;தமிழ்—விதி உயிர்ஈறு.

நீ - இயல்பு உயிர்ஈறு' நின்—விதி மெய்ஈறு.

ஆ—இயல்பு உயிர்ஈறு; ஆன்—விதி மெய்ஈறு.

ஆ என்ற சொல் பெற்றத்தின் பெண்பாற்பெயர்.

ணகரச்சாரியை பெற்ற ஆன் என்ற சொல் வேறு; இயல்புஆகிய ஆன் என்ற சொல் வேறு. இயல்பாகிய ஆன் என்ற சொல் இருபாற்கும் பொது.

'ஆன்ஒற்று அகரமொடு நிலையிடன் உடைத்தே' தொல்-232 என்ற நூற்பா இயல்பாகிய ஆன் என்ற சொல் பற்றியது.

'பெற்றமும் எருமையும் மரையும் ஆவே' தொல், பொருள். 615 என்பது; இயல்பாகிய ஆ என்பது.

பிறிது—இயற்கை ஈற்றின் விதி ஈறு பிறிது ஆதல். நயம்—பொருளின் தன்மை பலவற்றுள் ஒரு தன்மையை அறிதல்.

சிறுபான்மை இடைச்சொல்லும் பெயர் எனப்படும். உரிச்சொல்லும் பெயரினும் வினையினும் மெய்தடு மாறும்! ஆதலின் இவையும் பெயர்வினையுள் பெரும் பாலும் அடங்கின. அடங்காதன 'இடைஉரி வடசொலின்' இ. வி. 147 என்புழிக் கூறப்படும்.

பெயர்ச்சொல் :

மரம்—மெய்முதல் மெய்ஈறு.
இலை—உயிர்முதல் உயிர்ஈறு.
ஆல்—உயிர்முதல் மெய்ஈறு.
விள—மெய்முதல் உயிர்ஈறு.

வினைச்சொல் :

வந்தான்—மெய்முதல் மெய்ஈறு.
உண்டன—உயிர்முதல் உயிர்ஈறு.
உண்டான்—உயிர்முதல் மெய்ஈறு.
வந்தன—மெய்முதல் உயிர்ஈறு.

இடைச்சொல் :

மன்—மெய்முதல் மெய்யீறு.
அம்ம—உயிர்முதல் உயிர்ஈறு
அந்தில்—உயிர்முதல் மெய்ஈறு.
மற்று—மெய்முதல் உயிர்ஈறு.

உரிச்சொல் :

மல்லல்—மெய்முதல் மெய்ஈறு.
உறு—உயிர் முதல் உயிர்ஈறு.
அலமரல்—உயிர்முதல் மெய்ஈறு.
தவ—மெய்முதல் உயிர்ஈறு.

தம்மொடு தாம்புணர்தல் :

ஆல் வீழ்ந்தது — மெய்முன்மெய்.
ஆ உண்டு — உயிர் முன் உயிர்.
ஆல் இலை — மெய் முன் உயிர்.
ஆ வெளிது — உயிர் முன் மெய்.
சாத்தன் கை — பெயரொடு பெயர்.
வந்தான் போயினான் — வினையொடு வினை.
சாத்தன் உண்டான் — பெயரொடு வினை.
வந்தான் சாத்தன் — வினையொடு பெயர்.
மற்று அம்ம — இடையொடு இடை.
கொம்மைக் குழகு — உரியொடு உரி.
அதுகொல் தோழி — இடையொடு பெயர்.
மல்லல் மார்பு — உரியொடு பெயர்.

'நிலை வருமொழிகள்' என்ற தொடர் ஆகுபெயராய் நிலைமொழி இறுதி எழுத்தையும் வருமொழி முதல் எழுத்தையும் உணர்த்தின.

சாத்தன் வந்தான் — எழுவாய்த் தொடர்.
வந்தான் சாத்தன் — வினைமுற்றுத் தொடர்

இவை நிறுத்தசொல்லும் குறித்து வருகிளவியுமாய்ப் புணர்ந்தன.

பதினாயிரத்து ஒன்று—ஆயிரம் என்ற நிலைமொழி பத்து என்ற அடையடுத்துப் பதினாயிரம் என நின்றது.

ஆயிரத்து ஒருபஃது—பஃது என்ற வருமொழி ஒன்று என்ற அடைஅடுத்து ஒருபஃது என நின்றது.

பதினாயிரத்து ஒருபஃது—ஆயிரம்பஃது என்ற நிலைமொழிவருமொழிகள், முறையே பத்து—ஒன்று—என்ற அடை அடுத்து வந்தன.

முன்றில்—முன்+இல்—முன்னில் எனற்பாலது.

'முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்என் கிளவிமிசை றகரம் ஒற்றல்
தொல் இயல் மருங்கின் மரீஇய மரபே' தொல். 355

என்றதால், மருவி முன்றில் என்றாயிற்று.

மீ என்பது மேல் என்பதன் மரூஉ.

தொல். 432-நச். உரை

'மீஎன மரீஇய இடம்வரை, கிளவி' தொல், 250 என்பதனால் மீ என்பது மரூஉமொழி ஆதல் அறிக.

சோழன்+நாடு—சோணாடு

பாண்டியன்+நாடு—பாண்டிநாடு

இவை இலக்கணத்தொடு பொருந்தா மரூஉ. இவை
'வழங்கியல் மருங்கின் மருவொடு திரிந' தொல். 483

என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகின்றன.

ஓமைச்சினை என்றிருப்பின் தழுவுதொடர்; 'ஓமைக் காண்பின்' எனப் புணர்ந்தது தழாத்தொடர். இங்ஙனமே மருப்பின் இரலை என்பது தழுவுதொடர்;

'மருப்பிற் பரல்' என்பது தழாஅத்தொடர்.

தெய்வவரை என்பது தழுவுதொடர்;

'தெய்வமால்' என்பது தழாஅத்தொடர்.

இத்தழாஅத்தொடர்கள் முறையே மிக்கும் திரிந்தும் கெட்டும் செய்யுட்கண் வந்தன.

நிலையாது என்றல்—நிலைமொழியும் வருமொழியும் தம்மில் பொருள் பொருத்தம் உறஇயையா என்பது.

விளவினை என்பது, விள+இன்+ஐ என மூன்று சொற்கள் இரு சந்திப்படத் தொடர்ந்து நிலைமொழி

யாகிக் குறைத்தான் என்ற வருமொழியொடு கூடுகின்றது.

விளவினது என்பது, வின+இன்+அது என மூன்று சொற்கள் இரண்டுசந்திப்படத் தொடர்ந்து நிலைமொழியாகிக் கோடு என்ற வருமொழியோடு கூடுகின்றது.

பொன்+மணி —பொன்மணி—மெய்முன்மெய்..
புகழ்+அழகிது —புகழழகிது —மெய்முன் உயிர்.
ஒளி+மணி —ஒளிமணி —உயிர்முன்மெய்.

உயிர்முன் உயிர்வரின் இடையே உடம்படுமெய் தோன்றும். எனவே அதனை விடுத்து, மெய்முன்மெய் மெய்முன்உயிர், உயிர்முன்மெய் என்ற மூன்றிடத்தும் இயல்பு புணர்ச்சியைக் காணலாம். உடம்படுமெய் பெறுதலையும் இயல்பு புணர்ச்சியாகவே நன்னூல் விருத்தி குறிப்பிடுகின்றது. (நன். 162)

நிலம்+பனை —மகரம் கெட்டுப் பகரம் மிக்க இரு விகாரம்.

பனை+காய் — ஐ கெட, அம்முச்சாரியை மிக, அதன் மகரம் ஙகரமாகத் திரிய, மூன்று விகாரங்களும் வந்தன,

நிலைமொழி வருமொழி என்ற இரண்டும் சேரும் போதுதான் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணர்தல் கூடும். அவ்வாறன்றி நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் தனியே இருப்பின் புணர்ச்சி நிகழாது. ஆதலின், புணர்ச்சி எழுத்துக்களை ஒட்டியதேனும், அவை சொற்கு உறுப்பாயவழி அல்லது புணர்ச்சி இன்மையின், நிலைமொழி வருமொழி என்றே கருவி செய்தார்.

பால்+குடம்—பாற்குடம் என்றாகும்; ல்+கு—ற்கு என ஆகாது.

'மொழி மரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகை யாற் புணர்க்கும் முறைமை உணர்த்தினமையின், இவ் வோத்திற்குப் புணரியல் என்பது பெயராயிற்று,
(தொல். 103 நச்-உரை)

'உயிர்ஈறும் புள்ளியீறும் மேலை அகத்தோத்தினுள் முடிக்கும் வழி ஈறுகள்தோறும் விரித்து முடிப்பனவற்றை ஈண்டு ஒரோவொரு சூத்திரத்தால் தொகுத்து முடிவு கூறினமையின் இவ்வோத்துத் தொகைமரபு என்னும் பெயர்த்து ஆயிற்று.' (தொல். 143 நச்-உரை)

'ஒருபெயர்ப் பொதுச்சொல்' (தொல். சொல். 49) என்ற நூற்பா உரையில் சேனாவரையர் முதலாயினார் ஆதீண்டுகுற்றி முதலியவற்றைக் குறித்துள்ளமை அறிக

மெய்முதல் மெய்யீறு, உயிர்முதல் உயிர்ஈறு என்று சுருங்கக்கூறுதல்.

'எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர்என்று ஆயீ ரியல, (தொல். 103)

என்பதனை உட்கொண்டு என்க.

'மெய்யை முற்கூறினார், இந்நால் வகைப் புணர்ச்சி யும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழா என்றற்கு.' (தொல். 103 நச்.)

'ஈண்டு மெய்யை முற்கூறினார், முதலினும் ஈற்றினும் விகாரப்படப்புணர்தல் சிறப்பு நோக்கி என்க.' (நன். 150 மயிலை)

'உயிர்மெய், முதல் ஈறாம்' என்னின், உயிர்மெய் என்னும் ஓரெழுத்தாய்ப் பொருள்படும் ஆதலின், 'மெய் உயிர் முதல் ஈறாம்' என் மெய்யை முற்கூறினார்.

நிலைமொழியும் வருமொழியும் அடையடுத்தும் வருதல்.

'நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய'
(தொல். 180)

என்பதை உட்கொண்டு என்க.

'மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே'
(தொல். 111)

என்ற நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர், 'இது மருஉச் சொற்களும் புணர்ச்சிபெறும் என்பதூஉம், நிறுத்த சொல்லும் குறுத்து வருகிளவியுமாய்ப் பொருள் இயைபு இல்லனவும் புணர்ச்சி பெற்றாற்போல நிற்கும் என்பதூஉம உணர்த்துகின்றது' என பாயிரம் கூறி, 'இருவகை யாகி மருவிய சொற்களும். செவிக்கு இனிதாகச் சொல் திராிடத்து நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியுமாய் ஒட்டினாற்போல நின்று பொருள் உணர்த்தாது பிரிந்து பின்னர்ச் சென்று ஒட்டிப் பொருள் உணர்த்த மயங்குதல் இயன்ற சொற்களும் புணரும் நிலைமைக் கருத்தின்கண் உரியவை உள என்றவாறு' என்னும் விளக்கம் எழுதி, பின் 'இன்தொகுதி என்றார், பா என்னும் உறுப்பு நிகழப் பொருள் ஒட்டாமல் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்' என விளக்கம் தந்து, மூன்றில் மீகண் என்பவற்றொடு,

'இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரலவல் அடைய இரலை தெறிப்ப'

'கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினை'

'தெய்வ மால்வரைத் திருமுனி அருளால்'

என்ற எடுத்துக்காட்டுக்களையும் தந்து விளக்கிய செய்தியை இவ்வாசிரியர் எடுத்துக்கொண்டார்,

இப்புணர்ச்சியை இலக்கணக் கொத்துநூலார்,

'பொருத்தப் புணர்ச்சிஅப் பொருத்தம்இல் புணர்ச்சி
அவ்விரு வகையும் ஒருங்குஇயல் புணர்ச்சி
எனமூன்று என்பர் புணர்ச்சி இயல்பே
வழுவுடைப் புணர்ச்சியை மருவழி நான்கே'
(இ. கொ, 106)

'பொருத்தப் புணர்ச்சியை விரிக்கின் பெருகும்
அன்றியும் யாவரும் அறைந்தனர் காண்க'
(இ. கொ. 107)

'ஆற்றொழுக்கு அடிமறி மாற்றுஇரண் டல்லா
எழுவகைப் பொருள்கோள் மரூஉமொழி
பொய்யுரை
சிலஇடைப் பிறவரல் பண்புஅதி காரம்
ஆதியாம் பதங்கள் அவையும் அன்றி
விகுதிஉருபு உம்மை முதலினுள் சிலவும்
பொருத்தம்இல் புணர்ச்சி எனப்புகன் றனரே'
(இ. கொ. 108)

என்று கூறியதையும், அந்நூற்பாக்கள் உரையையும் நோக்குக.

புணர்ச்சி வகையினை இவர்கள் போல வேற்றுமை அல்வழி என இரு கூற்றினுள் அடக்காது அவர்.

'வேற்றுமை வழியோடு அல்வழி அன்றியும்
அவ்விரு வழியும் அடங்கும் பொதுவழி
அம்மூன்று உள்ளே அடங்கா வழியும்
எனநான்கு என்றே இயம்புவர் சந்தி' (இ, கொ, 118)

எனக்கூறி உரையுள் விளக்கிய செய்திகளையும் காண்க.

நச்சினார்க்கினியர் 'அவற்றுள்,' நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு' (தொல். 108) என்ற நூற்பா உரையுள், நிலைமொழியது ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப் போக, வருமொழியின் முதலெழுத்துப்

பின்னர்ப் பிறந்து கெட்டமையால் முறையே பிறந்து கெடுவன ஒருங்குநின்று புணருமாறு இன்மையின், புணர்ச்சி என்பது ஒன்று இன்றாம் பிற எனின், அச் சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ் வோசையை இடையறவுபடாமை உள்ளத்தின்கண்ணே உணர்வர் ஆதலின், அவ்வோசை கேடின்றி உள்ளத்தின் கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவேயாம். ஆதலின் பின்னர்க் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயாம் என்று உணர்க' — என்று உரைத்ததை இவ்வாசிரியர் ஈண்டுக் குறிப்பிட்டுள்ளமை காண்க.

பிரயோக விவேக நூலார் தம் 26ஆம் நூற்பா வுரையில் இச்செய்தியை இங்குக் கண்டவாறே குறிப்பிட்டுக் ''கண்கூடு காட்சியளவை பூர்வ பதத்தின் ஈற்றெழுத்தும் உத்தரபதத்தின் முதல் எழுத்தும் தாப்பிசை என்னும் பாசபந்தம்போலப் புணர்வது அன்றிப் பூர்வபதமும் உத்திரபதமும் யோகாங்குலி நியாயம் போலப் புணரா ஆகலின். 'நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு, குறித்து வருகிளவியின் முதல் எழுத்து இயைய' தொல். 108 என்றனர் தொல்காப்பிய னார். தருக்க நூலார் எழுத்துக்களைப் பிறந்து கெடும் என்பர். சத்த நூலார் கெடாது நித்தியமாம் என்பர்'' என்று குறிப்பிட்டுள்ள செய்தியையும் காண்க.

இலக்கண விளக்கச் சூறாவளி

உயிர்ஈற்றுப்புணரியல் என்பதற்கும், 'பதம்முன் விகுதியும் பதமும் உருபும்—புணர்வுழி' நன். 242 என்றவாறே உயிர் ஈற்றுப் பதமுன் வருமொழி நாற் கணமும் வந்து புணரும் இயல்புஎன ஏழாம் வேற்றுமைச் சந்திப் பொருள்படக் கூறாது, உயிர்ஈற்றுப்பதம் நின்று வருமொழி நாற்கணத்தோடு புணரும் இயல்பு எனப் பொருள் உரைத்தார். அங்ஙனம் எழுவாய்ச் சந்திப்

பொருள்பட நிற்பின். உயிர் ஈறு புணரியல் என இயல் பாய் முடிவது அல்லது உயிர் ஈற்றுப் புணரியல் எனச் செய்கைப்பட்டு முடியாமையின் அது பொருளன்மை அறிக. மெய்யீற்றுப் புணரியல் என்பதற்கும் இஃது ஒக்கும். ஆசிரியர் தொல்காப்பியனார் 'நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்' தொல். 107 என கொண்ட குறியிடும் அறிந்திலர் போலும்.

அமைதி

நன்னூலாரைப் போலவே எழுத்ததிகாரத்து இயல் களுக்கும் சொல்லதிகாரத்து இயல்களுக்கும் குறியிட்டு வழங்குதலை உட்கொண்ட இவ்வாசிரியர், அவ்வவ் வியலில் தொல்காப்பியனாரை ஒட்டித் தாம் கொண்ட கருத்துக்களை குறிப்பிட்டுச் செல்லுதலைக் கடப்பாடாக உடையவர். நிலைமொழியேதான் கருத்து முற்றும்பெற வருமொழியை அவாவி நிற்கிறது என்ற கருத்துடைய இவ்வாசிரியர், அக்கருத்தை உட்கொண்டு நச்சினார்க் கினியரைப் பின்பற்றி, உயிர்ஈறு நின்று வன்கணத் தோடும் சிறுபான்மை ஏனைக்கணங்களோடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்துவது உயிர் மயங்கியல் என்று அவர் குறிப்பிட்டது போலவே, நூமும் உயிரீற்றுப் புணரியலுக்கு விளக்கம் தந்துள்ளார். போந்த பொருளை தம்கருத்துப் பற்றி இவ்வாசிரியர் விரித்துள்ளாரே யன்றிச் சொற்பொருள் விரிக்கப் புகவில்லை. நிறுத்த சொல் அவ்வாதவழி குறித்து வீருகிளவி வருதல் இயலாமையின், நிறுத்தசொல் குறித்து வருகிளவி என்ற நிலைமொழி வருமொழி இயல்புகளாக இவர் கூறிய வற்றின்கண் தவறின்மை காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'மூன்றுதலை இட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டுதலை இட்ட முதலாகு இருபஃது

அறுநான்கு ஈறொடு நெறிநின்று இயலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர்என்று ஆயீ ரியல.' தொல். 164

'அவற்றுள்
மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்.' 105

'குற்றியல் உகரமும் அற்றென மொழிப.' 106

'உயிர்மெய் ஈறும் உயிர்ஈற்று இயற்றே.' 107

'உயிர்இறு சொல்முன் உயிர்வரு வழியும்
உயிர்இறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்இறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்இறு சொல்முன் மெய்வரு வழியும்
இவ்வென அறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவிஎன்று
ஆயீர் இயல புணர்நிலைச் சுட்டே.' 108

'அவற்றுள்
நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு
குறித்துவரு கிளவியின் முதல்எழுத்து இயையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபுஇடன் ஒன்றே இயல்புஎன
ஆங்குஅந் நான்கே மொழிபுணர் இயல்பே.' 109

'நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய' 110

'மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.' 111

'வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை.' 112

'மெய்உயிர் முதல்ஈறு ஆம்இரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே.'
நன். 150

'நிலைவரு மொழிகள் நேர்வது புணர்ப்பே'
மு. வீ. பு.

'அதுதான் இயல்பு விகாரம் என இருபாலன.' 1

'மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.' 4

'அல்வழி வேற்றுமை ஆம்இரு பாலன.' 5

இருவகைப் புணர்ச்சிகள்

54. ஐ-முதல் ஆறு தழுவுதொடர் வேற்றுமை
செவ்விதின் நிலையும் எழுவாய் விளிமுற்று
இடைஉரி எச்சம் அடுக்கு உவமை உம்மை
தழுவுதொடர் அல்வழிச் சந்தி என்ப.

இது மேல் 'அல்வழி வேற்றுமை' என்றார், அவை இவை என்கின்றது.

இ-ள் : ஐயும் ஆனும் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணும் என்னும் ஆறு உருபுகளும் விரிந்தும் தொக்கும் தமக்கு ஏற்ற பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியாம் என்றும், வெளிப்பட நிலைபெறும் எழுவாயும், விளியும், தெரிநிலை வினையும் குறிப்புவினையும் ஆகிய வினைமுற்றுச் சொற்களும், இடைச்சொல்லும் உரிச்சொல்லும், பெயரெச்சமும் வினையெச்சமும் ஆகிய எச்சச் சொற்களும், விரைவு ஆதியின்வரும் அடுக்கும், உவமைத் தொகையும், உம்மைத்தொகையும் தமக்கு ஏற்ற பெயரோடும் வினையோடும் புணரும் புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சியாம் என்றும் கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

நிலைமொழி வருமொழியாய் நின்று புணர்ச்சி எய்தாமையின், ஈண்டைக்கு ஏலாத தோன்றா எழுவாயை நீக்குதற்குச் 'செவ்வி,நின் நிலையும் எழுவாய்' என்றார், வேற்றுமை அல்லாதது அல்வழி என்று அறிவித்தற்கு, ஈண்டு அல்வழி முற்கூறார் ஆயினார். சொல்லொத்தினுள் வேற்றுமை எனப்படும் எழுவாயும் விளியும் ஈண்டு அல்வழி என்றல் மலைவாம் பிற எனின், ஆண்டு அவை ஐ முதலிய வேற்றுமை போலப் பொருள் வேறுபடுத்தல் ஒப்புமை பற்றி அவற்றொடு உடன் எண்ணப்பட்டு வேற்றுமை எனப் படும்; ஈண்டு முற்றுச் சொற்கள் முதலியன போலப் புணர்ச்சிக்கண் செய்கை ஒப்புமை பற்றி இவற்றொடு உடன் எண்ணப்பட்டு அல்வழி எனப்படும்; ஆதலின் மலைவு ஆகாது என்க.

எ-டு : குடத்தை வனைந்தான் எனவும், அகத்திய னால் தமிழ் உரைக்கப்பட்டது—வேலான் எறிந்தான் எனவும், அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான்—மாணாக் கர்க்கு நூற்பொருள் உரைத்தான் எனவும், ஊரின் தீர்ந்தான் — காக்கையின் கரிது களம்பழம் எனவும், யானையது கோடு—சாத்தனது தோட்டம் எனவும், குன்றத்துக்கண் குவடு-பனையின்கண் அன்றில் எனவும் நிலங்கடந்தான்—குழைக்காது எனவும், தாய் மூவர்— பொற்குடம் எனவும், கருப்புவேலி—கடிசூத்திரப் பொன் எனவும், வரைபாய்தல் — கருவூர்க்கிழக்கு எனவும், கொற்றன் உணர்வு—சாத்தன் புத்தகம் எனவும்,மன்றப் பெண்ணை—மாரிமா எனவும், முறையே இரண்டாவது முதல் ஆறும்விரிந்தும் தொக்கும் வேற்றுமைப் புணர்ச்சி வந்தவாறு காண்க.

ஆ கிடந்தது—ஆவாம் பல எனவும்,நம்பி வாராய்— கோவே கூறாய் எனவும்,வந்தான் சாத்தன்—பாய்ந்தது புலி எனவும், குழையன் கொற்றன்-குண்டுகட்டு எருமை எனவும், இனி மற்றொன்று உரை—

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை'
எனவும் குறள். 1081

'நனிபேதையே நயனில் கூற்றம்' புறநா. 227-1

'வெயில்புறந் தருஉம் இன்னல் இயக்கத்து'
எனவும் மலைபடு. 374

ஓதிய பார்ப்பான் — ஓதும் பார்ப்பான் எனவும், உண்டு வந்தான்—ஓடிவந்தான் எனவும்,

'கொன்ஊர் துஞ்சினும் யாம்துஞ் சலமே'
குறுந். 138-1

எனவும், 'படைபடை என்றஞ்சி — 'வந்தது வந்தது கூற்றம்' நாலடி. 4 எனவும், புலிப்பாய்த்துள்—மழை வண்கை எனவும், உவாஅப்பதினான்கு — புலிவில் கெண்டை எனவும் முறையே எழுவாய் முதலிய எழும் விரிந்தும் உவமையும் உம்மையும் தொக்கும் அல்வழிப் புணர்ச்சி வந்தவாறு காண்க. பிறவும் அன்ன.

இவற்றுடன் வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகை என்பனவற்றையும் எடுத்து ஓதார் ஆயினார்; என்னையெனின், வினைத்தொகையும் பண்புத்தொகையும் அல்வழிப் பொருள் ஆயினும விரித்த வழி முறையே முக்காலமும் உணர்த்தும் தன்மையவாயும், ஐம்பாலும் உணர்த்தும் தன்மையவாயும் நிற்கும் சத்தம் தொகைப் பொருள் சிதைதலின் பிரிக்கப்படாமை யான் பிரிவுஇல் ஒட்டுக்களாம் ஆதலின், ஈண்டு நிலைமொழி வருமொழி செய்து பிரிக்கப்படாது மருவின் பத்திபவாய்க் கொல்யானை அரிவாள் ஆடரங்கு செல் செலவு புணர்பொழுது செய்குன்று எனவும், கருங்குதிரை நெடுங்கோல் பாசிலை பைங்கண்சேதா எனவும் வருவன போலவும முடிந்தாங்கு முடியும் ஆகலானும், அன்மொழி தொகை வேற்றுமைத்தொகை முதலிய ஐவகை நிலைக் களன்களிலும் பிறந்து பொற்றொடி — வளைவாய் திரி தாடி—வெள்ளாடை — தகரஞாழல்—என ஒரு சொல் நீர்

மைத்தாய்ப் பெயர்த்தன்மை எய்திப்'பொற்றொடி தந்த புனைமடல்' எனப் பயனிலையொடு புணர்ந்துழி எழுவா யாயும் 'சுடர்த்தொடீஇ கேளாய்' கலி. 51-1 என முடிக்கும் சொல்லொடுபுணர்ந்துழிவிளியாயும் அல்வழிப் புணர்ச்சி ஆதலும். தகர ஞாழல் பூசினாள் — தகர ஞாழலைப் பூசினாள் என வேற்றுமை உருபு தொக்கும் விரிந்தும் முடிக்கும் சொல்லொடு புணர்ந்துழி வேற்றுமைப் புணர்ச்சி ஆதலும் உடைய ஆகலானும் ஓதார் ஆயினார் என்க.

எச்சத்தை முற்றினைச் சாரக்கூறாத முறை அன்றிக் கூற்றினானே, வட்டப்பலகை சாரைப்பாம்பு என்பன போலும் இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகைகள் அல் வழிப் பொருள் வாய்ப் புணர்ச்சி எய்தல் கொள்க.

விளக்கம் : வேற்றுமை—ஐ முதல் கண் ஈறாகிய ஆறு.

அல்வழி— எழுவாய், விளி, முற்று, இடை, உரி, எச்சம், அடுக்கு. உவமைத்தொகை, உம்மைத் தொகை என்ற ஒன்பதும்.

நன்னூலார் வினைத்தொகை,பண்புத்தொகை,உவமைத் தொகை, உம்மைத்தொகை. அன்மொழித்தொகை, எழு வாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல்தொடர்; அடுக்குத்தொடர் என்று அல்வழியைப் பதினான்கு கூறுகளாகப் பிரிப்பர்.

தொல்காப்பியனார் பொதுவாக,

'வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்'
தொல். 112

என்று குறிப்பிடுவார்.

53ஆம் நூற்பாவில், வேற்றுமை அல்லாதது அல்வழி ஆதலின் வேற்றுமையை முற்கூறி அல்வழியைப் பின்னர் கூறியிருத்தல் வேண்டும். அங்ஙனம் கூறின் வேற்றுமை அல்வழி என்பன உம்மைத்தொகையாகப் பொருள்படாது வேற்றுமை அல்லாததாகிய அல்வழி என இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகையாகப் பொருள் பட்டு வேற்றுமை என்பது அல்வழிக்கு அடைமொழி ஆதலும் கூடுமாதலின், அந்நூற்பாவில் அல்வழி வேற்றுமை என்று குறிப்பிட்டு, இந்நூற்பாவில் வேற்றுமை அல்வழி என்ற இவற்றை விளக்கிக் கூறும் வழி முறைப்படி வேற்றுமையை முற்கூறி அல்வழியைப் பிற் கூறியுள்ளார்.

மூன்றாம் வேற்றுமை உருபுகளுள் சிறந்ததாகத் தொல்காப்பியனார் ஒடு என்பதனையும், நன்னூலார் ஆல் என்பதனையும் இவ்வாசிரியர் ஆன் என்பதனையும் குறிப்பிடுகின்றனர்.

அடுக்குத்தொடர், விரைவு, வெகுளி, அச்சம், விருப் பின்மை உவகை முதலிய பொருள்களில் வரும்.

தோன்றா எழுவாய் நிலைமொழியாக நின்று புணர் வதற்கு ஏலாமையின், வெளிப்பட நிலைபெறும் எழுவா யையே இவர் அல்வழித் தொடராதற்குக் குறிப்பிடு கிறார்.

'எவ்வயின் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்விது என்ப'

தொல். சொல். 69

என எழுவாய்க்கே தோன்றா நிலையும் கூறலின், வினை முற்று மறைந்திருத்தல் கூடாது என்பது.

சொல்லதிகாரத்தில் எழுவாயையும் விளியையும் ஏனைய ஆறு வேற்றுமைகளோடு சேர்த்து வேற்றுமை எட்டு என்றார்; ஈண்டு ஆறு என்றார்.

பெயர்ப்பொருளை ஏனைய வேற்றுமைகள் செயப்படுபொருள் முதலியனவாக வேறுபடுத்துவது போல இவையும் எழுவாயாயும் விளியாயும் வேறுபடுத்தலின் சொல்லதிகாரத்தில் வேற்றுமை எனப்பட்டன. இங்கு முற்று முதலியன போலப் புணர்ச்சிக்கண் உள்ள செய்கைத் தொடர்பு பற்றி அல்வழி எனப்பட்டன.

விரி

குடத்தை வனைந்தான்—இரண்டாவது தெரிநிலை வினை கொண்டு முடிந்தது

குழையை உடையான்—இரண்டாவது குறிப்பு வினை கொண்டு முடிந்தது

அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது—மூன்றாவதன் கருத்தாப் பொருள்

வேலான் எறிந்தான் — மூன்றாவதன் கருவிப் பொருள்

அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான் — நான்காவதன் கொடைப்பொருள்.

மாணாக்கர்க்கு நூல் உரைத்தான் — கொடைப் பொருள் வகை.

(கொடுப்பான் பொருளாய் அவனை விடுத்துக் கொள்வான் இடையே செல்லாத நிலை.)

ஊரின் தீர்ந்தான்—ஐந்தாவதன் நீக்கப் பொருள்.

காக்கையின் கரிது களம்பழம—ஐந்தாவதன் ஒப்புப் பொருள்.

யானையது கோடு — ஆறாவதன் உறுப்புத் தற்கிழமைப் பொருள்.

சாத்தனது தோட்டம் — ஆறாவதன் பொருட் பிறிதின் கிழமைப் பொருள்.

குன்றத்துக்கண் குவடு — ஏழாவதன் தற்கிழமை இடம்.

பனையின்கண் அன்றில்—ஏழாவதன் பிறிதின்கிழமை இடம்.

தொகை

நிலங்கடந்தான்—நிலத்தைக் கடந்தான் — இரண்டாம் வேற்றுமைத் தொகை.

குழைக்காது—குழையை அணிந்த காது — இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகை.

தாய் மூவர்—தாயொடு மூவர் மூன்றாம் வேற்றுமைத் தொகை.

பொற்குடம்—பொன்னால் செய்யப்பட்ட குடம்—மூன்றாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகை.

கருப்பு வேலி — கரும்புக்கு வேலி — நான்காம் வேற்றுமைத் தொகை.

கடிசூத்திரப் பொன்—கடிசூத்திரத்திற்கு வழங்கப்பட்ட பொன்—நான்காம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகை.

வரை பாய்தல்—வரையினின்றும் பாய்தல்-ஐந்தாம் வேற்றுமைத் தொகை (நீக்கம்)

கருவூர்க்கிழக்கு — கருவூரின் கிழக்கு — ஐந்தாம் வேற்றுமைத் தொகை. (எல்லை)

கொற்றன் உணர்வு — கொற்றனது உணர்வு—ஆறாம் வேற்றுமைத் தொகை (தற்கிழமை)

சாத்தன் புத்தகம்—சாத்தனது புத்தகம்—ஆறாம் வேற்றுமைத் தொகை (பிறிதின்கிழமை)

மன்றப் பெண்ணை—மன்றத்தில் உள்ள பெண்ணை —ஏழாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகை. (தற்கிழமை)

மாரிமா—மாரிக்கண் உளதாம் மா—ஏழாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகை (பிறிதின்கிழமை)

ஆ கிடந்தது—வினைகொண்ட எழுவாய்த்தொடர்.

நம்பி! வாராய்—இயல்பாய விளித்தொடர்.

கோவே! கூறாய்—விகாரம் ஆகிய விளித்தொடர்.

வந்தான் சாத்தன் — உயர்திணைத் தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.

பாய்ந்தது புலி—அஃறிணைத் தெரிநிலை வினை முற்றுத் தொடர்.

குழையன் கொற்றன் — உயர்திணைக் குறிப்பு வினை முற்றுத் தொடர்.

குண்டுகட்டு எருமை—அஃறிணைக் குறிப்பு வினை முற்றுத் தொடர்.

மற்று ஒன்று—பெயரைக்கொண்டு முடிந்த இடைச் சொல்தொடர்.

அணங்குகொல்—பெயர்கொண்டு முடிந்த இடைச் சொல்தொடர்.

நனி பேதை—அடைமொழியே ஆகும் உரிச்சொல் தொடர்.

இன்னல் இயக்கம்—அடைமொழி அடைகொளி இரண்டும் ஆகும் உரிச்சொல்தொடர்.

ஓதிய பார்ப்பான் — இறந்தகாலப் பெயரெச்சத் தொடர்.

ஓதும் பார்ப்பான்—நிகழ்கால எதிர்காலப் பெயரெச்சத் தொடர்.

உண்டு வந்தான் — ஈறு திரியாத வினையெச்சத் தொடர்.

ஓடி வந்தான்—ஈறுதிரிந்த வினையெச்சத்தொடர்.

துஞ்சினும் துஞ்சலம்—இடைச்சொல்லடுத்த வினையெச்சத்தொடர்.

படைபடை—பெயர் அடுக்கிய அடுக்குத் தொடர்,

வந்தது வந்தது — வினை அடுக்கிய அடுக்குத் தொடர்.

புலிப்பாய்த்துள் — வினைபற்றிவந்த உவமைத் தொகை,

மழைவண்கை — பயன்பற்றிவந்த உவமைத் தொகை,

உவா அப்பதினான்கு—பெரிதும் சிறிதும் இணைந்த இருபெயர் உண்மைத்தொகை.

புலிவிற்கொண்ட—ஒத்தபொருள் இணைந்த பல பெயர் உண்மைத் தொகை.

வினைத்தொகையும் பண்புத்தொகையும் பிரிக்கப் படா. வினைப்பெயராகிய முதல்நிலையும் பிறிதொரு பெயரும் தொக்க-தொகை ஆற்றலால் காலம் காட்டும் வினைத்தொகையைப் பிரிப்பின், ஒவ்வொன்றையும் மும்மூன்றாக (அடுகளிறு—அட்டகளிறு, அடுகின்றகளிறு, அடுவ்களிறு) என்றே பிரித்தல் வேண்டும். அவற்றுள் ஒன்றாக மாத்திரம் பிரித்தல் குன்றக்கூறல் ஆகிய பொருந்தா இலக்கணம் ஆதலின், பிரித்தவழித் தொகை பொருள் சிதைதலின், வினைத்தொகையைப் பிரித்தல் கூடாது.

பண்புத்தொகையாவது பண்புப்பகுதியாகிய கரு செவ் முதலியன, பெயரொடு கூடுதலால் ஏற்படுவது. அஃது இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவானது. கரு என்ற அப்பகுதி கரியனாகிய, கரியளாகிய, கரியராகிய, கரியதாகிய, கரியன ஆகிய என்ற ஐந்து பால்களையும் சுட்டும் ஆற்றல் வாய்ந்தது. அதனை ஒரு பாலுக்கு மாத்திரம் உரிமை உடையது போலக் கரியனாகிய என்றாற்போலக் பிரித்தலும் குன்றக்

கூறலாம். ஆதலின் வினைத்தொகையும் பண்புத் தொகையும் பிரிக்கப்படா. இதனை நச்சினார்க்கினியர் விரித்துக் கூறியுள்ளார்.

'உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த என்னும் கிளவியின்
புணரியல் நிலையிடை உணரத்தோன்றா'
தொல். 482

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்.

'நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய'
தொல். 110

என்ற நூற்பா உரையுள், உரையாசிரியர் 'ஈண்டு அடை என்றது, உம்மைத்தொகையினையும் இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையினையும் என உணர்க. அவை அல்லாத தொகைகளுள் வினைத்தொகையும் பண்புத்தொகையும் பிளந்து முடியாமையின், ஒரு சொல் எனப்படும். அன் மொழித் தொகையும் தனக்கு வேறு ஒரு முடிவு இன்மை யின் ஒரு சொல் எனப்படும்' என்று கூறியதும் காண்க.

பிரிவில் ஒட்டு—தம் சொல்லால் விரிக்கப்படாது. விரிக்க வேண்டியவழிப் பிறசொல் கொணர்ந்து விரிக்கப் படும். பண்புத்தொகை வினைத்தொகை போன்ற நித்ய சமாசங்களாகும். பிரியாத்தொகையும் பிறசொல் கொணர்ந்து விரிக்கப்படும் என்பது வடநூலார்க்கும் உடன்பாடு என்று சேனாவரையர் 'வண்ணத்தின் வடி வின்' தொல். சொல். 416 என்ற நூற்பா உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மருவின் பாத்திய—தொன்றுதொட்டுப் பழகி வந்த பகுதியினை உடைய.

கொல்யானை—வினைமுதல் பற்றியது.

அரிவாள்—கருவிபற்றியது.

ஆடரங்கு—நிலன்பற்றியது.

செல்செலவு—வினைபற்றியது.

புணர்பொழுது—காலம்பற்றியது.

செய்குன்று—பொருள்பற்றியது.

கருங்குதிரை முதலிய நான்கும் வண்ணப்பண்பு பற்றியன. நெடுங்கோல் என்பது அளவு பற்றியது.

'எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய' தொல் சொல். 420 அதலின் அன்மொழித் தொகையும் ஒரு சொல் போலக் கொள்ளப்பட்டுப் பயனிலைகொண்டுமுடிதல் முதலிய செயற்படுதலின் பிரிக்கப்படாது என்பது.

பொற்றொடி — வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

பவளவாய்—உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

திரிதாடி — வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

வெள்ளாடை—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தகரஞாழல்—உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

'பொற்றொடி தந்த' என்பது அன்மொழித்தொகை எழுவாய் ஆயிற்று.

சுடர்த்தொடீஇ கேளாய் — அன்மொழித்தொகை விளி ஏற்றது.

தகரஞாழல் பூசினாள் — இரண்டாம் வேற்றுமைத் தொகை.

இவ்வாறு அன்மொழித்தொகை வேற்றுமையும் அல்வழியும், ஆதலின் அதனைக் கூறாது விடுத்தார்.

வட்டப்பலகை—வட்டம் பலகை என்ற இரு சொற்கள் பண்பு தொகை போல ஒட்டி நிற்றலின், இவை இருபெயர் ஒட்டுப்பண்புத்தொகை ஆயின.

நூற்பாவில் 'முற்று எச்சம்' என்று இணைக்காது, 'முற்று இடைஉரி எச்சம்' என முறை மாற்றிக் கூறியதனால், இருபெயரொட்டுப் பண்புத்தொகையை அல்வழி புணர்ச்சியில் கொண்டார்.

இலக்கண விளக்கச் சூறாவளி

ஆசிரியர் தொல்காப்பியனார் வினைத்தொகைகள் பண்புத்தொகைகள் இருமொழிப்புணர்ச்சியானும்பிரிவில் ஒட்டுக்களாய் நிற்றலின் 'புணரியல் நிலையிடை உணரத் தோன்றா' தொல். 482 எனவும், பகுபதம் ஒரு மொழியாய் நிற்றலின் புணர்ச்சி எய்தாது எனவும் மொழிந்தார் தொகுத்துச்செய்யும் நூல் ஆதலின். அது பாயிரத்துள் 'புலம் தொகுத்தோன்' என்றதனான் அறிக. இவர் அந் நயம் பற்றி ஓதாது, நன்னூலார் கூறிய நயம் பற்றி 'ஆறினும் முன்னிப் புணர்த்து முடித்தனர் கொளலே'—இ.வி 42 எனவும் 'பதம்முன் விகுதியும் புணர்வுழி' இ.வி. 61 எனவும் கூறி, ஒருமொழி நீர்மைத்தாகிய பகுபதத்தினை நிலைமொழி வருமொழியாகப் பகுதி விகுதி முதலியவற்றை வேறுநிறீ இப் புணர்ச்சிக்குக் கூறிய செய்கையால் செய்கை செய்து புணர்த்து முடித்தவர், இருமொழிப் புணர்ச்சியாகிய வினைத்தொகை பண்புத் தொகைகளை நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படா என்றலும் அவற்றிற்குச் செய்கை கூறாது ஒழிதலும் குற்றமாம் என்க.

பொற்றொடி — பவளவாய் — திரிதாடி — வெள்ளாடை — தகரஞாழல் —என்றும் வேற்றுமைத்தொகை முதலிய ஐந்தொகையும் தத்தம் பொருள் படந் தொகாது அன்மொழிப் பொருள்படத் தொக்கவழிப் பின்னர் அவை

வேற்றுமைத்தொகை முதலிய தொகை ஆகாமையின், அவ்வேறுபாடு பற்றி அன்மொழித்தொகை வேறு கூறிய நன்னூலார் கருத்து அறியாது, அன்மொழிப் பொருள் படத் தொக்க இரு மொழியையும் நிலைமொழியாயே நிறுத்தி வேறு வருமொழியொடு புணர்த்திக் காட்டிக் குற்றங்கூறல் பொருந்தாமை அறிக. அவ்வாறு புணர்த்தலே சந்தியாயின்' புலிப்பாய்த்துள், புலிவிற் கொண்ட முதலியவற்றையும் வேறு வருமொழியோடு புணர்த்து உதாரணங்காட்டல் வேண்டும். வேண்டவே, அவையும் அல்வழிச் சந்திக்கு ஏலாமை உணர்க. பொற்றொடி என்பது தொடியை உணர்த்திய வழி வேற்றுமைச் சந்தியாம். அணிந்தாளை உணர்த்திய வழி அல்வழிச் சந்தியாம் எனத் தெரிந்துகொள்க.

அமைதி

'புலந்தொகுத்தோன்' என்பதற்குச் சூத்திர விருத்தியில் முனிவர் 'சுருக்கிச் செய்தான்' என்று உரை கூறாது,

'முன்னூலிற் கிடந்த இலக்கணம் பிற் காலத்தார் உணரும் முறைமைப்படக் கருதி நூலைத் தொகுத்துச் செய்தான்'

என்று முறைமாறாமல் அமைத்து நூல் செய்ததனையே குறிப்பிட்டுள்ளமை காண்க. பகுபத உறுப்பு இலக்கணம் வேறு; புணர்ச்சியில் விதிகளை உறுப்பிலக்கணத்திற்கும் ஏற்ற பெற்றி கொண்டாலும், புணர்ச்சியிலக்கணம் உறுப்பிலக்கணச் செய்தி முழுவதையும் உணர்த்துதல் இயலாது. உறுப்பிலக்கணத்திற்குப் புணர்ச்சியிலக்கணம் காட்டியமை கொண்டு, பிரிக்க முடியாத சொற்களையும் உளத்துத் தோன்றியவாறு பிரித்து இலக்கணம் கூறுதல் ஏலாக் கருத்தாதல் அறிக.

பண்புத்தொகை வினைத்தொகை பற்றிய இந்நூலின் கருத்து முன்னூலாகிய தொல்காப்பியத்தை ஒட்டியது ஆதலின், சொற்படலத்தும் நன்னூல்வழிச் செல்லாது

தொல்காப்பியத்தை ஒட்டியே இவர் பண்புத்தொகை வினைத் தொகைகளுக்கு விளக்கம் தருவதும் காண்க. அல்லதூஉம், நன்னூலின் 'செம்மை சிறுமை' 135 'ஈறுபோதல்' 136 முதலிய நூற்பாச் செய்திகளையும் இவர் மறுத்துள்ளதையும் நோக்குக. பண்புத்தொகைக்கும் வினைத்தொகைக்கும் நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படா நிலை உள்ளது என்பது மேல் விளக்கப்பட்டது. ஏனைத்தொகை போலாது. அன்மொழித்தொகை புறமொழியில் பொருள் சிறந்து நிற்பது. வருமொழியொடு சேரும் வழியே அதன் அன்மொழிப் பொருள் போதருவது ஆதலின் அதனை வருமொழி கொண்டு புணர்த்து விளக்கியதை உவமைத் தொகைக்கும் உம்மைத் தொகைக்கும் கொள்ளலாம் என்பதும் பொருந்தாக் கூற்றாதல் அறிக.

அல்வழிப்புணர்ச்சிவகை நன்னூலுள் பதினான்காம் இலக்கணவிளக்கத்துள் ஒன்பதாம்; முத்து வீரியத்துள் பதினான்காம்.

ஒத்த நூற்பாக்கள்:

'வேற்றுமை ஐ-முதல் ஆறாம் அல்வழி
தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளிஈர் எச்சம்முற்று இடைஉரி
தழுவு தொடர்அடுக்கு எனஈ ரேழே' நன். 152

'அல்வழி வேற்றுமை ஆயிரண்டு அவற்றுள்
விரியினும் உருபுஏலா வினைசார் பெயரே
அல்வழிப் பொருட்பெயர் ஆகும் என்ப
வேற்றுருபு இல்வழி விளக்குங் காலை
வேற்றுமைக் கொளின் அது வேற்றுமைப்
பொருளே' தொ. வி. 2

'ஐஒடு குஇன் அதுகண் வேற்றுமை' மு. வீ. பு. 7

'அல்வழி வினைத்தொகை அன்மொழி உவமை
உம்மை குணம்எழு வாய்விளி இடைஉரி
அடுக்குஈ ரெச்சம்முற்று ஆறொடும் எட்டே.'
முவீ. பு. 6

வேற்றுமையுருபு வருமிடம்

55. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.

இது, 'மேல் ஐமுதல் ஆறும் தழுவுதொடர் வேற்றுமையாம்' 54 என வரையாது கூறினமையின், 'மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்' 53 என்பதனால் பெற்ற பெயர் முதலிய நான்கும் ஐமுதல் ஆறும் விரியவும் தொகவும் வரும் தொடர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியாம் எனப் பெயர் பெறும் அன்றே? அதனை விலக்கி 'வேற்றுமை பெயர்வழிய' என்கின்றது.

இ-ள் ; வேற்றுமைகள் பெயரின் பின் இடத்தன வாம். அவற்றொடு புணரும் நிலைக்கண் என்றவாறு.

பெயர் என்றது, உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் விரவுப்பெயரும் சிறுபான்மை வினைப் பெயரும் உரிப் பெயரும் எனக் கொள்க.

எ-டு : நம்பியை நம்பியொடு நம்பிக்கு நம்பியின் நம்பியது நம்பிகண் எனவும், அதனை அதனொடு எனவும், சாத்தனை சாத்தனொடு எனவும், உண் உண்டானொடு எனவும், நளியை நளியொடு எனவும் முறையே காண்க. பிறவும் அன்ன. 3

விளக்கம்

'வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே' தொல்.116 என்ற நூற்பா உரையுள் உரையாசிரியர் 'வேற்றுமை பெயர்களின் பின்னிடத்தன அவற்றொடு புணரும்

நிலைமைக்கண்' எனவும், மேல் 'உருபு நிலை திரியாது ஈறு பெயர்க்கு ஆகும்' தொல் சொல். 70 என்கின்றார் அன்றோ எனின், பெயரொடு பெயர் முதலிய நால் வகைப் புணர்ச்சியையும் வேற்றுமை அல்வழி என இரண்டாய் அடக்கலின் வினைவழியும் உருபு வரும் என்பது படநின்றது ஆதலின், ஈண்டு கூறப்பட்டது' எனவும் நச்சினார்க்கினியர் இவற்றொடு 'ஆயின் இவ் விலக்குதல் வினையியல் முதல் சூத்திரத்தால் பெறுது மெனின். அது முதல்நிலையைக் கூறிற்று என்பது ஆண்டு உணர்க' எனவும், கூறியதனை உட்கொண்டு இவ்வாசிரியர் புணர்ச்சியை நால்வகைச் சொற்களுக்கும் தாம் கொள்ளும் முறைமைக்கு ஏற்ப உரை வரைந் துள்ளார்.

'பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ வுருவின தெரியுங்காலை' தொல். சொல். 162

எனவும்,

'பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே'
தொல். சொல். 71

'பெயரினும் வினையினும் மெய்தடு மாறி'
தொல். சொல். 299

எனவும் தொல்காப்பியனார் கூறியவற்றை உட் கொண்டு, ஐவகைப் பெயர்களுக்கும் எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளார்.

உயர்திணைப் பெயர்—நம்பி
அஃறிணைப் பெயர்—அது
விரவுப் பெயர்—சாத்தன்

தொழிற் பெயர்—உண்டான்

உரிச்சொற் பெயர்—நளி

உரிச்சொல் படுத்தல் ஓசையால் பெயராகும் என்று நச்சினார்க்கினியர் 'ஏனை வகரம் இன்னொடு சிவணும்' தொல்- 184 என்ற நூற்பா உரையுள் கூறியது காண்க.

சிவஞான முனிவர் முதற் சூத்திர விருத்தியில் 'நால்வகைச் சொற்களும் இருவழியும் புணரும் என மேல் எய்தியதனை ஒருமருங்கு மறுத்துப் பெயர்ச்சொல் புணரும் நிலையே வேற்றுமைவழியாம் என்பது பொருளாகக்கொள்க. ஏகாரம் பிரிநிலை என்க. எனவே, ஏனை வினைச்சொல் முதலிய மூன்றும் அல்வழிய ஆவன அன்றி வேற்றுமை வழிய ஆகா எனவும், பெயர்ச் சொற்கள் இருவழியும் ஆம் எனவும் கூறியவாறா யிற்று' என்று கூறித் தம்கூற்றுக்கு வேற்றுமை உருபு என்னாது வேற்றுமை எனவாளா கூறியிருப்பதே சான்று என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைதி : 'பெய வழித் தம்பொருள் தரவரும் உருபே' நன். 241 என்ற நூற்பாவிற்கு வேற்றுமை உருபுகள் தம் பொருளைத் தரப் பெயர்க்குப் பின்வரும் என்று விளக்கம் கூறியுள்ளார் முனிவர். உருபுகளாகிய இடைச்சொற்களின்புணர்ச்சியினை அவரே வேற்றுமைப் புணர்ச்சியை ஒக்கும் நன். 242 என்று விளக்கியுள்ளார் ஆதலும் காண்க. நூற்பாவில் 'வழிய' என்பதற்கு வழியாம் என்று பொருள் கொண்டதன் பொருந்தாமை யையும் நோக்குக. 'புணர்நிலை' என்பதற்குப் புணரும் நிலை என்று பொருள் கொண்டாராதலின் அவ் வொருமைச்சொல் 'வழிய' என்ற பன்மையொடு இயை தற்கு ஏலாமையும் நோக்குக. வழிய என்ற பன்மைச் சொற் கொண்டே வேற்றுமை என்பதற்கு முன்னவர் யாவரும் வேற்றுமை உருபுகள் என்று பொருள் செய்த சிறப்பையும் நோக்குக.

ஒத்த நூற்பாக்கள்

முழுவதும்- தொல். 116

'பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே.'

நன். 241

'பெயர்க்குப் பின்வரும் வேற்றுமை உருபே.'

மு.வீ.பு.10

விகாரப்புணர்ச்சி

56. விகாரம்ஒற்று உயிர்உயிர்மெய் சாரியை மிகுதல்
திரிதல் கெடுதல் எனமு வகைத்தே.

இது முன்னர்க் கூறிய விகாரம் இத்துணைத்து என்கின்றது.

இ-ள்: மேற்கூறிய விகாரப்புணர்ச்சி மெய்யும் உயிரும் உயிர்மெய்யும் ஆகிய எழுத்தும் சாரியையும் தோன்றலும் வடிவு வேறுபடுதலும் கெடுதலும் என மூன்று கூற்றினை உடைத்தாம் என்றவாறு.

ஏற்புழிக் கோடலான், எழுத்தும் சாரியையும் எய்த வேண்டும் என்னும் யாப்புறவு இன்றி ஏற்ற பெற்றி வரும் எனக் கொள்க.

வரலாறு- மலைத்தலை ஏஎக்கொட்டில் தமிழ்க் கூத்து உரியநெய் மகவின்கை எனவும், மட்குடம் அறுபது மரவேர் பல்சாத்து அங்கை எனவும் வரும். பிறவும் அன்ன.

விளக்கம்: மேற்கூறிய புணர்ச்சி-53 ஆம் நூற்பாவில் கூறப்பட்ட புணர்ச்சி என்றவாறு.

மலை — தலை — மலைத்தலை — மெய் இடையே தோன்றிற்று.

ஏ—கொட்டில் —ஏஎக் கொட்டில் — எழுத்துப்பேறு அளபெடை என்று கூறப்படும் 'குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும் காரியம் இல்வழி வந்த குற்றுயிர் புலுதச் சந்தியாய் வல்லொற்றொடு மிக்கது

தமிழ்+அ+கூத்து - தமிழக்கூத்து - அகரச்சாரியை வல்லொற்றொடு மிக்கது.

உரி + நெய்-உரியநெய்-யகர உயிர்மெய் இடையே மிக்கது.

மக + கை — மகவின்கை—இன்சாரியை இடையே மிக்கது.

சாரியை எழுத்துச்சாரியை பதச்சாரியை என்ற இரு பிரிவினது. அகரம் எழுத்துச் சாரியை: 'இன்' பதச் சாரியை. ஆறு + பஃது-அறுபது-ஆறு என்பதன் நெடில் குறுகப் பஃது என்பதன் ஆயுதம் கெட்டது.

மரம்+வேர்-மரவேர்-நிலைமொழி இறுதி மகரமெய் கெட்டது.

பல + சாத்து-பல்சாத்து-நிலைமொழி ஈற்று உயிர் மெய்யின் அகரஉயிர் கெட்டது.

அகம் + கை - அங்கை - அகம் என்ற சொல்லின் இடைப்பட்டதாகிய ககர உயிர்மெய் கெட்டது.

ஒத்த நூற்பாக்கள் :

'மூன்றே திரிபு இடன் ஒன்றே இயல்பு என
ஆங்க அந்நான்கே மொழிபுணர் இயல்பே.'
தொல். 108

'அவைதாம்
மெய் பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று
இவ்வென மொழிப திரியும் ஆறே.' தொல். 109

'நின்றசொல் லீறும் வருஞ்சொல் முதலும் நிரலித்தப் முள்
ஒன்றிடும்போதும் ஒருமொழிக் கண்ணும் உலகிற்கு ஒப்பின்
நன்றிய மும்மை விகாரம்வந்து எய்திடும் நன்கு இயம்பில்
குன்றுதல் இன்றி வருதலும் உண்டுஎன்று கூறுவரே.' வீ. 9

'மெய்ஈறு உயிர்ஈறு உயிர்முதல் மெய்முதலா
எய்தும் பெயர்வினையும் இவ்வகையே—செய்தமைத்தால்
தோன்றல் திரிதல் கெடுதல் எனத் தூமொழியாய்
மூன்றென்ப சந்தி முடிபு.' நே. 12

'தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும்.' நன். 154
ஒருபுணர்க்கு இரண்டும் மூன்றும் உறப்பெறும்.' நன். 155

'திரிபு அழிவு ஆக்கம் திரட்டுநால் விகாரம்.'
தொ. வி 21

'ஆக்கம் திரிபு அழி வாகும் விகாரம்' மு. வி. பு 3

செய்யுள் விகாரம்

57. வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும்செய்யுள் வேண்டுழி

இது செய்யுள் விகாரம் கூறுகின்றது.

இ—ள் : மெல்லொற்றை வல்லொற்று ஆக்கலும், வல்லொற்றை மெல்லொற்று ஆக்கலும், குற்றெழுத்தை நீட்டலும், நெட்டெழுத்தைக் குறுக்கலும், சந்தம் நிரப்புதற்கு ஒரு சொல்லை விரித்தலும், சந்தம் அளவாதற்கு ஒரு சொல்லைத் தொகுத்தலும் ஆகிய அறுவகை விகாரமும் செய்யுட்கண் வேண்டுழி வரும் என்றவாறு.

இவை ஆறும் புணர்ச்சி விகாரம்போல இன்றுழி வரும் என்று வரையறுக்கப்படா; செய்யுள் செய்யும் சான்றோர் அணி பெறச் செய்யுட்கண் வருவித்துழி வரும் என்பார் 'வேண்டுழி வரும்' என்றார்.

வரலாறு : 'முத்தை வரூஉம் காலந் தோன்றின்'
தொல். 164
எனவும்,

'குன்றிய லுகரத்து இறுதி யாகும்'
எனவும், தொல். சொல். 219

'போத்தறார் புல்லறிவி னார்' நாலடி. 351
எனவும்,

'திருத்தார்நன் றென்றேன் தியேன்'
எனவும், யாப். விருத்தி மேற்கோள்

'தண்ணந் துறைவர் தகவிலர்'
எனவும்,

'ஐந்து அவித்தான் ஆற்றல்' குறள். 25
எனவும் முறையே காண்க. பிறவும் அன்ன. 5

விளக்கம்

'தத்தம் கிளவி தம் அகப்பட்ட
முத்தை வரூஉம் காலம் தோன்றின்'

என்புழி, 'முந்தை' என்பது தத்தம் என்பதனோடு எதுகைத் தொடைபடத் தொடர்தல் வேண்டி 'முத்தை' என வலித்தது.

'ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றியல் உகரத்து இறுதி ஆகும்'

என்புழி, ஒன்றன் என்பதனொடு எதுகைத் தொடை நோக்கிக் 'குற்றியல்' என்பது 'குன்றியல்' என மெலிந்தது.

'தீதொழிலே கன்றித் திரிதந்து எருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார்'

என்புழி, தீத்தொழில் என்பதனொடு எதுகைத் தொடை சிதையாமைக்காகப் 'பொத்தனார்' என்பது 'போத்தறார்' என நீண்டது.

'திருத்தார் நன்றென்றேன் தியேன' — தளை சிதையாமைக்காகத் 'தீயேன்' என்பது 'தியேன்' எனக் குறுகியது.

'தண்ணந் துறைவர் தகவிலர்'

என்புழி, தண்துறைவர் எனின் சீர் குன்றும் ஆதலின் அது 'தண்ணந் துறைவர்' என விரிந்தது.

'ஐந்தவித்தான் ஆற்றல்'

என்புழி, ஐந்தை அவித்தான் எனற்பாலது செய்யுளமைப்பு நோக்கி இரண்டன் உருபு தொக்கு ஐந்தவித்தான் என்று ஆயிற்று.

'ஐந்தவித்தான் ஆற்றல்' என்புழி, ஐந்தும் என்னும் முற்றும்மையும், ஆற்றற்கு என்னும் நான்கன் உருபும் விகாரத்தால் தொக்கன என்பர் பரிமேலழகர். எனவே, இத்தொடரில் இவை தொக்கன எனக் கொள்க.

இலக்கண விளக்கச் சூறாவளி

வலித்தல் முதலிய நான்கு விகாரமும் படுதல் சொல்லின் கண்ணவாகிய எழுத்திற்கு எனவும், விரித்தல் தொகுத்தல் என்னும் இரண்டு விகாரமும் படுதல் சொல் முழுதிற்கும் எனவும் கூறினார். 'தண்ணந்துறைவர் தகவிலர்' என்புழி, அம்முச் சாரியையாய்த்தான், அசை நிலையாய்த்தான், அழகு என்னும் பொருட்டாய்த் தான் நிற்கும் ஆகலானும், சொல் யாண்டும் பொருட் பயன் இன்றி வாராமையானும், சொல் விரிதலசமாறு

யாண்டையது என்க. அன்றியும், 'சீர்நிலை திரியாது தடுமாறும்மே' தொல்.சொல். 407 என எழுத்து விரியும் விகாரம் வேறு யாண்டு அடங்கும் என்று ஒழிக. இஃதன்றும் இனம் அல்லாத சொல் விகாரத்தை எழுத்து விகாரத்தோடு எண்ணல் பொருந்தாமை அறிக. இவ்வையம் நீங்குதற்கு அன்றே ஆசிரியர் தொல்காப்பியனார் அறுவகை விகாரத்துள் விரிக்கும்வழி விரித்தலையும் தொகுக்கும்வழித் தொகுத்தலையும் நடுவண் வைத்து எண்ணியதூஉம் என்க.

அமைதி

'விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும் வழித் தொகுத்தலும்' தொல். சொல். 403 என்பனவற்றிற்கு நச்சினார்க்கினியர் 'சந்தம் நிரம்புதற்கு ஒரு சொல்லை விரிக்க வேண்டியவழி விரித்தலும், 'சந்தம் அளவாதற்கு ஒரு சொல்லைத் தொகுக்க வேண்டும் வழித் தொகுத்தலும்' என்று உரை கூறியவாறே இவ்வாசிரியர் விரித்தல் தொகுத்தல் என்பனவற்றிற்கு விளக்கம் கூறினார். தனியே ஒருசொல்லை விரித்தலே விரித்தல் விகாரம் எனவும், தனியே ஒருசொல்லைத் தொகுத்தலே தொகுத்தல் விகாரம் எனவும் குறிப்பிடாமை ஓர்க. பிரித்தல் இயலாத ஒருசொல் நீர்மைத்தாய தண்துறைவன் என்பதனிடையே அம்முச்சாரியை பெய்து எடுத்துக்காட்டுத்தரப்பெற்றதையும் அறிக. இங்ஙனமே முற்பட்ட உரையாசிரியர் அனைவரும் எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளதனையும் காண்க. இடைச்சொற்கள் பெயரையும் வினையையும் சார்ந்தே பொருள்தரும் குறைச்சொல் ஆதலின், அவை பெயர் வினைகளுக்குப் புறத்துறுப்பாகவும் அகத்து உறுப்பாகவும் வரும் என்பதும் காண்க. 'ஐந்தவித்தான்' என்புழி, உருபு தொக்குநிற்றல் தொகுத்தல் விகாரம் என்பதனை உரையாசிரியருள் முற்பட்டார் அனைவரும் கொண்டமை

காண்க. எழுத்து விரிதலும் விரித்தல் விகாரத்துள் அடங்குதல் சொல்லாமலேயே புலனாகும் என்க. இவ்வாசிரியர் செய்யுள் விகாரத்தை எழுத்துவிகாரம் சொல்விகாரம் என இரண்டாகப் பகுத்துக் கூறாமையும் காண்க. விரித்தல் தனி எழுத்திற்கு அன்றிச் சொல்லின் கண் கிடக்கும் எழுத்திற்கே என்பதும், விரித்தல் முழுவதும் தோன்றல்ஆதலின் வலித்தல்போல எழுத்தின் கண் தனியே காட்ட இயலா நிலையிற்று என்பதும் காண்க. வினையின்கண் எழுத்துத் தொகுதலை மேல் இடைக்குறையில் அடக்கியதும் நோக்குக.

ஒத்த நூற்பாக்கள் :

'அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி
மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித்
தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்'

தொல். சொல். 403

'வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும்செய்யுள் வேண்டுழி'

நன். 115

'மெலிவுறின் பாவிடை மென்மை வன்மை
குறுமை நீட்சி குறுந்தொகை விரிவே
மற்றொரு மொழிமூ வழிக்குறை தலும் என
வேண்டுழித் தனியொழி விகாரம் ஒன்பதே.'

தொ. வி. 37

58. ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே.

இதுவும் அது.

இ-ள் ; ஒரு சொல்லின் முதல் இடை கடை என்ற மூன்றனுள், இச்சொல் இவ்வழிக் குறைப்பினும் நிறைந்து நிற்பதுபோன்று பொருளை விளக்கும் என்பதை அறிந்து செய்யுள் இன்பம் பெறச்செய்வான் குறைக்க, அங்ஙனம் வரும் குறைதல் விகாரமும் செய்யுட்கண் வேண்டுழி வரும் என்றவாறு.

எ-டு: 'மரைஇதழ் புரையும் அஞ்செஞ்சீறடி' எனவும்,

'வேதின வெரிநின் ஓதிமுது போத்து'
குருந் 140 எனவும்,

'நீல்உண் துகிலிகை கடுப்ப' எனவும்,

முறையே மூவிடத்தும் குறைந்தவாறும், பிறாண்டு குறைதற்கு ஏலாதவாறும், அங்ஙனம் குறைந்தன ஆயினும் தாமரை ஓந்தி நீலம் என உரைத்த சொற் பொருள்களைத் தந்தவாறும் காண்க.

'கண்திரள் முத்தம் கொடுவந்து' என்புழிக் 'கொண்டுவந்து' என்னும் வினையும்,

'சான்றோர் என்பிலர் என்புழி 'என்பார்இலர்' என்னும் வினையும் குறைந்து வந்தன. வினைச்சொல் இங்ஙனம் குறைதல் சிறுபான்மை எனக் கொள்க. இஃது ஒரு சொல்லின் கண் சிறிது நிற்பச் சிறிது கெடுத்தல் ஆதலின், முழுதும் கெடுத்தலாகிய தொகுக் கும்வழித் தொகுத்தலின் வேறாதல் அறிக.

புணர்ச்சி விகாரம் அன்றி யாப்பிற்கே உரிய இவற்றையும் ஈண்டுக் கூறினார், விகாரம் அதிகாரப் பட்டமையானும், பகுபதம் முடிப்பதற்குச் சிறுபான்மை வேண்டுதலானும், யாப்பிற்கே உரிய பிறவும் இவ் வோத்துள் கூறுதலானும். விரித்தல் தோன்றலாகவும், வலித்தலும் மெலித்தலும் நீட்டலும் குறுக்கலும் திரிபாக

வும், தொகுத்தலும் மூவிடத்துக் குறைத்தலும் கெடுத லாகவும் அடக்கிச் செய்யுள் விகாரமும் மூன்று என அமையும் என்பது போதற்கு என்பது. 6

விளக்கம்: குறைகள் பெரும்பாலும் பகாப்பதத்தின் கண்ண என்பது அறிக. தாமரை—மரை—முதற்குறை; ஓந்தி—ஓதி—இடைக்குறை; நீலம்—நீல்—கடைக்குறை, ஓதி என்பதே ஓந்திக்கு ஒரு பெயர் என்பார் நற்றிணை உரையாசிரியர்.

கொண்டுவந்து—கொடுவந்து என்பாரிலர்—என்பிலர்	இவை வினையின்கண் இடைக்குறை.

சொல் முழுதும் கெடுத்தலைத் தொகுத்தல் விகாரமாக வும், சொல்லில் சிறிது நிற்பச் சிறிது கெடுத்தலை இடைக் குறையாகவும் இவ்வாசிரியர் பழைய உரையாசிரியர் தம் கருத்தை ஒட்டிக் கூறுவர். தொல்.சொல்.453,454 நச்.

இவ்விகாரங்கள் செய்யுளிடத்தன ஆயினும், விகாரம் ஆதல் ஒப்புமையானும், வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் என்பன திரிதலாகவும், விரித்தல் தோன்றலாக வும், தொகுத்தலும் மூவகைக்குறைகளும் கெடுதலாகவும் அடங்குதலானும் ஈண்டுக் கூறப்பட்டமை அறிக.

'குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்' தொல்.சொல். 453 என்ற நூற்பா உரையுள் நச்சினார்க் கினியர் 'குறைக்கும் வழி அறிதல்' என்றது; ஒருசொற்கு தலை இடை கடை என இடம் மூன்றன்றே; அவற்றுள் இன்னுழிக் குறைக்கப்படும் இச்சொல் என்று அறிந்து குறைக்க'' எனவும், 'ஈது ஒரு சொல்லின்கண் சிறிது நிற்பச் சிறிது கெடுத்தல் ஆதலின், முழுதும் கெடுத்த லாகிய தொக்கும் வழித் தொகுத்தலின் வேறாதல் அறிக; குறைச் சொற்கிளவி' எனவே, இவ்விதி செய்யுட் கண் என்பது பெறுதும்' எனவும்,

'குறைத்தன ஆயினும் நிறைப்பெயர் இயல' தொல் சொல். 454 என்ற நூற்பா உரையுள், 'செய்யுளகத்துச் சொற்கள் குறைக்கப்பட்டன ஆயினும் அவை பொருள் உணர்த்தும் வழி நிறைந்துநின்ற பெயரின் இயல்பை உடையவாம்' எனவும், 'கண்திரள் முத்தம் கொடுவந்து' என்புழிக் கொண்டுவந்து என்னும் வினையும். 'சான்றோர் என்பிலர் தோழி' என்புழி என்பாரிலர் என்னும் வினையும் சிறுபான்மை குறைத்தல் தன்னினம் முடித்தலாற் கொள்க' எனவும், கூறியவற்றை இவ் வாசிரியர் கொண்டவாறு காண்க.

இலக்கண விளக்கச் சூறாவளி

ஒரு மொழியானது ஒரு தொடரின் முதல் இடை கடை என்னும் மூன்றிடத்துக் குறுகுதலும் வேண்டுழி வரும் என்றலே இச்சூத்திரப்பொருள் என்று தெரிந்து கொள்க. 'குறைச்சொற்கிளவி குறைக்குமவழி அறிதல்' என்பதுமது.

அமைதி

ஒரு தொடரின் முதல் இடை கடை என்று பொருள் கூறுதற்கு நூற்பாவில் இடம் இன்மையானும், இந் நூற்பாவிற்கு தன்னூலில் முனிவரும் இவர் கூறியாங்கே உரை வரைந்துள்ளார் ஆதலானும், இக்கருத்துப்பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களின் பொருளும் அதுவேயாதல் தொல்காப்பியத்துப் பழைய உரைகளால் போதருவதானும் முனிவர் கூறுவதன் பொருத்தமின்மையை அறிக.

ஒத்த நூற்பாக்கள்

'குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்.'
தொல். சொல் 453

'குறைத்தன ஆயினும் நிறைப்பெயர் இயல.'
தொல். சொல். 454

'ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே.'
நன். 156

'ஒருமொழி மூவழிக் குறைதலும் விகாரம்.'
தொகல். வி. 87

மொழிச்சாரியை

அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் சாரியை மொழியே.

மூவகை விகாரமும் எய்துதற்கு உரிய இரண்டனுள் எழுத்துக்கூறுபாடு எழுத்தியலுள் பெறப்படுதலின், இஃது எஞ்சிநின்ற சாரியை இவை என்கின்றது.

இ-ள் : அன்னும் ஆனும் இன்னும் அல்லும் அற்றும் இற்றும் அத்தும் அம்மும் தம்மும் நம்மும் நும்மும் ஏயும் அவ்வும் உவ்வும் ஐயும் குவ்வும் னவ்வும் ஆகிய பதினேழும்; அவைபோல்வன பிறவும், மேற்கூறிய சாரியை இடைச்சொல்லாம் என்றவாறு. பிற ஆவன உம்மும் ஞான்றும் கெழுவும் முதலியனவாம். ஆன் உருபிற்கும் ஆன் சாரியைக்கும், இன்உருபிற்கும் இன் சாரியைக்கும் வேற்றுமை, சாரியைஆயின் உருபு ஏற்றலும் உருபாயின் ஏலாமையும் என்க

மகத்துக்கை என்புழித் தகர ஒற்றும் தகர உகரமும் வரும் என்னின். இருளத்துக் கொண்டான் என்புழி அத்து என வேண்டுதலின், ஆண்டும் அத்து நின்றே கெட்டது எனக்கோடும்.

வேறாக நின்ற இருமொழியும் தம்மில் சார்தற் பொருட்டு இயைந்து நிற்றலின் சாரியை ஆயிற்று.

வரலாறு : ஒன்றன் கூட்டம்—அன், ஒருபாற்கு—ஆன், வண்டின்கால்—இன், பூநறுந்தொடையல்—அல்.

பலவற்றை—அற்று, பதிற்றுப்பத்து—இற்று, மரத்திலை —அத்து, புளியங்காய்—அம், எல்லார்தம்மையும்—தம், எல்லாம் நம்மையும்—நம், எல்லீர் நும்மையும்—நும், கலனே தூணி ஏ, குன்றக்கூகை—அ, சாத்தனுக்கு—உ, முந்நாளைக்குழவி—ஐ, ஆடிக்குக் கொண்டான்—கு, ஆன்கன்று—ன்—என முறையே காண்க. பிறவும் வந்துழிக் கண்டுகொள்க. 7

விளக்கம்: விகாரம் எய்துவன-எழுத்தும் சாரியையும். மக என்பது 'அத்து ஆவண் வரினும் வரைநிலை இன்றே' தொல். 219 என்பதனால் அத்துச் சாரியை பெற்று, 'அத்தின் அகரம் கெட, மக + அத்து - மகத்து என்றாக, 'அவற்றுமுன் வருஉம் வல்லெழுத்து மிகுமே' தொல். 133 என்பதனால் ககர ஒற்று மிக்கு மகத்துக்கை என்றாயிற்று.

'சாரியை என்றதன் பொருள் வேறாக நின்ற இரு மொழியும் தம்மில் சார்தற்பொருட்டு இயைந்து நின்றது என்றவாறு.' (தொல் 188. நச். உரை)

தாம் சார்ந்துவரும் மொழிப்பொருட்கு உபகாரம் உடையவாய் வருவன சாரியை' (தொல். சொல். 252. சேனா. உரை)

'சாரியை ஆவது சொல்தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள் பயந்தும் பயவாதும் நிற்பது.'

(சிலப். பதி. 61 அடியார். உரை)

'சாரியை ஆவன அன்ஆன் முதலவாக எடுத்து ஓதப் பட்டு எல்லாப்புணர்ச்சிக்கும் பொதுவாய்ப்பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவன.'

(நன். 132 மயிலை. உரை)

'விகுதி முதலிய புணர்ப்பைச் சார்ந்து ஆண்டைக்கு இயைந்து நிற்பன சாரியை.'

(நன். 139 சிவஞான. உரை)

'சாரியை அன்ஆன் முதலாக எடுத்து ஓதப்பட்டு எல்லாம் புணர்ச்சிக்கும் பொதுவாய்ச் சிறுபான்மை பொருள் நிலைக்கு உதவிசெய்து பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவது' இ. (வி. 42 உரை)

பிற சாரியைகள்-உம், ஞான்று, கெழு முதலியன.

உ-ம்; 'வானவரி வில்லும் திங்களும்' — இதற்கு வில்லிடைத் திங்கள் எனப் பொருள் உரைக்க (தொல். 481 நச்)

ஞான்று — உலா அத்துஞான்றுகொண்டான் (தொல். 226 நச்)

கெழு —'பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர் (தொல். 481 நச்)

தொல்காப்பியனார் இன் வற்று அத்து அம் ஒன் ஆன் அக்கு இக்கு அன் என்ற சாரியைகளைக் குறிப்பிட்டார். (தொல். 119)

அந்நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் தம் நம் நும் உம் கெழு ஏ ஐ என்று தொல்காப்பியனார் நூற்பாக் களில் உடம்பொடு புணர்த்துக் கூறிய ஏழனையும், கூறாத 'ஞான்று' என்பதனையும் குறிப்பிட்டார். இவையே உரையாசிரியராலும் குறிப்பிடப்பட்டன, நன்னூலாசிரியர் இந்நூலுடையார் குறித்தனவற்றையே குறித்துள்ளார். சிவஞான முனிவர் அவற்றோடு தன் தான் தாம் ஆம் ஆ என்ற சாரியைகளையும் நன்னூல் 244ஆம் நூற்பா உரையுள் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கண விளக்கச் சூறாவளி

தொடையல் என்புழி 'அல்' விகுதி என்று ஒழிக. அற்றுச்சாரியை பொருள் நிலைக்கு உதவி செய்யும் சிறப்புத் தோன்ற 'நல்அற்று' 244 என்ற நன்னூலார் கருத்து அறியாது, அல்லுச்சாரியை எனக் கொண்டார்

அமைதி

'இடைநின்று இயலும் சாரியை இயற்கை' தொல். 132 என்ற நூற்பா உரையுள் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் சிறுபான்மை சாரியை ஈற்றின்கண் வருதலைக்கொண்டனர் ஆதலானும், தொடுக்கப்படுவது தொடை என முதல் நிலைதிரிந்த தொழிற்பெயராய் மாலையைக் குறிக்கும்சொல் ஆதலின் அஃது அல்விகுதி பெற்றது என்பதனால் பயன் இன்மையானும், தொடையல் என்பதனையே அல் என்பதனைச் சாரியையாகக் கொண்டு முனிவர்தாமும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டுள்ளார் ஆதலானும், ஈண்டு அற்றுச் சாரியைக்கு நல் என்ற அடைமொழி புணரியல் நிலையிடை பொருள் நிலைக்கு உதவுதலான் தரப்பட்டதெனின் அங்ஙனமே இன்சாரியையும் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுதலான் (42 உரை விளக்கம் காண்க,) அதற்கு அடைமொழி கொடாதது பொருந்தாது ஆதலானும் 'அல்' என்பது சாரியையே; அடைமொழி அன்று என்பது உறுதியாகும். இங்ஙனம் நன்னூற்கண் தாமே கூறியவற்றை விடுத்து இந்நூலை மறுத்தல்வேண்டும் என்று தாம்கொண்ட கோட்பாட்டிற்கு ஏற்ப முனிவர் வரைவன பல; அவற்றின் பொருந்தாமையை ஆங்காங்குக் காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்என் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே.' தொல். 119

'இன்னே வற்றே இக்கே அம்மே
ஒன்னே ஆனே அக்கே அன்னே
இன்னவை எல்லாம் சாரியைச் சொல்லே.'
பிங்கலம்

'அம் ஆம் எம்ஏம் தம்நம் நும்மே
உம்மே அன்ஆன் உரைசெழு ஞான்றே
அல்ஆல் அன்றே எனவே மன்னே
தில்லை வான்பாக்குத் தெய்யவும் இடைச்சொல்.'
திவாகரம்.

'அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.' நன். 244

'அம்மொடு இற்று அற்றே அத்தே அல்இல்அன்
ஆனே ஐயே
தம்நுவ்வே அவ்வே குவ்வே சாரியை பன்மூன்
றென்ப.' சூடாமணி நிகண்டு.

'அத்து அம் ஆன் அக்கு இன் அன் ஒன் இக்கு
அற்றுத் தம் நம் நும்மும் ஆம்பிற.' மு.வீ.பு. 14

அத்துச்சாரியை முதல் கெடுதல்

60. அத்தின் அகரம் அகரமுனை இல்லை.

இது முற்கூறியவற்றுள் அத்துச்சாரியை முதல் எழுத்துக் கெடும் என்கின்றது.

இ-ள்: அத்துச்சாரியையின் அகரம் இயல்பானும் விதியானும் நின்ற அகர ஈற்று முன்னர்க்கெடும் என்றவாறு.

வரலாறு: மகத்துக்கை கலத்துக்குறை என முறையே காண்க. உரையிற்கோடலான், அதவத்துக்கண் எனச் சிறுபான்மை கெடாது எனவும், அண்ணாத்தேரி திட்டாத்துக்குளம் என ஆகாரத்தின் முன்னரும் கெடும் எனவும், விளவின் வீழ்பழம், பலாவின் வீழ்பழம் என இன் உருபு இன்சாரியை பெறாது எனவும், பாம்பினின் கடிதுதேள், என் 'வழக்கின் 'கண்ணும்கற்பினின் வழாஅ நற்பல உதவி' (அகம். 86) எனச் செய்யுட்கண்ணும் சிறுபான்மை பெறும் எனவும் கொள்க. 8

விளக்கம் : மக + அத்து + கை; கலம் + அத்து + குறை.

'மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை'

தொல். 218

'அத்து அவண் வரினும் வரை நிலை இன்றே,

தொல். 219

'அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றன் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே.'

தொல். 133

'அத்தின் அகரம் அகரமுனை இல்லை' தொல். 125

'அத்திடை வரூஉம் கலம்என் அளவே' தொல். 168

என்ற நூற்பாக்களால் மகத்துக்கை, கலத்துக்குறை என முடித்துக்கொள்க. மக—இயல்பு உயிர் ஈறு; கல—விதி உயிர்ஈறு. மகத்துக்கை—வேற்றுமைத் தொடர்; கலத்துக் குறை —அல்வழித்தொடர்—கலமும் குறைந்ததும் என உம்மைத்தொகை.

அத + அத்து + கண்—அதவத்துக்கண்

'அஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு
அதமொடும சிவணும் ஏழன் உருபே' தொல். 181

'அத்தே வற்றே' தொல். 133

என்ற நூற்பாவின் 'தெற்றென் றற்றே' என்ற மிகையான், அதத்தின அகரம் அகரமுனைக் கெடாமல,

'எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படுமெய்யின் உருவு கொளல் வரையார்'

தொல். 140

'புள்ளி யீற்றுமுன் உயிர்தனித்து இயலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே'

தொல். 138

என்பவற்றான் உடம்பொடு மெய்யைப் புணர்த்து அத வத்து என்றாக்கிப்பின்,

'வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு
ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்' தொல். 114

என்றதனால் வல்லெழுத்து மிகுத்து முடிக்க.
அண்ணா + அத்து + ஏரி — அண்ணாத்தேரி.
திட்டா + அத்து + குளம் — திட்டாத்துக்குளம்.

'அத்தே வற்றே' என்ற நூற்பாவின் 'மெய்' என்ற மிகையான், ஆகார ஈறும் அத்துப் பெறும் எனக் கூறி, இவற்றை எடுத்துக்காட்டினார் நச்சினார்க்கினியர். அண்ணா என்பவரால் வெட்டப்பட்ட ஏரி, திட்டா என்ப வரால் வெட்டப்பட்ட குளம் எனப் பொருள் செய்க.

இவற்றையும் உரையுள் ஆங்காங்கு இவ்வாசிரியர் அடக்குதலையும் கண்டு கொள்க.

'இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும்' தொல்.131

என்ற விதியான். வினவின் வீழ்பழம் பலாவின் வீழ்பழம் என்பன இன்சாரியை பெறாமை அறிக.

அகர ஆகார ஈற்றுப்பெயர்கள் உருபு ஏற்கும்போது இன்சாரியை பெறுதலை,

'எல்லா ஈற்றும் சொல்லுங் காலை
வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை' இ.வி.149

என்பதனால் அறிக.

'இன்னென வரூஉம்' தொல்.131 என்ற நூற்பாவில் மிகையைக்காட்டி, நச்சினார்க்கினியர் பாம்பினிற்கடிது தேள், 'கற்பினின் வழாஅ நற்பல உதவி' (அகம் 86) என்பனவற்றை அடக்கியுள்ளார். முத்துவீரிய நூலார் அத்துச்சாரியை வரின் நிலைமொழி அகர ஈறு கெடும் என்பர். (மு- வீ. பு. 18)

ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய சாரியைச் சூத்திரம் பல்காமைப் பொருட்டுத் தமக்கு ஏற்றவாறு வேறுபடுத்துவார்க்கு, அத்துச் சாரியையே அன்றித் துச் சாரியையும் ஒன்று வகுத்து இங்சூத்திரம் ஓதாது ஒழிதலே பொருத்தம் உடைத்து என்க.

ஆராமதி

இது நன்னூலுக்கே (252) மறுப்புத் தருவதாகும். ஆண்டு இதனை ஏற்று உரையெழுதும் முனிவர் ஈண்டுத் துச் சாரியை ஒன்றும் வகுத்தல் வேண்டும் என்பது ஏனோ? அகர ஆகார ஈறுகள் நீங்கலாக யாண்டும் வரும் அத்துச்சாரியையே கொண்டு, அவ்வீறுகளுக்கு நூற்பா வானும் இலேசானும் விலக்குத் தருதலே சான்றோர் நெறியாதல் அறிக.

ஒத்த நூற்பாக்கள் :

'அத்தின் அகரம் அகரமுனை இல்லை' தொல். 125

நன். 252

'அத்து உறின் அகரஈறு அழியும் என்ப.'

மு வீ. பு. 18

சாரியை வரும் இடனும் உருபும்

61. பதம் முன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்
அனையவை தெரிதல் அறிவோர் கடனே.

இது சாரியை வரும் இடனும் திறனும் கூறுகின்றது

இ-ள் : நிலைமொழி முன்னர் விகுதியும் பதமும் உருபும் வந்து புணரும் இடத்து இடையே ஒன்றும் இரண்டும் சாரியை வருதலும் வாராதுஒழிதலும் இரு

வகையும் ஒப்ப நிற்றலும் பொருந்தும். அத்தன்மைய வற்றை ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடும் விரிந்த நூலொடும் படுத்தி. எடுத்தோத்தானும் இலேசானும் புறனடையானும் உரையானும் கூறுபட ஆராய்ந்து அறிதல் அறிவுடையோருக்கு முறைமையாம் என்றவாறு

விகுதிப்புணர்ச்சிக்கண், உண்டது ஊரது என்றாற் போல்வன வரவேண்டிய நின்றன; வெற்பன் பொருப்பன் என்றாற்போல்வன வேண்டாது நின்றன; வருவன வருவ, உண்பன உண்ப என்றாற் போல்வன இருதகை யும் ஒப்ப நின்றன.

பதப்புணர்ச்சிக்கண் பலவற்றுக்கோடு சிலவற்றுக் கோடு என்றாற்போல்வன வரவேண்டியே நின்றன; அத்திக்காய் அகத்திக்காய் என்றாற்போல்வன வேண் டாது நின்றன; விளவின்கோடு விளங்கோடு, அதவன் கோடு அதங்கோடு என்றாற் போல்வன இருவகையும் ஒப்ப நின்றன.

உருபு புணர்ச்சிக்கண், மரத்தை மரத்தொடு அவற்றை அவற்றொடு என்றாற்போல்வன வரவேண்டி யே நின்றன;

நம்பியை நம்பியொடு கொற்றனை கொற்றனொடு என்றாற்போல்வன வேண்டாது நின்றன; மண்ணினை மண்ணை, வேயினை வேயை என்றாற் போல்வன இரு வகையும் ஒப்ப நின்றன; 'பூவினொடு விரிந்த கூந்தல்' 'பூவொடு விரிந்த கூந்தல்' இவையும் அன்ன.

அவையிற்றிற்கு இவையிற்றிற்கு என்றாற் போல் வன பலவும் வந்தன. பிறவும் வந்துழிக் காண்க.

'இடையேவரும்' என வரைந்துகூறாது பொதுப்பட 'வருதலும்' என்றமையான், எல்லாவற்றையும் எல்லா நம்மையும் எல்லாவற்றுக்கோடும் எல்லாநங்கையும் என

உருபின் பின்னரும் பொருள் பின்னரும் உம்முச்சாரியை வரும் எனக் கொள்க. 9

விளக்கம்: ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கு—
(தொல். 132)

சாரியை பெறுதற்கு உரிய மரபுநிலை.
எடுத்தோத்து—நூற்பாவின் நேரிடையான செய்தி.

இலேசு—நூற்பாவில் காணப்படும் மிகைச்சொல்லாக, ஆண்டுக் கூறப்படாத சில செய்திகளைக் கொள்ளுவதற்கு வாய்ப்பு அளிக்கும் விதப்பு.

உண்டது—உண்+ட்+அ+து—அ சாரியை.
ஊரது—ஊர்+அ+து—அ சாரியை.
வெற்பன்—வெற்பு+அன்—சாரியை இன்று.
வருவன—வா+வ்+அன்+அ—அன் சாரியை.
வருவ—வா+வ்+அ—சாரியை இன்று.
பலவற்றுக்கோடு—பல+அற்று+கோடு—
அற்று சாரியை.
அத்திக்காய்—அத்தி+காய்—சாரியை இன்று.
விளவின்கோடு—விள+இன்+கோடு—இன் சாரியை
விளங்கோடு—விள+கோடு—சாரியை இன்று.
மரத்தை—மரம்+அத்து+ஐ—அத்துச் சாரியை.
நம்பியை—நம்பி+ஐ—சாரியை இன்று.
மண்ணினை—மண்++இன்+ஐ—இன் சாரியை.
மண்ணை—மண்+ஐ—சாரியை இன்று.
பூவினொடு—பூ+இன்+ஒடு+—இன் சாரியை.
பூவொடு—பூ+ஒடு—சாரியை இன்று.

அவையிற்றிற்கு — அவை + இற்று + இன்+கு — இற்று இன்—சாரியைகள்.

எல்லாவற்றையும் — எல்லாம்+அற்று+ஐ+உம் — அற்றும் உம்மும் சாரியை; உம்முச் சாரியை இறுதியில் வந்தது. எல்லா வற்றுக்கோடும்—எல்லாம்+அற்று+கோடு+உம். அற்றும் உம்மும் சாரியை;உம்முச்சாரியை இறுதியில் வந்தது.

இலக்கண விளக்கச் சூறாவளி

நன்னூலார் போல வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும் எனத் தொகுத்துக் கூறிப் புறனடையும் ஈண்டே கூறினார். ஆசிரியர் தொல்காப்பியனார் போல மேல் பதங்களுக்குத் தனித் தனிச் சாரியைப்பேறு விதிக்கப் புகுந்தார்க்கு ஈண்டே இவ்வாறு கூறல் பொருந்தாமை அறிக.

அமைதி

தொல்காப்பியனார் போலச் சாரியைப்பேற்றை நூற்பாக்களால் சுட்டாமல் பெரும்பாலனவற்றை உரையில் கூறும் இச்சுருக்க நூலுக்கு இந்நூற்பா தேவைப்படுமாற்றை அறிக.

இவ்வாசிரியர் 'அனையவை தெரிதல் அறிவோர் கடனே' என்பதனால், தொல்காப்பிய 203ஆம் நூற்பா, 'இதற்கு இது சாரியை' என்னும் நன்னூல் 253ஆம் நூற்பா ஆகியவற்றின் கருத்தைச் சுட்டியுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'பெயரும் தொழிலும் பிரிந்து ஒருங்கு இசைப்ப
வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வந்துவழி விளங்காது
இடைநின்று இயலும் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்.'

தொல். 132

'துப்பார் பெயர்வேற் றுமையின் அகத்தும்
தொகையின் கண்ணும்
செப்பார் மொழிமுதல் பின்சா ரியைவரின்
தேர்ந்தவற்றுள்
ஒப்பார் மொழியீறு உயிரொடும் போம்ஒரு கால்
உடல்போம்
தப்பா உயிர்மெய் கெடும் ஒரு கால்என்பர் தாழ்
குழலே.' வீ 27

'மேய இரு சொற்பொருள் தோன்ற வேறுஇருத்தி
ஆய இடைச்சொல் அடைவித்தால்—தூயசீர்
ஆவிபோம் ஒற்றுப்போம் ஆங்குயிர்மெய் போம்
அன்றி
மேவிய சுட்டு ஆங்கே மிகும்' நே. 22

'பதம்முன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.'
நன். 243

'சாரியை சொற்களைச் சார்ந்துநின்று இயலும்.'
மு. வீ. பு. 13

'புள்ளி இறுதியும் உயிர்இறு கிளவியும்
சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்
தேருங் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையும் கடப்பாடு இலவே' தொல்.203

'இதற்குஇது சாரியை எனின்அளவு இன்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்துஇடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.' நன்.258

எழுத்துக்கள் ஒன்று பலவாதல்

62. எழுத்து ஓரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையின் திரிதல் நிலைஇய பண்பே.

இஃது எழுத்துக்கள் ஒன்று பலவாம் என எய்தாதது எய்துவிக்கின்றது.

இ-ள்; எழுத்து ஒரு தன்மையவான பொருள் விளங்க நிற்கும் புணர்மொழிகள் எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமையான் புணர்ச்சி வேறுபடுதல் நிலை பெற்ற குணம் என்றவாறு.

எ-டு: செம்பொன்பதின்தொடி, செம்பருத்தி, குறும்பரம்பு, நாகன்றேவன்போத்து, தாமரைக்கணியார், குன்றேறாமா என இவை இசையின் திரிந்தன. 10

விளக்கம்: எழுத்துக்கள் ஒன்று பலவாதல்—'எண் பெயர்' (2) என்ற நூற்பா உரையில் கூறப்பட்டுள்ளது. இந்நூற்பா உரை தொல். 141ல் நச்சினார்க்கினியர் உரைத்த உரையேயாம்.

செம்பொன்பதின்றொடி — செம்பொன்+பதின்தொடி.
செம்பு+ஒன்பதின்+தொடி.

செம்பருத்தி — செம்+பருத்தி
செம்பர்+உத்தி

குறும்பரம்பு — குறும்+பரம்பு
குறும்பர்+அம்பு

நாகன்றேவன்போத்து — நாகன்+தேவன்+போத்து
நாகு+அன்றே+வன்போத்து

தாமரைக்கணியார் — தாமரை+கணியார்
தாம்+அரைக்கு+அணியார்
தாம்+மரை+கணியார்

குன்றேறாமா — குன்று+ஏறு+ஆ+மா
குன்று+ஏறு+ஆமா
குன்று+ஏறா+மா

ஒத்த நூற்பாக்கள் :

முழுதும் தொல். 141

'எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளிவு எய்தும் என்ப.' நன். 391

'பலபொருட்கு ஒருவடிவு ஆகும் பதங்களை
ஓசையொடு கூறுவர் உயர்ந்தோர் அவைதாம்
தனிமொழி தொடர்மொழி எனும் இரண்டினும் வரும்
தனிமொழி வினைமொழி தனையே சாரும்
சொல்வேறு படாஅது பொருள்வேறு படுதலும்
பொருள்வேறு படாஅது சொல்வேறு படுதலும்
பொருள்சொல் ஒருங்கே போய்வேறு படுதலும்
எனமூன்று என்பர் தொடர்மொழி இயல்பே.'
இ. கொ. 126

புறனடை

63. அவைதாம்

முன்னப் பொருள புணர்ச்சி வாயில்
இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே.

இனள மேலதற்கு ஒரு புறனடை கூறுகின்றது.

இ-ள் : பலபொருட்குப் பொது என்ற புணர்மொழிகள் தாம் குறிப்பான் உணரும் பொருண்மையினை உடையனவாம; புணர்ச்சியிடத்து இத்தன்மையய என்னும் எழுத்து முறைமையை உடைய அல்ல என்றவாறு.

செம்பொன் பதின்றொடி என்ற வழிப்பொன் ஆராய்ச்சி உள்வழிப்பொன் என்றும் செம்பு ஆராய்ச்சி உள்வழிச் செம்பு என்றும் குறிப்பான் உணரப்பட்டது.

'இசையின் திரிதல்' ஒலி எழுத்திற்கே எனவும், 'எழுத்துக்கடன் இல' என்றது வரிவடிவிற்கு எனவும் கொள்க.

விளக்கம் : எனவே, வரிவடிவுகொண்டு பொருள் வேறுபாடு காண்டல் இயலாது; எடுத்தல் படுத்தல் முதலிய ஒலிவடிவுகொண்டே இத்தொடர்கள் பொருள் வேறுபாடு அறிவிக்கும் என்பதாம்.

இந்நூற்பா உரையும் நச்சினார்க்கினியர் உரைத்த உரையே.

'எடுத்தல் படுத்தல் நலிதல்என் றாகும் இசை அனைத்தும்
தொடுத்த உதாத்தம் அநுதாத்தம் ஏனைச் சுவரிதமாம்
அடுத்த கிருத்துன்முற் றெல்லாம் எடுத்த லரும் திஙந்தம்
படுத்தல் இரண்டும் உடைத்தாகும் சரூபம் படுந் தொடரே' பி. வி. 40

என்ற நூற்பா உரையுள், பிரயோக விவேக நூலார் சொல் வேறுபடாது பொருள்வேறுபட்ட சரூபங்களையும் பொருள் வேறுபடாது சொல் வேறுபட்ட சரூபங்களையும் எடுத்து விளக்கியுள்ளமை காண்க.

ஒத்த நூற்பா :

முழுதும் தொல். 142

புள்ளியீற்றுமுன் உயிர்

64. புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித்து இயலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே.

இது புள்ளியீற்றுமுன் உயிர்முதல் மொழி வரின் புணருமாறு கூறுகிறது.

இ-ள் : புள்ளி ஈற்றுச்சொல் முன்வந்த உயிர்முதல் மொழியின் உயிர் தனித்து நடவாது அப்புள்ளியோடு கூடும், தான் தனித்துநின்ற அவ்வியல்பினைக் கெடுத்து

என்றவாறு. எனவே, நீரொடு கூடிய பால்போல நின்றது என்று ஒற்றுமை கூறினார் என்பதாயிற்று.

வரலாறு: பாலரிது பாலாழி ஆலிலை பொருளீட்டம் வானுலகு வானூடு வேலெறிந்தான் வேலேற்றான் பொருளையம் பொருளொன்று நாணோடிற்று சொல் லெளவியம் எனவரும். பிறவும் அன்ன. அதனை அதனொடு நாடுரி என விதிவகையான் எய்திய புள்ளி முனனும் இவ்விதி கொள்க.

விளக்கம்: இந்நூற்பாவிற்கு (தொல். 138) நச்சி னார்க்கினியர், 'புள்ளி ஈற்றுச்சொல் முன்னர்வந்த உயிர்முதல் மொழியின் உயிர் தனித்து நடவாது அப் புள்ளியோடும் கூடும் தான் தனித்துநின்ற அவ்வியல்பி னைக் கெடுத்து' என்று உரை கூறி, வரைந்த விளக்கங் களையும் எடுத்துக் காட்டுக்களையுமே இவ்வாசிரியர் கூறியுள்ளார் என்பது அறிக.

அதனை—அது+அன்→ஐ—அது என்பதன் உகரம் கெட, 'அத்' என விதிமெய்யீறாய் நின்றது.

நாடுரி+நாழி+உரி—நாழி என்பதன் ழகர உயிர் மெய் கெட, டகரம் ஒற்ற நாட் என விதிமெய்யீறாய் நின்றது. இவ்விதியினை இயல்புமெய்யீற்றுக்கும் விதி மெய்யீற்றுக்கும் கொள்க.

இலக்கண விளக்கச் சூறாவளி

'ஞண நம லவளன ஒற்று இறு தொழிற் பெயர்' நன். 207 என்றல் தொடக்கத்து மெய்யீற்றுப் புணர்ச்சிக்கே உரிய விதியை ஈண்டுக் கூறுதல் உயிர் ஈற்றுப் புணரியல் என்னும் பெயர்க்கு ஏலாமை தெரிந்து கொள்க.

அமைதி

இவ்வியலின் தொடக்கத்தின் கூறியுள்ள உரைச் செய்தியை நோக்கி, அதன் விளக்கத்தையும் உட் கொண்டு இதன் பொருத்தம் இன்மையை உணர்க.

ஒத்த நூற்பாக்கள் :

'மன்னுகின்ற ஒற்றெழுத் தின்பின் உயிர்வரின்
ஏறும்.' வீ. 5

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.'
நன். 204

குற்றியலுகர ஈற்றுமுன் உயிரும் யகரமும்

65\. குற்றிய லுகரத்து இறுதி முன்னும்
அற்றென மொழிய யவ்வரின் இகரம்
தெற்றென வருஉம் அது முற்றத் தோன்றாது.

இது குற்றியலுகர ஈற்றுமுன் உயிர் முதல் மொழியும் யகர முதல் மொழியும் வரின் புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: குற்றியலுகர ஈற்றுமுன்னும் வந்த உயிர் முதல் மொழியின் உயிர் தனித்து நடவாது அக்குற்றிய லுகரத்தோடு கூடும் தான் தனித்துநின்ற அவ்வியல் பினைக் கெடுத்து, என்றும், அதன்முன் யகர முதல் மொழி வரின் இகரம் தெளியத் தோன்றும் என்னும், அக்குற்றுகரம் முடியத் தோன்றாது என்றும் கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

வரலாறு: நாகு எஃகு வரகு கொக்கு குரங்கு தெள்கு என நிறுத்தி அரிது, யாது என வருவித்துக் காண்க. பிறவும் அன்ன.

நாகரிது என்புழி முன்னர்க் குற்றுகர ஓசையும், பின்னர் உயிர் ஓசையும்பெற்று அவ்விரண்டும் கூடிநின்று அல்லது அப்பொருள் உணர்த்தல் 'ஆகாமையின், உயிர் ஏறுங்கால் குற்றுகரம் கெட்டுப்போக நின்ற ஒற்றின் மேல் உயிர் ஏறிற்று என்றல் பொருந்தாது என்க. யகரம் வரின் குற்றுகரம் இகரமாய்த் திரியும் என்னாது, உகரம்கெட ஓர்இகரம் தோன்றும்' என்றார்.

'யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது' தொல். 410

என்ப ஆகலின், அங்ஙனம் தோன்றிய இகரம் குறுகுதல், 'யகரம் வரக்குறள் உத்தப வருஉம்' (18) என்பதனால் பெறுதும். 'முற்ற' என்றார், அறுவகை ஈற்றின் கண்ணும் உகரம் கெடும் என்றற்கு'தெற்றென' என்றதனால்,அதனை அதனொடு இதனை இதனொடு, கதவழகிது கனவழகிது, கதவியாது கனவியாது என ஒரோவழி உயிர் முதல் மொழி வருங்கால் முற்றுகரம் கெட நின்ற ஒற்றின்மல் உயிர் ஏறி முடிதலும், யகர முதல்மொழி வருங்கால் குற்றுகர ஈறு முடிந்தாங்கு முடிதலும் கொள்க. 13

விளக்கம் : குத்றியலுகரம் உயிரின் குறுக்கமாய் மெய்யீறுபோல உயிர் ஏற இடம் கொடுக்கும் என்பதே தொல்காப்பியனார் கருத்து ஆதலின், அதனை உட் கொண்டு குற்றியலுகரம் மெய்போல உயிர் ஏற இடங் கொடுக்கும் என்று குறிப்பிட்டு, அங்ஙனம் உயிர் ஓசை யுடன் குற்றியலுகர ஓசை கூடிய வழியேதான் பொருள் உணர்த்தும் பெற்றி சிதையாது என்று காரணமும் கூறி யுள்ளார். இனி, முற்றியலுகரம் கெட நின்ற ஒற்று உயிர் ஏற இடங் கொடுக்கும் என்பதும் 'சுட்டுமுதல் உகரம்' தொல். 176 முதலிய தொல்காப்பிய நூற்பாக் களின் கருத்து ஆதல் அறிக. யகரம் வருவழி முற்றிய லுகரம் முற்றியலிகரமாய்த் திரியும் என்பதும் காண்க. குன்றியாது என்பது முற்றியலிகரமாயின் நிலைமொழி குன்றிமணியையும் குற்றியலிகரமாயின் குன்றினையும் குறிக்கும் பொருள்வேறுபாடும் காண்க.

இலக்கண விளக்கச் சூறாவளி

இதுவும் பிறவும் பொருந்தாமை விருத்தியுள் காண்க.

அமைதி

குற்றியலுகரம் கெடும் என்று தொல்காப்பியனா யாண்டும் குறிப்பிடாமையின், சிவஞான முனிவ குற்றியலுகரம் கெடும் என்று கூறுவதும் பொருந்தாமை அறிக.

'நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே.' தொல். 472

என்புழி, முனிவர் 'ஈறு சினை ஒழிய' என்பதற்கு 'ஈறாகும் குற்றியலுகரமும் அஃது ஏறிய றகரஒற்றும் கெட்டுப் போக' என்று உரை கூறினார். அங்ஙனம் கொள்ளின், நூறு+மூன்று—நூற்றிமூன்று என்றே நிற்கும் ஆதலின், குற்றியலுகரம் கெடும் என்ற முனிவர் கூற்றின் பொருந்தாமை அறிக. 'ஒழிதல்' என்ற சொற்குத் தொல்காப்பியனார் நிலை பெற்றிருத்தல் என்றே பொருள் செய்தல்,

'சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே' தொல். 176

'மெய் அவண் ஒழிய என்மனார் புலவர்' தொல். 293

'அப்பெயர் மெய்ஒழித்து அன்கெடு வழியும்'
தொல். 350

'இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்ஒழித்து அகரம் நிலையும்'
தொல். 347

'அகம் என் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும்'
தொல். 315

'ஆறன் மருங்கின் குற்றிய லுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்' தொல். 469

'நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே' தொல். 472

முதலிய நூற்பாக்களால் அறிக.

நச்சினார்க்கினியரும் உரையாசிரியரும்

'புள்ளி யீற்றுமுன் உயிர்தனித்து இயலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே'
தொல். 138

'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' தொல். 105

என்ற நூற்பாக்களைக் கொண்டு, குற்றியலுகரமும் மெய் ஈறு போல உயிர் ஏற இடங் கொடுக்கும் என்றே குறிப்பிட்டுள்ளனர்.

நன்னூலார் குற்றியலுகரத்தின் இயல்பினை ஓராது

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
யவ்வரின் இய்யாம் முற்றும்அற்று ஒரோவழி'
நன். 164

என்று கூறியதே முனிவர் முதலாயினாருக்குத் திரிபான எண்ணம் கொள்ள வழிவகுத்தது என்க.

'ஆவியின் தோன்றக் கெடும்குற்றுகரம்' வீ. 21

'குற்றுகரம் ஆவி வரின் சிதையும்' நே. 44

என்பனவே நன்னூலாருக்குத் திரிபு உணர்ச்சி தந்தன என்க.

ஒத்த நூற்பாக்கள் :

'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' தொல் 108

'யகரம் வருவழி......... தோன்றாது' தொல். 410

குற்றொற்றின் முன் உயிர்

66. தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்.

இஃது எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுகின்றது, உயிர் ஏற இடம் கொடுத்தலே அன்றி இரட்டித்தும் நிற்கும் என்றலின்,

இ-ள். பிறிது ஒன்றனைச் சாராது தனியே நின்ற குற்றெழுத்தின் முன் நின்ற ஒற்று, உயிர் வரின் இரட்டித்து நிற்கும் என்றவாறு.

வரலாறு : மண்-கம்-பொன்-நெய்-கல்-தெவ்-புள்-என நிறுத்தி, அழகிது ஆன்றது இயைந்தது எனவும், அமைவு ஆக்கம் இன்மை எனவும் வருவித்து அவ்வாறாதல் காண்க. பிறவும் அன்ன.

விளக்கம்: எய்தியது—உயிர் ஏற இடம் கொடுத்தல் (இ. வி. 64).

சிறப்பு விதி—இரட்டித்தல்.

மண்ணழகிது முதலியன — அவ்வழிப்பொருள் ஆகிய எழுவாய்த் தொடர்.

மண்ணமைவு முதலியன வேற்றுமைத்தொடர்.

ஒத்த நூற்பாக்கள் :

'குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும்......'
தொல். 160

'குறில்பின்பு மெய்கள் ஏறா உயிர்பின்வர
இரண்டாகும்.' வீ. 14

'குற்றெழுத்து இரட்டும் உயிர்வந்தால்.' நே. 15

'தனிக்குறில் மெய்உயிர் சார்புளி மிகும்.'
தொ. வி. 36

67. தன்ஒழி மெய்முன் ய-வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே.

இது யகரம் ஒழிந்த மெய்முன் யகரம் வந்து புணர் வழிப்படும் செய்கை கூறுகின்றது.

இ-ள்: தன்னை ஒழிந்து நின்ற பத்து மெய்முன்னும் யகர முதல்மொழி வரின், ஓர் இகரம் தோன்றும் என்று துணிவாரும் உளர் என்றவாறு உளர்.

உம்மையால் துணியாதார் பலர் என்றார்.

வரலாறு : உரிஞ்-மண்-வெரிந்-நப்-பொன்-போர்-கல்-தெவ்-கேழ்-தாள், என நிறுத்தி, யானை யாது என வருவித்து அவ்வாறாதல் காண்க. பிறவும் அன்ன உரிஞ்யானை- மண் யானை-என் இகரம் பெறாமையும் கொள்க.

விளக்கம்: உரிஞ்+யானை—உரிஞ்யானை. உரிஞி யானை மூன்றாம்+யாண்டு— மூன்றாம் யாண்டு.
மூன்றா மியாண்டு

உம்மை எதிர்மறையாய் இழிவு சிறப்பு உம்மை என்பது நன்னூல் விருத்தியுரை.

ஒத்த நூற்பா :

முழுதும் நன். 206

உடம்படு மெய்

68. இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் இருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென்று ஆதல்
வரைவின்று என்மனார் மதிக்குங் காலே.

இஃது உயிர் ஈற்று மொழிமுன் உயிர் முதல் மொழி வந்து புணருமாறு கூறுகின்றது.

இ-ள் : இகர ஈகார ஐகாரங்களின் பின்னர் யகரமும் ஒழிந்த உயிர்களின் பின்னர் வகரமும், அவற்றுள் ஏகாரத்தின் பின்னர் யகர வகரமும் உயிர் முதல்மொழி வந்தால் உடம்படு மெய் என்று பெயர்வாய்த் தோன்று தலைநீக்குதல் இன்று என்று கூறுவர் ஆசிரியர் ஆராயும் இடத்து என்றவாறு.

வரலாறு : மணி-தீ-மலை-அழகிது எனவும், விள-பலா-கடு-பூ-அடைந்தது- 'ஓ உவமன் உறழ்வின்

ஒத்ததே' (களவழி) சோ-கௌ - அடைந்தது ஆடிற்று- இழைந்தது - எனவும், மணியழகு மரவடி மரவாட்டம், எனவும், 'ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்' (சிந். 652). 'ஏவாடல் காண்க' எனவும் வரும். பிறவும் அன்ன.

'மதிக்குங்காலை' என்றதனால், அளபு எடுப்புழி வரும் எகரம் முன்னரும் ஏகாரத்தின் முன்போலஉண்டே எயிலல் என யகரமும், சேஎ வடைந்தது என வகரமும், சிறுபான்மை புள்ளியீற்று முன்னும் 'விண்வத்துக் கொட்கும் வண்ணத்தமரர்' என வகரமும் தோன்றுதல் கொள்க.

'நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்க' புறநா. 93-10 என்பது வினைத்தொகை என மறுக்க. 'வரைவின்று என்மனார்' என்றதனால், உடம்படுமெய் பெறுதல் ஒருதலை அன்றாய்க் கிளி அரிது மூங்கா இல்லை எனப் பெறாமையும் கொள்க. 16

விளக்கம்: உயிரொடு உயிர்க்கு மயக்கம் இன்மையின் வருமொழி முதலாகவரும் உயிர்க்கு உடம்பாக அடுத்த மெய் உடம்படுமெய் எனப்பட்டது. உயிர்களை உடம்படுத்தற்கு வரும் மெய் உடம்படுமெய் என்பதும் ஆம். (நன். விருத்தி 162) அத்தகைய உடம்படுமெய் உயிரொடு ஒத்த பிறப்பிடத்தன ஆதல்வேண்டும்;மேலும் உயிர்போல மொழிமுதற்கண் வரும் ஆற்றல் உடைய ஆதலும் வேண்டும். உயிரின் பிறப்பிடம் மிடறு. அம் மிடற்றில் தோன்றுவன இடையின மெய்களே. அவற்றுள்ளும் மொழிமுதற்கண் வரும் ஆற்றல் உடையன யகரமும் வகரமுமே. அவற்றுள் இ ஈ ஐ என்பனவற்றொடு ஒத்த ஓசை உடையது யகரமே. அகர இகரத் தொடர்பால்ஏற்பட்ட எகர ஏகாரங்கள் யகர வகரமாகிய இரண்டனையும் உடம்படு மெய்யாகக் கொள்ளும். அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்பன வகர உடம்படுமெய் பெறும்.

இச்செய்திகளில் பெரும்பாலன சூத்திரவிருத்தியில் காணப்படுகின்றன.

மணி + அழகிது மணியழகிது.

விள + அழகிது—விளவழகிது என ஒட்டுக.

ஓஒ என்புழி, ஓவொ என இரண்டு உயிரிடை உடம்படுமெய் வரவில்லை. என்னை? நெடிலுக்குக் குறில் மயங்குதற்கு ஏற்ற இனம் ஆகலின், அளபெடை எல்லாவற்றிற்கும் இவ்விளக்கம் கொள்க.

'தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்
அளபின் எழுந்த இசைய என்ப'

தொல். சொல். 263

எனவே, தெளிவுப் பொருட்கண் ஏகாரத்தொடு அளவெடுத்து வரும் எகர எழுத்துச் சிறுபான்மை யகர உடம்படு மெய் பெறுதற்கு 'உண்டேஎ யிகல்' என்பது எடுத்துக்காட்டு. விண் + அத்து—விண்வத்து என மெய் முன்னரும் உடம்படு மெய் வரும் என்பது. தொல்காப்பியனார் உயிரீறு புள்ளியீறு என்ற இரண்டும் அடங்க நிலைமொழியை 'எல்லா மொழிக்கும்' தொல். 140 எனப் பொதுவாகக் கூறியதனால், விண் முதலிய மெய்யீறும் கொள்ளப்படும் என்ற கருத்தினர் தொல்காப்பியனார் என்பது உணரப்படும். நச்சினார்க்கினியர் உடம்படு மெய்யை உயிர்ஈற்றிற்கே கொண்டு, விண்வத்துக் கொட்கும் முதலியவற்றை ஒன்றென முடித்தலால் கொள்வர்.

வினைத்தொகையைப் பிரித்துக் காண்டல் கூடாது ஆதலின், செல்வுழி உண்புழி என்பனவற்றைப் பிரித்தல் கூடாது என்பதை, 'அவை வினைத்தொகை என மறுக்க' என்றார். 'வரையார்' என்பதனால் உடம்படு மெய் வரல் வேண்டும் என்பது ஒருதலையன்று எனபதனை உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும்

கொண்டனர். இவ்வாசிரியர் நச்சினார்க்கினியர் உரைத் தனவற்றை எடுத்துக்காட்டுக்களுடன் குறிப்பிடுகிறார். உடம்படுமெய் விதிஉயிரீற்றுக்கும் கொள்ளப்படும் என்ப தற்கு மரவடி மரவாட்டம் என்பன எடுத்துக்காட்டு

மாறன் அலங்கார உரையாசிரியர், சார்வுழி என்பது செல்வுழி என்பதுபோல ஒற்றீறு வகர உடம்படுமெய் பெற்றதாகக் குறிப்பிடுவர். (மாறன் அலங். 47-1 உரை) நன்னூல் விருத்தி உடம்படுமெய் உயிரோடு உயிரை இணைப்பதற்கே வரல் வேண்டும் என்பதை வற்புறுத்தி, 'விண்வத்துக் கோட்கும்' என்புழி வந்த வகரம் உடம்படு மெய் அல்லாத வகரம் என்று குறிப்பிடுகிறது.(நன்.162) இவ்வுடம்படுமெய் பெறுதலையும் இயல்பு புணர்ச்சி யாகவே நன்னூல் விருத்தி குறிப்பிடுகிறது. நன். 182

ஒத்த நூற்பாக்கள் :

'எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்.'

தொல். 140

'இறுதியும் முதலும் உயிர்நிலை வரினே
உறும்என மொழிப உடம்படு மெய்யே.'

தொல். 140 நச். மேற்.

'உடம்படு மெய்யே யகார வகாரம்
உயிர்முதல் மொழிவருஉம் காலை யான.'

தொல். 140 நச். மேற்.

'மூன்றோடு நான்குஒன் பதாம்உயிர் பின்உயிர்
முந்தின்நடு
ஆன்ற யகாரம்வந்து ஆகமம் ஆகும்அல் லா
உயிருக்கு
ஏன்ற வகாரம்எட்டு ஏற்கும் இரண்டும்...... வீ. 13

'மூன்றுநான்கு ஒன்பான் உயிர்ப்பின்னும் அல்லாத
ஆன்ற உயிர்ப்பின்னும் ஆவிவரின்—தோன்றும்

யகர வகரம் இறுதியிடத்து ஓரோர்
மகரங் கெடவகர மாம்.' நே. 13

'இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ் இருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்என்று ஆகும்.'
நன். 162 மு. வீ. பு. 23

'முதல் ஈற்று உயிர்இரு மொழியே சேர்புளி
இ ஈ ஐ ஐஈறு இயையும் யவ்வே
மற்றை உயிர்க்கீழ் வகரம் புணரும்.' தொ. வி. 20

'கோமா முன்வரின் யகரமும் குதிக்கும்.'
மு. வீ. பு. 24 16

பொதுப் புணர்ச்சி

69. எண்மூ எழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்
குறில்வழி ய-தனி ஐ நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிந- திரியும்
மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்.

தொக்குப்புணரும் இயல்பு உணர்த்துவனவற்றுள். இஃது எல்லா ஈற்று எவ்வகைச் சொல் முன்னும் வரும் மென்கணமும் இடைக்கணமும் இருவழியும் முடியும் முடிபு தொகுத்துக் கூறுகின்றது.

இ-ள்: மேல் ஈறாம் என்ற இருபத்துநாலு எழுத்தையும் இறுதியாக உடைய பெயர் வினை இடை உரி என்னும் நான்கு சொல்முன்னும் வரும் ஞகார நகார மகார யகார வகாரங்கள் இயல்பாய் முடியும் என்றும், குற்றெழுத்தின் பின்நின்ற யகரமும் - ஓரெழுத்து ஒரு மொழியான ஐகாரமும் - நொவ்வும்-துவ்வுமான இவற்றின் முன்னர் ஞகர நகர மகரங்கள் இயல்பு ஆதலே

அன்றி மிகுதலும் ஆம் என்றும், ணகரளகர லகர னகரங்களின் பின் வரும் நகரம் திரிந்து முடியும் என்றும், மெல்லெழுத்தினது இயல்பு ஒருகால் இயல்பாயும் ஒருகால் மிக்கும் இவ்வாறு உறழ்ந்து முடியினும் நீக்கார் நல்லறிவான் ஆராயும் பக்கத்து என்றும் கூறுவர் அறிந்தோர் என்றவாறு.

வரையாது கூறினமையின் இம்முடிபுகள் அல்வழி வேற்றுமையாம் இருவழியும் கொள்க.

வரலாறு. விள-பலா - கிளி-தீ - கடு-பூ-ஏஎ-சே_ யனை - ஓஒ-சோ - கௌ - உரிஞ்-மண் - பொருந்-மரம்-பொன்-வேய்-வேர்-வேல்-தெவ்-யாழ்-வாள்-வரகு- என நிறுத்தி, ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை எனவும் வருவித்து அஃறிணைப்பெயர் முன்னும்.

நம்பிஅவன், நங்கைஅவன் என நிறுத்தி, ஞான்றான் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் எனவும், ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் யாவன் வலியன் எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை எனவும் வருவித்து உயர்திணைப் பெயர் முன்னும்.

சாத்தன் கொற்றன் சாத்தி கொற்றி என நிறுத்தி, ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் யாவன் வலியன் எனவும, ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை எனவும் வருவித்து விரவுப் பெயர் முன்னும், இருவழியும் இயல்பாயினவாறு காண்க.

சோவுக்கு ஞொள்கிற்று நீட்டித்தது, ஞொள்கல் நீட்டிப்பு எனவும் ஒட்டுக. பிறவும் பொருள் தருதற்கு ஏற்பன அறிந்து ஒட்டுக.

மலர்ந்த ஞாலம், விரிந்தநூல், உயர்ந்தமலை, வடிந்தயாறு, துரந்தவாளி எனவும் வினைச்சொல் முன்னும்,

நிலன்என நீர்எனத் தீயென வளியென எனவும்,
'கொள்முனை இரவூர்' (குறுந் 91-7) எனவும்.
'கொன்வரல் வாடை' எனவும் இடைச்சொல்
முன்னும்,
'தடமருப்பு எருமை'(நற் 120-1)'கடி நுனைப்பகழி'
'வறிதுவடக்கு இறைஞ்சிய சீர்சால் வெள்ளி'
(பதிற்று. 24-24)
'மல்லல்மார்பு அடுத்தனன் புல்லுமாறு எவனோ'
தெள்ளறல் தழீஇய வார்மணல் அடைகரை'
(அகநா. 34-7)
'பையுள் மாலைப் பழுமரம் படரிய'
(தொல். பொருள். 144 நச். மேற்)

என உரிச்சொல் முன்னும் இயல்பாயினவாறு காண்க.

'ணள லனவழி நத்திரியும்' என்றலின், அத்திரிபு ஈண்டுக் கொள்ளற்க.

உரிஞுஞான்றது பொருநுஞான்றது மண்ணுஞான்றது வேன்ஞான்றது வாண்ஞான்றது மரயாண்டது வேயாது எனநிலை மொழிஈறு விகாரப்படுதல் என்னை என்று கடாவற்க; ஈண்டு வருமொழி இயல்பாம் என்றலின்,

மெய்ஞ்ஞானம் நூல் மாண்டது எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி எனவும். கைஞ்ஞெரிந்தது நீண்டது மறிந்தது எனவும், ஞெரித்தார் நீட்டினார், மறித்தார் எனவும் இருவழியும் மிக்கன.

நொஞ்ஞெள்ளா துஞ்ஞெள்ளா, நாகா-மாடா-இவை வினை ஆகலின் அல்வழிக்கண் மிக்கன. இவை நலிந்து

கூறப்பிறத்தலான், இயல்பாதலே வலியுடைத்து என்பார், 'மிகலும் ஆம்' என்றார்.

நகரத்திரிபு மேல் காட்டுதும்

கதிர்ஞெரி கதிர்ஞ்ஞெரி, இதழ்ஞெரி இதழ்ஞ்ஞெரி, நுனிமுரி எனவும் பூஞெரி பூஞ்ஞெரி எனவும், காய்ஞெரி காய்ஞ்ஞெரி-நுனிமுரி எனவும் உறழ்ந்தன.

உண்மையான் இயல்பாதலே வலியுடைத்து என்க. 'நன்மதிநாட்டத்து' என்றதனாள், இவ்வுறழ்ச்சி முடிபு பெரும்பான்மையும் தொடர்மொழிக்கே எனவும், ஏனை இருமொழிக்கும் சிறுபான்மை யாவும் ஞாவும் முதலாகிய வினைச் சொற்கள் ஒருவினை வந்த தன்மையை ஒக்கும் எனவும் கொள்க.

'அவற்றுள்

மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதி யான' தொ.145

எனவும்,

'ணளஎன் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினை ஓரனைய என்மனார் புலவர்' தொல். 146

எனவும், கூறுப ஆகலின்.

'மண்யாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே'

'மண்ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே'

'பொன்யாத்த தார்ப்புரவி பரிக்குமே'

'பொன்ஞாத்த தார்ப்புரவி பரிக்குமே'

எனவும் வரும்.

இன்னும் இவ்விலேசானே, மலர்ஞான்றது எவ ஞாச் சென்றவழி யாச்செல்லாமையும், யாச் சென்ற வழி

ஞாச் சேறலும் கொள்க. இதுவும் புணரியல் ஒழியாய்க் கருவிப் பாற்படும். 17

விளக்கம் : தொல்காப்பியனார் தொக்குப்புணரும் இயல்பினவற்றைத் தொகைமரபு என்ற தனிஇயலில் குறிப்பிடுகிறார். இவர் இவ்வியலின் தொடக்கத்தில் கூறுவாராயினார்,

எல்லாஈறு—உயிர் 12; மெலி 5; இடை 6; குற்றிய லுகரம் 1—ஆக 24 ஈறுகள்.

மென்கணம்—ஞநம முதலாகிய சொற்கள்.

இடைக்கணம்—யவ முதலாகிய சொற்கள்.

செய்+நன்றி—செய்நன்றி, செய்ந்நன்றி கைநீட்சி—கைநீட்சி, கைந்நீட்சி	இயல்பும் மிகலும்.

நொ+ஞெள்ளா—நொஞெள்ளா, நொஞ்ஞெள்ளா

து+ஞெள்ளா—துஞெள்ளா, துஞ்ஞெள்ளா—இவை இயல்பாகவும் மிக்கும் புணர்ந்தன.

எடுத்துக்காட்டுக்கள் அல்வழி வேற்றுமை என்ற இரு வழிக்கும் தரப்பட்டுள்ளன.

விள ஞான்றது	அஃறிணை—அல்வழி முடிபு.
விள ஞாற்சி	அஃறிணை—வேற்றுமை முடிபு.
நம்பி+ஞான்றான்	உயர்திணை—அல்வழி முடிபு.
நம்பி+ஞாற்சி	உயர்திணை-வேற்றுமை முடிபு.
சாத்தன் ஞான்றான் சாத்தன் ஞான்றது	விரவுப்பெயரின் அல்வழிமுடிபு

சாத்தன் ஞாற்சி-விரவுப்பெயரின் வேற்றுமை முடிபு

சோ-மதில்; ஞொள்கிற்று—இளைத்தது.

மலர்ந்த ஞாலம்—அல்வழி-பெயரெச்சத்தொடர்.

வந்தனர் ஞாட்பின்-அல்வழி-வினைமுற்றுத்தொடர்

நிலனென நீரென—இடைச்சொல்தொடரில்
நகரமுதல் வருமொழி

தீயென வளியென—இடைச்சொல்தொடரில்
வகரமுதல் வருமொழி

கொன்முனை—இடைச்சொல் தொடரில்
மகர முதல்மொழி

நடமருப்பு—உரிச்சொல்தொடர்—மகரமுதல் வருமொழி

கடிநுனை —	,,	ந	,,	,,
வறிதுவடக்கு—	,,	வ	,,	,,
மல்லல்மார்பு—	,,	ம	,,	,,
வார்மணல்—	,,	,,	,,	,,
பையுள்மாலை	,,	,,	,,	,,

நிலைமொழி இறுதி விகாரம் மெய்க்கண்படுநல் மெய்யீற்றுப் புணரியலில் விளக்கப்பெறும் ஆதலின், அதனை ஈண்டுக் கூறல் வேண்டுவதன்று.

மெய்ஞ்ஞானம் } அல்வழி—இருபெயரொட்டுப்
மெய்ந்நூல் } பண்புத்தொகை.

மெய்ம்மாண்டது—அல்வழி எழுவாய்த்தொடர்.

மெய்ஞ்ஞாற்சி—ஆறாம் வேற்றுமைத்தொகை.

நொஞ் ஞெள்ளா—வினைமுற்றுத்தொடர்.

நகரத்திரிபு அடுத்த நூற்பாவில் கூறப்படும். (70)

உறழ்ச்சி பெரும்பாலும் தொடர்மொழிக்கே உரியது

(எ-டு) கதிர்ஞெரி கதிர்ஞ்ஞெரி, சிறுபான்மை ஈரெழுத்து ஓரெழுத்து மொழிகளுக்கும் உறழ்ச்சி முடிபு எய்தும்.

(எ-டு) காய்ஞெரி காய்ஞ்ஞெரி, பூநெரி, பூஞ்ஞெரி 'ஞநமவ என் புள்ளிமுன்' என்ற நூற்பா (தொல். 146) உரையுள் நச்சினார்க்கினியர் உரைத்தனவற்றை இவர்

ஈண்டு 'நன்மதி நாட்டத்து' என்ற மிகையாற்கொண்டு கூறியுள்ளார்.

இக்கருவிமேல் புணரியல் ஒத்துக்களில் பல இடங்களுக்கும் இயல்பு புணர்ச்சி கூறப் பயன்படுதலை அறிக.

இந்நூற்பாவுரையுள் பெயர் பற்றிய எடுத்துக் காட்டுக்கள் யாவும் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் 144-ஆம் நூற்பா உரையிலும், 145-ஆம் நூற்பா உரையிலும் குறிப்பிட்டனவேயாம்,

சிவஞானமுனிவர் 'மெல்லெழுத் தியற்கைஉறழினும் வரையார்' என்பதற்கு முதல் நூற்பாவில் கூறப்பட்ட இயல்பு ஆதலேயன்றி மெல்லெழுத்து மிகுதலும் வரையார் என்று கொள்ளாமல், உம்மையான் இடையெழுத்து இயற்கையும் கொண்டு எடுத்துக்காட்டுக்கள் தந்து தொல்காப்பிய உரையாசிரியர்களையும் இவ்வாசிரியரையும் குறைகூறும் விந்தையை நன்னூல் விருத்தியில் காண்க,

(நன். 158)

ஒத்த நூற்பாக்கள் :

'ஞநமய வஎனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி அனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொல்முன் இயல்பா கும்மே.' தொல். 144

'அவற்றுள்

மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதியான' தொல்.135

'ணனஎன் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினைஓ ரனைய என்மனார் புலவர்.' தொல். 146

'எண்மூ எழுத்துஈற்று எவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்

குறில்வழி ய-தனி ஐநொது முன்மெலி
மிகலு மாம்ணள னலவழி ந-திரியும்.' நன். 158

வருமொழித் தகர நகரத் திரிபு

70. ணளமுன் டணவும் னலமுன் றனவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே.

இது வருமொழித் திரிபு கூறுகின்றது.

இ-ள் ணகர ளகரங்களின் முன்னர்த் தகர நகரங்கள் வரின் டகரணகரங்களாகவும், லகரனகரங்களின் முன்னர் அவைவரின் றகரனகரங்களாகவும் திரிந்து முடியும் ஆராயுங் காலத்து என்றவாறு.

'ஆயுங்காலே' என்றதனால் புணர்வுழி நிரல் நிறை கொள்ளாது நிலைமொழி ஒன்றுடனே வருமொழி இரண்டும் புணரும் எனவும், திரிவுழி நிரல் நிறை வகையானே தகரம் டகரறகரங்களும் நகரம் ணகரனகரங்களு மாய்த் திரியும் எனவும் கொள்க.

வரலாறு : மண்டீது மண்ணன்று முட்டீது முண்ணன்று கற்றீது கன்னன்று பொன்றீது பொன்னன்று என வரும்.

நிலைமொழி ஈற்று லகரளகரங்கள் திரியினும், 'திரிந்ததன் திரிபு அது' என்னும் நயத்தால் வருமொழித் தகர நகரம் திரியும் என்க. 'ணளலன வழிநதிரியும்' என நகரம் அதிகாரப் பட்டமையின் ஒப்புமை பற்றித் தகரத் திரிபும் உடன் கூறினசர். 18

விளக்கம்: சென்ற நூற்பா 'ணளனல வழிநதிரியும்' என்பதன் விளக்கம் ஆதலானும், பலவற்றை உள்ளடக்கி தொகுத்துக் கூறுவது ஆதலானும் மெய்யீற்றுப் புணரியலில் சொல்லவேண்டிய இந்நூற்பா ஈண்டு

வைக்கப் பெற்றது. தொல்காப்பியத்தினும் இக்கருத்துடைய நூற்பாக்கள் தொகை மரபிலேயே உள்ளன. 'ஆயுங்காலெ' என்பதன் விளக்கம்.

ணகரஈற்றின்	முன்வரும்	வருமொழி	தகரம்	டகரம்	ஆகும்
ள	,,	,,	த	ட	,,
ண	,,	,,	ந	ண	,,
ள	,,	,,	ந	ண	,,
ன	,,	,,	த	ற	,,
ல	,,	,,	த	ற	,,
ன	,,	,,	ந	ன	,,
ல	,,	,,	ந	ன	,,

திரிந்ததன் திரிபு அது—நிலைமொழியின் திரிந்த ஈற்றையும் இயற்கை ஈறாகவேகொண்டு வருமொழியொடு புணர்த்தற்கு உரிய அமைப்பு.

முள்+நன்று—முண்ணன்று.

திரிந்தது—முள்; அதன் திரிபு முண்; முண் என்பதனையும், முள் என்பது போலவே கொண்டு வருமொழித்திரிபு கொள்க என்பதாம்.

ஈண்டு அதிகாரப்பட்டது நகரம்; தகரம் அதன் இன எழுத்து ஆதலின், ஒப்புமை பற்றி உடன் கூறப்பட்டது.

ஒத்த நூற்பாக்கள் :

'லனஎன வரூஉம் புள்ளி முன்னர்த்
தந எனவரின் றனஆ கும்மே.' தொல். 149

'ணள என் புள்ளிமுன் டணஎனத் தோன்றும்.,
தொல். 150

'ஆறாம் உடலின் பின் தவ்வரின் ஆங்கதுஐந்
தாம்உட
லாண்ம்; கூறார்ந்த நவ்வரின் முன்பினது ஆம்' வீ.1

'வன்மை வரினே ளணலன மாண்டறவாம்
மென்மை வரினே னலணளவாம்—தந்நக்கன்
முன்பின்னாம் தப்பினண இயல்பாந் தட்டறவாம்
ஒன்றழிந்து போதலு முண்டு.' நே 17

'ஐந்து ஆறுஆம் ஆறு பதினாறாம் ஒற்றுஆகும்
வந்துறழும் அன்ன வயனலக்கள்—சந்திகளின்.'
நே 24

'லளமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே.' நன் 239

'ணாடண வாம்னல றனவாம் தநவரின்.'
மு. வீ. பு. 31

விரவுப்பெயர், உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி

71. பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம் அவற்று ஈற்று உயிர்முன் வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை.

இஃது ஒற்றுஈற்று விரவுப் பெயரும் உயர்திணைப் பெயரும் வன்கணத்தொடு புணருமாறும் வன்கணம் உயிர்ஈற்று அவ்விரு பெயரொடும் புணருமாறும் கூறுகின்றது.

இ-ள்: பொதுப்பெயர் ஈற்றின்கண்ணும் உயர் திணைப் பெயர் ஈற்றின்கண்ணும் நின்ற ஒற்றுக்கள் வல்லின முதல்மொழி வரின் இயல்பாய் முடியும். அவ் விருபெயர் ஈற்றின்கண்ணும் நின்ற உயிர்முன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாது இயல்பாய் முடியும். அவ்வா றன்றி உயர்திணைப் பெயருள் சில பெயர் விகாரம் ஆகியும் முடியும் என்றவாறு.

இறந்தது தழீஇய எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. வரைந்து கூறாமையின் இரு வழியும்

கொள்க. 'ஈற்றுமெய்' என்றும் 'முன்' என்றும் பகுத்து ஓதியது.யாண்டும் நிலைமொழிவருமொழிச் செய்கைகள் தெரிந்து அறிந்து கோடற்கு எனக் கொள்க.

எ-டு; சாத்தன் கொற்றன் எனவும் சாத்தி கொற்றி எனவும் நிறுத்திக் குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், குறிது சிறிது தீது பெரிது எனவும், கை செவி தலை புறம் எனவும் ஏற்பன வருவித்து இருவழியும் விரவுப்பெயர் ஈற்றுமெய் வன்மைவர இயல்பாயவாறும், அவ்வுயிர் ஈற்றுப்பெயர் முன் வருமொழி வல்லெழுத்து மிகாதவாறும் காண்க.

அவன் நமன் ஆய் அவர் அவள் எனவும் நம்பி விடலை தோழி நங்கை எனவும் நிறுத்தி, குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், கை செவி தலை புறம் எனவும் ஏற்பன வருவித்து இருவழியும் உயர்திணைப்பெயர் ஈற்று மெய் வன்மை வர இயல்பாயவாறும், அவ்வுயிர் ஈற்றுப்பெயர் முன் வருமொழி வல்லெழுத்து மிகாதவாறும் காண்க. பிறவும் அன்ன.

பார்ப்பனக்கன்னி சேரி பிள்ளை தோட்டம் என ஈற்று அயல் குறுகி அகரச்சாரியை பெற்று வருமொழி வல்லெழுத்து மிக்கும்.

கபிலபரணர் என ஈறுகெட்டு வருமொழி
வல்லெழுத்து இயல்பாயும்.
பல் சங்கத்தார் பல் சான்றோர் என ரகர ஈறும்
அதன் அயல் நின்ற அகரமும் கெட்டு ஈற்று மெய்
இயல்பாயும்,
ஆசீவகப்பள்ளி, நிக்கந்நக்கோட்டம் ஈழவக்கத்தி
வாணிகத்தெரு அரசக்கன்னி வேட்டுவக் குமரி

கோலிகக் கருவி வண்ணாரப் பெண்டிர் என ஈறு
கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கும்,

குமரகோட்டம் குமரக்கோட்டம், பிரமகோட்டம்
வாசுதேவகோட்டம் வாசுதேவக்கோட்டம் என ஈறு
கெட்டு வருமொழி வல்லெழுத்து உறழ்ந்தும்,

ஆடூஉக்குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும்,

மகடூஉக்குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும்,

வேற்றுமைக்கண் ஆடூஉக்கை மகடூஉக்கை செவி
தலை புறம் எனவும்,

எட்டிப்பூ காவிதிப்பூ நம்பிப்பூ நம்பிப்பேறு எனவும்,
நம்பிக்கொல்லன் நம்பிச்சான்றோன் நம்பித்துணை
நம்பிப்பிள்ளை செட்டிக்கூத்தன் சாத்தன் தேவன்
பூதன் எனவும்,

நங்கைப்பெண் நங்கைச்சானி எனவும்

உயர்திணைப் பெயருள் சில விகாரம் ஏற்றவாறு காண்க. பிறவும் அன்ன. எட்டி காவிதி என்பன தேயவழக்காகிய சிறப்புப்பெயர், எட்டி மரம் அன்று. அஃது 'எட்டிக் குமரன் இருந்தோன் தன்னை' (மணி. 4-58) என்பதனான் உணர்க, இவை எட்டியது பூ எட்டுக்குப்பூ, காவிதியது பூ என முடியும்.

'ஈற்று மெய் இயல்பாம்' எனவே, வருமொழி வல்லெழுத்துச் சாத்தன் குறியன் குறிது-தாய் குறியள் குறிது-நீர்குறியீர் - எனவும்.

அவன் குறியன் அவள் குறியள் அவர் குறியர் என இயல்பாயும்; மகன் தாய்க்கலாம் செரு-துறத்தல்-பகைத்தல்-மன நிலைமொழிக்கு அடையாய் முன் வந்த மகனது பகைவினையைப் பின்னாக ஒருவன் கூறுமிடத்து மிக்கும் தமக்கு எற்ற பெற்றி முடியும் எனக் கொள்க.

மகள் தாய்க்கலாம் என்பது மகன் தாயொடு கலாய்த்த கலாம் என விரியும். ஏனையவற்றிற்கும் ஏற்பன உருபு விரிக்க.

தோன்றறீயன் அவன்றீயன் ஆண்டீயன் பெண்டீயள் வேடீயன் அவடீயன் தீமை என வருமொழித் தகரம் திரிந்தன மேலைச்சூத்திரத் தான் முடிந்தன.

பொதுப் பெயர் உயர்திணைப் பெயர் என்ற முறையல கூற்றானே, உயர்திணை வினைச்சொல்லும் இவ்வாறே இயல்பாய் முடியும் எனக் கொள்க.

வரலாறு: உண்டான் உறங்கினான் எனவும் உண்டாள் உறங்கினாள் எனவும் உண்ப ஓதுப எனவும் நிறுத்திக் கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும், கொற்றி சாத்தி தெரிவை பெதும்பை எனவும், கற்றார் சான்றார் தக்கார் பார்ப்பார் எனவும் ஏற்பன வருவித்துக் காண்க. பிறவும் அன்ன,

இன்னும் இம்முறையல கூற்றானே விரவுப் பெயர் உயர்திணைப்பெயர் உயர்திணைவினை என்னும் இவற்றின் முடிபு வேறுபாடு எல்லாம் மேல் முடித்தும். அஃது ஆங்காங்கு உணர்க. 19

விளக்கம்: இறந்தது தழீஇய எச்ச உம்மை—சில விகாரமுமாம் உயர்திணை என்பது. இயல்பாதலேயன்றி விகாரமுமாம் என்றலின் இறந்தது தழீஇயிற்று. இயல் பாதல் 'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்று மெய்—வலிவரின் இயல்பாம்' என்ற இந்நூற்பாவின் முற்பகுதி.

24 ஈறும் இயல்பாம் என்னாது, 'ஈற்றுமெய் இயல்பாம்' எனவும், 'ஈற்றுமுன் வன்மைமிகா' எனவும் இயல்பு ஒன்றனையே புள்ளியீறும் உயிரீறுமாகப் பகுத்துக் கூறியது புணர்ச்சி வேறுபாடுகள் எல்லா வற்றையும் உணர்தற்கு என்பது,

சாத்தன் குறியன் போல்வன பொதுப்பெயர் அல்வழி முடிபு.

சாத்தன்கை போல்வன பொதுப்பெயர் வேற்றுமை முடிபு.

அவன் குறியன் போல்வன உயர்திணைப் பெயர் அல்வழி முடிபு

அவன்கை போல்வன உயர்திணைப் பெயர் வேற்றுமை முடிபு.

பார்ப்பான் + அ + கன்னி—பார்ப்பனக் கன்னி என ஈற்றயல் ஆகாரம் பார்ப்பன் எனக்குறுகி அகரச்சாரியை பெற்றுப் பார்ப்பன என்றாகிப்பின் வருமொழி வல்லெழுத்து மிக்குப் பார்ப்பனக் கன்னி என்றாயிற்று. பிறவும் அன்ன.

கபிலன் + பரணன்—கபிலபரணர்; 'உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே' நன். 372 ஆதலின், பரணர் என ரகர ஈற்றதாகிக் கபிலன் என்பதன் நிலைமொழி னகரம் கெட்டு இயல்பாகக் கபிலபரணர் எனப் புணர்ந்தது.

பலர் + சங்கத்தார் — பல்சங்கத்தார்—பலர் என்ற சொல்லின் இறுதி ரகர ஒற்றும் ஈற்றயல் அகரமும் கெடப்பல் என்றாகிச் சங்கத்தார் என்ற வருமொழியொடு இயல்பாகப் புணர்ந்தது. சங்கத்தார் என்பது உயர்திணைச்சொல் ஆதலின், அதனொடு புணரும் நிலைமொழியும் உயர்திணைச்சொல் ஆதல் வேண்டுதலின் பல என்ற அஃறிணைப்பலவின்பாற் சொல் நிலைமொழியாக இருத்தற்கு ஏலாமை அறிக. பலர்+சான்றோர் என்பதும் பல்சான்றோர் என இப்புணர்ச்சி முடிபே கோடல் காண்க.

ஆசீவகன் + பள்ளி — ஆசீவகப்பள்ளி
நிக்கந்தன் + கோட்டம் — நிக்கந்தக் கோட்டம்

ஈழவன்	+கத்தி	—ஈழவக் கத்தி
வாணிகர்	+தெரு	—வாணிகத் தெரு
அரசர்	+கன்னி	— அரசக் கன்னி
வேட்டுவர்	+குமரி	—வேட்டுவக் குமரி
கோலிகர்	+கருவி	—கோலிகக் கருவி
வண்ணாரம்	+பெண்டிர்	—வண்ணாரப் பெண்டிர்.

இவை நிலைமொழி ஈற்றெழுத்துக் கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கன. இவற்றுள் அரசக் கன்னி என்ற தொடரில் இரண்டும் உயர்திணைச் சொல். வண்ணாரப் பெண்டிர் என்ற தொடரில் பெண்டிர் என்ற முன்மொழி உயர்திணை. ஏனைய தொடர்களில் பின்மொழி உயர்திணை என்பது காண்க.

குமரன் + கோட்டம் — குமர கோட்டம், குமரக் கோட்டம் ஈறுகெட்டு வருமொழி வல்லெழுத்து உறழ்ந்தது. பிறவும் அன்ன. இந்த எடுத்துக்காட்டுக்களிற் பெரும்பாலன

'உயிர்ஈறு ஆகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்புஎன மொழிப' தொல். 153

என்ற நூற்பா உரையுள் நச்சினார்க்கினியரால் கொடுக்கப் பெற்றனவே.

ஆடூஉ+குறியன்—ஆடூஉக்குறியன் என வருமொழி வல்லெழுத்து மிக்கது. இவை போல்வனவற்றை,

'வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங்காலை அவ்வகை வரையார்' தொல். 265

என்ற நூற்பாவின் 'நினையுங் காலை' என்ற மிகையால் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.

ஆடூஉ+கை—ஆடூஉக்கை என வருமொழி வல்லெழுத்து மிக்கது. இவை போன்ற வேற்றுமை முடிபினைக்

'குற்றெழுத்து இம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி' தொல். 267

என்ற நூற்பாவின் 'நிற்றல் வேண்டும்' என்ற மிகையான் அவர் விளக்கிப் புணர்த்துக் கூறியுள்ளார்.

எட்டி+பூ - எட்டிப்பூ; எட்டியது பூ என்று பொருள் படும் வேற்றுமைத்தொடர். நம்பி+செல்வன்—நம்பிச் செல்வன்; இருபெயர் ஒட்டுப்பண்புத்தொகை. இவை போன்ற வேற்றுமை அல்வழித்தொடர்களையும், நங்கை+பெண் — நங்கைப் பெண் போன்ற அல்வழித் தொடர்களையும்,

'அவற்றுள், இகர இறுபெயர் திரிபு இடன்
உடைத்தே' தொல். 154

என்ற நூற்பாவானும் 'இடனுடைத்து' என்ற மிகையானும் கொண்டு நச்சினார்க்கினியர் உரைத்தயாவும், இகரஐகார ஈற்று உயர்திணைப் பெயர்களின் புணர்ச்சித் திரிபாக இவரால் குறிக்கப்பட்டுள்ளன. எட்டி என்பதற்கு அவர் தந்த விளக்கமும் இவ்வுரையுள் இடம்பெற்றுள்ளது

'சிறப்பி னாகிய பெயர் நிலைக் கிளவிக்கும்
இயற் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்'
தொல். சொல். 41

ஆதலின் சிறப்பும் பெயராகிய எட்டிகாவிதி முதலியன முன்னரும் இயற்பெயர் பின்னரும வைத்துப் புணர்க்கப் படும் என்பது 'எட்டிக் குமரன்' என்ற தொடரால் விளக்கப்படுகிறது. இத்தகைய பட்டம் பெற்றவருக்குப் பொற்பூ வழங்குவது பண்டை மரபு.

உ

அவன் குறியன் முதலிய தொடர்களை 'உயிர் ஈறாகிய, என்ற தொல்காப்பிய 153 ஆம் நூற்பா உரையிலும். சாத்தன் குறியன் முதலிய தொடர்களை அஃறிணை விரவுப் பெயர் இயல்புமார் உளவே' என்ற

155ஆம் நூற்பா உரையிலும் நச்சினார்க்கினியர் சுட்டியுள்ளார்.

'யகர இறுதி வேற்றுமைப் பொருள வரின்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே'
தொல். 357

'தாய்என் கிளவி இயற்கை ஆகும்.' தொல். 358

'மகன்வினை கிளப்பின் முதல்நிலை இயற்றே.'
தொல். 359

என்ற நூற்பாக்களான் மகன் + தாய் + கலாம் என்பன மகன் தாய்க்கலாம் என இடையே வல்லொற்றுமிக்குப் புணர்ந்தன. தொல்காப்பியத்து 359ஆம் நூற்பாவில் நச்சினார்க்கினியர் உரைத்த யாவும் ஈண்டுத்தரப் பெற்றுள்ளன.

தோன்றல்+தீயன்—தோன்றறீயன்— இத்தொடர் போல்வனவற்றில் நிலைமொழி ஈறு கெடுதல் 'குறில் செறியாலள' இ வி 139 என்ற நூற்பாவானும், வருமொழிமுதல் திரிதல் 'ணளமுன் டணவும்' இ வி 70 என்ற நூற்பாவானும் கொள்ளப்படும்.

இதுவரை அல்வழிப்புணர்ச்சிக்குப் பெரும்பாலும் எழுவாய்த் தொடரையே காட்டி, இனி வினை முற்றுத் தொடரை மிகையால் கொள்கிறார்.

முடிவு வேறுபாடுகள் னகாரஈறு முதலியவற்றில் கூறப்படும்.

இலக்கண விளக்கச் சூறாவளி

நிலை மொழிச் செய்கையாய்த் திரிதற்கு உரிய எழுத்துக்கள் திரியாது இயல்பாதலும் வருமொழிச் செய்கையாய் மிகுதற்கு உரிய எழுத்துக்கள் மிகாது இயல்பாதலும் கருதி அன்றே 'ஈற்று மெய் இயல்பாம்'

என்றும் 'வன்மை மிகா' என்றும் பகுத்து ஓதினார். அவ்வாறே யரழக்கள் மூன்றும் உயிர்போல வருமொழிச் செய்கையாய் வன்மை மிகுதற்கு உரியன அன்றி ஏனை மெய்போல நிலை மொழிச்செய்கையாய்த்திரிதற்கு உரியன அன்மையின் அவற்றுள் ழகரம் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கட்கு ஈறு ஆகாமையின் ஈறாவன வான ஏனை இரண்டனையும் உயிரொடு சேர்த்து வரு மொழிச் செய்கை இயல்பாம் என்னாது, ஏனைமெய் களோடு ஒப்பவைத்து இயல்பாம்என்றல் பொருந்தாமை அறிக அக்கருத்துக் கொள்ளாக்கால், ஈற்றுமெய்முன் மிகா எனவும் அவற்று ஈற்று உயிர் இயல்பாம் எனவும் மாறிக் கூறினும் பொருந்தும் எனப்பட்டு வழுவாமாறு அறிக.

அமைதி

தொல்காப்பியனார் 'உயிர் ஈறாகிய' தொல், 153 'அவற்றுள்,இகர இறுபெயர்' தொல். 154 'அஃறிணை விரவுப்பெயர்' தொல். 155 என்ற நூற்பாக்களில் ஓதிம வற்றை உட்கொண்டு நூற்பாச் செய்து உரைவகுத்த இவ்வாசிரியர் தொல்காப்பியனார் மரபையே ஒட்டிப் போந்துள்ளமையின் நன்னூலைக் காட்டி அதனைப் போலவே இவர் நூற்பா அமைதல் வேண்டும் என்று கூறுவது ஏற்பதன்று. நூற்பாவின் கருத்து மிகத் தெளி வாக இருப்பதால் அதன்கண் சிக்கல்களை வருவித்து விடுத்தல் வேண்டா என்க.

ஒத்த நூற்பாக்கள் :

'உயிர்ஈறு ஆகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்புஎன மொழிப.' தொல்.153

'அவற்றுள்
இகர இறுபெயர் திரிபுஇடன் உடைத்தே.'
தொல். 154

'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே'
தொல். 155

'பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை,'
நன். 159

'இருவழி யினும்உடல் உயிரையும் இறுதியாம்
உயர்திணை முனர்எலாம் உறஇயல் பாகும்.'
மு. வீ. பு. 38

'இருமைக் கும்பொது இயல்பா தலும் உள.'
மு. வீ. பு. 35

விளிப்பெயர்ப் புணர்ச்சி

72. விளிநிலைக் கிளவியும் அவற்றோ ரன்ன.

இது விளிப்பெயர் வன்கணத்தொடு புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: விளியாய் நிற்றலை உடைய உயிர்ஈறும் ஒற்று ஈறும் ஆகிய உயர்திணைப்பெயரும் விரவுப் பெயரும், உயிரும் புள்ளியும் இறுதி ஆகிய உயர்திணை இயற்பெயரும் விரவுத்திணை இயற்பெயரும் போல உயிர் ஈற்று முன் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து இயல்பாயும், அங்ஙனம் இயல்பு ஆதலே அன்றிச் சில விகாரம் ஆகியும் முடியும் என்றவாறு.

'நிலை' என்ற மிகையானே, இவ்விரு ஈற்று அஃறிணை விளிப்பெயரும் அவைபோல இயல்புஆகியும் ுபான்மை விகாரம் ஆகியும் முடியும் எனக் கொள்க.

வரலாறு: ஊர ஊரா தம்பி நம்பீ வேந்து வேந்தே நங்கை எனவும், நம்பன் நங்காய் கடவுள் ஏந்தல் மாந்தர் எனவும் நிறுத்திக் கூறாய் சொல்லாய் தாராய் போதாய் எனவும், கூறீர் சொல்லீர் தாரீர் போதீர் எனவும் ஏற்பன வருவித்து உயர்திணை விளிப்பெயர் இயல்பாயவாறும்.

சாத்த சாத்தா சாத்தி சாத்தீ பூண்டு பூண்டே தந்தை எனவும், ஆண் பெண் சாத்தன் தூங்கல் தாய் மகள் எனவும் நிறுத்திக் கூறாய் சொல்லாய் தாராய் போதாய் என வருவித்து விரவுத்திணை விளிப்பெயர் இயல்பு ஆயவாறும்,

தும்பி தும்பீ வண்டு வண்டே வாடை எனவும்.
கண் அலவன் பேய் சூர் வேல் யாழ் வாள் எனவும்,
நிறுத்திக் கொடியை சிறியை தீயை பெரியை என வருவித்து
அஃறிணை விளிப்பெயர் இயல்பு ஆயவாறும்,
ஆடுஉக் கூறாய் மகடூஉக் கூறாய் எனவும்,
பிணாக் கூறாய் அழிதூக் கூறாய் எனவும்,
துங்கறீயை மகடீயை எனவும்,
விளக்கொடியை புறாக் கொடியை மூசுக்கொடியை எனவும்.
கற்றீயை முஃடீயை கடறீயை நெஞ்சுடீயை.
மனக்கொடியை எனவும்,

மூவகை விளிப்பெயரும் விகாரஞ் ஏற்றவாறும் காண்க. பிறவும் அன்ன.

திரிந்தும் கெட்டும் தோன்றியும் இயல்பாயும் அயல் திரித்தும் விளிஏற்று நிற்பது ஒன்று ஆதலின், இயற் பெயர் மாத்திரையாய் நிற்பனவற்றுள் அடங்காமையின் இவற்றை 'விளிநிலைக் கிளவியும் அவற்றோ ரன்ன' என அவற்றொடு மாட்டெறிந்தார் என்க.

விளக்கம் : விளியாய் நிற்பன இயல்பாகிய ஈறாக வும் விதியீறாகவும் அமைதல் கூடும் ஆதலின், விளிப் பெயர்கள் தனியே கூறப்பட்டன. மாட்டேறு உயர் திணைப் பெயர்க்கும் விரவுப் பெயருக்குமே அமைதலின் அஃறிணைப் பெயர்கள் 'நிலை' என்ற மிகையால் கொள்ளப்பட்டன.

உயர்திணைப் பெயருள் விளி ஏற்கும் ஈறுகள் இ உ ஐ ஓ என்ற உயிர் ஈறு நான்கும், ன ள ர ல என்ற புள்ளியீறு நான்குமாம். அவற்றுள் 'ஐ ஆய் ஆகும்'

(தொல். சொல், 1-1 சேனா)

ஆதலின், நங்காய் என்ற விதி யகரஈறும் கொள்ளப் பட்டது. 'அன் என் இறுதி ஆ ஆகும்மே'

தொல். சொல். 130

'அண்மைச் சொல்லிற்கு அகரம் ஆகும்'

தொல் சொல். 131

ஆதலின், ஊரன் என்ற இயற்பெயர் ஊரா எனவும், ஊர எனவும் திரிந்து விளி ஏற்றது.

'இ ஈ ஆகும்' தொல். சொல். 121 எனவே நம்பி, நம்பீ எனத் திரிந்தும் விளி ஏற்றது.

'ஒவும் உவ்வும் ஏயொடு சிவணும்'

தொல் சொல். 122 ஆதலின்

வேந்து வேந்தே எனத் திரிந்து விளி ஏற்றது.
ஊரமுதல் ஏந்தல் ஈறாகிய நிலை மொழிகளுக்குக் கூறாய் முதலிய வருமொழிகளையும்.மாந்தர்என்பதற்கு கூறீர் முதலிய வருமொழிகளையும் கொள்க.

'புள்ளியும் உயிரும் இறுதி ஆகி
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்'

தொல், சொல். 151

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் ஈறுகளை விதவாமல் கூறலின்

'கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்,
அஃறிணை மருங்கினும் அறையப்படும்'

நன். 409 புலனெறி

வழக்கிற்கு ஏற்ப, அஃறிணைக்கண் இ ஈ உ ஏ ஐ என்ற உயிர் ஈறுகளும் ன ண ய ர ல ழ ள என்ற புள்ளி யீறுகளும் கொள்ளப்பட்டன.

ஆடூஉ மகடூஉ மிகுதற்கும், ஏந்தல் கடவுள் திரிதற்கும் அமைந்த ஈற்றவாய உயர்திணைச் சொற்களாம்.

ஆடூஉ கூறாய் என இயல்பாயும் ஆடூஉவே கூறாய் எனப் பிறிது வந்தும் விளியேற்றமை தொல். சொல். 126 நச்சினார்க்கினியர் உரையில் காணப்படுகிறது.

பிணா அழிதூ மிகுதற்கும், தூங்கல் மகள் என்பன திரிதற்கும் அமைந்த ஈற்றவாய விரவுத்திணைச் சொற்களாம், விள புறா முசு என்பன மிகுதற்கும், கல் மூள் கடல் நெஞ்சுள் மனம் என்பன திரிதற்கும் அமைந்த ஈற்றவாய அஃறிணைச் சொற்களாம்.

விளி ஏற்குங்கால் திரிதல் கெடுதல் தோன்றல் என்ற மூவகை விகாரமும் இயல்பும் உண்டு ஆதலின், இவற்றை இயல்பாய் நிற்கும் இயற்கைப் பெயருள் அடங்காது இயற்பெயரொடு மாட்டெறிந்து விளக்கினார் என்க.

ஒத்த நூற்பா :

'ஈற்றுயாவினா விளிப்பெயர் முன்வலி இயல்பே.'

நன். 160

முன்னிலை வினைச்சொல் வன்கணத்தோடு புணர்தல்

78. உயிரும் புள்ளியும் இறுதி ஆகிய
முன்னிலை வினையே ஏவல் என்றிவை
இயல்பு ஆகுநவும் உறழ் ஆகுநவும் என்று
ஆயீர் இயல வல்லெழுத்து வரினே.

இது முன்நின்றான் தொழில் உணர்த்துவனவும் அவனைத் தொழில் கடுத்துவனவும் ஆகிய முன்னிலை

விரவு வினைச்சொற்கள் வன்கணத்தொடு முடியும் முடிபு கூறுகின்றது.

இ-ள் : உயிரும் ஒற்றும் ஈறாக வந்த முன்னிலை வினையும் ஏவல் வினையும் என்ற இம்மொழிகள் இயல்பாய் முடிவனவும் உறழ்ந்து முடிவனவும் என இவ்விரண்டு இயல்பினை உடைய, வல்லெழுத்து முதலாகிய மொழிவரின் என்றவாறு.

வரலாறு : உண்டி தின்றி உண்டனை தின்றனை உண்டாய் தின்றாய் - கொற்றா சாத்தா தேவா பூதா எனவும், உண்டனிர் தின்றனிர் - கொற்றரே சாத்தரே தேவரே பூதரே எனவும் இவை முன்னிலைவினை இயல்பாயின. உறழ்ச்சி வந்துழிக் காண்க.

கொணா ஏறி விடு உண் தின் - கொற்றா சாத்தா தேவா பூதா எனவும் உண்மின் தின்மின் - கொற்றரே சாத்தரே தேவரே பூதரே எனவும் ஏவல்வினை இயல்பாயின.

நடகொற்றா நடக்கொற்றா ஈர்கொற்றா ஈர்க் கொற்றா சாத்தா தேவா பூதா என ஏவல் வினை உறழ்ந்தன. பிறவும் வந்துழிக் காண்க.

நில் கொற்றா நிற்கொற்றா எனத் திரியாதும் திரிந்தும் உறழ்ந்தனவும் உறழ் ஆகுநவும்' எனனும் பொது விதியான் முடிக்க.

விளக்கம்: முன்நின்றான் தொழில் உணர்த்துவன முன்நின்றானைத் தொழில் படுத்துவன என நச்சினார்க் கினியர் முன்னிலையை இருவகையாகப் பிரித்ததை (தொல். 151 உரை) இவ்வாசிரியரும் உட்கொண்டுள்ளார். தெளிவு குறித்து முன் நின்றான் தொழில் உணர்த்துவனவற்றை முன்னிலை வினை என்றும், முன் நின்றானைத் தொழிற்படுத்துவனவற்றை ஏவல்வினை என்றும் இக்காலத்துக் கொள்ளுகிறோம்.

இ ஐ ஆய் இர் ஈர் என்பன முன்நின்றான் தொழில் உணர்த்துவன, நடவா முதலியனவும் மின் ஈறும் தொழிற்படுத்துவன. தொல். 151ஆம் நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் உரைத்தனவற்றில் பெரும்பாலன வற்றை இவர் ஈண்டுச் சுட்டியுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'உயிர் ஈறாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பு ஆகுநவும் உறழ்ஆ குநவும் என்று
ஆயீர் இயல வல்லெழுத்து வரினே.' தொல். 151

'ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே.'
நன். 161

சிலவற்றிற்கு வேறு முடிபு

71. ஒளஎன வருஉம் உயிர்இறு சொல்லும்
ஞநமவ என்னும் புள்ளி இறுதியும்
குற்றியல் இகரத்து இறுதி உளப்பட
முற்றத் தோன்றா முன்னைய முடிபே
உகரம் பெறாஉம் ஆவயி னான.

இஃது ஒரு சாரனவற்றிற்கு எய்தியது விலக்கி எய்தாதது எய்துவிக்கின்றது.

இ-ள்: ஒள என வருகின்ற உயிர்ஈற்றுச் சொல்லும் ஞநமவ என்று சொல்லப்படும் புள்ளியீற்றுச் சொல்லும் குற்றியலுகரத்தை இறுதியிலே உடைய சொல்லும் கூட முன்னர்க்கூறிய இயல்பும் உறழ்ச்சியும் ஆகிய முடிவு முற்றத் தோன்ற முடியா. நிலைமொழி ஈறு உகரம் பெற்று உறழ்ந்து முடியும் என்றவாறு.

ஏற்புழிக் கோடலான்,ஈண்டுச் சேரல் என்றது ஏவல் வினை மேற்று ஆயிற்று.

எ-டு: கெள்வு கொற்றா கெளவுக் கொற்றா வெள்வு கொற்றா வெள்வுக் கொற்றா உரிஞு கொற்றா உரிஞுக் கொற்றா பொருநு கொற்றா பொருநுக் கொற்றா திருமு கொற்றா திருமுக் கொற்றா செவ்வு கொற்றா கூட்டு கொற்றா கூட்டுக் கொற்றா சாத்தா தேவா பூதா என வரும்.

ஒற்றென முடித்தலான், துக்கொற்றா நொக்கொற்றா கைதூக்கொற்றா சாத்தா தேவா பூதா என இவ்வுயிர் ஈற்று ஏவல் வினைச்சொற்கள் மிக்கே முடிதலும், மண்ணு கொற்றா மண்ணுக் கொற்றா பன்னு கொற்றா பன்னுக் கொற்றா சொல்லு கொற்றா சொல்லுக் கொற்றா உள்ளு கொற்றா உள்ளுக் கொற்றா சாத்தா தேவா பூதா என இப்புள்ளி ஈற்று ஏவல் வினைச்சொற்கள் உகரம் பெற்று உறழ்ந்து முடிதலும் கொள்க. 22

விளக்கம்: எய்தியது—இயல்பும் உறழ்வும் ஆகிய நிலை. விலக்குதல்—அம்முடிபை நீக்குதல். எய்தாதது எய்துவித்தல்—உகரப்பேறு தருதல்.

இங்கு முன்னிலை வகை இரண்டனுள், முன் நின்றானைச் செயல்படுத்துவதாகிய ஏவல்வினையையே கொண்டார் தொல்காப்பியனார். இவ் வீறுகள் முன்னிலை வினைக்கண் வாரா என்று விலக்கினமையின் குற்றியலுகரம் ஏவல் வினைக்கு இறுதியாக வாராது என்பதும் ஆண்டு இறுதியில் வருவது முற்றியலுகரமே என்பதும் கொள்ளப்படும். 'இக்குளத்தைப் பெருக்கு' என்புழிப் பெருக்கு என்பதன் இறுதி முற்றியலுகரம் ஆதல் காண்க.

ஒன்றென முடித்தலால் உகர ஊகார ஒகர ஈற்று ஏவல் வினைகள் மிக்கே முடிதல் கொள்ளப்படும்; ணகர னகர லகர ளகர ஈற்றுச் சொற்கள் உறழ்ந்து முடிதலும் கொள்ளப்படுகின்றது.

இலக்கண விளக்கச் சூறாவளி

இச் சூத்திரத்தில் கூறிய எழுத்துக்களை ஈறாக உடைய சொற்கள் முன்னிலை வினைக்கு இன்மையான் அதன் கண் ஐயம் இன்மையின் முன்னிலை வினையை விலக்குதல் வேண்டா. "இவ்விற்றுத் தொழிற் பெயர் உண்மையின் அதனை விலக்குதல் வேண்டுமாயின், சொல் 'என்பது ஏவல் வினை எனவே அமையும். அவ்வாறு கூறாது ஒரு மொழியே ஓசை வேறுபாட்டால் பிறிது பொருளை உணர்த்தும் என மயங்கி ஏற்புழிக் கோடலான் ஈண்டு ஏவல் வினை மேற்று ஆயிற்று எனப் பழுது படக் கூறினார்.

அமைதி

முன்னிலை என்பது பொதுவான 'முன் நின்றான் செயல் உணர்த்துவதும் அவனைச் செயல்படுத்துவதும் ஆகிய இரு நிலைமையும் உடைத்து ஆதலின், ஏவல் வினையே ஈண்டுக் கொள்ளப்படுவது என்று விளக்குதல் இன்றியமையாததாகிறது. தொல்காப்பியனார் 'முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே' 152 எனப் பொதுவாகக் கூறியது காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'ஔ என வரூஉம் உயிர் இறு சொல்லும்
ஞநம யவ எனும் புள்ளி இறுதியும்
குற்றிய லுகரத்து இறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.

தொல். 152

'ஔ இறு ஞநமவ இறுதியும் உகர
முற்றுகரம் முன்னிலை உறழ்தலும் விதியாகும்.'

மு. வீ. பு 32

இரண்டாம் வேற்றுமை முடிபு வேறுபாடு

75. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்
சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை உள்வழித் தன்உருபு நிலையலும்
சாரியை இயற்கை உறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல்
நிலையலும்
மெய் பிறிது ஆகிடத்து இயற்கை ஆதலும்
அன்ன பிறவும் தன் இயல் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரை நந்து
இசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபு என மொழிப.

இதுமேல் உயிர் ஈற்றிற்கும் புள்ளி ஈற்றிற்கும் வேற்றுமைக்கண் கூறும் முடிபு பெறாது நிற்கும் இரண்டாம் வேற்றுமை முடிபு வேறுபாடு தொகுத்து உணர்த்துகின்றது.

இ-ள்: விளங்குறைந்தான் என(83)மெல்லெழுத்து மிகும்இடத்து விளக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுதலும்.

மரக்குறைத்தான் என (83, 129) வல்லெழுத்து மிகும் இடத்து மரங்குறைத்தான் என மெல்லெழுத்து மிகுதலும், தாய் கொலை என 71 இயல்பாய் வரும் இடத்துத் தாய்க் கொலை என மிகுதலும்.

பலா அக்குறைத்தான் தழூஉக் கொணர்ந்தான் ஏஎக் கட்டினான் என (158) உயிர் மிக வரும் இடத்துப் பலாக் குறைத்தாள் தழூக்கொணர்ந்தான் ஏக்கட்டினான் என உயிர் கெட வருதலும்,

வண்டின் கொணர்ந்தான் எனச் சாரியைப் பேறு உள்ள இடத்து (149) வண்டு கொணர்ந்தான் எனச் சாரியை கெட்டு நிற்றலும்,

வண்டின் கொணர்ந்தான் எனச் சாரியைப் பேறு உள்ள இடத்து (149) வண்டினைக் கொணர்ந்தான் எனச் சாரியையொடு தன் உருபு ஏற்றலும்,

சாரியை பெறுவன பெறாது இயல்பாகி நின்ற இடத்துப் புளி குறைத்தான் புளிக் குறைத்தான் – பனை தடிந்தான் பனைத்தடிந்தான் – பூல்குறைத்தான் பூற் குறைத்தான் என மிக்கும் திரிந்தும உறழ்ச்சியாகத் தோன்றுதலும்,

உயர்திணைக்கண் நம்பியைக் கொணர்ந்தான் நங்கையைக் கொணர்ந்தான் எனத் தொகாதே நிற்றலும்,

'ஒழியாது வருதலும்' என்பதனான், ஆடூஉ அறி சொல் மகடூஉ அறிசொல் ஒன்னார்த்தெறுதல் என ஒழிந்தும் வருதலும்,

உயர்திணையொடு அஃறிணை விரவும் விரவுப் பெயர் கொற்றனைக் கொணர்ந்தான் என உருபு தொகாதே நிற்றலும், 'அவ்வியல் நிலையலும்' என்ற தனால், மகற் பெற்றேன் என விரவுப்பெயர்க்கண்ணும் தொகுதலும்,

பொற் கொணர்ந்தான் மட்கொணர்ந்தான் என (119) மெய் பிறிது ஆகும் இடத்து அங்ஙனம் ஆகாது பொன் கொணர்ந்தான் மண்கொணர்ந்தான் என இயற்கையாய் வருதலும்.

அவை போல்வன பிறவும் தன்னை நோக்கித்திரிபு நடக்கும் இடத்துப் பொருள் பெற எடுத்து ஓதப்பட்டு ஏனை வேற்றுமைப்பொருள் புணர்ச்சியது முடிபினைத்

தான் நீக்கி வேறு முடிபிற்றாய் நின்று ஒலிக்கும் இரண்டாம் வேற்றுமையது வேறுபட்ட புணர்ச்சி என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

அவ்வை போல்வன பிற ஆயின.

'எற்கண்டு பெயருங் காலை யாழநின்
கற்கெழு சிறுகுடி'

'நப்புணர்வு இல்லா நயன் இல்லோர் நட்பு'

என நெடுமுதல் குறுகும் விரவுப்பெயர்கள் மெல்லெழுத்துப் பெறுதற்கு உரியன வல்லெழுத்துப் பெறுதலும்,

தற்கொண்டான் செறுத்தான் புகழ்ந்தான் என ஆவை திரிதலும்,

கழி குறைத்தான் தினை பிளந்தான் மயிர் குறைத்தான் என அஃறிணைப்பெயர் இயல்பாதலும் முதலியன எனக் கொள்க,

'மெய்பெற' என்றதனானே சாரியை உள்வழித் தன் உருபு நிலையாது செய்யுட்கண்.

'மறம் கடிந்த அருங்கற்பின்' புறநா. 166-13

சில்சொல்லின் பல் கூந்தல்' புறநா. 166-16

என வருவனவும்.

பிறவற்றின்கண் 'மை கொணர்ந்தான் மைக்கொணர்ந்தான் வில்கோள் விற்கோள் என உறழ்ந்து முடிவனவும் கொள்க.

இனி, இவ்வாறு திரியாது கடுக்குறைத்தான் செப்புக் கொணர்ந்தான் என்றாற் போலப் பொது முடிபே (82) தமக்கும் முடிபாக முடிவனவும் கொள்க.

'தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே' (76) என்பதைச் சாரவைத்தமையான், வினை வந்துழியே இங்ஙனம் பெரும்பான்மை திரிவது எனக்கொள்க.

இனித் தன்னினம் முடித்தல் என்பதனான், 'வரையாய் வருடை' என்றாற் போல ஏழாவதற்கும் வினையொடு முடிவுழித் திரிதல் கொள்க. 23

விளக்கம்: இந்நூற்பா தொல்காப்பியத்து 157ஆம் நூற்பா. இதன் உரையில் நச்சினார்க்கினியர் வரைந்த யாவும் ஏற்றபெற்றி ஈண்டு இடம் பெற்றுள்ளன.

இவ்வாசிரியர் எழுத்துப் பேறளபெடையைத் தனி நூற்பா வாயிலாகக் கூறாவிடினும் புணரியலுடைய புறனடைக்கண் 158ஆம் நூற்பாவில் குறிப்பிட்டிருத்தல் காண்க.

ஆடூஉ மகடூஉ என்பன உயர்திணைச் சொற்கள் என்பதனை 'ஆடூஉ, மகடூஉ ஆயிரு சொல்லும்' தொல். சொல். 16. என்பதனால் கொள்க.

'அஃறிணை விரவுப்பெயர்' என்பது 'வேற்றுமை அல்வழி' என்பதுபோல விரவுப் பெயரின் உண்மைத் தன்மைத் தோற்றத்தை விளக்குமாற்றினைத் தொல் காப்பியம் 155ஆம் நூற்பாவில் நச்சினார்க்கினியர் உரைத்த விளக்கத்தான் அறிக.

தொல்காப்பியனார் திரிதலை 'மெய்பிறிதாதல்' தொல். 109 என்றே குறிப்பிட்டுள்ளார்.

நெடுமுதல் குறுகும் மொழிகளாவன- யான், யாம் நாம் நீ நீர் தான் தாம் என்பன. இவற்றுள் தொல் காப்பியனார் தன்மையை உயர்திணை என்ப. இவ் வாசிரியர் தன்மையும் விரவுப் பெயர் என்பார். எனவே, எற்கண்டு நப்புணர்வு தற்கொண்டான் என்பன விரவுப் பெயர்ப் புணர்ச்சியாம்.

கற்பினை, சொல்லினை என்று வரல் வேண்டிய இடத்துச் செய்யுட்கண் சாரியை வந்த வழியும் இரண்டன் உருபு தொக்கமை காண்க.

'வரைப்பாய் வருடை' என்று வரல் வேண்டுவது பொது நிலையில் திரிந்து 'வரைபாய் வருடை' என வந்தது.

இலக்கண விளக்கச் சூறாவளி

புணர்ச்சியுள் உயிர் மிகவரும் செய்கைக்கு இவர் யாண்டும் சூத்திரம் கூறாமையின் 'உயிர் மிக வரு வழி உயிர் கெட வருதலும் என்றலும், ஏனையவற்றிற்கும் இவ்வீறு மெல்லெழுத்து மிகும். இவ்வீறு வல்லெழுத்து மிகும். இவ் வீறு இயற்கையாம். இவ் வீறு சாரியை பெறும் என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாறே இவர் தனித்தனி வகுத்துக் கூறாமையின், 'இயல்பின விகாரமும் விகாரத்து இயல்பும்' (நன். 254)

என நன்னூலார் கூறியவாறே பொதுப்படக் கூறாது ஆசிரியர் கூறியவாறே வகுத்துக் கூறலும் பொருந்தாமை அறிக.

'எக் கண்டு பெயருங் காலை' 'நப்புணர் இல்லா நயனில்லோர்' என நெடு முதல் குறுகும் விரவுப் பெயர்கள் இன மெல்லெழுத்தாய்த் திரிதற்கு உரிய மகரம் கெட்டு வல்லெழுத்துப் பெற்றன எனத் தாம் கூறிய செய்கைக்கு ஏற்பக்கூற மறந்து,மெல்லெழுத்துப் பெறுதற்கு உரியன வல்லெழுத்துப் பெற்றனவாம் என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாறே அவ் வுரை வாசகத்தை எடுத்து எழுதினார்.

அமைதி

'உயிர் மிக வருதல்' பணரியல் புறனடை நூற்பா உரையுள் நூலாசிரியரும் உரையாசிரியரும் ஆகிய இவரே கூறியுள்ளமை காண்க. சுருக்க நூல் யாத்த

மைக்கு ஏற்ப எழுத்துப்பேறு சாரியைப்பேறு இயற்கை இவற்றை நூற்பாவினுள்ளும் உரையுள்ளும் எடுத்துக் கூறிக் குறைவு அறுத்திருப்பதும் நோக்குக நன்னூல் நூற்பாவின்கண் தெளிவின்மை கருதியே தொல்காப்பிய நூற்பாவினைக் கொண்டமையும் காண்க.

'எற்கண்டு பெயர நங்காலை யாழநின்
கற்கெழு சிறுகுடி'

என்பதே பாடம் ஆதலைத் தொடைநோக்கி அறிக.

என் + கண்டு — எற்கண்டு ஆயினவாறு காண்க.

மகர ஈற்று நூற்பாவினுள் வருமொழி முதற்கண் பகரம் வரின் மகரம் இயல்பாய்ப் புணரும் என்று அல்வழிப்புணர்ச்சி கூறவந்த ஆசிரியர் தொல்காப்பியனார் நம்

'அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும்'

என இயல்பினை மெல்லெழுத்தாய்' வரும் என்று கூறியதை நோக்க, இயல்பாய் மெல்லெழுத்து வருதலை இவ்வாசிரியர் 'மெல்லெழுத்துப் பெறுதற்குரியன வல்லெழுத்துப் பெற்றன' என்று கூறியதன்கண் மெல்லெழுத்து வல்லெழுத்தாகும் என்ற கருத்தையே கொள்க. இத்தகைய உரைவாசகங்களை முதல்நூல் நோக்கித் திரிபு அறுத்து உணர்க.

ஒத்த நூற்பாக்கள் :

'மெல்லெழுத்து...... மொழிப.' தொல்.157

'இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்
உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்
அன்ன பிறவும் ஆகும்ஐ உருபே.' நன். 255

'வலிமிகும் வழிமெலி மிகுதலும் மெலிமிகும்
வழிவலி மிகுதலும் இயல்பின் வழிமிகு
தலும்உயிர் வழிஉயிர் கெடுதலும் சாரியை

வருவழிச் சாரியை கெடுதலும் மெய்வேறு
ஆகுமிடத்து இயற்கை ஆதலும் பொதுப்பெயர்க்கு
அவ்வியல் நிலையலும் ஐஉருபு இயல்பே.'

மு. வீ. பு. 37

மூன்றாம் வேற்றுமை முடிபு

76. புள்ளியும் உயிரும் ஆய் இறு சொல்முன்
தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆவன உள.

இது மேல் உயிர் ஈற்றிற்கும் புள்ளி ஈற்றிற்கும் வேற்றுமைக் கண் கூறும் முடிபு பெறாது நிற்கும் மூன்றாம் வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ-ள்: ஒற்றாகியும் உயிர்ஆகியும் ஈறாய் நின்ற நிலை மொழி முன்னர் அந்நிலைமொழிப் பொருளான மூன்றாவதன் பொருள் ஆகிய வினை முதல் பொருள்கள் தம்மான் உளவாகிய தொழிற்சொல் வருமாயின், புணர்ச்சிக்கண்மேல் வேற்றுமைப் புணர்ச்சியிடத்து மிகும் எனக் கூறும் வல்லெழுத்து மிகாது உறழ்ந்து முடிவனவும் இயல்பாய் முடிவனவும் உள என்றவாறு.

எ-டு: சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான் வளி கோட்பட்டான் வளிக்கோட்பட்டான்—சாரப்பட்டான்—தீண்டப்பட்டான்—பாயப்பட்டான்—என இவை உறழ்ந்தன. நாய் கோட்பட்டான் புலிகோட்பட்டான்—சாரப் பட்டான்—தீண்டப்பட்டான் — பாயப்பட்டான்— இவை இயல்பாயின. பிறவும் அன்ன.

'புள்ளியும் உயிரும்' என்ற முறையல கூற்றினானே, பேஎய் கோட்பட்டான் பேஎய்க் கோட்பட்டான்என்னும் உறழ்ச்சியுள் எகரப்பேறும் பாம்பு கோட்பட்டான் பாம்புக் கோட்பட்டான் பாப்புக் கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொழி ஒற்றுத்திரிதலும்

திரியாமையும் கொள்க. இவ்விறுதிகள் நாய்க்கால் தேர்க்கால் கிளிக்கால் என ஆண்டு வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுமாறு காண்க. 24

விளக்கம் : வேற்றுமைக்கண் கூறும் முடிபு - 82, 133ஆம் நூற்பாக்கள், மூன்றாவதன் பொருள்கள் கருவி, கருத்தா. உடன்நிகழ்வு என்பன. அவற்றுள் ஈண்டுக் கருத்தாப் பொருள் கொள்ளப்பட்டது. நாய் கோட் பட்டான் என்ற தொடரில் கருத்தா நாய்; அதன் தொழில் கொள்ளுதல்.

சாத்தான் நாய் கோட்பட்டான் என்ற தொடரில், சாத்தன் முதல் வேற்றுமைக் கருத்தா. நாய் மூன்றாம் வேற்றுமைக் கருத்தா.'கோட்படுதல் சாத்தன் தொழில். கோள் நாயின் தொழில். பிறவும் அன்ன.

சூர் கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான் முதலியன இடையே வல்லொற்று மிக்கும் மிகாதும் உறழ்ந்தன. நாய் கோட்பட்டான் முதலியன இயல்பாயின.

உயிரை முன் கூறிப்பின் மெய்யினைக் கூறுதல் வேண்டும். அங்ஙனம் கூறாததனை உட்கொண்டு,

பேய் என்ற நிலைமொழி கோட்பட்டான் என்ற வரு மொழியொடு புணரும்வழிப் பேஎய் என்ற எழுத்துப்பேறு ஒன்றே பெறுதலும், எழுத்துப் பேற்றினுடன் வருமொழி வல்லெழுத்து மிகப்பெறுதலும் ஆகிய இருநிலையும் பெற்றமை காண்க.

பாம்பு என்ற நிலைமொழி கோட்பட்டான் என்ற வருமொழியொடு இயல்பாய்ப் புணர்தல். இடையே வல்லொற்று மிக்குப் புணர்தல், நிலைமொழி இடையே உள்ள மெல்லொற்று வல்லொற்றாய்த் திரிந்து வரு மொழி வல்லொற்று இடையே மிக்குப் புணர்தல் என்ற மூன்று நிலையும் உண்டு.

இந்நூற்பாவின் எடுத்துக்காட்டுக்களும் விளக்கங்களும் தொல்காப்பியம் 156ஆம் நூற்பாவில் நச்சினார்க்கினியர் உரைத்தனவேயாகும்.

ஒத்த நூற்பாக்கள் :

'புள்ளி இறுதியும் உயிர்இறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மின் ஆகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை ஆகலும் உறழத் தோன்றலும்
அம்முறை இரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்.'
தொல். 156

'புள்ளியும் உயிரும் ஆயிறு சொல்முன்
தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்.' நன். 256

'இனமாம் தொழிற்பெயர் எய்தின் வேற்றுமை
வழிஇயல் பாதலும் உறழ்தலும் ஆகும்.'
மு. வீ. பு. 36

இகர ஐகார ஈற்று அல்வழி முடிபு

77. வேற்றுமை அல்வழி இஐ என்னும்
ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்.

இஃது இகர ஈற்றுப் பெயர்க்கும் ஐகார ஈற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறுகின்றது.

இ-ள்: வேற்றுமை அல்லாத இடத்து இஐ என்னும் ஈற்றை உடைய பெயர்ச்சொற்கள் மூவகை ஆகிய முடிபு நிலையை உடைய. அம்முடிபை உடைய சொற்கள் தாம்

இயல்பாய் முடிவனவும், வல்லெழுத்துமிக்கு முடிவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் என்று கூறுவர் புலவர் என்றவாறு.

எ-டு : பருத்தி குறிது காரைகுறிது-சிறிது-தீது - பெரிது என இவை இயல்பாய் முடிந்தன.

'மாசித்திங்கள் (சிந் 2929) அலிக்கொற்றன், காவிக்கண்' 'சித்திரைத் திங்கள் (சிலப். 5-64) புலிக் கொற்றன் குவளைக்கண்' என இவை மிக்கு முடிந்தன.

கிளிகுறிது கிளிக்குறிது, தினைகுறிது தினைக்குறிது என இவை உறழ்ந்து முடிந்தன. பிறவும் அன்ன.

'பெயர் நிலைக்கிளவி' எனவே, பெயர் அல்லாத இவ்விரண்டு ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் மேல் முடிப்பாம்.

'நிலை' என்ற மிகையானே, இயல்பானும் விதி யானும் நின்ற ஐகார ஈற்று இலை என்னும் வினைக் குறிப்பு முற்றுச் சொற்கு உறழ்ச்சி முடிபு கொள்க.

விளக்கம் : 'வேற்றுமை அல்வழி' என்பது அல் வழியின் இயல்பைச் சுட்டிய தாகும்.

எழுவாய்த் தொடர் பெரும்பான்மையும் இயல்பாகும் சிறுபான்மை கிளி குறிது கிளிக்குறிது என உறழும்.

இரு பெயரொட்டுப் பண்புத்தொகை மாசித் திங்கள் என்றாற் போல மிக்கே வரும்.

மேல் முடிப்பாம் என்றது, 'இயல்பினும் விதியினும்' 82 என்ற நூற்பாவை உட்கொண்டு.

இயல்பாய் நின்ற இலை என்பதனையும், ஐகாரம் பெற்ற இல் என்பது விதி ஐகார ஈறாகிய இலை என்ப தனையும் ஒரு நிலையினவாகவே கொண்டு இலை

பொருள் இலைப் பொருள் என்ற உறழ்ச்சி முடிவு கொள்ளப்பட்டது.

ஒத்த நூற்பாக்கள் :

முழுதும் தொல். 158

'அல்வழி இ ஐ முன்னர் ஆயின்
இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்.' நன். 176

'அல்வழி இ ஐ முனர் இயல்பு ஆதலும்
மிகுதலும் உறழ்தலும் வேண்டப் படுமே.'
மு. வீ. பு. 38

அளவு நிறை எண்ணுப் பெயர்கள் அல்வழிக்கண் தம்மில் புணர்தல்

78. உயிரும் புள்ளியும் இறுதி ஆகி
அளவும் நிறையும் எண்ணும் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்அகப் பட்ட
முத்தை வருஉம் காலம் தோன்றின்
ஒத்தது என்ப ஏயென் சாரியை,

இஃது அளவும் நிறையும் எண்ணும் ஆகிய பெயர்கள் அல்வழிக்கண் தம்மில் புணருமாறு கூறுகிறது.

இ-ள் ; உயிரும் புள்ளியும் தமக்கு ஈறாய அளவையும் நிறையையும் எண்ணையும் கருதி வருவன உள என்று ஆசிரியரால் கூறப்பட்ட எல்லாச் சொற்களும், தத்தமக்கு இனம் ஆகிய சொற்களாய்த் தம்மில் குறைந்த சொற்கள் தம் முன்னே வருங்காலம் தோன்றுமாயின், பொருந்திற்று என்பர் ஆசிரியர், தாம் ஏ என் சாரியை பெற்று முடிதலை என்றவாறு.

முந்தை முத்தை என விகாரம் ஆயிற்று.

வரலாறு : நாழியேஆழாக்கு, உழக்கேஆழாக்கு, கலனேபதக்கு எனவும்.

தொடியேகஃசு, கழஞ்சேகுன்றி, கொள்ளேஐயவி எனவும்,

ஒன்றேகால், காலேகாணி, காணியேமுந்திரிகை எனவும்,

முறையே அளவுப் பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப் பெயரும் தம்முன்னர்த்தம்மில் குறைந்தன வந்துழி ஏகாரம் பெற்றவாறு காண்க.

இனி, 'உயிர் இறுதி புள்ளி இறுதி' என்ற மிகையானே குறுணி நானாழி, ஐநாழி உழக்கு என ஏ என் சாரியை பெறாது வருவனவும் கொள்க.

இன்னும் அதனானே, உழக்கரை - செவிட்டரை-மூவுழக்-கரை - கலவரை எனவும், கஃசரை-கழஞ்சரை-தொடியரை - கொள்ளரை எனவும், ஒன்றரை-பத்தரை எனவும் ஏஎன் சாரியை பெறாதனவும்,

உரிக்குறை - கலக்குறை எனவும், தொடிக்குறை-கொட்குறை எனவும், காணிக்குறை-காற்குறை எனவும் ஏஎன் சாரியைபெறாது வேற்றுமை முடிபுஎய்து வனவும்,

உழக்கின்குறை-ஆழாக்கின்குறை எனவும்,கழஞ்சின் குறை-கஃசின் குறை எனவும், ஒன்றின்குறை பத்தின் குறை எனவும் வேற்றுமை முடிபு எய்தாது இன்பெறு வனவும், கலத்துக் குறை என அத்துப்பெற்று முடிவதூஉம், பனையின் குறை-காவின் குறை என இன்பெறு வனவும், பனைக்குறை காக்குறை எனச் சிறுபான்மை இன்பெறாது வேற்றுமை முடிபு எய்துவனவும், தூணிப் பதக்கு எனவும், இரு தூணிப்பதக்கு- முத்தூணிப்பதக்கு எனவும், ஏஎன் சாரியை பெறாது வேற்றுமை முடிபு எய்துவனவும்,

தூணித்தூணி-தொடித்தொடி-காணிக்காணி- எனத் தம்முன்னர்த்தாம் வந்து வல்லெழுத்துப் பெறுவனவும்,

தூணிக்குத்தூணி-இருதூணிக்குத்தூணி எனக் குச் சாரியை பெறுவனவும் கொள்க.

உரிக்கூறு. தொடிக்கூறு; காணிக்கூறு; தூணிக் கொள், கலக்கொள், சாமை - தோரை - பயறு - எனப் பொருட் பெயரொடு புணர்வழி, வேற்றுமை முடிபு எய்தின மேத் கூறும் ஈற்றுப் பொதுவிதியானே முடியும் எனக் கொள்க.

உழக்கரை, உரிக்குறை, உழக்கின்குறை, கலத்துக் குறை, பனையின்குறை, காவின்குறை பனைக்குறை, காக்குறை, தூணிப்பதக்கு - என்றல் தொடக்கத்தன உம்மைத் தொகை. உரிக்குறை உரியும் குறையும் என விரிந்துழி உரியும் உழக்கும் எனப் பொருள் தரும். ஏனையவற்றிற்கும் ஏற்குமாறு பொருள் உரைத்துக் கொள்க.

தூணிக்கொள் என்றால்போல்வன பண்புத்தொகை. உழக்கின் குறை என்றல் தொடக்கத்தன வேற்றுமைக் கண் ஆயின் உழக்கிற்குறை என நிற்கும்.

கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி அகல் உழக்கு எனவும்,

கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தைஎனவும் அளவுப்பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் முதலான இவ்வொன்பது எழுத்து என உணர்க.

உகரமுதல் நிறைப்பெயர் வந்துழிக் காண்க.

அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற்று எழுத்தே

அவைதாம்
கசதப என்றா நமவ என்றா
அகர உகரமொடு அவை என மொழிப' தொல்.170

என்ப ஆதலின்,சிறுபான்மை இம்மி, இடாஎன்றால் போல்வனவும் கொள்க.எண்ணுப் பெயர்க்கு வரையறை இன்று. 26

விளக்கம் : இந்நூற்பா உரையில் அளவும் நிறை யும் பற்றித் தொல்காப்பிய நூற்பாக்களிலும் உரையிலும் கூறப்பட்ட செய்திகள் பலவும் இடம் பெற்றுள்ளன.

'உயிரும் புள்ளியும் இறுதியாகி' தொல்.164 என்ற இந்நூற்பாஉரை நச்சினார்க்கினியர் வரைந்தஉரையை ஒட்டியதே.

'முத்தை வரூஉம் காலம் தோன்றின்
ஒத்தது என்ப ஏஎன் சாரியை'

என எதுகைத் தொடை நோக்கி முந்தை முத்தை என்று ஆயிற்று. நாழியே ஆழாக்கு முதலியன அளவுப் பெயர் ஏகாரம் பெற்றுத் தம் முன்னர்த் தம்மில் குறைந்தன வந்தமைக்கு எடுத்துக் காட்டு.

தொடியே கஃசு முதலியன நிறைப் பெயர் ஏகாரம் பெற்றுத் தம்முன்னர்த் தம்மில் குறைந்தன வத்தமைக்கு எடுத்துக்காட்டு.

ஈறுகள் உயிரும் புள்ளியும் ஆகிய இரண்டனுள் அடங்குதலின், பொதுவாகக் கூறல் அமையும்; 'உயிரும் புள்ளியும் இறுதியாகி' என்று கூறியது மிகை. அம் மிகையால் சில செய்திகள் கொள்கிறார்; இப் பெயர்கள் ஏகாரம் இன்றியும் குறுணிநானாழி ஐநாழிஉழக்கு என்று வருதலை நச்சினார்க்கினியரும் இம் மிகையால் கொள்கிறார்.

'அரை என வருஉம் பால் வரை கிளவிக்குப்
புரைவது அன்றால் சாரியை இயற்கை'

தொல். 165

என்ற நூற்பாவுரையில் உழக்கரை முதல் பத்தரை இறுதியாக உள்ள எடுத்துக்காட்டுக்களை நச்சினார்க்கினியர் தந்துள்ளார்.

'குறைஎன் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை'

தொல். 166

என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் உரிக்குறை முதல் காற்குறை ஈறாவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

'குற்றிய லுகரத்து இன்னே சாரியை' தொல். 168

ஏன்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் உழக்கின் குறை முதல் பத்தின் குறை ஈறாவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

'அத்திடை வருஉம் கலம்என் அளவே' தொல்.168

என்ற நூற்பா உரையில், அவர் கலத்துக்குறை என்ற எடுத்துக்காட்டினைச் சுட்டி அஃது உம்மைத்தொகை என்பதையும் குறிப்பிடுகிறார்.

'பனைஎன் அளவும் காஎன் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும்'

தொல். 169

என்ற நூற்பா உரையில் அவர் பனையின் குறை-காவின் குறை-பனைக்குறை-காக்குறை என்பனவற்றை எடுத்து காட்டுகிறார்.

'பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந்து எடுத்த வேற்றுமை இயற்றே'

தொல். 239

என்ற நூற்பா உரையில், தூணிப்பதக்கு என்பதனையும் வருமொழி முற்கூறிய அதனால் அடையொடு வந்த இரு தூணிப்பதக்கு முத்தூணிப்பதக்கு என்பனவற்றை யும், தூணித்தூணி முதல் இரு தூணிக்குத்தூணி ஈறாய வற்றையும் அவர் குறிப்பிடுகிறார்.

குறையென் கிளவி' தொல். 166 என்ற நூற்பாவின் 'நிறைய' என்ற மிகையானே உரிக்கூறு—காணிக்கூறு என்பனவற்றையும்.

'பதக்கு முன் வரினே' தொல் 239 என்ற நூற்பாவில் வரு மொழி முன் கூறிய இலேசானே, தூணிக் கொள்-சாமை-தோரை-பாளிதப் -என்பனவற்றையும்,

'குறை என் கிளவி' தொல். 169 என்ற நூற்பாவில் 'முன்வரு காலை' என்ற மிகையானே, கலம் நிலை மொழியாய் வருமொழிப் பொருட் பெயரொடு கூடும் வழியும் கலப்பாகு என்றாற் போன்ற வேற்றுமை முடிவு பெறுவனவற்றையும்,

'பதக்கு முன் வரினே' தொல். 239 என்ற நூற்பா உரையில், தூணிக்கொள் என்பது பண்புத்தொகை என்று கொள்ளுதற் குரிய குறிப்பான செய்தியையும்,

'குற்றிய லுகரத்து' தொல். 167 என்ற நூற்பா உரையில் உழக்கின் குறை என்பது உம்மைத் தொகை; உழக்கும் குறையும் என்பது பொருள்;இது வேற்றுமைக் கண்ணாயின். உழக்கிற் குறை என நிற்கும் என்பதனை யும் குறிப்பிட்டுள்ளார்.

இவை யாவும் இவ்வாசிரியரால் ஏற்ற பெற்றி இயைபுடன் எடுத்தாளப் பட்டுள்ளன.

'அளவிற்கும் நிறையிற்கும்' என்ற தொல்காப்பியம் 170ஆம் நூற்பாவில், நச்சினார்க்கினியர் முதலாயினார்

அளவிற்கும் நிறைக்கும்கொடுத்த எடுத்துக்காட்டுக்களே இவ்வாசிரியராலும் தரப் பெற்றுள்ளன. நச்சினார்க்கினியர் இப்பி ஓரடை இடா ஒருஞார் ஒருதுவலி என்பன காட்டவும், இவர் 'இம்மி இடா என்றால் போல்வன' என்றே சுட்டியுள்ளார். எண்ணுப் பெயர் வரையறை இன்மையின் கூறார் ஆயினார் என்பதும் அவர் உரையாம்.

ஒத்த நூற்பாக்கள் :

முழுதும்	தொல், 164
'எண் நிறை அளவும் ஏயொடு சிவணும்'	மூ.வீ.பு.42
'அரை என் ....இயற்கை,,	தொல். 165
'குறைஎன் ... .இயற்கை.'	தொல், 166
'குற்றிய லுகரத்து இன்னே சாரியை.'	தொல். 167
'அத்து இடை வருஉம் கலம்என் அளவே.'	தொல். 168
'பனைஎன்............சிவணும்.'	தொல், 169
'அளவிற்கும்...........மொழிப.'	தொல், 170
'பதக்கு .... இயற்றே.'	தொல். 239
'அரைவரின் ஏ அகன்று ஒடும் மற்றே'	மு.வீ.பு. 43
'குறைவரின் வேற்றுமை கொளின் மிகும்என்ப'	44

நாழி, உரி-வருமொழிப் புணர்ச்சி

79. உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட
மருவும் டகரம் உரியின் வழியே
யகர உயிர் மெய்யாம் ஏற்பன வரினே.

இது நாழி என்னும் அளவுப் பெயர்க்கு வருமொழி ஒன்றனோடு எய்தியது விலக்கிப் பிறிது விதியும், உரி என்னும் அளவுப் பெயர்க்கு எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ-ள் : உரி என்னும் அளவுப்பெயர் வருமொழியாய் வருங்காலத்து, நாழி என்னும் நிலைமொழி அளவுப்பெயரின் இறுதியில் நின்ற ஈற்று உயிர்மெய் கெட, அங்ஙனம் கெட்டுழி யகர உயிர்மெய் தோன்றும்: உரி என்னும் அளவுப்பெயர் முன் ஏற்ற மொழிவரின் யகர உடம்படுமெய் வரும் என்றவாறு.

வரலாறு : நாடுரி எனவும், உரிய கொள்-சாமை-தோரை - பயறு - மிளகு - வரகு - உப்பு-எனவும் வரும். 'ஏற்பன' என்றதனான், உரியரிசி உரியெண்ணெய் முதலாயின மிகா எனக் கொள்க. வருமொழி முற்கூறிய அதனான், டகரம் மிகாது நாவுரி என்னும் முடிபும் கொள்க. 27

விளக்கம் : எய்தியது—78ம் நூற்பாவில் கூறிய ஏஎன் சாரியை.

பிறிது விதி-இந்நூற்பாக் கூறும் திரிபு எய்தாதது—யகர எழுத்துப் பேறு.

நாழி+உரி—நா+உரி—நாட்+உரி—நாடுரி.

உரி+அரிசி முதலியன 'இ ஈ ஐ வழி' என்ற நூற்பாவால்(68) யகர உடம்படு மெய் பெற்றுப் புணர்ந்தன.

இந் நூற்பா நிலைமொழி ஈற்று விகாரம் பற்றியது. எனவே, நிலைமொழியையே முன் வைத்து நூற்பயாத்தல் வேண்டும். அங்ஙனம் செய்யாதது ஓர் இலேசு. அதனால் நாழி+உரி—நாவுரி என ழகர இகரம் கெட்டு உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்தமை கொள்ளப்படும்.

இவ்வுரை மயிலைநாதருடையது. நன். 173இல் வருமொழி முற் கூறியதனால் நாழியுரி என்னும் முடிவினையும் அவர் கொண்டார். நாடுரி என்பது நாவுரி என இக்காலத்து மருவிற்று என்பது நன்னூல் விருத்தி.

வருமொழி முற்கூறிய அதனால் இருநாடுரி முந்நாடுரி என ஒட்டுக என்றார் நச்சினார்க்கினியர்.

(தொல். 240)

ஒத்த நூற்பாக்கள் :

'உரி வரு காலை நாழிக் கிளவி
இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே
டகரம் ஒற்றும் ஆவயி னான.' தொல். 240

முழுதும் நன். 174

'உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட
மருவும் டகரமாம் வல்லினப் புள்ளி.'
மு. வீ. பு. 102

'ஆவிமுன் ஆவியோடும்—கூறா ழகாரம்
அழிந்து டகாரம் குறுகிடுமே,' வீ. 22

'உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய் ஐந்தாம்.'
நே. 19

எகரவினா முச்சுட்டின் முன்னர் நாற்கணம்

80. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும் தூக்கில் சுட்டு
நீடலும் யகரம் நிலவலும் நெறியே.

இது வினாவும் சுட்டும் ஆகிய உயிர் ஈற்று இடைச் சொற்கள் நாற்கணத்தொடும் புணருமாறு தொகுத்து உணர்த்துகின்றது.

இ-ள் : எகர வினாமுன்னும் அகரம் முதலிய மூவகைச் சுட்டுக்கள் முன்னும் உயிர்முதல் மொழியும் யகர முதல்மொழியும் வந்தால் வகரமும், ஏனைய வந்துழி வத்தலையும், செய்யுட்கண் சுட்டு நீண்டு இசைத்தலும், அங்ஙனம் நீண்டு இசைத்த வழி யகரம் மிகுதலும் முறைமை என்றவாறு.

எ-டு : எங்ஙனம் அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம்—ஆடை - இலை - ஈயம்-உரல் - ஊர்தி எழு-ஏணி-ஐயம்-ஒடுக்கம்-ஓடை-ஔவியம்-எனவும், எவ்யாழ் அவ்யாழ் இவ்யாழ் உவ்யாழ் எனவும், எக்கொற்றன் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன்-சாத்தன்-தேவன்-பூதன் ஞான்—நூல் - மணி - வளை எனவும், ஆவயினான - ஈவயினான-ஊவயினான எனவும், 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' (தொல். சொல். 1) எனவும் வரும்.

வருமொழி வரையாது கூறினமையின் இம்முடிபு நாற்கணத்தொடும் சென்றதேனும், 'நெறி' என்றதனால் வன்கணம் வந்துழி நீடாது எனவும், நீடல் ஒருதலை அன்று எனவும், உயிர்க்கணம் வந்துழியே யகரம் தோன்றும் எனவும் கொள்க. இன்னும் அதனானே. 28

'கள்வனோ அல்லன் கணவன் என் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே
ஈதொன்று' சிலப். 19 7,8

என இது என்றும் சுட்டுமுதல் உகர ஈற்றுப்பெயரின் இகரம் நீடலும் கொள்க. இந்நீட்சி இருமொழிப் புணர்ச்சிக்கண் வருதலின் நீட்டும்வழி நீட்டல் அன்மை உணர்க. பிறவும் அன்ன.

விளக்கம் : வினா—எகரவினா—ஒன்றுமாத்திரம். சுட்டு—அ இ உ என்ற சுட்டு மூன்றும்.

எவ்வடை என்புழி நிலைமொழி எகரத்தை அடுத்த வகரம் புணர்ச்சியால் வந்தது என்றும், வருமொழி அடை என்பதனை அடுத்த வகரம் உடம்படுமெய் என்றும் கொள்க. பிறவும் அன்ன.

அ வயினான—பொது விதியால் அவ்வயினான என்று முடிதலேயன்றிச் செய்யுட்கண் ஆவயினான எனச் சுட்டு நீண்டு முடிதலும் கொள்க.

அ+இருதிணை—அயிருதிணை; இவ்விதி அகரச் சுட்டு ஒன்றனுக்கே கொள்ளப்படும்.

ஈதொன்று என்பது இது+ஒன்று என்பன புணர்ந்த தொடர். இத்தொடர்க்கண் இது என்பது சுட்டு முதலாகிய உகர ஈற்றுப்பெயர். இது சுட்டு இடைச் சொல் அன்றிச் சுட்டுப்பெயர் ஆதலின், 'நெறி' என்ற மிகையால் கொள்ளப்பட்டது. நீட்டும் வழி நீட்டல் ஒரு மொழிக் கண்ணது ஆதலின், இதனை நீட்டும் வழி நீட்டலாகக் கொள்ளுதல் கூடாது என்றார்.

நச்சினார்க்கினியர் 'ஈதென்று' என்பது புறனடை யால் முடித்துக் கொள்ளப்படும் என்பதனைச் 'சுட்டின் இயற்கை' தொல். 238 என்ற நூற்பா உரையில் சுட்டி யுள்ளார்.

தொல்காப்பியனார் சுட்டுப் பற்றிய விதிகளை அகர இகர உகர ஈறுகளில் தனித்தனியே கூறியுள்ளார். எகர வினாயாவினாவின் திரிபுஎன்பது அவர் கருத்து ஆதலின் எகர வினாப்புணர்ச்சிக்கு அவர் விதி கூறினார் அல்லர்.

'எகர வினா முச்சுட்டின்' (நன். 163) என்ற நூற்பா வுரையில் 'யகரமும் எய்தின் வவ்வும்' என்றமையின் இங்ஙனம் தோன்றிய வகரயகரங்கள் உடம்படுமெய் அல்ல என்பதூஉம், யகரம தோன்றும்' எனவே இந் நீட்சி அடி தொடை நோக்கி நீட்டும் வழி நீட்டல் அன்று என்பதூஉம், யகரமும் என எண்ணின்கண் நின்ற இழிவு சிறப்பு உம்மையால் யகரத்தோற்றம் உயிர்வரும் வழி அன்றிப் பிறவழித் தோன்றாது என்பதூஉம், 'நெறி' என்றமையின் இவ்வாறு நெறிப்பட வருவன எல்லாம் கோடல் வேண்டும் என்பதூஉம் பெற்றாம்.

'ஆவயினான' எனச் சுட்டு நீண்டு பிறவழி யகரம் தோன்றாதாயிற்று.

' இவ்வாறு நெறிப்பட வருமாறு: யாங்ஙனம் என வினாமுன் வருமொழி ஙகரம் மிகுந்தது. ஆங்ஙனம்

ஈங்ஙனம் ஊங்ஙனம் எனச் சுட்டுநீண்ட வழியும் வருமொழி ஙகரம் மிகுந்தது. ஈது எனவும், ஆங்கு ஈங்கு ஊங்கு எனவும், ஆண்டு ஈண்டு எனவும் சுட்டுப்பெயர்ச் சொல் நீண்டன. 'விண்வத்துக் கொட்கும்' எனவும், 'செல்வுழிச் செல்க' எனவும், 'சார்வுழிச் சார்ந்ததகையள்' எனவும், மெய்ஈற்றுமுன் உயிர் வருங்கால் இங்ஙனம் உடம்படுமெய் அன்று எனக் கூறும் வகரம் தோன்றின. பிறவும் அன்ன'' என்று விருத்தி கூறுவதுங் காண்க.

எகர வினாமுச்சுட்டின் முன்னர் வவ்வும் அவையும் தோன்றுதல் நெறியே எனவும், தூக்கின் சுட்டு நீடலும் யகரம் தோன்றலும் நெறியே எனவும் பிரித்துக் கூட்டி முடிக்க. அங்ஙனம் முடித்து, முனிவர் கூறும் சொன் முடிபுப் பொருத்தமின்மையின் இன்மையைக் காண்க,

ஒத்த நூற்பாக்கள் :

'சுட்டின் இறுதியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.'
தொல். 204

'சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்.' 205

'யவமுன் வரினே வகரம் ஒற்றும்.' 206

'உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.' 201

'நீடவருதல் செய்யுளுள் உரித்தே.' 208

'சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே.' 238

'சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும்' 255

'ஏனவை வரினே மேனிலை இயல.' 256

'ஆவிக் குறிற்பின் ஞநமவத் தோன்றில்
அவ்வொற்று இடையாம்
மேவிய பன்னொன்று தோன்றில் வவ்வாம்' வீ.84

'எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்

பிறவரின் அவையும் தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே' நன்.163

'அகரச்சுட்டு......இருவழியினும் மிகும்.'
மு. வீ. பு. 74

'அகரச் சுட்டின்முன் ஞநமத் தோன்றின்
தத்தம்ஒற்று இடைமிகும் என்மனார் புலவர்.'
மு. வீ. பு. 76

'வயவரின் வகரம் வருமென மொழிப.' 77
'ஆவிவரினும் அவ்வியல் நிலையும்.' 78
'யாப்பினுள் அஆ ஆகும் என்ப.' 79

ஒருசார்த் தொழிற்பெயர்ப் புணர்ச்சி

81. ஞணநம லவளன ஒற்றுஇறு தொழிற்பெயர்
ய-அல் மெய் மெய்வரின் உ-உறும் நவ்விற்கு
அவ்வும் ஆகும் வேற்றுமைக்கு என்ப
செவ்விதின் அவ்வியல் தெரியுங்காலை.

இஃது ஒருசார்த் தொழிற்பெயர் வன்கணத்தொடும் மென்கணத்தொடும் இடைக்கணத்து வகரத்தொடும் புணருமாறு தொகுத்து உணர்த்துகின்றது.

இ-ள்: ஞகரமும் ணகரமும் நகரமும் மகரமும் லகரமும் வகரமும் ளகரமும் னகரமும் ஆகும் எட்டு ஒற்றுக்களும் ஈறாக வரும் தொழிற்பெயர்கள் யகரம் ஒழிந்த எட்டு ஒற்றுக்களையும் முதலாக உடைய மொழிகள் வருமொழியாய் வரின் இருவழிக் கண்ணும் உகரம் பெற்று முடியும். அவற்றுள் நகர ஈற்றுத் தொழிற் பெயர்க்கு உகரமே அன்றி, அகரமும் ஆம் வேற்றுமைக் கண் என்று கூறுவர் ஆசிரியர் செவ்விதாக அவ்விலக் கணத்தை ஆராயுங்காலத்து என்றவாறு.

எ-டு: உரிஞுக்கடிது மண்ணுக்கடிது பொருநுக் கடிது செம்முக்கடிது புல்லுக்கடிது தெவ்வுக்கடிது துள்ளு

கடிது துன்னுக்கடிது - சிறிது - தீது - பெரிது-ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது - எனவும், கடுமை-சிறுமை-தீமை-பெருமை-ஞாற்சி-நீட்சி-மாட்சி-வலிமை- எனவும் வரும்.

இம் முதல் நிலைத் தொழிற் பெயர்கட்கு உரிஞுதல் மண்ணுதல் பொருநுதல் செம்முதல் புல்லுதல் செவ்வுதல் துள்ளுதல் துன்னுதல் எனப் பொருள் உரைக்க. பொருநுதல் - பொருந்துதல். 'செவ்விதின் அப் பெயர் தெரியுங்காலை' என்றதனால், 'முரண்' என்னும் தொழிற் பெயர் உகரம் பெறாது முரட்கடுமை - சேனை-தானை-பறை-எனவும், நெகிழ்ச்சி-நீட்சி மாட்சி-வலிமை எனவும் முரண்-கடிது-சிறிது-தீது-பெரிது நெகிழ்ந்தது-நீண்டது-மாண்டது-வலிது எனவும் இரு வழியும் உகரம் பெறாது ணகர ஈற்றுப் பொது விதியான் முடிதலும்.

இவ்வீற்றுத் தொழிற்பெயர் அல்லனவும் வெண்ணுக் கரை எனவும் 'கனைகுரல் கடுப்பப் பண்ணுப் பெயர்த்து' (மதுரை)-560 எனவும் உகரம் பெறுதலும்.

வெரிந் என்னும் சினைப்பெயரும் பொருந் என்னும் சாதிப் பெயரும் வெரிநுக்கடிது பொருநுக்கடிது என அல்வழிக்கண் உகரம் பெறுதலும், வெரிநக்கடுமை பொருநக்கடுமை என வேற்றுமைக் கண் அகரம் பெறுதலும்.

'உயவல் யானை வெரிநுச்சென் றன்ன' அகநா-65, வெரிநுக்கடுமை எனச் சிறுபான்மை உகரம் பெறுதலும்,

வெரிந் என் இறுதி கெடுதலும், கெட்ட இடத்து வெரிங் குறை வெரிக்குறை - செய்கை-தலை-புறம்- என வருமொழிக்கு இனமான மெல்லெழுத்துப் பெறுதலும் வல்லெழுத்து மிக்கு முடிதலும்,

உரிஞின்குறை - பொருநின்குறை - வெரிநின்குறை எனச் சாரியை பெறுதலும்,

கன்னல்கடிது பின்னல்கடிது ஆடல்கடிது பாடல்கடிது நாட்டங் கடிது ஆட்டங் கடிது - சிறிது-தீது - பெரிது - ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது-எனவும், கன்னற் கடுமை பின்னற் கடுமை ஆடற்கடுமை பாடற்கடுமை நாட்டக் கடுமை ஆட்டக்கடுமை - செய்கை-தலை-புறம் ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் முதல் சினைத் தொழிற் பெயர் அல்லாத லகர மகர ஈற்றுத் தொழிற் பெயர்கள் உகரம் பெறாது தமக்கு ஏற்ற ஈற்றுப் பொது விதியான் முடிதலும்,

கோள்கடிது கோட்கடிது - சிறிது - தீது - பெரிது - ஞான்றது-நீண்டது-மாண்டது-வலிது எனவும்,

கோள் கடுமை கோட்கடுமை - சிறுமை - தீமை - பெருமை-ஞாற்சி-நீட்சி-மாட்சி - வலிமை எனவும். இரு வழியும் முதல்நிலைத் தொழிற்பெயர் அல்லாத ளகர ஈற்றுத் தொழிற்பெயர் உகரம் பெறாது தமக்கு ஏற்ற செய்கை பெறுதலும்,

ஔகார ஈற்றுத் தொழிற்பெயர் கௌவுக்கடிது வௌவுக்கடிது - கடுமை என இரு வழியும் உகரம் பெறுதலும் கொள்க.

'உயவல் யானை வெரிநுச் சென்றன்ன' என்பதனை யானையின்முதுகின்மேல் சென்ற அன்ன என விரிக்க. 29

விளக்கம்: தொல்காப்பியம் ஈறுதோறும் முடிக்கும் விதிகளைச் சுருக்க நூலாதலின் இது ஒரே நூற்பாவில் முடிக்கிறது.

பொருந் என்பது ஒரு சாதிப்பெயரும் பொருந்துதல் என்னும் வினைப்பெயருமாம் என நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் 299ஆம் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

முரண் என்ற தொழிற்பெயர் உகரம் பெறாது முரட் கடுமை என்றாற்போலக் கொள்ளும் வேற்றுமை

முடிபும், முரண்கடிது என்றாற்போலக் கொள்ளும் அல்வழி முடிபும், முரண்கடுமை முரட்கடுமை என்றாற் போலக் கொள்ளும் வேற்றுமை உறழ்ச்சி முடிபும் 'முரண் என் தொழிற்பெயர் முதல்இயல் நிலையும' தொல். 309 என்ற நூற்பா வுரையுள் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டவை. அவ்வீற்றுத் தொழிற் பெயர் அல்லனவும் வெண்ணுக்கரை. 'பண்ணுப் பெயர்த்து' என்றாற்போல உகரமும் வல்லெழுத்தும் பெறுதல் 'தொழிற் பெயர் எல்லாம் தொழிற் பெயர் இயல' தொல். 306 என்ற நூற்பா உரையுள் 'எல்லாம்' என்ற மிகையானும் 'உயவல் யானை வெரிநுச் சென்றன்ன' (அகம் 65) என்ற எடுத்துக்காட்டும் அதற்கு 'யானையின் முதுகின்மேல் சென்றால் அன்ன, என்ற உரையும் தொல். 299ஆம் நூற்பாவின் 'உகரம் கெட' என்ற மிகையானும், வெரிந் என்பது ஈறு கெடுதலும் கெட்ட விடத்து வருமொழி வல்லெழுத்தும் இனமான மெல்லெழுத்தும் மிகுதல் தொல்காப்பிய 310, 311ஆம் நூற்பா உரையானும், உரிஞின் குறை - பொருநின்குறை-வெரிநின்குறை-எனச் சாரியை பெறுதல் தொல். 299ஆம் நூற்பாவின் 'உக்கெட' என்ற மிகையானும், கன்னல் கடிது முதலிய லகர ஈற்று அவ்வழிப் புணர்ச்சி வேறுபாடும், கன்னற் கடுமை முதலிய வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடும் ஆடல் கடிது முதலிய அல்வழிப் புணர்ச்சி வேறுபாடும் ஆடற்கடுமைமுதலிய வேற்றுமைப்புணர்ச்சி வேறுபாடும் 'தொழிற் பெயரெல்லாம் தொழிற்பெயர் இயல' தொல். 376 என்ற நூற்பாவின் 'எல்லாம்' என்ற மிகையானும், நாட்டங் கடிது முதலிய மகர இறுதித் தொழிற்பெயரின் அல்வழி வேறுபாடும் நாட்டக் கடுமை முதலிய வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடும் 'தொழிற் பெயரெல்லாம் தொழிற்பெயர் இயல' தொல். 327என்ற நூற்பாவின் 'எல்லாம்' என்ற மிகையானும், கோள் கடிது கோட் கடிது முதலிய ணகர ஈற்றுத் தொழிற்பெயரின் அல்வழி முடிபு வேறுபாடும் கோட்கடுமை முதலிய

மேற்றுமை முடிபு வேறுபாடும் 'நெடியதன் இறுதி இயல் பாகுநவும்' தொல். 400 என்ற நூற்பா உரையானும். 'தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல' தொல். 401 என்ற நூற்பாவின் 'எல்லாம்' என்ற மிகை யானும், கௌவுக்கடிது கௌவுக்கடுமை என ஒளகார ஈற்றுத் தொழிற்பெயர் இருவழியும் உகரம் பெறுதலும் ஏனைய வேறுபாடும் 'ஒளகார இறுதிப் பெயர்நிலை முன்னர்' தொல். 295 என்ற நூற்பா உரையானும் நச்சினார்க்கினியர் உணர்த்தியுள்ளவற்றை இவ்வாசிரியர் இந்நூற்பாவின்கண் 'செவ்விதின் அவ்வியல் தெரியுங் காலை' என்ற மிகையாற்கொண்டுள்ளமை அறிக.

ஒத்த நூற்பாக்கள் :

'ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து இயைபின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயி னான' தொல். 296

'ஞநமவ இயையினும் உகரம் நிலையும்.' 297

'நகர இறுதியும் அதனோ ரற்ற.' 298

'வேற்றுமைக்கு உ-கெட அகரம் நிலையும்' 299

'வெரிந்என் கிளவி முழுதும் கெடுவழி
வரும்இடன் உடைத்தே மெல்லெழுத்து இயற்கை'
தொல். 300

'ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே' 301

ண்— 'தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல'
306

'முரண்என் தொழிற்பெயர் முதல்இயல் நிலையும்.'
தொல். 309

ம்—'தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல' 327

ல்—'தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல' 376

ன் —'தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல' 401

'உகரமொடு புணரும் புள்ளி இறுதி
யகரமும் உயிரும் வருவழி இயற்கை' 163

'ஞநவென் புள்ளிக்கு இன்னே சாரியை' 182

'ஞண நமல வளன ஒற்றுஇறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி ய-அல் மெய்வரின்
உவ்வுறும் ஏவல் உறாசில சில்வழி' நன். 207

'நவ்விறு தொழிற்பெயர்க்கு அவ்வுமாம்
வேற்றுமை' நன். 208

'ஞஃகான் இறுதித் தொழிற்பெயர் உகரம்
பெறுதலும் மிகுதலும் பெற்றித்து ஆகும்.'
மு. வீ. பு. 137

'ஞநமவ வரினும் உகரமொடு நிலையும்' 138

'உகரச் சாரியை யொடுவரும் நகாரம்.' 139

'வேற்றுமைக் கண் அக ரத்தொடு சிவணும்.' 140

'வெரிந்ஈறு அழுந்துமெல் லினம்மிகும் என்ப.' 141

'வல்லினம் மிகுதலும் மற்றதன் இயல்பே.' 142

'ஞநஇறு மொழிஇன் னொடுநடை பெறுமே.' 56

உயிரீற்றின்முன் வன்கணம்

82. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே.

இனி, உயிர் ஒற்று இறுதிகளைத் தனித்தனி எடுத்து முடிப்பார் விரிவு அஞ்சி ஒருவாற்றான் தொகுத்து உணர்த்துவனவற்றுள். இஃது உயிர்ஈற்றுச் சொல்முன் வன்கணம் புணருமாறு தொகுத்து உணர்த்துகின்றது.

இ-ள்: இயற்கையானும் செயற்கையானும் நிலை பெற்ற உயிர்ஈற்றுச் சொல் முன்னர் வல்லெழுத்து முதல் மொழி வருமொழியாய் வந்துபுணரின், அவ்வருமொழி முதற்கண் நின்ற வல்லெழுத்துக்கள் மிக்கு முடியும் இரு வழியும் என்றவாறு.

வட்டக்கல் சதுரப்பாறை என்றாற் போல ஒற்றீறு ஒழித்து உயிர் ஈறு ஆக்கிக் கொள்வதூஉம், தாழக்கோல் தமிழப் பள்ளி என்றாற் போல இடையே எய்துவித்து உயிர் ஈறு ஆக்கிக் கொள்வதூஉம் எனச் செயற்கை ஈறு இருவகைத்து. அவை அங்ஙனம் ஆக்கிக்கொளவுழி வல்லெழுத்து மிகுமாறு ஆங்காங்கு உணர்க.

சொல் என்றது ஈண்டு அஃறிணைப்பெயரும் சிறுபான்மை அத்திணை வினையும் விரவு வினையும் இடைச் சொல்லும் உரிச்சொல்லும் எனக் கொள்க.

உயிர் ஒருமையால் குற்றுகரமும் உருபு உயிரும் ஈண்டே அடங்கும். அங்ஙனம் அடங்கும் என்பது கருத்து ஆதல் 'வன்தொடர் அல்லன முன் மிகா அவ்வழி' இ. வி. 100 என்றல் தொடக்கத்தனவற்றானும்,

'மூன்றன் உருபினும் ஆறன் உருபினும்' இ.வி.118 என்பதனாலும் ஈண்டு எய்தியதனை விலக்குதலான் அறிக.

வரலாறு: விளக்குறிது அதக்குறிது - சிறிது தீது- பெரிது எனவும், இருவிளக் கொற்றன்-சாத்தன்-தேவன் பூதன்- எனவும் அகர ஈற்றுப் பெயர் முன் இரு வழியும் மிக்கன. இருவிள என்பது ஓர் ஊர். இருவிளவின் கண் கொற்றன் என விரியும்.

உணக் கொண்டான். புலிபோலக் கொண்டான், கண்டெனக்கொண்டான் - ஆங்கக்கொண்டான், சாலக் கொண்டான் சென்றான் - தந்தான் - போயினான்- என அகர ஈற்று வினைச்சொல் முன்னும் இடைச்சொல் முன்னும் உரிச்சொல் முன்னும் முறையே மிக்கன.

'புலிபோல' என்பது ஒன்றனொடு பொருவப்படுதல் நோக்கி இடைச்சொல் எனப்பட்டதேனும்போல் என்னும் இடைச்சொல் அடியாகத் தோன்றிய வினைஎச்சக் குறிப்பு ஆதலும், என என்பது இரு சொல்லையும்

இயைவிக்கின்ற நிலைமையான் இடைச்சொல் எனப் பட்டதேனும் செய்து செய்யூ முதலியபோலச் 'செய்தென என் ஈறு' என வினையெச்சமாய் அவற்றொடு உடன் எண்ணப்படுதலும் பற்றி வினைஎச்சத்துள் அடக்கி முடித்தாம்.

'ஆங்க' என்னும் உரையசை இடைச்சொல் ஏழன் உருபின் பொருள்பட வந்தது அல்லாமை,

'ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.'
தொல். 204

என்பதனான் அறிக.

தாராக்கடிது மூங்காக்கடிது சிறிது—தீது—பெரிது- எனவும், கால்—செவி—தலை—புறம்—எனவும்—ஆகார ஈற்றுப்பெயர்முன் இருவழியும் மிக்கன.

உண்ணாக் கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவும். உண்ணாக்குதிரை - செந்நாய்- தகர்-பன்றி—எனவும்,

'உயிர் உறுப்பு உயிர்மெய் தனிநிலை எனா அக்
குறில் நெடில் அளபெடை மூவினம் எனாஅ'
எனவும்,

உசாக்கடிது உயாக்கடிது - சிறிது - சிறிது-தீது-பெரிது- எனவும் ஆகார ஈற்று வினைச்சொல் முன்னும் இடைச் சொல் முன்னும் உரிச்சொல் முன்னும் முறையேமிக்கன. உசாக்கடுமை வயாக்கடுமை - சிறுமை-தீமை-பெருமை_ என இவை பெயர்த்தன்மைப் பட்டுழி வேற்றுமைக்கண் மிகுமாறும் காண்க.

இகர ஈற்றுப் பெயர்க்கு அல்வழி முடிபுமுன்னர்க் கூறிப் போந்தமையின் ஈண்டு ஏனைவற்றிற்கே இம் முடிபு கோடும். தேடிக்கொண்டான் வந்தவழிக் கொண்

டான் எனவும், இனிக்கொண்டான் அணிக்கொண்டான் சென்றான்-தந்தான்-போயினான் எனவும், கடிக்கமலம்-சண்பகம்-தாமரை-பங்கயம் எனவும்,இகரஈற்று வினைச் சொல்லும்,இப்பொழுது எனவும் அணியஇடத்து எனவும் முறையே காலமும் இடமும் உணர்த்தும் இடைச்சொற்களும் உரிச்சொல்லும் முறையே மிக்கன.

கிளிக்கால்-சிறகு - தலை - புறம்-என இகர ஈற்றுப் பெயர் முன் வேற்றுமைக்கண் மிக்கன.

கிளிகுறுமை கிளிக்குறுமை எனக் குணம்பற்றி வந்த உறழ்ச்சி முடிபும், பனியத்துக் கொண்டான் பனியிற் கொண்டான் எனப் பனி என்னும் காலப்பெயர் அத்தும இன்னும் பெறுதலும் புறனடையாற் கொள்க.

ஈக்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவும், கால்-சிறகு தலை புறம் எனவும், ஈகார ஈற்றுப்பெயர் முன் இருவழியும் மிக்கன.

தழீஇக்கொண்டான் நீறீஇக்கொண்டான் என்றாற் போல்வன இகர ஈறு என்க.

கடுக்குறிது-சிறிது - தீது - பெரிது - எனவும் காய்-செதிள் - த்தால் - பூ - எனவும் உகர ஈற்றுப் பெயர் முன் இருவழியும் மிக்கன.

கொண்மூக்கடிது - சிறிது - தீது - பெரிது - எனவும், குழாம் - செலவு - தோற்றம் - பறைவு - எனவும் ஊகார ஈற்றுப்பெயர் முன் இருவழியும் மிக்கன.

உண்ணூக் கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - என ஊகார ஈற்றுவினைச் சொல்முன் மிக்கன.

ஏக்கடிது-சிறிது-தீது-பெரிது-எனவும், ஏஎக்கடுமை சிறுமை-தீமை-பெருமை - எனவும் ஏகார ஈற்றுப்பெயர்

இருவழியும் மிக்கன. வேற்றுமைக்கண் எகரப்பேறு புறனடையாற் கொள்க.

ஐகார ஈற்றுப்பெயர்க்கு அல்வழி முடிபு மேல் கூறிப் போந்தமையின், ஈண்டு ஏனையவற்றிற்கே இம்முடிபு கோடும். ஒல்லைக் கொண்டான் வல்லைகொண்டான் வந்தக்கடைக்கொண்டான் கூறாமைக்குறித்தான் வந்த பின்னைக்கொண்டான் வருமுன்னைக்கொண்டான் - சென்றான்—தந்தான் - போயினான்-எனவும், மற்றைத் தெரு எனவும், பணைத்தோள் எனவும், ஐகார ஈற்று வினைச்சொல் முன்னும் இடைச்சொல் முன்னும் உரிச் சொல் முன்னும் முறையே மிக்கன.

யானைக்கோடு - செவி - தலை - புறம்-என ஐகார ஈற்றுப் பெயர்முன் வேற்றுமைக்கண் மிக்கன.

உளழங்கோடு - என மெல்லெழுத்துப் பெறுதலும், கலைங்கோடு கலைக்கோடு என உறழ்தலும் புறனடை யால் கொள்க.

ஒக்கடிது கோக்கடிது - சோக்கடிது - சிறிது - தீது - பெரிது : எனவும், ஓஒக்கடுமை கோஒக்கடுமை சோஒக் கடுமை-சிறுமை-தீமை—பெருமை-எனவும் ஓகார ஈற்றுப் பெயர் இருவழியும் மிக்கன. வேற்றுமைக்கண் ஒகரப் பேறு புறனடையால் கொள்க.

கொக்குக்கடிது-சிறிது - நீது-பெரிது-எனவும்-கால்- சிறகு-தலை-புறம் - எனவும் குற்றுகர ஈற்றுப்பெயர் முன் இருவழியும் மிக்கன.

அடித்துக் கொண்டான் சென்ற இடத்துக் கொண் டான்-சென்றான்-தந்தான்-போயினான்-எனக் குற்றுகர ஈற்று வினைச்சொல் முன் மிக்கன. புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார் (கார்–11) என்பதும் அது.

மற்றுக்கொள்-செல் - தா - போ-எனவும் அதிர்ப்புக் கடிது - சிறிது - தீது - பெரிது - எனவும் குற்றுகர ஈற்று இடைச்சொல் முன்னும் உரிச்சொல் முன்னும் முறையே மிக்கன.

அதிர்ப்புத்தன்மை எனப் பெயர்த்தன்மைப்பட்டுழி வேற்றுமைக்கண் மிகுமாறும் காண்க.

யானையைக் கொணர்ந்தான்-சேர்த்தான்-தடுத்தான்-பிடித்தான்-எனவும், ஊர்க்குக்கொண்டான் - சென்றான் தந்தான்-போயினான்-எனவும் உயிர்ஈற்று உருபின் முன் மிக்கன.

ஈண்டுக் காட்டாது ஒழிந்தனவும் வந்தவழிக்கண்டு இதுவே நிலனாக முடித்துக்கொள்க. 30

விளக்கம் : இயற்கை உயிர் ஈறு-விள பலா போல்வன

செயற்கை உயிர் ஈறு இரு வகைத்து:

ஒன்று நிலைமொழி ஈற்றுமெய் கெட, ஈற்றயல் எழுத்தே விதி உயிர் ஈறாய் அமைவது-வட்டம், சதுரம் என்பன புணர்ச்சிக்கண் ஈறு கெட, வட்ட சதுர என நிற்பது விதி உயிர்ஈறு; ஒற்று ஈற்றுச் சொற்கள் வருமொழியொடு புணரும்வழி இடையே அகரம் முதலிய சாரியை பெற்று விதி உயிர் ஈறாய் வரும் நிலை இரண்டாவது.

தாழ்+கோல் - தாழக்கோல் - இ. வி. 134
தமிழ்+பள்ளி - தமிழப் பள்ளி - இ வி. 134

இவை அகரச் சாரியை இடையே வரத், தாழ தமிழ என விதி உயிர் ஈறு ஆயினவாறு காண்க.

ஆசிரியர் உயர்திணைப் பெயரையும் விரவுப் பெயரையும் முன்னர்ப் 'பொதுப் பெயர் உயர்திணைப் பெயர்' (71) என்ற நூற்பாவில் ஓதியமையின் ஈண்டுக் கூறப்படுவன ஏனையவே.

குற்றியலுகரம் உயிரது குறுக்கம் ஆதலின் இதனையும் ஈண்டே அடக்கினார். உருபு இடைச்சொல்லாமேலும் உருபு புணருமாறு வேற்றுமை புணர்ச்சியுள் அடங்கலின் அதனைத் தனியே பிரித்து இதன்கண் கொள்ளுமாறு விடுத்தார். குற்றியலுகரமும் உயிர்ஈற்று உருபும் இந் நூற்பாவினுள் அடங்குதலான் அன்றே அவற்றுள் சில மிகா என்று இவ்வியலில் விதந்து ஓதுவார் ஆயினார்.

எடுத்துக்காட்டுக்கள் பல நன்னூல் 164ஆம் நூற்பா உரையுள் மயிலைநாதர் காட்டியன.

உண-அகர ஈற்றுச் செய என்னும் வாய்பாட்டுத் தெரிநிலை வினையெச்சம் !

புலி போல-அகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சம்.

கண்டென. அகர ஈற்றுச் செய்தென என்ற வாய்ப் பாட்டுத் தெரிநிலை வினையெச்சம்.

ஆங்க-அகர ஈற்று இடைச்சொல்.

சால - அகர ஈற்று உரிச்சொல்.

உண்ணாக் கொண்டான் - ஆகார ஈற்றுச் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

உண்ணாக் குதிரை-ஆகார ஈற்றுச்செய்யா என்னும் வாய் பாட்டுப் பெயரெச்சம்;இதனை அகர ஈறாகிய ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பார் இக் காலத்தார். செய்யாத என்ற அகரஈற்று எதிர்மறைப் பெயரெச்சம் தொல்காப்பியத்துள் யாண்டும் காணப் பெறாமையானும், சங்கச் செய்யுளுள்ளும்,

'எய்யா நல்லிசை' (முருகு)

'சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்' (முருகு)

'மெய்யில் தீரா மேவரு காமம்' (அகநா)

முதலாகவும், தொல்காப்பியத்துள்

'துன்னுதல் கடிந்த தொடாக் காஞ்சி'

தொல். பொருள்

'புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம்'

தொல். பொருள்

'வாடா வஞ்சி வயவர் ஏத்திய' தொல் பொருள்

முதலாகவும் செய்யா என்றும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சமே காணப்படுவதலானும், சங்க காலத்துக்கு பிற்பட்ட திருக்குறளிலே ய

'உளவரை தூக்காத ஒப்புர வாண்மை' குறள் 480

'இனத்தாற்றி எண்ணாத வேந்தன்' குறள் 568

முதலாக அகரஈற்று எதிர்மறைப் பெயரெச்சம் அருகிக் காணப்படுதலானும், செய்யா என்பது இயற்கை ஆகார ஈற்றுப் பெயரெச்சமாகச் செய்யாத என்பது விதி அகர ஈற்று எதிர்மறைப் பெயரெச்சமாகக் கோடலே இவ் ஆசிரியர் கருத்தாதல் அறிக. இதனைத் தொல்காப்பியம் 222ஆம் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் உரைத்த உரையானும் உய்த்து உணர்க.

எனா என்ற ஆகார ஈற்று இடைச் சொற்கண் அளபெடை அகரம் செய்யுள் இசை நிறைக்கவந்தது ஆதலின், எனா என்ற இயற்கை ஆகார ஈற்று இடைச் சொல்லையே ஆசிரியர் குறிப்பிட்டாராகக் கொள்க.

உசா, உயா, வயா—என்பன உரிச்சொல்.

'உயாவே உயங்கல்' தொல். சொல். 369.

'வயாஎன் கிளவி வேட்கைப் பெருக்கம்'

தொல். சொல். 371

இகரஈற்று அல்வழி முடிபு 'வேற்றுமை அல்வழி இ ஐ என்னும்' (இ வி. 77) என்ற நூற்பாவில் கூறப்பட்டது.

தேடிக்கொண்டான் — இகர ஈற்றுத் தெரிநிலை வினையெச்சம்; வந்தவழிக்கொண்டான்; வழி—குறிப்பு வினையெச்ச ஈறு;

'பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலம் கண்ணிய
என்ன கிளவியும் குறிப்பே காலம்' தொல்.
சொல். 231

என்பது இலக்கணம் ஆதலான்.

இனி—இப்பொழுது என்று காலங்காட்டும் இடைச்சொல்; அணி—அணிய இடத்தே என இடம் காட்டும் இடைச்சொல்; கடி பலபொருள்படும் உரிச்சொல்.

'கடியென் கிளவி வரைவே கூர்மை
காப்பே புதுமை விரைவே விளக்கம்
மிகுதி சிறப்பே அச்சம்முன் றேற்றோடு
ஐயமும் கரிப்பும் மணமும் அறைதலும்'
(இ. வி. 282)

என்ற நூற்பாப் பகுதி காண்க.

பனி என்பது பனிக்காலத்தையும் பனி என்னும் நோயையும் (குளிர்காய்ச்சல்) உணர்த்தும் ஆதலின், ஈண்டுக் காலப் பெயரே கொள்க.

இவ்வாசிரியர்க்கு அளபெடை நெடிலொடு கூடிய குறில் ஆதலின். அளபெடை ஈறும் குற்றெழுத்து ஈறே; 'அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்' (தொல். சொல். 227) என்பதனான் முன்னூல் மரபை இவர் கைக்கொண்டது காண்க. தழீஇ என்பதன் இகரம் இருமொழிப் புணர்ச்சிக்கண் ஏற்பட்டது அல்லாமை காண்க.

ஏஎக் கடுமை ஓஒக் கடுமை முதலியவற்றின்கண் காணப்படும் எழுத்துப்பேறளபெடை இவ்வியல் புறனடை நூற்பாவால் இவர் அடக்குகிறார். எழுத்துப் பேறு

அளபெடைக்குத் தொல்காப்பியனார் போலத் தாம் தனியே நூற்பா இயற்றாமையின் என்க.

ஐகார ஈற்றுப் பெயரின் அவ்வழி முடிவு 77ஆம் நூற்பாவில் குறிக்கப்பட்டுள்ளது.

ஒல்லை, வல்லை, பின்னை, முன்னை - குறிப்பு வினையெச்சங்கள், கடை, மை வினையெச்ச ஈறுகள்.

மற்றை - இடைச்சொல், (தொல். சொல். 266; இ. வி. 268)

பணை — உரிச்சொல்.

பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்'
தொல் சொல். 339

'பணையே பிழைத்தலும் பெருத்தலும் உரைத்தலும்' இ. வி. 282

தருபாக்கு—பாக்கு ஈற்று வினையெச்சம். (இ. வி. 246)

மற்று—இடைச்சொல் (இ. வி 266)

அதிர்ப்பு—உரிச்சொல்.

'அதிர்ப்பும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்'
தொல். சொல். 3.6

அதிர்ப்பு என்பதே மயிலைநாதர் கொண்ட பாடம் போலும் (நன். 164 இ. வி. 281)

விளக்குறிது முதலியன — தொல். 203

விளக்குறுமை முதலியன— தொல். 216

வினையெச்சம் முதலியன— தொல். 204

தொல். 216 உரையில் நச்சினார்க்கினியர் இரு விளக்குறுமை முதலாகக் குண வேற்றுமைக் கண்ணும் கொள்ளுமாறு கூறி, 'இருவிள என்பது ஓலை வேணாட்டகத்து ஓர் ஊர்; கருவூரின் அகத்து ஒரு சேரியும் என்ப' எனறும் குறிப்பிட்டுள்ளார்.

தாராக் கடிது முதலியன— தொல். 221

உசாக் கடுமை முதலியன— தொல். 225

உண்ணாக் கொண்டான் முதலியன— தொல். 222

தொல்காப்பிய 222ஆம் நூற்பாவாவது

'செய்யா என்னும் வினைஎஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்'என்பது.

இந்நூற்பா உரையில் நச்சினார்க்கினியர். செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும் உம்மையான் பெயரெஞ்சு கிளவியும்' என்று கொண்டு, உண்ணாக் கொண்டான், உண்ணாக்கொற்றன் என இருதிறத்து எடுத்துக்காட்டுக்களையும் தந்துள்ளார்.

இனி, அணி—வினையெச்சம். (தொல். 236)

இந்நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர், 'இனிக் கொண்டான் அணிக்கொண்டான் என்பன, இப்பொழுது கொண்டான் அணிய இடத்தே கொண்டான் என உருபின் பொருள்பட வந்த வேற்றுமை யாதலின், வேறோதி முடிக்கப் பட்டன' என்றார்.

கிளிக்கால் முதலியன— தொல். 235

கிளிகுறுமை கிளிக்குறுமை எனக் குணம்பற்றி வந்த உறழ்ச்சி முடிபினை நச்சினார்க்கினியர் 'வல்லெழுத்து மிகினும்' தொல். 246 என்ற நூற்பாவின் 'ஒல்வழி அறிதல்' என்ற மிகையால் கொண்டார்.

பனியத்துக்கொண்டான், பனியிற் கொண்டான் தொல். 241

ஈக்கடிது முதலியன தொல். 249

ஈக்கால் முதலியன 252

கடுக்குறிது முதலியன 254

கடுக்காய் முதலியன 259

கொண்மூக்கடிது முதலியன 264
கொண்மூக்கடுமை முதலியன 266
உண்ணூக்கொண்டான் முதலியன— 265

ஏக்கடிது முதலியன—தொல். 274

ஏளக் கடுமை முதலியன—276, 77.

ஐகார ஈற்று வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் புணர்ச்சி முடிபினை 'வேற்றுமை அல்வழி' தொல். 158 என்ற நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்;

இகர ஈற்றுவினை இடை உரிச்சொல் புணர்ச்சிகளையும் அந்நூற்பாவிலேயே சுட்டியுள்ளார்.

உழைங்கோடு—தொல். 286

கலைங்கோடு. கலைக்கோடு— தொல். 286; இந்நூற்பாவில் திங்களை முன்னர்க் கூறிய முறையன்றிக் கூற்றினால் நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார்.

ஓக்கடிது முதலியன—தொல். 289
ஓஒக்கடுமை முதலியன—தொல். 292
கொக்குக் கடிது முதலியன—தொல். 426
கொக்குக் கால் முதலியன—தொல். 414

அடித்துக்கொண்டான் முதலிய வினைச்சொற்களை நச்சினார்க்கினியர் தொல். 427ஆம் நூற்பாவின் 'இயற்கை' என்ற மிகையால் கொண்டார்.

உரிச்சொல் படுத்தல் ஓசையால் பெயர்த்தன்மைப் படும் என்று நச்சினார்க்கினியர் தொல். 184ஆம் நூற்பா உரையில் குறிப்பிட்டுள்ளார்.

யானையைக் கொணர்ந்தான் என உருபேற்ற சொல் வன்கணம் வந்தவழி மிகுதலை, நச்சினார்க்

கினியர் தொல். 280ஆம் நூற்பா உரையில் 'வேற்றுமை யாயின்' என்பதனால் அடக்குகிறார்.

ஊர்க்குக்கொண்டான் — நிலைமொழியில் ஒற்று மிகுதல் தொல். 114ஆம் நூற்பாவாலும், வருமொழி ஒற்று மிகுதல் 414ஆம் நூற்பாவாலும் கொள்ளப்படும்.

காட்டாது ஒழிந்தன :

அகரஈறு—மக என்ற பெயர்ப் புணர்ச்சி.

ஆகாரஈறு—நிலா; யா பிடா, தளா என்ற மரப் பெயர்ப் புணர்ச்சி. 83

இகர ஈறு—வளி; உதி, புளி என்ற மரப் பெயர்; 83

இகர ஈற்று நாள், திங்கள் ஆகிய பெயர் இவற்றின் புணர்ச்சி.

உகர ஈறு—எரு, செரு. ஒடு என்ற மரப் பெயர் இவற்றின் புணர்ச்சி. 83

ஊகாரஈறு—ஊ என் பெயர், ஆடு மகடு முன்னிலை வினை இவற்றின் புணர்ச்சி.

ஏகார ஈறு—சே என்ற பெற்றப் பெயர்ப் புணர்ச்சி.

ஐகார ஈறு — விசை ஞெமை நமை 83 அரை ஆவிரை 84, என்ற மரப் பெயர், மழை என்ற பெயர், நாட்பெயர் திங்கட்பெயர் இவற்றின் புணர்ச்சி.

குற்றுகர ஈறு-மரப்பெயர்ப் புணர்ச்சி 83 முதலியன. இவற்றைத் தொல்காப்பிய நூலில் காண்க. இவற்றுள் மரப் பெயர்ப் புணர்ச்சி பெரும்பான்மையும் அடுத்த நூற்பாவில் கூறப்படும்.

இலக்கண விளக்கச் சூறாவளி

பிறிது என்னும் நயம் பற்றிக் கூறலாம் என்றார்க்கு, 'இயல்பினும் விதியினும்' எனப் பகுத்துக் கூறல்

பொருந்தாமை அறிக. புலி போலக் கொண்டான் என்புழிப்போல என்பது, உணக் கொண்டான் என்புழிப் போலக் காலம் நோக்கி நிற்றலின் தெரிநிலை வினை ஆவது அல்லது குறிப்பு வினை ஆகாது என மறுக்க. கண்டெனக் கொண்டான் என்புழி என என்பது செய்து செய்யூ முதலியவற்று ஈறு போல வினையெச்ச விகுதியே என மறுக்க. அதிர்ப்புக் கடிது என்பதனுள் அதிர்ப்பு என்பதனைக் குற்றியலுகர ஈற்று உரிச்சொல் என்றார், உரிச்சொல் இலக்கணம் அறியாமையின், அதிர் என்னும் உரிச் சொல் புகர விகுதி பெற்றுத் தொழிற் பெயராய் நிற்குமாறு அறிக.

அமைதி: திரிந்ததன்திரிபு அதுவும் பிறிதும் என்னும் நயம் பற்றி இவ்வாசிரியர் நூற்பாயாத்திலர். அதுவும் பிறிதும் என்பதன் விளக்கம் இரண்டாம் நூற்பா உரையில் காண்க. முனிவர் பிறிது என்று தனியே கொண்டு அதற்கு விதியீறு என்று தாமே உரை செய்து கொண்டு குற்றம் காண முற்படுதல் பொருந்தாமை உணர்க. அதுவும் பிறிதும் என்பது 'ஆறன் உருபின் அகரக்கிளவி' தொல். 115 முதலிய நூற்பாக்களால் உணரப்படும்.

புலிபோலக் கொண்டான் புலிபோலக் கொள்கிறான் புலி போலக் கொள்வான் எனவும், புலிபோன்று கொண்டான் போன்று கொள்கிறான் புலிபோன்று கொள்வான் எனவும்போல என்பதும் போன்று என்பதும் தாமே காலங் காட்டாது கொண்டு முடியும் வினையின் காலத்தையே கொள்ளும் இயல்பு நோக்கிப் போல என்பதனைக் குறிப்பு வினையெச்சம் என்று கூறுவதில் இழுக்கு இன்மை அறிக.

கண்டென என்பதன்கண் என என்னும் ஈறு செய்யும் பொருட் சிறப்பை எடுத்து ஓதி அதனைச் செய்தென என்ற எச்சமாகவே இவ்வாசிரியரும் கொண்டுள்ளமை காண்க. செய்தென என்ற வினையெச்சமும் செய்து

என்பதனொடு என எனபது இணைந்தே உண்டா யினமை அறிக.

உரிச்சொல் பெயரும் வினையும் போல இருக்கும் என்று கூறிய தொல்காப்பியனாரே 'வார்தல் போகல் ஒழுகல்' என்றாற் போல ஈற்றொடு புணர்த்து அந்நிலை யிலேயே அவற்றை உரிச்சொல் என்று சுட்டியிருத்தலின் அதிர்ப்பு என்பதே உரிச்சொல் என்று கோடற்கண் இழுக்கின்மை அறிக. 'அதிர் விதிர்' என்பனவே உரிச் சொல்லாயின் ஆசிரியர் 'அதிரும் விதிரும் நடுங்கு பொருள' என்று நூற்பா யாத்திருப்பாராதலும் காண்க.

ஏந்த நூற்பாக்கள் :

'அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை அல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே.' தொல். 203

'வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
என்என் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே' 204

'வேற்றுமைக்கண்ணும் அதனோ ரற்றே' 216, 225

'ஆகார இறுதி அகர இயற்றே' 221

'செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்.' 222

'இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே'. 235

'இனி அணி என்னும் காலையும் இடனும்
வினைஎஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன. 236

'பனிஎன வருஉம் கால வேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை ஆகும்.' 241

'ஈகார இறுதி ஆகார இயற்றே' 249

'வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே' 252

'உகர இறுதி அகர இயற்றே' 254

'வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே' 259

'ஊகார இறுதி ஆகார இயற்றே' 26

'வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங் காலை அவ்வகை வரையார்' 265

'வேற்றுமைக் கண்ணு அதனோ ரற்றே' 266

'ஏகார இறுதி ஊகார இயற்றே.' 274

'வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே ' 275

'ஏஎன் இறுதிக்கு எகரம் வருமே.' 276

'ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே' 280

'ஓகார இறுதி ஏகார இயற்றே.' 289

'வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஒகரம் வருதல் ஆவயி னான.' 292

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து
மிகுமே.' 426

'வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத்து ஒற்றிடை மிகுமே' 414

'ஆவியின்பின் ஆற்றுந் திறல்வந திடில்
அவற்றின் வருக்கம்...' வீ. 20

'வாய்ந்த உயிர்ப்பின் வரும் எழுத்தின் வர்க்கத்
தொற்று, ஏய்ந்து புகுதும்...' நே. 16

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் விதவாதன மன்னே.' நன். 165

'அகரச் சுட்டும் ஆங்கவும் உவமையும்
எனஎன் எச்சமும் இருவழி யினும்மிகும்' மு.வீ. 74

'வினைஎஞ்சு கிளவியும் மிகும்என மொழிப' 75

'இனிஅணி இகரச் சுட்டுஒற்று இடைமிகும்' 99

'இன்னும் அத்தும் பனியொடு சிவணும்.' 103

'ஊகார இறுதி முன்னிலை மொழியும்
வினைஎஞ்சி கிளவியும் மிகும்என மொழிப' 117

'எகரச் சாரியை ஏஎற் கும்மே' 123

மரப்பெயர் வன்கணத்தோடு புணர்தல்

83. மெல்லெழுத்து மிகுநவும் வல்லெழுத்து மிகுநவும்
அம் இடை வருநவும் உறழ்ச்சி வருநவும்
என்று ஒருநால் வகைய மரப்பெயர் அன்னவை
வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்.

இஃது உயிர் ஈற்று மரப்பெயர்களுக்கு ஒருவழி எய்தாதது எய்துவித்தலும் எய்தியுது இகந்து படாமைக் காத்தலும் நுதலிற்று.

இ-ள் : மெல்லெழுத்து மிக்கு முடிவனவும், வல்லெழுத்து மிக்கு முடிவனவும், அம்முச் சாரியை இடையே பெற்று முடிவனவும், ஒருகால் மெல்லெழுத்துப் பெற்றும் ஒருகால் வல்லெழுத்துப் பெற்றும் இவ்வாற்றான் உறழ்ச்சி முடிபு எய்துவனவும் என ஒரு நால்வகையினை உடையவாம் மரப்பெயர்கள்; அவ்வியல்பினை உடையவற்றை விரிந்த நூல்களில் எடுத்தோத்தானும் இலேசானும் கூறியவாறு நோக்கி வேற்றுமைப் புணர்ச்சிக்கண் பாதுகாத்து அறிக என்றவாறு

வல்லெழுத்து மிகுதியும் கூறினார், ஐயம் அறுத்தற்கு.

எ-டு : விளங்கோடு அதங்கோடு மாங்கோடு காயாங்கோடு சேங்கோடு விசைங்கோடு ஞெமைங்கோடு நமைங்கோடு அமைங்கோடு உடையங்கோடு - செதிள்-தோல்-பூ-என இவை மெல்லெழுத்து மிக்கன. ஏற்புழிக் கோடலான், இனமெல்லெழுத்தே மிகுதல் கொள்க. மேலும் வாளா மெல்லெழுத்து எள்புழி எல்லாம் ஏற்புழிக் கோடலான் இனமெல்லெழுத்தே கொள்க.

பலாஅக்காய் அத்திக்காய் அகத்திக்காய் கடுக்காய் இலந்தைக்காய் கொன்றைக்காய் புன்னைக்காய்-செதிள் தோல்-பூ-இவை வல்லெழுத்து மிக்கன.

__ளிபுயங்கோடு அரையங்கோடு தேக்கங்கோடு குருந் தங்கோடு புன்கங்கோடு வேப்பங்கோடு கடப்பங்கோடு-செதிள்—தோல்—பூ என இவை அம்முப் பெற்றன.

யாஅங்கோடு யாஅக்கோடு, பிடாஅங்கோடு, பிடா அக்கோடு, தளாஅங்கோடு, தளாஅக்கோடு - செதிள்-தோல்-பூ என இவை மெல்லெழுத்துப் பெற்றும் வல் லெழுத்துப் பெற்றும் உறழ்ந்தன.

உதிங்கோடு உதியங்கோடு, ஒடுங்கோடு ஒருவங் கோடு - செதிள் - தோல் - பூ இவை மெல்லெழுத்துப் பெற்றும் அம்முப் பெற்றும் உறழ்ந்தன.

புன்னையங்கானல் புன்னைக்கானல், முல்லையந் தொடையல், முல்லைத்தொடையல், மணையங்கோல் மணைக்கோல்—என இவை அம்முப்பெற்றும், பெறாது வல்லெழுத்துப் பெற்றும் உறழ்ந்தன. பிறவும் அன்ன. உதி இக்காலத்து ஒதி என மருவிற்று.

'போற்றல் வேண்டும்' என்றதனானே, 'புளிங்காய் வேட்கைத் தன்று' (ஐங் 51) எனவும் புளிம்பழம் எனவும் அம்முப் பெறாது சிறுபான்மை மெல்லெழுத்து மிகுதலும் கமுகங்காய் தெங்கங்காய் ஈச்சங்காய் பயற்றங்காய் சீழ் கம்புல் என்றாற் போலும் புல்லினையும் மரம் என அடக்கி அம்முக் கொடுத்தலும்,

'யாணர்க் கோங்கின் அவிர் முகை' சிறுபாண். 25 எனவும்

'காய்மாண்ட தெங்கின் பழம்' சிந். 31

எனவும் இன் பெறுதலும், பிறவாறு வருவன உளவேல்

அவையும் ஏற்குமாறு முடித்துக் கொள்க, இவற்றுள் அகரம் பெறுவன புறனடையால் முடிக்க. 31

விளக்கம்: எய்தாதது எய்துவித்தல்-மெல்லெழுத்து மிகுதல். அம்முச்சாரியை பெறுதல். இரண்டுடன் உறழ்ச்சி என்பன. எய்தியது இகந்துபடாமைக் காத்தல்—வல்லெழுத்து மிகுதல்.

சென்ற நூற்பாவில் கூறப்பட்ட வல்லெழுத்து மிகுதியை ஈண்டும் கூறினார், மரப்பெயர்கள் வல்லெழுத்தும் மிகுமோ மிகாவோ என்ற ஐயம் அறுத்தற்கு.

மெல்லெழுத்து எனப் பொதுப்படக் கூறியவழி எல்லாம்,

'கசதப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம என்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான.' தொல்.143

என்ற முதனூல் நூற்பாவான்வருமொழி வல்லினத்துக்கு இனமான மெல்லெழுத்தே கொள்ளப்படும்.

விளங்கோடு, அதங்கோடு — தொல். 217
மாங்கோடு — தொல். 231
காயாங்கோடு — தொல். 231
('அவண்' என்ற மிகை. நச்.)
சேங்கோடு — தொல். 278

விசைங்கோடு உடைங்கோடு — தொல். 282-உம், 286ஆம் நூற்பாவில் திங்களை முன்கூறிய முறையன்றிக் கூற்றின் பயனும் (நச்சினார்க்கினியர்)

தொல். 231ஆம் நூற்பாவில் 'அவண்' என்ற மிகையான் காயாங்கோடு நுணாங்கோடு ஆணாங்கோடு என்பனவற்றை நச்சினார்க்கினியர் கொண்டதோடு,

286-ஆம் நூற்பா மிகையான் உழைங்கோடு அமைங் கோடு உடைங்கோடு முதலியனவற்றைக் குறிப்பிட் டுள்ளார்,

பலா அக்காய் — தொல். 226

ஏனைய மிகுதிகள் 'இகர இறுதி' தொல். 235. 'உகர இறுதி வேற்றுமை (259), 'ஐகார இறுதி' (280) என்ற நூற்பாக்களால் கொள்ளப்பட்டன.

புளியங்கோடு — தொல். 244
அரையங்கோடு — தொல். 283
தேக்கங்கோடு முதலியன — தொல். 415
புன்கங்கோடு குருந்தங்கோடு — தொல், 416
வேப்பங்கோடு கடப்பங்கோடு — தொல், 416 ஆம் நூற்பாவின் 'உம்மை'.
யா அங்கோடு ......பிடா அங்கோடு தளா அங்கோடு- தொல். 229
யா அக்கோடு பிடா அக்கோடு தளா அக்கோடு— தொல். 230
உதிங்கோடு தொல். 243

உதிமரம் பற்றிய புணர்ச்சியினைப் புளிமரம் பற்றிய சொற்புணர்ச்சியை அடுத்து வைத்தமையால், உதியங் கோடு முதலிய அம்முச்சாரியை பெறுவனவற்றைக் கொண்டார் நச்சினார்க்கினியர் (243)

ஒடுங்கோடு— தொல். 262

ஒடுவொடு மாட்டெறிந்த உதி போலவே, இதற்கும் நச்சினார்க்கினியர் அம்முச்சாரியை கொண்டார்.

புன்னையங்கானல் முல்லையந்தொடையல் — 'வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி' — ஈற்றழி வோடும்அம் ஏற்பவும் உளவே (நன். 202) என்ற நூற்பாவின் மிகை.

வல்லெழுத்துப் பெறுதல்—சென்ற நூற்பா (இ. வி. 82) உதி இக்காலத்து ஒதி என மருவிற்று—தொல். 243 நச். உரை;

'நேரிழையார் கூந்தலின் ஓர் புள்ளி பெறின் நீள் மரமாம்' என்ற பாடலும் இதை வலியுறுத்துகிறது. நேரிழையார் கூந்தல் ஓதி; நீள்மரம் ஒதி.

புளியமரத்தின் காய் 'புளிங்காய்' எனவும். புளிய மரத்தின் பழம் புளிம்பழம் எனவும் புணர்தல் தொல். 246ஆம் நூற்பாவில் 'வழக்கத்தான' என்ற மிகையால் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டது.

தொல். 415ஆம் நூற்பா உரையில் கமுகங்காய் தெங்கங்காய் சீழ்கம்புல் கம்பம்புலம் பயற்றங்காய் என்றாற்போலும் புல்லினையும் மரம் என அடக்கி 'மாறுகொளக் கூறல்' எனத்தழீஇக் கொண்ட சிதைவு என்பதாம் இச் சூத்திரம் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தைப் பேராசிரியரும் தொல்காப்பியப் பொருட்படல 664ஆம் நூற்பா உரையில் குறிப்பிட்டுள்ளார். சிதைவு எனப்பட்ட குற்றங்கள் பத்தனுள் கூறியது கூறல், மிகைபடக் கூறல், மாறு கொளக்கூறல். பயனில மொழிதல் மயங்கக்கூறல் என்பன தழுவிக்கொள்ளத்தக்க சிதைவுகள் ஆதல் அந் நூற்பாவிற்குப் பேராசிரியர் உரைத்த உரையான் உணரப்படும்.

'கோங்கின் குவிமுகை. தெங்கின்பழம்' என உருபிற்குச் சென்ற சாரியை (தொல். 195) பொருட்கண் சென்றவழி நிகழும் புணர்ச்சியினை நச்சினார்க்கினியர் 411ஆம் நூற்பாவின் 'வத்த' என்ற மிகையால் கொள்வர்.

அகரமாகிய எழுத்துப்பேறு அளபெடை பெறுவன யாஅங்கோடு முதலியன.

ஒத்த நூற்பாக்கள் :

'மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுகே.'
தொல். 217

'மாமரக் கிளவியும் ஆவும் மாவுவ்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத்து அவை அவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்.' தொல் 231

'சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே' 278

'விசை மரக் கிளவியும் ஞெமையும் நமையும்
ஆமுப் பெயருமசேமர இயல.' 282

'குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி.' 226

'புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.' 244

'பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்.' 283

'மரப் பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை.' 415

'யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே.' 229

'வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை.' 240

'உதி மரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே.' 243

'ஒடு மரக் கிளவி உதிமர இயற்றே' 262

'மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை.' 415

'மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே' 416

'மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு நவும்உள வேற்றுமை வழியே' நன். 166

'யாவும் பிடாவும் தளாவும் மெலிமிகும்' மு.வீ.பு. 94

'வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை' 95

'உதியெனும் மரம்மெலி மிகும் என மொழிப' 105

'அம் முச்சாரியை அடையு மாம்புளி.' 106

'ஒடுமரப் பெயர் உதி மரஇயல் நிலையும்.' 115

'சேமரம் ஒடுமரச் செய்கையின் இயலும்.' 124

'விசை ஞெமை நமையொடு விருக்கத்து
இயல்பே.' 126

'ஆவிரை பனை அரை அம்மொடு சிவணும்.' 127

'மெல்லொற்று வலியா மரப்பெயர் உளவே.' 239

பனைப்பெயர்ப் புணர்ச்சி

84. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்
அட்டுஉறின் ஐகெட்டு ஆவும் ஆம் பிற.

இஃது ஒன்றற்கு எய்தியது இகந்துபடாமை காத்தலும், எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ-ள்: பனை என்னும் சொல் முன்னர்க்கொடி என்னும் சொல்வரின் பனைக்கொடி என வருமொழி வல்லெழுத்துமிக்கு முடிதலும் ஏனை, வல்லெழுத்து முதல் மொழிவரின் பனங்காய்—செறும்பு—தூண்—பழம் என ஐகாரம் கெட்டு அம்முப் பெற்று முடிதலும். திரள் என்னும் சொல்வரின் ஒருகால் பனந்திரள் என ஐகாரம் கெட்டு அம்முப்பெற்று முடிதலும் பனைத்திரள் என ஒருகால் ஐகாரம் கெட்டு அம்முப் பெறாது வல்லெழுத்து மிக்கு முடிதலும் அட்டு என்னும் சொல் வருமொழியாய் வந்து ஒன்றுமாயின் பனாஅட்டு என ஐகாரம் கெட்டு அவ்விடத்து ஓர் ஆகாரம் தோன்றி ஐகாரம் கெட நின்ற னகர ஈற்றின்மேல் ஏறி முடிதலும் ஆம் என்றவாறு.

'பிற' என்றதனானே ஆவிரங்காய் தூதுணங்காய் வழுதுணங்காய் தில்லங்காய் பாவட்டங்காய் தாழங்காய் செதின்-தோல்-பூ எனவும் ஓலம்போழ் எனவும் வருவனவும், அவை போல்வன பிறவும் ஐகாரம் கெட்டு அம்முப்

பெற்று முடிதல் கொள்க. பனைக்கொடி என்பதற்கு இரண்டாவதும் மூன்றாவதும் பனாஅட்டு என்பதற்கு மூன்றாவதும் ஆறாவதும் விரியும். 32

விளக்கம் : எய்தியது-சென்ற நூற்பாவில் கூறப் பட்ட மிகுதி எய்தாதது எய்துவித்தல்' ஐ கெட்டு அம்முப் பெறுதல், திரள் வரின் உறழ்தல். அட்டு உறின் ஐ கெட்டு ஆகாரம் பெறுதல் என்பன.

'பனையும் அரையும்' தொல்.283 என்ற நூற்பாவில் ஆவிரை ஐ கெட்டு அம்முப் பெறுதல் கூறப்பட்டுள்ளது. அதன் உரையில் 'நினையுங்காலை' என்ற மிகையான் தூதுணை, வழுதுணை, தில்லை, ஓலை, தாழை என்பன தூதுணங்காய், வழுதுணங்காய், தில்லங்காய் ஓலம்போழ் தாழங்காய் என வருவனவற்றை நச்சினார்க் கினியர் குறிப்பிடுகிறார்.

பனாஅட்டு - இதற்கு மூன்றாவதும் ஆறாவதும் விரியும் (பனையினால் ஆகிய தீங்கட்டி பனையினது தீங்கட்டி) என 284ஆம் நூற்பா உரையிலும், பனைக் கொடி—இதற்கு இரண்டாவதும் மூன்றாவதும் விரியும் (பனையினை உடையகொடி ,பனையொடுகூடிய கொடி) என 285ஆம் நூற்பா உரையிலும் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாசிரியர் பாவட்டங்காய் என்பதனையும் கொண்டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங்காலை அம்மொடு சிவணும்
ஐஎன் இறுதி அரைவரைந்து கெடுமே
மெய் அவண் ஒழிய என்மனார் புலவர்' தொல். 283

'பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின்று ஆகும் ஐஎன் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயி னான.' தொல். 284

'கொடிமுன் வரினே ஐ அவண் நிற்பக்
கடிநிலை இன்றே வல்லெழுத்து மிகுதி'
தொல். 285

'பனைமுன் கொடிவரின் மிகலும் வரிவரின்
ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்
அட்டுஉறின் ஐகெட்டு அந்நீள்வுமாம் வேற்றுமை'
நன். 203

'வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி
ஈற்றழி வோடும்அம் ஏற்பவும் உளவே' நன். 211

'ஆவிரை பனை அரை அம்மொடு சிவணும்.'
மு. வீ. பு. 127

'அவற்றுள்
ஆவிரை பனை இறு ஐஉயிர் அழியும்.' மு.வீ.பு.128

அகர ஈற்றுச் சிறப்பு விதி—85—89
சாவ' மூல வன்கணம்

85. சாவ என்னும் செய என் எச்சத்து
இறுதி வகரம் கெடுதலும் உரித்தே.

இஃது ஓர் அகர ஈற்று வினைச்சொற்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

இ-ள் : சாவ என்று சொல்லப்படும் செய என் எச்சத்து இறுதிக்கண் நின்ற அகரமும் அதனால் பற்றப் பட்ட வகரமும் கெட்டு நிற்றலும் கெடாது நிற்றலும் உரித்து என்றவாறு.

எ-டு : கோட்டிடைச் சாக்குத்தினான், சாவக்குத் தினான்-சீறினான்-தகர்த்தான்-புடைத்தான்-ஞான்றான் -நீண்டான்-மாண்டான்-யாத்தான்-வீழ்ந்தான்- அடைந் தான்-என வரும். நிலைமொழித் தொழில் ஆதலின்

இயல்பு கணத்திற்கும் இவ்விதி கொள்க. இந்நிகரன வாய் மேல் வருவனவற்றிற்கும் ஈறு ஒக்கும். 33

விளக்கம் : எய்தாதது எய்துவித்தல்-சாவ என்பதன் வகரம் கெடும் என்பது. இறுதி வகரம் ஒற்றுமை நயத்தால் வகர உயிர்மெய்க் குற்றெழுத்தைக் குறிக்கும் என்று கொள்ளின், 'உரித்து' என்ற ஒருமை வினையொடு முடிதற்கண் இடர்ப்பாடு இராது தொல்காப்பிய உரையாசிரியர்களே இறுதியும் வகர மெய்யும் என வேற்றுமை நயம்பற்றிப் பிரித்துக் கொண்டதை இவரும் பின்பற்றியுள்ளார். இங்ஙனம் உரை கூறுவதற்கு, இறுதி கெடுதலும் உரித்து வகரம் கெடுதலும் உரித்து எனத் தனித்தனிப் பிரித்துக் காட்டி முடிவு கோடல் வேண்டும்.

இந் நூற்பா தொல்காப்பியத்தின் 209ஆம் நூற்பாவாகும். உரை நச்சினார்க்கினியரும் உரையாசிரியரும் வரைந்துள்ள உரையேயாம்.

இம்முடிபினை உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் இதனை 'வினையெஞ்சு கிளவி' தொல்- 204, என்பதன் பின்வையாத முறையன்றிக் கூற்றினால் கொண்டனர். இவர் வருமொழி வரையாது நிலைமொழி ஈற்றெழுத்திற்கே விதி கூறியவாற்றான், வருமொழி இயல்புகணத்துக் கண்ணும் இப்புணர்ச்சி முடிவு கொண்டார்.

சாவ+ஞான்றான்—சாவஞான்றான் சாஞான்றான் என வரும்.

இந் நூற்பா முதல் இவ்வியல் உயிரீறு பற்றிய புணர்ச்சி விதிகளைக் கூறுகிறது.

ஒத்த நூற்பாக்கள் :

முழுதும் தொல். 209

'சாவஎன் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி.'
நன். 169 மு. வீ. பு 80

'சாவ......என்புழிச் சார்ந்த இறுதி......
'போவது உயிர் மெய்யென்று போற்று.' நே 23

இயல்பு புணர்ச்சி

86. செய்யிய எனு ம் வினை எச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம்முற்று ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே.

இஃது அகரஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ-ள். செய்யிய என்னும் வாய்பாட்டான் வரும் வினையெச்சமும் வினையும் வினைக்குறிப்பும் எதிர்மறையும் பற்றி வரும் பெயர் எச்சமும். அஃறிணை வினைமுற்றும், வினைக்குறிப்பு முற்றும், ஆறன் உருபும், அஃறிணைப் பன்மைப் பெயரும், அம்ம என்னும் உரையசை இடைச்சொல்லும் ஆகிய அகர ஈற்று இவ்வறு வகைச்சொற்கள் முன்னரும் வருமொழி வல்லெழுத்து இயல்பாய் முடியும் என்றவாறு.

இதன் முதல் ஈறுகளில் அகர ஈற்றுமொழியை வைத்தமையால் இடை நின்றனவும் அகர ஈறேயாம் எனவும், அஃறிணைப் பன்மை வேற்றுமைக்கண் அற்றுப் பெற்று முடிதல் மேல் (146) மாட்டேற்றான் பெறப் படுதலின் ஈண்டு இயல்பு என்றது அவ்வழிக்கண்ணே எனவும் கொள்க.

எ-டு. உண்ணிய கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எனவும், உண்ட குதிரை உண்ணா நின்ற குதிரை, பொன் அன்ன குதிரை பொன் போன்ற குதிரை பொன் அனைய குதிரை பொன் நிகர்த்த குதிரை பொன் ஒத்த குதிரை, அன்ன குதிரை

இன்ன குதிரை என்ன குதிரை, பெரிய குதிரை சிறிய குதிரை செய்யகுதிரை இனியகுதிரை தண்ணிய குதிரை நல்ல குதிரை, உண்ணாத குதிரை ஓடாத குதிரை - செந்நாய்-தகர்-பன்றி-எனவும்,

பல குதிரை சில குதிரை - செந்நாய் - தகர்-பன்றி- எனவும். அம்ம கொற்றா-சாத்தா-தேவா-பூதா-எனவும், முறையே காண்க.

எவற்றினும் சிறப்புடைய அஃறிணைப் பன்மையை முற் கூறாமையான் அம்மா கொற்றா என நீண்டுழியும் இயல்பு ஆதலும், வடகடல் வடதலை என்றால்போலும் விதி அகர ஈற்றுப்பெயர் முன் இயல்பு ஆதலும் கொள்க. 34

விளக்கம் : எடுத்துக்காட்டுக்கள் பெரும்பாலும் மயிலைநாதர் உரைத்தனவே. 'முதல் ஈறுகளில் அகர ஈற்று மொழிகளை வைத்தமையால் இடையனவும் அகர ஈறேயாம்' எனவும், பலவகைப் பெயரின் எச்சம் என்றது, தொழிலும் ஒப்பும்பண்பும் முதலாயனவும் எதிர்மறையில் வருவனவும் எல்லாம் தழுவுதற்கு எனக்கொள்க எனவும் மயிலைநாதர் (நன். 166) கூறியுள்ளார்.

உண்ட குதிரை உண்ணாநின்ற குதிரை - தொழில் பற்றிய பெயரெச்சத்தொடர். பொன் அன்ன குதிரை முதல் ஒத்த குதிரை ஈறாக உள்ளன உவமைப் பண்பு பற்றிய பெயரெச்சத்தொடர்.

அன்ன குதிரை முதல் நல்ல குதிரை ஈறாக உள்ளன பல்வகைப் பண்பு பற்றிய பெயரெச்சத்தொடர்.

உண்ணாத குதிரை ஓடாத குதிரை என்பவை அகர ஈற்று எதிர்மறைப் பெயரெச்சத்தொடர்.

ஆகார ஈற்று எதிர்மறைப் பெயரெச்சம் பிற்காலத்தில் அகர ஈற்றுப் பெயரெச்சமாக விரிந்த செய்தி 82-ஆம் நூற்பா உரையுள் விளக்கப்பெற்றது. இக்காலத்து

உண்ணாத குதிரை என்பதே இயல்பாகவும், உண்ணாக் குதிரை என்புழி உண்ணாஎன்பது ஈறுகெட்ட பெயரெச்ச மாகவும் மரபு மாறி வழக்காறு பெற்றுவிட்டன.

அஃறிணைப் பன்மைப்பெயர் வேற்றுமைக்கண் அற்றுப் பெற்று முடிதல் 'உருபின் முடிபவை ஒக்கும்அப் பொருளினும்' (இ. வி. 146) என்புழிக் குறிப்பிடுதலால், ஈண்டு அல்வழியே கொள்ளப்பட்டது.

பெயர் பொருளைக் குறிப்பதாலும்,வினை பொருளது புடைபெயர்ச்சியையே குறிப்பதாலும், பொருள் இல் வழிப் புடைபெயர்ச்சி என்பதே இன்று ஆதலாலும் பெயர் சிறப்புடையது என்பது பற்றிச் 'சிறப்புடையது அஃறிணைப் பன்மைப் பெயர்'என்பது குறிக்கப்பட்டது.

'உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார்' தொல். 212 என்ற நூற்பாவால் அம்மா கொற்றா என்பது தொல்காப்பியனாரால் கொள்ளப்பட்டது.

வடக்கு + கடல் — வட+கடல் என விதி அகரஈறு ஆதல் 'திசையொடு திசையும்' இ. வி. 105 என்ற நூற்பாவால் கொள்க.

'பல்வகைப் பெயரின் எச்சம்' என்பது வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சம்; 'பல்வகை முற்று' என்பது வினையடி நான்கினும் பிறந்த முற்று.வினையடி நான்காவன இயல்பாகிய வினையடி ஒன்றும், ஏனைய பெயர் இடைஉரி அடியாகப் பிறந்த வினையடி மூன்று மாம்' என்பது நன்னூல் விருத்தி 167.

இலக்கண விளக்கச் சூறாவளி

உருபு உயிர் ஈண்டு அடங்காது என 'மூன்றன் உருபினும் ஆறன் உருபினும்' இ. வி. 118 என வேறு சூத்திரம் செய்வார்க்கு ஈண்டு ஆறன் உருபு வேறு ஓதல் பொருந்தாமை உணர்க.

சொல் பல்கச் சூத்திரம் செய்தற்கு அஞ்சாதார். ஈண்டை விதிகளை நன்னூலார் போலச் சாலவும் சொல் சுருங்கச் சூத்திரித்தும், 'அன்றுவரு காலை அஆ குதலும் ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும், செய்யுள் மருங்கின் உரித்துஎன மொழிப' இ.வி. 95 'மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்..... அன்ன பிறவும் தன்இயல் மருங்கின், மெய்பெறக் கிளந்து பொருள் வரைந்து இசைக்கும். ஐகார வேற்றுமைத் திரிபுஎன மொழிப' இ. வி. 75 என்றாற் போலும் சிலவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார் போலச் சாலவும் சொல் பல்கச் சூத்திரித்தும் ஒருவழிப்பட நில்லார் ஆயினார். இன்னும் சில விதிகளை நன்னூலார் நயம்பற்றிப் புடை நூலோடு ஒப்பக்கூறிச் சிலவிதிகளை ஆசிரியர் தொல் காப்பியனார் நயம் பற்றி வழிநூலோடு ஒப்பக் கூறினார் ஒரு நயம்பற்றி ஒருவழிப்பட்டு நின்றுகூறாது இவ்வாறு பலவழிபடச் செய்தார். நூல் செய்யும் திறன் அறியாமை யான் என்க. ஏனையவும் இவ்வாறே ஆண்டாண்டுக் கண்டு கொள்க. ஈண்டு விரிப்பின் பெருகும்.

அமைதி

'இயல்பினும் விதியினும்' இ.வி. 82. என்ற நூற்பா உரையுள் வேற்றுமை உருபுகளையும் ஈண்டே அடக்கி விதி கூறலே தம் கருத்து என்பதைத் தெளிவாகக் கூறி யுள்ளார். அதற்கு ஏற்ப ஆறாம் வேற்றுமை உருபுகளுள் ஒன்றாகிய அகரத்தை இவ்வகர ஈற்றிலும், குற்றியலுகர ஈற்றனவாகிய ஒடு அது ஆது (இவை சொல்லொடு சேரும்வழிக் குற்றியலுகர ஈற்றவாதல் காண்க) என்பன வற்றை 'மூன்றன் உருபினும் ஆறன் உருபினும்' இ. வி. 118 என்ற நூற்பாவிலும் குறிப்பிட்டுள்ள இவ் வாசிரியர் மீது குற்றம் சுமத்துதல் இறும் பூது பயப்பதாகும்.

யாண்டும் தெளிவாக நூற்பா அமைதலையே குறிக் கோளாகக்கொண்ட இவர் நன்னூல் தெளிவாகக் கூறிய

வற்றை ஏற்றும். தொல்காப்பியத்துள் தேவைப்பட்டன வற்றை ஏற்றும் ஏனைய செய்திகளுக்குத்தாமே நூற்பா யாத்தும் இந்நூல் செய்துள்ள பெற்றியை நூலமைப்பு என்ற தலைப்பில் விளக்கியுள்ளாம். அதனால் முனிவர் கற்பித்துக் கூறும் வசையுரைக்கு இவர் ஏற்றவர் ஆகார் என்பதைக் கோடா உள்ளத்தர் உணர்வார் ஆதல் தேற்றம்.

ஒத்த நூற்பாக்கள் :

'அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
செய்ம்மன என்னும் தொழில் இறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவியும்
செய்த என்னும் பெயர் எஞ்சு கிளவியும்
செய்யிய என்னும் வினைஎஞ்சு கிளவியும்
அம்ம என்னும் உரைப்பொருள் கிளவியும்
பலவற்று இறுதிப் பெயர்க் கொடை உளப்பட
அன்றி அனைத்தும் இயல்புஎன மொழிப'
தொல். 210

'உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.'
தொல். 211

'செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம்முற்று ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே.'
நன். 167

'வியங்கோள் அண்மை விளிஉவ மையும்
செய்த செய்யிய எனும்ஈ ரெச்சமும்
அம்மவும் பலவும் மிகாது இயல்பு ஆகும்.'
மு. வீ. பு. 81

வாழிய முன் வன்கணம்

87. வாழிய என்பதன ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்து அஃது ஏகினும் இயல்பே.

இஃது எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்து படாமைக் காத்தலும் நுதலிற்று.

இ-ள் : வாழிய என்னும் வியங்கோள்முற்றின் ஈற்று உயிர்மெய் கெடுதலும் உரித்து; அதுகெட்டு இகர ஈறாய் நின்றாலும்முற்கூறிய இயல்பேயாம் என்றவாறு.

உம்மையால் கெடாமையே வலியுடைத்து

வரலாறு : வாழி கொற்றா வாழிய கொற்றா - சாத்தா-தேவா-பூதா-மன்னா - வளவா-யாழா - அரசா- எனவரும். 35

விளக்கம் : எய்தாதது எய்துவித்தல் - வாழிய என்பதன் யகரம் கெடுதல். எய்தியது இகந்து படாமைக் காத்தல்—யகரம் கெட்டாலும், வருமொழியொடு இயல்பாகவே புணரும் அகர ஈற்று முற்றின் இயல்பின் நீங்காது இருக்கும் என்பது.

இது நிலைமொழித்தொழில் ஆதலின், வாழிய என்பதன் ஈறு கெடுதல் வருமொழி நாற்கணம் வரும் வழியும் கொள்ளப்பட்டது. ஈண்டு வாழிய எபைது வியங் கோள்முற்று. இதுவே ஈறுகெடுதலும் உரித்து. வாழ் என்ற பகுதிகொண்டு தோன்றிய செய்யிய என்ற வினையெச்சவாய்பாட்டு வாழிய என்ற வினையெச்சம் ஈறு கெடாமலேயே இயல்பாகப் புணர்தல் 86 ஆம் நூற்பாவால் கொள்ளப்பட்டமை அறிக.

இது புணர்ச்சி விகாரம் அன்று என்றும் 'படாஅதி வாழி' (குறள்-1210) எனச் செய்யுள் இறுதிக்கண்ணும் வாழிய என்பது வாழி எனக் குறைந்தும் நிற்றலின் கடைக்குறை என்றும் நன்னூல் விருத்தியுரை கூறும்.
நன். 168

'உம்மைகள் எதிர்மறைக்கண்ண வாகலான், கெடாமையும், உரித்தாகலும் இயல்பு இகந்து படாமையும்

கொள்க. வருமொழி வரையாமையின், நாற்கணமும் வரின் யகரம் கெடுதலும் கெடாமையும் கொள்க' என்பர் மயிலைநாதர். நன். 167.

''கெடுதலும் எனவே, கெடாது முடிதலே பெரும் பான்மை என்றவாறு'' என நச்சினார்க்கினியர் தொல் காப்பிய 211ஆம் நூற்பா உரையுள் கூறி, வாழிய என்பது ஏவல் கண்ணிய குறிப்பு வியங்கோள் வினை முற்று என்பதை விளக்கியுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'வாழிய என்னும் சேயென் கிளவி
இறுதி யகரம் கெடுதலும் உரித்தே.' தொல். 211

முழுதும் நன். 168

'வாழிய இறுதி கெடுதலும் உரித்தே' மு.வீ.பு. 83

பல, சில தம்முன் தாமும், பிறவும் புணர்தல்

88. பலசில எனும் இவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும் பிறவரின்
அகரம் விகற்பம் ஆகலும் உளபிற.

இஃது எய்தியது இசந்துபடாமைக் காத்தலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ-ள் : பல என்றும் சில என்றும் சொல்லப்படும் இவ்விருசொல்லும் தம்முன்னர்த்தாம் வந்துபுணரின், இயல்பு ஆதலும் மிக்கு முடிதலும் அகரம் கெட லகரம் றகர ஒற்றாய்திரிதலும் இவற்றின் முன்னர்ப் பிறமொழி அனைத்தும்வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம் என்றவாறு.

எ-டு : பலபல சிலசில எனவும்,
பலப்பல சிலச்சில எனவும்,
பற்பல கொண்டார் சிற்சில வித்தி எனவும்,

பலதலை பல்தலை சிலதலை சில்தலை - சேனை-தானை - படை - நாள் - மலர் - யானை-வேள்வி- ஆணி-எனவும் முறையே காண்க.

'பிற' என்ற மிகையானே, பல்பல சில்சில என அகரம் கேட லகரம் றகரம் ஆகாமையும்.

'பலாஅஞ் சிலாஅம் என்மனார் புலவர்'

எனச் செய்யுட்கண் ஒரோவழிப் பல என்பதன் முன்னர்ச் சில என்பது வந்துழி இறுதி அகரம் நீண்டு ஓர் அகரமும் மகர ஒற்றும் பெற்று முடிதலும் கொள்க. இதன் சொல் நிலை பல சில என்னும் செவ்வெண். :6

விளக்கம் : எய்தியது 86ஆம் நூற்பா குறிப்பிடும் இயல்பு. இகந்து படாமைக் காத்தல்-பலபல, சிலசில என இயல்பு ஆதல்; எய்தாதது எய்துவித்தல்—மிகுதி, திரிபு, விகற்பம் என்பன. 'பலாஅஞ் சிலாஅம்' பலசில என்னும் பொருளுடையது.

'பிற' என்ற மிகையானே பல்லபல சில்லசில என்ற மிகையும், 'பலாஞ்சிலாம்' என அகரம் ஆகாரமாய் ஒற்று மிகலும், பிறவல்லினம் வந்தவழி லகரம் திரியாமையும் கொள்க' என்றார் மயிலைநாதர். (நன். 169)

'பல்சில் என்ற பண்படிகள் நின்று வருமொழியொடு புணர்ந்தன அல்லவோ எனின், அவை பன்மை சின்மை எனப் பகுதிப்பொருள் விகுதியோடேனும், பலர் பல சிலர் சில என்னும் விகுதிப்பொருள் விகுதியோடேனு மன்றித் தனித்து நில்லா என்பது அறிக' என்பது விருத்தியுரை. (நன். 170)

பல சில என்பன அகரம்கெட நின்ற பல்சில் என்ற விதி மெய்யீற்றுக்கும் ஈண்டு விதி இந் நூற்பாவிலேயே உடன் கூறினமையின், இஃது 'ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்' என்னும் உத்திக்கு இனம்

என்பதும் விருத்தியுரைக் கருத்தாம்., இஃது அவ்வழிப் புணர்ச்சி.

ஒத்த நூற்பாக்கள் :

'பலவற்று இறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான.'
தொல். 213

'தொடர்அல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகர ஒற்று ஆதலும் உரித்தே' தொல். 214

'வல்லெழுத்து இயற்கை உறழத் தோன்றும்.'
தொல். 215

முழுதும்— நன். 170 மு. வீ. பு. 84

'சில பல தம்மொடு சேர்வுழி இயல்பும்
முதல்மெய்க் கடைமெய் மிகலும் ஈறுபோய்
லற ஆதலும் லா ஆ தலுமாம்
பிறவரின் அகரம் நிற்றலும் கெடலுமாம்.
தொ. வி. 31

'அவைதாம் பாவினுள் நீட்டமும் வரையார்.'
மு. வீ. பு. 85

ஆகார ஈற்றுச் சிறப்பு விதி 89, 90
இயல்பு புணர்ச்சி

89. அல்வழி ஆமா மியா முற்று இறுதி
யாவினா இவற்றுமுன் வல்லெழுத்து இயல்பே.

இஃது ஆகார ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ-ள் : அல்வழிப்புணர்ச்சிக்கண் ஆவும் மாவும் என்னும் இரு பெயரும், ஏவல் குறித்த உரையசை ஆகிய மியா என்னும் இடைச்சொல்லும், அஃறிணை எதிர் மறைப்பன்மை முற்றும், தன் தொழில் உரைப்பதன்

ஈற்று வினாவும், யாவினாவும் ஆகிய ஆகார ஈற்று இவ் வறுவகைச்சொல் முன்னரும் வருமொழி வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும் என்றவாறு.

வரலாறு: ஆகுறிது-சிறிதுதீது-பெரிது-எனவும். மாகுறிது-சிறிது-தீது-பெரிது-எனவும், கேண்மியா கொற்றா-சாத்தா-தேவா பூதா-எனவும், உண்ணா குதிரை-செந்நாய்-தகர்-பன்றி-எனவும், உண்கா-கொற்றா-சாத்தா-தேவா-பூதா-எனவும், யாகுறிய - சிறிய - தீய - பெரிய-எனவும் முறையே காண்க. 37

விளக்கம்: எய்தியது விலக்குதல்— 'இயல்பினும் விதியினும்' (82) என்ற நூற்பாவால் எய்திய மிகுதி விலக்கி இயல்பு கூறுதல்.

உரையசை-சிறிது பொருள் குறித்து வருவது என்பார் நச்சினார்க்கினியர். தொல். சொல். 299

உண்கா-யான் உண்பேனோ என்னும் பொருளது. தொல். 224 நச்

உண்ணா - குதிரை - இது குதிரை உண்ணா என்று பொருள்படும் வினைமுற்றுத் தொடர். பெயரெச்ச மறையாயின் உண்ணாக் குதிரை என வல்லெழுத்து மிகுதல் 'இயல்பினும் விதியினும்' 81 என்ற நூற்பாவால் கொள்ளப்படும்.

'ஆ, மா என்பனவேயன்றிக் காட்டுப் பசுவினைக் குறிக்கும் ஆமா என்ற சொற்கும் இதுவே விதியாதல் இரட்டுறமொழிதலால் கொள்ளப்படும்' என்பது நன்னூல் விருத்தியுரை 171.

ஒத்த நூற்பாக்கள் :

'ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாஎன் வினாவும் பலவற்று இறுதியும்

ஏவல் கண்ணிய உரையசை மியாவும்
தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு
அன்றி அனைத்தும் இயல்பு என மொழிப'
தொல். 224

'அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா.' நன். 171

'ஆமா அல்வழி ஆஈறு முற்று
மியா இவை முன்வலி மிகாது இயல் பாகும்.'
தொ. வி. 32

'ஆவும் மாவும் அழைப்பும் வினாவும்
மியாவும் பலவும் மிகாது இயல் பாகும்' மு.வீ.பு.89

சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு

90. குறியதன் கீழ்ஆ—குறுகலும் அதனோடு
உகரம் ஏற்றலும் இயல்பும்ஆம் தூக்கின,

இஃது ஆகார ஈற்றுள் சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ-ள். குற்றெழுத்தின்கீழ் நின்ற ஆகாரம் குறுகி நிற்றலும், அங்ஙனம் குறுகுதலுடனே இறுதிக்கண் உகரம் பெறுதலும், அவ்விரண்டும் இன்றி இயல்பு ஆதலும் ஆகிய இம்மூன்று விதியும் பொருந்தும். இரு வழியும் செய்யுள் அகத்து என்றவாறு.

எ-டு : 'சுற மறிவன துறையெல்லாம்
இற ஈன்பன இல்லெல்லாம்' எனவும்'
'இர வழங்கு சிறு நெறி' எனவும்,

'முளவுமாத் தொலைச்சிய பைந்திணப் பினவைப்
பிணவுநாய் முடுகிய தடியொடு விரைஇ' .
எனவும், (மலைபடு. 176. 177)

'இறவுப் புறத்தன்ன பிணர்படு' தடவுமுதல்
சுறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை'
எனவும், (நற். 19-1, 2)

'புறவுப் புறத்தன்ன புன்கால் உகாய்'
எனவும், (குறுந். 274-1)

'நிலா அணங்கு வெண்மணல்மேல் நின்று' எனவும்,
'நிணச் சுறாஇனம் பொன்போன்றன' எனவும்
இருவழியும் முறையே காண்க.

'நறவங் கண்ணி நற்போர்ச் செம்பியன்'
'குரவம் நீடிய கொன்றை அங் கானல்' என்பன
ஆகாரம் குறுகியவழி அம்முப் பெற்றன.

'சுறவுயர் கொடி' 'அரவணி கொடி' 'முழவுறழ் தோள்' என்றால் போல்வன ஆகாரம் குறுகியவழி உகரம் பெறாது உடம்படுமெய் பெற்றன. 38

விளக்கம் :

அல்வழி :

சுற மறிவன } சுறா இறா என்ற ஆகாரம்
இற ஈன்பன } சுற இற எனக் குறுகின.

பிணவு நாய்—பிணா என்பது ஆகாரம் அகரமாகி உகரம் பெற்றுப் பிணவு ஆயிற்று.

நிலா அணங்கு வெண்மணல்—இயல்பு ஆயிற்று.

வேற்றுமை: — இர வழங்கு — இரா 'இர' எனக் குறுகியது. இறவுப்புறம், சுறவுக்கோடு, புறவுப்புறம்—ஆகாரம் அகரமாய் உகரம் பெற்றமைக்கு எடுத்துக் காட்டு, இறா, சுறா புறா என்பனவற்றின் திரிபு ஆதலின்.

சுறா இனம்—இயல்பு.

நறா 'நற' எனவும், குரா 'குர' எனவும், குறுகிய வழி அம்முப்பெற்று நறவம் குரவம் என்று ஆயின.

சுறவுயர்கொடி அரவணி கொடி முழவுறழ்தோள் என்பனவற்றில் சுறா, அரா, முழா என்பன சுற அர முழ என ஆகாரம் குறுகி வருமொழியொடும் சேரும்வழி வகர

உடம்படுமெய் பெற்றன. இச்செய்தியை நச்சினார்க்கினியர் தொல்காப்பிய 234ஆம் நூற்பா உரையில் குறிப்பிட்ட தோடு, 'இவற்றிற்கு இரண்டாம் உருபு விரிக்க; மூன்றாவதுமாம்' என்ற விளக்கமும் கொடுத்துள்ளார். இவை சுறா வினை உயர்த்தகொடி, சுறாவொடு உயர்த்தகொடி, அரவினை அணிந்தகொடி. அரவினால் அணிபப்பட்ட கொடி,முழவினை ஒத்ததோள்,முழவொடு உறழ்ந்த தோள் என விரிக்கப்படும்.

செய்யுளுள் இச் சொற்களுக்கு மூவகை நிலை கூறப்படவே, வழக்கினுள் மூன்றும் வாரா, ஒன்று இரண்டு வரும் எனவும், இவ்விகாரங்கள் அவ்வழி வேற்றுமைப் புணர்ச்சியான் வந்தன அல்ல என்று ஐயம் அறுத்தற்குக் கூறப்பட்டன என்றும் நன்னூல் விருத்தி கூறும். (172)

ஒத்த நூற்பாக்கள் :

'குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே' தொல் 234
முழுதும் நன். 172 மு.வீ.பு. 91

'ஆவும்அவ்வாய்த்—தாவிய ஐந்தாம்
உயிர்பின் பெறுவன தாமும்உண்டே' வீ 24

'உற்றஆ காரம் அகரமாய் ஓங்குஉகரம்—
பெற்றிடும். நே, 23

'தனிக்குறில் ஈற்றுஆ தகும் பெயர் செய்யுட்கே
ஆ அ ஆதலும் அதனோடு உ அணையலுமாம்'
தொ. வி. 38

இகர ஈற்றுச் சிறப்பு விதி 91, 92

91. அன்றி இன்றிஎன் வினைநெஞ்சு இகரம்
தொடர்பினுள் உகரம் ஆய்வரின் இயல்பே.

இஃது இகர ஈற்றுள் சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ-ள் : அன்றி எனவும் இன்றி எனவும் சொல்லப் படும் வினையெச்சக் குறிப்புச் சொற்களின் ஈற்று இகரம் செய்யுளகத்து உகரம் ஆகிவந்தால் அவ்வழி வருமொழி வல்லெழுத்து இயல்பாய்முடியும் என்றவாறு.

எஞ்சு என்பது ஈண்டு முதல்நிலைத் தொழிற்பெயர். 'வரின்' எனவே உகரம் ஆதல் ஒருதலை அன்று எனவும் ஆகாத வழி மிகும் எனவும் கொள்க.

எ-டு : 'வாளன்று பிடியா வன்கண் ஆடவர்'
'நாளன்று போகிப் புள்இடை தட்பப்'
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
(புறநா. 124—1, 2)

'இடன்அன்று துறத்தல் வள்ளி யோரே.'
எனவும்,

'உப்புஇன்று புற்கை உண்கமா கொற்கையோனே'
எனவும்,

அறிவின்றிக் கொடுத்தான் - சென்றான் - தந்தான் போயினான் எனவும் முறையே காண்க. 39

விளக்கம் : செய்யுள் முடிபு — இகரம் உகரமாகி இயல்பாயினமை. இதனை முற்றியலிகரம் திரிந்து குற்றியலுகரமாய் நின்றது என்பர் நச்சினார்க்கினியர். (தொல். 237)

வழக்குமுடிபு - இகரஈறு இயல்பினும் விதியினும் (82) என்ற நூற்பாப்படி வன்கணம்வரின் மிகுதல்.

எஞ்சு இகரம் — வினைத்தொகையின் முதல்நிலை வினைப் பகுதியாகிய தொழிற்பெயர் ஆதல் அறிக. வரின் எனவே, உகரம் ஆதல் ஒருதலை அன்று எனவும் ஆகாத வழிமிகும் எனவும் மயிலைநாதரும் குறிப்பிட் டார். (நன். 172) இதனை நன்னூல் விருத்தியுரையும் குறிப்பிடுகிறது (நன். 173) அறிவின்றிக் கொடுத்தான் முதலியன வழக்குமுடிபு.

'அன்றி இன்றி... இயல்மே' நன். 173 என்று முறை கூறினார் அம்முறையே 'வினையெச் சம்மே வினைமுற் றாகலும் எனல் வேண்டும் அது மறந்து 'வினைமுற்றே வினையெச்சம் ஆகலும்' நன். 351 என்றார். வினையெச்சம் வினைமுற்றாம் என முன்னர்க் கூறியதை மறந்து விசையெச்சமாகும் என்று கூறும் மறதி நூல் உரை போதகாசிரியருக்குப் பொது. இலக்கொத்து—6 உரை.

ஒத்த நூற்பாக்கள் :

'இன்றி என்னும் வினைஎஞ்சு இறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்று இயல் மருங்கின் செய்யுளுள் உரித்தே'
தொல். 237

முழுதும் — நன். 173

'யாப்பினுள் இன்றியும் அன்றியும் உகரம்
ஆய்வரின் மிகாதுஇயல் பாஎன மொழிப.'
மு. வீ. பு. 100

சுவைப்புளி முன் வன்கணம்

92. சுவைப்புளி முன்இன மென்மையும் தோன்றும்.

இஃது எய்தியதன் மேல் சிறப்புவிதி கூறுகின்றது.

இ-ள் : மரம் அன்றிச் சுவைப்புளியை உணர்த்தி நின்ற புளி என்னும் பெயர்முன் வல்லெழுத்துவரின் அவ் வல்லெழுத்தே அன்றி அவற்றிற்கு இனமான மெல் லெழுத்து மிகவும் பெறும் என்றவாறு.

எ-டு : புளிங்கறி புளிக்கறி-சோறு-தயிர்-பாளிதம்-எனவரும். பாளிதம் பாற்சோறு. இகர ஈற்றுப் பெயர்க்கு அல்வழி முடிபுமேல் கூறுதலின், இம்முடிபு 'வேற்றுமைக்கண்ணது எனத் தானே போதரும். இவற்றிற்கு இரண்டன் உருபு விரிக்க. 40

விளக்கம் : எய்தியது 'இயல்பினும் விதியினும்' (82) என்பதனால் எய்திய வல்லெழுத்துப் பேறு.

சிறப்பு - மெல்லெழுத்தும் பெறும் என்பது,

'அல்வழி முடிபு-வேற்றுமை அல்வழி இ ஐ என்னும்' இ. வி. 77 என்ற நூற்பாச் செய்தி.

பாளிதம்—பாற்சோறு என்றார் நச்சினார்க்கினியர்.
தொல். 245

'கண்டசர்க் கரையும் சோறும்கற் பூரமும்
பட்டு வருக்கமும் பாளிதம் என்ப.'—பிங்கலம்.

இவற்றிற்கு இரண்டாம் உருபு விரிக்க என்பதும் நச்சினார்க்கினியர் உரை. (தொல். 245)

புளிப்பாகிய கறி எனவும், புளிப்பை உடைய கறி எனவும் விரிதலின் புளிங்கறி இருவழிக்கும் காட்டாகும் என்பது நன்னூல் விருத்தியுரை. (நன். 175)

'' 'மென்மையும்' என்ற இறந்தது தழீஇய எச்ச உம்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியான் வரும் வல்லெழுத்துப் பேறே சிறப்புடைத்து என்க'' என்பதும் விருத்தியுரை. (நன். 175)

தொல்காப்பியனார் மெல்லெழுத்துப் பேறே விதிப்பார்; பின், 'வல்லெழுத்து மிகினும் மான மில்லை.' என வல்லெழுத்துப் பேற்றையும் உம்மையால் தழுவுவார்.
(தொல். 245, 246)

ஒத்த நூற்பாக்கள் :

'ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.
தொல். 245

'வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை
ஒல்வழி அறிதல் வழக்கத் தான.' தொல். 246

முழுதும் நன். 175. மு. வீ. பு. 107

ஈகார ஈற்றுச் சிறப்பு விதி—93, 94

93. பவ்வீ அல்வழி இயல்பும் மீமுன்
இயல்பும் வலிமெலி மிகலும்ஆம் வேற்றுமை.

இஃது ஈகார ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கலும் எய்தியது இகந்து படாமைக் காத்தலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ–ள்: பகரத்தொடு கூடிய ஈகார ஈற்று இடக்கர்ப் பெயர் முன் வருமொழி வல்லெழுத்து அவ்வழிக்கண் இயல்பு ஆதலும், ஓர் இடத்தினை வரைந்து உணர்த்தும் மேல் என்பதன் திரிபு ஆகிய மீ என்னும் மரூஉச்சொல் முன் இயல்பு ஆதலும், மிகுதலும், வருமொழி வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்து மிகுதலும் உளவாம் வேற்றுமைக்கண் என்றவாறு.

வரலாறு: பீ குறிது - சிறிது-தீது-பெரிது- எனவும்
மீகண்-செவி-தலை-புறம்-எனவும்,
மீக்கோன் மீப்பால் எனவும்,
மீங்குழி மீந்தோல் எனவும் முறையே காண்க.

மீகண் என்பது மேலிடத்துக் கண் என விரியும். பிறவும் அன்ன. நீ என்பது விரவுப் பெயர் ஆதலின் 'பொதுப் பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய்' என்பதனான் முடியும். 41

விளக்கம் : எய்தியது - 'இயல்பினும் விதியினும்' என்பதனால் எய்திய வல்லெழுத்து.

எய்தியது விலக்கல் - வல்லெழுத்தை நீக்குதல்.

இகந்து படாமைக் காத்தல்-பொது விதியான் வரும் வல்லெழுத்து மிகல்.

எய்தாதது எய்துவித்தல் - வல்லெழுத்தின் இன மெல்லெழுத்து மிகுதல்.

பீ என்பது இடக்கர்ப்பெயராதலின் மறைத்த வாய்பாட்டான் கிளந்தார்.

'மீ என மரீஇய இடம் வரை கிளவி' தொல். 250
'இடம் வரை கிளவி' தொல். 251

என்ற தொல்காப்பியனார் கருத்தானும், மேற்கு-கரை-மீ கரை என்று முடிந்தது என்று 432ஆம் நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் உரைத்த விளக்கத்தானும் மீ என்பதற்கு ஓர் இடத்தினை வரைந்து உணர்த்தும் மேல் என்பதன் திரிபாகிய மீ என்னும் மருஉச்சொல்' என்று உரை விளக்கம் தந்துள்ளார்.

மீகண் என்பது மேலிடத்துக்கண் என வேற்றுமைத் தொடராக விரிக்கப்படுதல் தொல். 250இல் நச்சினார்க்கினியர் உரைத்த உரையையும் உரையாசிரியர் கருத்தையும் தழுவியதாம்.

'மீகண் என்பது கண்ணினது மேலிடம் எனப் பொருள் தந்து நிற்குமேனும் ஆறன் உருபின் பயனிலையாகும் மீ என்னும் வருமொழி நிலைமொழியாய் நின்று வல்லெழுத்து மிகாது புணர்ந்தமையின் இலக்கணப் போலியாய் அல்வழி ஆயிற்று' என்றும் 'மீக்கூற்று என்பது புகழ்; அதுமேலாய சொல்லால் பிறந்த புகழ் என்னும் மேம்பாடு எனப் பொருள் தந்து நிற்றலின் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை' என்றும். 'மீக்கோள் என்பது மேற்போர்வை; அது யாக்கையின்மேல் கொள்ளுதலைஉடைய போர்வை எனப் பொருள்தந்து நிற்றலின் ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை' என்றும்,

'மீந்தோல் என்பது மேற்றோல்; அது மேலாய தோல் எனப் பொருள் தந்து நிற்றலின் பண்புத்தொகை; இஃது இக்காலத்துப் பீந்தோல் எனமரீஇயிற்று' என்றும் நன்னூல் விருத்தியுரை கூறும். (நன். 178)

மேலும் அல்வழிக்கண் நீ என்றும் வேற்றுமைக்கண் நின் என்றும் திரிந்து நிற்கும் முன்னிலை ஒருமைப் பெயர் 'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள்' என்ற நூற்பாவில் அடங்காது என்றும் நன்னூல் விருத்தியுரை கூறும். (178)

எடுத்துக்காட்டுக்கள் யாவும் தொல்காப்பியம் 250, 251ஆம் நூற்பாவில் நச்சினார்க்கினியர் காட்டியனவே யாம். அவற்றுள் நச்சினார்க்கினியர் மீப்பல் எனவும், உரையாசிரியர் மீப்பாழ் எனவும் காட்டிய எடுத்துக் காட்டுக்கு இவர் மீம்பால் என்ற எடுத்துக்காட்டினைத் தந்துள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத்து இயற்கைஆகும்.'
தொல். 250

'இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உளஎன மொழிப.' 251

'பவ்வீ நீமீ முன்னர் அல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமாம் மீக்கே,' நன்,178

'ஈகார பகரமும் இயல்பே.' மு. வீ. பு. 109

'ஈகார பகரமும் இடக்கராய் வழங்கும்.' 110

'மீஇயல் பாதலும் மெலிவலி மிகுதலும்
ஆகும் என்மனார் அறிந்திசி னோரே.' 111

ஆமுன் பகரம்

96. ஆமுன் பகரஈ குறுகும் அல்வழியும்
வல்லெழுத்து இயற்கை அல்வழி யான.

இஃது எய்தாதது எய்துவித்தலும் எய்தியது இகந்து படாமைக் காத்தலும் நுதலிற்று.

இ-ள் : ஆ என்பதன் முன்னர் வருமொழியாய் வந்த இடக்கர்ப் பெயரினது பகரத்தொடு கூடிநின்ற ஈகாரம் இகரமாய்க் குறுகும்; அங்ஙனம் குறுகியவழியும் வருமொழி வல்லெழுத்து இயல்பாய் முடியும் அல்வழிக்கண் என்றவாறு.

வரலாறு : ஆப்பி எனவும்,

ஆப்பிகுறிது - சிறிது - தீது - பெரிது - எனவும் குறுக்கமும் இயல்பும் முறையே காண்க.

அல்வழிக்கண் இயல்பாம் எனவே.வேற்றுமைக்கண் ஆப்பிக்குளிர்ச்சி - செறிவு - திரட்சி - பொலிவு - எனப் பொதுவிதியான் மிக்கு முடியும் எனக் கொள்க.

'அல்வழி' என வேண்டா கூறிய அதனானே. குறுக்கம் வேற்றுமைக்கண்ணே எனக் கொள்க. ஆம் பியரியது என்றால்போல வருமொழியொடு புணர்வழிக் குறுகும் என்பாரும் உளர்.

ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே'

தொல். 233

என ஆசிரியர் தொல்காப்பியனார் இக் குறுக்கம் நிலைமொழி நோக்கி வந்ததாக ஆகார ஈற்றுள் கூறினமையானும், உரையாசிரியரை உள்ளிட்டோர் எல்லாம் அதற்கு உதாரணம் ஆப்பி என்றே காட்டினமையானும் அது மரபு அன்று என மறுக்க. ஆப்பி ஆவினது பீ என விரியும். 42

விளக்கம்: இந் நூற்பா ஆ என்பதனொடு பீ என்ற வருமொழி புணர்தற்கண் ஏற்படும் விகாரத்தையும் பின் ஆப்பி என்பதனை நிலைமொழியாகக் கொண்டு அது வருமொழியொடு புணருங்கால் ஏற்படும் விகாரத்தையும் சுட்டுவதாகும்.

எய்தாதது எய்துவித்தது - பீ என்பதன் ஈகாரம் குறுகும் என்றது.இகந்து படாமைக் காத்தல்-இகரமாக குறுகினும் ஆகார நிலைமொழிக்கண் 'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் பகரம் மிகுதல்: அவ்வழிப் புணர்ச்சிக்கண் ஆப்பி குறிது என்றாற்போல இகர ஈற்று எழுவாய்த் தொடர் 'வேற்றுமை அல்வழி இஐ என்னும், என்ற 77ஆம் நூற்பா விதிப்படி இயல்பாகப் புணர்தல். ஆப்பிக் குளிர்ச்சி என்ற வேற்றுமை முடிபு 'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் கொள்ளப்படும்.

ஆப்பி என்பது ஆவினது பீ என வேற்றுமைப் பொருட் புணர்ச்சியது என்பதனை 'அல்வழியும்' என்ற மிகையான் விளக்குகிறார். எனவே, உம்மைத்தொகை யாகிய அல்வழிப் புணர்ச்சியாயின் ஆப்பீ எனக் குறுகாது நிற்கும் என்பதும் உணரப்படும்.

ஆப்பி என்ற புணர்ச்சி தொல்காப்பியனாரால் ஆ+பீ எனப் பிரித்து ஆகார ஈற்றுள் கொள்ளப்பட்டமையான், ஆப்பீ என்ற தொடரீர வருமொழியை அவாவாத நிலை யிலும் குறுகும் என்பதாம்;

நன்னூல் விருத்தியுரைகாரர் ''ஆ என்றும் சொல்லும் நாற்கணத்துள் ஒன்றும் முன்னும் பின்னும் தொடராதல் குறுகாது என்பார் 'வாக்குறுகும்'என்றார்'' என்று கூறி ஆப்பிகுறிது.ஆப்பிக்குளிர்ச்சி என்று எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளார். (நன். 177) 'பீ' என்பது குறுகுதற்கு வரு மொழி வருதல் வேண்டா என்ற முன்னோர் கொள்கை யையே இவ்வாசிரியர் கொண்டுள்ளமை காண்க.

ஒத்த நூற்பாக்கள் :

'ஆன்முன் வருஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே.'
தொல். 233

'ஆமுன் பகரஈ அனைத்தும்வரக் குறுகும்
மேலன அல்வழி இயல்பா கும்மே' நன். 177

'ஆன்முன் பகரஈ அனைத்தும்வரக் குறுகும்.'
மு. வீ. பு. 98

முற்றுகர ஈற்றுச் சிறப்பு விதி

95. எண்ணின் இறுதியும் சுட்டுமுதல் இறுதியும்
நண்ணிய உகரமுன் இயல்பாம் அதுச்சொல் ஈறு
அன்றுவரு காலை ஆ-ஆ குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்துஎன மொழிப.

இஃது : உகரஈற்றுள் சிலவற்றிற்கு எய்திய விலக்கலும் ஒன்றற்கு எய்தாதது எய்திவித்தலும் நுதலிற்று.

இ-ள் : எண்ணுப்பெயர் ஈற்றினும் சுட்டெழுத்தினை முதலாக உடைய பெயர் ஈற்றினும் நின்ற உகரத்தின் முன்னர் வருமொழி வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும். அது என்னும் சொல் ஈற்று உகரம் அன்று என்னும் வினைக்குறிப்புச் சொல் வருமொழியாய் வருங் காலத்து அவ்வுகரம் ஆகாரமாய்த் திரிந்து முடிதலும். ஐ என்னும் சாரியை இடைச்சொல் வரும் காலத்து அவ் வுகரம்தான் ஊர்ந்தமெய்யை ஒழித்துக் கெட்டுமுடிதலும் செய்யுள் அகத்து உரித்து என்றவாறு.

எ-டு : ஒரு காசு-சின்னம்-துலாம்-பலம்- எனவும்.

அது இது உது குறிது-சிறிது-தீது-பெரிது எனவும்,

'அதாஅன் றென்ப வெண்பா யாப்பே'
(தொல்-பொருள் 394) எனவும்,

'அதை மற்றம்ம' எனவும் வரும்.

சிறப்புடைய சுட்டுப்பெயரை முற்கூறாத முறையல கூற்றானே, சுட்டீறு இயல்பாதல் அல்வழிக்கண்ணே என்பதும், இதாஅன்றம்ம உதாஅன்றம்ம என ஏனைச் சுட்டுப்பெயர் இறுதியும் திரிதலும்,

இதைமற்றம்ம உதைமற்றம்ம என ஏனைச்சுட்டும்
ஐகாரம் பெறுதலும்
அதன்று இதன்று உதன்று என ஏறி முடிதலும்,
உதுக் காண் என வல்லெழுத்து மிகுதலும்,

'எழூஉத் தாங்கிய கதவு மலைத்தவர்
குழூஉக் களிற்றுக் குறும்பு உடைத்தலின்'
எனவும், புறநா. 97

'பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி (குறுந். 180)
எனவும்,
உகரம் நீண்டு ஓர் உகரம் பெறுதலும்'
பிறவும் கொள்க. 43

விளக்கம்: எய்தியது விலக்கல்—'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் பெற்ற வல்லெழுத்தை விலக்கல்.

ஒன்றற்கு எய்தாதது எய்துவித்தல்- அகர முதல் சுட்டுப் பெயர்க்கண் இறுதியில் வரும் உகரத்திற்குத் திரிதலும் கெடுதலும் கூறுதல்.

ஒரு இரு என்பன விதி உகர ஈறாதல் அறிக.

அதுவன்றி என்பது செய்யுட்கள் அதா அன்று எனத் திரியும். அது இது உது என்ற சுட்டுப் பெயர் அல்வழிக்கண் இயல்பாதலும் வேற்றுமைக்கண் அன் சாரியை பெற்று 'அதன்கோடு' என்றாற் போலப் புணர்தலும் கொள்க.

நூற்பாவில் அகரச் சுட்டினை ஏற்ற சுட்டுப் பெயர்க்கே விதி கூறப்படுதலின், இகர உகரச் சுட்டினை ஏற்ற சுட்டுப் பெயர் பற்றிய புணர்ச்சிகள் மிகையால் கொள்ளப்பட்டன.

அதன்று இதன்று உதன்று என்ற முடிவுகளை நச்சினார்க்கினியர் 'அன்று வருகாலை' தொல். 258 என்ற நூற்பாவுரையில் 'மொழிந்த பொருளோடு ஒன்ற

அவ்வயின் மொழியாததனை முட்டின்றி முடித்தல்' என்பதனால் கொண்டார்.

உதுக்காண் என்புழி வல்லெழுத்து மிகுவதனை நச்சினார்க்கினியர் 'சுட்டு முதல் இறுதி' தொல். 263 என்ற நூற்பாவின் 'வல்லெழுத்தியற்கை' என்ற மிகையாற் கொண்டார். உதுக்காண் என்பது உங்கே பாராய் என்னும் பொருட்டு. உவக்காண் என்பது' ஒட்டி நின்ற இடைச்சொல்லாய் உங்கே என்று பொருள்படுவதாகப் பரிமேலழகர் கூறுகிறார். (குறள். 1185 உரை)

'ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான' தொல். 261

என்ற நூற்பா உரையுள், நச்சினார்க்கினியர் 'ஆவயினான' என்ற மிகையால், பெரும்பான்மை செய்யுட்கண் நீண்டு உகரம் பெற்று.

'எழூஉத் தாங்கிய கதவு மலைத்துஅவர்
குழூஉக் களிற்றுக் குறும்பு உடைத்தலின்'
புறநா. 9_7

'பழூஉப்பல் அன்ன பருவுகிர்ப் பாவடி' குறுந். 180 என வருவனவற்றைக் கொண்டுள்ளார்.

இவ்விடங்களில் எல்லாம் குற்றெழுத்து நீண்டு நெட்டெழுத்தாகிப் பின் அளபெடை பெற்றமையால் இவ்வளபெடை குற்றெழுத்தளபெடை எனப் பின்னோரால் கூறப்பட்டது. இன்னிசையளபெடைகள் பெரும்பாலும் '...கெடுப்பதூஉம்...எடுப்பதூஉம்' (குறள். 17) என்பன போலக் குற்றெழுத்து அளபெடை ஆதல் காண்க. 'இது உது முன் வரும் அன்று ஆன்று ஆகாது' என்பது நன்னூல் விருத்தியுரை. (நன். 180)

ஒத்த நூற்பாக்கள் :

'சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே' தொல். 257

'அன்றுவரு சாலை ஆ-ஆ குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்துஎன மொழிப.' 258

'ழகர உகரம் நீடுஇடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான.' 261

'அதுமுன் வரும்அன்று ஆன்றாம் தூக்கின்.'
நன். 180

'அன்றுஅது முன்வரின் ஆ-ஆகலும் ஐ
வரின்உக ரங்கெடு தலுமாம் தூக்கின்.'
மு. வி. பு. 112

ஊகார ஈற்றுச் சிறப்பு விதி
பூப்பெயர்முன் வல்கணம்

96. பூப்பெயர் முன்இன மெல்லெழுத்து மிகுதலும்
போற்றல் வேண்டும் வேற்றுமைக் கண்ணே.

இஃது: ஊகார ஈற்றுள் ஒன்றற்கு எய்தாதது எய்து வித்தலும், எய்தியது இகந்துபடாமைக் காத்தலும் நுதலிற்று.

இ-ள் : பூ என்னும் ஊகார ஈற்றுப்பெயர் முன்னர் வரும் வல்லெழுத்து மிகுதலே அன்றி, அவற்றிற்கு இனம் ஆகிய மெல்லெழுத்து மிகுதலையும் விரும்பும் ஆசிரியன் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியிடத்து என்றவாறு.

வரலாறு : பூக்கொடி பூங்கொடி-சோலை-தாமம்-பந்து-எனவரும். 'போற்றல் வேண்டும்' என்றதனானே, மெல்லெழுத்துப்பேறே சிறப்பு உடைத்து எனக் கொள்க.

விளக்கம் : எய்தாதது எய்துவித்தல்-மெல்லெழுத்து மிகுதல். எய்தியது இகந்துபடாமைக் காத்தல்- 'இயல் பினும் விதியினும்' 82 என்பதனால் பெற்ற வல்லெழுத்து மிகுதல்.

''இப்பொருட்டாகிய பூப்பெயர்என விதவாமையின் பல பொருள் ஒருசொல் என்பது பெற்றாம். பூக்கெசடி என்ற தொடரில் பூ என்பது மலரேல் இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்க தொகை யாகவும்; பொலிவேல் பண்புத்தொகையாகவும் கொள்க ... ... 'உறழ்ந்து வரும்' என்று கூறாது வல்லினம் மிகுதலை உம்மையால் தழீஇக் கொண்டமையின், இவ் விருவகைத் தோன்றலும் ஏற்ற பெற்றி கொள்க'' என்பது நன்னூல் விருத்தியுரை. 200

''பூ என்பது பொலிவு என்னும் வினைக்குறிப்பை உணர்த்தாது என்றற்கு 'ஒரு பெயர்' என்றார்.''

தொல். 268 நச்.

ஒத்த நூற்பாக்கள் :

'பூஎன் ஒருபெயர் ஆயியல் பின்றே
ஆவயின வல்லெழுத்து மிகுதலு முரித்தே.'

தொல். 268

'பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்.'

நன். 200, மு. வி. பு. 118

எகர ஒகர ஈற்றுச் சிறப்பு விதி- 97 98
எகர ஒகரம் ஈறாமிடம்

97. தேற்றமும் சிறப்பும் அல்வழி யான
எகர ஒகரம் பெயர்க்குஈறு ஆகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்.

இஃது எகர ஒகரம் ஈறாம் இடம் உணர்த்துகின்றது

இ-ள் : தெளிவுப் பொருளும் சிறப்புப் பொருளும் அல்லாத வேற்றுமைப் பொருண்மையிடத்து அளபு எடுத்துக் கூறுதலின் உளவாகிய எகர ஒகரங்கள் பெயர்க்கு ஈறாய் வாரா; வினைக்கு ஈறாய் வரும். அவை தாம் தன்மையிலும் படர்க்கையிலும் வாரா; முன்னிலைச் சொல் இடத்தனவாம் என்று கூறுவர் புலவர் என்றவாறு.

எனவே, தெளிவுப்பொருளினும் சிறப்புப்பொருளினும் வந்து பெயர்க்கு ஈறாம் இடைச்சொல் ஆகிய எகர ஒகரங்கள் மூன்றிடத்திற்கும் உரியவாம் என்பது பெற்றாம்.

வரலாறு : ஏஎக் கொற்றா ஓஒக் கொற்றா- சாத்தா - தேவா - பூதா - என வரும். இவை ஈண்டு முறையே எனக்கு ஒரு கருமம் பணி எனவும். இங்ஙனம் செய்கின்றதனை ஒழி எனவும் முன்னிலை ஏவல் பொருண்மையாய் வந்தன. இவற்றிற்கு வல்லெழுத்துப் பேறு 'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் பெற்றாம். 45

விளக்கம் : தொல்காப்பியம் 272ஆம் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரையே ஈண்டு வரையப் பட்டுள்ளது. எனவே, முன்னிலைக்கண் ஏவற்பொருளில் வரும் எகர ஒகரங்கள் எழுத்துப் பேறளபெடையும் வல்லொற்றும் பெற்றுப் புணரும் எனபது உணரப்படும். எழுத்துப்பேறு அளபெடை புணர்ச்சியின் புறனடை நூற்பாவால் கொள்ளப்படும். வல்லெழுத்துப்பேறு 'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் கொள்ளப் படும் இவ்வாசிரியருக்கு அளபெடை எழுத்து அறிகுறி அன்று ஆதலின், அளபெடுத்தற்கண் வரும் எகர ஒகரங் களும் விதிஉயிர் ஈறுகளாம் என்பது அறிக.

ஒத்த நூற்பா :

'எகர ஒகரம் பெயர்க்குஈறு ஆகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்
தேற்றமும் சிறப்பும் அல்வழி யான.' தொல். 272

அவற்றின் முன்வன்கணம்

98. தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூறு இயற்கை வல்லெழுத்து மிகாஅ.

இது மேல் மூன்று இடத்திற்கும் உரியவாய் வரும் என்ற எகர ஒகர ஈற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ-ள் : தேற்றப் பொருண்மைக்கண் வரும் ஏகார ஈற்று இடைச்சொல் அளபுஎடுப்புழி வரும் எகரஈற்று முன்னும்,சிறப்புப் பொருண்மைக்கண்வரும் ஓகார ஈற்று இடைச்சொல் அளபு எடுப்புழி வரும் ஒகரஈற்று முன்னும் மேற்கூறிய அதிகார வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும் என்றவாறு.

வரலாறு : யானேஎ கொண்டேன் நீயேஎ கொண் டாய் அவனேஎ கொண்டான் எனவும், யானோஒ கொடியேன் நீயோஒ கொடியை அவனோஒ கொடியன் எனவும் வரும்.

'இயற்கை' என்றதனானே, ஏனை ஏகார ஓகார ஈற்று இடைச்சொற்கள் செய்யுள் அழிய வந்தஇடத்து அளபு எடுப்புழி வரும்.எகர ஒகர ஈற்றுக்கண்ணும் இயல் பாதல் கொள்க. அவைபோல இவை அளபெடுத்தல் ஒருதலை அன்மையின் இலேசினால் தழீஇயினார் என்க. 46

விளக்கம் : வினைக்கண் வரும் அளபெடை எகர ஒகரங்கள் முன்னிலைக்கே உரிய; அவை வருமொழி வன்கணத்தொடு மிக்கே புணரும். ஆனால் பெயர்க்கண் அளபெடுத்து வரும் எகர ஒகரங்கள் மூன்று இடங் களுக்கும் உரிய; அவை வன்கணம் வருவழியும் இயல் பாகவே புணரும் என இவற்றின் வேறுபாடு அறிக.

'தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்

அளபின் எழுந்த இசைய என்ப' தொல்.சொல்.268

ஆதலின்,தெளிவுப்பொருட்கண்வரும் ஏகாரமும் சிறப்புப் பொருட்கண் வரும் ஓகாரமும் அளபெடுத்து எகர ஒகர ஈற்ற ஆகும் என்பது அறிக.

'இயற்கை' என்ற மிகையானே, சிறுபான்மை ஏனைப் பொருட்கண் வரும் ஏகார ஓகாரங்களும் அள பெடுத்தவழி வருமொழி வன்கணத்தொடு இயல்பாகப் புணரும் என்பது அறிவிக்கப்பட்டது.

ஒத்த நூற்பாக்கள் :

'தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூறு இயற்கை வல்லெழுத்து மிகாஅ.'
தொல். 273

'ஏகாரத் தேற்றம் இயல்பா கும்மே.' மு.வீ பு. 122

'எகரச் சாரியை ஏ-ஏற்கும்மே.' 123

ஏகார ஓகார ஈற்றுச் சிறப்பு விதி

99, இடைச்சொல் ஏஓ முன் வரின் இயல்பே.

இஃது ஏகார ஓகார ஈற்று இடைச்சொற்களுக்கு எய்தியது விலக்குகின்றது.

இ ள்: இடைச்சொல்லாய் வரும் ஏகார ஓகாரங்கள் முன்னர் வல்லெழுத்து வந்தால் மிகாது இயல்பாய் முடியும் என்றவாறு.

ஈண்டு. இடைச்சொல் என்றன தேற்றமும் சிறப்பும் ஒழிந்தவற்றினை; என்னை? அவை அளபுஎடுத்து எகர ஒகர ஈறாயே நிற்றலின்.

வரலாறு : நீயே கொண்டாய்?-இது வினா. காலே கையே—இஃது எண். அவருள் இவனே கொண்டான்—இது பிரிநிலை.யானே கொண்டேன்?-இஃது எதிர்மறை.

'கழியே—சிறுகுரல் நெய்தலொடு பாடுஓ வாதே'—இஃது ஈற்றசை.

கொளலோ கொண்டான்—இஃது ஒழியிசை. நீயோ கொண்டாய்?—இது வினா. யானோ கொண்டேன்?—இஃது எதிர்மறை. அவனோ போனான்— இது கழிவு.

'யானோ தேறேன் அவர் பொய்வழங் கலரே'—இது பிரிநிலை. பத்தோபதினொன்றோ. புற்றோபுதலோ—இவை ஐயம்.

'குன்றுஉறழ்ந்த களிறுஎன்கோ கொய்யுளைய மா என்கோ'—இவை எண்.

'காணிய வம்மினோ கங்குலது நிலையே' — இஃது அசைநிலை. இவை இயல்பாயவாறு காண்க. 47

விளக்கம்: ஏ என்னும் இடைச்சொல் பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம் இசைநிறை என்னும் பொருள்களிலும், ஓகார இடைச்சொல் ஒழியிசை வினா சிறப்பு எதிர்மறை தெரிநிலை கழிவு அசைநிலை பிரிப்பு எண் என்னும் பொருள்களிலும் வரும். அவற்றுள், தெளிவின்ஏயும் சிறப்பின்ஓவும் மேல் குறிப்பிடப்பட்டமையின் இந்நூற்பாவில் ஏனைய ஏகார ஓகாரங்களே கொள்ளப்படும். ஏகார ஓகாரம் பற்றிய விளக்கம் இடையியலில் கூறப்படும்.

ஏகார ஓகார ஈற்று இடைச்சொல் 'இயல்பினும் விதியினும்' 82 என்ற நூற்பாவால் எய்துதற்குரிய வல்லெழுத்து இந்நூற்பாவால் நீக்கப்படுகிறது.

எதிர்மறைப் பொருளில் வரும் ஏகார ஓகாரங்களுக்குத் தொல்காப்பியனார் 'மாறுகோள் எச்சம்' (தொல். 275, 290) என்ற குறியீடு வழங்கியுள்ளார். தொல்காப்பிய 275ஆம் நூற்பாவால் எதிர்மறை வினா எண் என்ற பொருள்களில் வரும் ஏகாரமும், அந்நூற்பாவில் 'கூறிய' என்ற மிகையானே பிரிநிலை ஈற்றசைப் பொருள்களில் வரும் ஏகாரமும் 290ஆம் நூற்பாவால் எதிர்மறை வினா ஐயம் என்ற பொருள்களில் வரும் ஓகாரமும் 'கூறிய' என்ற மிகையானே பிரிநிலை தெரிநிலை எண் என்ற பொருள்களில் வரும் ஓகாரமும் கொண்டு நச்சினார்க்கினியர் வரைந்த எடுத்துக்காட்டுக்களையே இவ்வாசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'மாறுகோள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்.' தொல் 275

'மாறுகோள் எச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்.' 290

'ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற்று இயற்றே.' 291

முழுதும் நன். 201

'ஐயஓ வினாவலி மிகாதுஇயல் பாகும்' மு.வீ.பு.132

'ஒழியிசை ஓவும் மாறுகொள் எச்சமும்
மிகாதுஇயல் பாகும் என்மனார் புலவர்'. மு. வீ. பு. 134

குற்றுகர ஈற்றுச் சிறப்பு விதி 100—118
அல்வழியில் இயல்புபுணர்ச்சி

.00. வன்தொடர் அல்லன முன்மிகா அல்வழி.

இது குற்றுகர ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

இ-ள் : வன்தொடர் ஒழிந்த ஐவகைக் குற்றுகர ஈற்று முன்வரும் வல்லெழுத்து மிக்கு முடியா, அல்வழிக் கண் என்றவாறு.

எ-டு: நாகு கடிது எஃகு கடிது வரகு கடிது குரங்கு கடிது தெள்கு கடிது-சிறிது-தீது-பெரிது-என வரும். 48

விளக்கம் : 'இயல்பினும் விதியினும்' 82 என்ற நூற்பாவில் குற்றியலுகரத்தையும் உயிர்ஈற்றுள் தழுவி னார். ஆதலின் அந்நூற்பாவானே பெறப்பட்ட வல்லெ ழுத்து மிகுதியை வன்தொடர் அல்லாத, ஈரெழுத்து ஒரு மொழி ஆய்தத்தொடர் உயிர்த்தொடர் மென்தொடர் இடைத்தொடர் என்ற ஐவகைக் குற்றியலுகர ஈற்றுச்

சொற்களும் பெறா என ஒருமருங்கு இந்நூற்பா மறுக்கின்றது. இவ்விதி அல்வழிக்கே என்பது கொள்க. வேற்றுமைப் புணர்ச்சி பின்வரும் நூற்பாக்களில் கூறப்படும்.

ஒத்த நூற்பாக்கள் :

'அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை ஆகும்.' தொல். 425

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து
மிகுமே' 426

முழுதும் நன். 181

வேற்றுமையில் இயல்பு புணர்ச்சி

101. இடைத்தொடர் ஆய்தத்தொடர் ஒற்று இடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர்முன்மிகா வேற்றுமை

இதுவும் அது.

இ-ள் : இடைத்தொடர்மொழிக் குற்றுகர ஈற்று முன்னும் ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர ஈற்று முன்னும் ஒற்று இடையேமிகாத ஈரெழுத்து ஒருமொழிக் குற்றுகர ஈற்றுமுன்னும் உயிர்த்தொடர்மொழி குற்றுகர ஈற்று முன்னும் உயிர்த்தொடர்மொழிக் குற்றுகர ஈற்று முன்னும் வரும் வல்லெழுத்து இயல்பாய் முடியும் வேற்றுமைக்கண் என்றவாறு.

எ-டு: தெள்குகால்-சிறை-தலை-புறம்-எனவும்,
எஃகு கடுமை-சிறுமை-தீமை-பெருமை-எனவும்,
நாகுகால்-செவி-தலை-புறம்-எனவும்,
வரகுகதிர் - சோறு - தாள்-பதர்-எனவும் முறையே காண்க.

விளக்கம்: இதுவும் அது-'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் எய்திய மிகுதியை மறுத்து இயல்பாம் என்கின்றது.

இடைத்தொடர்ப்புணர்ச்சி-தெள்குகால் முதலியன.

ஆய்தத்தொடர்ப் புணர்ச்சி-எஃகுகடுமை முதலியன

ஒற்று இடையின் மிகா ஈரெழுத்தொருமொழி தொடர்ப் புணர்ச்சி-நாகுகால் முதலியன. ஒற்று இடையின் மிகா உயிர்த்தொடர்ப் புணர்ச்சி - வரகுகதிர் முதலியன.

"'ஒற்று இடையின் மிகா' என்பதனை உயிர்த் தொடரோடும் கூட்டுக" என்பது நன்னூல் விருத்தியுரை (182)

ஒற்று இடையின் மிகும் ஈரெழுத்தொருமொழித் தொடர், ஒற்று இடையின் மிகும் உயிர்த்தொடர் இவற்றின் புணர்ச்சி 'நெடிலோடு உயிர்த்தொடர்' (இ. வி. 102) என்ற அடுத்த நூற்பாவில் கூறப்படும்.

ஒத்த நூற்பாக்கள் :

'ஒற்றிடை இனமிகா மொழியுமார் உளவே
அத்திறத்து இல்லை வல்லெழுத்து மிகலே.'
தொல். 412

'இடைஒற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
தடைஆ யியல என்மனார் புலவர்.' தொல். 413

முழுதும் நன். 182

'ஒற்றிடை மிகாக்குற் றுகரமும் உளவே
வல்லினம் மிகல்அத் திறனுள் இல்லை.'
மு. வீ. பு. 233

'இடைத்தொடர் ஆய்தத் தொடர்இயல் பாகும்,'
மு. வீ. பு 234

வேற்றுமையில் டறஒற்று இரட்டல்

102. நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

இது குற்றுகர ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியதன் மேல் சிறப்பு விதி கூறுகின்றது.

இ-ள்: ஈரெழுத்து ஒருமொழி ஈற்றினும் உயிர்த் தொடர்மொழி ஈற்றினும்உகரம் பற்றுக்கோடாய் நின்ற வல்லெழுத்து ஆறனுள் டகர றகரமாகிய இரண்டு ஒற்றும் இடைக்கண் மிகும், வேற்றுமைக்கண் பெரும் பாலும் என்றவாறு.

எ-டு- யாட்டுக்கால் பாற்றுக்கால் முருட்டுக்கால் முயிற்றுக்கால்-செவி-தலை - புறம்-ஞாற்சி-நிறம் - மயிர் யாப்பு-வலிமை-அடி-என வரும்.

கயிற்றுப்புறம் வயிற்றுத்தீ இவையும் அன்ன. பெரும்பாலும் மிகும் எனவே,

'வேலி — ஆயிரம் விளையுட்டு ஆகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே' பொருந...
246-248

'கறைமிடறு அணியலும் அணிந்தன்று'(புறநா1-5) எனச் சிறுபான்மை வேற்றுமைக்கண் மிகாமையும், காட்டரண் ஏற்றேனம் குருட்டுக்கோழி திருட்டுப் புலையன் கரட்டுக்கானம் வறட்டாடு குருட்டெருது களிற்றுப்பன்றி வெளிற்றுப்பனை, (புறநா 35)எயிற்றுப் பல் எனச் சிறுபான்மை அல்வழிக்கண் மிகுதலும்.

வெருக்குக்கண் (நாலடி-210) எருத்துக்கால் எனச் சிறுபான்மை பிறமெய் மிகுதலும் கொள்க. 50

விளக்கம்: எய்தியது-சென்ற நூற்பாவில் எய்திய இயல்பு;சிறப்புவிதி-டகர றகர ஒற்றுக்கள் இரட்டுதலும்,

இரட்டியவழி விதிவன்தொடராய் வருமொழி வல்லெ ழுத்து மிகுதலும்.

யாடு+கால், பாறு+கால்—யாட்டுக்கால், பாற்றுக் கால்; முருடு + கால், முயிறு+கால் - முருட்டுக்கால் முயிற்றுக்கால், கயிற்றுப்புறம், வயிற்றுத்தீ—விதிவன் தொடராகிய இயல்பு உயிர்த்தொடர்ப் புணர்ச்சி.

நாட்டுக்கிழவோன், மிடற்றுஅணியல் எனற்பாலன செய்யுட்கண் நாடுகிழவோன், மிடறுஅணியல் என இயல்பாயின.

காட்டரண் முதலியன இருபெயரொட்டுப் பண்புத் தொகை. பொதுவாக இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகைகள் யாவும் வேற்றுமை முடிபு எய்தும் ஆதலின், ஈண்டும் ஒற்று இரட்டின.

வெருகு + கண், எருது + கால் — வெருக்குக்கண் எருத்துக்கால் எனக் ககர தகர ஒற்றுக்களும் இடை மிக்கன.

'ஈரெழுத்து மொழியும்' (தொல். 411)என்ற நூற்பா உரையில் யாட்டுக்கால் முயிற்றுக்கால் முதலியவற்றை யும் எயிற்றுப்புறம் வயிற்றுத்தீ என்பனவற்றையும் அந் நூற்பாவின் 'தோற்றம்' என்ற மிகையான் யாட்டுஞாற்சி முதலிய இயல்புகணை முடிவையும் 'அல்லது கிளப்பின் எல்லா மொழியும்' (தொல். 425)என்ற நூற்பா உரையில் 'சொல்லிய' என்ற மிகையான் இருபெயர் ஒட்டுப்பண்புத் தொகை வன்கணத்துக்கண் இனஒற்று மிக்கு வல்லெ ழுத்துப் பெற்று முடிதலு[illegible] இயல்புகணத்துக்கண் இன ஒற்று மிக்கு முடிதலு[illegible]கியவற்றையும் குறிப்பிட்டு, அவற்றிற்கு எடுத[illegible]டுக்களான காட்டுக்ஞானம் முதல் குருநட்டு[illegible]றான தொடர் முடிபையும் குறிப்பிட[illegible]ர்க்கினியர்.

மயிலைநாதர் உரையில் (நன்.182) 'நாடுகிழவோன்' 'கறைமிடறு அணியலும் அணிந்தன்று' என வேற்றுமை கண் மிகாமையும் வெருக்குக்கண் எருத்துக்கால் என டகர றகரம் நீங்கலான பிறமெய் இரட்டியமையும் சுட்டப்பட்டுள்ளன. இருவர் உரைத்த எடுத்துக்காட்டுக் களையும் இணைத்துக் கொண்டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை ஆயின் ஒற்றிடை இனம்மிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.'
தொல். 411

முழுதும் நன். 183

'நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறஒற்று இரட்டும் வேற்றுமைப் பொருட்கே'
மு. வீ. பு. 232

மென்தொடர்க் குற்றுகரமொழி சிலவற்றிற்குச் சிறப்பு விதி

103. மென்தொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்மின வன்தொடர் ஆகா மன்னே.

இதுவும் அது.

இ-ள் : மெல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகர ஈற்று மொழிகளுள் சில மொழிகளே வேற்றுமைக்கண் தமக்கு இனமான வல்லொற்றுத் தொடர்மொழி ஆகாதன, ஆவன பல என்றவாறு.

வரலாறு : குரக்குக்கால் - நாற்சி - நிணம்-முகம்-விரல்-உகிர்-எனவும்,

சுழச்சுக்கோல் எட்குக்குட்டி மருத்துப்பை பாப்புத் தோல் எற்புக்காடு சிலப்பதிகாரம் எனவும் வரும்.

ஞெண்டுக்கால் பந்துத்திரட்சி பறம்பிற்பாரி குறும்பிற் சான்றோர் என்றாற்போல்வன வன்றொடர் ஆகாதன.

'மன்னே' என்பதனானே, குரக்குக்கடி குரங்கின்கால் பாப்புத்தோல் பாம்பின்றோல் என ஒன்றுதானே ஓர் இடத்துத் திரிந்தும் ஓர் இடத்துத் திரியாதும் வருதலும் கொள்க.

இன்னும் அதனானே அற்புத்தளை அன்பினால் செய்ததனை என வேற்றுமை ஆதலே அன்றி, அன்பாகியதளை என அல்வழியும் ஆதலின் அல்வழியும் திரிதல் கொள்க. 51

விளக்கம் : இதுவும் அது-எய்தியதன்மேல் சிறப்பு விதி. எய்தியது— 'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் வரும் வல்லெழுத்து மிகுதி; சிறப்பு விதி-நிலைமொழி மெல்லொற்று வல்லொற்றாகவும் திரியும் என்பது.

குரங்கு, கழஞ்சு, எண்கு, மருந்து, பாம்பு, என்பு, சிலம்புஎன்ற மென்றொடர்மொழிக் குற்றுகரச் சொற்கள் வருமொழியொடு புணரும்வழி முறையே குரக்கு கழச்சு எட்கு மருத்து பாப்பு எற்பு சிலப்பு எனத் திரிந்தன.

ஞெண்டு பந்து பறம்பு குறும்பு என்றாற் போல்வன திரியாதன. குரங்கு பாம்பு என்பன திரிந்தும் திரியாதும் புணர்ந்தன.

'குரக்குக்கால் கழச்சுக்கோல் எட்குக்குட்டி மருத்துப்பை பாப்புக்கால் எற்புச்சட்டகம் எனத் திரிந்தன. ஞெண்டுக்கால் வண்டுக்கால் பந்துத்திரட்சி கோங்கிணை சங்கிலை புன்கங்காய் அடும்பம்பூ பொதும்பிற்பூவை குறும்பிற் கொற்றன் என்றல் தொடக்கத்தன திரியாதன 'மன்னே' என்ற மிகையானே, குரக்குக்கடி குரங்குக்கடி வெப்பங்காய் வேம்பின்காய். பாப்புத்தோல் பாம்பின் தோல் என்றல் தொடக்கத்தன வேற்றுமைக்கண்

திரிந்தும் திரியாதும் வந்தன'' என்பது மயிலைநாதர் உரை. (நன்-183) 'இவ்வாறு சில வருதலையும் எதிர் மறை முகத்தால் கூறினமையின், வழக்கின் கண்ணும் சான்றோர் செய்யுட்கண்ணும் ஏற்றபெற்றி கொள்க' என்பது விருத்தியுரை. (நன். 184)

'வன்றொடர் மொழியும்' (தொல். 414) என்ற நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் கொக்குக்கால் குரங்குங்கால் குரக்குக்கால் எட்குக்குட்டி எற்புக்காடு அற்புத்தளை என்பனவற்றையும், 'வந்த' என்ற மிகை யானே கொக்கின்கால் குரங்கின்கால் என்பனவற்றை யும், 'எல்லாப்' என்ற மிகையானே பறம்பிற்பாரி குறும்பிற்சான்றோர் என்பனவற்றையும் 'ஒற்று' என்ற மிகையானே இயல்புகணத்துக்கண் குரக்குஞாற்சி சிலப் பதிகாரம் என்பனவற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாசிரியர் இவற்றை எல்லாம் ஏற்றபெற்றி கொண்டுள்ளார்.

அற்புத்தளை என்பதன் விளக்கமும் நச்சினார்க் கினியர் இந்நூற்பா உரையுள் குறித்ததே அற்புத்தளை அல்வழித்தொடர் என்றே நன்னூல் விருத்திகூறும். 184

ஒத்த நூற்பாக்கள் :

'வன்தொடர் மொழியும் மென்தொடர் மொழியும்
வந்த வல்லெழுத்து ஒற்றிடை மிகுமே.
மெல்லொற்றுத தொடர்மொழி மெல்லொற்று எல்லாம்
வல்லொற்று இறுதிக் கிளைஒற்று ஆகும்.'

தொல். 414

முழுதும் நன். 184

'வன்தொடர் மென்தொட சில்சில வலிக்கும்.'

மு. வீ. பு. 235

'அவற்றுள்
மென்தொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தப்இன வன்தொடர் ஆகா மன்னே.' மு.வீ.பு.236

மென்றொடர்க்குற்றுகரம் சில ஐகாரச் சாரியை பெறுதல்

124. ஐயீற் றுடைக்குற் றுகரமும் உளவே.

இதுவும் அது.

இ-ள்: ஐகாரத்தைத் தம் ஈற்றிலே பெறவரும் குற்றுகரமும் உள என்றவாறு.

எ-டு பண்டைக் கூத்தன்-சாத்தன்-தேவன்-பூதன் எனவும், மன்றைத் தூதை-பானை-எனவும் வரும்.

ஓராட்டையானை ஐயாட்டைஎருது எனத் திரிந்தும் அன்றைக் கூத்தர் அற்றைக் கூத்தர் என உறழ்ந்தும் வரும் எனவும் கொள்க. 52

விளக்கம்: இதுவும் அது-எய்தியதன்மேல் சிறப்பு விதி. எய்தியது- 'இயல்பினும் விதியினும்' 82 என்பதனால் எய்திய வல்லெழுத்துப்பேறு; சிறப்புவிதி - ஐகாரம் பெறுதல்.

'அல்லது கிளப்பின்' தொல். 425 என்ற நூற்பா உரையுள், ''பண்பின்' என்றதனால், மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரம் பெறறு முடிவனவும், மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரமும் வல்லெழுத்தும் பெற்று முடிவனவும், மெல்லொற்று வல்லொற்று ஆகாது ஐகாரமும் வல்லெழுத்தும் பெற்று முடிவனவும் கொள்க. ஓர்யாட்டை யானை - ஐயாட்டை எருது - எனவும், அற்றைக் கூத்தர்-இற்றைக் கூத்தர்-எனவும், மன்றைத் தூதை-மன்றைப் பானை-பண்டைச்சான்றார் - எனவும் வரும்' என்று நச்சினார்க்கினியர் உரைத்துள்ளார். இவற்றையே ஏற்ற பெற்றி இவ்வாசிரியர் கொண்டுள்ளார்.

இனி, ஐயீற்றுக் குற்றுகரம் பெயர்கொண்டே முடியும் எ[illegible]து கருதி உணரத் தக்கது.

'மேலைச் சூத்திரத்தைச் சார வைத்தமையான் இதுவும் மென்தொடர் என்பது பெற்றாம். வருமொழி வரையாமையின், நாள்கணமும் கொள்க. பண்டைக் காலம் இற்றைநாள் எனவும், அற்றைக்கூலி இற்றை நலம் எனவும் வரும்.

'மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தாரேனும், ஐயீற்றுடைக் குற்றுகரம் எனப் பொதுப்படக் கூறினமை யின், நேற்றைப்பொழுது எனப் பிற தொடர்க்கண் ஐகாரம் பெறுதலும், 'ஐயீற்றுடைக் குற்றுகரம்' என உடைமையாகக் கூறினமையின் வருமொழிப் புணர்ச்சி யான் அன்றி ஒற்றை இரட்டை வேட்டை என ஒருமொழி யாய் நின்று ஐகாரம் பெறுதலும் ஈராட்டை மூவாட்டை எனத் தொடர்மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க' என்பது நன்னூல் விருத்தியுரை. (184)

ஒத்த நூற்பாக்கள் :

முழுதும் நன். 185

'அடைமொழி உக்குறள் ஐ ஆதலுமாம்.'
தொ. வி. 28

திசைப்பெயர்ப் புணர்ச்சி

105. திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலைஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள் : திசைப்பெயரொடு திசைப்பெயரும் பிற மொழியும் வந்து புணரும் இடத்து நிலைமொழி ஈற்று உயிர்மெய்யும் அதன்மேல்நின்ற ககரஒற்றும் கெடுதலும் றகரஒற்று னகர லகரங்களாய்த் திரிதலும் பொருந்தும் என்றவாறு.

'பிற' என்றதனானே, திசையொடு திசை புணருங்கால் நிலைமொழி பெருந்திசை எனவும், வருமொழி கோணத்திசை எனவும், நிலைமொழியாய் நிற்பனவும் வடக்கும் தெற்குமே எனவும், தெற்கு என்பதன் றகரம் ணகரமாயும் மேற்கு என்பதன் றகரம லகரமாயும் திரியும் எனவும், மேற்றிசை என்றால்போல்வன திரியா எனவும் வருமொழித் தகரம் திரியும் எனவும், ழகரத்து அகரம் கெட்டு முதல் நீண்டே வரும் எனவும், பெருந்திசையோடு பெருந்திசை புணர்வுழி ஏஎன் சாரியை வரும் எனவும் கொள்க.

வரலாறு: வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு எனவும்,

வடகடல் - வடசுரம்-வடதலை-வடபால்- 'வடவேங்கடம் - தென்குமரி' (தொல். பாயிரம்) - தென்சுரம் - தென்றலை-தென்பால்-மேல்கடல்-மேல்பால் - குடகடல்-குடபால்-குணகடல்-குணபால்-கீழ்கரை-கீழ்சார்-எனவும்

தெற்கேவடக்கு—வடக்கேதெற்கு— மேற்கேகிழக்கு கிழக்கேமேற்கு எனவும் வரும

தெற்கேவடக்கு முதலியன உம்மைத்தொகை.

தெற்குவடக்கு வடக்குத்தெற்கு கிழக்குமேற்கு மேற்குக்கிழக்கு என ஏகாரம் பெறாது பெரும்பான்மை பொதுவிதி பெறுதலும், கீழைக்குளம் மேலைக்குளம் கீழைச்சேரி மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும் அவ் விலேசானே கொள்க. 53

விளக்கம்: எய்தியது-'இயல்பினும் விதியினும்' 82 என்பதனான் எய்திய வல்லெழுத்து. பிறிது விதி—ககர ஒற்றும் உயிர்மெய்யும் நீங்குதலும், றகரஒற்று ணகரமாகவும் லகரமாகவும் திரிதலும்.

பழந்தமிழகத்தில் வடக்கும் தெற்குமே பெருந்திசை

'வடவேங்கடம் தென்குமரி' எனத் தொல்காப்பியப் பாயிரம் இருதிசைகளே கூறிற்று.

'வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்' என்ற பெருங்காக்கைபாடினியப் பாயிர அடியாலும்,

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்'
(புறநா. 6)

'தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலாஎல்லை' (புறநா. 17)

முதலியவற்றாலும் பண்டு குணக்கு குடக்கு என்பனவே கிழக்கையும் மேற்கையும் அறிவித்த சொற்கள் என்பது அறிக.

'கிளைஇய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே'
(குறுந் 337-2)

'செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காந் தலை' (குறள். 488)

'கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும்.'
(தொல். பொருள். 280)

'மீ என மரீஇய இடம்வரை கிளவி' தொல். 250
(மீ எனபது மேல் என்பதன் மருஉமொழி)

முதலியவற்றால், கிழக்கு என்ற சொல் பள்ளத்தையும் மேற்கு மேட்டினையும் குறிக்கப் பயன்பட்டுப் பின் தமிழகத்தின் கீழ்ப்பகுதி பள்ளமாகவும் மேற்குப்பகுதி மேடாகவும் இருத்தல் காரணம் பற்றித் தமிழில் கிழக்கு மேற்கு என்ற சொற்கள் தொல்காப்பியனார்க்கு மிகப் பிற்பட்ட காலத்திற்றான் திசையைக் குறிக்கும் சொற்களாக வழங்கலாயின என்பதும் அறிக. யான் என்ற சொற்கு மிகப் பிற்பட்டுத் தோன்றிய நான் என்ற சொல்

யான் என்பதன் சிறப்பை ஒடுக்கித்தானே வழக்காற்றில் சிறப்புற்று மிளிர்வதுபோலக் கிழக்கு மேற்கு என்பனவும் குணக்கு குடக்கு என்பனவற்றின் வழக்கினைச் செகுத்து வழக்காற்றில் தாமே செல்வாக்குப் பெற்றுவிட்டமை காண்க.

ஆசிரியர் காலத்து வடக்கு தெற்கு என்ற இரண்டுமே பெருந்திசைகள் என்பதனையும், குணக்கும் குடக்கும் கோணத் திசைகள் என்பதனையும் 'அறிக.' 'இருதிசை புணரின் ஏ-இடை வருமே' (தொல். 431) என்பதற்கு 'வடக்கேதெற்கு தெற்கேவடக்கு என்பனவே எடுத்துக் காட்டாகும் என்பதனையும், குணக்கேகுடக்கு குடக்கே குணக்கு என்ற எடுத்துக்காட்டுக்கள் அத்துணை ஏற்புடைய அல்ல என்பதனையும், கிழக்கேமேற்கு மேற்கேகிழக்கு என்ற எடுத்துக்காட்டுக்கள் அறவே பொருந்துவன அல்ல என்பதனையும் கொள்க.

பெருந்திசையோடு கோணத்திசை சேருமன்றிக் கோணத்திசையோடு பெருந்திசை சேராது ஆதலின், வடகுணக்கு (வடகிழக்கு) வடகுடக்கு (வடமேற்கு) என்பனவே வழக்காறாகும் அன்றிக் குணவடக்கு (கீழ்வடக்கு) குடவடக்கு (மேல்வடக்கு) என்பன வழக்காற்றிற்கு ஏற்பன அல்ல என்பதனையும் கொள்க. இவ்வாசிரியர் காலத்தில் கிழக்குமேற்கு என்ற சொற்கள் பெருவழக்கினவாய்ப் பயின்று வருதலின், வடகிழக்கு வடமேற்கு முதலிய எடுத்துக்காட்டுக்கள் இவருக்குச் சாலவும் ஏற்பன என்பதும் கொள்க.

வடகிழக்கு வடமேற்கு — ஈற்றுஉயிர்மெய்யும் கவ்வொற்றும் நீங்கின. தென்கிழக்கு தென்மேற்கு – ஈற்று உயிர்மெய் நீங்க, றகரம் னகரம் ஆயிற்று. வடகடல் முதல் குணபால் ஈறாகியன — திசைப்பெயர் முன் பிற பெயர்கள் புணர்ந்தமைக்கு எடுத்துக்காட்டு.

கீழ்கரை கீழ்சார்—கிழக்கு என்பதன் முன் பிறபெயர் புணர்வுழி, ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்குதலோடு ழகரத்து அகரம் கெட்டு முதல் நீண்டதற்கு எடுத்துக் காட்டு.

பெருந்திசையோடு பெருந்திசை புணருமிடத்து ஏஎன் சாரியை வரும் எனவே, மேற்கேகிழக்கு கிழக்கேமேற்கு என்ற எடுத்துக்காட்டுக்கள் பொருந்துவன அல்ல.

தெற்குவடக்கு—'எண்மூ எழுத்தீற்று' (இ. வி. 69) என்பதனால் இயல்பு.

வடக்குத்தெற்கு—'வன்றொடர் அல்லன' (இ.வி.1 0) என்பதனால் மிக்கது,

அவ்விலேசு – இந்நூற்பாவின் 'பிற' என்பது.

இவ்வாசிரியர் 'பிற' என்ற மிகையாற் கொண்ட செய்திகள் சில தொல்காப்பியத்து 432ஆம் நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் உரைத்தனவாம்.

ஒத்த நூற்பாக்கள் :

'இருதிசை புணரின் ஏஇடை வருமே' தொல். 431

'திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகாரம் ஆகும்
தெற்கொடு புணருங் காலை யான.' 432

முழுதும் நன். 186 மு.வீ.பு. 255

'இருதிசை புணரின் ஏஇடை வருமே.' மு.வீ.பு.254

எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி 106-117
பொதுவியல்பு

106. எண்நிறை அளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ணுள்

முதல்ஈர் எண்முதல் நீளும் மூன்றுஆறு
குறுகும் ஆறுஅல் லவற்றின்ஈற்று உயிர்மெய்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்.

இது குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர் எண் முதலிய பெயரொடு புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பொருட்பெயரும் வருமொழியாய் வந்து புணரின, நிலைமொழியாய் நின்ற ஒன்று முதல் எட்டு ஈறாகிய எழுவகை எண்களுள் முதற்கண் நின்ற ஒன்றும் இரண்டும் முதல் உயிர் நீண்டும், மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகியும், ஆறுஅல்லாத அறுவகை எண்களின் ஈற்றுநின்ற உயிர்மெய் கெட்டும் முடியும். பொருந்தும் இடத்து என்று கூறுவர் அறிவுடையோர் என்றவாறு.

நாற்கணத்தோடும் இவ்வாறே முடியவேண்டும் என்னும் யாப்புறவு இல்லை. தமக்கு ஏற்ற பெற்றி முடியும் என்பார் 'ஏற்புழி' என்றார். 'எண்நிறை அளவும் பிறவும் எய்தின்' என்பதனைமேல் ஐந்து சூத்திரத் தோடும். 'ஏற்புழி' என்பதனை இப்பொருண்மை அதிகாரம் முற்றும் அளவும் உய்த்து உணர்க.

வரலாறு: அறுபஃது - கோடி-காணி-கால்-நூறு-நூறாயிரம்-நரன்கு-மூன்று-முந்திரிகை-முக்கால்-ஆயிரம் எனவும், கழஞ்சு-சீரகம்-தொடி-பலம்-மஞ்சாடி-எனவும், கலம் - சாடி - தூதை-பானை - நாழி - மண்டை-வட்டி - எனவும், கல்-சுனை-துடி-பறை-ஞாண்-நூல்-மணி-யாழ்-வட்டு-எனவும் வன்கணம்முதலிய முக்கணமும் ஆயிரமும் வர, ஆறு நெடுமுதல் குறுகித் தனக்கு ஏற்ற பெற்றி முடிந்தது. ஒழிந்தவற்றிற்கு உதாரணம் மேல் காட்டுதும் 'ஏற்புழி' என்பதனானே, ஆறு கோடி-கழஞ்சு-கலம்-கல் என நெடுமுதல் குறுகாது குற்றுகர ஈற்றுப் பொதுவிதி யானே (100) முடிதலும்,

ஆறொன்று - இரண்டு - ஐந்து - ஆறு - எழ்-எட்டு-ஒன்பது-எடை-அகல்-உழக்கு-அகம்-ஆகம் - என உயிர்க்கணத்தொடு புணருங்கால், ஈண்டுக் கூறிய சிறப்புவிதி ஏலாது மேலைப் பொதுவிதியானே முடிதலும்,

ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்ணுள், இரண்டு முதலியன இரண்டுகோடி மூன்றுகோடி நான்குகோடி ஐந்துகோடி எட்டுக்கோடி - கழஞ்சு-கலம் -கல் - என்றல் தொடக்கத்தனவற்றொடு புணரும் இடத்து முன்னர்க் கூறும் சிறப்புவிதி ஏலாது குற்றுகர ஈற்றுப் பொதுவிதியான் முடிதலும்,

'ஒன்று தேரினான் ஒருவன் கூற்றமே' (சிந். 417) எனச் சிறுபான்மை ஒன்றும் இங்ஙனம் முடிதலும் கொள்க. எழ் என்பது ஒற்று ஈறு ஆதலின், மெய்ஈற்றுப் புணரியலுள் முடிப்பாம். ஆசிரியர் தொல்காப்பியனாரும் ழகர ஈற்றுள் முடிப்பார். 54

விளக்கம் : எண் முதலிய பெயர்—எண், நிறை, அளவு, பொருள் பற்றிய பெயர், இந்நூற்பாவில் ஏழ் என்ற ழகர ஈற்று எண்ணுப்பெயர் நீங்கலான ஒன்று முதல் எட்டு ஈறாகிய ஏழ் எண்களுக்கும பொதுவான புணர்ச்சி வேறுபாடு கூறப்படுகிறது. ஆறு என்பது முதல் குறுகி அறு என்று ஆகும். ஏனைய எண்ணுப்பெயர்களின் ஈறு கெடும். ஈறு கெடுதலொடு, ஒன்றும் இரண்டும் முதல் நீளும். மூன்று ஈறு கெடுதலொடு, முதல் குறுகும்.

ஆறு என்பதற்கு மாத்திரப் போதிய புணர்ச்சிவிதி இந்நூற்பாவிலேயே அமைந்து கிடத்தலின், அஃது ஒன்றற்கே எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளார்; ஏனையவற்றிற்கு அவ்வவற்றின்சிறப்பு நூற்பாக்களில் எடுத்துக்காட்டுகள் தருவார்.

இரண்டுகோடி முதலிய இயல்பு புணர்ச்சி 'வன்றொடர் அல்லன' (இ. வி. 100) என்ற பொதுவிதியால் கொள்ளப்படும.

'ஒன்று தேரினான்' என்பதும் அது. இதற்கு ஒன்றாகிய தேரினை உடையவன் என்று பொருள் செய்க.

ஏழ் என்ற எண்ணுப்பெயர் விதி மெய்யீற்றுப் புணரியலில் 'ஏழ்என் கிளவி ஆறுஇயல் நிலையும்' (இ. வி. 136) என்புழிக் கொள்ளப்படும்.

ஒத்த நூற்பாக்கள் :

'(மூன்றும்) ஆறும் நெடுமுதல் குறுகும்.' தொல். 441

'ஆறென் கிளவி முதல்நீ டும்மே.' 458

'ஆறன் மருங்கின் குற்றிய லுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.' 469

'ஒன்றுக்கு ஒருஓர் இருஈர் இரண்டுக்கு மூன்றுமும்மு
அன்றுற்ற நாலுக்கு நான்குஐந்துஐ ஆறுஅறு
ஏழ்எழுவாய்
தோன்றுற்ற எட்டுக்குஎண் ஒன்பதுஒன் பானொடு
தொண்தொள்ளும், பான்
பன்னுற்ற நூறு பதுபஃது பத்துநூறு ஆயிரமே.'
வீ. 23

'நின்றமுதல் குற்றுயிர்தான் நீளும்முதல்
நெட்டுயிர்தான்.
குன்றும் உயிர்உயிர்மெய் கூடுமேல்— ஒன்றியஎண்
பத்தினிடை ஆய்தமும்ஆம் பந்நீண்டும் நீளாதும்
மற்றவையோய் ஈறு வரும்.' நே. 20

'எண்நிறை அளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ணுள்
முதல்ஈர் எண்முதல் நீளும் மூன்றுஆறு
ஏழ்குறு கும்ஆறு ஏழ்அல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்.' நன். 188

'ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ணுள்
முதல்ஈர் எண்முதல் நீளும்மூன்று ஆறுஏழ்
குறுகும் ஆறுஏழ் அல்ல வற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்.' மு வீ. பு. 261
'ஆறும் அவ்வியல்பிற் றாகும்.' 276
'ஆறென் கிளவி முதல்நிலை திரியா.' 289

ஒன்று, இரண்டு - சிறப்புவிதி

107. ஒன்றன் புள்ளி ரகரம் ஆக
இரண்டன் ஒற்றுஉயிர் ஏக உ-வருமே.

இது மேலனவற்றுள் சிலவற்றிற்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுகின்றது.

இ-ள் : எண் முதலிய பெயர் வரும் இடத்து ஒன்று என்னும் எண்இடை நின்ற னகர ஒற்று ரகர ஒற்றாய்த் திரிய, இரண்டு என்னும் எண்இடை நின்ற ணகர ஒற்றும் ரகரம் மிசைநின்ற அகர உயிரும் கெட, அவ்விரண்டு எண்ணின் ரகரத்து மேலும் உகரம் வந்து புணரும், ஏற்கும் இடத்து என்றவாறு.

வரலாறு : ஒருபஃது இருபஃது-கழஞ்சு-கலம்-கல்-என வரும்.

'ஏற்புழி' என்றதனானே, ஓராயிரம் இராயிரம் எனவும் ஓராயிரம் ஈராயிரம் எனவும், ஆயிரம் வந்துழி உகரம் பெறாதும முதல்உயிர் நீடாதும் நீண்டும்.

ஓரொன்று ஈரொன்று - இடை-உழக்கு-இலை- என உயிர்க்கணம் வந்துழி உகரம் பெறாது முதல்உயிர் நீண்டும்.

ஒருயானை இருயானை என முடிதலே அன்றி, ஓர் யானை ஈர்யானை என யகரம் வந்துழி உகரம் பெறாது நீண்டுமுடிதலும் கொள்க.

விளக்கம்

எய்தியது-ஒன்று இரண்டு என்பன ஈற்றுஉயிர்மெய் கெட்டு,முதல் நீடலும் உண்டு என்பது;ஒன .ஒன்-இரண், ஈரண் என வருதல்.

சிறப்புவிதி-ஒன் என்பது ஓர் என்றாகி உகரம் பெற்று ஒரு எனவும், இரண் என்பது இர் என்றாகி உகரம் பெற்று இரு எனவும் ஆதல்.

நிலைமொழிகளான ஒன்று இரண்டு என்பன ஒரு இரு என்று ஆயினமைக்கு எடுத்துக்காட்டுக்கள் தரப் பெற்றுள்ளன. ஆயிரம் வருமொழி ஆயினகாலை ஒன்று இரண்டு என்பன, ஒர் இர் எனவும ஓர் ஈர் எனவும்,

'ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதல்ஈ ரெண்ணின் உகரம் கெடுமே' தொல். 464

'முதல்நிலை நீடினும் மானம் இல்லை' தொல். 465

என்ற விதிப்படி திரியுமாறு கூறப்பட்டுள்ளது. ஒன்று இரண்டு என்பதன்முன் ஒன்று, இடை, உழக்கு முதலிய உயிர்முதல் மொழிகள் வருங்காலத்து,

'முதல்ஈர் எண்ணின்முன் உயிர்வரு காலைத்
தவல்என மொழிப உகரக் கிளவி
முதல்நிலை நீடல் ஆவயி னான' தொல். 455

என்ற விதிப்படி உகரம் கெட்டு முதல்உயிர் நீண்டு ஓரொன்று ஈரொன்று என்றாற்போலத் திரிந்து முடிதல் அடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

'அதன்நிலை உயிர்க்கும் யாவரு காலை
முதல்நிலை ஒகரம் ஓ-ஆ கும்மே
ரகத்து உகரம் துவரக் கெடுமே' தொல். 479

என்ற நூற்பாப்படி,ஒன்று+யானை—ஒருயானை என்று இந்நூற்பாப் பொதுவிதிப்படி ஆதலேயன்றி, ஓர் யானை

என்று ஆதலும் அந்நூற்பாவின் 'துவர' என்ற மிகை யான் இருயானை என்று ஆதலேயன்றி ஈ்யானை என்று ஆதலும் கூறப்பட்டுள்ளன.

ஒத்த நூற்பாக்கள் :

'முதல்ஈர் எண்ணின்ஒற்று ரகரம் ஆகும்
உகரம் வருதல் ஆவயி னான.' தொல். 438

'இடைநிலை ரகரம் இரண்டுஎன் எண்ணிற்கு
நடைமருங்கு இன்றே பொருள்வயி னான.' 439

'முதல்ஈர் எண்ணின்முன் உயிர்வரு காலை
தவல்என மொழிப உகரக்கிளவி
முதல்நிலை நீடல் ஆவயி னான' 455

'ஆயிரக் கிளவி வருஉம் காலை
முதல்ஈர் எண்ணின் உகரம் கெடுமே.' 464

'முதல்நிலை நீடினும் மானம் இல்லை.' 465

'அதன்நிலை உயிர்க்கும் யாவரு காலை
முதல்நிலை ஒகரம் ஓ-ஆ கும்மே
ரகரத்து உகரம் துவரக் கெடுமே.' 479

முழுதும் நன். 189

'ஒன்றும் இரண்டும் உயிர்வரு காலை
உகரம் கெடுதல் ஆவயி னான.' மு. வீ. பு. 276

'உகரம் கெடும்முத லோடும் இரண்டும்
ஆயிரம் முன்வரும் காலை யான.' 285

'மூன்றன் ஒற்றே ரகாரம் ஆகும்
இரண்டன் ஒற்றுஉயிர் ஏக உ-வருமே.' 262

மூன்று—சிறப்புவிதி

104. மூன்றன்உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்.

இதுவும் அது.

இ-ள் : எண் முதலியன வரும் இடத்து, மூன்று என்னும் எண் இடைநின்ற ணகர ஒற்றுக்கெடுதலும் வரும் ஒற்றாய்த் திரிதலும் பொருந்தும்,ஏற்கும் இடத்து என்றவாறு.

வரலாறு : மூவொன்று-எடை-ஆசை- என உயிர்க் கணம் வந்துழி ஈற்றுஉயிர்மெய்யும் மேல்நின்ற ஒற்றும் கெட்டும், முப்பஃது-சுழஞ்சு-கலம்-கல்-நான்கு-மஞ்சாடி-நாழி - நூல் - என வன்கணமும் மென்கணமும் வந்துழி ஈற்று உயிர்மெய் கெட்டு மேல்நின்ற ஒற்று வரும் ஒற்றாயும் முவ்வட்டி மூவட்டி-முவ்வட்டு மூவட்டு என வகரம் வந்துழி ஈற்று உயிர்மெய் கெட்டு மேல்நின்ற ஒற்று வரும்ஒற்றாய்த் திரிந்தும் நெடுமுதல் குறுகியும். ஒற்றும் உயிர்மெய்யும் கெட்டு நெடுமுதல் குறுகாதும். முவ்வாயிரம் மூவாயிரம்முவ்வகல் மூவகல்-முவ்வாழாக்கு மூவாழாக்கு - முவ்வுழக்கு மூவுழக்கு - என ஆயிரம் அகல் ஆழாக்கு உழக்கு வந்துழி ஒற்றும் உயிர்மெய்யும் கெட்டு நெடுமுதல் குறுகியும் குறுகாதும் தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க. முவ்யாழ் முவ்யானை என யகரம் வந்துழி மூன்றன்உறுப்பு வரும்ஒற்று ஆகாது வகரஒற்று ஆதலும், மூழக்கு மூழாக்கு என்னும் மரூஉமுடிபும் புறனடையால் கொள்க. 56

விளக்கம்

சிறப்புவிதி-மூன்று என்பதன் ணகரஒற்றுக் கெடுதலும் வரும்ஒற்றாய்த் திரிதலும் முதலியன.

உயிர்க்கணம் வரும்வழி மூன்று+எடை - மூவெடை எனப் பொதுவிதியால் (106) ஈற்று உயிர்மெய்யும், இவ் விதியால் இடைஒற்றும் கெட்டுப் புணர்ந்தது. பிறவும் அன்ன.

வருமொழியில் வன்கணமும் மென்கணமும் வந்துழிப் பொதுவிதியால் ஈறு கெடுதலொடு மூன்று என்பதன்

னகர ஒற்று வரும்ஒற்றாய்த் திரிந்தமைக்கு முப்பஃது முதலியன எடுத்துக்காட்டுக்களாம். இவ்விரண்டு திரிபு களும் இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ளன. ஏனைய யாவும் முதல் நூலையும் அதன் உரைகளையும் உட்கொண்டு சொற்றவை.

'மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத்து உருவா கும்மே' தொல். 452

என்பதனால் முவ்வட்டி என்பதும், 'தோன்றிய' என்ற மிகையான் மூவட்டி என்பதும் கொள்ளப்பட்டன. பிற வகரமுதல் மொழிகளும் அன்ன.

'ஆயிரக் கிளவி வரூஉம் காலை......
மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும்.' தொல். 466

என்பதனால் முவ்வாயிரமும், மிகையால் மூவாயிரமும் கொள்ளப்படும்.

'—உயிர்வரு காலை
மூன்றும் நான்கும் ஐந்துஎன் கிளவியும்
தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்' தொல். 456

என்பதனால், முவ்வகல் மூவ்வாழாக்கு முவ்வுழக்கு என்பன கொள்ளப்படும்.

'மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்தே

உழக்குஎன் கிளவி வழக்கத் தான.' தொல். 457

என்ற நூற்பாவால் மூவுழக்கும், 'வழக்கத்தான' என்ற மிகையால் மூவகல் மூவாழாக்கு முதலியனவும் கொள்ளப்படும்.

'முதல்ஈர் எண்ணின்முன்' (தொல். 478) என்ற நூற்பாவின் போந்த பொருளால் வழிநிலை எண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் உயிர்க்கணம் நீங்கலான ஏனைய கணங் கணங்கள் வருமொழியாய் வரும்வழி

முதல்நிலை முடிபாகிய **விகாரம்** எய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும் என்பதனால், முவ்யாழ்-முவ்யானை என மூன்றற்கு யகரம் வரும்வழி னகரம் வகரஒற்று ஆதலை நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்; 'மூன்றன் முதல்நிலை' தொல். 457 என்ற நூற்பா உரையில் நச்சினார்க்கினியர், 'மூழக்கு மூழாக்கு என்ற மரூஉ முடிபைக் குற்றிலுகரப் புணரியலின் புறனடையால் முடிக்க' என்றார்.

சுருக்க நூலாகிய இந்நூற்கண் தொல்காப்பியத்தில் காணும் இக்கருத்துக்களை எல்லாம் இவ்வாசிரியர் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள் :

'மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்.' தொல். 440

'மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்.' 441

'மூன்றன் ஒற்றே வந்தது ஒக்கும்.' 447

'மூன்று நமவருங் காலை
வந்தது ஒக்கும் ஒற்றுஇயல் நிலையே.' 451

'மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத்து உருவா கும்மே.' 452

'(உயிர்வரு காலை) மூன்றுஎன் கிளவி
தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்.' 456

'மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்தே
உழக்குஎன் கிளவி வழக்கத் தான.' 457

'மூன்றன் ஒற்றே நகாரம் ஆரும்.' 461

'மூன்றன் மெய்யே வகாரம் ஆகும்.' 466

முழுதும் — நன். 190

'மூன்றன் மெய்யே பகரம் ஆகும்.' மு. வீ. பு. 263

'மூன்றன் புள்ளி வந்ததும் ஆகும்.' 269

'.. மூன்று நமவரு காலை
ஒற்றியல் நிலைகெட வந்ததும் ஆகும்.' 272

'மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத்து உருவா கும்மே.' 272

'...மூன்று தோன்றிய
வகரத்து உருவாய் வழங்கும் என்ப.' 277

'உழக்கு வரின்முதல் நீளும் மூன்று எண்ணே,' 278

'மூன்றன் மெய்யே நகாரம் ஆகும்.. 282

'மூன்றன் மெய்யே வகாரம் ஆகும். 283

நான்கு—சிறப்புவிதி

109. நான்கன் மெய்யே லற-ஆகும்மே.
இதுவும் அது.

இ-ள் ; எண் முதலிய நான்கும் வரும்இடத்து நான்கு என்னும் எண் இடை நின்ற னகரஒற்று லகரமும் றகரமுமாய்த் திரியும், ஏற்கும் இடத்து என்றவாறு.

வரலாறு : நாலொன்று - எடை - உழக்கு - அடி - எனவும், வட்டி-வட்டு-யானை-எனவும் உயிர்க்கணமும இடைக்கணமும் வந்துழி ஈற்று உயிர்மெய்கெட்டு மேல் நின்ற னகரஒற்று லகரஒற்றாய்த் திரிந்தும், நாற்பஃது-கழஞ்சு-கலம்-கல்-என வன்கணம வந்துழி ஈற்றுஉயிர் மெய்கெட்டு மேல்நின்ற னகரஒற்று ரகரஒற்றாய்த் திரிந்தும்,

நானூறு நான்முந்திரிகை நானாழி நான்மண்டை நான் ஞாண் நானூல் நான்மணி-என மென்கணம் வந்துழி ஈற்று உயிர்மெய் கெட்டும் தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க.

விளக்கம்

இதுவும் அது என்றது பொதுவிதியான் (106)எய்திய ஈற்று உயிர்மெய்க் கேட்டுடன் இடை னகரஒற்று வசர

மாகவும் றகரமாகவும் வருமொழிக்கு ஏற்பத் திரியும் தன்மையாகிய எய்தியநன்மேல் சிறப்பு விதி.

னகரம் வகரமாதல் உயிர்க்கணமும் இடைக்கணமும் வரும்வழியே என்பது நாலொன்று நால்வட்டி முதலிய எடுத்துக்காட்டுக்களால் விளக்கப்பட்டுள்ளது.

னகரம் றகரமாதல் வன்கணம் வரும்வழியே என்பது நாற்பஃது முதலிய எடுத்துக்காட்டுக்களால் விளக்கப் பட்டுள்ளது.

இறுதியில், மென்கணம் வந்தவழிப் பொதுவிதியால் ஈற்று உயிர்மெய் கெடுதலொடு, நகரமுதல் மொழி வந்தவிடத்து னகரமும் கெடுதல் நானாழி நானூல் என்ற எடுத்துக்காட்டுக்களால் விளக்கப்பெறுகிறது. 'நான்' என நின்ற னகரஈறாயவழி வருமொழியில் நகரம் வரின், வந்த நகரம் னகரமாக நிலைமொழி ஈற்று னகரம் கெடுதல் 'குறில் அணைவு இல்லா' (120) என்பதனால் கொள்க.

ஒத்த நூற்பாக்கள் :

'நான்கன் ஒற்றே றகார மாகும்.' தொல். 442

'...வகரம் வருவழி
நான்கன் ஒற்றே லகார மாகும்.' 453

'உயிர்வரு காலை நான்கென் கிளவி
தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்.' 456

'நூறு முன்வரின், நான்கு ஒற்றுமெய் திரியாது.' 462

'ஆயிரக் கிளவி வருஉங் காலை
நான்கன் ஒற்றே லகார மாகும்.' 447

முழுதும் நன். 191, மு. வீ. பு. 264

'நான்கன் மெய்யே லகார மாகும்.' 274

'நான்கு முதனிலை திரியாது.' 283

'நான்கன் மெய்யே லகாரம் ஆகும்.' 287

'நான்கு தோன்றிய, வகரத்து உருவாய் வழங்கும் என்ப 277

ஐந்து - சிறப்புவிதி

110. ஐந்தன்ஒற்று அடைவதும் இனமும் கேடும்.

இதுவும் அது.

இ-ள்: எண் முதலிய வரும்இடத்து ஐந்து என்னும் எண்இடை நின்ற நகர ஒற்று வரும்ஒற்றாயும் அதற்கு இனமாயும்கெட்டும் முடியும், எற்கும் இடத்து என்றவாறு.

வரலாறு: ஐம்மூன்று ஐம்மஞ்சாடி ஐம்பன்னை-ஐடிமணி ஐஞ்ஞாண் ஐந்நூறு ஐந்நாழி ஐந்நூல் என மென்கணம் வந்துழி, ஈற்று உயிர்மெய் கெட்டு மேல் நின்ற நகரஒற்று வரும்ஒற்றாய்த் திரிந்தும்,

ஐம்பஃது ஐங்கழஞ்சு ஐங்கலம் ஐங்கல் என வன் கணம் வந்துழி மேலைப் பொதுவிதியான் ஈற்று உயிர் மெய் கெட்டு மேல்நின்ற நகரஒற்று வரும்ஒற்றிற்கு இனமாய்த் திரிந்தும்,

ஐஒன்று-எடை-ஆழாக்கு. அம்பு- என உயிர்க்கணம் வந்துழி, ஒற்றும் உயிர்மெய்யும் கெட்டும்,

ஐவட்டி ஐவ்வட்டி - ஐவண்ணம் - ஐவ்வண்ணம் - ஐயாறு ஐய்யாறு-என இடைக்கணம் வந்துழி ஒற்றும் உயிர்மெய்யும் கெட்டும், உயிர்மெய்கெட்டு ஒற்று வரும் ஒற்றாய்த் திரிந்தும் தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க. 58

விளக்கம்

இதுவும் அது-எய்தியதன்மேல் சிறப்புவிதி.

எய்தியது-106ஆம் நூற்பாவினால் ஈற்று உயிர்மெய் கெடுதல்; சிறப்புவிதி-மென்கணம்வரின் நகரஒற்று வரும்

ஒற்றாய்த் திரிதல், வன்கணம்வரின் நகரஒற்று வருமொழி வல்லெழுத்திற்கு இனமாகிய மெல்லொற்றாகத் திரிதல். உயிர்க்கணம் வரின் நகரம் கெடுதல். இடைக்கணம் வரின் நகரம் கெடுதலும் வருமொழி முதலில் வரும் ஒற்றாய்த் திரிதலும் ஆகியவை.

ஒத்த நூற்பாக்கள் :

'பத்து முன் வரின், ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்'. தொல். 443

'அளவும் நிறையும் வருவழி, ஐந்தன் ஒற்றே
மெல்லெழுத்து ஆகும்.' 448

'ஐந்தும் (மூன்றும்) நமவரு காலை
வந்தது ஒக்கும் ஒற்றுஇயல் நிலையே.' 451

'வகரம் வருவழி, ஐந்தன் ஒற்றே முந்தையது
கெடுமே' 454

'உயிர்வரு காலை ஐந்துஎன் கிளவி
தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்.' 456

'நூறுமுன் வரின்ஐந்து ஒற்றுமெய் திரியாது.' 462

'ஆயிரக் கிளவி வரூஉம் காலை
ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும்.' 468

முழுதும் நன். 192

'ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்.' மு.வீ.பு. 255

'ஐந்தன் ஒற்றே மெல்லெழுத்து ஆகும்.' 270

'வல்லெழுத்து வரூஉம் காலை யான.' 271

'ஐந்து நமவரு காலை
ஒற்றியல் நிலைகெட வந்ததும் ஆகும்.' 272

'ஐந்தன் ஒற்றே அடியொடு கெடுமே.' 275

'ஐந்து தோன்றி, வகரத்து உருவாய் வழங்கும்
என்ப.' 277

'ஐந்து முதல் நிலை திரியாது.' 283

'ஐந்தன் மெய்யே யகரம் ஆகும்.' 288

எட்டு - சிறப்புவிதி

111. எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்: எண் முதலிய வரும்இடத்து எட்டு என்னும் எண் இடைநின்ற டகர ஒற்று ணகர ஒற்றாய்த் திரிந்து முடியும், ஏற்கும் இடத்து என்றவாறு.

வரலாறு: எண்பஃது-கோடி-காணி-கால்-நூறு-

நூறாயிரம்-நான்கு - மூன்று-முந்திரிகை-முக்கால் - ஒன்று-இரண்டு-ஐந்து-ஆறு-எழ்-எட்டு-ஒன்பது-ஆயிரம் எனவும்,

கழஞ்சு-சீரகம்-தொடி-பலம்-மஞ்சாடி-எடை-எனவும்.

கலம்-சாடி - தூதை-பானை-நாழி-மண்டை-வட்டி-அகல்-உழக்கு-ஆழாக்கு-எனவும்,

கல்-சுனை-துடி-பறை - ஞாண் - நூல்-மணி- யாழ்-வட்டு-அகல்-ஆகம்-எனவும் நாற்கணமும் வந்துழி ஈற்று உயிர் மெய்கெட்டு, மேல்நின்ற டகரஒற்று ணகர ஒற்றாய்த் திரிந்து தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க. 59

விளக்கம்

பஃது முதல் ஆயிரம் ஈறாகிய எடுத்துக்காட்டு எண்ணுப்பெயர். கழஞ்சு முதல் எடை ஈறாகிய எடுத்துக் காட்டு நிறைப் பெயர். கலம் முதல் ஆழாக்கு ஈறாகிய எடுத்துக்காட்டு அளவுப் பெயர். கல் முதல் ஆகம் ஈறாகிய எடுத்துக்காட்டுப் பொருட் பெயர்.

இவை வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்ற நான்கு கணத்தன.

'வருமொழி நகரத்திரிபு ணனமுன் டணவும்' (இ வி 70) என்பதனானும், வருமொழி உயிர் வரும்வழி 'ஏண' என்ற விதியீறு இரட்டுதல் 'தனிகுறில்' 'முன் ஒற்று' (66) என்பதனானும் பெற்றாம்.

ஒத்த நூற்பாக்கள் :

'எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்.' தொல். 444

'நமவ என்னும் மூன்றொடு சிவணி
அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே.' 450

'எட்டன் உடம்பு ணவ்வாகும் என்ப.'
நன். 193, மு. வீ. பு. 266

'பத்து முன்வரும் காலை யான.' மு வீ பு. 267

தொண்ணூறு, தொள்ளாயிரம்

112, ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்
ஒன்றிய இரண்டும் ஊறும் ஆயிரமும்
என்று திரிய இறுதிய கெடுவழி
நின்ற னகரம் நிரலே ணளவா
இரட்டல் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்.

இஃது ஒன்பது என்னும் எண்முன்னர்ப் பத்தும் நூறும் வந்து புணர்வுழிப் படும செய்கை கூறுகின்றது.

இ-ள் : ஒன்பது என்னும் எண்முன்னர்ப் பத்தும் நாலும் வந்து புணரின், அப்பத்தம் நூறும் நிரல்நிறை வகையானே ஊறு என்றும் ஆயிரம என்றும திரிய, நிலைமொழியாய் நின்ற ஒன்பதன் இறுதிக்கண்ண வாகிய குற்றுகரமும் அதன்மேல் நின்ற அகரமும் தம்மால் பற்றப்பட்ட மெய்யொடும் கெடும் இடத்து, அவற்றின்மேல் நின்ற னகர ஒற்று முறையே பத்தின்

திரிபாகிய ஊறு வந்து புணரும் இடத்து ணகர ஒற்றாய் இரட்டித்தும் நூறின்திரிபாகிய ஆயிரம் வந்து புணரு மிடத்து ளகர ஒற்றாய் இரட்டித்தும் நிற்ப,நிலைமொழி ஒகர உயிர்மேல் ஒரு தகரம் ஒற்றாய் வந்து நிற்கும் என்றவாறு.

வரலாறு: தொண்ணூறு, தொள்ளாயிரம் எனவரும்.

வருமொழிச் செய்தியை முற்கூறிய அதனானே ஒற்று,இரட்டாது தொளாயிரம் என வருதலும் கொள்க.

இவ்வெழுத்து இவ்வெழுத்தாய்த் திரியும் என்னாது. ஊறு ஆகியும் ஆயிரம் ஆகியும் திரியும் என்றாரேனும்,

'ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பத்தென் கிளவி ஆய்த பகரம்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகரம் ஆகும்.' தொல் 445

எனவும்,

'ஒன்பான் முதல்நிலை முந்துகிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறுஎன் கிளவி நகார மெய்கெட
ஊ-ஆ ஆகும் இயற்கைத்து என்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகரம் ஒற்றும்.' தொல். 463

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாற்றானே அவற்றின் திரிபினை வேறுவேறு பகுத்துக் காண்க.

இவ்வாறே மேலும் விரிவு அஞ்சி, யான் யாம் நீ நீர் என்பன என் எம் நின் நும் ஆமெனக் கூறுப.

'ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்
முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு

தகரம் நிறீஇப்பஃது அகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.' நன். 194

எனச் சூத்திரம் செய்யின். முரணுதலால் உளவாகிய நூறும் ஆயிரமும் வந்து புணர்ந்து தொண்ணூறும் தொள்ளாயிரமும் என்று முடிந்துழி, அவை ஒன்பது பத்து ஒன்பதுநூறு எனப் பொருள் தாராது தொள்ளாயிரம் ஒன்பதினாயிரம் எனப் பொருள்தரும் ஆதலின் வழுவாம் என்க. 60

விளக்கம்

இந்நூற்பா ஒன்பது+பத்து—தொண்ணூறு எனவும், ஒன்பது+நூறு தொள்ளாயிரம் எனவும் ஆயினமைக்கு விதி கூறுகின்றது. இப்புணர்ச்சி கூறுதற்கண், இலக்கண ஆசிரியரிடையே வேறுபாடு மலிவாகஉள்ளன ஏனெனின் அவர்கள் இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பினரேயன்றிச் சொல்லின் தொல்லுருவம் ஆராயப் புகுந்தார் அல்லர். அஃது அவர் கருத்தும் அன்று; கடனும் அன்று.

ஒன்பது + பத்து —ஒன்பது + ஊறு— ஒன்+ஊறு— தொன்+ஊறு — தொண்+ண் + ஊறு— தொண்ணூறு என்றாகும்.

ஒன்பது+நூறு —ஒன்பது+ஆயிரம்—ஒன்+ஆயிரம்— தொன்+ஆயிரம்—தொள்ள் + ஆயிரக்—தொள்ளாயிரம் என்றாகும்.

பத்து— ஊறு எனவும், நூறு —ஆயிரம் எனவும் திரிந்து புணரும் என இவர் குறிப்பிட்டார். தொல்காப்பியனார்,

ஒன்பான்+பஃது—தொன்பான்+பஃது, தொண்ண் பான் + பஃது, தொண்ண்+து, தொண்ண்+ஊ+து, தொண்ண்+ஊ+று—தொண்ணூறு எனவும்,

ஒன்பான் + நூறு — தொன்பான் + நூறு, தொள்ள்பான் + நூறு, தொள்ள் + ஊறு, தொள்ள் + ஆ + று, தொள்ள + ஆயிர + று, தொள்ள் + ஆயிர + ம் — தொள்ளாயிரம் எனவும் புணர்ச்சிவிதி கூறியது அவ்வளவு பொருத்தமாக இன்மையின் இவர் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற முடிபினை எளியதொரு முறையாற் கொண்டார்.

நூறு என்பதனை நெருங்கிய பத்துத் 'தொடுநூறு' ஆகித் தொண்ணூறு ஆயிற்று எனவும், ஆயிரம் என்பதனை நெருங்கிய நூறு 'தொடு ஆயிரம்' ஆகித் தொள்ளாயிரம் ஆயிற்று எனவும் கூறுப. இங்ஙனமே பத்தினை நெருங்கிய எண்ணாகிய ஒன்பானைத் தொடு என்பதன் திரிபு ஆகிய தொண்டு என்ப.

இவ்வாசிரியர் 'யான்யாம் நீநீர் என்எம் நின்நும்' எனத் திரிநதன எனச் சுருக்கமாகக் கூறியதனைத் தொல்காப்பியனார், 'ஆஎ ஆகும் யாம் என் இறுதி. ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்' (188) என யாம் 'எம்' எனத் திரிந்தமைக்கும்.

'நீஎன் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றா கும்மே' தொல். 179

என நீ 'நின்' எனத் திரிந்தமைக்கும் விளக்கம் தருவன போல்வன கொள்க.

நன்னூலார் வருமொழியாகிய பத்து என்பதனை நூறாகவும் நூறு என்பதனை ஆயிரமாகவும் திரிக்க என்றதனால், வருமொழி நூற்றுடன் புணரும் நிலைமொழி ஒன்பது கூடத் தொண்ணூறு என்றாகியவழி, தொள்ளாயிரம் எனப் பொருள்படும்; வருமொழி ஆயிரத்தொடும புணரும் நிலைமொழி ஒன்பது கூடத் தொள்ளாயிரம் என்றாகியவழி, ஒன்பதினாயிரம் எனப் பொருள்படும் என்று கூறி இவ்வாசிரியர் நன்னூலார் கருத்தை மறுத்துள்ளார்.

''ஒன்பது-ஒன்று ஊனமான. பத்து, அஃது அக் காலச் சொல். எட்டாற் பெருக்கின பத்து எண்பதானாற் போல, ஒன்றானப்பத்தால் பெருக்கின பத்தும நூறும், தொண்ணூறும் தொள்ளாயிரமும் ஆம என்க. 'நெறி' என்றதனால், ஒற்று இரட்டாது தொளாயிரம் எனவும் கொள்க'' என்பது மயிலைநாதர் உரை. (நன். 198)

'நிலைமொழி ஆகிய எட்டின் மேல் ஒன்று ஒன்பஃது எனப் பஃது என்னும் இறுதியாய்த் திரிந்து நின்றாற் போல வருமொழி ஆகிய எண்பதின்மேல் பத்தை நூறு எனவும், எண்ணூற்றின்மேல் நூற்றை ஆயிரம் எனவும் திரித்துப் பொருள் கோடலும் ஒன்று. இவற்றை இலக்கண முடிபாகத் தொல்லாசிரியர் முடித்தவாறே முடித்தாம் என்பார் 'நெறியே' என்று கூறினார்'' என்பது நன்னூல் விருத்தியுரை. (194)

ஒத்த நூற்பாக்கள் :

'ஒன்பான் ஒகரமிசை ...... றகரம் ஆகும்.'
தொல். 445

'ஒன்பான் முதனிலை ...... மகரம் ஒற்றும்.'
தொல். 463

'ஒன்பானொடு பத்தும் ...... நெறியே.' நன். 194
மு. வீ. பு. 284

'ஒன்பா னொடுபத்து நூறதனை ஓதுங்கால்
முன்பாந் தகரணை முன்பிரட்டும்—பின்பான
எல்லாம்கெட்டு ஆறிரண் டாவியின்பின் வல்லுகரம்
நல்லா யிரமீறாய் நாட்டு.' நே. 21

'பத்து' எனும் வருமொழியின் முடிபு

113. ஒன்றுமுதல் எட்டீஈற்று எண்முனர்ப் பத்தின்
இடைஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்
எனஇரு விதியும் ஏற்கும் என்ப.

இது வருமொழி ஒன்றின் செய்தி கூறுகின்றது.

இ-ள் : ஒன்று முதலாக எட்டு ஈறாகக் கிடந்த எழு வகை எண்களின் முன்னர் வரும் பத்து என்னும் எண் இடை நின்ற தகர ஒற்று ஒருகால் கெடுதலும் ஒருகால் ஆய்தமாகத் திரிதலும் என்னும் இவ்விரு செய்கையும் பொருந்தும் என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

வரலாறு : ஒருபது ஒருபஃது, இருபது இருபஃது, முப்பது முப்பஃது, நாற்பது நாற்பஃது ஐம்பது ஐம்பஃது, அறுபது அறுபஃது, எண்பது எண்பஃது எனவரும். 61

விளக்கம்

நிலைமொழித்திரிபு 106 முதல் 111 ஈறாகிய நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளது. ஏழ் என்பது ழகர ஈற்று மொழியாதலின், அதுபற்றிய செய்தி மெய்யீற்றுப் புணரியலில் கூறப்பெறும். பத்து என்பதன் தகர ஒற்றுக் கெட்டு ஆய்தம் ஆகும் எனவே, பஃது என்ற வருமொழி நின்றாங்கு நின்றே புணரும் என்பதும் கொள்க.

ஒத்த நூற்பாக்கள் :

'ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத்து என்ப
கூறிய இயற்கை குற்றிய லுகரம்
ஆறன் இறுதி அல்வழி யான.' தொல். 437

'முதல்இரு நான்காம் எண்முனர்ப் பத்தின்
இடைஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்
எனஇரு விதியும் ஏற்கும் என்ப.' நன். 195

'ஒன்று முதல்ஒன் பான்முன் பத்திடை
மெய்கெட ஆய்தம்ஆறு அல்லா வழியே.'
மு. வீ. பு. 260

ஒருபது முதலியவற்றின் புணர்ச்சி

114. ஒருபது ஒருபஃது ஆதிஎன்று ஆதி
ஒன்பதும் அவைஊர் பிறவும் எய்தின்
கெடுதலும் திரிதலும் இல்என மொழிப.

இது மேலனவற்றிற்கு எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

இ-ள். மேற்கூறியவாற்றான் முடிந்து நின்ற ஒருபது ஒருபஃது முதலிய இரு கூற்று எழுதிறத்து எண்ணுப்பெயர்கள், ஒன்று முதல் ஒன்பது எண்ணும் அவை ஊர்ந்த பிறவும் வந்து புணரின், இடைநின்ற தகரஒற்று முன்னர்க் கூறியவாற்றால் கெடுதலும் ஆய்த மாகத் திரிதலும் இன்றி இயல்பாக முடியும் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

வரலாறு ஒருபத்தொன்று, இருபத்தொன்று, ஒருபத்தொருகோடி-கழஞ்சு-தலம்-காதம்-என ஒன்பதின் காறும் ஒட்டுக. பிறவும் அன்ன. இவை நூற்றொருபத் தொன்று, நூறாயிரத்தொருபத்தொன்று என வருமாறும் உணர்க. 62

விளக்கம்

எய்திவது — பத்து என்பதன் இடைஒற்றுக் கெட்டும் ஆய்தமாகத் திரிந்தும் நிலைமொழி புணர்தற்கு அமையும் என்பது.

ஒருமருங்கு மறுத்தல் பத்து என்பதன் இடை யொற்றுத் திரிதலும் கெடுதலும் இல்லை என்பது. எனவே, சென்ற நூற்பாக் கருத்தான் கெடாது நின்ற பஃது என்பதன் ஆய்தம் இந்நூற்பாக் கருத்தான் கெட்டே முடியும் என்பது.

ஒன்று + பத்து + ஒன்று — ஒருபத்தொன்று எனப் பத்தின் தகரம் கெடாது குற்றியலுகரம் வருமொழி உயிர் ஏற இடங்கொடுத்தது.

ஒன்று — பஃது + ஒன்று — ஒருபத்தொன்று என ஆய்தம் கெட நின்ற ஒருபது என்பதன் இறுதிக்குற்றிய லுகரம் உயிர் ஏற இடம் கொடுத்தது; தகரம் இடையே மிக்கது.

ஈண்டும் முகரஈற்று எண்ணுப் பெயராகிய ஏழ் என்பதனை விடுத்து ஏனையவே கொள்ளப்படும்.

ஒத்த நூற்பாக்கள் :

'ஒன்றுமுதல் ஆகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றுஇடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்,' தொல். 475

'ஒருபஃது ஆதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்
எண்ணும் அவைஊர் பிறவும் எய்தின்
ஆய்தம் அழியஆண்டு ஆகும் தவ்வே.' நன். 196

'ஒன்றுமுதல் ஆகிய பத்துஊர் கிளவி
ஒன்று முதல் ஒன்பாற்கு ஒற்று இடைமிகுமே.'
மு. வீ. பு. 295

பத்து, ஒன்பது முன் எண்ணுப் பெயர் முதலியன

115. ஒன்றுமுதல் ஈரைந்து ஆயிரம் கோடி
எண்நிறை அளவும் பிறவரின் பத்தின்
ஈற்றுஉயிர் மெய்கெடுத்து இன்றும் இற்றும்
ஏற்பது ஏற்கும் ஒன்பதும் இனைத்தே.

இது சில எண்ணுப்பெயரொடு சில எண் ஆதி நாற் பெயரும் வந்து புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: ஒன்று முதலிய பத்தும் ஆயிரமும் கோடியுங் ஆகிய எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பொருட்பெயரும் வருமொழியாய் வந்து புணரின், பத்தினது ஈற்று உயிர்மெய்யைக் கெடுத்து இன் ஆதல் இற்று ஆதல் ஆண்டைக்கு ஏற்பது ஒன்று வரும். ஒன்பதன்முன் இவை வந்தாலும் இவை இரண்டனுள் ஒன்று ஆண்டை வரும் என்றவாறு.

'ஒருபுடைச் சேறல்' என்னும் உத்தியான், ஒன்பது ஈறுகெடாது சாரியை பெறுதலே கொள்க.

'இரண்டு முன்வரின்'(116) என மேல் முடித்தலின், ஈண்டு ஏனையவே வருவிக்க.

எண்ணுப்பெயர் வந்துழிப் பதினொன்று - மூன்று - நான்கு-ஐந்து-ஆறு-ஏழ் - எட்டு-கோடி-என ஈறுகெட்டு இன்னும் இற்றும பெற்றும்,

பதினாயிரம் என ஈறுகெட்டு இன் பெற்றும்,

பதிற்றொன்பது பதிற்றுப்பத்து என ஈறுகெட்டு இற்றுப் பெற்றும், நிறைப்பெயர் வந்துழிப் பதின்கழஞ்ச பதிற்றுக் கழஞ்சு-சீரகம்-தொடி-பலம்-மஞ்சாடி-என ஈறு கெட்டு இன்னும் இற்றும் பெற்றும்,

பதிற்றெடை என ஈறுகெட்டு இற்றுப் பெற்றும்,

அளவுப்பெயர் வந்துழிப் பதின்கலம் பதிற்றுக்கலம்- சாடி-தூதை - பானை - நாழி-மண்டை-வட்டி- என ஈறு கெட்டு இன்னும் இற்றும் பெற்றும்,

பதிற்றுக்கலம் - ஆழாக்கு-உழக்கு- என ஈறுகெட்டு இற்றுப் பெற்றும்.

பொருட்பெயர் வந்துழிப் பதின்றிங்கள், பதிற்றுத் திங்கள்-மடங்கு என ஈறுகெட்டு இன்னும் இற்றும் பெற்றும்,

பதிற்றுவேலி-யாண்டு - முழம்-அடுக்கு- இதழ்- என ஈறுகெட்டு இற்றுப் பெற்றும் தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க.

ஒருபதினாயிரம் ஒருபதின்கழுஞ்சு ஒருபதிற்றுக்கலம் ஒருபதிற்றுவேலி என அடை அடுத்து வருமாறும் காண்க.

ஒன்பதின்கோடி ஒன்பதிற்றுக்கோடி-கழுஞ்சு-துலாம் என ஈறுகெடாது இன்னும் இற்றும் பெற்றும்.

ஒன்பதினாயிரம் என இன் பெற்றும்.

ஒன்பதிற்றொன்று-எடை-அகல்-உழக்கு - தடக்கை மவலி-யாண்டு-எழுத்து-என இற்றுப் பெற்றுப் ஒன்பதும் தனக்கு ஏற்ற பெற்றி முடித்தவாறு காண்க

'ஏற்புழி' என்பதனானே, பத்தொன்பது - கழஞ்சு-சாடி-இதழ்- எனச் சாரியை பெறாலு குற்றுகரஈற்றுப் பொதுவிதியானே முடிதலும் கொள்க. பிறவும் அன்ன.

விளக்கம்

சில எண்ணுப்பெயர்-பத்து, ஒன்பது என்பன.

எண் ஆதி நாற்பெயர்-எண் நிறை அளவு பொருள் பற்றியபெயர்.

'ஒரு புடைச் சேறல்'-ஒன்றற்குக் கூறிய விதியின் ஒரு பகுதியே பிறிது ஒன்றற்குப் பொருந்துதல்.

'மெய்ஈறு எல்லாம் புள்ளியொடு நிலையல்'
தொல். 104

'குற்றியல் உகரமும் அற்றுஎன, மொழிப' (தொல். 105) என்ற நூற்பா உரையுள், 'இம் மாட்டேறு ஒரு புடைச்சேறல், புள்ளி பெறாமையின்' என நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க.

இரண்டு பத்து என்பதனோடு புணருங்கால் அத்தொடர் பன்னிரண்டு என முடிதல் 116ஆம் நூற்பா வில் கூறப்படும். எண்ணுப்பெயர் பதினொன்று முதலிய எட்டும் இன்சாரியை பெற்றும் புணர்தல்

'ஒன்று முதலாக எட்டன் இறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றியல் உகரம் மெய்யொடுங் கெடுமே
முற்ற இன் வருஉம் இரண்டலங் கடையே'

தொல். 4ა3

என்ற நூற்பாவானும்,

திபற்றொன்று முதலிய எட்டும் இற்றுங் சாரியை பெற்றுப் புணர்தல்

'நிறையும் அளவும் வருஉம் காலையும்
குறையாது ஆகும் இன்என் சாரியை' தொல்: 436

என்ற நூற்பாவின்'குறையாதாகும்' என்ற மிகையானும்

பதினாயிரப் என ஈறுகெட்டு இன்பெற்று முடிதல்
'ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது' தொல். 436

என்ற நூற்பாவானும்,

பதிற்றொன்பது பதிற்றுப்பத்து என ஈறு கெட்டு இன்பெறுதல் 436ஆம் நூற்பாவின் 'குறையாதாகும்' என்ற மிகையானும், நிறைப்பெயர் பதின்கழஞ்சு என்றாற்போல இன் பெறுதல்

'நிறையும் அளவும்' (தொல். 436)

என்ற நூற்பாவானும்,

பதிற்றுக்கழஞ்சு பதிற்றெடை என்றாற்போல இற்றுப் பெறுதல்

'அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே' தொல். 121
என்ற நூற்பாவின் 'நிலைஇய' என்ற மிகையானும்.

'முற்றஇன் வருஉம் இரண்டலங் கடையே' (433)
என்பதன்கண் உள்ள 'முற்ற' மிகையானும்,

அளவுப் பெயர் பதின்கலம் என்றாற்போலப் புணர்தல்

'நிறையும் அளவும்' (436) என்ற நூற்பாவானும். பதிற்றுக்கலம் என இற்றுப் பெறுதல் அந்நூற்பாவின் 'குறையாதாகும்' என்ற மிகையானும்,

பொருட்பெயரும் பதின்திங்கள் பதிற்றுத் திங்கள் பதிற்றுவேலி முதலியன அக்'குறையாதாகும்' (436) என்ற மிகையானும்,

ஒருபதினாயிரம் என்பது

'ஆயிரம் வரினே இன்என் சாரியை
ஆவயின் ஒற்றுஇடை மிகுதல் இல்லை'
தொல். 476
என்ற நூற்பாவானும்,

ஒருபதின்கழஞ்சு என்பது

'அளவும் நிறையும் ஆயியல் திரியா' தொல். 477
என்ற நூற்பாவானும்.

ஒருபதிற்றுக்கலம் முதலியன அந்நூற்பாவின் 'திரியா' என்ற மிகையானும்,

ஒன்பதின்கோடி முதலியன
'ஒன்பான் இறுதி உருவுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே'
தொல். 459
என்ற நூற்பாவானும்,

ஒன்பதிற்றுக்கோடி முதலியன 'சாரியை மரபே' (470) என்ற மிகையானும்,

ஒன்பதினாயிரம் என்பது

'ஒன்பான் இறுதி' உருவுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மரபே' தொல். 470

என்ற நூற்பாவானும் பெறப்பட்டனவாக நச்சினார்க்கினியர் உரைத்தனவற்றை இவ்வாசிரியர் ஏற்றுபெற்றி எடுத்தாண்டுள்ளார்.

பத்தொன்பது என்பது சாரியை பெறவில்லை.

பத்துக்கழஞ்சு என்புழிக் ககரஒற்று 'இயல்பினும் விதியினும் (82) என்பதனால் இடையே மிகுந்தது; 'வன்றொடர் அல்லன' (100) என்ற குற்றியலுகரப் பொதுநூற்பாவானும் மிக்கது எனலாம்,

பதினொன்று—உம்மைத்தொகை, பதிற்றொன்று-பண்புத்தொகை. பிற எண்ணுப்பெயர்களும் அன்ன.

''பத்துக்கோடி ஒன்பதுகோடி என இந்நிலைமொழிகள் தம் இயல்பில் நிற்றலே அன்றி, வழக்கின் கண்ணும் சான்றோர் செய்யுட்கண்ணும் இவ்வாறு அமைந்து கிடந்தனவும் கொள்க என்பார் 'ஏற்பது ஏற்கும்' எனவும், ஒன்பதன் ஈற்று உயிர்மெய்யைக் கெடாது குற்றுகர ஈற்றுப் பொதுவிதியான் உயிர் ஒன்றுமே கெட இன்னும் இற்றும் ஏற்பது ஏற்று நிற்றலின் 'ஒன்பதும் இற்றே' எனத் தன்மைஅணி ஆக்காது, உவமைஅணி ஆக்கி 'இனைத்தே' என்றும் கூறினார். ஒன்பது என்பதன் இறுதி பத்து என்பது போல முரணி நிற்றலான் அதனொடு இதனை மாட்டெறியப்பட்டது எனினும் அமையும்'' என்பது நன்னூல் விருத்தியுரை. 197

ஒன்பது என்பதனைப் பிரயோகவிவேகம் சந்தி நோக்கிப் பத்துத் திரிந்தமைந்தது என்று கருதும் (பி வி 5 உரை)

ஒத்த நூற்பாக்கள் :

'ஒன்பான் இறுதி உருவுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே.'
தொல். 459

'ஒன்பான் இறுதி உருவுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மரபே.' 470

'ஒன்று முதலாக எட்டன் இறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யொடும் கெடுமே
முற்றஇன் வருஉம் இரண்டலங் கடையே.' 4.3

'அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே.' 121

'நிறையும் அளவும் வருஉங் காலை
குறையாது ஆகும் இன்னென் சாரியை,' 438

'ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.' 435

'ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை.' 476

'அளவும் நிறையும் ஆயியல் திரியா.' 477

முழுதும்
நன். 197

'இரண்டு ஒழித்து ஏனைய இருநான்கு எண்களும்
பத்தின் முன்வருங் காலை யான
குற்றிய லுகரம் முற்றக் கெடுமே
ஒன்பான் ஒழியஇன் னொடுவரும் என்ப'
மு. வீ. பு. 256

'ஆயிரம் வரினும் இன்னொடு நிலையும்.' 258

'நிறையும் அளவும் நேருங் காலைக்
குறையாது ஆகும் இன்னென் சாரியை.' 259

'ஆயிரம் வரினே இன்னே சகரியை
ஆவயின் ஒற்றிடை மிகாதுஇயல்பு ஆகும்.' 296

'அளவும் நிறையும் வரின்இயல்பு ஆகும்.'

'அளவும் நிறையும் ஆபியல் திரியா.' 297

பத்தின்முன் இரண்டு

116. இரண்டு முன்வரின் பத்தின்ஈற்று உயிர்மெய்
கரந்திட ஒற்று ன-ஆகும் என்ப.

இது பத்தின்முன் இரண்டு வந்து புணர்வழிப்படுப் செய்கை கூறுகின்றது.

இ-ள் : இரண்டு என்னும் எண் பத்து என்னும் எண் முன்னர் வந்து புணரின், இதன் ஈற்று உயிர்மெய் கெட, மேல் நின்ற நகரஒற்று னகர ஒற்றாய்த் திரிந்து முடியும் என்றவாறு.

வரலாறு : பன்னிரண்டு என வரும். 64

விளக்கம்

பன்னிரண்டு—பத்தும் இரண்டும் என உம்மைத் தொகை. இப்புணர்ச்சிக்கு இந்நூற்பா விதி வகுக் கிறது-பதிற்றிரண்டு என்பது பண்புத்தொகை. அது பத்தாகிய இரண்டு என விரியும். அதற்கு விதி சென்ற நூற்பா என அறிக.

ஒத்த நூற்பாக்கள் :

'பத்தன் ஒற்றுக்கெட னகரம் இரட்டல்
ஒத்தது என்ப இரண்டு வருகாலை,' தொல். 425

முழுதும் நன. 198. மு வீ. பு. 257

சில எண்ணுப்பெயர் இரட்டல்

117. ஒன்பது ஒழிந்தஎண் ஒன்பதும் இரட்டின்
முன்னதின் முன்அல உயிர்வரின்
வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி

இஃது ஒன்று முதலிய பத்து எண்ணுள் எட்டு எண் இரட்டியவழிப்படும் செய்கை கூறுகின்றது.

இ-ள்: ஒன்பது என்னும் எண் ஒன்றனையும் ஒழித்து, நின்ற ஒன்றுமுதல் பத்து ஈறான எட்டு எண்ணும் தம்முன்னர்த் தாம்வந்து புணரின், நிலைமொழியின் முதலெழுத்து ஒன்று நிற்க அல்லன எல்லாம்கெட, உயிர்முதலான எண் வந்து பிணரின் வகரஒற்றும் மெய்முதலான எண் வந்து புணரின் வந்தமெய்களும் இடையேமிக்கு முடிதல் வரலாற்று முறைமை என்றவாறு.

வரலாறு: ஒவ்வொன்று இவ்விரண்டு முப்மூன்று நந்நான்கு எனவரும். பிறவும் அன்ன.

'நெறி' என்ற மிகையானே, மூன்று நான்கு ஆறு என்பனவற்றிற்குக் குறுக்கமும், பத்துப்பத்து பத்துபத்து என்னும் விகற்பமும், நாஙான்கு நந்நான்கு என்னும் திரிபும், ஐயைந்து ஐவைந்து என்னும் உறழ்ச்சியும், ஒரோவொன்று கழக்கழஞ்சு கலக்கலம் என்றல் தொடக்கத்து முடிவும் கொள்க.

எண் பெயரோடு எண்முதலியன புணருமிடத்து ஈண்டுக் கூறிய சிறப்புவிதியன்றித் தனிக்குறில் முன் ஒற்றுவரின் இரட்டலும் (66) வரும் நகரம் திரிந்தபின் மாய்வும் (139) உடம்படுமெய் பெறுதலும் (68) ஏற்புழிக் கொணர்ந்து முடித்துக் கொள்க.

ஒவ்வொன்று அவ்வாறு என்றால்போல்வனவற்று வகரம் உடம்படுமெய் அன்மை இவ்விரண்டு என்பதனால் அறிக. நூற்றொன்று நூற்றுப்பத்து நூற்றுத்

தொண்ணூறு நூற்றிதழ்த்தாமரை, நூற்றுக்கால் மண்டபம், இருநூற்றொன்று இருநூற்றொருபது, இருநூற்றுக்கலம்—சாடி-தூதைபானை-கழஞ்சு-தொடி- என்றால்—தொடக்கத்தன எல்லாம் குற்றுகர ஈற்றுப் பொது விதியான் (106 – 111) முடித்துக் கொள்க. 65

விளக்கம்

ஒரோஒன்று என்பது உடம்படுமெய்யுடன் ஒரோவொன்று எனப்புணர்ந்தசெய்தி 'தம்மியல் கிளப்பின் தம்முன் தாம் வரும்-எண்ணின் தொகுதி' (தொல் 482) என்புழிக் கூறப்பட்டது.

நூற்றொன்று என்பது

'நூறுஎன் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே' தொல். 472

என்ற நூற்பாவாலும், நூறு என்பதனொடு பிறஎண்ணுப் பெயரும் பிறபொருட்பெயரும் புணர்ந்த நூற்றுப்பத்து-நூற்றுத்தொண்ணூறு - நூற்றிதழ்த்தாமரை - நூற்றுக் கால் மண்டபம்-இருநூற்றொன்று-என்பன அந்நூற்பாவின் 'ஈறுசினை' என்ற மிகையாலும்,

இருநூற்றொருபது என்பது

'அவைஊர் பத்தினும் அத்தொழிற்று ஆகும்'
தொல். 473

என்னும் நூற்பாவின் 'ஆகும்' என்ற மிகையாலும்,

இருநூற்றுக்கலம் என்பது முதலியன

'அளவும் நிறையும் ஆயியல் திரியாது
குற்றியலுகரமும் வல்லெழுத்து இயற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்' தொல். 474

என்ற நூற்பாவின் 'திரியாது' என்ற மிகையாலும் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டன,

இந் நூற்பாவின் கண்ணும் ஏழ் என்ற ழகர ஈற்றுப் பொருள் விலக்கப்பட்டமை அறிக.

ஒவ்வொன்று என்பதன்கண் வந்த நிலைமொழி வகரம் இப்புணர்ச்சி விகாரத்தான் வந்தது. அஃது உடம்படுமெய் அன்று. உடம்படுமெய் ஆயின் இரண்டு +இரண்டு இய்யிரண்டு என்றே யகர உடம்படுமெய் பெற்றுப் புணர்தல் வேண்டும். இகரத்தை அடுத்தும் வகரமே வந்து இவ்விரண்டு என்றே முடிதலின், இவ்வகரம் உடம்படுமெய் அன்று அன்பதே அறிக.

ஒவ்+ஒன்று—ஒவ்வொன்று; தனிக்குறில் முன்ஒற்று உயிர்வர இரட்டியது.

நால் + நான்கு — நானான்கு: குறில் செறியாத லகரம் வரும் ந—திரிந்தபின் மாய்ந்தது. (139)

ஐ+ஐந்து—உடம்படுமெய் ஆகிய யகரம் இடையே பெற்று ஐயைந்து என முடிந்தது.

நூறு+ஒன்று— 'நெடிலோடு உயிர்த்தொடர்' 102 என்ற நூற்பாவின் 'மிகவே' என்ற மிகையான் இவ்வும்மைத் தொகைத்தொடர் நிலைமொழி ஒற்று இரட்டியது 'குற்றியலுகரமும் அற்றென மொழிய' (65) என்பதனால் குற்றியலுகரம் வருமொழி உயிர் ஏறிமுடிய அமைந்தது. இருநூற்றொன்று. இருநூற்றொருபது என்பனவும் அன்ன.

நூற்றுப்பத்து நூற்றுத்தொண்ணூறு நூற்றிதழ்த் தாமரை நூற்றுக்கால்மண்டபம் இருநூற்றுக்கலம்-சாடி முதலியன 'வன்றொடர் அல்லன முன்மிகா அவ்வழி' (100) என்பதனால் இடையே வல்லொற்று மிக்கு முடிந்தன,

இவ்வாசிரியர் நூறு என்பதனை நிலைமொழியாக நிறுத்தித் தனியே நூற்பாக்கள் யாத்திலர். இது சுருக்க

நூல் ஆதலான் என்பது அறிக. இங்ஙனமே, இந்நூற்பாவில் காணப்படும் செய்தி தொல்காப்பியனாரால, அவர் காலத்தில் பெருவழக்கு இன்மையின், இங்ஙனம் விதந்து கூறப்படாமையும் அறிக.

'நெறி' என்றதனால் இவ்வாசிரியர் கொண்ட செய்தி, நன்னூல் 198ஆம் நூற்பாவில் மயிலைநாதர் கொண்டனவே,

'ஒவ்வொன்று என்பது அடுக்கு அன்று. இதுவும் இதுபோல்வனவும் தழாஅத்தொடராகிய அவ்வழியுள் ஒருவகையின.' நன் - விருத்தி 199

ஒத்த நூற்பாக்கள் :

'தம்மியல் குளப்பின தம்முன் தாம்வருஉம்
எண்ணின் தொகுதி' தொல். 481

'நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுகினை ஐழிய இனஒற்று மிகுமே' 479

'அவைஊர் பத்தினும் அத்தொழிற்று ஆகும்.' 473

'அளவும் நிறையும் ஆயியல் திரியாது
குற்றிய லுகரமும் வல்லெவத்து இயற்கையும்
முற்கினந் தன்ன என்மனார் புலவர்.' 474

முழுதும் — நன். 192

'நூறென்கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே' மு.வீ.பு. 292

'அவைஊர் பத்தினும் அத் தொழிற்று ஆகும்.' 293

'அளவோடு நிறைவரின் அவ்வியல் நிலையும்.' 294

சில உருபுகளின் இயல்பு புணர்ச்சி

118. மூன்றன் உருபினும் ஆறன்உருபினும்
வல்லெழுத்து மிகுதல் இல்என மொழிப.

இஃது உருபு உயிர்ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்குகின்றது.

இ-ள்: ஒடு ஓடு என்னும் மூன்றன் உருபொடு தொடர்ந்த சொல்லின் முன்னும், அது ஆது என்னும் ஆறன் உருபொடு தொடர்ந்த சொல்லின் முன்னும் அதிகார வல்லெழுத்துப் பெறாஅ இயல்பாய் முடியும் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

வரலாறு; சாத்தனொடு கொண்டான் சாத்த னோடு கொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான் எனவும், சாத்தனதுகை, சாத்தனாதுகை-செவி-தலை-புறம்-எனவும் வரும். 66

மூன்றாவது உயிரீற்றுப் புணரியல் முற்றிற்று.

விளக்கம்

'இயல்பினும் விதியினும்' (82) என்ற நூற்பா வுரையுள் அவ்விதியை உருபிற்கும் உரியதாகக் கூறினார் ஆதலின் பொதுவிதியான் எய்திய வல்லெழுத்தை மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஒடு ஓடு என்பனவும், ஆறாம் வேற்றுமை ஒருமை உருபுகளாகிய அது ஆது என்பனவும், பன்மை உருபாகிய அ என்பதும் (86) பெறா என்று விலக்கல் வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

ஒத்த நூற்பா:

'மூன்று ஆறு உருபு
ஆகும் உகரம் முன்னர் இயல்பாம்.' நன். 179

மூன்றாவது-உயிர்ஈற்றுப் புணரியல் முற்றிற்று.

நான்காவது-மெய்யீற்றுப் புணரியல்

ணகர னகர ஈற்றின்முன் நாற்கணம்

119. ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.

என்பது சூத்திரம். இவ்வோத்து மெய்யீற்றுப்பதம் நின்று வருமொழி வன்கணத்தொடும் சிறுபான்மை ஏனைக் கணங்களொடும் புணருமாறு ஒருவாற்றான் தொகுத்து உணர்த் தினமையின், மெய்யீற்றுப் புணரியல் என்னும் பெயர்த்து.

மேல் உயிர் ஈற்றுப்பதம் புணருமாறு உணர்த்தி இதனுள் மெய்யீற்றுப்பதம் புணருமாறு உணர்த்தினமையின் **மேல்** ஒத்தினொடு இயைபு உடைத்தாயிற்று. இதனுள் இத்தலைச் சூத்திரம் ணகர னகரஈறு புணருமாறு கூறுகின்றது.

இ-ள்: ணகர னகர ஈறுகள் வல்லெழுத்து வந்தால் முறையே ணகரம் டகரமாகவும் னகரம் றகரமாகவும் திரிந்தும், மென்கணமும் இடைக்கணமும் வந்தால் இயல்பாயும் முடியும், வேற்றுமைப் பொருட்புணர்ச் சிக்கண்; அல்வழிப் புணர்ச்சிக்கண் முக்கணமும் வந்தாலும் இயல்பாய் முடியும் என்றவாறு.

வரலாறு: மட்குடம் - பொற்குடம்-சாடி - தூதை - பானை-எனவும், ஞாற்சி-நீட்சி-மாட்சி-யாப்பு - வலிமை-எனவும், மண்கடிது பொன்கடிது - சிறிது - தீது-பெரிது - ஞான்றது-நீண்டது-மாண்டது-யாது - வலிது - எனவும் முறையே காண்க. 1

விளக்கம்

தொகுத்துக் கூறப்படும் மெய்ஈறுகளை உயிர் ஈற்றுப் புணரியலின் தொடக்கத்தே கூறி, ஈண்டுச் சிறப்பான

ஈறுகளையே கூறுகிறார். ஒப்பின் முடிந்தலான் நெடுங் கணக்குமுறை அன்றி னகர ஈறு உடன் கூறப்பட்டது.

நெடுங்கணக்கினுள் கூறப்பட்ட மெய்யீறுகளுள் ஞகர நகரங்கள் உயிரீற்றுப்புணரியலில் கூறப்பட்ட பொதுப் புணர்ச்சி (09, 81) ஒன்றே பெறுதலின் அவற்றை விடுத்து ஏனைய மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி களைக் கூறத் தொடங்கியுள்ளார்.

இவ்வீறுகள் வேற்றுமைக்கண் வருமொழியில் வன் கணம் வருவழிமாத்திரம் தத்தம் இன வல்லெழுத்தாகத் திரிந்தும், வேற்றுமைக்கண் ஏனைக்கணங்கள் வரினும் அல்வழிக்கண் நாற்கணங்களும் வரினும் திரியாதும் புணரும் என்பது இந்நூற்பாவால் பெற்றாம்.

ஒத்த நூற்பாக்கள் :

'ணகார இறுதி வல்லெழுத்து இயையின்
டகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே.'

தொல். 202

'னகார இறுதி வல்லெழுத்து இயையின்
றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே.' 332

'மொழிமுதல் ஆகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை அல்வழித் திரிபுஇடன் இலவே.' 147

'வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து அல்வழி
மேற்கூறு இயற்கை ஆவயி னான.' 148

முழுதும்

நன். 209

'ணனமுன் தகரம் டறவாம் முறையே
ணன இல்வழிக்கு என்றும் இயல்பாய்
வேற்றுமைப் பொருட்கு அவை வலிவரின்
டறவாம்.' தொ. வி. 24

'ணகரமெய் டகரஒற் றாகத் திரியும்.' மு.வீ பு. 143

'ணகரம்வேற் றுமைக்கண் டகரம் ஆகும்.' 163

'வல்லெழுத்து அல்வழி இயல்பாம் வேற்றுமை' 30

'அல்வழி இவ்விரு மையும்முத லாகுளழுத்து
எல்லாம் முன்வரின் இயல்பா கும்மே.' மு,வீ பு.29

குறில் அணையா ணகர னகரங்கள்

120. குறில் அணைவு இல்லா ணனக்கன் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே.

இஃது அவற்றுள் ஒரு சாரனவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்: குற்றெழுத்தினைச் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகர னகர ஈறுகள் ஒரு மொழி முதற்கண் நின்ற நகரம் திரிந்த இடத்துப் பொருந்தும் கெடுதலை என்றவாறு.

வரலாறு: பாண் பரண் பைம்பூண் மணிப்பூண் பைங்கண் பசுங்கண் நன்று எனவும் நன்மை எனவும்,

வான் வயான் வலியன் அலவன் கலுழன் செம்பொன் பசும்பொான் நன்று எனவும் நன்மை எனவும் வரும்.

தான்நீண்டான் யான்நீண்டனன் என்றால் போல் வன 'பொதுப்பெயர் உயர்திணை' (71) என்னும் சூத்திரத்து முறையல கூற்றானேமுடியும். 2

விளக்கம்

எய்தியது—119ஆம் நூற்பாச் செய்தி

பிறிதுவிதி—டகர றகரங்களாகத் திரிந்துத் திரியா தும் பொதுவிதியால் (119) புணர்ந்த ணகர னகரங்கள் கெடும் என்பது.

ஓருமொழி — ணகரனகரங்களுக்குமுன் ஓரேநெட்டெழுத்தைப்பெற்று மொழியாகும் பாண் போல்வன. தொடர்மொழி — ணகரனகர ஈறுகளோடு இரண்டற்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆகிய பரண் வயான் முதலியன.

பாண் + நன்மை — ணளமுன் டணவும்' (இ வி. 70) என்ற நூற்பாவால் நன்மை ணன்மை என்று ஆகியவழி, இந்நூற்பா விதிப்படி பாண் என்பதன் ணகரம் கெடப் பா + ணன்மை - பாணன்மை என முடிக்க, பிறவும் அன்ன.

இவ்வாறே னகரஈற்றுள் வான் + நன்மை — 'ணளமுன்டணவும் னலமுன் றனவும், (இ. வி. 70) என்ற நூற்பாவால் நன்மை னன்மை என்றாகிய வழி, இந் நூற்பாவால் வான் என்பதன் னகரம் கெட வா + னன்மை — வானன்மை என முடிக்க, பிறவும் அன்ன.

விதிகள்யாவும் அஃறிணைக்கே கூறப்படுவன. உயர் திணையையும் விரவுத் திணையையும் இலக்கண ஆசிரியர்கள் விதந்தே கூறுவர் என்பது உணரத்தக்கது. 'ஆசிரியர் உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் எடுத்து ஓதியே முடிப்பார்' (தொல். 153 நச்-உரை)

ஒத்த நூற்பாக்கள் :

நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதல்
அறியத் தோன்றிய நெறி இயல் என்ப.' தொல். 160

'குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல.' 50

முழுதும் நன் 210

'ணனமுன் குறில்வழி நகரம் ணனவாம்
மற்றது ணனமுன் மாய்ந்துகெடுமே.' தொ. வி. 24

சில ணகர ஈற்றுச் சிறப்புவிதி

121 சாதி குழூஉ பரண் கவண்பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு உணவெண் சாண்பிற
டஆ கலும்ஆம் அல்வழி யும்மே.

இது ணகர ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ-ள்: சாதிபற்றியும் திரள்பற்றியும் வரும் பெயர்களும், பரண், கவண் என்னும் தனிப்பெயர்களும் ஆகிய இவற்றின் இறுதி ணகரம் வன்கணம்வரின் திரியாது வேற்றுமைக்கண்ணும் இயல்பாய் முடியும். வரையறைப் பொருண்மை உணர்த்தாது ஓர் உணவை உணர்த்தி நிற்கும் எண் என்னும் பெயரும் சாண் என்னும் அளவுப் பெயரும் வன்கணம் வரின் இயல்பு ஆகாது டகரமாய்த் திரிந்து முடிதலும் பெறும் அல்வழிக்கண் என்றவாறு.

வரலாறு: பாண்குடி உமண்குடி-சேரி-தோட்டம்-பாடி எனவும்,

அமண்குடி—சேரி—தோட்டம்—பாடி—எனவும்
பரண்கால் கவண்கால் எனவும்
எட்கடிது—சிறிது—தீது—பெரிது—எனவும்

சாட்கோல் எனவும் முறையே காண்க. உம்மையான் எண்கடிது சாண்கோல் என இயல்பு ஆதலே வலியுடைத்து என்க.

'பிற' என்ற மிகையானே, கண்கடுமை, அட்டுண்டுழனி என்றல் தொடக்கத்து இயல்பும்

முரண்கடுமை முரட்கடுமை என்றல் தொடக்கத்து உறழ்வும், மண்ணங்கட்டி எனவும் 'ஆண் மரக்கிளவி' (தொல். 304) ஆணங்கோடு — செதில் — தோல்பூ — இலை எனவும் திரியாது அம்முப் பெறுதலும், 'விண்ணென

வருஉம் காயப்பெயர் (தொல். 305) செய்யுளிடத்துத் தொழிற்சொல் வருங்காலத்து,

‘ விண்வத்துக் கொட்கும் வண்ணத்து அமரர் ’
எனத்திரியாது அத்துப்பெறுதலும்

‘ விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ ’ (நாலடி 226)
எனப்பெறாதும் வருதலும்,

வெண்ணுக்கரை,
‘ கணைகுரல் கடுப்பப் பண்ணுப் பெயர்த்து’
மதுரைக் 560

எண்ணுப்பேறு என உகரம் பெறுதலும், இன்னோரன்ன பிறவும் கொள்க.

ஆண்கை—பெண்கை—செவி— தலை—புறம் எனவும் கடிது—சிறிது—தீது—பெரிது எனவும் இருவழியும் இயல்பு ஆதல் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம்' (இ. வி. 71) என்பதனானும்

மண்கை புண்கை என்றாற் போல்வன இரண்டாம் வேற்றுமைத் திரிபானும் (இ. வி. 75) முடியும்.

விளக்கம்

எய்தியது—119ஆம் நூற்பாச்செய்தி

பிறிது விதி—வேற்றுமைக்கண் டகாரம் ஆகாது. ணகார ஈற்றுச் சாதிப்பெயர்களும் குழூஉப் பெயர்களும்— கவண் பரண் என்ற பெயர்களும் இயல்பாம் என்பதும், அல்வழிக்கண் இயல்பாகாது உணவு எண், சாண் என்பன உறழும் என்பதும்.

சாதி—பாண் முதலியன, குழூஉ—சமயம்பற்றி ஒரே கூட்டமாகிய பல சாதிகளை உட்கொண்ட அமண் முதலியன. வரையறைப் பொருண்மைக்கண் எண்ணிக்கையைக் காட்டும் எண் என்பதனை விடுத்து, எள் என்பதன்

திரிசொல்லாய்ச் செய்யுட்கே வரும் எண் என்பதனை உணவு என்ற அடைமொழி பிறிதின் இயைபு நீக்கிய விசேடணமாய் அடுத்தது.

சாட்கோல்—சாணாகியகோல் என இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள் பெரும்பான்மையும் வேற்றுமை முடிபின ஆதல்,

'வேற்றுமை அல்வழி இ ஐ என்னும்' (இ. வி. 77) என்ற நூற்பா உரை விளக்கத்தானும் அறிக.

'டவ்வாகலும் ஆம்' என்ற எதிர்மறை உம்மையானே, டகரம் ஆகாது எண்கடிது சாண்கோல் என முடிதலே வலியுடைத்து என்றார்.

'பிற' என்ற மிகையால் இவ்வாசிரியர் கொள்வனவற்றுள் கண்கடுமை, அட்டுண்டுழனி என்றல் தொடக்கத்து இயல்பு மயிலைநாதரால் (நன். 210) குறிப்பிடப் பட்டுள்ளன.

'முரண்என் தொழிற்பெயர் முதல்இயல் நிலையும்'
தொல். 309

என்ற நூற்பாவில் மிகையான் முரண்கடுமை முரட்கடுமை என்னும் உறழ்வும்,

'உணரக் கூறிய புணரியல் மருங்கின்
கண்டுசெயற்கு உரியவை கண்ணினர் கொளலே'
தொல். 405

என்ற நூற்பா உரையுள் மண் + கட்டி—மண்ணாங்கட்டி என அம்முப்பெறுதலும்,

'ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே' தொல், 304

என்ற நூற்பாவான் ஆணங்கோடு முதலியவை வன்கணம் வரின் அம்முப்பெறுதலும், அந்நூற்பாவின்கண் 'ஒன்றென

முடித்தலான் ஆண் + இலை — ஆண் + அம் + இலை — ஆண இலை என இயல்பு கணத்தும் அம்முப்பெறுதலும், அம்மின் மகரம் உயிர்க்கணம் வருவழியும் கெடுதல்

'மென்மையும் இடைமையும் வரூஉங் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர்' தொல். 130

என்னும் நூற்பாவில் உரையிற்கோடலாற் பெறுதலும்,

'விண்என வருஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்துஎன் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வருகாலை' தொல் 305

என்ற நூற்பாவான் விண் என்ற குறிப்பினை உணர்த்தாது ஆகாயத்தை உணர்த்தும் விண் என்ற பொருட்பெயர் செய்யுளிடத்துத் தொழிற்சொல்லொடு புணருங்காலத்து இடையே அத்துச் சாரியை பெறுதலும்.

'அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றன் றற்றே' தொல். 133

என்ற நூற்பாவில் வற்றினை முற்கூறாத முறையன்றிக் கூற்றினான் புள்ளியீற்றின் முன்னர் அத்தின்மிசை ஒற்றுக் கெடாது, உடம்படு மெய்வர 'விண்வத்துக் கொட்கும்' எனப் புணர்ச்சி முடிபு பெறுதலும் கொள்க.

'விண்குத்து நீள்வரை வெற்ப களையவோ' (நாலடி 226) என்ற எடுத்துக்காட்டை விண் என்ற ஆகாயப்பெயர் சாரியை இன்றி வருதலைக்காட்ட நச்சினார்க்கினியரும் (305) உரையாசிரியரும் (306) குறிப்பிட்டுள்ளனர்.

வெண்ணுக்கரை, 'கணைக்குரல் கடுப்பப் பண்ணாப் பெயர்த்து' (மதுரைக்காஞ்சி 590) எண்ணாப்பேறு எனத் தொழிற்பெயர் அல்லனவும் உகரமும் வல்லெழுத்தும் பெற்றுப் புணர்தலைத் 'தொழிற் பெயர் எல்லாம்' (தொல். 376) என்னும் நூற்பாவின் 'எல்லாம்' என்ற மிகையால் நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார்.

'ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை' (தொல். 303) என்ற நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் இவை விரவுப்பெயர் என்று குறிப்பிட்டுள்ளார்.

'பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே' (தொல். பொ. 624) என்ற நூற்பா வுரையுள் தனித்துக் கூறப்பெறின் பெண் ஆண் பிள்ளை என்பன உயர்திணையே சுட்டும் என்றார் பேராசிரியர். இவை விரவுப் பெயராயினும் உயர் திணைப் பெயராயினும் 'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள்' (இ வி.71) என்பதனால் புணர்ச்சிவிதி கொள்ளப் படும் என்று இவ்வாசிரியர் ஆண் பெண் என்ற சொற்கள் முன் வலிவரின் இருவழியும் இயல்பாதலைச் சுட்டுகிறார்.

'ணகார இறுதி வல்லெழுத் தியையின்' (தொல். 302) என்ற நூற்பா உரையில், மண்கை புண்கை என்பன இரண் டாம் வேற்றுமைப் பொருளாதலின் பொதுவிதியான் ஈறு திரியாது முடிந்தன என்பதை நச்சினார்க்கினியர் குறிப்பிட் டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள்:

'ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை.' தொல்.303

'ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே.' 304

'விண்என வருஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்துஎன் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை.' 305

'தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல.' 306

'கிளைப்பெயர் எல்லாம் கொளத்திரி பிலவே.' 307

'வேற்றுமை அல்வழி எண்என் உணவுப்பெயர்
வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே.' 308

'முரண்என் தொழிற்பெயர் முதல்இயல் நிலையும்.' 309

ஆணும்பெண்ணும் மிகாது இய்ல்பு ஆகும்.'
மு. வி. பு. 144

'ஆண்மர மாயின் அம்மொடு சிவணும்.' 145

'தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல,' 148

'இயல்பாம் கிளைப்பெயர் எல்லாம் என்ப.' 149

'அல்வழி உணவுஎண் டகாரம் ஆகும்.' 150

'இயல்பா தலும்திரி தலும்முரண் இயல்பே.' 146

னகரஈற்றுச் சிறப்புவிதி—122—128

வேற்றுமையில் னகர ஈற்றுக் கிளைப்பெயர்

122 னஃகான் கிளைப்பெயர் இயல்பும் அஃகான்
அடையவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே.

இது னகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ-ள்: னகர ஈற்றுச் சாதிப்பெயர் திரியாது இயல்பு ஆதலும் அகரம் பெறுதலும் ஆகிய இரு திறனும் பொருந்தும், வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் என்றவாறு.

வரலாறு: எயின்குடி-சேரி-தோட்டம்-பாடி எனவும். எயினக்கன்னி – சிறுவன்-தலைவன் - பிள்ளை-ஞாற்சி-நீட்சி-யாப்பு-வலிமை-ஆட்சி எனவும் முறையே காண்க.

சாதிப்பெயரும் குழிஉப் பெயரும் உயர்திணைப்பெயர் ஆகாது அஃறிணைப் பெயராய் நிற்றலின் ஈண்டு முடித்தார்.4

விளக்கம்

எய்தியது விலக்கல்—119ஆம் நூற்பாவினால் எய்திய நிலைமொழி ஈற்றுத்திரிபினை விலக்குதல்,

எய்தாதது எய்துவித்தல்—அகரச்சாரியை பெறும் என்பது.

'குடிமை ஆண்மை இளமை மூப்பு என்பன பேதலஎயின் முதலிய சொற்கள் 'உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்' அஃறிணை முடிபே கொள்ளும் என்றார்.

'எயினக்கன்னி எயினப்பிள்ளை எயினமன்னன் என அல்வழிக்கண் அகரச்சாரியை பெறுதலும் கொள்க' என்பது நன்னூல் விருத்தியுரை. நன். 212.

எயினக்கன்னி முதலியவற்றை நச்சினார்க்கினியர் 'கிளைப்பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல (தொல். 338) என்ற நூற்பாவின் எல்லாம்' என்ற மிகையாற் கொண்டார்; எயின் வந்தது என அச்சொல் அஃறிணைக் கண்ணும் வரும் என்பதனையும் குறித்துள்ளார்.

'கிளை என்னும் பலபொருள் ஒருசொல் ஈண்டுச் சாதி மேல் நின்றது.'
நன். 212-விருத்தி

ஒத்த நூற்பாக்கள்:

'கிளைப்பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல.'
தொல். 338

நன். 212

முழுதும்:—

'கிளைப்பெயர் எல்லாம் மிகாதுஇயல்பு ஆகும்'
மு. வீ. பு. 169

வேற்றுமையில் 'மீன்' புணர்ச்சி

123 மீன்றவ் வொடு பொரூஉம் வேற்றுமை வழியே.

இது னகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்: மீன் என்னும் சொல் இறுதி னகரம் றகர ஒற்றொடு உறழ்ந்து முடியும், வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின் என்றவாறு.

எ-டு: *மீன்கண் மீற்கண்-செவி-தலை-புறம்-எனவரும்.* **5**

விளக்கம்

எய்தியது—ன்கரம் வேற்றுமைக்கண் றகரம் ஆதல்.

பிறிதுவிதி—இயல்பும் வல்லெழுத்தாதலும் ஆகிய உறழ்ச்சி.

"றகரமாதல் இக்காலத்துப் பயின்று வாராதேனும், தொன்னெறி ஆதலின் ஆணைவழி நிற்க என்பார் 'வழியே' என்றார்." (நன். 213 விருத்தி)

ஒத்த நூற்பாக்கள்:

'மீன் என்கிளவி வல்லெழுத்து உறழ்வே.' தொல். *339*

முழுதும் **நன்.** *213*

'மீன்வல் லெழுத்துறழ் வும்பெறும் என்ப.'

மு. வீ. பு. *170*

'தேன்' முன் நாற்கணம்

124 தேன்என் கிளவி வல்லெழுத்து இயைபின்
மேல்நிலை ஒத்தலும் ஈறுபோய் வலிமெலி
மிகுதலும் மெலிவரின் இறுதியொடு உறழ்தலும்
இடைவரின் இயல்பும் ஆம்பிற உயிர்வரின்
ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே.

இது ணகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும் எய்தியது இகந்துபடாமை காத்தலும் நுதலிற்று.

இ-ள்; தேன் என்னும் சொல் வல்லெழுத்து முதல் மொழி வருமொழியாய்வரின் மீன் என்பதற்கு மேற்கூறிய திரிபுஉறழ்ச்சிநிலை ஒத்து முடிதலும், ஈற்று எழுத்துக்கெட்டு

வல்லெழுத்து மிக்கு முடிதலும், மெல்லெழுத்து மிக்குமுடித லும், மெல்லெழுத்து முதல்மொழிவரின் நிலைமொழி இறுதி னகர ஒற்றோடு கெடுதலும் கெடாமையும் ஆகி உறழ்ந்து முடிதலும், இடையெழுத்து முதல்மொழி வரின் இயல்பு ஆதலும் பொருந்தும்; உயிர்முதல்மொழி வரின் பிறிதும் ஒரு தகரஒற்று உடன் மிகுந்த தகரத்தொடு நின்று முடிதலும் உரித்து, உம்மையான் பிற சாரியைபெற்று முடிதலும் இயல் பாய் முடிதலும் உரித்து என்றவாறு.

எ-டு: தேன்குடம் தேற்குடம்—சாடி-தூதை-பானை—எனவும்,

தேக்குடம் தேங்குடம்-சாடி-தூதை-பானை எனவும்,

தேன்ஞெரி தேஞெரி-நுனி-முரி எனவும்,

தேன் யாப்பு-வலிமை எனவும்,

தேத்திறால் தேனிறால்-அடை-ஈ-எனவும் முறையே காண்க.

'பிற' என்றதனானே ஒற்றுமிகு தகரமொடு நிற்புழி ஈறு கெடுதலும்.

தேஞெரி தேஞ்ஞெரி-நுனி-முரி என னகரம் கெட்டுத் தத்தம் மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் உறழ்தலும்,

அலவன கலுழன் வலியன் கண்-செவி-தலை-புறம் என வும் கான்கோழி வான்கரை எனவும் திரியாமையும்.

வரிற்கொள்ளும்-செல்லும்-தரும்-போம் என வினையெச் சத்து இறுதி திரிதலும்,

'அதுமற் கொண்கன் றேரே'

'காப்பும் பூண்டிசிற் கடையும் போகல்' (அகநா. 7—5) என மன் சின் என்னும் அசைநிலை இடைச்சொற்கள் இறுதி திரிதலும்,

எகினங்கோடு—செதிள்—பூ என எகின மரப்பெயர் அம்முப்பெறுதலும், இன்னோரன்ன பிறவும் கொள்க.

வெள்ளாளன் என நின்றதனை அன்கெடுத்துப் பிரித்து ளகரஒற்றினை ணகரஒற்றாருக்கி வெள்ளாண்குமரி-பிள்ளை-மாந்தர்—வாழ்க்கை—ஒழுக்கம் என முடிப்பதும், இன்னோரன்ன பிறவும், சில விகாரமாம் உயர்திணை (71) என்பதனான் முடியும்.

தேக்கடிது தேங்கடிது என அல்வழிக்கண்ணும் இம்முடிபு எய்தும் என்பாரும் உளர். 'ணஃகான் கிளைப்பெயர்' (122) எனவும். 'மீன்றால் வொடுபொருஉம்' (123) எனவும் மேல்நின்ற அதிகாரத்தான் இம்முடிபுகள் வேற்றுமைக் கண்ண என்றே கோடும். 6

விளக்கம்

எய்தியது—வேற்றுமைக்கண் வல்லெழுத்து இயையின் னகரம் றகரம் ஆகும் என்பது. 119

விலக்குதல்—உறழ்ச்சியும், ஈறுபோய் வலிமெலி மிகுலும் என்பன.

எய்தியது இகந்து படாமை காத்தல் — மென்கணமும் இடைக்கணமும் வரின் 'எண்மு எழுத்து ஈற்று' (69) என்பதனால் எய்திய இயல்பு முடிபு.

மேல்நிலை ஒத்தல்—தேன்குடம், தேற்குடம் என்ற முடிபு. ஈறுபோய் வலிமெலி மிகுதல்—தேக்குடம் தேங்குடம் முதலியன.

மெலிவரின் உறழ்தல்—தேன்நெரி முதலியன. இடைவரின் இயல்பு—தேன்யாப்பு தேன்வலிமை முதலியன.

தேன் + இறால்—தேனின் இறால் இ. வி. 149

தேன் + இறால்—தேனிறால் இ. வி. 64

தேன் + இறால் — தே + த் + த் + இறால் — தேத்திறால் என முடியும் வழி இடையே நிலைமொழி ஈற்று னகரம்

கெட்டதனை இவ்வாசிரியர் 'பிற' என்ற மிகையாற் கொண்டார். தொல்காப்பியனார் 'வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை' (340) என்பதனால் குறிப்பிட்டுள்ளார். அந்நூற்பாவில் 'ஆமுறை' என்ற மிகையைக் கொண்டு நச்சினார்க்கினியர் தேன் என்ற சொல்லின் இறுதி னகரம் கெட்டு வருமொழி மென்கணத்தோடு உறழ்ந்து தேநெரி முதலாக முடிவனவற்றை.

'மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும்' தொல். 342 என்ற நூற்பாவில் கட்டியுள்ளார்.

கான்கோழி வான்கரை முதலியன திரியாமல் இயல்பு ஆதலை நச்சினார்க்கினியர் 'குயின் என் கிளவி இயற்கை ஆகும்' (தொல். 335) என்ற நூற்பாவின் மிகையால் கொண்டார்.

அலவன் கலுழன் முதலியன வன்கணம் வரின் இயல்பாகப் புணர்தலையும் வினையெச்சம் திரிதலையும் ' தன் என் ' (நன். 217) என்பதன்கண் ' உறவே ' என்ற மிகையால் கொண்டார் மயிலைநாதர்.

வினையெச்சங்கள் இடைச்சொற்கள் — ஆகிய னகர ஈற்றுச்சொற்கள் ஈறு திரிந்து புணரும் என்பதனைத் தொல்காப்பியனார்.

'மன்னும் சின்னும் ஆனும் ஈனும்
பின்னும் முன்னும் வினைஎஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.' —தொல். 333

என்ற நூற்பாவால் குறிப்பிட்டுள்ளார்.

எகினங்கோடு முதலியன.

'எகின்மரம் ஆயின் ஆண்மர இயற்றே' (தொல். 336)

என்ற நூற்பாவால் கொள்ளப்படும்.

வெள்ளாண்குமரி முதலிய முடிபுகளை நச்சினார்க்கினியர் 'கிளைப்பெயர் எல்லாம் கிளைபெயர் இயல' (தொல்.338) என்னும் நூற்பாவின் "எல்லாம்" என்ற மிகையால் கொள்கிறார்.

முன்னிரண்டு நூற்பாக்களும் வேற்றுமை முடியின ஆதலின் 'தேன்' என்ற நிலைமொழி பற்றிய இந்நூற்பாவும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கே என்பது இவ்வாசிரியர் கருத்து.

நன்னூலார் இம்முடிபுகளை இருவழிக்கண்ணும் கொண்டு நூற்பா யாத்துள்ளார். அஃது இவ்வாசிரியருக்கு உடன்பாடு அன்று. தொல்காப்பியத்துள் தேன் என்ற நிலைமொழி பற்றிய நூற்பாக்களில் (340-344) நச்சினார்க்கினியரும் உரையாசிரியரும் வேற்றுமை முடிபேகொண்டு விளக்குவதும் உளங்கொள்ளத்தக்கது.

எகின் என்பது மரத்தையும் ஒரு பறவையையும் குறிக்கும் சொல்லாம். பறவை பற்றிய சொற்குத் தனியே விதி (125) கூறுதலின், எகின் மரப்பெயர்ப்புணர்ச்சியை இந்நூற்பாவில் மிகையால் கொண்டார்.

ஒத்த நூற்பாக்கள்:

'தேன்என் கிளவி வல்லெழுத்து இயையின்
மேல்நிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை.' தொல். 340

'மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை.' ,, 341

'மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும்.'
தொல். 342

'இறாஅல் தோற்றம் இயற்கை ஆகும்.' 343

'ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே.' 344

'மன்னும் சின்னும் ஆனும் ஈனும்
பின்னும் முன்னும் வினைஎஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.' 333

'எகின்மரம் ஆயின் ஆண்மர இயற்றே.' 336

'தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி அழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலும்ஆம் இருவழி.' நன். 214

'தேன்எனும் மொழிமெய் சேர்இரு வழியும்
தன்இயல் பாம்மெலி வரின்தன் ஈற்று அழிவும்
வலிவரின் ஈறுபோய் வலிமெலி மிகலும் ஆம்.'
தொ. வி. 25

'தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி அழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலும்ஆம் இருவழி.'
மு. வீ. பு. 171

'இறால்வரின் இயல்பா தலும்இன் அடைதலும்
ஈறழிந்து இரண்டு தகரமெய் ஒற்றலும்
மற்றதன் இயற்கையாம் வழூத்துங் காலே.' 172

'மன்னும் சின்னும் ஆனும் ஈனும்
அன்ன இயல்பின ஆம்என மொழிப.' 164

'எகின்மரம் ஆயின் அம்மொடு சிவணும்.' 166

மரம்அல் 'எகின்' முன் வன்கணம்

125 மரம்அல் எகின்மொழி இயல்பும் அகரம்
மருவ வலிமெலி மிகலும் ஆகும்.

இது னகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

(இ-ள்.) மரம் அல்லாத அன்னத்தை உணர்த்திநின்ற எகின் என்னும் சொல் வல்லெழுத்துவரின் வேற்றுமைக்கண் இயல்பு ஆதலும். அகரம்பெற்று இருவழியும் வல்லெழுத்து மிக்கு முடிதலும், மெல்லெழுத்து மிக்குமுடிதலும் பொருந்தும் என்றவாறு.

(எ-டு.) எகின்கால்—சிறகு—தலை—புறம் எனவும்
எகின்சேவல்—எகின்பெடை எனவும்,

எகினக்கால் எகினங்கால்—சிறகு — தலை—புறம் — சேவல்—பெடை எனவும்,

எகினக்கடிது எகினங்கடிது—சிறிது—தீது—பெரிது—சேவல்—பெடை எனவும் முறையே காண்க.

எகின்சேவல் எகின்பெடை என்பன ஆறாம் வேற்றுமைத் தொகையும் இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகையும் ஆம் என்று உணர்க.

வருமொழி வரையாமையின், எகினஞாற்சி—மாட்சி—யாப்பு—வலிமை—அடைவு எனவும்

ஞான்றது—நீண்டது — மாண்டது —யாது—வலிது—அடைந்தது எனவும் இயல்புகணத்திற்கும் அகரப்பேறு கொள்க. 7

விளக்கம்

எகின் என்ற மரப்பெயர்ப்புணர்ச்சி சென்ற நூற்பாவின் மிகையால் கொள்ளப்பட்டது.

எய்தியது விலக்கல் — னகரஈறு வேற்றுமைக்கண் றகரம் ஆதலை விலக்கல்.

எய்தாதது எய்துவித்தல்—இருவழியும் அகரப்பேறும் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் பெற்றுப் புணர்தல்.

எகின்கால்—வேற்றுமைக்கண் இயல்பு.

எகினக்கால் எகினங்கால்---வேற்றுமைக்கண் அகரம் பெற்று வலியெலி உறழ்ச்சி.

இருபெயர்ஒட்டுப் பண்புத்தொகை எல்லாம் வேற்றுமை முடிபு ஏற்கும் என்பது பொதுவாக உணரப்படுதலின் எகின் சேவல் என்பதனை எகினமாகிய சேவல் எனவிரித்து இரு பெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கோடலையும் இவ் வாசிரியர் நேர்ந்தார் என்க.

வருமொழி வரையாமையின், இம்முடிபை நாற்கணத் தும் கோடல் மயிலைநாதர் நன்னூல் விருத்தியுரைகாரர் இருவருக்கும் உடன்பாடாம், எகின்மரப் பெயருக்குத்தனி நூற்பாவும், எகின் என்ற பறவைப் பெயர்க்குத் தனிநூற்பா வும் வகுத்த இலேசானே, இம்முடிவை இயல்புகணத்தும் கொண்டனர் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும். தொல். 337. எகின் சேவல் என்பது எகினினது சேவல் என ஆறன் தொகையாயின் அந்நூற்பாவிலும் (337) எகின் ஆகிய சேவல் என இருபெயரொட்டுப் பண்புத்தொகையா யின் 'உணரக்கூறிய' தொல். 405 என்ற ஓத்தின் புறநடை நூற்பாவாலும் கொள்ளப்படும் என்றார் நச்சினார்க்கினியர். நன்னூல் விருத்தியுரைகாரர் அல்வழிட்புணர்ச்சிக்கு எகினப் புள் முதலிய இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகைகளையே எடுத்துக்காட்டுக்களாகத்தரவும், மயிலைநாதரும் இவ்வாசிரி யரும் எழுவாய்த் தொடரையும் எடுத்துக்காட்டாகத் தந்துள் ளனர்.

ஒத்த நூற்பாக்கள்:

'ஏணை எகினே அகரம் வருமே
வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும்.'

தொல். 337

நன். 215

முழுதும்

'எகின்மரம் அல்லதே இருவழி இயல்பும்
அவ்வுறின் வலிவரின் வலிமெலி மிகலும் ஆம்'

தொ. வி. 25

'மரம்அல் எகின்மொழி வலிமெலி மிகுதலும்
அகரச் சாரியை அடையவும் பெறுமே.'

மு. வீ. பு. 168

'குயின்' முன் வன்கணம்

126 குயின்என் கிளவி இயற்கை ஆகும்

இது னகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்குகின்றது.

(இ-ள்.) குயின் என்னும் சொல் வேற்றுமைக்கண் பொதுவிதியான் எய்திய திரிபு எய்தாது இயல்பாய் முடியும் என்றவாறு.

வரலாறு: குயின்குழாம் — தோற்றம் — செலவு — பறைவு எனவரும்.

குயின்மேகம் வினையுமாம். ஊண் — கடுமை — சிறுமை—தீமை—பெருமை என வேற்றுமைக்கண் திரியாது இயல்பு ஆதல். ஊ என்பது னகரச் சாரியை பெற்று ஊன் என நின்றது ஆதலின், அஃது 'இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்' (147) என்பதனான் முடியும். 8

விளக்கம்

தொல்காப்பியனார் காலத்துச் சொல் ஊ என்பதே. அஃது ஆ என்பது போல னகரச் சாரியை பெற்றபின்பே ஊன் என விதி னகர ஈறாய் நிற்கும். ஊ என்பதும் ஊன் என்பதும் இறைச்சியைக் குறிக்கும் சொல், இந்நூல் தொல்காப்பியத்தோடு நன்னூல் முரணாத வழியே நன்னூலைக்கொள்வது ஆதலின்,

'ஊ என் ஒருபெயர் ஆவொடு சிவணும்' தொல். 269
என்ற தொல்காப்பியனார் கருத்தை உட்கொண்டு, நன்னூல்

'குயின் ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே'
நன். 216

என்றதை விடுத்துக் 'குயின் என்கிளவி இயற்கையாகும்'
தொல். 335

என்ற தொல்காப்பிய நூற்பாவையே கொண்டுள்ளமை அறிக.

எய்தியது—னகரம் றகரமாதல் (119) னகர ஈற்றுப் பொதுவிதி.

இது விலக்குதல்—இயல்பு புணர்ச்சியே கொள்ளும் என்பது.

ஊ என்பது னகரச்சாரியை பெற்று ஊன் என்று ஆகிப் பின் வருமொழியொடு ஊன் + அ + குறை—ஊனக்குறை என்றாற் போலப் புணர்வதைப் புணரியல் புறனடையால் (147) இவ்வாசிரியர் கொள்கிறார்.

'ஊ என்பது தசையை உணர்த்தி நின்ற, ஆசிரியர் நூல்செய்த காலத்து வழக்கு; அன்றித்தேய வழக்கேனும் உணர்க. தொல். 269 நச்.

ஒத்த நூற்பாக்கள்:

'குயின்என் கிளவி இயற்கை ஆகும்.' தொல். 335

'ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும்.' 269

'குயின்ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே.'
நன். 216

'ஊன்குயின் இயல்பாம் உற்றவேற் றுமைக்கும்.'
தொ. வி. 25

'இருவழி யினுங்குயின் இயல்பா கும்மே.'
மு. வீ. பு. 167

மின்முதலியவற்றின் நாற்கணம்

127 மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய
வேற்றுமை ஆயின் கன்அ—ஏற்று
வல்லெழுத்துப் பெறுதல் வரைநிலை இன்றே
பொருளொடு புணரும் காலை யான.

இது னகரஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுக்கின்றது.

(இ-ள்.) மின்னும் பின்னும் பன்னும் கன்னும் ஆகிய இந்நான்கு சொல்லும் இருவழியும் னகரஈற்றுத் தொழிற் பெயர்போல உகரம்பெற்று முடியும், வேற்றுமைப்பொருள் புணர்ச்சியாயின் அவற்றுள் கன்என்னும் சொல் அகரம் பெற்று வல்லெழுத்து மிக்கு முடிதலை நீக்கும் நிலை இன்று, பொருட்பெயரொடு புணருங்காலத்து என்றவாறு.

வரலாறு: மின்னுக்கடிது பின்னுக்கடிது பன்னுக்கடிது கன்னுக்கடிது — சிறிது—தீது—பெரிது—ஞான்றது —நீண்டது - மாண்டது—வலிது எனவும்

கடுமை—சிறுமை—தீமை— பெருமை—ஞாற்சி —நீட்சி மாட்சி—வலிமை எனவும்,

கன்னக்குடம்—சாடி—தூதை—பானை எனவும் வரும்.

'இயல்பினும் விதியினும்' (82) என்பதனான் வல்லெழுத்துப் பெறுமேனும்,

'வல்லெழுத்துப் பெறுதல் வரைநிலை இன்று'
என வேண்டா கூறிய அதனால் குணத்தொடு புணரும் காலத்தும் சிறுபான்மை கன்னக்கடுமை என அகரமும் வல்லெழுத்தும் பெற்றுமுடிதலும், கன்னங்கடுமை என அகரமும் மெல்லெழுத்தும் பெற்று முடிதலும்,

அல்வழிக்கண்ணும் கன்னங்கடிது என அகரமும் மெல் லெழுத்தும் பெற்று முடிதலும்

கன்னஞாற்சி—நீட்சி—மாட்சி—வலிமை எனவும்

ஞான்றது—நீண்டது—மாண்டது—வலிது எனவும்

இருவழியும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வந்துழியும் அகரம் பெற்று முடிதலும் கொள்க.

'பொருளொடு புணருங்காலை' அகரம் பெற்றுமுடியும் எனவே, வேற்றுமைக்கண் கன் உகரம்பெற்று முடிதல் குணத்தொடு புணருங்காலை என்பதூஉம் பெற்றாம்.

தொழில்நிலைக்கண் அன்றி வேறுபொருள் உணர நின்ற வழியும் இம்முடிபு எய்தும் என்பார் 'தொழிற்பெயர் அணைய' என்றார்.

மின் மின்னுதல் தொழிலும், 'மின்னு நிமிர்ந்தன்ன' (புறநா. 57-8) என்புழி ஒருபொருளும் உணர்த்தும். பிற வும் அன்ன.

'பொன்னகர் வரைப்பின் கன்னந்தூக்கி' (ஐங். 247) என்பது மகர ஈற்றுப் பொருட்பெயர்.

விளக்கம்

எய்தியது விலக்குதல்—பொதுவிதியான் (119) னகரம் றகரமாதலை விலக்குதல்.

பிறிதுவிதி—தொழிற்பெயர் போல யகரம் அல்லாத மெய் வருமொழி முதலில் வரின் உகரம் பெறுதலும், வன் கணமாயின் உகரத்தோடு வல்லெழுத்துப் பெறுதலும் வேற்றுமைக்கண் அகரச்சாரியையோடு வருமொழி வல்லெ ழுத்தோ இனமெல்லெழுத்தோ பெறுதலும் பிறவுமாம்.

இயல்பினும் விதியினும் (82) என்ற பொதுவிதியால் வல்லெழுத்துப் பெறுதல் தெளிவாகவும், அதனை ஈண்டு மீண்டும் கூறுதல் மிகை. அம்மிகையான் கன்னக்கடுமை கன்னங்கடுமை என்ற பண்புப்பெயர் வருமொழியாக வருங்கால் நிகழும் புணர்ச்சி வேறுபாடும், அல்வழிக்கண் கன்னங் கடிது என அகரமும் மெல்லெழுத்தும் பெறும் புணர்ச்சி வேறுபாடும், இருவழியும் கன்னஞான்றது கன்னஞாற்சி என அகரம் பெற்றுவரும் இயல்புகணப் புணர்ச்சி வேறு' பாடும் கொள்ளப்பட்டன.

பொருட்பெயரொடு புணரும்வழி வேற்றுமைக்கண் கன் என்பது அகரம் பெறும் எனவே, தொழிற்பெயரொடு புணரும் வழி உகரம் பெறும் என்பது தொடர் ஆற்றலால் பெறப் பட்டது.

இவை தொழிற்பெயரை ஒப்பன எனவே இவை தொழிற்பெயராகவே இருத்தல் வேண்டும் என்ற வரையறை இன்மைபோதருவதால், இவை தொழிலையும் உணர்த்த லாம், பொருளையும் உணர்த்தலாம் என்பது பெறப்படும்.

'புணர்ச்சியான் வரும் கன்னம் என்பது வேறு, இயல் பாகவரும் கன்னம் என்ற மகர ஈற்றுப்பொருட்பெயர் வேறு, என்றார்.

புணர்ச்சியான்வரும் கன்னம் என்பதன் பொருள் சிறு தராசுத்தட்டு என்பது. மகர ஈற்றுக் கன்னம் என்பதன் பொருள் நோய் தணித்தற்கு வேலன் எடுக்கும் படிவம் என்பது.

இவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ள இப்புணர்ச்சி பற்றிய செய்திகள் யாவும் தொல்காப்பியம் 345, 345ஆம் நூற் பாக்களில் ஓதிய செய்திகளே.

நன்னூல் விருத்தியுரையுள் (217) கன்னத்தட்டு கன்னந்தட்டு என்பன அல்வழிப் புணர்ச்சிக்கும் கன்னத்

தூக்கு கன்னந்தூக்கு என்பன வேற்றுமைப் புணர்ச்சிக்கும் எடுத்துக்காட்டுக்களாகத் தரப்பட்டுள்ளன. எனவே கன்னத்தட்டு கன்னந்தட்டு என்பன இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகையாகவும், கன்னத்தூக்கு கன்னந்தூக்கு என்பன ஆறாம் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாகவும் கொள்ளத்தக்கன. 'முன்னென்ற சொல்லை முன்னம் என்றாற்போல, கன்னென்ற சொல்லைக் கன்னம் என்றும் கூறுப' என்பது நன்னூல் விருத்தியுரை

ஒத்த நூற்பாக்கள்:

'மின்னும் பின்னும் பன்னும் கன்னும்
அந்நாற் சொல்லும் வேற்றுமை இயல.' தொல். 346

'வேற்றுமை ஆயின் ஏனை எகினொடு
தோற்றம் வேண்டும் கன் என்கிளவி.' தொல். 346

'மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய
கன் அ-ஏற்று மென்மையோடு உறழும்.'
நன். 217, மு. வீ. பு. 173

'மின்பின் உவ்வுறில் வன்மை மிகுமே.' தொ. வி. 25

வேற்றுமையில் 'அழன்' முன் வன்கணம்

128 அழன்என் இறுதி கெடும்வேற் றுமைக்கே.

இது னகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

(இ-ள்.) அழன் என்சொல் ஈற்று னகரம் கெட்டு முடியு வேற்றுமைக்கண் என்றவாறு.

வரலாறு: அழக்குடம்—சாடி — தூதை — பானை — எனவரும்.

அழக்குடம்—பிணக்குடம்.

தன் என் என்பவற்று இறுதினகரம் தன்பகை தற்பகை என்பகை எற்பகை என உறழ்தலும்,

நீ என்னும் ஈகார ஈற்றுப்பெயர் நின் என நின்றவழி நின்பகை என இயல்பு ஆதலும், 'பொதுப்பெயர் உயர் திணைப் பெயர்கள் ஈற்றுமெய்' (71) என்னும் சூத்திரத் தான் முடியும்.

விளக்கம்

எய்தியது—னகரம் றகரமாகத் திரிதல் (119)
பிறிதுவிதி—னகரங்கெட வன்கணம் மிகுதல்
'தன் என் என்பவற்று ஈற்றுன வன்மைபோடு
உறழும் நின்ஈறு இயல்பாம் உறவே.' நன். 218

என்ற நூற்பாச் செய்தியை இவ்வாசிரியர் 'பொதுப்பெயர்' என்ற நூற்பாவில் அடக்கியுள்ளார்.

தன்என் நின் என்பன இயல்பான சொற்கள் அல்ல; தான் யான் நீ என்பனவற்றின் திரிபு ஆதலின் இவை தனியே கூறப்பட்டன என்பது நன்னூல் விருத்தியுரை யாசிரியர் கருத்து (218)

அழக்குடம் என்பதன் பொருள் நச்சினார்க்கினியர் உரைத்தது. அவர் தற்புகழ், தற்பாடி, எற்புகழ், எற்பாடி என்ற திரிபுகளைத் 'தோற்றம்' என்ற மிகையால் கொண் டார் (353)

ஒத்த நூற்பாக்கள்:

'அழன்என் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே'
தொல். 354

'தான்யான் எனும்பெயர் உருபியல் நிலையும்.' 352

'வேற்றுமை அல்வழிக் குறுகலும் திரிதலும்
தோற்றம் இல்லை என்மனார் புலவர்.' 353

'நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்
ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்' 253

'என தன் வலிவரின் இயல்பும் திரிபுமாம்
நின் என்றும் இயல்பாய் நிற்கும் என்ப.'
தொ. வி 25

'அழன்ஈறு கெடவலி ஆயிடை மிகுமே.' மு வீ. பு. 177

'தான்முதல் குறுகலும் யான்என் ஆகலும்
ஆகும் அல்வழி அல்லாக்காலை.' 179

'குறுகலும் திரிதலும் அல்வழிக்கு இலவே.' 180

'நீஎன் ஒருபெயர் நின்எனத் திரியும்.' 53

மகரஈற்றுச் சிறப்புவிதி 129—132
மகரஈற்றின் முன் நாற்கணம்

129 மவ்வீறு ஒற்றழிந்து உயிர்ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆம்பிற.

இது முறையானே மகரஈறு நாற்கணத்தோடும் இரு வழியும் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்.) மகர ஈற்றுமொழிகள் நாற்கணமும்வர இரு வழியும் இறுதிமகர ஒற்றுக்கெட்டு உயிர்ஈறுபோல் வல் லெழுத்து வரின் அவை மிக்கும், ஏனை இரண்டு இனமும் வர அவை இயல்பாயும், உயிர்வரின் உடம்படு மெய்பெற் றும் முடிவனவும், வல்லெழுத்துவரின் ஈறுகெடாது அவற் றிற்கு இனமான மெல்லெழுத்துக்களாய்த் திரிந்து முடிவன வும் உளவாம் இருவழியும் என்றவாறு.

வருமொழி வரையாமையின், நாற்கணமும் வரக்கேடு பெற்றாம்.

எ-டு. மரக்கோடு — செதிள் — தோல்—பூ—ஞாண்—நூல்—மணி—யாழ்—வட்டு—அடை—ஆட்டம் எனவும்.

வட்டக்கல்—சுனை—தாழி—பாறை—ஞான்றது—நீண்டது—மாண்டது—வலை—அடி—ஆடி எனவும்,

இருவழியும் நாற்கணமும் வர ஈறுகெட்டு உயிர்ஈறு போல முடிந்தன,

முண்டக்கோதை எனவும்,

கலக்கொள்—கக்கு—தோரை—பயறு—எனவும்,

வேழக்கரும்பு — நீலக்கண் — வட்டத்தடுக்கு — சதுரத்தண்டு—ஆய்தப்புள்ளி—மரஞான்றது—மரநீண்டது — நிலநீர்—அகரமுதல—பவளவாய்ஆய்தவுலக்கை எனவும் வருவனவும் அன்ன.

இலவங்கோடு—செதிள்—தோல்—பூ எனவும்.

மரங்குறிது—சிறிது—தீது—பெரிது எனவும் இருவழியும் வல்லெழுத்துவரத் திரிந்து முடிந்தன.

'பிற' என்ற மிகையானே, இல்வம்பூ

'புலம்புக்கனனே புல்அணற் காளை' (புறநா. 258-6)

'கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ' (மலைபடு. 50) எனவும்,

மரம் பெரிது,

'இலம்படு புலவர் ஏற்றகைந் நிறைய' (மலைபடு. 576)

'இலம்பாடு நாணுத் தரும்' (சிலப். 9—73)

எனவும் இருவழியும் பகரம் வந்துழிக்கேடும் திரிபும் இன்றி இயல்பு ஆதலும் கொள்க.

விளக்கம்

மரக்கோடு, பூ—வேற்றுமைக்கண் ஈறுகெட்டு வலி மிக்கன.

மரஞாண்-வட்டு—வேற்றுமைக்கண் ஈறுகெட்டு முடிந்தன.

மரவடை மரவாட்டம்—வேற்றுமைக்கண் ஈறுகெட்டு உடம்படுமெய் பெற்றன.

வட்டக்கல்-பாறை—அல்வழிக்கண் இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்கு முடிந்தன.

வட்டஞான்றது-நீண்டது—மாண்டது—அல்வழிக்கண் எழுவாய்த் தொடர் ஈறுகெட்டு இயல்பாயின.

வட்டவலை—இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈறு கெட்டு இயல்பாயிற்று.

வட்டவடி, வட்டவாடி—இருபெயரொட்டுப் பண்புத் தொகை ஈறுகெட்டு உடம்படு மெய் பெற்றுப் புணர்ந்தன.

முண்டகக்கோதை—முண்டகத்தினது கோதை; ஆறாம் வேற்றுமைப் பொருண்மைக்கண் பொருட்பெயர் ஈறுகெட்டு வலிமிக்கது.

கலக்கொள் ... ... பயறு—இருபெயரொட்டு ஈறுகெட்டு வலிமிக்கன.

வேழக்கரும்பு, நீலக்கண், வட்டத்தடுக்கு, சதுரத்தண்டு, ஆய்தப்புள்ளி, ஆய்தவுலக்கை—இருபெயரொட்டுப் பண்புத் தொகை வலிவரின் ஈறுகெட்டு மிக்கும், உயர்வரின் ஈறு கெட்டு உடம்படு மெய்பெற்றும் புணர்ந்தன,

நீலக்கண் உவமைத்தொகையும் ஆம். பவளவாய் என்பதும் அது. நிலநீர் — உம்மைத்தொகை, அகர முதல— அன்மொழித்தொகை. மரநீண்டது, மரயாண்டது— எழுவாய்த் தொடர்.

இலவங்கோடு..........பூ ஈற்றுமகரம் வருமொழி வல்லெழுத்திற்கு ஏற்ற இன மெல்லெழுத்தாகத் திரிந்தது.

'கசதப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத்து இயற்கை சொல்லிய முறையான்
ஙஞநம என்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான. தொல். 143

இலவம் பூ, புலம்புக்கனன், இலம்படுபுலவர், இலம்பாடு

மரம்பெரிது— நிலைமொழி ஈறுதிரியாது இயல்பாகப் புணர்ந்தது.

எடுத்துக்காட்டுக்களுள்.

மகர இறுதி வேற்றுமை ஆயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே' தொல். 310

என்ற நூற்பா உரையில் மரக்கோடு—செதிள்—தோல்—பூ முண்டகக்கோதை மரஞாண், மரநூல் மரமணி—யாழ்—வட்டு—அடை, முண்டகக்கோதை என்பனவற்றையும், 'அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும்' (தொல் 314) என்ற நூற்பா உரையில் கலக்கொள்—சுக்கு—தோரை—பயறு. வட்டத்தடுக்கு ஆய்தப்புள்ளி, நீலக்கண், வேழக் கரும்பு, ஆய்தவுலக்கை, அகரமுதல, மரங்குறிது சிறிது—தீது—பெரிது ஞான்றது—நீண்டது—மாண்டது, பவளவாய், நிலநீர், என்பனவற்றையும் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டுகளாகத் தந்து 'மரஞாண் மரநூல் என்பனவற்றிற்கு நான்கன் உருபு விரிக்க' எனவும், 'பவளவாய் என உவமத்தும் நிலநீர் என எண்ணிடத்தும் கேடு கொள்க' எனவும் குறிப்பிட்டன யாவும் இவ்வாசிரியரால் கொள்ளப்பட்டுள்ளன.

வட்டக்கல்—சுனை—தாழி—பாறை — வட்டஞான்றது —நீண்டது—மாண்டது—மரவாட்டம், இலவம்பூ எனப் பகரம் வருவழித் திரியாததற்கு எடுத்துக்காட்டு ஆகியவை நன்னூல் 218 ஆம் நூற்பாவில் மயிலைநாதர் காட்டியனவே.

'புலம் புக்கனனே' என ஏழாம் வேற்றுமைப் பொருண்மைக்கண் இயல்பாதலை 'மெல்லெழுத்து மிகுவழி (தொல். 157) என்ற இரண்டாம் வேற்றுமைப் புறனடை நூற்பா உரையிலும் 'புலம்புக்கனனே' 'கலம்பெறு கண்ணுளர்' என்பன இயல்பாய்ப்புணர்தலை மெல்லெழுத்து உறழும் (தொல். 312) என்னும் நூற்பா உரையிலும், இலம்படுபுலவர், இலம் பாடு என அல்வழிப் பொருள்படும் உரிச்சொல் தொடர்கள் இயல்பாதலை 'இலம்என் கிளவிக்கு' (தொல். 316) என்ற நூற்பா உரையிலும் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

'கலம்பெறு கண்ணுளர்' என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலின் பொதுவிதி ஏலாது இயல்பாயிற்று.

புலம்புக்கனன், கலம்பெறுகண்ணுளர் — வேற்றுமை முடிபு.

மரம்பெரிது இலம்படுபுலவர் இலம்பாடு அல்வழி முடிபு.

மரம்பெரிது என்புழித் திரிபு இன்று என்பது ஆணை கூறல் என்னும் உத்தி என்பார் நச்சினார்க்கினியர்.

(தொல். 314)

ஒத்த நூற்பாக்கள்:

'மகர இறுதி வேற்றுமை ஆயின்
துவரக்கெட்டு வல்லெழுத்து மிகுமே'. தொல் 310

'அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும்'. 314

'இலம்என் கிளவிக்குப் படுவரு காலை
நிலையிலும் உரித்தே செய்யுள் ஆன.' 316

'வன்மை வந்தால்பின் பத்தாம் உயிர்வன்மைவருக்கத்
தன்மைஒற் றாகும் ஞநமக்கள் பின்வரின் சாற்று மப்போம்.'
வி. 19

'மகரந்தான் வன்மைவரின் வர்க்கத்து ஒற்றாகும்
புகரிலா மென்மைவரின் பொன்றும்.' நே, 18

முழுதும் நன். 219

'வலிவரின் மஃகான் வருக்கம் ஆகும்
நவ்வரின் தனிக்குறில் மவ்வும் நவ்வாம்
அல்வழி அன்றி மகரம் கெடுமே.' தொ. வி. 23

'மகர இறுபெயர் மிகலும் ஈறு அழிதலும்
ஆகும் வேற்றுமைக் கண்என மொழிப.'
மு. வீ. பு. 151

'வேற்றுமை அலவழி மெல்லெழுத்து ஆகும்.' 155

'இலம்முன் படுவரின் இயல்பா கும்மே.' 157

சில மகரஈற்று முடிபு

130 வேற்றுமை ம-போய் வலிமெலி உறழ்வும்
அல்வழி உயிர்இடை வரின்இயல் பும்உள.

இது வேற்றுமைக்கண் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும் அல்வழிக்கண் எய்தியது விலக்கலும் நுதலிற்று.

(இ-ள்.) வேற்றுமைக்கண் வலலெழுத்துவரின் ஈறு கெட்டு வல்லெழுத்துமிக்கும் மெல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும், அல்வழிக்கண் உயிர்க்கணமும் இடைக்கணமும் வரின் ஈறுகெடாது இயல்பாயும் முடியும் மகரஈற்று மொழிகளும் சில உளவாம் என்றவாறு.

வரலாறு: குளக்கரை குளங்கரை என வேற்றுமைக் கண் ஈறுகெட்டு உறழ்ந்தது. இதுபோல ஒத்த உறழ்ச்சியது அன்றிக் குளச்சேறு குளஞ்சேறு—தாது எனவரும் உறழ்ச்சியும், சண்பகக்கோடு சண்பகங்கோடு எனச் செய்யுட்கண் வரும் உறழ்ச்சியும் கொள்க.

மரமடைந்தது—ஆடிற்று—யாது—வலிது-என இஃது உயிர்க்கணமும் இடைக்கணமும்வர அல்வழிக்கண் ஈறு கெடாது இயல்பாக முடிந்தது.

விளக்கம்

எய்தியது விலக்கல்—ஈறுகெட்டு வன்கணம்வரின் மிக்கும், ஏனைக்கணம்வரின் இயல்பாகவும் 129 ஆம் நூற்பாப்படிப் புணரும் என்பதனை நீக்கியது.

பிறிதுவிதி—ஈறுகெட்டு வலிமெலி உறழ்தல்.

அல்வழிக்கண் எய்தியது—ஈறுகெட்டு வன்கணம்வரின் மிக்கும், ஏனைக்கணம்வரின் இயல்பாகவும் புணரும் என்பது; அதனை விலக்கியது—இயல்பாகப் புணரும் என்பது.

குளக்கரை குளங்கரை—வழக்கில் மிகுதியும் பயில்வது.

குளச்சேறு குளஞ்சேறு-வழக்கில் மிகுதியும் பயிலாதது.

சண்பகக்கோடு சண்பகங்கோடு—செய்யுட்கண் மாத்திரம் வருவது.

மரமடைந்தது—வலிது—இயல்புப் புணர்ச்சி.

'மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உளவே
செல்வழி அறிதல் வழக்கத் தான. தொல். 312

என்ற நூற்பா உரையில் 'குளங்கரை குளக்கரை—சேறு—தாது—பூழி—எனவரும். இவற்றுள் குளங்கரை குளக்கரை போல அல்லன ஒத்த உறழ்ச்சியாய் வழங்கா என்பதற்குச் 'செல்வழி அறிதல்' என்றார். சண்பகங்கோடு என்பது 'வழக்கிடத்துச் செல்லாது' என்றும் 'அல்வழி எல்லாம் மெல்லெழுத்தாகும்' (தொல் 314) என்னும் நூற்பாவில் 'எல்லாம்' என்ற மிகையால், இயல்புகணத்துக்கண் மகரம் கெடாமையும் கொள்க. மரம்யாது—வலிது—அடைந்தது-எனவரும் என்றும் நச்சினார்க்கினியர் கூறியவற்றை இவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள்:

'மெல்லெழுத்து உறழும் மொழியுமாருளவே
செல்வழி அறிதல் வழக்கத் தான. தொல். 312

'அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும்.' தொல். 314
முழுதும் நன். 220

'மெல்லினம் உறழ்சில மொழிகளும் உளவே,
மு. வீ. பு. 153

'அகம்' முன்செவி, கை

131 அகம்முனர்ச் செவிகை—வரின் இடை யனகெடும்

இஃது எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்.) அகம் என்னும் சொல் முன்னர்ச் செவி கை என்னும் சொற்கள் வரின், நிலைமொழி இடைநின்ற உயிரும் மெய்யும் கெட்டு முன்போல வன்மைக்கு இனமாய்த் திரிந்து முடியும் என்றவாறு.

வரலாறு:

'அஞ்செவி நிறைய மந்திரம் ஓதி' எனவும்,

'அங்கையுள் நெல்லி அதன்பயம்' (பு. வெ. மா. 34)
எனவும் வரும்.

'செவிகை' என்ற முற்ற அஃறுற்றானே, அகஞ்செவி அகங்கை எனக் கேடாமையும் கொள்க. இவை பண்புத் தொகை. 13

விளக்கம்

எய்தியது—ஈறு வன்மைக்கு இனமாத்திரிதல் (129)
சிறப்பு விதி—இடை நின்ற உயிரும் மெய்யும் கெடுதல்
நெடுங்கணக்கு முறைப்படி ககர வருக்கமாகிப்

கையினை முற்கூறுதல்வேண்டும்; பின்னரே செவி என்பதனைக் கூறுதல் வேண்டும். அங்ஙனம் கூறாததனால் பொது விதிப்படி (129) அகங்கை அகஞ்செவி என வருதலும் கொள்ளப்படும். அஞ்செவி அகமாகிய செவி; அங்கை—அகமாகிய கை எனப் பண்புத் தொகையாயின. அங்கை என்பதனைப் பண்புத்தொகை என்றும், 'அதிகாரத்தானும் பொருள் நோக்கத்தானும் வேற்றுமைத்தொகை—அன்மை உணர்க' என்றும் நச்சினார்க்கினியர் (தொல். 315) குறிப்பிட்டுள்ளார்.

'செவி எனச் சகரத்தை முற்கூறினார். 'அஞ்சிறைத் தும்பி' (குறுந். 2) என வருதலின் என்க. இடையன கெட்டே வரும் என நியதி கூறாமையின், அகஞ்செவி அகங்கை, அகஞ்சிறை என வருதல் விலக்கப்பட்டன அல்ல என்க. நகர்ப்புறம் என்பதனைப் புறநகர் என்றாற்போலச் செவியகம், கையகம் என்னும் இடஉறுப்புத் தற்கிழமைப் பெயரோடு முடிந்த ஆறாம் வேற்றுமைத்தொகைச் சொல்லை முன்பின்னாக வழங்கலின், இவ்விரண்டும் இலக்கணப்போலியாய்த் தழாஅத்தொடராய் அல்வழியுள் ஒன்றாம் என்க. 'அகஞ்சிறை என்பது ஏனையவற்றின் சிறைபோலப் புறத்தின் கண்ண அன்றி அகத்தின்கண்ண ஆகலின் ஏழாம் வேற்றுமைத்தொகை' என்பது நன்னூல் விருத்தியுரை. (நன். 222)

ஒத்த நூற்பாக்கள்:

'அகம்என் கிளவிக்குக் கைமுன் வரினே
முதல்நிலை ஒழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை இன்றே ஆசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான.' தொல். 315

முழுதும் நன். 222 மு. வீ. பு. 156

'அகம் என்புழிச் சார்ந்த......இடைப்
போவதுஉயிர் மெய்என்றே யோர்ந்து.' நே. 23

ஈம் முதலியவற்றின் முடிபு

132 ஈமும், கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே.

இது மகரவீற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

(இ-ள்.) ஈமும் கம்மும் உருமும் ஆகிய மூன்று பொருட்பெயரும் முற்கூறிய தொழிற்பெயர்போல உகரம் பெற்று வன்மை மிக்கும், மென்மையும் வகரமும் வர இயல்பாயும் இரு வழியும் முடியும். அவற்றுள் ஈமும் கம்மும் வேற்றுமைக்கண் உகரம் பெறுதலே அன்றி அகரமும் பெற்று அவ்வாறு முடியும் என்றவாறு.

வரலாறு: ஈமுக்கடிது கம்முக்கடிது உருமுக்கடிது— சிறிது— தீது —பெரிது—ஞான்றது—நீண்டது — மாண்டது வலிது எனவும்.

ஈமுக்கடுமை—சிறுமை— தீமை—பெருமை— ஞாற்சி— நீட்சி—மாட்சி—வலிமை எனவும்,

ஈமக்குடம் கம்மக்குடம்—சாடி— தூதை — பானை — ஞாற்சி—நெருப்பு—மாட்சி— விறகு எனவும் முறையே காண்க.

பெரும்பாலும் உகரப்பேறு குணவேற்றுமைக் கண்ணும் அகரப்பேறு பொருட் புணர்ச்சிக்கண்ணும் கொள்க.

ஈம்—சுடுகாடு; கம்—தொழில்; உரும்—இடி.

அம்மு தம்மு நும்மு எனச்சாரியை இடைச்சொல் உகரம் பெற்று முடிதலும்.

மரவடி குளவாம்பல் என முடிவன வருமொழி முதற்கண் நின்ற அகரமும் ஆகாரமும் நிலைமொழி ஈற்றுமகரமும்

கெட்டு, ரகர ளகரங்களின்மேல் நின்ற அகரம் ஆகாரமாய் மராடி குளாம்பல் என முடிதலும்.

ககர வகரங்கள் வந்துழியும் ஈறுகெட்டு ஈற்றுமிசை அகரம் நீண்டு கோணாகோணம் கோணாவட்டம் என முடிதலும், வருமொழி வலலெழுத்து மிகாமையும் மேலைச் சூத்திரத்துப் 'பிற' என்ற மிகையானே முடித்துக்கொள்க.

இவற்றிற்கு உள் என்னும் பொருள்பட வந்த கண் என்னும் உருபு விரிக்க.

நுஞ்ஞாண் தஞ்ஞாண் எஞ்ஞாண் நஞ்ஞாண் — நூல் என நும் தம் நம் என்பனவற்று இறுதி வருமொழி ஞநக் களாகத்திரிதலைப் 'பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய்' (71) என்னும் சூத்திரத்து முறைஅல கூற்றானே முடித்துக்கொள்க. 14

விளக்கம்

எய்தியது—மவ்வீறு ஒற்றழிந்து உயிர் ஈறு ஒத்தலும் வன்மைக்கு இனமாகத்திரிதலும் 129

பிறிதுவிதி— தொழிற்பெயர் போல உகரமும், வன் கணம் வரின் வல்லெழுத்தும் பெறுதலும், ஈமும்கம்மும் வேற்றுமைக்கண் உகரமேயன்றி அகரமும் பெறுதலும் என்பன.

ஈமுக்கடிது—அல்வழிக்கண் உகரமும் வல்லெழுத்தும் பெற்றது.

ஈமுக்கடுமை— குணவேற்றுமைக்கண் உகரமும் வல்லெழுத்தும் பெற்றது.

ஈமக்குடம்—பொருள் வேற்றுமைக்கண் அகரமும் வல்லெழுத்தும் பெற்றது.

அம், தம், நும் என்ற சாரியைய இடைச்சொற்கள் வேறு. அழகை உணர்த்தும் அம் என்பதும், தாம் நீயிர் என்பன வற்றின் திரிபாகிய தம் நும் என்பனவும் வேறு என்பது உணர்க.

அம் தம் நும் என்ற சாரியை அம்மு தம்மு நும்மு என உகரச் சாரியை பெறுதலை 'படர்க்கைப்பெயரும் முன்னிலைப் பெயரும்' தொல் 320 என்ற நூற்பா உரையில் உடம்பொடு புணர்த்தும்,

'அகர ஆகாரம் வருஉங் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே' தொல். 311

என்ற நூற்பாவில் மராஅடி குளாஅம்பல் என்பனவற்றை எடுத்துக்காட்டியும், அந்நூற்பாவில் வருமொழி முற்கூறிய அதனால் கோணாகோணம் கோணாவட்டம் என்பனவற்றை முடித்தும், 'அவற்றிற்கு உள் என்னும் உருபுவிரிக்க' என்று கூறியும், கோணா கோணத்திற்கு வருமொழி வல்லெழுத்துக் கேடு 'செல்வழி' தொல். 312 என்ற மிகையாற்கொண்டும், 'நும் என் ஒரு பெயர் மெல்லெழுத்து மிகுமே' தொல். 325 என்ற நூற்பா உரையுள் நுஞ்ஞாண் நுந்நூல் என்பன வற்றை எடுத்துக்காட்டியும், தொடக்கங்குறுகும் தாம்யாம், நாம் என்பனவற்றிற்குப் 'படர்க்கைப்பெயரும்' தொல், 320 என்பதனால் மெல்லெழுத்து மிகுத்தும் தஞ்ஞாண் தந்நூல் எஞ்ஞாண் எந்நூல், நஞ்ஞாண் நந்நூல் என முடித்தும் நச்சினார்க்கினியர் உரைத்தன யாவும் இவ்வாசிரியர் கொண்டுள்ளார். வழக்குப்போலப் பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் பற்றியவனவற்றை 71ஆம் நூற்பாவால் முடித்துள்ளார். தொல்காப்பியனாருக்கு நும் என்பதே இயற்பெயர், நீயிர் என்பது அதன் திரிபு என்பது கருத்து. தொல், 326.

நச்சினார்க்கினியர் 'கோணாகோணம் கோணாவட்டம் என்பனவற்றிற்கு உள் என்னும் உருபு விரிக்க' என்றார். இவர் 'உள் என்று பொருள்படும் கண் என்உருபு விரிக்க' என்றார். இவருக்குக் 'கண் கால் புறம் அகம்' இ. வி. 204

என்பன ஏழன் உருபின் பொருள்பட வரும் சொற்கள்' என்ற சேனாவரையர் கருத்தே உடன்பாடாதல் இதனால் பெறப் படும். இதன் விளக்கத்தைச் சொற்படலத்தில் உணர்க.

ஒத்த நூற்பாக்கள் :

'ஈரும் கம்மும் உரும்என் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன தொல். 328

'வேற்றுமை ஆயின் ஏனை இரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கு என்சாரியை' 329

'அகர ஆகாரம் வருஉங் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே' 311

'தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவி...
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான' 320

'நும்என் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே' 325

'ஈமும், கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே' நன், 223

'நும்தம், எம்நம் ஈறாம்ம-வரும் ஞநவே.' 221

'ஈம்கம் உரும்உக ரத்தொடு நிலையும்,' மு.வீ.பு. 160

'ஈம்கம் அக்கையும் ஏற்கும் என்ப.' 161

'அஆ வரின்ஈற் றயல்நீ டலுமாம்.' 152

யகர ரகர ழகர ஈற்றின்முன் வன்கணம்

133 யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் இனத்தொடு உறழ்தலும் விதிமேல்.

இது யகர ரகர ழகர ஈறுகள் வன்கணத்தொடு புணரு மாறு கூறுகின்றது.

இ-ள்: யகர ரகர ழகர ஈற்றுச் சொற்களின் முன்வரு தமொழி முதற்கண் நின்ற கசதபக்கள் அல்வழிக்கண் இயல் பாயும் மிக்கும் முடிதலும், வேற்றுமைக்கண் மேல்வந்த வல் லெழுத்து மிக்கும் தன் இன மெல்லெழுத்தோடு உறழ்ந்தும் முடிதலும் விதியாம் என்றவாறு.

வரலாறு: நாய் நீர் யாழ் குறிது-சிறிது-பெரிது என மெய்க்கடவுள் - பொய்ச்சொல்-மெய்த்தெய்வம் - எய்ப்பன்றி, பார்க்கன்னி—தார்ச்சேனை — சூர்த்தெய்வம்—கார்ப்பருவம், தாழ்க்கோல்-கூழ்ச்சோறு-வீழ்த்தூணம்-பூழ்ப்புள் — எனவும் அல்வழிக்கண் முறையே இயல்பாயும் மிக்கும் முடிந்தன.

தகர்க்குட்டி, புகர்ப்போத்து என்றாற் போல்வன பண்புத்தொகை கருதின அவையும் கொள்க.

நாய்க்கால்—செவி—தலை—புறம், தேர்க்கால்—செலவு தலை—புறம், பூழ்க்கால்—சிறகு—தலை—புறம் எனவும்,

வேய்க்குறை வேய்ங்குறை, வேர்க்குறை வேர்ங்குறை விழ்க்குறை விழ்ங்குறை—செய்கை—தலை—புறம் எனவும்,

வேற்றுமைக்கண் முறையே மிக்கும் உறழ்ந்தும் முடிந் தன. பாழ்க்கிணறு—சேரி—தோட்டம்—பாடி இதுவும் அது. பாழுட்கிணறு என விரியும்.

'மேல்' என்ற மிகையானே,

'வாய்புகு வதனினும் கால் பெரிது கெடுக்கும்'

புறநா. 184-4

'தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்'

அக. நா. 8-3

என வேற்றுமைக்கண் இயல்பு ஆதலும்,

'வேய்கடிது வேய்க்கடிது' வேர்குறிது வேர்க்குறிது விழ்குறிது வீழ்க்குறிது—சிறிது—தீது—பெரிது என அல் வழிக்கண் உறழ்தலும்.

ஆர்ங்கோடு வெதிர்ங்கோடு சார்ங்கோடு பீர்ங்கோடு —செதிள்—தோள்—பூ என வேற்றுமைக்கண் மெல்லெழுத்து மிகுதலும்,

'ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழர்' அகநா. 93-4 என ஆர் அம்முப் பெறுதலும்,

'மாரிப் பீரத்து அலர் கொண்டே' குறுந் 98-5 எனவும் பீரங்கொடி எனவும் பீர் அத்துப் பெறுதலும் அம்முப் பெறுதலும் துவரங்கோடு எனத்துவர் அம்முப் பெறுதலும்

சார்க்காழ் எனச் சார் காழொடு புணர்வழி வல்லெழுத்து மிகுதலும்,

குமிழ்ங்கோடு குமிழங்கோடு மகிழ்ங்கோடு மகிழங்கோடு என ழவ்விற்று மரப்பெயர் மெல்லெழுத்தும் அம்மும் பெற்று உறழ்தலும்,

தாழப்பாவை என அல்வழிக்கண் அகரம் பெறுதலும் இன்னோரன்ன பிறவும் கொள்க.

இன்னும் அதனானே, யகர ஈறு யகரத்தின் முன்னர் வேயாது வேயாப்பு என இருவழியும் கெடுதலும் கொள்க.

விளக்கம்

நாய்குறிது, நீர்குறிது, யாழ்குறிது—அல்வழிக்கண் எழுவாய்த் தொடராய் யகர ரகர ழகர ஈற்றுச்சொற்கள் வருமொழியொடு இயல்பாகப் புணர்ந்தன.

மெய்க்கடவுள், பார்க்கன்னி, தாழ்க்கோல்—அல்வழிக்கண் இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள் மிக்குப் புணர்ந்தன.

தகர்க்குட்டி—தகராகியகுட்டி–புகர்ப்போத்து புகராகிய போத்து என்று கொள்ளப்படின், இவையும் அல்வழிக்கண்

இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய் மிகும் என்க; தகரது குட்டி புகரை உடைய போத்து எனின், வேற்றுமைப் புணர்ச்சியாய் மிகும் என்க.

நாய்க்கால் தேர்க்கால் பூழ்க்கால் முதலியன வேற்றுமைக்கண் வன்கணம் வர மிக்கன,

வேய்க்குறை வேய்ங்குறை என்றாற்போல்வன வல்லெழுத்தும் இனமெல்லெழுத்தும் உறழ்ந்தன,

பாழ்க்கிணறு—பாழினுட்கிணறு என ஏழாம் வேற்றுமைப் பொருள்படும் தொடர்.

வாய்ப்புகுவது என்பதும் உகிர்க்கதுவலின் என்பதும் செய்யுட்கண் வலி மிகாது வாய்புகுவது எனவும் உகிர் கதுவலின் எனவும் இயல்பாயின.

வேய்கடிது வேய்க்கடிது முதலியன அல்வழிக்கண் உறழ்ச்சி.

ஆர்ங்கோடு முதலியன வருமொழி வன்கணத்துக்கு இனமான மெல்லெழுத்துப் பெற்றன.

ஆரங்கண்ணி என்பது அம்முச்சாரியை பெற்றது. துவரங்கோடு என்பதும் அது. பீரத்து அலர் பீரங்கொடி எனப் பீர் என்பது அத்தும் அம்மும் பெற்றது சார்க்காழ் இருவழியும் வல்லெழுத்து மிக்கது. சாராகியகாழ் சாரினது காழ் என விரிக்க.

குமிழ், மகிழ் என்பன மெல்லெழுத்தும் அம்முச்சாரியையும் பெற்று முடிந்தன.

தாழப்பாவை—தாழ் அல்வழிக்கண் அகரச்சாரியை பெற்றுப் புணர்ந்தது என்ப. தாழாகிய பாவை என விரிக்க.

வேய் + யாது + யாப்பு—வேயாது வேயாப்பு என இரு வழியும் யகரம் கெட்டது.

இங்குக் கூறப்பட்டன யாவும் தொல்காப்பிய நூற்பாக் களையும் நச்சினார்க்கினியர் உரையையும் கொண்டே பெரும்பாலும் கொள்ளப்பட்டவை.

நாய்கடிது சிறிது—தீது—பெரிது தொல். 361 நச்
நீர் குறிது 405 நச்.
யாழ் குறிது 405 நச்.
பொய்ச்சொல், எய்ப்பன்றி 361
'எல்லாய்' என்ற மிகை. நச்.
மெய்த்தெய்வம் நன். 223 மயிலை.
கார்ப்பருலம் விருத்தி 223 மயிலை
தகர்க்குட்டி, புகர்ப்போத்து தொல். 405 நச்.
நாய்க்கால்—செவி தலை புறம் 357 நச்.
தேர்க்கால்—செலவு தலை புறம் 362 நச்.
பூழ்க்கால்—சிறகு—தலை புறம் 383 நச்.
வேய்க்குறை, வேய்ங்குறை 3,0 நச்,
வேர்க்குறை, வேர்ங்குறை 362 நச்
விழ்க்குறை, வீழ்ங்குறை நன். 223 விருத்தி
பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு—பாழுட்கிணறு
தொல். 387 நச்.
பாழாகியகிணறு—அல்வழி தன். 223 விருத்தி
நன், 224 விருத்தி
'வாய்புகுவதனினும்' 'உகிர்கதுவலின்'
நன். 223 மயிலை
வேய்கடிது, வேய்க்கடிது தொல். 361 நச்.
வேர்குறிது, வேர்க்குறிது 405 நச்

வீழ்குறிது, வீழ்க்குறிது 405 நச்.
ஆர்ங்கோடு முதலியன 363
ஆரங்கண்ணி 363 'மெய்பெற' நச்
பீரத்து அலர் 363 'மெய்பெற' நச்
பீரங்கொடி 365
துவரங்கோடு 363 'மெய்பெற' நச்
சார்க்காழ் (சாரினது வித்து) 364
குமிழ்ங்கோடு, குமிழங்கோடு 386
மகிழ்ங்கோடு மகிழங்கோடு 386 'ஓரியற்று' நச்
தாழப்பாவை 405 நச்.
வேயாது வேயாப்பு தொல்-144 'எல்லாம்' நச்.

ஒத்த நூற்பாக்கள்:

'யகர இறுதி வேற்றுமைப்பொருள் வயின்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே'
தொல். 357

'மெல்லெழுத்து உறழும் மொழியுமார் உளவே.' 360

'அல்வழி எல்லாம் இயல்புஎன மொழிப.' 361

'ரகார இறுதி யகார இயற்றே' 362

'ஆரும் வெதிரும் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்.' 363

'சார் என்கிளவி காழ்வயின் வலிக்கும்.' 364

'பீர்என் கிளவி அம்மொடு சிவணும்.' 365

'ழகார இறுதி ரகார இயற்றே.' 383

'குமிழென் கிளவி மரப்பெயர் ஆயின்
பீர்என் கிளவியொடு ஓரியற்று ஆகும்.' 386

'பாழ்என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே.' 387

'........யவ்வொடு ரழ
ஈறா வரின்வன்மை யின்யில்வர்க் கத்தொற்று
இடைப்படுமே.' வி. 14

'........யழரக்கள்
நிற்கப்பின் வல்லெழுத்து நேருமேல் ஒற்றாம்
பிணைந்த வருக்கம.' நே. 15

'யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் இனத்தொடு உறழ்தலும் விதிமேல்.'
நன். 224

'யரழமுன் வலிவரின் அல்வழிக்கு இயல்பும்
அடைமொழிக்கு ஆக்கமும் அவைவேற் றுமைக்கண்
மிகலும் தன்னினம் மெலிபெய் தலுமாம்.'
தொ, வி. 30

'மெல்லினம் உறழ்தரு மொழிகளும் உளவே'
மு. வி. பு. 186

'வேற்றுமை அல்வழி யகரஈறு இயல்பே' 183

'வெதிர்ஆர் பிர்சார் மெல்லெழுத்து மிகுமே' 187

'காழ்வரின் சார்மிகும் கருதுங் காலே.' 189

'பிர்என் கிளவி அம்மொடு சிவணும்.' 188

'குமிழ்என் கிளவி அம்மொடு சிவணும்.' 213

'பாழ்என் கிளவி மெல்லெழுத்து உறழும்.' 214

ழகரஈற்றுச் சிறப்புவிதி 134—136
தமிழ் தாழ்—சிறப்புவிதி.

134 தமிழ்அ உறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழும் கோல்வந்து உறுமேல் அற்றே.

இ-து; எய்தியதன் மேல் சிறப்புவிதி கூறுகின்றது.

இ-ள்: தமிழ் என்னும் சொல் வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுதலேயன்றி, அகரமும் பெற்று முடியும்; தாழ் என்றும் சொல் கோல் என்னும் சொல் வந்து புணரின் தமிழ் என்னும் சொல்போல வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுதலே அன்றி அகரமும் பெற்றுமுடியும் என்றவாறு.

வரலாறு: தமிழ்க்கூத்து—சேரி—தோட்டம்—பள்ளி—நாடு—வரை—அரசு எனவும்,

தாழக்கோல் எனவும் முறையே காண்க.

உம்மையான், தமிழ்க்கூத்து தாழ்க்கோல் என அகரம் பெறாது வல்லெழுத்து மிகுதலே வலியுடைத்து. இவை தமிழை உடைய கூத்து, தாழைத்திறக்குங்கோல் என விரியும். 16

விளக்கம்

எய்தியது—வேற்றுமைக்கு மிகலும் இனத்தொடு உறழ்தலும். (133)

சிறப்புவிதி—அகரச்சாரியையும் பெறுதல். எனவே தமிழ்க்கூத்து தமிழக்கூத்து தாழ்க்கோல் தாழக்கோல் என்ற இருமுடியும் கொள்க.

தாழக்கோல் என்பதனைத் தாழைத் திறக்குங்கோல் என்றே நச்சினார்க்கினியரும் விரித்துள்ளார். (தொல். 384) தமிழக்கூத்து—தமிழை உடைய கூத்து எனவிரிக்க,

(தொல். 385. நச்)

'அவ்வுறவும்' என்ற எதிரது தழீஇய எச்சஉம்மையானே தமிழின் சுவை என இன்சாரியை பெறுதலும் கொள்க. தாழக்கோல் எனினும் திறவுகோல் எனினும் அமையும். தாழைத்திறக்கும்கோல் என விரியும். தாழாகிய கோல் என ஒரு பொருட்கு இருபெயரொட்டு ஆக்கலும் ஒன்று.'

(நன், 225 விருத்தி)

ஒத்த நூற்பாக்கள்:

'தாழ்என் கிளவி கோலொடு புணரின்
அக்கு இடைவருதல் உரித்தும் ஆகும்.' தொல். 384
'தமிழ்என் கிளவியும் அதனோ ரற்றே.' 385
முழுதும் நன். 225
'தமிழ்வேற் றுமைக்குஅ—சாரவும் பெறுமே.'
தொ. வி. 34
'தாழ்முன் கோல்தரின் அக்கொடு சிவணும்.'
மு. வீ. பு. 211
'தமிழும் அவற்றோ ரற்றா கும்மே.' மு. வீ. பு. 212

'கீழ்'முன் வன்கணம்

135 கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது,

(இ-ள்.;) கீழ் என்னும் சொல்முன் வல்லெழுத்து ஒருகால்மிக்கும் ஒருகால் மிகாதும் உறழ்ந்து முடியும் என்றவாறு.

அதிகாரத்தின் இம்முடிபு வேற்றுமைக்கண்ணது எனக் கொள்க.

வரலாறு: கீழ்குளம் கீழ்க்குளம்—சேரி—தோட்டம்—பாடி எனவரும்.

விளக்கம்

எய்தியது—மிகலும் இனத்தொடு உறழ்தலும் (133)
பிறிதுவிதி—வன்மை விகற்பமும் ஆகும் என்பது.

கீழ்குளம் கீழ்க்குளம் முதலியவற்றையே நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார். (தொல். 398) உரையாசிரியர்

இவற்றொடு கீழ்குளம்—சேரி—தோட்டம்—பாடி என்பன வும் எடுத்துக்காட்டுகிறார். (தொல். 396) மயிலைநாதர் கீழ்க்குளம் கீழ்குளம்—சேரி—துறை—பாடி என எடுத்துக் காட்டுக்கள் தருகிறார். (நன். 225) நன்னூல் விருத்தி உரை காரர் கீழக்குலம்—சாதி—என எடுத்துக்காட்டி, 'கீழிருந்தும் —கீழல்லார் கீழல்லவர் (குறள் 973) என்றாற்போலக் கீழ் என்பது பண்பாகுபெயராய் இத்தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம் என்க' என்றார். (நன். 226)

ஒத்த நூற்பாக்கள்:

'கீழ்என் கிளவி உறழத்தோன்றும்.' தொல். 396

முழுதும் நன். 226, மு. வீ. பு. 218

'ஏழ்' முன் எண்ணுப்பெயர்ப்புணர்ச்சி

136 ஏழ் என்—கிளவி ஆறுஇயல் நிலையும்
உகரம் வருதல் ஆவயி னான.

இஃது ஏழ் என்னும் எண்ணுப்பெயர் எண் முதலிய நாற்பெயரொடு புணருமாறு கூறுகிறது.

(இ-ள்.) ஏழ் என்னும் எண்ணுப்பெயர் எண் முதலிய வற்றொடு புணர்வுழி, ஆறு என்னும் எண்ணுப்பெயர் போல நெடுமுதல் குறுகும் இயல்பின்கண் நிலைபெற்று முடியும்; அவ்வழி ஏற்புழி உகரம் வந்து புணர்தலும் ஆம் என்றவாறு.

வரலாறு: எழுமூன்று—எழுஞ்சு—கலம்—கடல் என நெடுமுதல் குறுகி உகரம் பெற்றும்.

எழாயிரம் ஏழாயிரம் என உகரம் பெறாது நெடுமுதல் குறுகியும் குறுகாதும்,

ஏழ்ஒன்று—ஏழ்தாமரை — ஏழ்நூறு—ஏழ்வெள்ளம்—ஏழாம்பல்—ஏழகல் என இயல்பாயும் தனக்கு ஏற்றபெற்றி முடிந்தவாறு காண்க.

விளக்கம்

'ஏழ்' என்பதனை ழகரஈற்று என்னும் பெயராகவே கொண்ட இவ்வாசிரியர் இதனை ஏனை எண்ணுப்பெயர்களோடு புணர்த்துக் கூறாது தொல்காப்பியனார்போல ழகர ஈற்றுப் புணர்ச்சிக்கண் குறிப்பிடுகின்றார்.

தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன பேரெண்கள். தொல்காப்பியனார் கோடி என்ற எண்ணைக் குறிப்பிடவில்லை. ஆனால் சங்கச் செய்யுட்களில் 'நூற்றுப்பத்தடுக்கிக் கோடி கடை இரீஇய' புறநா, 18-5 என்றாற்போல் அச்சொல் வந்துள்ளமை காண்க,

ஏழுமூன்று...ஏழுகலம் — தொல். 389; இந்நூற்பா மிகையான், ஏழுகடல் முதலிய பொருட்பெயர்ப்புணர்ச்சியும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்,

ஏழாயிரம் — தொல். 391
ஏழாயிரம் — 392 — 'கூறிய' என்றமிகை — நச்.
ஏழ்தாமரை, ஏழ்வெள்ளம், ஏழாம்பல்—தொல். 393
ஏழுகல் — தொல். 394

ஒத்த நூற்பாக்கள்:

'அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை இன்றே ஆசிரியர்க்க.' தொல். 389
'ஆயிரம் வருவழி உகரம் கெடுமே.' 391
'ஐஅம் பல்என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்.' 393
'உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.' 394
'எண்நிறை அளவும் வரூஉங் காலை
குறுகலும் உகரம் வருதலும் உரிய.' மு. வீ. பு. 216
'ஆயிரம் வரின் கெடும் உகரச் சாரியை.' 217

லகர ளகர ஈற்றுச் சிறப்பு விதி 137—139
லகர ளகர ஈற்றின்முன் முக்கணம்

137 லளவேற் றுமையில் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரின் ஆம்மெலி
மேவின் னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப.

இது லகர ளகர ஈறுகள் இருவழியும் மூக்கணத்தொடும் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்.) லகரளகர ஈறுகள் வன்கணம் வரின் வேற்றுமைக்கண் முறையே றகரடகரங்களாய்த் திரிதலும் அல்வழிக்கண் தம் திரிபு வல்லெழுத்தினொடு உறழ்தலும் பொருந்தும் மெல்லெழுத்து வந்து புணரின் முறையே னகரணகரங்களாய்த்திரிதலும் இடையெழுத்துவரின் இயல்பாதலும் பொருந்தும் இருவழிக்கண்ணும் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

(எ-டு.) கற்குறை முட்குறை—சிறை—தலை—புறம் எனவும் கல்குறிது கற்குறிது முள்கடிது முட்கடிது—சிறிது—தீது—பெரிது எனவும்,

கன்ஞெரி முண்ஞெரி— நுனி—முரி—எனவும்,
கன்ஞெரிந்தது முண்ஞெரிந்தது—நீண்டது-மாண்டது எனவும்,

கல்யாப்பு முள்யாப்பு—வலிமை எனவும்
கல்யாது முள்யாது—வலிது—எனவும்,
முறையே காண்க.

ஏற்புழிக் கோடலான் கற்றீது முட்டீது எனக் குறியதன் இறுதியும்.

பெயர்ச்சொல் தொகுமாறு 'பேசுவெஞ் சொற் றீதென் றேவிடு', புழுங்கற்றோரை எனத் தொடர்மொழி இறுதியும் அல்வழிக்கண்ணும் தகரம் வருவழி உறழாது திரிதலே கொள்க; லகரளகரங்களொடு தகரம் மயங்குதல் ஏலாமை யின்,

விளக்கம்

கற்குறை—வேற்றுமைக்கண் வலிவரின் லகரளகரங்கள் றகரடகரங்களாயின.

கல்குறிது கற்குறிது முள்குறிது முட்குறிது—அல்வழிக் கண் இயல்பாதலும் திரிதலும் லகரளகரங்கள் பெற்றன.

கன்ஞெரி முண்ஞெரி
கன் ஞெரிந்தது முண்ஞெரிந்தது

மெலிவரின் வேற்றுமை அல்வழி ஆகிய இருவழியும் லகர ளகரங்கள் முறையே னகரணகரங்கள் ஆயின.

கல்யாப்பு முள்யாப்பு | இடைவரின் லகரளகரங்கள்
கல்யாது முள்யாது | இருவழியும் இயல்பாயின

கல் + தீது; முள் + தீது—கற்றீது; முட்டீது—குற் றெழுத்தை அடுத்த லகர ளகரங்கள் முறையே றகர டகரங் களாகத் திரிந்தன. அவற்றொடு தகரம் மயங்காமையின் மயங்குதற்குரிய றகர டகரங்களாகத் தகரம் திரிந்தமை காண்க.

வெஞ்சொல் + தீது—வெஞ்சொற்றீது எனத் தொடர் மொழி இறுதிக்கண்ணும் லகரம் றகரமாகவும் வருமொழித் தகரம் றகரமாகவும் திரியும் நிலை ஏற்பட்டமை காண்க.

புழுங்கல் + தோரை புழுங்கற்றோரை இருபெயரொட்டு இதன்கண்ணும் நிலைமொழி வருமொழித்திரிபு காண்க. இவை ஏற்புழிக் கோடலான் கொள்ளப்பட்டன.

லகர ளகரங்களொடு கசபவய என்ற ஒற்றுக்களும் றகர டகரங்களொடு கசப என்ற ஒற்றுக்களும் தம்மொடு தாமும் மயங்குமாறு இ. வி. 31, 32ஆம் நூற்பாக்களான் அறிக.

கற்குறை முதலிய	தொல். 366
முட்குறை முதலியன	தொல். 396
கல்குறிது கற்குறிது முதலியன	தொல். 368
முள்கடிது முட்கடிது முதலியன	தொல். 398
கன்ஞெரி முதலியன	தொல். 367
முண்ஞெரி முதலியன	தொல். 397

கன் ஞெரிந்தது முதலியன தொல். 367, நச். உரை.

முண்ஞெரிந்தது முதலியன—தொல். 397. நச்.உரை.

கல்யாப்பு முதலியன	
முள்யாப்பு முதலியன	நன். 226. மயிலை
கல்யாது முதலியன	இ. வி. 69. 'எண்மூ எழுத்
முள்யாது முதலியன	தீற்று.'

கற்றீது, முட்டீது—இ. வி. 138இன் போந்தபொருள்—தகரம்வரின் திரிபு ஒன்றுமே பெறுதல் கொள்க, நன். விருத்தி. 227.

வெஞ்சொற்றீது — நன். 228 மயிலை

புழுங்கற்றோரை — நன். 228 மயிலை—புழுங்கற் சோறு—தொல். 405. நச்.

நச்சினார்க்கினியர் லகர ளகர ஈற்று நூற்பாக்களில் 'எல்லாம்' (368—398) என்ற மிகையான், குணவேற்றுமைக் கண்ணும் உறழ்ச்சி முடிபு கொண்டு, கல்குறுமை கற்குறுமை முள்குறுமை முட்குறுமை முதலியவற்றையும் புணர்த்துக் கூறுவார்.

ஒத்த நூற்பாக்கள் :

'லகார இறுதி னகார இயற்றே. தொல். 366
'மெல்லெழுத்து இயையின் னகாரம் ஆகும்.' 367
'அல்வழி எல்லாம் உறழ்என மொழிப.' 368
'ளகார இறுதி ணகார இயற்றே.' 396
'மெல்லெழுத்து இயையின் ணகாரம் ஆகும்.' 397
'அல்வழி எல்லாம் உறழ்என மொழிப.' 398

'எண்ணிரண்டாய்த்
தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரின் இரண்டும் தொடர்பால்
ஆன்ற ஐந்தாம் உடலாம்.' வீ. 15

'எண்ணிரண்டாம் ஒற்று வன்மை வந்தால் பின்பு இயைந்த ஐந்தாம்

நண்ணிய ஒற்றாம்; நகரம் வரின்முன் மெய் ணவ்வதுவாம்;

தண்ணிய மவ்வந்திடினும் அஃதே தனிநெடிற்பின்

பண்ணிய ஒற்றின்பின் தான்வரப்போம் ஒரு காலயின்றே.' வீ. 16

'பன்மூன்ற தாம்உடல் நப்பின் வருமெனின் ஈற்றெழுத்தாம்

பன்னேழ தாம்வன்மை பின்வரின் ஆயிடைத் தவ்வும் அஃதாம்.' வீ. 17

நன். 227

முழுதும் —

'லளவேற் றுமையில் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரின் தவ்வரின்
இயல்பும் திரிந்தபின் கெடுதலு மாகும்.' தொ. வி. 26

'லகாரம்வேற் றுமைக்கண் றகாரம் ஆகும்.'
மு. வீ. பு. 19(

'மெல்லெழுத்து இயையின் னகரம் ஆகும்.' 191

'அல்வழி எல்லாம் உறழும் என்ப.' 192

'ளகாரம் டகாரமாம் வேற்றுமைப் பொருட்கே
மெல்லெழுத்து இயையின் ணகாரம் ஆகும்.' 220

'அல்வழி எல்லாம் உறழ்வா கும்மே.' 221

அல்வழியில் குறில்வழி லளமுன் வன்கணம்

138 குறில்வழி லள-த-அணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே.

இஃது: எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்.) குற்றெழுத்தின் பின்நின்ற லகரளகரங்கள் தகர முதல்மொழி வந்துபுணரின் றகர டகரங்களாய்த்திரி தலே அன்றி 'ஆய்தமாய்த் திரியவும் பெறும் அல்வழிக்கண் என்றவாறு.

வரலாறு: கற்றீது கஃறீது முட்டீது முஃடீது என வரும்.

விளக்கம்

எய்தியது—அல்வழியில் ஈறுதிரியும் எனக்கொண்டது.

ஒத்த நூற்பாக்கள்:

'தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்
புகர்இன்று என்மனார் புலமை யோரே.' தொல். 369

'ஆய்தம் நிலையலும் வரைநிலை இன்றே
தகரம் வருஉம் காலை ஆன.' 399

நன். 228

முழுதும்
'தனிக்கு றில்கீழ் அல்வழி நவரின்
திரிந்தொழிந்து ஆய்தம் சேரும் என்ப.' தொ. வி. 26
'தகாம் வரும்வழித் தனிநிலை ஆகும்.'
மு. வீ. பு. 193, 222

குறில் அணையா லகர ளகரங்கட்குச் சிறப்புவிதி

139 குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரம் திரிந்தபின் கேடும்ஈ ரிடத்தும்
வரும்ந திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன உளபிற.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

(இ-ள்.) குற்றெழுத்தினைச் சாராது ஒருமொழி தொடர் மொழிகளைச் சார்ந்த லகர ளகரங்கள் அல்வழிக் கண் வருமொழித் தகாம் திரிந்த பின்னர்க் கெடுதலும் இரு வழியும் வருமொழி நகரம் திரிந்த பின்னர்க் கெடுதலும் இருவழியும் வருமொழி நகாம் திரிந்த பின்னர்க் கெடுதலும் வல்லெழுத்து வரின் அல்வழிக்கண் உறழாது இயல்பு ஆதலும் திரிதலும் வேற்றுமைக்கண் திரியாது இயல்பு ஆதலும் பொருந்துவன உள என்றவாறு.

வரலாறு: வேறீது விரறீறு ஆரறீது கருங்கோறீது எனவும், வாடீது தேடீது பொருடீது நெஞ்சுடீது எனவும்,

வேனன்று குரனன்று குழனன்று செங்கணன்று பைம்புனன்று எனவும்,

வாணன்று நாணன்று பொருணன்று நெஞ்சுணன்று எனவும்,

நன்மை எனவும்,

பால்கடிது தோள்கடிது—சிறிது—தீது—பெரிது—என வும், புழுங்கற்கறி—சோறு—பயறு, அழுங்கற்காய்—சோறு சழுங்கற்கூரை, ஆரற்சுவர், புழற்காலாம்பல். புலிவிற் கெண்டை, வந்தாற் கொள்ளும், வந்தக்காற்கொள்ளும்—செல்லும்—போம்—எனவும்.

'ஏனல் காவல் இவளும் அல்லள்'

தொல். பொ. 114 உரை)

'ஏனல் காவல் ஆயினள் எனவே' நற். 102-9

'அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட'

புறநா. 246—4

'நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென

'வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர் மாதோ'

புறநா. 93, 10, 11

எனவும் முறையே காண்க.

ளகர ஈறு அல்வழிக்கண் உறழாது திரிந்து முடிதல் வந்துழிக்காண்க.

'பிற' என்ற மிகையானே, கல்குறுமை கற்குறுமை முள்குறுமை, முட்குறுமை.

கோள்கடுமை கோட்கடுமை—வாள்கடுமை, வாட்கடுமை எனக்குண வேற்றுமைக்கண் உறழ்தலும்,

வேறீது வேற்றீது—வாடீது வாட்டீது—என நெடிய தன் இறுதி அல்வழிக்கண் கெட்டும் திரிந்தும் உறழ்தலும்,

விழன்காடு—சேறு—தாள்—புறம் என லகர ஈறு வேற்றுமைக்கண் றகரம் ஆகாது னகரமாய்த்திரிதலும்,

நூற்கடல் நூல்சிற என அல்வழிக்கண் உறழாது ஓர் இடத்துத் திரிதலும் ஓர் இடத்துத் திரியாமையும்

முந்நாளை வாழ்வு முந்நாளைப் பரிசு ஒரு நாளைக் குழவி ஒரு திங்களைக்குழவி என ளகார ஈறு ஐகாரம் பெறுதலும்,

பூலங்கோடு உதளங்கோடு எனவும்

வெயிலத்துக் கொண்டான் வெயிலிற் கொண்டான் எனவும்,

இருளத்துக்கொண்டான் இருளிற்கொண்டான் எனவும், முறையே வேற்றுமைக்கண் திரியாது அம்முப்பெறுதலும், அத்துப்பெறுதலும், இன்பெறுதலும், இன்னோரன்ன பிறவும் கொள்க.

மக்கட்கை—செவி—தலை-புறம் எனப் பெரும்பான்மை மக்கள் உடம்பு உயிர் நீங்கிக்கிடந்த காலத்தும், மக்கட் பண்பு எனச் சிறுபான்மை அங்ஙனம் அல்லாத காலத்தும் திரிதல் 'சில விகாரமாம் உயர்திணை' 71 என்பதனால் முடியும். 21

விளக்கம்

எய்தியது—லள வேற்றுமையின் றடவும் அல்வழி அவற்றோடு உறழ்வும் வல்லெழுத்து வருவழிப் பெறுதலும் வருமொழிக்கண் மெலி மேவின் னணவாகத் திரிந்தும் இடைவரின் இயல்பாகவும் இருவழிக்கண்ணும் புணர்ச்சி உறுதலும் ஆகிய 137ஆம் நூற்பா விதி.

பிறிது விதி—குறில் செறியாதன அல்வழிக்கண் வருமொழித்தகரம் திரிந்தபின் கெடுதலும், அல்வழி வேற்றுமை என்ற ஈரிடத்தும் வருமொழி நகரம் திரிந்தபின் கெடுதலும் அல்வழிக்கண் வலிவரின் இயல்பே ஆதலும். திரிபே ஆதலும், வேற்றுமைக்கண் இயல்பேயாதலும் பிறவும்.

வேல்+தீது—வேறீது முதலியன | அல்வழிக்கண் தகரம் திரிந்தபின் லகரம் கெட்டமை.

வாள் + தீது—வாடீது | அல்வழிக்கண் தகரம் திரிந்த
முதலியன | பின் லகரம் கெட்டமை

வேல் + நன்று—வேனன்று | அல்வழி வேற்றுமை ஈரிடத்
வேல் + நன்மை-வேனன்மை | தும் வருமொழி 'ந' திரிந்த
முதலியன | பின் லகரம் கெட்டமை

வாள்—நன்று—வாணன்று | அல்வழி வேற்றுமை ஈரிடத்
நான்—நன்மை-நாணன்மை | தும் வருமொழி 'ந' திரிந்த
முதலியன | பின் ளகரம் கெட்டமை

பால்தீது முதலியன—அல்வழிக்கண் எழுவாய்த் தொடர் இயல்பாகவே புணர்ந் தமை

புழுங்கற்கறி முதலியன—அல்வழிக்கண் இருபெய ரொட்டுப் பண்புத்தொகை திரிந்தே புணர்ந்தமை

புலிவிற்கெண்டை—உம்மைத்தொகை திரிந்தே புணர்ந் தமை

வந்தாற்கொள்ளும் முதலியன—வினையெச்சத்தொடர் திரிந்தே முடிந்தமை.

ஏனல்காவல், வாள்போழ்ந்திட்ட | இருவழியும்
அணில்வரி, நீள்கழல் | இயல்பாய் முடிந்
வாள் போழ்ந்து அடக்கல் | தமை

அணில்வரி, நீள்கழல் அல்வழி; ஏனைய வேற்றுமை

கல்குறுமை கற்குறுமை | குணவேற்றுமைக்கண்
முள்குறுமை முட்குறுமை | உறழ்ச்சி.

வேறீது வேற்றீது | நெடிலை அடுத்த லளக்கள் உறழ்
வாடீது வாட்டீது | ந்து முடிதல்.

விழன்காடு முதலியன—லகரம் றகரமாகாது னகரமாய்த் திரிதல்.

நூற்கடல் நூல்சில—அல்வழியிற்றிரிதலும் திரியாமையும்.

முந்நாளைக்குழவி முதலியன—ளகரம் ஐகாரச் சாரியை பெறுதல்.

பூலங்கோடு முதலியன—லஈறு வேற்றுமைக்கண் அம்முச்சாரியை பெறுதல்.

வெயிலத்துக்கொண்டான் முதலியன	லளஈறு அத்தும் இன்னும் வேற்றுமைக்கண் பெறுதல்.

மக்கட்கை	ளகரஈறு வேற்றுமைக்கண் திரிதல்
மக்கட்பண்பு	

மக்கள் என்பது உயர்திணைச் சொல் ஆதலின் இத்திரிபை உயர்திணைச்சொல் பற்றிய 'சிலவிகாரமாம் உயர்திணை' 71 என்ற நூற்பாவில் இவ்வாசிரியர் அடக்குகிறார்.

இவர் காட்டிய எடுத்துக்காட்டுக்கள் சில மயிலைநாதர் உரையைத் தழுவியும், பல தொல்காப்பியத்தையும் அதன் நச்சினார்க்கினியர் உரையையும் தழுவியும் வரையப்பட்டமை இனிக்காண்கம்.

வேறீது முதல் நெஞ்சுணன்று முடிய உள்ள எடுத்துக்காட்டுக்களில் நிலைமொழி ஈறுதிரிதலை 'நெடியதன் முன்னர்' தொல். 160 என்ற நூற்பாவில் குறியது பிற்கூறிய முறையன்றிக் கூற்றினால் நச்சினார்க்கினியர் கொண்டார்.

புழுங்கற்கறி முதல் புலிவிற் கெண்டை ஈறாகிய எடுத்துக் காட்டுக்கள் அல்வழிக்கண் திரிந்தே புணர்வதற்கு மயிலைநாதரால் காட்டப்பட்டன. நன். 228

இவற்றுள் புழுக்கற் சோறு நச்சினார்க்கினியரால் அல்வழித்திரிபுக்குக் காட்டப்பட்டுள்ளது. தொல். 405

வந்தாற்கொள்ளும் முதலிய வினைச்சொல் ஈறுதிரிதலைத் தொல், 368ஆம் நூற்பாவில் 'எல்லாம்' என்ற மிகையாற் கொண்டார் நச்சினார்க்கினியர்.

ஏனல் காவல்.........வாள் போழ்ந்து அடக்கல்-இயல்பாகப் புணர்ந்தமைக்கு மயிலைநாதரால் காட்டப்பட்டுள்ளன. நன், 228

கல்குறுமை கற்குறுமை முதலாகக் குணம்பற்றி வந்த லகார ஈற்று வேற்றுமைக்கண் உறழ்ச்சியும், முள்கடுமை முட்கடுமை முதலாக ளகார ஈற்று வேற்றுமைக்கண் உறழ்ச்சியும் தொல். 368, 398 ஆம் நூற்பாக்களில் 'எல்லாம்' என்ற மிகையால் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டன.

வேறீது வேற்றீது எனவும், வாடீது, வாட்டீது எனவும் வந்த உழற்சி முடிவுள், தொல். 369ஆம் நூற்பாவின் 'புகரின்று' என்ற மிகையால் வேறீது, வேற்றீது என்ற லகர ஈற்று முடிபே நச்சினார்க்கினியரால் கூறப்பட்டுள்ளது.

விழல் + காடு—விழன்காடு என லகரம் றகரமாகாது னகரமாகத் திரிந்து புணர்தல் தொல். 405இன் உரையில் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார்.

நூற்கடல், நூல் சில—என அல்வழிக்கண் ஓரிடத்துத் திரிதலும் ஓரிடத்துத் திரியாமையும் நன். 228இல் மயிலைநாதரால் குறிப்பிடப்பட்டுள்ளன.

பூந்நாளை வாழ்வு முதலிய ளகர ஈற்றுச் சொற்கள் ஐகாரம் பெற்றுப் புணர்தல் தொல். 405இன் உரையில் நச்சினார்க்கினியர் சுட்டுகிறார்.

பூலங்கோடு தொல். 375 ஆம் நூற்பாவானும், உதளங்காடு தொல். 400 ஆம் நூற்பாவின் 'போற்றல் வேண்டும்' ன்ற மிகையானும் கொள்ளப்படும். 'உதள்' மரமாயின் ம்மரக்கிளை என்ற பொருளில் உதளங்கோடு எனப் ணரும். உதள் யாட்டினைக் குறிப்பின் யாட்டின்கொம்பு ன்ற பொருளில் உதட்கோடு என்றே புணரும். தொல். 00 நச். வெயில் இருள் பற்றிய செய்திகள் தொல்காப்பியம் 77, 402ஆம் நூற்பாக்களில் உள்ளன.

மக்கட்கை என்பது தொல் 404 ஆம் நூற்பாவானும் மக்கட்பண்பு என்பது அந்நூற்பாவின் மிகையானும் கொள் ாப்படும். அந்நூற்பாவின் 'தக்கவழி' என்ற தொடருக்கு நச்சினார்க்கினியர் 'பெரும்பான்மை மக்கள் உடம்பு உயிர் நீங்கிக் கிடந்த காலத்தில் அஃது இம்முடிபு பெறும்' என்று குறிப்பிட்டதை இவரும் குறித்துள்ளார். நன்னூல் விருத்தி புரை போல அன்றி இவர் காட்டின யாவும் அஃறிணை எடுத்துக்காட்டுக்களே.

ஒத்த நூற்பாக்கள்:

'நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப.' தொல். 160

'பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொடு
ஆம்பும் பெயர்க்கும் அம்இடை வருமே.' 375

'வெயில்என் கிளவி மழைஇயல் நிலையும்.' 377

'இருள்என் கிளவி வெயில்இயல் நிலையும்' 402

'மக்கள் என்னும் பெயர்ச்சொல் இறுதி
தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே.' 404

'தனிநெடிற் பின்
பண்ணிய ஒற்றின்பின் தான்வரப் போம்ஒருகால்
பயின்றே. வீ. 16

'ஒன்று அழிந்து போதலும் உண்டு.' நே. 17

புழுதும் | நன். 229

'ஆலும் வேலும் அம்மொடு கிவனும்.' மு. வீ. பு. 109

'பூலும் அம்மொடு யோவது இயல்பே.' 200

'அத்தும் இன்னும் அடையும் வெயிலே.' 202

'இன்னும் அத்தும் இருளொடு சிவனும்.' 225

லகர ஈற்றுச் சிறப்புவிதி 140-142

அல்வழியில் 'நெல்' முதலியவற்றின் முன் வன்கணம்

140 நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல.

இதுவும் அது

(இ-ள்.) நெல் செல் கொல் சொல் என்னும் இந்நாற்சொல்லும் அல்வழியைச் சொல்லும் இடத்துத் தாம் வேற்றுமை முடிபின் இயல்பினவாய் லகரம் றகரமாய்த் திரிந்து முடியும் என்றவாறு.

உம்மை சிறப்பு

வரலாறு: நெற்காய்த்தது செற்கடிது கொற்கடிது சொற்கடிது—சிறிது—தீது—பெரிது எனவரும். 22

விளக்கம்

இதுவும் அது—எய்திய 'அல்வழி அவற்றோடு உறழ்வும்' 137 என்ற பொதுவிதி விலக்கித் திரிபேபெறும் என்ற சிறப்பு விதிவகுத்தது.

வேற்றுமைக்கண் நெற்குறுமை என்றாற்போலத் திரிதல் பல லகர ஈற்றுச் சொற்களுக்கும் பொதுவான செய்கை. ஆனால் நெற்காய்ந்தது போன்ற அல்வழி முடிபு இந்நாற் சொற்களுக்குமே சிறப்புச் செய்கை என்பதற்காக 'உம்மை சிறப்பு' என்றார்.

ஒத்த நூற்பாக்கள்:

முழுதும் — தொல். 371

'நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்வழி யானும் றகரம் ஆகும்.' — நன். 232

மு. வி. பு. 195

'வல்' முன் நாற்கணம்

141 வல்லே தொழிற்பெயர் அற்றுஇரு வழியும்
பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வும்ஆம்.

இதுவும் அது.

(இ-ள்.) வல் என்னும் சொல் இருவழியும் தொழிற்பெயர் இயல்பிற்றாய் உகரம் பெற்று முடியும்; பலகை என்னும் சொல்லும் நாய் என்னும் சொல்லும் வருமொழியாய் வரினும், உம்மையால் பிற சொற்கள் வரினும் வேற்றுமைக்கண் அகரமும் பெற்று முடியும்; உம்மையான் உகரமும் பெற்று முடியும்.

எ-டு.: வல்லுக்கடிது—சிறிது-தீது-பெரிது-ஞான்றது-நீண்டது-மாண்டது எனவும்,

கடுமை—சிறுமை—தீமை—பெருமை—ஞாற்சி— நீட்சி மாட்சி எனவும், வல்லப்பலகை வல்லநாய் எனவும்,

வல்லக்கடுமை—சிறுமை—தீமை— பெருமை—ஞாற்சி-நீட்சி—மாட்சி—வலிமை எனவும்,

வல்லப்பலகை வல்லநாய் எனவும் முறையே காண்க, 23

விளக்கம்

" 'வரினும்' என்னும் எதிரது தழீஇய எச்சஉம்மையான் பிறபெயர் என்பதூஉம், 'அவ்வும்' என்ற இறந்ததுதழீஇய எச்ச உம்மையான் உகரச் சாரியை என்பதூஉம் பெற்றாம்." நன், 237 விருத்தியுரை.

வல்லுநாய்—வல்லாய நாய் என இருபெயரொட்டு.
வல்லநாய்—வல்லினுள் நாய் என வேற்றுமை.

வல்லுப்பலகை, வடுலப்பலகை—வல்லினது அறை வரைந்த பலகை என வேற்றுமை—நன். 231 விருத்தி.

" 'அவ்வும்' என்ற உம்மையான், உகரப்பேறே வலியுடைத்து." நன். 230 மயிலை.

ஒத்த நூற்பாக்கள்:

'வல்லென் கிளவி தொழிற்பெயர் இயற்றே.'
தொல். 373

'நாயும் பலகையும் வருஉங் காலை
ஆவயின் உகரம் கெடுதலும் உரித்தே
உகரம் கெடுவழி அகரம் நிலையும்.' தொல். 374

முழுதும் நன். 231

'வல்உக ரத்தொடு வரும்என மொழிப.'
மு. வீ. பு. 197

'பலகையும் நாயும் வருஉங் காலை
அகரச் சாரியை அடையும் என்ப.' 198

'இல்' என்பதன் முடிபு

142 இல்—என் இன்மைச் சொற்குஐ—அடைய
வன்மை விகற்பமும் ஆகா ரத்தொடு
வன்மை ஆகலும் இயல்பும் ஆகும்.

இது லகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தாதது எய்துவித்த லும் எய்தியது இகந்துபடாமை காத்தலும் நுதலிற்று.

(இ ள்.:) இல் என்று சொல்லப்படும் ஒருபொருளினது இல்லாமையை உணர்த்தி நிற்கும் லகரஈற்று வினைக் குறிப்பு முற்றுச்சொற்கு ஐகாரம் இறுதி வர வல்லொற்று ஒரு கால்' மிக்கும் ஒருகால் மிகாதும் உறழ்ந்து முடிதலும் ஆகாரம் இறுதிவர அதனொடு வல்லொற்று மிக்கு முடித லும், அவ்விரு திறனும் இன்றி இயல்பாய் முடிதலும் பொருந்தும் என்றவாறு.

உறையுளை உணர்த்தி நிற்கும் இல் என்னும் லகர ஈற்று இடப்பெயரின் நீக்குதற்கு 'இல்என் சொல்' என்று ஒழியாது 'இல்என் இன்மைச்சொல்' என்றும், ஒரு பொருளி னது இல்லாமையை உணர்த்தி நிற்கும் 'இல்லை' என்னும் ஐகார ஈற்று வினைக்குறிப்பு முற்றுச்சொல்லின் நீக்குதற்கு இன்மைச்சொல் என்று ஒழியாது 'இல்என் இன்மைச்சொல்' என்றும் கூறினார்.

வரலாறு: இல்லைக்கல் இல்லைகல், இல்லாக்கல் இல்கல் சுனை—துடி—பறை என முறையே காண்க.

விதிஉயிர்ஈறாம் ஐகாரஈற்றுமுன் உறழ்ந்தும் ஆகார ஈற்றுமுன் மிக்கும் முடியுமேனும், நிலைமொழிச் செய்தி கூறுவார் வருமொழிச் செய்தியும் உடன் கூறினார்.

இயல்புஉயிர்ஈறு விதிஉயிர்ஈறு எழுத்து ஒப்புமையான் ஒன்றுபோலத் தோன்றி ஒருமுடிபு எய்தினவேனும் ஓசை வேறுபாட்டான் வேறுபட நிற்பன ஆதலின், இல்லைக்கல் இல்லைகல் இல்லாக்கல் எனவரும் இயல்பு உயிர்ஈற்று முடிபும், இவ்வாறு வரும் விதி உயிர்ஈற்று முடிபும் ஓசை வேறுபாட்டான் வேறுபடுமாறு, இயல்பு உயிர்ஈற்று முடி பிற்கு ஒலி ஊன்றாது ஒரு திரண்மையாக ஓசை ஒற்றுமைப் படச் சொல்லுதலும், விதி உயிர்ஈற்று முடிபிற்கு ஒலி

ஊன்றி ஓசை இடையறவு படச் சொல்லுதலும் என்று உணர்க.

இன்னும், இல்கல் என்னும் முற்றுச்சொல் முடிபும் அவ்வாறு வரும் பண்புத்தொகை முடிபும் இவ்வாறே வேறு படுத்து உணர்க. இங்ஙனம் முடித்தல் ஆசிரியர் தொல் காப்பியனார்க்குக் கருத்து என்பது, 'இல்என் கிளவி' தொல். 373 என்னும் சூத்திரத்து உரையாசிரியர் உரையான் உணர்க.

இனி, இல் என்பதன் முடிபாக இங்ஙனம் புணர்த்த சொல்லே அன்றி இல்லை என ஐகார ஈறாய் நிற்பது ஒரு சொல் இன்று எனவும், இல்குணம் இல்லாக்கொற்றன் என்றாற்போலும் இல் என்பதன் முடிபு ஆகிய இவற்றை இல் என்னும் வினைக்குறிப்பு முதல்நிலை அடியாகத் தோன்றிய பெயரெச்சமறை நோக்கும் விரிந்தும் நின்றன என்றும் உரை கூறுவாரும் உளர். அவர்க்கு அது கருத்து அன்மை 'முன்னிலை வியங்கோள்' தொல். சொல் 224 என்னும் சூத்திரத்துள் 'யான் இல்லை; யானும் நீயும் இல்லை' என்றாற்போல வருமொழியொடு புணராமல் அவர் சொல் ஒத்தினுள் காட்டிய உதாரணங்களே, இல் என்பதன் முடிபு அன்றி இல்லை என இயல்பாகவே நிற்கும் ஐகார ஈற்றுச் சொல்லும் ஒன்று உளது என்பதற்குச் சான்று ஆகலானும், 'இன்மை செப்பல்' (தொல். சொல். 224) என்ப தற்கு 'இல்லை என்னாது இன்மை என்பதனால் இல்லை என்பதும் இல் என்பதும் என இரண்டாயிற்று' என்று உரையாசிரியர் சேனாவரையரை உள்ளிட்ட தொல்லாசிரியர் எல்லாரும் உரை கூறியவாற்றானும்,

'அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதுஇல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்' (குறள். 170)

என்றாற் போலச் சான்றோர் செய்யுட்கண் அவ்விரு சொல் லும் பயின்று வருதலானும்,

பெயரெச்சமறை தொக்கும் விரிந்தும் நின்றதேல், அவற்றிற்கு இம்முடிபு ஈண்டுக் கூறல் வேண்டாமையானும் அறிக.

அன்றியும், அன்மை முதலியவற்றையும் இவ்வாறு புணர்க்க வேண்டுதலானும் அவர்க்கு அது கருத்து அன்று 24
என உணர்க.

விளக்கம்

எய்தாது எய்துவித்தல்—ஆகாரத்தொடு வன்மை ஆதலும் இயல்பும்.

எய்தியது இகந்து படாமல் காத்தல்—வன்மை விகற்பம்.

'இல்' என்று வாளா கூறின், இல்லத்தையும் உணர்த்தும் ஆதலின் 'இல் என் இன்மைச் சொல்' என்றார்.

வாளா 'இன்மைச் சொல்' எனின், இல்லை என்பதனையும் குறிக்கும்; அதனை நீக்குதற்கு 'இல் என் இன்மைச் சொல்' என்றார்.

இல்லைக்கல் இல்லைகல்—வன்மை விகற்பம்
இல்லாக்கல் —ஆகாரத்தொடு வன்மை ஆதல்
இல்கல் —இயல்பு

ஐகார ஈற்றுமுன் உறழ்தல் 'வேற்றுமை அல்வழி இஐ என்னும்' (77) என்பதனாலும், ஆகார ஈற்றின்முன் மிகுதல் 'இயல்பினும் விதியினும்' (82) என்பதனாலும் பெறப்படுமேனும், நிலைமொழிச்செய்தி விளங்குவதற்காகவே வருமொழிச்செய்தியும் உடன் கூறினார்.

இயல்புஉயிர்ஈற்று இல்லைக்கல் என்பது இடையே ஒலியை அழுத்தாது ஒரே வகையாக ஒலிக்கப்படும். விதி

உயிர்ஈற்று இல்லைக்கல் என்பது ஐகாரத்தில் ஒலி ஊன்றுதலால் இடையறவுபட இரு கூறாக ஒலிக்கப்படும். இல்கல் என்னும் பண்புத்தொகை ஒலி இடையறவுபடாமல் ஒரே பிண்டமாக ஒலிக்கப்படும். இஃது உரையாசிரியர் கருத்தை உட்கொண்டு சொற்றது.

"இஃது இல் என்பதொடு முதல்நிலை நின்று வருமொழியொடு இல்லைக்கல் இல்லைகல் முதலியவாகப் புணர்ந்தது என்று அறிவித்தற்கு 'இல்என் கிளவி' என்றும், 'இயற்கை ஆதலும்' என்றும் கூறினார். இம்முடிபு வினையியலுள் விரவு வினைக்கண் 'இன்மை செப்பல்' (தொல். சொல். 222) என்புழி 'இல்லை இல்' என்று உரை கூறிய அதனாலும், அவன் இல்லை என்றாற்போல்வன உதாரணமாக எல்லா ஆசிரியரும் காட்டியவாற்றானும் உணர்க. 'இதனானே, இங்ஙனம் புணர்த்த சொல் அன்றி, இல்லை என ஐகார ஈறாய் நிற்பதொரு சொல் இன்மையும் உணர்க. ஆயின், இன்மை முதலியவற்றையும் இவ்வாறே புணர்க்க எனின், அவை வருமொழி இன்றி ஒரு சொல்லாய் நிற்றலின் புணர்க்கார் ஆயினார்.'

(தொல். 373-நச்.)

'இல்லாக் கொற்றன் முதலிய ஆகாரமும் வல்லெழுத்தும் பெற்றன, எண்ணில் குணம் முதலியனவும் இல்லாக் கொற்றன் முதலியனவும் இல் என்னும் வினைக்குறிப்பு முதனிலை அடியாகத்தோன்றி பெயரெச்சமறை தொக்கும் விரிந்தும் நின்றன. தொல். 373 நச்.

இங்ஙனம் கூறிய நச்சினார்க்கினியர் உரையை இவ்வாசிரியர், அவரே தொல். சொல். 222ஆம் நூற்பா உரையுள் யான் இல்லை, யானும் நீயும் இல்லை என ஒரு முற்றுச் சொற்றொடருள் இறுதிச் சொல்லாக வருமொழி அவாவாத வகையில் இல்லை என்ற சொல்லைப் புணர்த்து எடுத்துக் காட்டுத் தந்தமையானும், 'இன்மை செப்பல்' என்பதற்கு இல் என்பதே அன்றி இல்லை என்பதனையும் எல்லோரும்

எடுத்துக் காட்டாகத் தந்துள்ளமையானும், இல்லை என்பது இல் என்பதன் திரிபு ஆயின் அதனை எடுத்துத் தனியே கூறுதல் வேண்டாமையானும் சான்றோர் செய்யுட்களில் ஒரே பாடலில் இல் என்பதும் இல்லை என்பதும் வந்துள்ளதனாலேயே அவை தனித்தனிச்சொல் என்பது பெறப்படும் ஆகலானும், பெயரெச்சமறை தொக்கும் விரிந்தும் நின்றதேல் அவை விதியீறாய் ஆகாரஈற்றுள் அடங்குதல் கூடும் ஆகலானும், பண்புத்தொகையாயின் நிலைமொழி வருமொழியாகப் பிரித்தல் கூடாமையானும்,

'அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையுன்' (தொல் சொல். 216) என்பனவற்றுள் இன்மைக்கு இல் என்பதே இயற்கைச்சொல்; இல்லை என்பது அதன் திரிபே எனின் அன்மை முதலாயினவற்றிற்கும் அல்—உள்—வல் என்பனவே இயற்சொல், அன்று—உண்டு—வற்று என்பன அவற்றின் திரிபு எனல் வேண்டுமாதலானும், அல் முதலியன இல் என்பது போல வினைமுற்றாய் வருதல் இல்லாமையானும் என இவ்வாறு மறுத்து, இல் என்ற சொல்வேறு என்பதனையும், அவ்வில் என்பதே ஆகாரச் சாரியைபெற்று இல்லா என நிற்பது என்பதனையும் வலியுறுத்துகிறார்.

'இல்லைகல்' என்றாற்போன்ற இயல்புவிதி உயிரீறுகளிடை ஓசை வேற்றுமை காணப்படும் என்பதை உரையாசிரியர் 'இல்லைகல்' இல்கல் என்பன, இல்லை என்னும் ஐகார ஈற்றுச்சொல் முடிபு அன்றோ என்றும், இல்லாக்கல் என்பது உள்ள என்னும் பெயரெச்சத்து எதிர்மறை ஆகிய ஆகார ஈற்றுச் சொல்லது முடிபு அன்றோ என்றும், இல்கல் என்பது பண்புத்தொகை முடிபு அன்றோ என்றும் கூறின் அம்முடிபுகளொடு இம்முடிபுகள் எழுத்து ஒப்புமை அன்றி இவை ஓசை வேற்றுமை உடைய என்பதுபோலும் கருத்து. அவ்வோசை வேற்றுமையாவன ஐகார ஈறாயவழி அவ்வைகாரத்துமேல் ஒலி ஊன்றியும், லகார ஈறாயவழி அந்த லகார ஒற்றுமேல் ஒலி ஊன்றியும், அந்த லகார ஈறு இயல்பு முடிபாகிய வழிப் பண்புத்தொகை போல ஒரு திரண்மை

யாய் ஒலியாது இடையற்று லகரத்தின்மேல் ஒலி ஊன்றியும் ஆகார ஈறாயவழி ஒரு திரண்மையாய் ஒலியாது அவ்வாகாரத்தின் மேல் ஒலி ஊன்றியும், ஆண்டு லகார ஈறாய வழி ஒரு திரண்மையாய் ஒலியாது அந்த லகரத்தின்மேல் ஒலி ஊன்றியும் வரும் வேறுபாடுகள் போலும்; (தொல். 373) என்று கூறியவாற்றான் அறிக.

'இல் என்னும் பண்பு அடி நின்று வருமொழியோடு புணர்வழி வரும் சாரியை ஆதலின், இவ்விரு சாரியை தோன்றிய வழியும் இல்பொருள் என்னும் பண்புப் புணர்ச்சி போலப் பண்புத் தொகையாம் என்க. இது மெய்யீற்றுப் புணரியல் ஆதலானும், லகர ஈற்றிற்குப் பொதுவிதி கூறிச் சிறப்புவிதி கூறும் வழி 'இன்மைப் பொருளைத்தரும் இல் என்னும் சொற்கு' என விதந்தமையானும், விகுதியடைதல் பதவியலுள் அன்றி ஈண்டுக் கூறவேண்டாமையானும் ஆகாரத்தோடு வன்மை ஆகலும் என வல்லினப்பேற்றோடு ஆகாரத்தையும் உடன் நிகழ்த்திக் கூறுதலானும், 'இயல்பும் ஆகும்' என்றமையானும், மறைப்பொருளை இல் என்னும் பகுதி அன்றி ஆகாரம் தரவேண்டாமையானும் தருமேல் இன்மைக்கு மறையாய உண்மைப் பொருளைத் தர வேண்டும் ஆதலானும், ஆகார மறைவிகுதி தெரிநிலைக்கு அன்றிக் குறிப்பிற்கு வாராமையானும், ஈண்டுப்பெறும் ஐகார ஆகாரங்கள் சாரியையே அன்றிக் குறிப்பு முற்று விகுதியும் எச்சத்தின்கண் வந்த மறை விகுதியும் எச்சத்தின் கண் வந்த மறை விகுதியும் அல்ல என்க.

இல்லைப் பொருள் என்ற பண்புத் தொகைக்கும் குறிப்பு முற்றுத் தொடருக்கும் வேறுபாடு பண்புத்தொகை ஒரு மொழிபோல் நடத்தலும், குறிப்பு முற்றுத்தொடர் விட்டிசைத்து நடத்தலும் தம்முள் வேற்றுமை என்க. இல்லாப்பொருள் என்பது இங்ஙனம் கூறியவாறே பண்புத் தொகையாகவும் பெயரெச்சத் தொடராகவும் கொள்ளப்படும் போதும் விட்டிசையாமையும் விட்டிசைத்தலுமே தம்முள் வேறுபாடு என்க.' (நன். 233 விருத்தியுரை)

ஒத்த நூற்பாக்கள்:

'இல்லென் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐஇடை வருதலும்
இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே.'

தொல். 372

முழுதும் நன். 233

'இன்மை உணர்த்தும் இல்என் கிளவிக்கு
ஐகான் வருவழி இயல்பொடு மிகலும்
ஆகாரம் வருவழி மிகலுமாம் வேற்றுமை.'

மு. வீ. பு. 196

சில ளகர ஈற்றுப் பெயர்க்குச் சிறப்புவிதி

143 புள்ளும் வள்ளும் தொழிற் பெயரும் மானும்
இஃது எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்,:) புள் என்னும் பெயர்ச்சொல்லும் வள் என்னும் பெயர்ச்சொல்லும், இருவழிக்கண்ணும் ளகர ஈற்றுத் தொழிற்பெயரைப்போல, வன்கணமும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வர உகரம் பெற்றும் முடியும் என்றவாறு.

வரலாறு: புள்ளுக்கடிது வள்ளுக்கடிது—சிறிது—தீது—பெரிது—ஞான்றது—நீண்டது—மாண்டது—வலிது எனவும்

கடுமை—சிறுமை— தீமை—பெருமை—ஞாற்சி—நீட்சி மாட்சி—வலிமை எனவும் வரும்.

புள்கடிது புட்கடிது, வள்கடிது வட்கடிது எனவும்
புட்கடுமை வட்கடுமை எனவும்

புண்ஞான்றது வண்ஞான்றது எனவும்
புண்ஞாற்சி வண்ஞாற்சி எனவும்
உம்மையான் பொதுவிதி பெறுதலும் கொள்க.

விளக்கம்

எய்தியது—'லள வேற்றுமையில்' என்பதனால் (137) பெற்ற வேற்றுமைத்திரிபும் அல்வழி உறழ்வும் முதலியன.

சிறப்புவிதி—தொழிற்பெயர் போல ஈரிடத்தும் உகரம் பெற்று வலிவரின் மிக்கும் மெலிவரின் இயல்பாகவும் புணர்தல். 'தொழிற்பெயரும்' என்ற இறந்தது தழீஇய எச்ச உம்மையான் பொதுவிதி பெறுதலும் கொள்ளப்பட்டது.

எடுத்துக்காட்டுகள் யாவும் தொல். 403இல் நச்சினார்க்கினியர் உரைத்தனவே.

"புள்ளு வலிது புள் வலிது புள்ளுவன்மை புள்வன்மை என வகரத்தின் முன்னர் உகரம் பெற்றும் பெறாதும் முடிதலின் 'நின்ற சொல்முன் இயல்பாகும்மே' தொல். 144 என்றதனால் முடியாமை உணர்க. இது வள்ளிற்கும் ஒக்கும்." தொல். 403 நச்.

ஒத்த நூற்பாக்கள்:

'புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல.' தொல். 403
முழுதும் நன். 234
'வள்ளும் புள்ளும் உகரமொடு சிவணும்.'
மு. வி. பு. 226

வகரஈற்றுச் சிறப்புவிதி-26, 27
அல்வழியில் சுட்டுவகரம் முன் முக்கணம்

144 சுட்டு வகரம் மூவினம்உற முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பும்ஆம் அல்வழி.

இது வகரஈறு அல்வழிக்கண் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்.:) சுட்டெழுத்தினை முதலாக உடைய வகர ஈற்றுப் பெயர் மூவினமும் வந்து புணர, முறையானே ஈற்று வகரம் ஆய்தமும் வந்த மெல்லெழுத்தும் இயல்பும் ஆம், அல்வழிக்கண் என்றவாறு.

வரலாறு: அஃகடிய இஃகடிய உஃகடிய—சிறிய—தீய பெரிய எனவும்,

அஞ்ஞாண் இஞ்ஞாண் உஞ்ஞாண்—நூல்—மணி எனவும்,

அவ்யாழ் இவ்யாழ் உவ்யாழ்—வட்டு எனவும் முறையே காண்க. இவ்வழக்கு இக்காலத்து அரிய. 26

விளக்கம்

'வகரக்கிளவி நான்மொழி ஈற்றது' (தொல். 81) என்பதனால், வகர ஒற்றீற்றுச் சொற்கள் அவ்—இவ்—உவ்–தெவ் என நான்கே ஆதலும், அவற்றுள் சுட்டெழுத்தினை முதலாக உடைய வகர ஈற்றுப்பெயர் மூன்றாதலும் அறிக.

'அஃகடிய இஃகடிய உஃகடிய—சிறிய—தீய—பெரிய என வரும் இவ்வழக்கு இக்காலத்து அரிய' என்றார் நச்சினார்க்கினியர் (தொல். 379). இவ்வாசிரியர் வகரஈற்று அல்வழிப் புணர்ச்சி முடிபே இக்காலத்து அரிய என்கிறார். உரையில் 'அஃகடிய முதலிய இவ்வழக்கு' என்ற தொடரில் 'அஃகடிய முதலிய' என்ற சொற்கள் ஏடு எழுதுவோரால் விடப்பட்டன போலும். வருமொழி உயிரொடு புணரும் புணர்ச்சி 'தனிக்குறில் முன் ஒற்று' (66) என்பதனால் கொள்ளப்படும்.

இந்நூற்பாவின் செய்தி நிலைமொழி ஈற்றுத் திரிபிற்கே கொள்ளப்படும்.

இந்நூற்பாவினை அல்வழிப்புணர்ச்சிக்கே கொள்க. வேற்றுமைப் புணர்ச்சி 'வவ்விரு சுட்டிற்கு அற்று உறல் வழியே' (155) என்புழிக் கூறப்படும்.

ஒத்த நூற்பாக்கள்:

'வேற்றுமை அல்வழி ஆய்தம் ஆகும்.' தொல். 379
'மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து ஆகும்' 380
'ஏனவை புணரின் இயல்பு என மொழிப' 381
'சுட்டு... ... ...இயல்பு ஆகும்' நன். 235
'ஆய்தம் ஆகும் அல்வழி யான' மு. வீ. பு. 204
'மெல்லெழுத்து இயையின் மெல்லெழுத்து ஆகும்' 205
'இடையும் உயிரும் வரின் இயல்பு ஆகும்' 206

'தெவ்' முன் முக்கணம்

145 தெவ்என் மொழியே தொழிற்பெயர் அற்றே
ம-வரின் வஃகான் மவ்வும் ஆகும்.

இது வகர ஈற்று உரிச்சொல் ஒன்று இருவழியும் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்.:) தெவ் என்னும் சொல் ஈற்று வகரம் தொழிற்பெயரின் இயல்பிற்றாய் வன்கணமும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும்வர, இருவழியும் உகரம்பெற்று முடியும், மென்கணத்து மகரம்வரின், ஈற்றுவகரம் மகரமுமாம் என்றவாறு.

வரலாறு: தெவ்வுக்கடிது—சிறிது—தீது—பெரிது—ஞான்றது—நீண்டது—மாண்டது—வலிது எனவும்,

கடுமை— சிறுமை —தீமை—பெருமை—ஞாற்சி—நீட்சி மாட்சி—வலிமை எனவும்.

தெம்மாண்டது தெம்மாட்சி எனவும் முறையே காண்க.

உம்மையான், உகரப்பேறே வலியுடைத்து, உரையிற் கோடலான், தெம்முனை, தெம்மன்னர் என்புழி மகர ஒற்றாயே நிற்றல் கொள்க. 27

விளக்கம்

தெவ் என்னும் உரிச்சொல் படுத்தல் ஓசையால் பெயரா யிற்று. 'மவ்வும்' என்ற உம்மை இழிவு சிறப்பு உம்மை.

'இப் பகை என்னும் பண்புப்பெயர் பண்பியாய்ப்பகைப் பொருளை உணர்த்தி ஆகுபெயராய் நின்றவழியும் இவையே காட்டு என்க' (நன். 236—விருத்தி)

தெம்மன்னர் தெம்முனை என்பன மயிலைநாதர் (நன். 235) உரையில் காட்டியன. உரையிற்கோடல் என்பத னான், தெம்முனை என வகர ஒற்று மகர ஒற்றாய்த் திரித லும் கொள்க' என்றார் நச்சினார்க்கினியர் (தொல். 232)

ஒத்த நூற்பாக்கள்:

'ஏனை வகரம் தொழிற்பெயர் இயற்றே' தொல். 382

முழுதும் நன். 236 மு. வீ. பு. 207

'தெவ்என்பது இருவழி உ-எய்திச் சேரும்
வலிமிகும் மவ்வரின் வல்வுமவ் வாமென்ப'
தொ. வி. 29

பொருட்புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

146 உருபின் முடிபவை ஒக்கும்அப் பொருளினும்.

இஃது இன்னும் ஒருவாற்றான் உயிரும் ஒற்றும் ஆகிய இருதிறத்து ஈற்று வேற்றுமைப் பொருட் புணர்ச்சியை உருபு புணர்ச்சியோடு மாட்டெறிந்து உணர்த்துகின்றது.

(இ-ள்.:) மேல் உருபுபுணர்ச்சிக்கண் முடியும் முடிபு எல்லாம் ஈண்டு அவ்வுருபின் பொருளாகிய வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணும் ஒத்து முடியும் என்றவாறு.

வரலாறு: மேல் உருபு புணர்ச்சிக்கண்

'எல்லா ஈற்றும் சொல்லுங் காலை
வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை'
(இ. வி. 149)

என்றார். ஈண்டும் அவ்வாறே விளவின்கோடு மூங்காவின் கால் கிளியின்கால் தீயின்கடுமை எழுவின் குறுமை கொண் மூவின்குழாம் சேவின்கால் தினையின்கதிர் சோவின்புறம் கௌவின்கடுமை எனவும்,

உரிஞின் கடுமை வெண்ணின்கரை பொருநின்குறை திருமின்குறை பொன்னின்கூட்டம் வேயின்புறம் வேரின் புறம் கல்லின்கடுமை தெவ்வின்கடுமை யாழின்கோடு முள்ளின்கூர்மை எனவும்,

நாகின்கால் வரகின்கால் எனவும் இன்சாரியை பெற்றும், உருபுபுணர்ச்சிக்கண்

'பல்லவை நுதலிய அகர இறுபெயர்
அற்றொடு சிவணல் எச்சம் இன்றே' 150

என்றார், ஈண்டும் அவ்வாறே கரியவற்றுக்கோடு உள்ளவற்றுக்கோடு இல்லவற்றுக்கோடு பல்லவற்றுக்கோடு சில்லவற்றுக்கோடு உளவற்றுக்கோடு இலவற்றுக்கோடு பலவற்றுக் கோடு சிலவற்றுக்கோடு என அற்றுப் பெற்றும்,

இன்சாரியை அன்றி ஆ மா கோ ஊ என்பன னகரமும் பெற்றுமுடியும் என்றார், (151) ஈண்டும் அவ்வாறே ஆன்

கோடு மான்கோடு கோன்குளம் ஊன்குறை—சுவை என ணகரம் பெற்றும்,

'எல்லாம் என்பது இழிதிணை யாயின்
அற்றோடு உருயின் மேல்உம் உறுமே
அன்றேல் நம்இடை அடைந்து அற்று ஆகும்' 152

என்றார். ஈண்டும் அவ்வாறே எல்லாவற்றுக்கோடும் எல்லா நங்கையும் என எல்லாம் என்னும் விரவுப்பெயர் அஃறிணை ஆனகாலை இடையே அற்றுச்சாரியையும் பொருளின் பின்னே உம்மும், உயர்திணை ஆனகாலை இடையே நம்முச்சாரியையும் பொருளின் பின்னே உம்மும் பெற்றும்,

'எல்லாரும் எல்லிரும் என்பவற்று உம்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே' 153

என்றார். ஈண்டும் எல்லார் தங்கையும் எல்லீர் நுங்கையும் என எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரின் உம்மும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பெயரின் உம்மும் கெட்டு முறையே மும்முச் சாரியையும் நும்முச் சாரியையும் இடையே வரப் பொருளின் பின்னே உம்முச்சாரியை பெற்றும்;

'தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற' 154

என்றார். ஈண்டும் அவ்வாறே தன்கை தங்கை நங்கை என்கை நின்கை நுங்கை எனத் தன் தம் நம் என் நின் நும் எனவும். உரையிற் கோடலான் உன்கை உங்கை எனவும;

'வ—இறு சுட்டிற்கு அற்று உறல் வழியே' 155

என்றார், ஈண்டும் அவ்வாறே அவற்றுக்கோடு இவற்றுக் உவற்றுக்கோடு என அற்றுப் பெற்றும் குற்றொற்று இரட்டாதும்;

'யாதன் இறுதியும் சுட்டுமுதல் ஆகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம் கெடுதல் ஆவயினான.' 156

என்றார், ஈண்டும் அவ்வாறே யாதன்கோடு அதன்கோடு இதன்கோடு உதன்கோடு என முறையே அன்பெற்றும் ஆய்தம் கெட்டும்;

யா என்னும் ஆகாரஈற்று வினாப்பெயர் அற்றுப் பெறும் 157 உரை என்றார். ஈண்டும் அவ்வாறே யாவற்றுக்கோடு என அற்றுப்பெற்றும்;

அது இது உது என்னும் முற்றுகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் அன்பெறும் 157 உரை என்றார்.

ஈண்டும் அவ்வாறே அதன்கோடு இதன்கோடு உதன் கோடு என அன்பெற்றும்;

அவை இவை உவை என்னும் ஐகார ஈற்றுச்சுட்டுப் பெயர்கள் அற்றுப்பெற்று ஐகாரம் கெட்டும் கெடாதும் வரும் 157 உரை என்றார்.

ஈண்டும் அவ்வாறே அவையற்றுக்கோடு அவற்றுக் கோடு, இவையற்றுக்கோடு இவற்றுக்கோடு உவையற்றுக் கோடு, உவற்றுக்கோடு எனவும்;

யாவை என்னும் ஐகாரஈற்று வினாப்பெயர் ஐகாரம் கெட்டு அற்றுப்பெறும் 157 உரை என்றார்.

ஈண்டும் அவ்வாறே யாவற்றுக்கோடு எனவும்:

கரியவை நெடியவை என்றல் தொடக்கத்து ஐகார ஈற்றுப்பண்புகொள் பெயர்களும் அம்முடிபு எய்தும் என்றார்.

ஈண்டும் அவ்வாறே கரியவற்றுக்கோடு நெடியவற்றுக் கோடு எனவும்;

கரியேம் என்னும் மகரஈற்றுத் தன்மைப்பெயர் நம்மும் உம்மும் பெறும் 157 உரை என்றார்.

ஈண்டும் அவ்வாறே கரியேம்நங்கையும் எனவும்;

கரியார் கரியீர் என்னும் ரகரஈற்றுப் படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் முறையே தம்மும் உம்மும், நும்மும் உம்மும் பெறும் 157 உரை என்றார்.

ஈண்டும் அவ்வாறே கரியார்தங்கையும், கரியீர் நுங்கையும் எனவும்;

எல்லாரும் என்னும் படர்க்கைப்பெயர்,

'எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை'—குறள் 582 எனத் தம்முப்பெறாதும் வரும் 157 உரை என்றார்.

ஈண்டும் அவ்வாறே எல்லார் கையும் எனவும்.

எவன் என்னும் னகரஈற்று வினாப்பெயர் அன்கெட்டு அற்றுப்பெற்றும், அன்னோடு அவற்றின் அகரமும் கெட்டும் முடியும் 157 உரை என்றார்,

ஈண்டும் அவ்வாறே எவற்றுக்கோடு எற்றுக்கோடு எனவும்;

எகின் என்னும் னகரஈறு இன்னே அன்றி அத்தும் 157 உரை ஏழ் என்னும் ழகர ஈறும் குற்றுகரஈறும் (157 உரை) அன் அம்பெறும் என்றார் (157 உரை), ஈண்டும் அவ்வாறே எகினத்துக்கால் ஏழன்காயம் கரியதன்கோடு எனவும் முடியும். இன்னோரன்ன பிறவும் இவ்வாறே முடித்துக் கொள்க. 28

விளக்கம்

தொல்காப்பியனார் உருபியலில் உருபு புணர்ச்சிக்கு விதிகூறி உயிர்மயங்கியல் முதலிய மூன்றனுள்ளும்

பொருட் புணர்ச்சிக்கு விதி தனியே கூறுவார். சுருக்க நூலாதலின் இதன்கண் உருபுபுணர்ச்சியின் முடியே பொருட் புணர்ச்சிக்கு மாட்டேற்றான் கொள்ளப்படுகிறது. உரைச் செய்திகள் நச்சினார்க்கினியர் உரையைப் பெரும்பாலும் உட்கொண்டு சொல்லப்பட்டவை.

விளவின்கோடு	—	தொல். 219 நச்.
மூங்காவின் கால்	—	226 நச்.
கிளியின் கால்	—	246 நச்.

ஈகார ஈறு இன்பெறுதல் தொல்காப்பியனாருக்கு உடன்பாடன்று. (173)

எருவின் குறுமை	260 நச்.
கொண்மூவின் குழாம்	270 நச்.
சேவின்கால் சே என்ற மரத்தின் கால்	279 நச்.
சே என்பது பெற்றமாயின் இன்பெறுதல்	279

ஐகார ஈறு இன்பெறுதல் தொல்காப்பியனாருக்கு உடன்பாடன்று (173)

ஓகாரஈறு இன்பெறுதலே தொல்காப்பியனார் கருத்து (180) உருபு ஏற்புழி இன்பெறுதலை நச்சினார்க்கினியர் மிகையாற்கொண்டு, சோவினை—சோவினொடு — என்று எடுத்துக் காட்டுத் தந்துள்ளார். பொருட்புணர்ச்சி 202.

கௌவின் கடுமை	—	295 நச்.
உரிஞின் கடுமை	|	
உரிஞின் குறை	|	299 நச்.
வெண்ணின் கரை	—	306 ,,
பொருநின் குறை	—	299 ,,

திருமின்குறை—தொல்காப்பிய உரையில் எடுத்துக் காட்டப்படவில்லை, 'இன்இடை வருஉம் மொழியுமார்

உளவே' 186 என்ற உருபியல் நூற்பா உரையில் திருமினை திருமினொடு என்பன காட்டப்பட்டுள்ளன. (தொல். 202 நச். கொள்க) வேயின்புறம் (வேயின் தலை—405 நச்.

ரகரஈறு பொதுவாக இன்பெறுதலைத் தொல்காப்பிய னார் குறிப்பிடவில்லை. நச்சினார்க்கினியர் கருத்தும் அதுவே. ஆனால் உருபு ஏற்குங்கால் நாரினைஎன இன் பெறுதலைக் குறித்துள்ளார். (202 நச்.)

லகரளகர னகர ஈறுகளும் உருபுபுணர்ச்சிக்கண் இன் பெறுதலையே நச்சினார்க்கினியர் கல்லினை முள்ளினை பொன்னினை என்று எடுத்துக்காட்டியுள்ளார். (202 நச்.)

தெவ்வுக்கடுமை என்பதே தொல்காப்பியனாருக்கு உடன்பாடு. ஆனால் உருபு ஏற்கும்போது தெவ்வினை தெவ்வினொடு என இன்பெறுதலை 'ஏனைவகரம் இன் னொடு சிவணும்' (184) என்ற நூற்பாவால் தெரிவிக்கிறார். தெவ்வின் கடுமை 202 நச்.

யாழின்கோடு—405 நச்.

நாகின்கால் வரகின்கதிர்—412 நச்.

தொல்காப்பியனார் உருபுபுணர்ச்சிக்குச் சாரியை 173—182, 184-186, 189, 195. 198-200 ஆகிய நூற்பாக்களில் கூறியதுபோலப் பொருட்புணர்ச்சிக்குப் பெரும்பாலும் வெளிப்படையாகக் கூறாததனால் உரையாசிரியர்களே பொருட் புணர்ச்சிக்கண் வரும் சாரியைப்பேற்றில் பெரும் பாலானவற்றை இலேசாற் கொள்வாராயினர்.

'கரியவற்றுக்கோடு'	தொல். 220
'ஆன்கோடு மான்கோடு'	231
'ஊன்குறை'	269
'கோஒன்குணம்'	ஒன்சாரியை 294

'எல்லாவற்றுக்கோடும்' 322
'எல்லா நங்கையும்' 324
'எல்லார் தங்கையும்' 320
'எல்லீர் நுங்கையும்' 320
'தங்கை முதலியன' 320
'அவற்றுக்கோடு முதலியன' 378
'யாதன்கோடு அதன்கோடு முதலியன' 422

'யாஎன் வினாவும் ஆயியல் திரியாது' (175) என்பதனால் யாவற்றை முதலிய உருபுபுணர்ச்சியே தொல்காப்பியனார் கொண்டார்.

'சுட்டு முதல் உகரம்' (176) என்னும் நூற்பாவில் அதனை முதலிய உருபுபுணர்ச்சியே தொல்காப்பியனார் கொண்டார். பொருட்புணர்ச்சி தொல். 202 நச்

'அவையற்றுக்கோடு 281
'அவற்றுக்கோடு 387
'யாவை, யாவற்றை என்ற உருபுபுணர்ச்சி 178
'கரியவை, கரியவற்றை என்ற உருபுபுணர்ச்சி 178
'கரியவை, கரியவற்றை என்ற உருபு புணர்ச்சி நச். 178

கரியே நங்கையும்	உருபுபுணர்ச்சிமாத்திரம்
கரியார் தங்தகயும்,	191 நச்;
கரியீர் நுங்கையும்	பொருட்புணர்ச்சி 202 நச்.
எல்லார்க்கும் எல்லாம்	
நிகழ்பவை	
'எவற்றை 122 நச்.	உருபுபுணர்ச்சிக்கே
'எற்றை 192 நச்.	எடுத்துக்காட்டு.
'எவற்றுக்கோடு,	தொல்காப்பிய உரையில் 202
எற்றுக்கோடு	அடக்கப்படவில்லை நச்

'எகின் உருபுபுணர்ச்சியில் அத்தும் இன்னும் பெறுதல் 193 நச்.

'ஏழ் உருபுபுணர்ச்சியில் அன்சாரியை பெறுதல்' 194

'பொருட்புணர்ச்சிக்கண் அன்சாரியை பெறுதல்' 388

'கரியதன்கோடு குற்றுகரஈறு அன்சாரியை பெறுதல்'

உருபிற்குச்சென்ற சாரியை பொருட்குச் சேறலைப் பல வகை மிகைகளால் கொண்ட நச்சினார்க்கினியர் அங்ஙன மும் காட்ட இயலாதனவற்றை 202ஆம் நூற்பாவின் 'உரு பொடு சிவணி' என்ற மிகையால் கொள்ளுமாறு குறிப்பிட் டுள்ளார்.

ஒத்த நூற்பாக்கள்:

'புள்ளி இறுயும் உயிர் இறு கிளவியும்
சொல்லிய அல்ல ஏணைய எல்லாம்
தேருங் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையும் கடப்பாடு இலவே' தொல். 202
முழுதும் நன். 238

புணரியல்களுக்குப் புறனடை

147 இடைவரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉம் பொருந்திய ஆற்றிற்கு
இயையப் புணர்ப்பது யாவருக்கும் நெறியே.

இது, புணரியல் ஒத்துக்களுள் கூறிய முடிபு எய்தாதன வற்றிற்கும் முடிபு கூறாதனவற்றிற்கும் ஒருவாற்றான் முடிபு கூறுகின்றது.

(இ-ள்.:) இடைச்சொல்லினும் உரிச்சொல்லினும் வட சொல்லினும் மேலைப்புணரியல் ஒத்துக்களுள் கூறிய முடிபு பெறாதனவும் போலிமொழிகளும் மரூஉ மொழிகளும் இரு

வகை வழக்கினும் நடக்கும் முறைமை அறிந்து அதற்குப் பொருந்துமாறு புணர்த்தல் கற்றுவல்லோர் எல்லோர்க்கும் முறைமையாம் என்றவாறு.

வரலாறு:- மடவ மன்ற தடவுநிலைக்கொன்றை (குறுந். 66—1) எனநிலைமொழி ஈற்று இடைச்சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாயும்,

ஆன்கன்று மான்கன்று ஊன்குறை. வண்டில்கால் தேரின்செலவு யாழின்கோடு என னகரஈற்று இடைச்சொற் கள் திரியாது இயல்பாயும்,

கமஞ்சூல் தடஞ்செவி தடந்தோள் என ஆகரஈற்று உரிச்சொல் மெல்லெழுத்து மிக்கும்,

மழகளிறு உறுகால் என இயல்பாயும்,

அளிகுலம் வயிரகடகம் தனதடம் என வடசொற்கள் இயல்பாயும் முடிந்தன.

இல்முன்—முன்றில், படைமுன்—முன்படை, கண்மீ—மீகண், பொதுவில்—பொதியில், வேட்கைநீர்—வேணீர் வேட்கை அவா—வேணவா என்றாற்போலும் போலிமொழி களும் அருமருந்தன்னான்—அருமருத்தான், கிழங்கன்ன பழஞ்சோறு—கிழங்கம்பழஞ்சோறு, குணக்குள்ளது-குணாது தெற்குள்ளது—தெனாது, குடகுள்ளது—குடாது, வடக்கு உள்ளது—வடாது, சோழன்நாடு—சோணாடு, பாண்டியன் நாடு, பாண்டிநாடு மலையமான் நாடு —மலாடு, தஞ்சாவூர்-தஞ்சை, பனையூர்—பனசை, சேந்தமங்கலம்—சேந்தை ஆற்றூர்—ஆறை கப்பி, தந்தை—கப்பிந்தை, சென்னி தந்தை, சாத்தன் தந்தை—சாத்தந்தை, ஆதன்தந்தை—ஆந்தை, பூதன்தந்தை—பூந்தை, அவர்யாவர்—அவர் யார் அதுயாது—அதுயாவது என்றால்போலும் மருஉமொழிக ளும்,

கண் விண்ண விணைத்தது—விண்விணைத்தது
ஆடை வெள்ள விளர்த்தது—வெள்விளர்த்தது
கடல் ஒல்ல ஒலித்தது—ஒல்ஒலித்தது என முறையே

'உயிரும் புள்ளியும் இறுதிஆகி
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொல் கிளவியும்'
தொல். 482

கரும்பார்ப்பான்-கரும்பார்ப்பினி-கரும்பார்ப்பார்-
கருங்குதிரை—கருங்குதிரைகள்—என
'உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்'
தொல். 482

அடுகனிறு—கொல்யானை—எனச்
'செய்யும் செய்த என்னும் கிளவியின்
மெய்ஒருங்கு இயலும் தொழில்தொகு மொழியும்'
தொல். 482

அவ்வனைத்தும்—அன்றி அனைத்தும் எனவும்,
இவ்வனந்தல்—இந்த அனந்தல் எனவும்,

இன்னோரன்ன பிறவும் ஆனமரூஉ மொழிகளும் தமக்கு ஏற்ற பெற்றி முடிந்தன. பிறவும் இவ்வாறே மேலைப் புணரியல் ஒத்துக்களில் கூறிய முடிபு எய்தாதன வற்றிற்கும் முடிபு கூறாதனவற்றிற்கும் இயைந்தவாறு இதுவே ஒத்தாக முடித்துக்கொள்க.

காரா, பேரா, பாசிழை, பாசடை, பைங்கண், பைந்தார் சேதா என்றால்போலும் பண்புத்தொகை முடிபு வேறுபாடுக ளும் மேற்கூறியனபோல உலகத்து மருவி நடந்த வழக்கி னது பகுதியைத் தமக்கு இலக்கணமாக உடையனவேயாம் என்று உணர்க.

நான்காவது—மெய்யீற்றுப் புணரியல்
முற்றிற்று

மன்ற தடவு—இடைச்சொல் வன்கணம் வர இயல்பாயிற்று.

ஆன்—மான்—ஊன்—ணகரச்சாரியை

வண்டின் கால் முதலியவற்றில் இன்சாரியை

தட, கம என்பன உரிச்சொல்

அளிகுலம் முதலியவற்றில் நிலைமொழி வருமொழி என்ற இரண்டும் வடசொற்கள்.

'முன்என் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்என் கிளவிமிசை றகரம் ஒற்றல்
தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே' தொல். 355

'மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்' 250

'செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐஎன் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும்.' 288

இவை மூன்றில், மேல் 'மீ' என மருவுதல், வேணவா என்பனவற்றிற்கு முறையே விதியாகும்.

'வேணீர் உண்ட குடையோ ரன்னர்.'

பாலைக்கலி 22-9

வேணவா—வேட்கை+அவா. 'வேட்கை—ஒரு பொருளின்மேல் தோன்றும் பற்றுள்ளம்; அவா—அதனை மேல் மேல் பெறல்வேண்டும் என்ற ஆசை. வேணவா வேட்கையால் உண்டாகிய அவா என விரியும்' (தொல். 288 நச்.)

இங்குக் காட்டிய எடுத்துக்காட்டுக்கள் பெரும்பாலும் நன்னூல் 238ஆம் நூற்பாவில் மயிலைநாதர் காட்டியனவே

சாத்தன் + தந்தை—சாத்தந்தை

'இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்ஒழித்து அன்கெடும் அவ்வியற் பெயரே.'

என்பது விதி. தொல். 347

ஆதன் + தந்தை—ஆந்தை;

'ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயர்ஒற்று அகரம் துவரக் கெடுமே.' தொல். 348

என்பது விதி.

யாவர்—யார்; யாது—யாவது;

'பலர்அறி சொல்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை
ஒன்றுஅறி சொல்முன் யாதுஎன் வினாவிடை
ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்
மருவின் பாத்தியில் திரியுமன் பயின்றே'

என்பது விதி. தொல், 172

விண்—வெள்—ஒல் என்பன உரிச்சொல்; இவை விண்ண வெள்ள—ஒல்ல என உயிரீறாயும், விண்—வெள்—ஒல் எனப் புள்ளியீறாயும் நின்றலின், ஒன்றன்கண் அடக்க லாகாமையின் தன்மை குறைந்து 'நெறிப்பட வாராக் குறைச்சொல் கிளவி' ஆயின.

ஏனைப் பண்புத் தொகையும் வினைத்தொகையும் பிரித்துப் புணர்க்கும்வழித் தொகைப்பொருள் சிதைதலின் இவற்றைப் பிரித்துப் புணர்க்காது நின்றாங்கே கொள்க என்பது.

அவ்வனைத்தும் என்பது 'அன்றி அனைத்தும்' (தொல். 210) எனவும், இவ்வனந்தல் என்பது இந்த அனந்தல் எனவும் மருவி வருவனவற்றையும் ஈண்டுக் கொண்டார்.

பண்புத்தொகை முடிபு வேறுபாடும் மருவிவந்த வழக்கையே அடியொற்றியது என்பதை இறுதிப்பத்தியில் விளக்குகிறார்.

ஒத்த நூற்பாக்கள்:

'உணரக்கூறிய புணரியல் மருங்கின்
கண்டுசெயற்கு உரியவை கண்ணினர் கொளலே.'

தொல். 405

முழுதும் — நன். 239

'பண்ணிய சந்திபகரா தனவும் பகர்ந்தவற்றால்
கண்ணி உரைக்க மதியால்' — வீ, 28

'... ... ... சந்திகளின்
அல்லாதனவும் அடக்கும்வாய் கண்டு அடக்க
எல்லாம் முடியும் இனிது' — நே. 24

நான்காவது-மெய்யீற்றுப் புணரியல் முற்றிற்று.

ஐந்தாவது-உருபு புணரியல்

உருபு புணரும் முறைமை

148 உருபினும் பொருள் முடிபு ஒக்கும்மன் பயின்றே.

என்பது சூத்திரம். பதங்களொடு உருபு புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவ்வோத்து உருபுபுணரியல் என்னும் பெயர்த்து. மேல்பதத்தொடு பதம் புணருமாறு உணர்த்தி ஈண்டு அதனொடு உருபு புணருமாறு உணர்த்தலின் மேல் ஓத்தினொடு இயைபு உடைத்து ஆயிற்று. இதனுள் இத் தலைச் சூத்திரம் உருபு புணரும் முறைமை மாட்டெறிந்து உணர்த்துகின்றது.

(இ-ள்.:) உயிரும் ஒற்றும் முதலாகிய வேற்றுமை உருபுகள் மேல்கூறியவாற்றான் உயர்திணைப்பெயர் முதலிய எல்லாப்பெயர்க்கும் பின்னாக வந்து புணரும் புணர்ச்சிக்கண்ணும் முற்கூறிப்போந்த வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபினை ஒத்துப்பெரும்பாலும் முடியும் என்றவாறு.

வரலாறு: நம்பியை-நம்பியொடு-நம்பியின்-நம்பியது எனவும்,

கிளியை-கிளியொடு-கிளியின்-கிளியது எனவும்

சாத்தியை—சாத்தியொடு — சாத்தியின்—சாத்தியது— எனவும்

நம்பிக்கு— நம்பிகண் எனவும்

கிளிக்கு—கிளிகண் எனவும்

சாத்திக்கு—சாத்திகண் எனவும்

உயிரீற்றுப் பெயர்களொடு உயிர்முதல் உருபுகளும் ஒற்றுமுதல் உருபுகளும் மேலை வேற்றுமைப் பொருட் புணர்ச்சியை ஒத்து உடம்படுமெய் பெற்றும் உயிர்ஏறியும் வலலெழுத்துமிக்கும் இயல்பாயும் முடிந்தவாறு காண்க.

உயர்திணைப் பெயர் முன்னும் விரவுப்பெயர் முன்னும் மிகுதி முறையே 'சிலவிகாரமாம் உயர்திணை' (71) என்றதனானும் 'பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள்' (71) என்ற முறையில் கூற்றானும் கொள்க.

அவனை — அவனொடு— அவனின் — அவனது எனவும்

பொன்னை — பொன்னொடு— பொன்னின் — பொன்னது எனவும்

அதற்கு — அவன்கண் எனவும்

பொற்கு — பொன்கண் எனவும்

சாத்தற்கு — சாத்தன்கண் எனவும்

ஒற்றீற்றுப் பெயர்களோடு உயிர்முதல் உருபுகளும் ஒற்றுமுதல் உருபுகளும் வந்து மேலே வேற்றுமைப் பொருட் புணர்ச்சியின்னை ஒத்து உயிர்ஏறியும், தனிக்குறில் முன்ஒற்று இரட்டித்தும், திரிந்தும், இயல்பாயும் முடிந்தவாறு காண்க. உயர்திணைப்பெயர் முன்னும் விரவுப் பெயர் முன்னும் னகரம் திரிதற்கு முன் உரைத்தாங்கு உரைக்க, பிறவும் இவ்வாறே உய்த்து உணர்க.

பொருட் புணர்ச்சிக்கண் புளியங்கோடு அரையங்கோடு என்றாற்போல உருபுபுணர்ச்சிக்கண்ணும் அம்முப்பெறுவன பெறாது, புளிக்கு — புளிக்கண் — அரைக்கு — அரைக்கண் என முடிவன 'பெரும்பாலும் ஒக்கும்' எனவே 'சிறுபான்மை ஒவ்வாதனவும் உள' என்று முடித்துக்கொள்க.

இங்ஙனம் புணர்ந்த வேற்றுமை உருபுகளை நிலை மொழியாக நிறுத்தி ஈண்டே வருமொழியொடு புணர்ப்பாரும் உளர்.

விளவினை விளவினது என்புழிச் சாரியையும் உருபும் நிறுத்த சொல்லாயே நிற்கும் எனக்கோடலின்,

விளவினைக் குறைத்தான், மலையொடு பொருத மால் யானை, மத்திசையாறபுடைத்தான், சாத்தற்குக்கொடுத்தான் காக்கையிற்கரிது களம்பழம், காக்கையது பலி—இத்தொடக் கத்தன எல்லாம் மேலைப்புணரியல் ஓத்துக்களுள்ளே நிலை மொழியாக நிறுத்தி வருமொழியொடு புணர்க்கப்பட்டு இவ்வாறு முடியும்அன்றே? அங்ஙனம் முடிவனவற்றை நிலைமொழியாக நிறுத்தி ஈண்டு வருமொழியொடு புணர்த் தல் கூறியது கூறலாம் என மறுக்க.

விளக்கம்

வேற்றுமை உருபுகளைக் கிடக்கை முறையிற் கூறாது உயிர்முதல் மெய்முதல் எனப் பகுத்து ஐ-ஒடு-இன்—அது என்பனவற்றைப் முன்னர்ப் புணர்த்தும் கு-கண் என்பன வற்றைப் பின்னர்ப் புணர்த்தும் எடுத்துக்காட்டுக்கள் தந்துள்ளார்.

எடுத்துக்காட்டுக்கள் உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் விரவுப்பெயர் என்ற முறையைப் பின்பற்றியுள்ளன.

உயர்திணைப் பெயரொடு உருபுகள் புணரும்வழி ஏற் படும் விகாரம் 'சில விகாரமாம் உயர்திணை' (இ. வி. 71) என்பதனானும், பொதுப்பெயராகிய விரவுப்பெயரொடு உரு புகள் புணரும்வழி ஏற்படும் விகாரம் பொதுப்பெயர் உயர் திணைப் பெயர்கள் ஈற்றுமெய்' (71) என்பதனாலும் கொள் ளப்பட்டுள்ளன,

முதலில் உயிர் ஈற்றுச்சொற்களும் அடுத்து ஒற்றீற்றுச் சொற்களும் உயிர்முதல் உருபும் ஒற்றுமுதல் உருபும் ஏற்கு மாறு காட்டப்பட்டுள்ளது.

'புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை' (தொல். 244) என்பதனால் புளி பொருட்புணர்ச்சிக்கண் அம்முச்சாரியை பெற்றது.

'பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்

நினையுங் காலை அம்மொடு சிவணும்' (தொல். 283)

என்பதனால் பொருட்புணர்ச்சிக்கண் அரை அம்புப் பெற்றது. இச்சாரியையை உருபுபுணர்ச்சி பெறாமல் புளிக்கு அரைக்கு என முடிந்தது.

'இவ்வேற்றுமை உருபுகளை நிலைமொழியாக நிறுத்தி ஈண்டே வருமொழிகளொடு புணர்க்க' என்றார் மயிலைநாதர். (நன். 241) உயிரீற்றுப்புணரியலுள்ளும் மெய்யீற்றுப் புணரியலுள்ளும் உருபுஏற்ற சொற்கள் நிலைமொழிகளாக நிறுத்தப்பட்டு அவை வருமொழிகளோடு புணரும் புணர்ச்சி கூறப்படுகின்றமையின், அவற்றை மீண்டும் ஈண்டுக்காட்டல் கூறியது கூறலாம் என்பார் இவர்.

'எழுவாயும் விளியும் ஒழித்துத் தமக்கு என உருபு முதல் ஈறும் உடைய ஐ முதலிய ஆறு உருபிற்கும் இவ்விதி கூறுகின்றார் என்பதூஉம், இவ்வுருபுகளின் முதல் ஈறுகளுக்கு மாட்டேடற்றான் இவ்விதி கூறவே, உருபுகளின் இருமருங்கும் புணரும் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் படும் பாகுபாட்டிற்கு விதி போன இரண்டு இயலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கு என விதித்தவற்றுள் அடங்கும் ஆதலின் அவையும் இம்மாட்டேடற்றான் அமைத்தார் அல்லர் என்பதூஉம், அங்ஙனம் அடங்குதற்கு 'மூன்றுருபு' (நன்' 179) என்னும் சூத்திரமே கரி என்பதூஉம், 'தான் தாம் நாம் முதல் குறுகும்' (நன். 247) என்றல் தொடக்கத்து உருபொடு புணரும் நிலைமொழிகளின் விகாரங்கள் தொகைநிலைக்கண்ணும் நாற்கணத்தின் முன்னும் வருதலின் அவ்விகாரம் எழுத்துப்புணர்ச்சியான் வந்தன அல்ல, வேற்றுமைப் பொருள்நோக்கத்தானே வந்தன, அதனால் இவ்வியலுள் கூறப்படும் என்பதூஉம்.........' என்பது நன். 242 விருத்தியுரை.

ஒத்த நூற்பா:

'ஒற்றுயிர் முதல்ஈற்று உருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே'
நன். 242

வேற்றுமையுருபுகட்கு இடையேவரும் சாரியை

149 எல்லா ஈற்றும் சொல்லுங் காலை
வேற்றுமை உருபிற்கு இன்னேசாரியை

இனி, மாட்டேற்றான் அன்றி விதந்து ஓதுவான் புகுந்தவற்றுள், இது பொதுவகையான் வேற்றுமை உருபுகட்கு வரும் சாரியை இது என்கின்றது.

இ-ள். உயிரும் ஒற்றும் ஆகிய எல்லா ஈற்றுப் பெயர்களின் முன்னும் வேற்றுமை உருபுகட்கு இடையேவரும் சாரியை இன்சாரியையாம். சொல்லும் காலத்து என்றவாறு.

வரலாறு: விள—பலா—கிளி—தீ—கடு—பூ—சே—தினை—சோ—கௌ எனவும், உரிஞ்—மண்—பொருந்—திரும்—பொன் - வேய்—நார்—கல்—தெவ்—யாழ்— முள்—எனவும். நாகு—வரகு எனவும் நிறுத்தி இன் உருபு ஒழித்து ஏனை ஐந்து உருபும் வருவித்து இன்சாரியை கொடுத்து விளவினை—விளவினொடு என்றாற்போலப் பிறவற்றொடும் ஒட்டிக்காண்க. பிறவும் அன்ன. 2

விளக்கம்

'இன்என வரூஉம் வேற்றுமை உருபிற்கு
இன்என் சாரியை இன்மை வேண்டும்' (தொல். 131)

என்பதனால் இன் உருபை விடுத்து, எனை உருபுகளையே கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியனார்

அ—ஆ—உ—ஊ—ஏ—ஔ என்னும் உயிரீறுகளும் ஞ—ந—ம—ன என்னும் புள்ளியீறுகளும் குற்றியலுகரமும் இன்சாரியை பெறும் என்றார். இவர் எல்லா ஈறுகளுக்கும் கொண்டார். அவற்றுள் எகரம் அளபெடைக்கண் அன்றி ஈறாகாமையின், அதனை விடுத்தார் என்று அறிக.

ஒத்த நூற்பாக்கள்:

'அஆ உஊ ஏஔ என்னும்
அப்பால் ஆறன் நிறைமொழி முன்னர்
வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை.'

தொல். 173

'ஞநஎன் புள்ளிக்கு இன்னே சாரியை.' 182

'குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்என் சாரியை.' 195

'அழனே புழனே ஆயிரு மொழிமேல்
அத்தும் இன்னும் உறழத் தோன்றம்
ஒத்தது என்ப உணரு மோரே.' 193

'அஆ உஊ ஏஔ இறுபெயர்
முன்வரும் உருபிற்கு இன்னே சாரியை.'

மு. வீ, பு. 49

'குற்றிய லுகரக்கு இன்னே சாரியை.' 45

'ஞநஇறு மொழிஇன் னொடுநடை பெறுமே.' 56

'இன்னொடு வருதலும் அதன்இயல் பாகும்.' 60

'எல்லா எண்களும் இன்னொடு சிவணும்.' 68

அற்றுச்சாரியைப்பேறு

150 பல்லவை நுதலிய அகர இறுபெயர்
அற்றொடு சிவணல் எச்சம் இன்றே.

இஃது இகர ஈற்றுள் ஒரு சாரனவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ-ள்.: பன்மைப்பொருளினைக் கருதின பெயர்களின் இறுதிநின்ற அகரம் அற்றுச்சாரியையோடு பொருந்துதலை ஒழிதல் இல்லை என்றவாறு.

வரலாறு: கரிய—உள்ள—இல்ல—பல்ல—சில்ல-உள இல—பல—சில என நிறுத்தி, உருபு வருவித்து அற்றுக் கொடுத்துக் கரியவற்றை—கரியவற்றொடு—கரியவற்றுக்கு—கரியவற்றின்—கரியவற்றது—கரியவற்றுக்கண் — என்றாற் போலப் பிறவற்றொடும் ஒட்டுக.

விளக்கம்

எய்தியது விலக்கல்—சென்ற நூற்பாவான் எய்திய இன்சாரியையை விலக்கல்.

பிறிதுவிதி வகுத்தல்—அற்றுச்சாரியை பெறும் என்பது. 'எச்சமின்று' என்பதனால் பல்லவை நுதலிய வற்றின்கண் மூன்றாம்உருபு அற்றுப்பெற்றே முடியும் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. (தொல். 174)

தொல்காப்பியனார் காலத்து வற்றுச்சாரியை பிற்காலத்தில் அற்றுச்சாரியை ஆதல் 'மரபு நிலைதிரியா மாட்சியது' என்க. (சூ. வி. பக். 8)

ஒத்த நூற்பாக்கள்:

'பல்லவை நுதலிய அகர இறுபெயர்
வற்றொடு சிவணல் எச்சம் இன்றே. தொல். 174
'அகர இறுபெயர் அற்றொடு சிவணும்' மு. வீ. பு. 50

னகரச்சாரியைப்பேறு

151 ஆமா கோ—ன அணையவும் பெறுமே.

இஃது ஆகார ஈற்றுள் சிலவற்றிற்கும் ஓகார ஈற்றுள் ஒன்றற்கும் எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுகின்றது.

இ-ள்.: ஆவும் மாவும் கோவும் இன்னே அன்றி னகரச்சாரியை பெற்று முடியவும் பெறும் என்றவாறு.

ஆவுடனே ஓதியமையின் மா என்றது விலங்குமா என்றே கொள்க. ஒன்றென முடித்தலான் ஊ என்பதற்கும் னகரம் கொடுக்க.

வரலாறு: ஆனை ஆனொடு மானை மானொடு கோனை கோனொடு ஊனை ஊனொடு எனப் பிறவற்றோடும் ஒட்டுக.

உம்மையான், ஆவினை—மாவினை—கோவினை—எனப்பொதுவிதி பெறுதலும், உரையிற் கோடலான் ஊனை ஊனினை என னகரமும் இன்னும் பெறுதலும் கொள்க.

'ஒன்றாது நின்ற, கோவினை அடர்க்க வந்து' (சிந். 366) எனச்செய்யுளகத்தும் காண்க.

'ஆனநெய் தெளித்து நானம் நீவி' என் ஆன் அகரம் பெறுதல் புறநடையால் கொள்க.

விளக்கம்

எய்தியது—இன்சாரியை

சிறப்புவிதி—னகரச்சாரியை

மா என்னும பலபொருள் ஒருசொல் ஈண்டு இனம் பற்றி விலங்கினை உணர்த்தி நின்றது.

'கோவினை அடக்கவந்து' 180 நச். உரை 180

தொல்காப்பியனார் ஓகார இறுதி ஒன்சாரியைபெறும் என்றார். கோஒன் என்பதன்கண் ஒகரத்தை எழுத்துப் பேறளபெடையாகக் கொண்டு பிற்காலத்தார் கோ—னகரச் சாரியை பெறும் என்றனர்.

ஒத்த நூற்பாக்கள்:

'னகரம் ஒற்றும் ஆவும் மாவும்' தொல். 231
'ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும்' 264
'ஆன் ஒற்று அகரமொடு நிலைஇடன் உடைத்தே' 232
முழுதும் நன். 248
'ஆமா னகரமெய் அடையப் பெறுமே. மு. வீ. பு. 96
'ஆன்ஒற்று அகரமொடு நிலையிடன் உடைய' 97
'ஊ—னக ரத்தொடு ஒழுகும் என்ப.' 119

'எல்லாம்' என்பது சாரியை பெறுதல்

152 எல்லாம் என்பது இழிதிணை ஆயின்
அற்றோடு உருபின் மேல்உம் உறுமே.
அன்றேல் நம்இடை அடைந்துஅற்று ஆகும்.

இது மகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப்பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்.: எல்லாம் என்னும் விரவுப்பெயர் அஃறிணைப் பெயராயின், இடையே அற்றுச்சாரியையும் உருபின் பின்னே உம்முச்சாரியையும் பெற்று முடியும், உயர்திணைப் பெயராயின் இடையே நம்முச்சாரியையும் உருபின்பின்னே முன்போல உம்முச்சாரியையும் பெற்றுமுடியும் என்றவாறு.

வரலாறு; எல்லாவற்றையும் எல்லாவற்றொடும் எனவும், எல்லாநம்மையும் எல்லாநம்மொடும் எனவும் வரும்.

பிறவற்றொடும் ஒட்டுக. உயர்திணை ஆயவழி அவற்றிற்கு நாம் எல்லோரையும், நாம்எல்லாரொடும் எனப்பொருள் உரைக்க.

விளக்கம்

எய்தியது—இன்சாரியை.
பிறிதுவிதி—அஃறிணைக்கண் அற்றுச்சாரியையும்
உயர்திணைக்கண் நம்முச்சாரியையும்
பெறும் என்பது.

இவ்வற்றுச் சாரியையும் நம்முச்சாரியையும் 'எல்லாம்' என்பதன் பொதுமையை நீக்கி அதனை ஒரே திணைக்கு உரிமை ஆக்குவதால், இவை 'புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவ' வந்தனவாதல் அறிக.

'எல்லாம் என்பது இழிதிணையாய் இனற்றொடு' எனப் பிரித்து, இன்சாரியையும் அற்றுச்சாரியையும் பெறும் எனவும் பொருள்கொண்டு, எல்லாவற்றினையும் முதலிய எடுத்துக்காட்டுக்கள் நன்னூல் விருத்தியுரையுள் காட்டப் பட்டுள்ளன. (நன். 245)

'இச்சொற்கு இருதிணைக்கண்ணும் அற்றுச்சாரியையும் நம்முச்சாரியையும் வேண்டியே வருதல் தோன்ற இன்றி மையா முற்றும்மையோடு உடன்நிகழ்ச்சிப் பொருளவாய் 'அற்றோடு' என்றும் 'அடைந்து அற்றாகும்' என்றும் கூறினார்" எனவும், 'தம்—நம்—நும் என்பன மூவிடப் பெயர்களை முறையே சார்ந்து சிறப்புப்பொருள் தாராமை யின் இம்மூன்றும் சாரியை இடைச்சொல்லேயாம்' எனவும் நன்னூல் விருத்தி குறிப்பிடுகிறது. (நன். 245)

ஒத்த நூற்பாக்கள்:

'எல்லாம் என்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதியான' தொல். 189

'உயர்திணை யாயின் நம்இடை வருமே' 190

முழுதும் நன். 245

'அற்றுஎல் லாம்பெறும் ஆயிடை உம்மை
இறுதியொடு சிவணும் என்மனார் புலவர்.'
மு. வீ, பு. 94

'உயர்திணை யாயின் நம்இடைத் தோன்றும்.'
மு. வீ. பு. 65

எல்லாரும், எல்லீரும்—சாரியை பெறுதல்

153 எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே.

இது மகர ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்.: எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும், எல்லீரும் என்னும் முன்னிலைப் பெயரும் ஆகிய இவற்றின் ஈற்று நின்ற உம்மையைப் போக்கி முறையே தம்முச் சாரியையும் நும்முச்சாரியையும் இடையே வர உருபின் பின்னே உம்முச்சாரியை வந்து புணரும் என்றவாறு.

வரலாறு: எல்லார் தம்மையும்—எல்லார் தம்மொடும் எனவும், எல்லீர் நும்மையும்—எல்லீர் நும்மொடும் எனவும் வரும். பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. 6

விளக்கம்

எய்தியது — இன்சாரியை

பிறிதுவிதி — எல்லார் என்பது தம்முச்சாரியை பெறும், எல்லீர் என்பது நும்முச் சாரியை பெறும் என்பது.

ஒத்த நூற்பாக்கள்:

'எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமும் கெடும்என மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதியான
தம்இடை வருஉம் படர்க்கை மேன
நும்இடை வருஉம் முன்னிலை மொழிக்கே.'
முழுதும் —நன். 246, மு. வீ. பு. 66

தொடக்கம் குறுகும் பெயர்கள்

154 தான் தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீ நீர் என்எம் நின் நும் ஆம்பிற
குவ்வின் அ-வரும் நான்குஆறு இரட்டல.

இது னகர மகர ரகர ஈறுகட்கும் ஈகார ஈற்றிற்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ-ள்.: தான்—தாம்—நாம் என்னும் மூன்று பெயரும் முறையே தன் என்றும், தம் என்றும், நம் என்றும் நெடு முதல் குறுகும்; யான்—யாம்—நீ—நீர் என்னும் நான்கு பெயரும் முறையே என் என்றும் எம் என்றும் நின் என்றும் நும் என்றும் திரியும்; அங்ஙனம் திரிந்தவழி நான்கன் உருபுபுணரும் இடத்து இடையே அகரச்சாரியை வரும். இம்மொழிகளொடு நான்கன் உருபும் ஆறன் உருபும் புணரும் இடத்துக் குற்றொற்று இரட்டா என்றவாறு.

இவ்வெழுத்து இவ்வெழுத்தாய்த் திரியும் என்னாது யான்—யாம்—நீ—நீர் என்பன முறையே என்—எம்—நின் நும்—ஆம் என்றாரேனும்

'ஆ எ — ஆகும் யாம்என் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்' 188

என்பன முதலாக ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாற்றானும், நும் என்பதற்கு ஏற்றபெற்றியானும் அவற்றின் திரிபினை வேறுவேறு பகுத்துக்காண்க.

வரலாறு:

தன்னை — தன்னொடு — தனக்கு — தனது — எனவும்

தம்மை — தம்மொடு — தமக்கு — தமது — எனவும்

நம்மை — நம்மொடு — நமக்கு — நமது — எனவும்

என்னை — என்னொடு — எனக்கு — எனது — எனவும்

எம்மை — எம்மொடு — எமக்கு — எமது — எனவும்

நின்னை — நின்னொடு — நினக்கு — நினது — எனவும்

நும்மை — நும்மொடு - நுமக்கு — நுமது — எனவும் வரும்.

பிறவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. 'பிற' என்றதனானே நீ என்பது உன் என்றும், நீர் என்பது உம்என்றும் திரிதல் காண்க. 7

விளக்கம்

எய்தியது — இன்சாரியைப்பேறு

பிறிதுவிதி — நெடுமுதல் குறுகுதல் முதலியன.

நும் என்பதனை இயற்கைச் சொல்லாகக்கொண்டு நீஇர் என்பதனை அதன் திரிபு என்பர் தொல்காப்பியனார் (326) நீஇர் என்பதன் இகரத்தை எழுத்துப்பேறளபெடையாகக் கொண்டு பிற்காலத்தார் அதனை நீர் என்றே திரித்து வழங்குவாராயினர்.

நான்கன் உருபும் ஆறன்உருபும் தன்னக்கு, தன்னது என்றாற்போல இரட்டா என்றார்.

ஒத்த நூற்பாக்கள்:

'தாம்நாம் என்னும் மகர இறுதியும்
யாம்என் இறுதியும் அதனோ ரன்ன
ஆ—எ ஆகும் யாம்என் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்.
ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்'. தொல், 188

'தான்யான் என்னும் ஆயீர் இறுதியும்
மேல்முப் பெயரொடும் வேறுபாடு இலவே.' 192

'ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான' 161

'நும்என் இறுதி இயற்கை ஆகும்' 187

முழுதும் நன். 247

'நும்அத்து இன்னையும் நோக்காது இயலும்'
மு. வி. பு. 61

'தாமும் நாமும் நெடுமுதல் குறுகும்.' 62

'யாம்எம் ஆகும்ஆ ரஈயுங் கரலே.' 63

'ஆறும் நான்கும் இரட்டுதல் இலவே.' 40

தான் என்ற தன்மை ஒருமைப்பெயர் எழுவாய் வேற்றுமையிலேயே வரும். பிறவேற்றுமையை ஏலாது ஆதலின் அதுபற்றிய செய்தி குறிப்பிடப்படவில்லை என்பது அறிக.

வகர ஈற்றுச் சுட்டுப்பெயர்க்குச் சிறப்புவிதி

155 வ-இறு சுட்டிற்கு அற்றுஉறல் வழியே.

இது வகர ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்:. வகரஈற்று மூவகைச் சுட்டுப்பெயர்க்கும் அற்றுச்சாரியை பெறுதல் நெறி என்றவாறு.

வரலாறு: அவற்றை — அவற்றொடு — இவற்றை — இவற்றொடு—உவற்றை—உவற்றொடு எனவரும். பிறவற்றொடும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

'வழி' என்றதனால் குற்றொற்று இரட்டாமை கொள்க. 8

விளக்கம்

எய்தியது — இன்சாரியைப்பேறு

பிறிதுவிதி — அற்றுச்சாரியைப்பேறு

வ-இறுசுட்டு — அவ், இவ், உவ் என்ற மூன்றும்

இவை தனிக்குறில் முன்ஒற்று ஆதலின் பொதுவிதிப்படி அற்றுச்சாரியையொடு புணருமிடத்து இரட்டுதல் வேண்டும்; ஆனால் இந்நூற்பாவில் உள்ள 'வழியே' என்ற மிகையான் இரட்டா என்றார்.

அவை இவை உவை என்ற அஃறிணைப்பன்மைப் பெயர்கள் வேறு, அவ் இவ் உவ் என்ற பன்மைப்பெயர்கள் வேறு என்பதனை,

'அவைஇவைஉவை எனவரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்'

(தொல். சொல். 169)

என்பதனான் அறிக.

ஒத்த நூற்பாக்கள்:

'சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி இயல்திரிபு இன்றே.' தொல். 183
முழுதும் நன். 250
'சுட்டுமுதல் வகரம் அற்றொடு சிவணும்.'
மு. வீ. பு. 57

குற்றுகர ஈற்றுப் பெயர்கள் சிலவற்றிற்குச் சிறப்புவிதி 156-157 அன்சாரியைப்பேறு

156 யாதென் இறுதியும் சுட்டுமுதல ஆகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம் கெடுதல் ஆவயி னான.

இது குற்றுகர ஈற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ-ள்.: யாது எனவருஉம் குற்றுகரஈறும், சுட்டினை முதலாக உடைய ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகரஈறும் அன்சாரியையொடு பொருந்தும்; அவ்விடத்து இடைநின்ற ஆய்தம் கெடும் என்றவாறு.

வரலாறு: யாதனை யாதனொடு எனவும், அதனை அதனொடு—இதனை இதனொடு—உதனை உதனொடு எனவும் வரும். பிறவற்றொடும் இவ்வாறே ஒட்டுக. 9

விளக்கம்

எய்தியது — இன்சாரியைப்பேறு
பிறிதுவிதி — அன்சாரியைப்பேறு

ஈற்றயல் எழுத்து ஈறு என்றே குறிப்பிடும் தொல்காப்பியனார் மதத்தை உட்கொண்டு, ஈற்றயலெழுத்தாகிய ஆய்தம் பெற்ற சொல்லை 'ஆய்த இறுதி' என்றார்.

அது இது உது என்ற சுட்டுப்பெயர்களும் வேறு, அஃது இஃது உஃது என்ற சுட்டுப்பெயர்களும் வேறு என்பதை.

'அது இது உது என வரூஉம் பெயரும்
அவை முதல் ஆகிய ஆய்தப் பெயரும்'
தொல். சொல். 169

என்பதனான் அறிக.

அஃது முதலியன ஆய்தம் கெட்டு அன்பெறும் எனவே, இயற்கையாகிய அது என்பதும் அன்பெறும் என்பது போதரும். (இ. வி. 157 உரை) எனவே, அது முதலியன அதனை—அதனொடு எனச் சாரியை பெற்று உருபொடு புணரும் என்பதாம். அதனுக்கு என் அன்னொடு உகரச் சாரியையும் கொள்க.

(நன். 251 விருத்தியுரை)

ஒத்த நூற்பாக்கள்:

'சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே.' தொல். 176
முழுதும் தொல். 200
'சுட்டின்முன் ஆய்தம் அன்வரின் கெடுமே.' நன். 251
'ஆய்தச் சுட்டும் யாதும் அன்பெறும்
ஆவயின் ஆய்தம் அழியும் சுட்டே.' மு. வீ. பு. 72
'வவ்விறு சுட்டுஅன் னொடுவரும் என்ப.' 52

ஆன்சாரியைப்பேறு

157 ஒன்று முதல் எட்டு அளவாம் எண்ஊர்
பத்தின்முன் ஆன்வரின் ப-ஒற்று ஒழியமேல்
எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே.

இது குற்றுகரஈற்று எண்ணுப்பெயருள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது,

இ-ள்.: ஒன்றுமுதலாக எட்டு இறுதியாக நின்ற எண்ணுப்பெயர்களின்மேல் வந்துபஃது எனவும் பது எனவும் முடிந்து நின்ற பத்து என்னும் எண்ணுப்பெயர் முன்னர் ஆன்சாரியை வரின், பகரஒற்று நிற்க ஏனைய எல்லாம் கெடும். ஒன்பதன் முன்னர் ஆன்வரினும் இவ்வாறு கெடும், உருபுபுணர்வழி, என்றவாறு.

வரலாறு: ஒரு பானை—ஒரு பானொடு எனவும் ஒன்பானை-ஒன்பானொடு எனவும் வரும். பிறவற்றொடும் இவ்வாறே ஒட்டுக.

மேல், 'பல்லவை நுதலிய அகர இறுபெயர்
அற்றொடு சிவணல்.' இ. வி. 150

என்று ஒழியாது, 'எச்சம் இன்றே' என்ற மிகையானே,

இன் பெறுவன பெறாது விளவை—பலாவை என்றாற் போல முடிதலும்,

மகத்தை—நிலாத்தை எனப் பிறசாரியை பெறுதலும்,

விளவத்துக்கண்—பலாவத்துக்கண் என அகர ஆகார ஈற்று மரப்பெயர்கள் ஏழன் உருபொடு புணர்வழி அத்துப் பெறுதலும்,

யா என்னும் ஆகாரஈற்று வினாப்பெயர் யாவற்றை யாவற்றொடு என அற்றுப்பெற்றே முடிதலும்,

அது இது உது என்னும் முற்றுகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் அதனை அதனொடு—இதனை—இதனொடு—உதனை உதனொடு என் அன்பெற்றே முடிதலும்,

அவை—இவை—உவை என்னும் ஐகார ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் அவையற்றை அவற்றை-இவையற்றை இவற்றை

—உவையற்றை உவற்றை என அற்றுப்பெற்று ஐகாரம் கெடாதும் கெட்டும் முடிதலும்,

யாவை என்னும் ஐகாரஈற்று வினாப்பெயர் யாவற்றை யாவற்றொடு என ஐகாரம் கெட்டு அற்றுப்பெற்று முடிதலும்,

கரியவை—நெடியவை என்னும் தொடக்கத்து ஐகார ஈற்றுப் பண்புகொள் பெயர்களும் கரியவற்றை—நெடியவற்றை என அம்முடிபு பெறுதலும்,

மகர ஈற்றுப்பெயருள் சில மரத்தை மரத்தொடு—நுகத்தை நுகத்தொடு என அத்துப்பெற்றே முடிதலும்,

கரியேம் நம்மையும் என மகரஈற்றுத் தன்மைப்பெயர் நம்மும் உம்மும் பெற்று முடிதலும்,

கரியார்தம்மையும் கரியீர்நும்மையும் என ரகரஈற்றுப் படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் முறையே தம்மும் உம்மும்—நும்மும் உம்மும்—பெற்றுமுடிதலும்,

எல்லாரும் என்னும் படர்க்கைப்பெயர் 'எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை' (குறள் 582) தனத் தம்முப் பெறாதும் வருதலும்,

அழன் புழன் என்னும் னகரஈற்றுப் பெயர்கள் இன்னே அன்றி, அழத்தை, புழத்தை என அத்துப்பெற்று னகரம் கெட்டு முடிதலும்,

எவன் என்னும் னகரஈற்று வினாப்பெயர் எவற்றை எவற்றொடு என அன்கெட்டு அற்றுப்பெற்று முடிதலும் எற்றை எற்றொடு என அன்னோடு அற்றின் அகரமும் கெட்டு முடிதலும்,

எகின் என்னும் னகர ஈற்றுப்பெயர் இன்னே அன்றி எகினத்தை என அத்துப்பெற்று முடிதலும்,

ஏழ் என்றும் ழகரஈற்று எண்ணுப்பெயரும், பூழ் யாழ் என்றல் தொடக்கத்து ழகரஈற்றுப் பொருட்பெயரும் இன்னே யன்றி ஏழனை ஏழனொடு—பூழனை பூழனொடு—யாழனை யாழனொடு என அன்பெறுதலும்,

குற்றுகரஈற்றுள் சில 'வழக்கத்தாற் பாட்டாராய்ந்தான்' எனவும் கரியதனை—கரியதனொடு எனவும் முறையே அத்தும் அன்னும் பெறுதலும்,

குற்றுகரஈற்று எண்ணுப்பெயர்கள் இன்னே அன்றி ஒன்றனை—இரண்டனை என அன்பெறுதலும், ஒருபஃது ஒருபது முதலியன ஆன்பெறாது ஒருபஃதனை—ஒருபதினை எனவும், ஒருபஃதை—ஒருபதை எனவும் அன்பெறுதலும் இன்பெறுதலும் பெறாமையும்,

குற்றுகரஈற்றுத் திசைப்பெயர்கள் ஏழன் உருபொடு புணர்வுழி இன்பெறாது. வடக்கண்—கிழக்கண்—மேற்கண்-தெற்கண் என ஈற்று உயிர்மெய் கெட்டு முடிதலும், இன்னோரன்ன பிறவும் கொள்க.

யா—யாவை முதலியன யாவற்றை என ஒருநிகரனவாய் முடிந்தனவேனும், நிலைமொழி வேறுபாட்டான் வேறு என்றே கோடும். 10

விளக்கம்

எய்தியது—இன்சாரியைப்பேறு

பிறிதுவிதி—ஆன்சாரியையும் பிறவிகாரமும் எய்துதல்.

இனி, இவ்வாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளனவற்றிற்கு அடிப்படையாக உள்ள தொல்காப்பிய நூற்பாக்களையும் நச்சினார்க்கினியர் கொண்ட மிகைகளையும் முறையே சுட்டுவாம்,

மகத்தை நிலாத்தை

'பல்லவை நுதலிய' என்ற நூற்பாவின் 'எச்சம் இன்று' என்ற மிகையால் கொள்ளப்பட்டன. தொல். 174 நச்.

விளவத்துக்கண்—பலாவத்துக்கண்

'அஆ உன்னும் மரப்பெயர்க் கிளவிக்கு
அத்தொடுஞ் சிவணும் ஏழன் உருபே' 181

என்பது.

யாவற்றை யாவற்றொடு
'யாஎன் வினாவும் ஆயியல் திரியாது.' 175

என்பது.

அதனை அதனொடு—இதனை—இதனொடு—உதனை—உதனொடு

'சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே.' 176

என்பது.

அவையற்றை இவையற்றை உவையற்றை

'சுட்டு முதல் ஆகிய ஐஎன் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே' 177

என்பது.

யாவற்றை—

'யாஎன் வினாவின் ஐஎன் இறுதியும்
ஆயியல் திரியாது என்மனார் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடும் கெடுமே.' 178

என்பது.

கரியவற்றை நெடியவற்றை—

'யாஎன் வினாவின்' என்ற நூற்பாவில், வற்றுமிசை ஒற்று என்றுகெடும் வகரத்திற்குக் கேடு ஓதிய மிகையான் கொள்ளப்பட்டன. (178 நச்.)

மரத்தை மரத்தொடு—நுகத்தை நுகத்தொடு

'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை.' 185

என்பது.

கரியேம் நம்மையும்—

'எல்லாரும் என்னும்' என்ற நூற்பாவில் படர்க்கைப் பெயரை முன்னிலைக்கு முன்கூறிய மிகையான் கொள்ளப் பட்டது. (191-நச்.)

கரியார் தம்மையும் கரியீர் நும்மையும்

இவையும் 'எல்லாரும் என்னும்' என்னும் நூற்பாவில் படர்க்கைப்பெயரை முற்கூறிய மிகையான் கொள்ளப் பட்டன. (191–நச்.)

எல்லார்க்கும்—

இதுவும் முற்கூறிய மிகையானே கொள்ளப்பட்டது. (191-நச்.)

அழத்தை புழத்தை—

'அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்தது என்ப உணரு மோரே' (192)

என்பது.

எவற்றை எவற்றொடு—

'வஃகான் மெய்கெட' (122) என்ற நூற்பாவில் 'ஆகிய பண்பு' என்ற மிகையான், எவன் என்ற குறிப்பு வினை முற்றுப்படுத்தல் ஓசையால் பெயராகிய வழி வற்றுச்சாரியை பெற்று விகாரமுற்று எவற்றை எவற்றொடு எனவரும்.

(122-நச்.)

எற்றை எற்றொடு—

'அழனேபுழனே' என்றநூற்பாவில் 'தோன்றல்' என்ற மிகையான், எவற்றை எவற்றொடு என்று முடிவன வகர உயிர்மெய்கெட எற்றை எற்றொடு என்று ஆயின.

(193–நச்)

எகினத்தை—

'அழனே புழனே' என்ற நூற்பாவின் 'ஒத்தது' என்ற மிகையான், எகினத்தை என அத்துப்பெற்று முடிந்தது.

(195-நச்.)

ஏழனை—

'அன்என் சாரியை ஏழன் இறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத்து என்ப.' (194)

என்பது.

பூழனை யாழனை—

'அன்என் சாரியை' என்ற நூற்பாவில் சாரியை முற் கூறிய மிகையான் கொள்ளப்பட்டன, 194 நச்.

வழக்கத்தால், கரியதனை—

'குற்றிய லுகரத்து இறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்என் சாரியை' 195

என்ற நூற்பாவின் 'முற்ற' என்ற மிகையால் கொள்ளப் பட்டது.

ஒன்றனை இரண்டனை—
'எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்.' 198

என்பது.

ஒருபஃதனை இருபஃதனை

'ஒன்று முதலாக' என்ற நூற்பாவில் 'ஆன் இடை வரினும் மானம் இல்லை' என்புழி 'வரினும்' என்ற எதிர்மறை உம்மையால் கொள்ளப்பட்டன. 199 நச்.

வடக்கண்—கிழக்கண்—மேற்கண்—தெற்கண்.

'ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி இயற்கையும் ஆகும்
ஆவயின் இறுதி மெய்யொடும் கெடுமே.' 201

என்பது.

யா + அற்று—ஐ + யாவற்றை;
யாவை + அற்று + ஐ—யாவற்றை

இவை முடிந்த முடிபு ஒன்றாயினும் நிலைமொழிகள் வெவ்வேறு ஆதலின் தனித்தனி விதந்து முடிக்கப்பட்டன.

ஒத்த நூற்பாக்கள்:

'ஒன்றுமுத லாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணும் சொல்லுங் காலை
ஆன் இடை வரினும் மானம் இல்லை
அஃதுஎள் கிளவி ஆவயின் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.' தொல். 199

'ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ஊர்
பத்தின்முன் ஆன்வரின் ப-ஒற்று ஒழியமேல்
எல்லாம் ஓடும் ஒன்பது இற்றே.' நன். 249

'ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்களை
ஊர்ந்து வரும்பத்து ஆனொடு சிவணிப்
பகரஒற்று ஒழியமேல் எல்லாம் ஓடும்.' மு. வீ. பு. 70

'ஒன்பதும் ஆனொடு ஒத்து நடக்கும்.' 71

அதிகாரப்புறனடை

158 இதற்குஇது முடிபுஎன்று எஞ்சாது யாவும்
விதிப்புஅளவு இன்மையின் விதித்தவற்று இயலான்
வகுத்துஉரை யாதவும் வகுத்தனர் கொளலே.

இஃது அதிகாரப் புறனடை கூறுகின்றது.

இ-ள்.: இவ்வெழுத்தோத்தினுள் விதித்தற்கு உரியனவற்றை எல்லாம் விதந்து இதனுக்கு இது முடிபு என்று ஒழியாது எல்லாவற்றையும் விதிக்கத்தொடங்கின் வரம்பு இன்றி ஓடுதலான், எடுத்தோத்தானும் இலேசானும் உரையானும் விதித்துப் போந்தவற்றின் இயல்பைப்பற்றி, அதனானே, திறப்படக்கூறாதவற்றையும் திறப்படக்கூறிக் கற்றுவல்லோர் அமைத்துக்கொள்க என்றவாறு.

வரலாறு: உவா அப்பதினான்கு, இராஅப்பகல், இறாஅவழுதுணங்காய் என ஆகாரஈறு அகரம் பெறுதலும் பொன்னங்கட்டி கானங்கோழி என னகரஈறு அம்முப்பெறுதலும்,

பதினேழு என ஏழ் உகரம் பெறுதலும்,

அதினை—அவைபிற்றிற்கு-விளவினுக்கு- விண்ணுக்கு பல்லுக்கு எனமுறையே அன்னேயன்றி இன்பெறுதலும்,

இற்றும் இன்னும் பெறுதலும் இன்றும் உகரமும் பெறுதலும், உகரம் பெறுதலும்,

வேயாது வேயாப்பு என்றால்போல்வன ஈறுகெடுதலும் இன்னோரன்ன பிறவும் ஈண்டே அமைத்துக்கொள்க.

இன்னும் இதனானே, உண்டு என்னும் சொல் தொழில் ஒழிய உண்மை என்னும் பண்பு உணர நிற்கும் இடத்துப் பகர முதல்மொழி வந்தால் உள்பொருள் என குற்றுகரம் மெய்யொடும் கெட்டு மேல்நின்ற ணகரஒற்று ளகரஒற்றாம்த் திரிதலும், உண்டு பொருள் என இயல்பு ஆகலும், ஏனைய வல்லெழுத்தும் இயல்புகணமும் வந்தால் உண்டுகாணம்—சோறு—தகர்—ஞாண்—நூல்—மணி—யாழ்—வட்டு—அடை—ஆடை எனக்கேடும் திரிபும் இன்றி இயல்பாய் முடிதலும் கொள்க.

உள்பொருள் என்பது பண்புத்தொகை முடிபு அன்றோ எனின், அஃது ஓசை ஒற்றுமைபடச் சொல்லும் வழியது போலும், இஃது ஓசை இடையறவுபடச் சொல்லும் வழியது போலும் என்க.

இவ்வெழுத்தோத்தினுள் கூறிய இலக்கணங்கள் எல்லாம் கருவியும் செய்கையும் என இருவகைப்படும். அவற்றுள் கருவி, புறப்புறக்கருவியும் புறக்கருவியும் அகப்புறக் கருவியும் அகக்கருவியும் என நால்வகைத்து.

'எண்பெயர்' (இ. வி. 2.) முதலியன புறப்புறக்கருவி.
பதவியல் புறக்கருவி.

'மெய்உயிர் முதல்ஈறு ஆம்இரு பதங்களும்' 53
என்றால்போல்வன அகப்புறக்கருவி.

'எகர ஒகரம் பெயர்க்குஈறு ஆகா' 97
என்றால்போல்வன அகக்கருவி,

இனிச் செய்கையும், புறப்புறச்செய்கையும் புறச்செய்கையும் அகப்புறச்செய்கையும் அகச்செய்கையும் என நால் வகைத்து.

'இஈ ஐவழி யவ்வும்' 68
என்றால்போல்வன புறச்செய்கை.

'ணன முன் டணவும்' 70
என்றால்போல்வன புறச்செய்கை.

'ஞண நம லவளன ஒற்றுஇறு தொழிற்பெயர்' 81
என்றால்போல்வன அகப்புறச்செய்கை.

இன்னஈறு இன்னவாறு முடியும் எனச்செய்கை கூறுவன எல்லாம் அகச்செய்கை இவை எல்லாம் ஓர்ந்து உணர்க. 11

ஐந்தாவது உருபு புணரியல் முற்றிற்று.

விளக்கம்

புறனடை—கூறப்பட்டன அன்றிக் கூறப்படாது புறத்தே அடுத்து வரும் செய்திகளைக் கூறுவது.

உவா அப்பதினான்கு, இரா அப்பகல்

'உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகரம் மிகுமே.' தொல். 223

என்பது. இவை உம்மைத்தொகை.

இறா அவழுதுணங்காய்

இந் நூற்பாவில் வருமொழி வரையாது கூறினமையின் இயல்பு கணத்தும் இவ்வெழுத்துப் பேறளபெடை கொள்ளப் பட்டது. இதுவும் உம்மைத்தொகை. 223 நச்.

பொன்னங்கட்டி கானங்கோழி

'உணரக் கூறிய புணரியல் மருங்கின்

கண்டு செயற்கு உரியவை கண்ணினர் கொளலே.'

(405) என்ற புணரியல் புறனடை யுரைக்கண் னகரஈறு அம்முப் பெற்றதையும்,

பதினேழு

என ஏழ் உகரச்சாரியை பெற்றதனையும்,

விண்ணுக்கு, பல்லுக்கு

என விண்—பல் என்பன உகரச்சாரியை பெற்றதனையும் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார்.

அதினை

என அது என்பது இன்பெறும் மருஉ முடிபை.

'சுட்டுமுதல் உகரம்' 176

என்ற நூற்பா உரையில் சுட்டுகிறார்,

வேயாது வேயாப்பு

என நிலைமொழி யகரம் கெடுதலை 'ஞநமயவ, 144 என்னும் நூற்பாவில் 'எல்லாம்' என்பதனால் கொண்டார்.

பண்பு—ஒருபொருள் தோன்றுங்கால் தோன்றி, அது கெடுந்துணையும் கெடாதுநிற்கும் சாதித்தன்மை. ஆஉண்டு என்புழி, பசு ஒன்று இறந்தாலும் அப்பசுவின் எண்ணம் மக்கள் உள்ளத்தில் இருக்குங்காறும். அப்பசு வருக்கமே அழிந்தபோதும், அப்பசுத்தன்மை நிலைத்து இருத்தலின் அது பொருண்மை எனப்படும். அப்பொருண்மையை உண்டு என்னும் பண்பு குறிப்பிடும்.

தொழில்—சிறிது போது நிகழும் ஒருபொருளின் புடைபெயர்ச்சி.

இறைவன் எப்பொருளின் கண்ணும் உளன் என்பது பண்பு;

மாற்றோர் பாசறை மன்னன் உளன் என்பது தொழில்.

உண்டு + பொருள்—உள்பொருள், உண்டுபொருள்.

உண்டு + காணம்—உண்டுகாணம்.

உண்டு + நூல்-மணி-அடை-உண்டுநூல்-மணி-அடை.

உள்பொருள் பண்புத்தொகையாபின், ஒரு திரண்மையாக இடையறவுபடாமல் கூறப்படும்; வினைக்குறிப்புமுற்றுத் தொடராயின் இடையறவுபடச் சொல்லப்படும்.

'உண்டுஎன் கிளவி உண்மை செப்பின்
முந்தை இறுதி மெய்யொடும் கெடுதலும்
மேல்நிலை ஒற்றே ளகாரம் ஆதலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து வருஉங் காலை யான' தொல். 430

என்பதுவிதி.

புறப்புறக்கருவி—சொற்கள் உண்டாதற்குப் பயன்படும் எழுத்துக்களின் பொது இயல்பு கூறுவது.

'எண்பெயர்' (இ. வி, 2) என்ற நூற்பா எழுத்திலக்கணத்தின் பாகுபாடு கூறுவதாய் அமைவதால் புறப்புறக்கருவியாம்.

புறக்கருவி—எழுத்துக்கள் சேர்ந்து மொழியாந் தன்மை மாத்திரம் கூறிப் பின் புணரியலுக்கு நிலைமொழி வருமொழி வகுப்பதற்குப் பயன்படுவது. ஆகவே; பதவியல் புறக்கருவியாம்.

அகப்புறக்கருவி — நிலைமொழியும் வருமொழியும் பொருள் பொருத்தமுற இயல்பாகவும், திரிந்தும் புணரும் என்றாற்போன்ற புணரியல் பொதுக்கருவிகளைக் கூறுவது 'மெய்உயிர் முதல்ஈறு' (53) என்பது.

அகக்கருவி—புணர்ச்சிக்கு இன்றியமையாத நிலைமொழிஈறு பெறும் விதிகளைக் கூறுவது.

'எகர ஒகரம் பெயர்க்குஈ றாகா' (97)
முதலியன.

கருவியாவது புணர்ச்சிக்குக் கருவியாக வரும் செய்திகளைக் கூறுவது.

செய்கையாவது பதம்முன் விகுதியும் பதமும் உருபும் புணரும் நிலையையும், சொற்கள் முடியும் நிலையையும் குறிப்பிடுவதாம்-

புறப்புறச் செய்கை – நிலைமொழி வருமொழி இரண்டற்கும் பொதுவான செய்கை—நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் உயிராகியவழி வரும் உடம்படுமெய் போல்வன.

புறச்செய்கை—வருமொழித்திரிபு கூறுவது-வருமொழி தகர நகரங்கள் றகர னகரங்களாகத் திரியும் என்பது போல்வன.

அகம்புறச்செய்கை — நிலைமொழிபெறும் எழுத்துப் பேறு சாரியைப்பேறு என்பனவே கூறுவது—தொழிற் பெயர் உகரம்பெறும் என்பது போல்வன.

அகச்செய்கை—இன்னஈறு இன்னவாறு வருமொழியொடு புணர்ந்து முடியும் என்றுகூறும் 'இயல்பினும் விதியினும்' (82) போல்வன.

எண்பெயர் முதலிய புறப்புறக்கருவி என்றார். எண்ணும் முறையும் பிறப்பும் உருவும் அளவும் செய்கைக்குக் கருவியாகாமையின் அவை பயனிலவாய் முடியும்; இவர் கூறிய முறை நோக்குவார்க்கு என அறிக.

பதவியல் புறக்கருவி என்றார்க்கு, எழுத்தே தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும் — பதமாம் பொருள்தரின்' (இ. வி. 38) என்பது ஒழித்து ஏனைய எல்லாம் வெற்றெனத் தொடுத்தலாய் முடியுமாறு அறிக.

'மெய்உயிர் முதலீறு ஆமிரு பதங்களும் (இ. வி. 53) என்றல் தொடக்கத்தனவற்றை அகக்கருவி என்னாது அகப் புறக்கருவி எனவும் 'எகர ஒகரம் பெயர்க்கூ றாகா' (98 என்றாற்போலும் புறப்புறக்கருவியை அகக்கருவி எனவும் கூறினார், இச்செய்கை செய்தற்கு இது சிறந்தகருவி இது சிறவாக்கருவி என்னும் உண்மை அறிய வாட்டாமையின்.

இனிச்செய்கையை நான்காக வகுத்துக்கூறியதூஉம் பொருந்தாமை ஓர்ந்து உணர்க.

அமைதி: நன்னூல் விருத்தியுரையிலோ தொல்காப் பியப்பாயிர விருத்தி சூத்திரவிருத்திகளிலோ, கருவிசெய்கை என்பனவற்றை விளக்கிக்கூற வாய்ப்பு இருந்தும், அவற் றின் வகைகளை விளக்கிக் கூறுவதற்கு உள்ளங்கொள்ளாத முனிவர், நச்சினார்க்கினியர் உரையாசிரியர் முதலிய சான் றோரைப் பின்பற்றி இவர் உரைத்தனவற்றை உரியகாரணங் காட்டி மறுத்தல் இயலாது உளம்சென்ற வழியே சில உரைத்த மறுப்பு என என்று வரைந்தமை வியப்பிற்கு உரி யது. ஒருவர் கூறியதை மறுக்கும்முன், இதுவே உண்மைச் செய்திஎன அதனைத்தெளிவாக முன்நிறீஇப் பின்னரே பிறன்கோள் மறுத்துத் தன்கோள் நிறுவுதல் வேண்டும். அந்நிலை ஈண்டு இன்மை அறிக.

ஒத்த நூற்பாக்கள்:

'கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிவைும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்.'

தொல். 483

முழுதும் — நன். 257

'உயிரே குறில்நெடில் ஒற்று மூவினம்
உயிர்மெய் ஆய்தம் ஓர்அறு குறுக்கம்
அளபெடை மாத்திரைப் புணர்ப்புஎன வகுத்து
ணநமன லளத-வும் நண்ணும் திரிபு அலது
ஏனைய திரியாது இயல்பாம் என்ன
இவண்ணவி ளக்கிய எழுத்தின் இயல்பே. தொ. வி. 40

ஐந்தாவது—உருபுபுணரியல் முற்றிற்று

முதலாவது

எழுத்ததிகாரம் முற்றிற்று

இலக்கணவிளக்கம் - சொல்லதிகாரம்

நூற்பா முதற்குறிப்பு—அகரவரிசை

உரை, விளக்கம் — இவை காட்டும் உவமப் பட்டியலின் அகரவரிசை

அகரவரிசை	பக்க எண்

உரைவிளக்கம்—இவற்றில் காணப்படும் இலக்கிய அடிகள் மேற்கோள் அகரவரிசை

அருஞ்சொற்பொருள்

அஃகு—சுருங்கு	270
அங்காத்தல்—வாயைத்திறத்தல்	117
அண்ணம்—மேல்வாய்	116
அருத்தி—விருப்பம்	30
அலவன்—நண்டு	401
அழன்—பிணம்	206
அழுங்கற்காய்—பழுதுபட்டகாய்	594
அளிகுலம்—வண்டுக்கூட்டம்	622
ஆரற்சுவர்—மதிற்சுவர்	594
இரலை—மான்	316

சதிர்—மேம்பாடு 52
சழுங்கற்கூரை—சோர்ந்த கூரை 594
சீ—நீக்கிவிடு 270
சுற—சுறாமீன் 471
சூரல்—பிரம்பு 200
செச்சை—வெள்ளாட்டுக்கடா 213
செறாஅய்—வெகுளாதே 166
சையம்—மலை 200
ஞாளி—நாய் 237
ஞாற்சி—தொங்குதல் 431
ஞெகிழி—கொள்ளிக்கட்டை 229
ஞெண்டு—நண்டு 200
ஞெரி—நெரிவு 385
ஞொள்கிற்று—இளைத்தது 200
தகர்—ஆண் ஆடு 578
தபு—நீசா, நீ ஒன்றனைச்சாவச்செய் 139
தரங்கம்—அலை 77
தாரா—ஒருவகைப் பறவை 437
துகிலிகை—எழுதுகோல் 354
துனி—வெறுத்து 214
தெவ்—பகைமை 612
தெள்கு—ஒருவகைப்பூச்சி 143
நகர்—கோயில் 1
நகுகம்—சிரிப்போம் 299
நறவு—தேன் 472
நெருநல்—நேற்று 260
நோ—துன்பப்படு 270
பகல்—தராசு விட்டத்தின் நடுமுள் 714
படனம்—வாசித்தல் 42

ஒத்த நூற்பாக்களின் பிற்சேர்க்கை

கீழ்க்காணும் நூற்பாக்களை அவ்வவற்றிற்குமேல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கண விளக்க நூற்பாக்களின் இறுதியில் காணப்படும் ஒத்தநூற்பாக்களோடு இணைத்துக் கொள்க.

இ. வி. 6

அ-இ-உ-முதல ஐம்பால் சுட்டே — தொல். வி. 100

எ-யா- ... ... ஆகும்மே — தொ. வி. 102

இ, வி. 38

எச்சொல்லும் பெயர் வினை இடை உரி என நான்கு...
பகாப்பதம் என்றா பகுபதம் என்றா தொ. வி. 41

இ. வி. 39

உயிர் ம-வில் ... ... ஆறேழ் சிறப்பின,
பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்தீ றாகத் தொடரும் என்ப. 48

இ. வி. 40

பகாப்பதம் என்ப பயனால் குறியால்
பகாது ஒன்று ஆகிப் பகுப்பின் பயன் இலா
நகிழ்ந்து இயல்கின்ற நால்வகைச் சொல்லே
தொ. வி. 46

இ. வி. 41

பகுபதம் ஒன்றாய்ப் பலஒருங்கு உணர்த்திப்
பொழுதுகொள் வினையும் பொருள் இடம் காலம்
சினை குணம் தொழில் ஆறும் சேர்ந்த பெயரும்
ஆம் 47

பகுபதம் ஒன்றாய்ப் பலஒருங்கு உணர்த்தின்
பகாப்பதம் அவற்றுள் பகுதி 83

இ. வி 42, 59, 61

சாரியை என்ப சார்பதம் எழுத்து எனப்
பதத்தொடு விகுதியும் பதமும் உருபும்
புணர்புளி இடையில் புணர்வன வற்றுள்
அ-எ உ-ஐ இன் அன் ஆன் இல் அல்
அற்று இற்று அத்து அம் னும் எனப்
பதினேழ் அன்றிப் பிறவும் ஆகி பொதுச்
சாரியை அவற்று ஓர்வழி அன்றாகும் விகற்பமே 51

இ. வி. 46

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் துஜ 84
அ-பிறவும் ஐம்பாற் பெயர்ப் பகுபத விகுதியே 84
நருஇடைப் பகுபதம் நண்ணலும் நெறியே 85

இ. வி. 43

பொழுது கொள்வினை வினைப்பகு பதமே
பகுதி ஏவல் எனும் பகாப்பதம் ஆகும் 105

இ. வி. 43

என்ஏன் எம்ஏம் ஒம்அம் ஆம் தன்மை
ஐஆய் இஇர்ஈர் முன்னிலை அன்ஆன்
அள்ஆள் அர்ஆர் உஅ படர்க்கை
வினையின் விகுதி மீண்டுள பிறவும்
கள்எனப் பலஒழி பன்மையின் மிகலும் ஆம் 105
எதிர்மறைக்கு இடைநிலை இன்றிஎன் எம்ஓம்
ஆய்ஈர் ஆன்ஆள் ஆஆ துஅ
ஐம்பால் மூவிடத்து ஆகும் என்ப தொ. வி. 112
ஏவல் ஒருமைக்கு இயலும் ஆய்-தி-மோ
ஏவல் பன்மைக்கு ஈர்-தீர் மின்-மினீர்
இருமைக்கும் ஓரோவிடத்து ஆகும் குவ்வே 113
எதிர்மறை ஏவற்கு ஏலே அல்லே
அன்மோ அற்க ஆகும் ஒருமை
ஆமின் ஆன்மின் அற்பீர் பன்மை 114
வியங்கோள் இயலும் விதிக்கு அ-இய
யவ்வொடு ரவ்வொற்று இவை எங்கும் ஏற்பன 116

இ. வி. 47

இறந்த காலத்து இடைநிலை தடறஒற்று
இன்னே மூவிடத்து ஐம்பாற்கு ஏற்பன 108

இ. வி. 48

நிகழ்பொழுது ஆநின்று கின்று கிறுஎன
ஐம்பால் மூவிடத்து ஆம்இடை நிலையே 109

இ. வி. 49

எதிர்வரும் காலத்து இடைநிலை ப-வ
ஐம்பால் மூவிடத்து ஆம்இவை சிலஇல 110

இ. வி. 50

எதிர்கால விகுதியுள் ஒருமைத் தன்மை
குடுதுறு என்னும் குற்றிய லுகரமொடு
அல்அன் என்ஏன் ஆம்எண் ஈறே
பல்பாற்கு ஆகும் ப-மார் மரும்-மனார் 111

இ. வி. 87

வாழிய..........இயல்பே 116

இ. வி. 78

அளவின் தொகையாய் அளவொடு தொக்கு இயை
கலம்கல னாகி ஏயும் மிகுமே
உரிவரின்.........வரினே தொ. வி. 98

இ. வி. 80

தொடர் அ இ-உ சுட்டெழுத்து என்ப
அவைவந்து அணைய அனைத்துமெய் இரட்டும்
உயிர்வரின் இரு-வ-இடைவரல் உரித்தாம்
எகர வினாவும் இற்நடை உடைத்தே. 101

இ. வி. 91

இன்றி அன்றி என்று எஞ்சும்-இ யாப்பின்
உ-வும் ஆம் ஆயின் உறுவலி இயல்பே 126

இ. வி. 95

அன்றுமேல் அதுவரின் ஆன்றாம் தூக்கின் 126

இ. வி. 105

திசையொடு.........ஆம்பிற 99

இ. வி. 107

ஓர் ஒரு ஈர் இரு மும்மூ நால்ஐம்
ஆறுஅறு ஏழ்எழு எண்என உயிர்உடல்
இயைமுறைக்கு ஆகும் எண்ணின் தொகையே 94

இ. வி. 113, 157

ஒன்று முதல் எட்டு அளவு ஊர்ந்த பத்து ஒற்று
ஒழிதலும் ஆய்தம் உறழ்தலும் ஆம்பல
ஒன்றுடன் ஆனாம் ஒன்பதும் இற்றே 96

இ, வி. 115

ஒன்றுமுதல்.........இனைத்தே 95

இ. வி. 117

ஒன்பது.........நெறி 97
ஆமா......பெறுமே 67

இ. வி. 144

அஇஉ முதல் ஐம்பால் சுட்டே
ஒன்றன் பாலவை ஆய்தம் இடையனவும்
பலவின் பாலவை வ-ஈற்றனவும் ஆம்
இனம் கீழ் மூவினம் இயல்புளி முறையே
ஆய்தம் மெலி இயல்பு ஆகும் என்ப தொ. வி. 100

இ. வி. 152, 153

எல்லாம்... ...ஆகும்
எல்லாரும்......உம்மே 66

இ. வி. 154

தான் தாம்... ...இரட்டல 68

இ. வி. 155

அற்று உறும் பன்மையாம் வினாச்சுட்டு என்ப
அ-இறும் அஃறிணைப் பன்மைக்கு அற்றே 65

இ. வி. 156, 157 உரை

உ-இறு வினாச்சுட்டு எண் இவை வேற்றுமை
வழிஅன் சாரியை மருவவும் பெறுமே 65

இ. வி. 80, 119, 120, 137, 139

வன்மை வரினே ளணலன மாண்டறவாம்
மென்மை வரினே ளலணன-ஆம் —த-நக்கள்
முன்பின்னாம் த-பின் னண-இயல்பாத் த-டறவாம்
ஒன்று அழிந்து போதலும் உண்டு. நே-17

உரையில் காணப்படும் எடுத்துக்காட்டுக்களின் அகரவரிசை

சுருக்கம் கருதி அவ்வப்பகுதியின் முதல் எடுத்துக் காட்டினையே பெரும்பாலும் குறித்து. ஏனையவற்றைக் கீழ்க் குறிப்பிட்டுள்ள முறைப்படிக் கொள்ளுமாறு அமைத் துள்ளமை காண்க.

அடை என்பதனை அடுத்து முறையே ஆடை இலை ஈயம் உரல் ஊர்தி எழு ஏணி ஐயம் ஒடுக்கம் ஓடை ஔவியம் என்பன ஏற்ற பெற்றி கொள்க.

கடிது என்பதனை அடுத்துச் சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது அடைந்தது முதலியன ஏற்ற பெற்றி கொள்க.

கலம் என்பதனை அடுத்துச் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு என்பன கொள்க.

கழஞ்சு என்பதனை அடுத்துச் சீரகம் தொடி பலம் நிறை மா வரை அந்தை என்பன கொள்க. இவ்வாறே

கடுமை (குறுமை) சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி, யாப்பு வன்மை அடைவு என்பனவும்

குறியர் சிறியர் தீயர் பெரியர் ஞான்றார் நீண்டார் மாண்டார் யாவர் வலியர் அடைந்தார் என்பனவும்,

குறியன் சிறியன் தீயன் பெரியன் ஞான்றான் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் அடைந்தான் என்பனவும்

குறியள் சிறியள் தீயள் பெரியள் ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் யாவள் வலியள் அடைந்தாள் என்பனவும்,

கண் (கால், கை) செவி (சிறகு) தலை புறம் என்பனவும்
குடி சேரி தோட்டம் பாடி என்பனவும்
குதிரை செந்நாய் தகர் பன்றி என்பனவும்
கொடை சோலை தாமம் பந்து என்பனவும்,

கொண்டார் சென்றார் தந்தார் போயினார் ஞான்றார் நீண்டார் மாண்டார் யாவர் வலியர் அடைந்தார் என்பனவும்,

கொண்டான்......அடைந்தான் என்பனவும்,
கொற்றரே சாத்தரே தேவரே பூதரே என்பனவும்
கொற்றன் சாத்தன் தேவன் பூதன் என்பனவும்
கொற்றா......பூதா என்பனவும்
கொற்றி சாத்தி தெரிவை பெதும்பை என்பனவும்
கோடு செதிள் தோல் பூ என்பனவும்
ஞாற்சி நிறம் மயிர் யாப்பு வலிமை அடி என்பனவும்

முதற்சொல் எடுத்துக்காட்டினை அடுத்து முறையே ஏனைய சொற்களையும் ஏற்ற பெற்றி அமைத்துக் காண்க.

எடுத்துக்காட்டு	பக்க எண்
பண்டைக்கூத்தன்	499
பண்ணை	213
பண்ணுப்பெயர்த்து	544
பதி	213
பதிற்றாழாக்கு	527
பதிற்றியாண்டு	528
பதிற்றுக்கலம்	527
பதிற்றுக்கழஞ்சு	527
பதிற்றுத்திங்கள்	527
பதிற்றுப்பத்து	358, 527
பதிற்றுமடங்கு	527
பதிற்றுவேலி	528
பதிற்றுழக்கு	527
பதிற்றெடை	527
பதிற்றொன்பது	527
பதினாயிரத்தொரு பஃது	316
பதினாயிரத்தொன்று	316
பதினாயிரம்	527
பதினாறு	527
பதினான்கு	527
பதினெட்டு	527
பதினேழு	527, 651
பதினைந்து	527
பதினொன்று	527
பதின்கலம்	527
பதின்கழஞ்சு	527
பதின்கோடி	527
பதின்திங்கள்	527
பதின்மடங்கு	527
பதின்மூன்று	527
பத்தரை	419
பத்தின்குறை	419
பத்துப்பத்து	534
பத்தோபதினொன்றோ	490
பந்நது	174
பந்துத்திரட்சி	497
பயற்றங்காய்	452
பயின்	219
பரண்நன்று	541
பரி	214
பருகினான்	306
பருத்திகுறிது	416
பருந்நது	174
பலகுதிரை	462
பலதலை	468
பலபல	467
பலப்பல	467
பலம்	420
பலவற்றை	358
பலவற்றுக்கோடு	365, 614
பலவின்வீழ்பழம்	361
பலா	214
பலாஅக்காய்	452
பலாஅடைந்தது	378
பலாக்குறைத்தான்	408

எடுத்துக்காட்டு	பக்க எண்	எடுத்துக்காட்டு	பக்க எண்